உ

புலவர் உலகம்

கம்பன் கலை நிலை

பதினைந்தாவது தொகுதி

ஆசிரியர்

ஜெகவீரபாண்டியனார்

மதுரை,
சி. வி. என். பிரசில் பதிப்பிக்கப் பெற்றது.
விளம்பி ௵
1958.

முகவுரை.

இது கம்பன் கலைநிலையுள் பதினைந்தாவது தொகுதி. இராம பிரான வரவை எதிர்நோக்கி விரதசீலனாய் நந்தியம்பதியில் பரதன் தவம் புரிந்திருந்தான. குறித்த காலம் வந்தும் அண்ணன வாராமையால் இத் தம்பி உள்ளம் வருந்தினான். பிரிவுத் துயரம் பொறுக்க முடியாமல் உயிரை மாய்க்க நேர்ந்தான். தீயில் பாய்ந்து மாய்ந்து போக மூண்டபோது வானவீதியில் அதிவேகமாய் வந்த அனுமான கதிவேகமாய்ப் பாய்ந்து எரியைக் கரியாக்கிப் பரதனைத் தடுத்து நிறுத்தி வரதன் வருவதைத் தெளிவுறுத்தினான. அவ்வுரையைக் கேட்டதும் பெருமகிழ்ச்சி அடைந்து மாருதியைத் தொழுது துதித்து இராமனை எதிர்கொண்டு அழைக்கச் சேனைகளோடு எழுந்து சென்று கங்கை அருகே பரதன வந்து நின்றான். பரத்துவாசர் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த இராமன வான விமானத்தில் நேரே வந்து கீழே இறங்கினான. உழுவலன்போடு அழுது தொழுத தம்பியைத் தழுவி மகிழ்ந்தான். பினபு யாவரும விமானத்தில் ஏறி நந்திக் கிராமத்தை அடைந்தார்; அங்கே நீராடி நியமங்களை முடித்தபின் அரச விருதுகளோடு அயோதிக்கு வந்தார். யாவரும் இராமனைக் கண்டு பேரனபோடு தொழுது பேரினபமாய்ப் பெருகி நின்றார். பினபு நல்ல ஓரையில் இராமன் மணிமுடி சூடினான; சீதாதேவியோடு அரியணையில அமர்ந்து அரசகோலமாய் எல்லாருக்கும் இனிய காட்சி யருளினான. தேச மக்கள் யாவரும கண்டு மகிழ்ந்தனர். அதன்பின உரிய துணைவர்கள் எல்லாருக்கும அரிய பெரிய சன்மானங்களை அருளி ஆர்வ வுரைகள் கூறி விடை கொடுத்து அனுப்பினான். தம்பியர் மூவரும் ஆட்சிக்கு மாட்சியாத் துணைபுரிந்து வர, எவ்வழியும தருமநீதிகள் செழித்து மிளிர, யாண்டும் இன்ப வளங்கள் பொங்கி விளங்க, எல்லா உயிரினங்களும் உவந்து வாழ்ந்துவர இராமன் சக்கரவர்த்தியாய் அமர்ந்து நெறியே அரசு புரிந்து வந்தான. இராம காவியத்தின் சீவியங்களும் இதில் மேவி யிருக்கின்றன.

திருவள்ளுவர் நிலையம் — இங்ஙனம்

மதுரை. — செகவீரபாண்டியன்.

(25—11—58)

இராமபிரான் துதி.

வானவர்கள் வாழ்வுயர மானவர்கள்
    மனம்மகிழ வாய்மை நீதி
ஆனவுயர் தருமங்கள் யாங்கணுமே
    ஒளிதிகழ ஆண்மை மேனமை
மானமுறு பெருவீரம் ஓர்உருவாய்
    மருவிஎழில் இராமன் என்னும்
ஞானமணம் கமழ்நாத சோதியினை
    நாடிநாம் நாளும் வாழ்வாம்.

நோக்கில் தென்திசை அல்லது நோக்குறான்

எதையும் பாராமல் எவரோடும் பேசாமல் மோன விரதம் பூண்டு ஞான யோகிபோல் இராம தியானமே செய்து வருகிற பரதன் சிலசமையங்களில் கண்களைத் திறந்து வெளியே பார்க்க நேர்கிறான்; அந்தப் பார்வையின் நீர்மையை இதனால் தெரிந்து கொள்கிறோம். திக்குநோக்குந்தோறும் நெஞ்சம் நெக்குருகியது.

கிழக்கு மேற்கு வடக்கு ஆகிய இந்த மூன்று திசைகளையும் அவன் பார்த்ததில்லை என்பதை இவ் வார்த்தை வார்த்துக் காட்டியுள்ளது. அவனுடைய காட்சி எல்லாம் இராமனைக் காண விரும்பி வேணவாவோடு விரிந்து நின்றது; அந்த ஆவலான நிலையைத் தென்திசை நோக்குத் தெளிவா நன்கு விளக்கி யருளியது.

ஏக்குற்று, ஏக்குற்று என்றதனால் அவனுடைய உள்ளமும் உயிரும் ஏங்கி மறுகி யிருந்த பாங்கு தெரிய நின்றது. கருதிய பொருளை அடையாமல் ஆவலித்து நிற்கும் கவலை நோக்கம் ஏக்கம் என வந்தது. இந்த ஏக்கம் மிகுதியாய் உள்ளத்தை உறுத்தி நிற்றலால் ஏக்குற்று என்றார். பெருகிய துயரால் உருகி உயிர் மறுகி யிருப்பதை இது நேரே உணர்த்தி நின்றது.

மதிஏக்கறூஉம் மாசறு திருமுகத்து. (சிறுபாண், 157)

கண்டு உவப்பு அளித்தவர் கடைக்கண் ஏக்கற.
(சிந்தாமணி, 1622)

இயலும் சுவைநல் அவியொடு நீத்து
ஏக்கற்றிருந்து. (முத்துக்குமார, முத்த, 5)

ஏக்கம் நேர்ந்த போது மாந்தர் சோர்ந்து இளைத்துத் தாழ்ந்திருக்கும் நிலைகளை இவற்றால் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

இரவி குலத்து உள்ளான்.

இராமனை இவ்வாறு பெருமையாக் கருதி யிருக்கிறான்.

சூரிய குலத்தில் தோன்றிய சீரிய அரசகுமாரன் ஆதலால் கூறிய வாய்மொழி தவறாமல் வந்து விடுவான் என்று சிந்தை துணிந்துள்ளான். காலம் யாதும் வழுவாமல் உதயம் ஆகி ஞாலம் நன்கு இயங்கிவரச் செய்யும் இரவி போல அந்த மரபில் பிறந்த மகனும் நியம நெறிகள் தவறாமல் கடமையை உறுதியாச் செய்தருளுவான் என்று கருதி யிருப்பது காண வந்தது.

வாக்கில் பொய்யான்; வரும்! வரும்! என்று உயிர்
போக்கிப் போக்கி உழக்கும் பொருமலான்.

பரதன் கொண்டுள்ள உறுதியும் பரிவும் பரிதாபமும் இங்கே தெரிய வந்துள்ளன. அந்த உள்ளத்தின் துடிப்புகளையும் பதைப்புகளையும் உரைகளில் நுனித்து உணர்ந்து கொள்ளுகிறோம். சொல்லின் தொனிகளை உள்ளச் செவியால் கூர்ந்து ஓர்ந்து கேட்பவர் ஆர்ந்த பொருள்களைத் தேர்ந்து தெளிந்து கொள்ளுவர். ஓர்ந்து ஓர்ந்து உள்ளம் உருகும்படி உரைகள் பெருகி வந்துள்ளன. அரிய மானச மருமங்கள் தெரிய உரியன.

இராமன் சத்திய சீலன்; உத்தம நீர்மையன்; எவ்வழியும் யாதும் வாய்மொழி வழுவாத விழுமிய தூய்மையாளன்; பதினான்கு ஆண்டு முடியும்போது மீண்டு வந்துவிடுவேன் என்று நேரே உறுதி கூறியருளினான்; அந்த வாக்குப் பொய்யாகாதபடி மெய்யா வந்துவிடுவான் என்று சிந்தை துணிந்து இந்தத் தம்பி நந்தியம் பதியில் இருந்துள்ளான் ஆதலால் முந்திய நிலைமைகளை இவ்வாறு இங்கே நன்கு நினைவு கூர நேர்ந்தான்.

வாக்கில் பொய்யான் என்றது அவனைக் காண அவாவி உள்ளம் உருகியிருக்கிற இவனுக்கு உறுதி பயந்துள்ளது. தென் திசையையே நோக்கி ஏக்குற்று இருந்த இவன் உள்ளே எண்ணி வந்துள்ளதை ஈண்டு நுண்மையா உணர்ந்து கொள்ளுகிறோம்.

அண்ணன் வந்து விடுவான், வந்துவிடுவான் என்னும் சிந்தனை நாளும் பெருகி வந்துள்ளது. அவ்வுண்மையை வரும்! வரும்! வரும்! என்ற பரிவுரை வெளியே தெளிவாத் தெரியச் செய்தது.

என் ஐயன் பொய்யா மொழியன் ஆதலால் முன்னம் சொல்லியபடியே குறித்த நாளில் உறுதியா வந்துவிடுவார் என்று கருதி மகிழுவான்; அடுத்த நிமிடத்தில் ஐயம் அடைந்து துடிப்பான்; மீண்டும் தெளிந்து துணிவான்; மறுபடியும் சந்தேகமாய் மறுகுவான்; வருவார் என்று உறுதி கொள்ளுவான்; அப்பொழுது உயிர் உடலில் சுகமாய் இருக்கும்; எங்கே வரப் போகிறார்? என்று சங்கை யுறுவான்; அவ்வமையம் ஆவி துடித்து அலமரலடையும்; இன்னவாறே எண்ணி யுழலுந்தோறும் உள்ளம் ஒரு நிலையிலின்றி வெளியும் உள்ளும் உயிர்

ஊசலாடி உழன்று திரிந்தது. துயரான அந்தப் பரிதாபநிலை உயிர் போக்கிப் போக்கி உழக்கும் பொருமலான் என்றதனால் தெரிய வந்தது. அந்தரங்கமாய் நிகழ்ந்த அந்த மானச மருமங்களை இந்த மொழிகள் இங்கே நன்கு தெளிவாக்கி யுள்ளன.

கானகம்போன அம் மானவீரன் வருவார் என்று கருதுந் தோறும் உயிர் உடலில் இருக்கும்; ஒரு வேளை வராமல் அங்கேயே இருந்து விடுவாரோ? என்று ஐயறவு நேர்ந்தபோதெல்லாம் உயிர் சோர்ந்து ஓய்ந்துபோம்; ஒரு நிலையுமின்றி அலமந்து அலைகின்ற அந்த நிலையும் போக்கும் ஈண்டு நுணுகி உணரநேர்ந்தன.

தனது உயிர் வாழ்வு எல்லாம் இராமனது உருவ நிலையை நேரே காணும் வேணவாவோடு பெருகியுள்ளமையால் பரதன் இவ்வாறு பரிதாபமாய் மறுகி உருக நேர்ந்தான் கருதுந்தோறும் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்து புறமே போகின்றது. பேச்சின்றிச் செயலிழந்து மயலுழந்து துயர் மிகுந்து உயிர் உருகி வருகிறான். உடலுக்கு உயிர்போல் பரதன் உயிர்க்கு இராமன் உயிராய் மருவியிருக்கிறான்; அந்த மருமத்தைக் கருமமும் கண்ணீரும் வெளியே காட்டி வருகின்றன.

உண்ணும் நீர்க்கும் உயிர்க்கும் உயிர்.

இராமனது உண்மை நிலையை இது உணர்த்தியுளது. தம்பி பரதனுக்கு அண்ணன் அமைந்திருக்கும் வண்ணத்தை இங்கே நுண்மையா உணர்ந்து உண்மையைத்தெளிந்து கொள்ளுகிறோம்.

உண்ணும்சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலை எல்லாம்
கண்ணன எம்பெருமான்என்றே கணகள் நீர்கள்மல்கி
மண்ணினுள் அவனசீர் வளமிக்கவனூர் வினவி
திண்ணம்என் இளமான் புகுமூர் திருக்கோளூரே.
(திருவாய்மொழி)

திருமாலை நினைந்து நம்மாழ்வார் உருகியிருக்கும் நிலையை இது விளக்கியுள்ளது. தத்துவ ஞானிகள் பத்திப் பரவசமாய் ஈசனைக் கருதி உருகுவதுபோல் பரதன் இராமனைக் கருதி உருகுகின்றான். உள்ளம் கரைந்து வருகிற அன்பின்நிலை உறவுரிமைகளைத் தெளிவா வெளியாக்கி வருகிறது. விழிகளிலிருந்து பொங்கி வழிகிற நீரால் அந்த உள்ளத்தில் ஓங்கி நிற்கும் அன்பின் எல்லையைத் தெளிவா ஓர்ந்து தேர்ந்து கொள்கிறோம்.

மண்ணு நீர்க்கு வரம்பு கண்டால் அன்றிக்
கண்ணின் நீர்க்கு ஓர்கரை எங்கும் காண்கிலான்.

புனிதமான புண்ணிய தீர்த்தங்களால் இனிது நீர் ஆடி அரியணை அமர்ந்து இராமன் மணிமகுடம் சூடி விளங்குவதைத் தன்கண்களால் நேரே கண்டபோதுதான் அழுகை நீங்கிப் பரதனுக்கு ஆனந்தம் ஓங்கும் என்பது ஈங்கு அறிய நின்றது.

தம்பியின் நிலைமையும் நீர்மையும் தமையனுடைய தலைமை சீர்மைகளை நலமாக் காண அவாவியே கருதி உருகி யுள்ளன; அவ்வுண்மையை ஈண்டு எண்மையா அறிந்து கொள்கிறோம்.

மண்ணுதல் = கழுவுதல். அஞ்சன மேனியான் மஞ்சன நீராடி மணிமுடி புனைவதை இனிது காணவே பரதனுடைய கண்களும் நெஞ்சமும் கருதி உருகி மறுகி நிற்கின்றன.

பரிவின் தன்மை உருவு கொண்டதுபோல் எவ்வழியும் அண்ணனையே எண்ணிக் கண்ணீர் சோர நின்ற பரதன் கால அளவுகளைக் கருதி ஆராய விரைந்தான். கானகம் போன மானவன் மீண்டு வருவதாக உறுதி கூறிய ஆண்டுகளை முதலிலிருந்து முறையே எண்ணி நோக்கினன். கணிதக் கலைகளில் தலைசிறந்துள்ள சோதிடர்களை அழைத்து வரும்படி பணித்தான். கணித நிபுணர்கள் யாவரும் வந்து வணங்கி நின்றனர். அவரை உரிமையுடன் உபசரித்து அருகே அமரச் செய்தான். பிரியம் மீதூர்ந்து எல்லாரும் மரியாதையுடன் மருங்கே இனமா மருவியிருந்தனர்.

கணிதர் கணித்தது.

அன்பு கனிந்து ஆதரவுடன் வந்திருந்த சோதிடர்களை நோக்கிப் பரதன் இனிது வினவினன்: "அரசுமுடி துறந்து எம் பெருமான் வனம் நோக்கிப் போன நாள் தங்கள் நினைவில் இருக்கிறதா? இருந்தால் அன்று முதல் இன்றுவரையுள்ள கால அளவைக் கணித்துச் சொல்லுங்கள்" என்று கருதிக் கேட்டான். கேட்கவே கணிதர் எண்ணி ஆராய்ந்தார். கண்ட முடிவை நேரே தெரியக் கூறினர். "அரசர் பெரும! அண்ணல் சென்ற நாள் தொடங்கி இன்று முடியப் பதினன்கு ஆண்டுகள் ஆகின்றன" என்று அந்தக் கணிதர் துணிவாய்ச் சொல்லினர். கால நிலையைக் கூர்ந்து ஓர்ந்தே அவர் தேர்ந்து உரைத்தார்.

சோதிடர் கூறிய அந்த வாய்மொழியைக் கேட்டதும் "ஆ! ஐயனே!" என்று அலறிப் பரதன் கீழே சாய்ந்தான். யாவரும் நெஞ்சம் கலங்கி அஞ்சி நடுங்கினர். கடிது விழுந்து நெடிது மூர்ச்சித்துக் கிடந்தவன் சிறிது போழ்தில் தெளிந்து எழுந்தான். தியங்கி மயங்கி உயங்கி உழந்தான்.

காலத்தைக் குறித்த கணக்கும், கணக்கர் உரைத்த மொழியும் உள்ளத்தை எரித்து உயிரை வதைத்திருக்கின்றன. அந்தக் கணிதர் வார்த்தை செவியில் விழவே இந்தப் புனிதன் மேனி புவியில் விழுந்துள்ளது. சோக வேகம் ஏகமாய் விளைந்தது.

என்ற போதத்து இராமன் வனத்திடைச்
சென்றபோது ஒத்தது அவ்வுரை; செல்வத்தை
வென்ற போதத்து வீரனும் வீழ்ந்தனன்
கொன்ற போதத்து உயிர்ப்புக் குறைந்துளான்.

இராமன் மீண்டுவர வுரிய நாள் இன்றோடு அறுதியாய் முடிவுறுகின்றது என்று அறியவே பரதன் இவ்வாறு பரிதாபமாய் மறுகி மயங்கிச் செயலிழந்து சாய்ந்திருக்கிறான். நிலை குலைந்து தரையில் வீழ்ந்துள்ள நிலைமையால் அந்த உள்ளத்தின் பரிவையும் பாங்கையும் ஓரளவு யூகித்து ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம். கொடிய கவலை நெடிய துயராய் நின்றது.

அண்ணன் வரவையே எண்ணி எண்ணி ஏங்கிக் காலத்தைக் கழித்து வந்த புண்ணியத் தம்பி ஆதலால் நாள் அன்றோடு கழிவது என்று தெரிந்ததும் கடுந்துயர் மூண்டு நெடுஞ் சோகம் நீண்டது. உள்ளப் பதைப்பு உயிரை வதைத்தது.

வனவாசம் புரிந்து மீண்டு வருவதாக அந்த ஆண்டகை அன்று குறித்ததினம் இன்று வந்துள்ளது; முன்னம் சொன்னபடி இன்னமும் அண்ணன் வரவில்லையே! என்று ஆவி அலமந்து அல்லலுழந்து இப் பின்னவன் உள்ளம் துடித்து உயிர் பதைத்துள்ளான். படுவேதனை அடுதீயாய் நின்றது.

மனவலியும் மதிநலமும் உடையன் ஆயினும் தமையன் மேலுள்ள பாசத்தால் அமைதியை இழந்து அபலையாய் மறுகி உருகுகின்றான். பெரியவன் உரிமையோடு கூறிய உறுதிமொழியை நம்பியே இதுவரையும் பிரிவைப் பொறுத்துக் கொண்டிருந்

தான். எதிர்பார்த்துக் காத்திருந்தபடி கார்வண்ணனைக் காண நேராமையால் இம் மானவீரன் மறுக நேர்ந்தான்.

செல்வத்தை வென்ற வீரன்

பரதனுக்கு இவ்வாறு ஒரு பெயர் இங்கே வந்துள்ளது. உரிமையாக் கூறிய பேர் கூரிய சீரிய குறிப்புகளை யுடையது.

மல் வீரன்	1
வில் வீரன்	2
சொல் வீரன்	3
கரும வீரன்	4
தரும வீரன்	5
தான வீரன்	6
தயா வீரன்	7
ஞான வீரன்	8
மான வீரன்	9
போர் வீரன்	10

என இன்னவாறு வீரர்கள் பலவகை நிலைகளில் பரந்து விரிந்து சிறந்துள்ளனர்; அவர் எவரினும் வேறுபாடு தெரிய இக் குலமகன் வீரத்தை இங்ஙனம் நலமாக் குறித்துரைத்தார்.

அரிய பெரிய அரசசெல்வம் உரிமையாக் கிடைத்துள்ளது. அரசர் பெருமானுய் ஆட்சி புரிந்து மாட்சி விரிந்து அரியணையில் அமர்ந்து இனிய பல சுகபோகங்களை அனுபவித்து இன்ப நிலைகளில் எவ்வழியும் செவ்வையா யாண்டும் மகிழ்ந்திருக்க வேண்டியவன் அவற்றை எல்லாம் வேண்டாம் என்று அறவே வெறுத்துத் துறவு நிலையில் வீர வெற்றியோடு விளங்கியிருக்கிருன். அந்த இருப்பையும் சிறப்பையும் குறிப்போடு கூர்ந்து ஓர்ந்து குணநலங்களைத் தேர்ந்து கொள்ள நேர்ந்துள்ளோம் ஆகலால் செல்வத்தை வேன்ற வீரன் என்று வித்தக விநோதமா விளக்கி யருளினர். வெற்றி வீரம் விழுமிய மகிமையுடையது.

செல்வத்தை யாவரும் ஆவலோடு விரும்புவர்; அதனை வேண்டாம் என்று வெறுத்து விலகுபவர் யாண்டும் அரியர். பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும் என்பது பழமொழி. பொருளாசையில் மனிதர் எவ்வளவு மருளராய் மருவியுள்ளனர் என்பதை இம் முதுமொழி தெளிவா வெளியாக்கி

யுள்ளது. இத்தகைய பொல்லாத ஆசையை அடியோடு வென்று அதிசய நிலையில் உலகம் துதிசெய்ய ஒளி மிகுந்து நிற்கின்றான். ஆதலால் வென்ற வீரன்; போதத்து வீரன்; என்று வியன் பெயர் பெற்றுப் பரதன் ஈண்டு விளங்கியுள்ளான். போதம்=ஞானம்.

உண்மை நிலையை உறுதியா உணர்வது மெய்ஞ்ஞானம் எனவந்தது. அந்தத் தத்துவஞானம் இந்த உத்தமனிடம் ஒளிவீசி நிற்கின்றது. நித்திய அநித்தியங்களை உய்த்து உணர்ந்து உயிர்க்கு உய்தி புரிபவரே உயர்ந்த மகான்களாய்ச் சிறந்து திகழ்கின்றார். இறுதியை அறுதியா உணர்வதும் உறுதியை உண்மையாத் தெளிவதும் விழுமிய புனிதக் காட்சிகளாய்ப் பொலிந்து வருகின்றன.

செல்வம் நிலையில்லாதது.
தருமம் நிலையுடையது.
அது அல்லல்களில் ஆழ்த்தும்.
இது நல்லகதிகளில் உயர்த்தும்.

இருவகை நிலைகளையும் உணர்ந்து தெளிபவர் உயர்ந்த உய்தி பெறுகின்றார். தேக போகங்களை ஓரளவு தரும் ஆயினும் மோக வெறிகளை விளைத்துச் சோகமான வழியில் செலுத்திச் செல்வம் உயிரைப் பாழ்படுத்தும். தருமம் என்றும் இனிய துணையாய் நின்று எவ்வழியும் இன்ப நலங்களையே நல்கியருளும்.

இந்த உண்மைகளை நுண்மையா உணர்ந்து தெளிந்தவன் ஆதலால் யாண்டும் தருமத்தையே உறுதித் துணையாக் கொண்டு அரச செல்வங்கள் அனைத்தையும் வெறுத்து அரிய துறவியாய்ப் பெரிய தவ ஞானியாய்ப் பரதன் வாழ்ந்து வருகிறான்.

உலக ஆசைகளை அடியோடு வென்று உயர் நிலையில் உள்ள இக் குலமகனுடைய விரத வைராக்கியங்களை வியந்து அரிய தவ யோகிகளும் பெரிய துறவிகளும் புகழ்ந்து போற்றியிருக்கின்றனர். உள்ளத்தில் ஆசையை ஒழித்தமையால உலகத்தில் இவன் புகழ் தேசுமிகுந்து உயர்ந்து ஓங்கி ஓசைபெற்று உலாவியுள்ளது.

"கள்ள ஆசையை ஒழித்து, அவனி பண்டு ஆண்ட வேந்தரை இழித்து மேல் ஏறினன்" எனப் பரதனை முன்னம்* குறித்திருப்பது இங்கே கூர்ந்து ஓர்ந்து நன்கு சிந்திக்க வுரியது.

* இந்நூல் பக்கம் 5481, வரி 32 பார்க்கவும்.

ஆசை நீங்கிய அளவு மனிதன் ஈசன் ஆகிறான்.

பொய்ப் பொருளில் மருளான ஆசை ஏறின் மெய்ப் பொருளை அவன் இழந்து விடுகிறான். பொய்யான மையல் நீங்கிய போதுதான் மனிதன் மகான் என மகிமையுறுகின்றான்.

மக்களும் மக்கள் அல் லாரும் என இரண்டு
குப்பைத்தே குண்டுநீர் வையகம்---மக்கள்
அளக்கும் கருவிமற்று ஒண்பொருள் ஒன்றோ
துளக்கறு வெள்வளையார் தோள். (அறநெறிச்சாரம்)

இவ்வுலகத்தில் மக்கள் ஆகிய குப்பைகள் நிறைந்திருக்கின்றன. இவற்றுள் மாணிக்க மணிகள் போல் அருமையாயுள்ள மகான்களைத் தெரிந்து எடுத்தற்கு இரண்டு அறிகருவிகள் உள்ளன. ஒன்று பொன்; மற்று ஒன்று பெண். பொன் ஆசை, பெண் ஆசைகளில் இழியாமல் எவன் புனிதமா யிருக்கிறானோ அவனே அரிய பெரிய மகான். அந்த ஒண்மையான உண்மை இங்கே நுண்மையா அறிய வந்தது இழிந்த நசை ஒழிந்த போதுதான் மனிதன் உயர்ந்தவனாய் ஒளி மிகப்பெறுகின்றான்.

"Gold is tested by fire; man by Gold." [Chinese]

"நெருப்பால் பொன் சோதிக்கப்படுகிறது; பொன்னால் மனிதன் சோதிக்கப்படுகின்றான்" என்னும் இது இங்கேஎண்ணி உணரவுரியது. பொருள் ஆசையுடையவன் மருளனாய் இழிகிறான்; அந்த ஆசை ஒழிந்தவன் தெருளனாய்த் திகழ்கிறான். இழிந்த விலங்காய்க் கழிந்து போவதும், உயர்ந்த மனிதனாய் ஓங்கி வருவதும் உள்ளத்தின் இளிவு தெளிவுகளால் முறையே விளைந்து வருகின்றன. நசை நீங்க இசை ஓங்குகிறது.

ஆசையால் மனிதன் பேயன் ஆகிறான்; நிராசையால் அவன் தெய்வம் ஆகிறான். பொய்யானவெய்யபுலையில் இழியாமையால் பரதன்தெய்வீக நிலையில் சிறந்து வரதனாய் உயர்ந்து நிற்கிறான்.

உலக ஆசைகளை ஒருங்கே வென்று உத்தம சுத்தனாய் ஒளி மிகுந்துள்ளவன் இராமனைக் காண வேண்டும் என்ற பேராசையால் இரவும் பகலும் வழிமேல் விழி வைத்து ஏங்கித் தவிக்கிறான்

பாச பந்தங்கள் அற்ற ஞானி ஈசனை நாடி இருத்தல்போல் இராமபிரானையே நாடி உளம் உருகி இத்தம்பி வாடியிருக்கிறான்.

வருவதாகச் சொன்ன தவணை வந்தும் நம்பி வரவில்லையே! என்ற சோகத்தால் மயங்கித் தரையில் வீழ்ந்தவன் சிறிதுபோது கழிந்தபின் தெளிந்து எழுந்தான். கண்ணீர் தாரை தாரையாய் மார்பில் வழிந்து ஓடியது. யாரோடும் யாதும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்தான். எண்ணங்கள் பல ஈண்டு நீண்டு எழுந்தன.

உயிர்த்து எழுந்தது.

மீட்டெழுந்து விரிந்தசெந் தாமரைக்
காட்டை வென்றெழு கண்கலுழிப்புனல்
ஓட்ட உள்ளம் உயிரினை ஊசல்நின்று
ஆட்டவும் அவலத்து அழிந்தான் அரோ. (1

உள்ளம் கவன்றது.

எனக்கு இயம்பிய நாளுமஎன இன்னலும்
தனைப் பயந்தவள் நேயமும தாங்கிஅவ்
வனத்துவைகல்செய் யான்வந் தடுத்ததோர்
வினைக்கொடும்பகை உண்டெனா விம்மினான். (2

உறுதி கூர்ந்தது.

மூவகைத்திரு மூர்த்தியர் ஆயினும்
பூவகத்தில் விசும்பில் புறத்தினில்
ஏவர் நிற்பர் எதிர்நிற்க எனனுடைச்
சேவகற்குஎன ஐயமும தேறினான். (3

ஐயம் நீண்டது.

என்னை இன்னும் அரசியல் இச்சையான்
அன்னன் ஆகின் அவனது கொள்கஎன்று
உன்னி னானகொல்? உறுவது நோக்கினான்
இன்ன தேநலன் என்றிருந் தானரோ! (4

மூண்டு துணிந்தது.

அனைத்தில் அங்கொன்றும் ஆயினும் ஆகுக;
வனத்திருக்கஇவ் வையம் புகுதுக;
நினைத்திருந்து துயரம் உழக்கிலேன்;
மனத்து மாசுஎன் உயிரொடும் வாங்குவேன். (5

பரதன் கருதி மறுகிப் பரிதாபமாய் உருகியிருக்கும் நிலைகளை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். உள்ளக் கவலைகள்

உணர்வைச் சிதைத்து உயிரைக் கலக்கியிருக்கின்றன. நெஞ்சம் கரைந்து உளைந்து வருந்தியுள்ளதைக் கண்களில் நிறைந்து பொழிகிற நீர் தெளிவாக்கி யுள்ளது. செந்தாமரை மலர்கள் போன்ற அழகிய இனிய கண்கள் அழுது அழுது சிவந்து பழுது படிந்தன. உள்ளம் பதைத்து ஒரு நிலையில் இன்றிப் பலவழிகளி லும் அங்கும் இங்குமாத் துள்ளி ஓடியது; உயிர் ஊசல் ஆடியது. அறிவு யாதும் சரியாய்த் தெரிய முடியாமல் செயலிழந்து நின் றது; கருவி கரணங்கள் இவ்வாறு மறுகி மயங்கிப் பருவரல் உழந்தன; கொடிய வேதனை மீதூர்ந்து நெடிய துயரடைந்தான்.

கண் கலுழிப்புனல் ஓட்ட
உள்ளம் உயிரினை ஊசல் ஆட்ட.

பரதன் பட்டுள்ள பாடுகளையும் அவலத் துயரங்களையும் இவை தெளிவாக் காட்டியுள்ளன. வெளியே முன்னதாத் தெரிய வந் தது ஆதலால் கண்ணீரை முதலில் குறித்தார். கலுழி என்றது மிகுதியாய்க் கலங்கி வந்தமை காண. அழுது பெருகி வருவது என்னும் குறிப்பினை இது விளக்கியது. கலுழ்தல் = அழுதல். புறமும் அகமும் ஒருங்கே உணர வந்தன. உள்ளே பொங்கி யுள்ள வேதனைகளை இவை தெள்ளத் தெளியத் துலக்கி நின்றன.

அவலத்து அழிந்தான் என்றதனால் துன்பக் கவலைகளால் இக் குலமகன் நிலை குலைந்துள்ளமையை உணர்ந்து கொள்ளு கிறோம். உரியவனைப் பிரிய நேர்ந்த துயரம் உயிரைச் சூறையாடி யிருக்கிறது. அந்த உயிர்வேதனைகளை இந்த உரைகள் நம் சிந்தை தெளியச் செய்துள்ளன. உழுவலன்புள் துன்பங்கள்செழுமின.

சிந்தனைகள்.

உள்ளம் கலங்கி உணர்வு மயங்கி உயிர் உயங்கித் துயர் உழந்தவன் பின்பு பலவும் சிந்திக்க நேர்ந்தான்: "எம்பெருமான் அன்று என்னிடம் உரிமையாய் உறுதி கூறினார்; "தம்பி! என் வனவாச காலம் முடிந்ததும் நான் அங்கு வந்து விடுவேன்; இதனை உறுதியா நம்பு" என்று என்பால் அன்பால் கூறினார். புனித மான அந்த இனிய வாய்மொழியை நம்பியே இதுவரை நான் உயிர் வாழ்ந்து வந்தேன்; என்னை ஒரு வேளை மறந்தாலும் தன் னைப் பெற்ற தாயை எவ்வழியும் யாதும் மறவார்; தாய்மை அன் போடு தவித்த அந்தத் தூயவனை அடிதொழுது "அம்மா! தம்பி

யுடன் இப்பொழுது நீ ஊருக்குப் போ! பதினன்கு ஆண்டுகளை யும் பதினலு நாளாகக் கழித்து விட்டு உங்களை வந்து நேரே காண்பேன்'' என்று உழுவலன்போடு தொழுது துதித்து வழி அனுப்பினர்; விழி நீர் சோரப் பெரிய தாயாரோடு அழுது கொண்டே திரும்பி வந்தேன்; யாண்டும் பொய்யாமொழியன் ஆன ஐயன் ஈண்டு பொய்த்திருக்கமாட்டார்; ஆண்டு உரைத்த படியே மீண்டு உறுதியா வர வுரியவர்; அவ்வாறு வரமுடியாத படி இடையே ஏதேனும் கொடிய தடை நேர்ந்திருக்க வேண் டும்; இல்லையானல் சொல்லியபடி வந்தே இருப்பர்; தீய மாய அரக்கர்கள் வனங்களில் வாழுவர் ஆதலால் அந்தப் பொல்லாத வர்களால் அல்லல்கள் நேர்ந்திருக்கலாம்; அந்தோ! என் ஐயனுக்கு வெய்யவர்களால் வெய்ய துயரங்கள் விளைந்திருக்கு மோ? சீ! இது என்ன பயித்தியம்! வானவர், தானவர், அரக் கர், இயக்கர், விஞ்சையர் முதலிய யாவராயினும் கோதண்ட வீரன் எதிரே மூண்டு போராட நேர்ந்தால் நீருய் மாண்டு மடிவரே அன்றி மீண்டு போக முடியாது; திரிமூர்த்திகள் ஒருங்கு திரண்டு வெகுண்டுவந்தாலும் இராமமூர்த்தியை என்ன செய்ய முடியும்? அகில லோகங்களையும் எளிதே வெல்ல வல்ல அதிசய வீரன் ஆதலால் இராமனேடு மாறுபாடாய் யாரும் போராட நேரார்; ஆகவே ஆண்டவன் ஈண்டு மீண்டு வராமைக்கு வேறே ஒரு காரணம்தான் இருக்க வேண்டும். எனக்கு அரச ஆட்சியில் ஆசையிருக்கும் என்று எண்ணியே எம்பெருமான் ஈண்டு வராமல் ஆண்டே தங்க நேர்ந்துள்ளான்; எது எவ்வாறு ஆயினும் ஆக; இனிமேல் நான் துயரோடு உயிர் வாழ்ந்து இரேன்'' என இன்னவாறு பரதன் இன்னலோடு முடிவு செய்து இறுதி முடிவுகளைத் துணிந்து கடிது விரைந்தான்.

எனக்கு இயம்பிய நாள்.

சித்திர கூட மலையில் இருந்தபோது பரதனிடம் இராமன் சொன்ன உறுதி மொழியை இவ்வாறு உரிமையோடு கருதி மறுகினன். நம்பியின் சொல்லை நம்பியே இத் தம்பி இங்கே காலம் கழித்து வந்துள்ளான். அவ்வுண்மையை இவ்வுரையால் நன்கு உணர்ந்து நிலைமையை நேரே ஓர்ந்து கொள்ளுகிறேம்.

சத்தியசீலன் ஆதலால் அந்தப் புனித வாயிலிருந்து வெளி

வருகிற மொழி யாண்டும் யாதும் வழுவுருது; எவ்வழியும் மாருத வாக்குடைய மன்னர்பிரானுக்கு அங்கே ஏதேனும் தடையாய் இடையூறு நேர்ந்திருக்குமோ? என்று ஐயுற்று ஏங்கினன். உடனே அந்த ஐயமும் நீங்கியது; தன் கை வில் ஒன்ருல் எல்லா உலகங்களையும் வெல்ல வல்லவன் ஆகலால் அவ் வீர வில்லிக்கு மாருக யாரும் அல்லல் செய்ய முடியாது என்று தெளிவாய் உணர்ந்து தேறி நின்ருன். அங்ஙனம் தேறிய நிலை யில் சீரிய கூரிய வீரிய வுண்மைகள் வெளியாய் வந்தன.

முன்னம் சொன்னபடி அண்ணன் வரவில்லையே! என்று பல பல எண்ணி இன்னலோடு உளைந்தவன் இறுதியில் உறுதி யாய்க் கருதித் துணிந்தான் அத்துணிவு துயராய் எழுந்தது.

நினைத்திருந்து துயரம் உழக்கிலேன்;
மனத்து மாசுஎன் உயிரொடு வாங்குவேன்

முடிவில் பரதன் இவ்வாறு முடிவு செய்துள்ளான். பெரிய வனைக் காணுத ஏக்கத்தாலும் பிரிவுத் துயரத்தைச் சகிக்க முடி யாத கொடிய சோகத்தாலும் தன் உயிரை மாய்த்துக் கொள்ள இத் தம்பி கடிது மூண்டிருப்பதைக் கண்டு நாம் கலங்கி வருந்து கிருேம். மேவிய துயரம் ஆவியை நீக்க நேர்ந்தது.

நீண்ட காலமா அண்ணனையே நினைந்து கவன்று நெடிது மறுகி நெஞ்சு உருகி இருந்தான். அவ்வாறு இருந்தும் கருதிய பலனைக் காணுமையால் அறுதியாய் இறுதி அடைய நேர்ந்தான்.

அண்ணனை அயோத்திக்கு வர ஒட்டாதபடி தடுத்திருப்பது தன்னுடைய தீவினையே என்று எண்ணித் தவித்திருத்தலால் தன்னைப் பாவி என்று வெறுத்து இப்புண்ணியத் தம்பி தனது புனித ஆவியைப் பரிதாபமாப் போக்க மூண்டான்.

மனத்து மாசு என் உயிரோடு வாங்குவேன் என்று துய ரோடு துடித்திருத்தலால் இக் குலமகனுடைய மன வேதனை யைக் கூர்ந்து ஓர்ந்து நிலைமையைத் தேர்ந்து கொள்ளுகிருேம்.

இராமபிரான் அரசுமுடி துறந்து வனவாசம் போனது பரதனலேயே என்று உலகம் முழுவதும் பழிபடர்ந்துள்ளதே! என்று நாளும் அழுது விழிநீர் சொரிந்து வந்தவன் ஆதலால் அந்த நிந்தையை நினைந்து இனைந்து நெஞ்சம் கொதித்தான்.

உள்ளத்தில் யாதொரு மாசும் இல்லாதவன் உலகத்தில் கொடிய மாசு தன் மேல் நெடிது நீண்டுள்ளதே! என்று நிலை குலைந்து நொந்தான். பழி படிந்து வாழ்வதைவிடச் சாவது நல்லது என்று துணிந்து கடிந்து முடிசெய்ய மூண்டான்.

மாசை நீக்கவே தன் உயிரை நீக்க நேர்ந்தான் ஆதலால் அதனை முதலில் குறித்தான். நீக்குவேன் என்னாது வாங்குவேன் என்றது ஈங்கு ஊன்றி உணரவுரியது. உள்ளே பதுங்கி ஒளிந்து கிடப்பதை வெளியே இழுத்து உலகம் அறியக் காட்டுவேன் என்னும் காட்சி மாட்சியோடு காண வந்தது.

இவ்வாறு வாங்கிய போதுதான் தனது புனித நிலையை மனித உலகிற்கு இனிது வழங்க முடியும் என்று துணிந்திருக்கிறான். எடுத்த இந்த உடலில் உள்ள உயிரை விட்டால் அன்றி அடுத்த அந்த நிந்தையை எந்தவழியும் ஒழிக்க முடியாது என்று உறுதியாக் கருதியிருத்தலால் இறுதியில் விரைந்தான்.

சாவின் நிலை.

தீரமான இவ் வீர மகன் ஒல்லையில் சாக வேண்டும் என்று மூண்டது, உற்ற சோகத்தின் எல்லையைத் தெளிவா விளக்கி நின்றது. மாண்டு போனால் மனவேதனை மடிந்துபோம் ஆதலால் நீண்ட துயரம் தோய்ந்தவர் நேரே உயிரைத் தொலைக்க நேர்கின்றார். அல்லல்களால் அலமருகின்ற சீவனுக்குச் சாவு ஒரு நல்ல துணையாயுள்ளது. நோதல் ஒழியச் சாதல் வழியாம்.

"O Death! the poor man's dearest friend
The kindest and the best." (Burns)

" ஓ மரணமே! நீ எளிய மனிதனுடைய அருமையான இனிய நல்ல துணைவன்" என பர்னஸ் என்பவர் சாவைக் குறித்து இவ்வாறு சுவையாக் கூறியிருக்கிறார்.

அல்லலான வாழ்விலிருந்து நீக்கி மனிதனுக்குச் சிறிது ஆறுதல் தருதலால் இறப்பு இங்ஙனம் சிறப்பாச் சொல்ல நேர்ந்தது. ஓயா நோய்கள் மாய்வில் ஓய்ந்து ஒழிகின்றன.

Account ye no man happy till he die. [Euripides]

செத்தால் ஒழிய மனிதனுக்குச் சுகம் இல்லை என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள் என இது உணர்த்தியுள்ளது.

வையக வாழ்வு எவ்வழியும் வெய்ய துயரங்களையுடையது; இதிலிருந்து விரைந்து உய்தி பெற வேண்டும் என்றே மெய்யறிவாளர் யாண்டும் போதித்து வருகின்றனர். வாழ்வு துன்பமாய்த் தோன்றிய போதுதான் சாவு இன்பமாய்த் தோன்றுகிறது. அல்லலாய் வாழ்வதினும் அழிவது நல்ல சுகமாகிறது.

When life is woe,
And hope is dumb,
The World says, "Go!"
The Grave says, "Come!" [A. Guiterman]

"வாழ்வு துக்கமாய் நம்பிக்கை இழந்தபொழுது நாடு போ என்கிறது; சுடுகாடு வா என்கிறது" என இது வரைந்துள்ளது.

பரதன் அரசிளங்குமரன்; அரிய பல செல்வங்கள் நிறைந்தவன்; ஐம்பொறிகளும் ஆர அநுபவிக்கின்ற இன்ப போகங்கள் எவ்வழியும் பெருகியுள்ளன; யாரும் ஆர்வமாப் போற்றி நிற்கின்றனர்; இருந்தும், யாவும் துறந்து எல்லாம் மறந்து வருந்துகிறான்.

வழி வழியாய் விழுமிய நிலையில் விளங்கி வந்த குலமுறையும், குடிப்பிறப்பும் தன்னால் வழுவடைய நேர்ந்தனவே! என்று அழுது துடிக்கிறான். பதைப்பும் துடிப்பும் பரிவு தோய்ந்துள்ளன. உரிய தமையன் மேலுள்ள பிரியத்தால் அவனைப் பிரிந்து வாழமுடியாமல் பரிந்து பரிதபிக்கிறான். தன்னைப் பெற்ற தாய் பேதையாயிழிந்து பிழை செய்தது தனக்குப் பெரிய பழியாயது என்று மறுகி உருகி எவ்வழியும் ஓயாமல் அழுது வருகிறான்; உள்ளம் பரிந்து வெள்ளமா விழிநீர் சொரிந்து வந்தவன் மாசு படிந்ததே! என்று மானத்தால் புழுங்கி உயிரை மாய்க்க நேர்ந்தான். இதனால் இவனது தூய்மையும் வாய்மையும் கண்ணிய நீர்மையும் புண்ணிய நிலைமையும் விண்ணும் மண்ணும் தெரிய வெளியாய் நின்றன. உற்ற துயரால் உயர் நிலைகள் ஓங்கின.

சாகத் துணிந்தது, இவனுடைய சோகத்தையும் மானத்தையும் சித்த சுத்தியையும் உய்த்துணரச் செய்தது. கண்ணிய நீர்மையன் புண்ணிய நிலையினன் என்று எவ்வுலகும் எண்ணிப் போற்றும் செவ்வியன் ஆதலால் இவனது தோற்றம் திவ்விய மகிமையோடு சிறந்து எவ்வழியும் தேசு மிகுந்து விளங்கியது.

An honest man's the noblest work of God. [Pope]

"நேர்மையாளன் கடவுளின் சீர்மையான சிருட்டி" என்னும் இது இங்கே கூர்மையா ஓர்ந்து தேர்ந்து கொள்ளஉரியது.

"சேண்உயர் தருமம், செம்மையின் உருவம்" என இராமன் திருவாயால் புகழப் பெற்றிருந்த பரதன் அந்த அண்ணனைக் காணாத கவலையால் தன் ஆவியை நீக்க மூண்டான். அங்ஙனம் மூண்டவன் தம்பி சத்துருக்கனை உடனே அழைத்து வரும்படி அருகே நின்ற தளபதிகளிடம் உரைத்தான். அவர் விரைந்து சென்றார்; அயோத்தி நகர் அடைந்தார்; அரண்மனைக்குள் புகுந்து இளவலை வணங்கி இயம்பினர். அண்ணா அழைத்தார் என்று அறிந்ததும் தழைத்த அன்போடு களித்து எழுந்து விரைந்து வந்து தொழுது வணங்கி வாய் புதைத்து நின்றான். அந்த இளவலை உழுவலன்போடு தழுவிப் பரதன் உருகி நோக்கினான். அருமைத் துணைவர் இருவரும் உரிமையோடு மருவி உரையாடிய முறைகள் பரிபவ நிலைகளில் பெருகி எழுந்தன,

சத்துருக்கன் வந்தது.

என்னப் பன்னி இளவலை என்னுழைத்
துன்னச் சொல்லுதிர் என்றலும தூதர்போய்
உன்னைக் கூயினன் உம்முன் எனுமுனம்
முன்னர்ச் சென்றனன் மூவர்க்கும் பின்னுளான். [1]

தொழுது நின்றது.

தொழுது நின்றதன் தம்பியைத் தோய்கணீர்
எழுது மார்பத்து இறுகத் தழுவினான்
அழுது வேண்டுவது உண்டுஐய! அவ்வரம்
பழுதி லாமையி னால்தரற் பாற்று என்றான். (2)

பரதன் பகர்ந்தது.

என்ன தாகுங்கொல் அவ்வரம்? என்றியேல்
சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான்இனி வீடுவன்
மன்னன் ஆதிஎன் சொல்லை மறுது என்றான். (3)

அன்பு மீதூர்ந்து தன்பால் வந்து தாழ்ந்து வணங்கி ஆர்ந்த மரியாதையோடு தம்பி நிற்பதும், அந்த இளவலை உழுவலன்புடன்

தழுவித் தமையன் மொழிவதும் விழுமிய நீர்மைகளாய் விளங்கி ஆன்ம உருக்கங்களைப் பெருக்கி ஆர்வங்களை விளைத்துள்ளன

முன்னர்ச் சென்றனன்

மூவர்க்கும் பின்னுளான்.

தன்னை அழைக்க வந்த அதிகாரிகள் பின்னே நடந்து வர அதிவேகமாய் இளையவன் முன்னே வந்திருக்கிறான். ஆர்வமான அந்த வரவு நிலையை இந்த வாசகம் வரைந்து காட்டியுள்ளது.

அன்பும் பண்பும் அமைதியும் மரியாதை முறைகளும் இந்த அரசகுலக் குமரர்களிடம் வரிசையாக் குடிகொண்டிருக்கின்றன. சொல்லிலும் செயலிலும் எவ்வழியும் நல்லியல்புகள் நடனம் புரிகின்றன. உருவங்கள் வேறு ஆயினும் உயர் பெருந் தகைமைகள் நால்வர்பாலும் சால்புடன் மேலாய்மிளிர்கின்றன.

அண்ணன் வரச் சொன்னார் என்றதும் ஆர்வத்தோடு விரைந்து வந்திருக்கிறான். முன்னர் வந்தவன் பின்னர் உள்ளவன் எனக் கிளை முறையை நன்னயம்படச் சொல்லியிருக்கிறார்.

மூவர்க்கும் பின் உளான் எனச் சத்துருக்கனுக்கு இப்படி ஒரு பெயரைக் கவி ஈண்டு வித்தக விநோதமாச் சூட்டியிருக்கிறார். பின்னுள்ள இவன் இங்கே முன்னுக்கு வர நேர்ந்திருக்கிறான். எல்லார்க்கும் இளையவன் உலகம் அறிய வந்துள்ளான்.

சத்துருக்கன்.

இந்த உத்தமத் தம்பி இராம காவியத்தில் அதிகமா இடம் பெறவில்லை. பேசாத பாத்திரம் என்று இவன் பேச நேர்ந்துள்ளான். இவனைப் பற்றிக் காவிய வுலகில் யாரும் விரிவாப் பேசவில்லை. இவனும் யாண்டும் மவுனமாகவே இருந்து வந்துள்ளான். இப்பொழுதுதான் புதுமையாய் வெளியே வந்திருக்கிறான். இவனுடைய பெருமைகளை நாம்தெரியநேர்ந்துள்ளோம்.

இவன் அரிய பல நீர்மைகள் அமைந்தவன்; அமைதியும் அடக்கமும் உடையவன்; இலக்குவனோடு உடன் பிறந்தவன்; பெரிய அண்ணனுக்குஅவன் பிரியமாய் நேர்ந்தான்; சிறிய அண்ணனுக்கு இவன் உரிமையாய்ச் சேர்ந்தான். பரதன்பால் பரம பத்தியுடையவன்; அவனைவிட்டுப் பிரியாதவன். விரத சீலனாய் அவன் நந்திக்கிராமத்தில் இருந்தமையால் அங்கேயே இவனும்

தங்கி யிருந்தான். இடையிடையே அரண்மனைக்குச் சென்று தாயர்களைத் தேற்றி ஆறுதல் கூறி வந்தான். இன்று தமையன் அழைத்தவுடன் விரைவில் அடைந்து தொழுதான். தொழுதவனை அழுத கண்ணீரோடு அவன் தழுவினான். பின்பு அருகே இருத்திப் பரிபவமாய்ப் பரிவு கூர்ந்து உரிமையோடு மொழிந்தான்.

பரதன்; தம்பி! உன்னை ஒரு காரியமா இங்கு அழைத்தேன். உன்பால் உரிமையோடு சொல்லவுரியதைச் சொல்லுகிறேன்; நீ பிரியமாய்க் கேட்டருள்.

இளவல்: ஐயனே! சொல்லி அருளுங்கள்.

பரதன்: நான் கூறுவதை நீ மாறுபாடாக் கருதலாகாது.

இளவல்; என்றும் அவ்வாறு கருதி அறியேன்.

பரதன்: நான் அழுது வேண்டுகிற ஒரு வரத்தை நீ உழுவலன்போடு உடனே எனக்குத் தர வேண்டும்.

இளவல்: அது என்ன வரம்?

பரதன்: பெரிய அண்ணா முன்னம் சொன்னபடி இன்னும் இங்கு வரவில்லை; இனிமேல் என்னால் இருக்க முடியாது. தீயில் பாய்ந்து மாய்ந்து போகத் துணிந்து விட்டேன்; நீதான் அரசனாய் அமர்ந்து நாட்டைப் பாதுகாத்து யாவும் கவனித்துக் கொள்ளவேண்டும்

இந்த வார்த்தையைக் கேட்டதும், "ஐயகோ!" என்று வாய்விட்டுக் கத்திச் செவிகளைப் பொத்தி அலறி அழுதான்.

கேட்ட தோன்றல் கிளர் தடக் கைகளால்
தோட்ட தன்செவி பொத்தித் துணுக்குறு
ஊட்ட நஞ்சம் உண்டான்ஒத்து உயங்கினன்;
நாட்டமும் மனமும் நடுங்கா நின்றான். [1]

விழுந்து மேக்குயர் விம்மலன் வெய் துயிர்த்து
எழுந்து நானுனக்கு என்ன பிழைத்துளது?
அழுந்து துன்பத்தினாய்! எனச் சாற்றினான்
கொழுந்து விட்டு நிமிர்கின்ற கோபத்தான். [2]

உள்ளம் துடித்து உயிர் பதைத்துச் சத்துருக்கன் அடைந்துள்ள அல்லல்களை இவை உணர்த்தியுள்ளன. பரதனுடைய

வேண்டுகோள் இவ்வாறு நீண்ட துயரங்களை விளைத்து நெஞ்சத்தைக் கலக்கியுள்ளது. தமையன் என்ன சொன்னாலும் எது செய்தாலும் அமைதியாய்ப் பொறுத்து அன்பு பூண்டு நடப்பவன் ஈண்டு இவ்வாறு கொதித்துத் துடித்திருக்கிறான். நெஞ்சப் பதைப்புகள் இத் தம்பியின் நிலைமை நீர்மைகளைத் துலக்கி நிற்கின்றன. எவ்வழியும் புனிதம் தோய்ந்துள்ள இனிய உள்ளம் ஆதலால் துனிமொழி பாய்ந்ததும் துயரமாய்த் துடிக்க நேர்ந்தது. அண்ணன் அழைக்கவே ஆவலோடு வந்தவன் இன்னலுழந்து இடர்மீக்கூர்ந்தான். பன்னருந்துயரம் பாரித்து எழுந்தது.

சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான்இனி வீடுவன்.

இன்னவாறு இந்த வார்த்தைகளைப் பரதன் சொன்னபோது சத்துருக்கன் யாதும் கலங்கவில்லை. முடிவில் வந்த மொழிதான் கொடிய தீயாய் நெடிய துயரத்தைக் கடிது விளைத்து நின்றது.

மன்னன் ஆதி.

அண்ணன் இதைச் சொன்னபொழுதான் தம்பி வெம்பித் துடித்தான். நீ சக்கரவர்த்தியாய் இருந்து அருள் என்ற இந்தச் சொல்லில் இழிவோ, பழியோ, துயரோ, யாதும் இல்லை. அரிய மகிமைகளும் பெரிய சுகங்களுமே பெருகியுள்ளன. இதைக் கேட்டவுடனே அல்லல் உழந்து அலமந்து துடித்தது என்? உலகத் தம்பிகள் எவர்க்கும் பேரமுதமாய்ப் பேரின்பம் தருகிற சொல் இந்தத் தம்பிக்குக் கொடிய தீயாய் நெடிய விடமாய்ப் பெரிய துன்பத்தை விளைத்துளது. நிலைமையை ஓர்ந்து உணர்பவர் இக் குலமகனுடைய தலைமையைத் தெளிந்து வியந்து மகிழ்வர்.

பெரிய அரச பதவியைச் சிறிதும் மதியாமல் இராமன் துறந்து சென்றான்; இலக்குவனும் அவ்வாறே பின்தொடர்ந்து போனான்; பரதனும் முடிவில் வெறுத்து முடிய நேர்ந்தான்; இறுதியில் சத்துருக்கனும் அதனை அருவருத்துத் தனது வித்தக வியனிலையை விளக்கி உத்தம நீர்மையைத் துலக்கியருளினன்.

குடிப்பிறப்பும் குணச்சிறப்பும் உத்தம மானமும் தத்துவ ஞானமும் இக்குலமக்களிடம் தலைமையாநிலவி வருவதை உலக முழுவதும் கண்டு உவகை மீதூர்ந்து வருகிறது. எவ்வழியும்

செவ்வையாய்த் திருந்திய பண்பும் பெருந்தன்மையும் வாய்ந்து வந்துள்ளமையால் இவர் திவ்விய கீர்த்திகளோடு சிறந்து திகழ்கின்றார். உத்தமமான சத்திய நீர்மையுடையது சத்துள்ளதாய்த் தழைத்து உலகில் எத்திசைகளிலும் இசை ஒளி பரப்பி நித்தியமாய் நிலவுகிறது. அரிய தகைமைகள் பெரிய மகிமைகளாயின.

There is
One great society alone on earth:
The noble Living and the noble Dead. (Wordsworth)

"கண்ணியமாய் வாழ்ந்து கண்ணியமா இறந்து போகிற ஒரு புண்ணிய இனம்தான் இம் மண்ணுலகில் பெருமையா நிலைத்திருக்கிறது" என்னும் இந்த ஆங்கிலக் கவி ஈங்கு ஊன்றி உணரவுரியது. இருப்பும் இறப்பும் சிறப்புடன் சிந்திக்க வந்தன.

சத்தியம் தருமம் நீதி நெறிமுறை என்னும் இந்த நான்கும் இராமன் முதலிய நால்வரிடமும் முறையே மருவியுள்ளன. இயல்பின்படியே செயல்கள் இயங்கி வருகின்றன. உள்ளக் கிடக்கைகள் உரைகளில் தெளிவாய் வெளியே தெரிகின்றன.

அரசன் இல்லை ஆனால் தாய் இழந்த பிள்ளைபோல் தேசம் தேசுஅழிந்து சிதையும் ஆதலால் அந்த அழிவு நேராதபடி பரதன் தம்பியைத் தழுவி உழுவலன்போடு கிழமையா வேண்டினான்.

தன் உயிரை நீக்க மூண்டவன் மன்னுயிரைக் காக்க நீண்டுள்ளான்; அந்த உண்மை ஈண்டு நுண்மையா உணர வந்தது. பரம்பரை நீர்மை உள்ளே உரம் பெற்றுள்ளமையால் உயிர் போக நேர்ந்தபோதும் உலகை ஓம்புவதை ஓர்ந்து புரிந்தான்.

தன் சொல்லை யாதும் தட்டாமல் யாண்டும் உரிமையோடு ஊழியம்புரிந்து வந்துள்ள தம்பியை நோக்கி ஈண்டு என்சொல்லை மறுது ஒல்லையில் செய்தருள் என்று பரதன் வேண்டியிருக்கிறான்.

அரச பதவியை இளையவன் ஏற்றுக் கொள்ளான்; தான் இடுகின்ற பணி அவனுக்குக் கடுமையான கொடுமையுடையதாகவே தோன்றும் என்று இத் தோன்றலுக்குத் தோன்றியுள்ளது; ஆகவே ஒரு வரம் வேண்டுவதுபோல் இவ்வாறு பணிவோடு இனிது கூறினான். வரம் என்றது உரம் மிக உடையது.

தலைமையன் உளம் மறுகிக் கூறிய அக் கூற்று இளையவனுக்குக் கொடிய கூற்றாய் நெடிய துயரத்தை நேரே விளைத்தது.

ஊட்ட நஞ்சம் உண்டு ஒத்து உயங்கினன்.

தன்பால் பரதன் கேட்ட வரம் சத்துருக்கனுக்குத் துன்பாயிருந்த நிலையை இது வரைந்து காட்டியுள்ளது. நஞ்சம் உயிரைக் கொல்லும்; நெஞ்சார அதனை யாரும் உண்ணார்; எவரும் அஞ்சியே அகலுவர்; அத்தகைய கொடிய ஒரு நஞ்சை வலியக் கொண்டு வந்து வாயில் வற்புறுத்தித் திணித்து ஊட்டுவதுபோல் அண்ணன் கூறிய சொல் இத் தம்பிக்கு அவலத் துயரமாயிருந்தது. மன்னன் ஆய் இரு என்ற சொல்லைக் கேட்டபோது அவ்வுள்ளம் பட்டபாட்டை உவமானத்தால் ஓர்ந்து கொள்ளுகிறோம். இனிய அரச செல்வம் கொடிய நஞ்சமாய் நின்றது.

"கொஞ்சிய மொழியில் கூர்எயிறு மடித்தலும்
பஞ்சியின் வாயில் பனிநுரை கூம்பலும்
தஞ்ச மாந்தர் தம்முகம் நோக்கிஓர்
இளசொல் இயம்புவான் போல்இயம் பாமையும்
நஞ்சுண்டோன்தன் அவிநயம் என்ப." [அவிநயம்]

உண்ணாத நஞ்சை எண்ணாமல் உண்டவன் படுகிற அவலநிலையை இது காட்டியுள்ளது. உயிரின் துயர்வேதனை வெளியே விழி தெரிய வந்தது. நெஞ்சம் துடித்து நிலைகுலைந்து கண் கலங்கிக் கடுந்துயர் உழந்துள்ளமையை இளவல்நிலைகாட்டிநின்றது.

நாட்டமும் மனமும் நடுங்கா நின்றான்.

என்றதனால் இவன் நிலை தடுமாறிக் குலை நடுங்கியுள்ளமையைக் கூர்ந்து ஓர்ந்துகொள்கிறோம். யாதும் எதிர்பாராத சொல் உரியவன் வாயிலிருந்து வந்தமையால் நெடுந்திகில் அடைந்து நெஞ்சம் கலங்கினன். நேரே துணிந்து பேச நேர்ந்தான்.

அழுந்து துன்பத்தினாய்!

பரதனைத் தம்பி இவ்வாறு விளித்திருக்கிறான். தான் துன்பத்தில் அழுந்தி இருத்தலினாலேதான் பிறரைத் துன்பத்தில் அழுத்த நேர்ந்தான் என்று அழுத்தமாச் சுழித்து மொழிந்தான்.

அருமைத் தமையனைக் காணாமையால் அல்லும் பகலும் அல்லலில் அழுந்தி அலமந்து உழலுகின்றாய்! ஆதலால் எனது நிலைமையை ஒரு சிறிதும் உணராமல் இப்படிக் கொலை மொழி கூறினாய் என்று கொதித்துப் பதைத்துக் கதித்து நின்றான்.

கொழுந்து விட்டு நிமிர்கின்ற கோபத்தான்.

சத்துருக்கனுடைய உக்கிர வீர நிலையை இது வடித்துக் காட்டியுள்ளது யாண்டும் அமைதியுடையவன்; மவுனமாய் அடங்கியிருப்பவன். அரசிளங்குமரனாய்ப் பிறந்திருந்தாலும் எல்லாம் துறந்த தவசியின் மகன்போல் சாதுவாய் வாழ்ந்து வருபவன். ஞான சீலங்கள் நன்கு வாய்ந்தவன்.

பாரதத்தில் சகாதேவன் போல் இராமாயணத்தில் சத்துருக்கன் வித்தக யோகியாய் விளங்கியிருக்கின்றான். அவன் ஐவரில் இளையவன்; இவன் நால்வரில் பின்னவன். நிலைமை நீர்மைகளில் ஓரளவு இவ்வாறு நேர்மையாயிருந்தாலும் இவன் பெரிய போர் வீரன். அரிய தீரன்; அதிசய ஆற்றல்கள் உடையவன்.

சத்துருக்கன் என்ற பெயர் பகைவர்க்கு அச்சத்தை விளைவிப்பவன் என்னும் பொருள் அமைந்தது. மாறுபாடாய் மீறி வருபவர் யாராயினும் இவன் எதிரே நீறுவார். புறத்தே எத்தகைய சத்துருக்களையும் எளிதே வெல்ல வல்லவனாய் இருப்பது போல் அகத்தே காமம் குரோதம் முதலிய கொடிய பகைகளையும் அடக்கியுள்ளான். அவ்வுண்மை எவ்வழியும் தெளிவாயுளது.

சத்ருக்நோ நித்ய சத்ருக்நோ. (வால்மீகம்)

நித்திய சத்துருக்களாகிய ஐம்புலன்களையும் வென்றுள்ளவன் சத்துருக்கன் என்னும் பேரோடு நின்றான். வால்மீகி முதலிய முனிவர்கள் இவனை இவ்வாறு புகழ்ந்து மொழிந்துள்ளார்.

அரிய பெரிய அரசபதவியை அருவருத்து வேண்டாம் என்று வெறுத்து ஈண்டு இவன் நிற்கும் நிலையை நினைந்து சிந்திப்பவர் இவனுடைய சித்த சுத்தியையும் சிந்தையை அடக்கியிருக்கும் அற்புத சத்தியையும் நன்கு தெளிந்து கொள்ளுவர். ஆசை அற்றபோது அந்த மனிதனிடம் அதிசய சித்திகள் பெருகி எழுகின்றன. நிராசையாளன் நித்திய சோதியாய் நிலவுகின்றான். ஆசை ஒழிந்த அளவு அந்த ஆன்மா ஈசன் ஆகிறது.

அண்ணன் பால் எப்பொழுதும் மரியாதையாய் அடங்கி ஒடுங்கிப் பணிந்து நடந்து வந்தவன் "மன்னன் ஆதி!" என்று அவன் சொன்னதும் இன்னல் மீதூர்ந்து சினந்து சீறி எதிர்ந்து பேசியிருக்கிறான். உள்ளக் கொதிப்பு உரையில் குதித்துள்ளது.

நீண்ட துயரங்களையும் மூண்ட கோபத்தையும் அடக்கிக் கொண்டு இவன் பதில் மொழிந்திருப்பது மதிநலம் சுரந்து வந்துள்ளது. மானவீரமும் ஞான சீலமும் விநய விவேகங்களும் உரைகளில் ஒளிவீசி மிளிர்கின்றன. அயலே வருவன காணுக.

இளவல் எதிர் மொழி.

கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி, போனவர்கள்
வரும்அவதி போயிற்றுஎன்று
ஆனாத உயிர்விடவென்று அமைவானும்
ஒருதம்பி, அயலே நானாது
யானுமஇவ் அரசாள்வென எனனேஇவ்
அரசாட்சி இனிதே அம்மா! (1)

மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து
வாழ்ந்தானே பரதன் என்னும்
சொன்னிற்கும் என்றுஅஞ்சிப் புறத்திருந்தும்
அருந்தவமே தொடங்கினாயே!
என்னிற்பின் இவனுளனும் என்றேபின்
அடிமையுனக்கு இருந்ததேனும்
உன்னிற்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ்
இருப்பதுவும் ஒக்கும் என்றான். (2)

முத்துருக்கொண்டு அமைந்தனைய முழுவெள்ளிக்
கொழுநிறத்து முளரிச் செங்கட்
சத்துருக்கன் அஃதுரைப்ப அவனிங்குத்
தாழ்கின்ற தன்மை யானிங்கு
ஒத்திருக்கலால் அன்றே உலந்தால்பின்
இவ்வுலகை உலைய ஒட்டான்
அத்திருக்கும் கெடும்உடனே புகுந்தாலும்
அரசுஎரிபோய் அமைக்க என்றான். (3)

இந்த மூன்று பாசுரங்களையும் ஓசையோடு ஊன்றிப் படியுங்கள். பொருள் நிலைகளைக் கருதிப் பாருங்கள். அறிவு நலங்கள் உரைகள்தோறும் பெருகி மிளிர்கின்றன. கூரிய சீரிய தொனிகளில் நுணுகிய மானச மருமங்கள் நீண்டு நிலவுகின்றன.

யாண்டும் பேசாமல் அமைதியாய் இருந்து வந்த இளவரசன் ஈண்டு வளமாப் பேசியிருக்கிருன். வார்த்தைகள் அந்த உள்ளத் தின் உயர் நீர்மைகளை நேரே வார்த்துக் காட்டியிருக்கின்றன.

பேச்சின் காட்சி.

"இந்த அரசகுடியில் பிறந்தவர் நால்வர்; முடிசூடிச் சக்கர வர்த்தியாய் இருக்கவுரிய முதல்வர் அரசைக் கைவிட்டுக் கான கம் போனுர்; அவ்வாறு போன அவருக்கு ஆதரவாய் உடனி ருந்து ஏவல் செய்ய வேண்டும் என்னும் ஆவலோடு ஒரு தம்பி அவரைத் தொடர்ந்து பின்னே பிரியாமல் சென்ருர்; வனவாசம் செய்யப் போனவர் முன்னம் சொன்னபடி குறித்த காலத்தில் வரவில்லையே என்று பரிதாபமாய் அழுது உயிரை மாய்த்துக் கொள்ள ஒரு தம்பி துணிந்தார்; எல்லாரும் தொலைந்தார்; இது மிகவும் நல்லதாயது; காட்டுக்கும் சுடுகாட்டுக்கும் போய் யாவ ரும் ஒழிந்தார் என்று உள்ளம் உவந்து கடைசியில் இருந்த ஒரு தம்பி மணிமகுடம் மருவி அரசர் பெருமானுய் நாடு ஆள நேர்ந் தான்; ஆ! இந்த அரச ஆட்சி எவ்வளவு அதிசய இன்பம் உடையது; நான் பிறந்து பெற்ற சிறந்த பேறு நிறைந்த மகிமை வாய்ந்தது; யாரும் பெறமுடியாத பெரிய பாக்கியத்தை யான் எளிதே பெற்றுக் கொண்டேன்; வையமும் வானமும் புகழ்ந்து போற்ற நான் இனி மகிழ்ந்து வாழ்வேன்" என்று இவ்வாறு முதலில் நளினமான விநயமுகவுரையா இனிது பேசிமுடித்தான்.

இந்தப் பேச்சில் உள்ள பரிதாபமும் பரிகாசமும் விநய விநோதங்களும் வித்தக நிலைகளில் விரிந்திருக்கின்றன. கொடிய சோகங்களில் நெடிய விவேகங்கள் நேரே நிலவுகின்றன. அரிய மருமமான மானச உணர்வுகள் நேரே காண வந்துள்ளன.

கான்ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனுன்

வனவாசம் போயுள்ள இராமனை இவ்வாறு இனமாக் குறித்துள்ளான். எளிய பரதேசியாய்க் காட்டுக்குப் போய் அவன் அங்கே காலத்தைக் கழிக்கவில்லை; ஓர் அதிசய ஆட்சி யை ஆண்டு நடத்தவே அந்த ஆண்டகை போயிருக்கிருன் என்று இத்தம்பி உறுதியாய்க் கருதியுள்ளான். அவ்வுண்மை கான் ஆள என்ற அரிய மொழியினுல் வெளியே தெரிய வந்தது.

842

இவன் போய்க் கான் ஆளவில்லையானால் தேவரும் தேவர் கோனும் வான் ஆளமுடியாது ஆண்டு அமரர்கள் மனமகிழ்ந்து வாழவே தனது தமர்களை நீங்கி மூண்டு இவன் வனவாசம் போனான். அந்தப் போக்கும் நோக்கும் புலன் தெரிய வந்தன.

பெற்றதாயும் உற்ற உறவும் ஊரும் நாடும் அரச திருவும் பரிதாபமாய்ப் பரிந்து புலம்பி அழுது மறுகி அவலம் அடைவதைக் கண்டும் யாதும் கவலை அடையாமல் கருமமே கண்ணுய்க் கடமையில் மூண்டு சென்றான் ஆதலால் நிலமகளைக் கைவிட்டுப் போனான் என்றான். காட்டுக்கு அவன் கால் வாங்கிப்போன நிலையை இங்ஙனம் காட்டி யருளினான். நாடு துறந்து இராமன் காடு புகுந்தது தன்னலம் துறந்து பிறர்நலம் பேணவேயாம்.

காத்துப் பின்பு போனானும் ஒருதம்பி.

இலக்குவனை இங்ஙனம் குறித்திருக்கிறான். கண்ணை இமை காப்பதுபோல் இராமனை எவ்வழியும் செவ்வையா இவன் பாது காத்து வந்துள்ளான்; அந்த வுண்மை காத்து என்றதனால் காண வந்தது. யாவும் காக்க வல்லவனை இவன் காத்திருக்கிறான்.

இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாமல் பின் சென்ற தம்பி என்று பெரிய புகழை இலக்குவன் பெற்றிருத்தலை ஈண்டு உய்த்துணர்ந்து கொள்ளுகிறோம். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் ஆதலால் தன் கூடப்பிறந்தவனை இக் குலமகன் இவ்வாறு நலமா உரைத்து நிலைமையைத் தலக்கினான்.

உயிர்விட என்று அமைவானும் ஒரு தம்பி.

பரதனை இவ்வாறு சுட்டிச் சொன்னான். எதிரே நின்று நேரே பேசுகின்றான் ஆயினும் பராமுகமாய்ப் படர்க்கையில் குறித்தான். கானகம் போன பெரியவன் உரிய காலத்தில் வர வில்லை ஆகலால் இனிமேல் நான் இருக்க முடியாது; இறந்தே போவேன் என்று மொழிந்தான்; ''மின்னு தீயிடை யான் இனி வீடுவேன்'' எனத் தான் சாகப்போகின்ற விதத்தையும் தெளிவா விளக்கிச் சொன்னான் ஆகையால் அதனை இளையவன் இவ் வண்ணம் வெளிப்படுத்தினான். ஒரு என்றது எண்ணி உணர.

மூன்று தோன்றல்களின் நிலைமை நீர்மை சீர்மைகளை நேர்மையாப் பேசி வந்தவன் பின்பு தன்னைக் குறித்து இன்னலோடு

இடக்காய்ப் பேச நேர்ந்தான். வேதனைகள் வினயமா வந்தன.

யான் நாணாது இவ்அரசு ஆள்வென்!

நான் மன்னர் மன்னனாயிருந்து இனிய அரச போகங்களை நுகர்ந்து பெரிய ஆட்சியை அரிய மாட்சியோடு நடாத்துவேன்; உலகம் இனி மேல் எனக்குத் தனி உரிமையாயிருக்கும் என்று வஞ்சப் புகழ்ச்சியாய்நெஞ்சம் கொதித்து இளையவன்பேசியிருப்பதை இதில் கூர்ந்துஓர்ந்து குறிப்பைத்தேர்ந்துகொள்ளுகிறோம்.

யாதும் நாணாமல் ஏதும் உணராமல் எள்ளல் இழிவுகளை எண்ணாமல் உள்ளம் துணிந்து ஒரு அரசன் ஆயிருத்தற்குப் பெரிய தைரியம் வேண்டும் ஆதலால் நாணாது அரசு ஆள்வேன் என்றான். நாணம் இழந்து நான் அரசு ஆளேன்; உயிரும் வாழேன் என்பது துயரமான தொனியில் துலங்கி நின்றது.

என்னே இவ் அரசாட்சி! இனிதே அம்மா!

தன்னை ஏற்றுக் கொள்ளும்படி முன்னவன் போற்றி மொழிந்த அரச பதவியைப் பின்னவன் இவ்வாறு தூற்றி இகழ்ந்தான்.

அம்மா! அரசு இனிதே! என்றது இகழ்ச்சிக் குறிப்பில் விளைந்த வியப்பு. அரிய பெரிய மகிமைகள் வாய்ந்த தமையன்மார் மூவரையும் இழந்து விட்டு யாதொரு சோகமும் இன்றி ஒரு தம்பி அரச திருவை அவாவிக் கொண்டால் அது எவ்வளவு இனிமையுடையதா யிருக்கவேண்டும்! அதன் மாயமோகம் மாயா வல்லபம் வாய்ந்தது என்று இகழ்ச்சிக் குறிப்போடு இழித்துப் பழித்துத் தன் வெறுப்பு நிலையைவெளிப்படுத்தினான்.

தனது உண்மை நிலையை உணராமல் அருமைத் தமையனார் புன்மையாப் பேசி விட்டாரே என்று உள்ளம் கூசி இந்த இளவல் உளைந்து பதைத்துள்ளான் மனவேதனையோடு மறுகி நொந்து பேசியிருப்பதை உரைகள் தோறும் தெளிவாத் தெரிந்து கொள்ளுகிறோம். உள்ளத் துயர்கள் வெளியே துள்ளியுள்ளன.

உயர்ந்த அரச குடியில் பிறந்தேன்; கடைசித் தம்பியாய் அமைந்தேன்; ஆனால் என் அண்ணா என்னைக் கடையன் எனக் கருதி விட்டார் என்று பரிதாபமாய் வருந்தி மீண்டும் தொடர்ந்து நேரே பேச நேர்ந்தான்: “எம்பெருமானே! உங்கள் அண்ணா முடிதுறந்து காட்டுக்குப் போய் விட்டார்; அவர் இல்லாத

பொழுது அரண்மனையில் இருக்கலாகாது; நகரிலும் வாழக் கூடாது; அவ்வாறு வாழின் அது எவ்வழியும் பழியாம்; அந்தப் பழிக்கு ஆளாகலாகாது என்று அஞ்சி அயோத்தியை விட்டு விலகி இந்தச் சிறிய ஊரில் துறவிபோல் தனியே தங்கியிருக்கிறீர்கள்; நானும் உங்கள் ஆணையின் படி ஊழியம் புரிந்து வருகிறேன்; உயிரை ஒட்டி உடல் இருப்பது போல் நான் இருக்கின்றேன்; என் இருப்பைச் சரியாத் தெரிந்து கொள்ளாமல் என் தலையில் நெருப்பை வாரிக் கொட்டி விட்டீர்கள்; உங்களுக்குப் பின் நான் உயிரோடு இருந்து அரசை ஆளுவேன் என்று தாங்கள் எண்ண நேர்ந்தது நான் செய்த கொடிய பாவமேயாம்; நீங்கள் சாக நேரின் என் உயிர் முன்னதாகவே போக நேரும்; இந்த உண்மையை உறுதியாத் தெரிந்து கொள்ளுங்கள்? தங்களுக்குப் பின் ஒரு கணம் உயிர் வாழ்ந்திருந்தாலும் ஊழிகாலமும் நான் அரசு புரிந்தவன் ஆவேன்; இந்த ஏழைக்கு ஒரு உயிர் தனியே இல்லை; பரதன் என்னும் பெயரோடு அது மருவியுளது; இது சரதம்; விரத சீலரான உங்கள் எதிரே இதுவரை நான் பேசிய பிழைகளைப் பொறுத்து அருளுங்கள்" என்று இவ்வாறு வடித்து உரைத்துத் தன் பேச்சை முடித்தருளினன்.

இந்த இளவலின் உளநிலையும் உணர்வு நலனும் உறுதி ஊக்கங்களும் உரையாடும் திறங்களும் ஈண்டு முறையே தெரிய வந்துள்ளன. பேரறிவும் பேரன்பும் பெருந் தன்மையும் பேராண்மையும் இக்குல மகனிடம் குலாவி மிளிர்கின்றன. சார்ந்த சார்புகள் ஆர்ந்த யூகமாக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள நேர்ந்தன.

கூட்டுறவுகள்.

இராமனை இலக்குவன் எண்ணி ஒழுகுவதுபோல் பரதனை இவன் கருதி வருகிறான். உரிய பரதன் மூலமாகவே பெரிய அண்ணனை அரிய மரியாதையோடு பிரியமா இவன் காணுகிறான்.

தன்னை ஈன்ற தாயின்பால் ஆன்ற மதிப்பும் மரியாதையும் இத்தோன்றல் காட்டியுள்ளான். தனது தமையனான இலட்சுமணனைத் தன் தாய் இராகவனுக்குத் தானம் கொடுத்து ஏவல் புரிய ஆவலா அனுப்பியதுபோல் தன்னைப் பரதனுக்குத் தந்துள்ளதைச் சிந்தையில் உன்னி எந்த வேலையும் அவனுக்கு ஆவதை இவன் ஆற்றி வருகின்றான். அரிய துணைகள் இணைபிரியாது

பிணைந்து உரிய பண்புகளோடு ஒழுகி வருவதைக் கண்டு பேரிய அன்புகள் உலகில் பெருகி வந்துள்ளன. சகோதர வாஞ்சைக்கு இக் குலமக்கள் நால்வரும் யாண்டும் ஆன்றசான்றுகளாய் நீண்டு எவ்வகையிலும் செவ்வையா நிலவுகின்றனர்.

வெளியே வண்ணமும் வடிவமும் வேருயிருந்தாலும் இவர் களுடைய எண்ணமும் இயல்புகளும் ஒருமையாய்ப் பெருமை பெற்று எவ்வழியும் திவ்விய நிலையில் சிறந்து வந்துள்ளன. நால்வகை நிறங்களும் மேல்வகையா மேவி மிளிர்கின்றன.

இராமன் இனிய பசுமை நிறம்.

இலக்குவன் சிவந்த பொன் நிறம்.

பரதன் நீலமகலந்த பசுமை.

சத்துருக்கன் தனி வெண்மை.

மரகதம், மாணிக்கம், நீலம், முத்து என இவர் முறையே கோலம் கொண்டு உள்ளனர். நவமணிகளுள் நான்மணிகள் இவருடைய எழில் நிறங்களை மேவி விழுமிய மேன்மைகளை அடைந்துள்ளன. உத்தம உருவங்கள் ஒளிகளை வீசி விளங்கின.

முத்து உருக்கொண்டு அமைந்தனைய முழுவெள்ளிக்
கொழுநிறத்து முளரிச் செங்கட் சத்துருக்கன்.

சீவிய ஓவியமாச் சத்துருக்கனை இது சித்திரித்துள்ளது. எழில் உருவமும் விழி அழகும் வெளி தெரிய நின்றன. முழு வெள்ளிக் கொழு என்றது வெண்மையின் உண்மையான பூரண நிலையை நுண்மையா அறிய. அருமையும் பெருமையும் தண்மை யும் வெண்மையும் தகைமையும் வகைமையா உய்த்து உணர முத்து முதலில் வந்தது. கொழு என்றது செழுமை தெரிய நின்றது.

மாசு யாதும் மருவாமல் தேசு மிகுந்துள்ள பரிசுத்த நிலையினன் என்பதை வெள்ளை நிறம் உள்ளம் தெளியச் செய்தது.

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை (ஔவையார்)

கள்ளம் இல்லாமல் உள்ளம் தூய்மையாயிருப்பதே வெள்ளை ஆம் என ஔவையார் இவ்வாறு நிறச்செவ்வியைக் கூறியிருக்கிறார்.

சித்த சுத்தியும் உத்தம நீர்மையும் உடையவன் ஆதலால் சத்துருக்கன் எத்தகைய இடையூறுகளையும் எளிதே நீக்க வல்ல வன் என ஒளிபெற்று உற்ற பேரின் சீரைத் தலக்கி நின்றான்.

முத்துருக் கொண்டு செம்முளரி அலர்ந்தால்
ஒத்திருக்கும் எழில் உடையஇவ் ஒளியால்
எத்திருக்கும் கெடும் என்பதை எண்ணிச்
சத்துருக்கன் எனச் சாற்றினன் நாமம்.

(இராமா, பால, அவதார, 123)

வசிட்ட முனிவர் முன்னம் வைத்த பேருக்குக் காரணத்தை இது காட்டியுள்ளது. திருக்கு=மாறுபாடு. தன் பெயரை உச்சரித்தாலும் எத்தகைய குற்றங்களும் எளிதே நீங்கி ஒழியும் உத்தம குணவான் சத்துருக்கன் என்பதை ஈண்டு உணர்ந்து கொள்கிறோம். மருவிய பெயர் உயர் மகிமையுடையது.

இத்தகைய உத்தமன் வாயிலிருந்து வந்த வித்தக உரைகளைக் கேட்டதும் பரதன் திகைத்தான். பின்பு ஒருவாறு துணிந்து சிந்தனை செய்தான். "தம்பியிடம் நிலைமையை நேரே உரைத்ததினாலேதான் இப்படி எதிர்வாதம் செய்ய நேர்ந்தான்; நான் விரைந்து இறந்துபோனால் எல்லாம் சரியாய்த் திருந்திவிடும்; பேசாமல் காரியம் செய்வதே வீரியம் ஆகும். நான் மாண்டு மடிந்தது தெரிந்தால் ஆண்டவனும் ஈண்டு வந்து வேண்டியதை விரைந்து செய்வார்; நாடு நலிந்து மெலிந்துபட விடார்; ஆட்சியை மாட்சியா நடத்தி யருளுவார்" என இவ்வாறு கருதித் துணிந்து உறுதியுடன் இறுதியை அறுதியாச்செய்யமூண்டான்.

உலந்தால் பின் இவ்வுலகை உலைய ஒட்டான்.

தான் இறந்து ஒழிந்தால் பின்னால் நிகழ்ந்து வருவதைக் குறித்துப் பரதன் இவ்வாறு துணிந்திருக்கிறான். உலத்தல்=சாதல். நான் உயிரைவிடப் போகிறேன்; நீ உலகத்தைப் பாதுகாத்துக் கொள் என்று தம்பியிடம் முன்னம் சொன்னது தவறு என்று தெரிந்து கொண்டு பரதன் பின்பு யாதும் உரையாடாமல் காரியத்தில் விரைந்தான். இளவலை நேரே உரிமையா ஏவினான்.

எரி போய் அமைக்க.

இறுதியில் பரதன் சத்துருக்கனை நோக்கி இட்ட கட்டளை இது. மூண்ட துயரங்களைப் பொறுக்க முடியாமல் மாண்டு போக நேர்ந்தவர் தீயுள் பாய்ந்து மாய்வது வழக்கம் ஆதலால் நெருப்பை வளர்க்கும்படி தம்பியிடம் உரைத்தான். அவனும் மாறுவேறு கூறாமல் கூறியபடியே செய்யக் குறியோடு

போனான். அண்ணனுக்கு முன்னதாகவே தான் இறந்துபோக வேண்டும் என்று இளையவன் முடிவு செய்துகொண்டமையால் வேறு எதிரே யாதும் பேசாமல் காரியத்தில் கடிது விரைந்தான்.

தீ மூட்டியது.

நந்திக்கிராமத்தின் அருகே வடகீழ்த்திசையில் ஒரு புனித மான இடத்தில் சதுரமாக் குழி தோண்டுவித்துக் கட்டைகளை அடுக்கி நெய்யை வார்த்து நெருப்பை மூட்டினான். அது மூண்டு வளர்ந்த நிலையை அறிந்ததும் இராமனுடைய பாதுகை களை வலம்வந்து தொழுதுவிட்டு பரதன் எழுந்தான். அண்ணனை எண்ணி உருகியதால் கண்ணீர்பெருகி மார்பில் வழிந்து ஓடியது. உழுவலன்பால் அழுத கண்ணன் பின்பு விழுமிய பண்போடு உறுதிபூண்டு அக்கினிக்குண்டத்தைநோக்கி ஆர்வமாய்நடந்தான்.

கோசலை ஓடிவந்தது.

பரதன் தீயில் பாய்ந்து சாக எழுந்தான் என்ற செய்தி அயோத்திக்குத் தெரிந்தது; தெரியவே கோசலாதேவி பரிதாப மாய் அலறி எழுந்து அதிவேகமாய் விரைந்து வந்தாள்; மந்திரி களும் சேனாதிபதிகளும் அரச மரபினரும் அடுத்த உறவினரும் நகரமாந்தரும் குடிசனங்களும் ஒருங்கே திரண்டு ஓலமிட்டு அழுது கோசலையைப் பின் தொடர்ந்து ஓடிவந்தனர். யாண்டும் கவலைகள் மூண்டு பெருகி அவல ஒலிகள் நீண்டு எழுந்தன.

நெருப்புக் குண்டத்தை நோக்கிப் பரதன் போவதைக் கண்டதும் "ஐயையோ! என் மகனே!" என்று கோசலை கூவி அலறி ஆவி அலமந்து துடித்து முடுகி வந்தாள். பெரிய தாயின் சத்தம் கேட்டதும் பரதன் திரும்பிப் பார்த்தான். தலைவிரிகோல மாய் ஓடிவருகிற அந்த அன்னையின் அலங்கோல நிலையைக் கண்டதும் நெஞ்சம் இரங்கி நிலைகுலைந்து தலைமயங்கி நின்றான்; அங்ஙனம் அயர்ந்து நின்றவன் விரைந்துபோய் அவள் அடியில் விழுந்து தொழுதான். தொழவே அத்தாய் இச்சேயைத் தழுவிப் பிடித்துக் கொண்டாள். பரிதாபங்கள் பெருகி நின்றன.

எரி அமைத்த மயானத்தை எய்துகின்ற
காதலனை இடையே வந்து
விரியமைத்த நெடுவேணி புறத்தசைந்து
வீழ்ந்து ஒசிய மேனிதள்ளச்

சொரியமைப்பது அரிதாய மழைக்கண்ணள்
தொடருதலும் துணுக்கம் எய்தாப்
பரிவமைத்த திருமனத்தான் அடிதொழுதான்
அவள்புகுந்து பற்றிக் கொண்டாள்.

பரிதாபமான சோகக் காட்சியைத் தெளிவாக இது எழுதிக் காட்டியுள்ளது. கருதிக் காண்பவர் கண்ணீர் சொரிவர். தலை மகனைப் பிரிந்து நிலைகுலைந்து நெடுந்துயரோடு மறுகியிருந்ததாய் இக்குலமகன் சாக எழுந்தான் என்று அறிந்ததும் குலைதுடித்து உயிர்பதைத்துச் சோகம் மீதூர்ந்து வேகமா ஓடிவந்துள்ளாள்.

மழைக் கண்ணள் என்றதனுல் அவள் அழுது வந்ததும், கண்ணீர் பெருகி ஓடியுள்ளதும் அறியவந்தன. பெரிய தாய்மை அன்பும், அரிய சேய்மைப் பண்பும் இங்கே அதிசய நிலையில் குதிகொண்டுள்ளன. மாய மூண்டவன் தாயைக் காணவே நேயம் நீண்டு நெஞ்சுருகிப்படியில்விழுந்துபரிந்து வணங்கினன்.

அடி தொழுதான்;
அவள் புகுந்து பற்றிக் கொண்டாள்.

துயரமாய் உயிரை மாய்க்கப் போகிறபோதும் பெரிய தாயாரைக் கண்டதும் மரியாதையாய்க் காலில் விழுந்து தொழு திருக்கிருன். தன் அடியில் விழுந்து தொழவே இம்மகனை அத் தாய் கொடியில் பிடித்துக்கொண்டாள். விட்டால் தீயில்போய்ப் பாய்ந்து மாய்ந்து போவான் என்னும் அச்சத்தால் இறுகப் பிடித்து நின்ருள். பற்றிக் கொண்டாள் என்றதனுல் அந்த நிலைமையை உய்த்து உணர்ந்து கொள்கிருேம். நெஞ்சப் பதைப்புகள் நெடுந்திகில்களாய் மூண்டு கடுஞ் சோகங்களா நீண்டன.

தாய் மொழிந்த வாய்மொழி

பரிதாபமாய் ஓடிவந்த தாய் பிள்ளையைப் பிடித்து நிறுத்திக் கொண்டு உள்ளம் பரிந்து பேச நேர்ந்தாள். வெளியே வந்த வார்த்தைகள் அருள் சுரந்து பொருள் நிறைந்து அறிவு நலங்கள் விரிந்து புனித போதனைகளாய் ஒளிமிகுந்து உயர்ந்து விளங்கின.

மன்இழைத்ததும் மைந்தன் இழைத்ததும்
முன்இழைத்த விதியின் முயற்சியால்
பினஇழைத்ததும எண்ணில் அப்பெற்றியால்
என்இழைத்தனை என்மகனே! என்ருள். (1)

நீயிதெண்ணினை யேல்நெடு நாடுளரி
பாயும்; மன்னரும் சேனையும் பாயுமால்
தாயர்எம் அளவன்று தனியறம்
தீயின் வீழும் உலகும் திரியுமால். (2)

தரும நீதியின் தற்பயன் ஆவதுன
கருமமே அன்றிக் கண்டிலம கண்களால்;
அருமை ஒன்றும உணர்ந்திலை ஐயநின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ? (3)

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அரு ளுக்கருகு ஆவரோ?
புண்ணியம்எனும் நின்னுயிர் போயினல்
மண்ணும வானும் உயிர்களும் வாழுமோ? (4)

இன்று வந்தில னேஎனின் நாளையே
ஒன்றும் வந்துனை உன்னி உரைத்தசொல்
பின்றும் என்றுண ரேல்பிழைத் தான்எனின்
பொனறும் தன்மை புகுந்தது போய்என்றாள். (5)

ஒருவன் மாண்டனன் என்றுகொண்டு ஊழிவாழ்
பெருநிலத்துப் பெறலரும் இன்னுயிர்க்
கருவும் மாண்டறக் காணுதி யோகலை
தருமம் நீயலது இல்லெனும் தன்மையோய்? (6)

இறக்கை யுஞ்சிலர் ஏகலும் மோகத்தால்
பிறக்கை யும்கடன் என்றுபின் பாசத்தை
மறக்கை காண்மகனே! வலி ஆவது
துறக்கை தானும்என் றாள்மனம் தூய்மையாள். (7)

கோசலைத் தாய் பேசியுள்ள நீதி மொழிகளையும், நெறி முறைகளையும், அறிவு நலங்களையும், ஆன்ம நிலைகளையும் இந்தப் பாசுரங்கள் மேன்மையா விளக்கியுள்ளன. உள்ளத்தின் உருக்கங்களும் உணர்ச்சித் திறங்களும் உரைகளில் தெளிவா ஒளிவீசி நிற்கின்றன. அரிய பெரிய நீர்மைகள் தெரிய நேர்ந்தன.

தூய்மையான தாய்மை அன்பு வாய்மை தோய்ந்து வந்துள்ளமையால் உலக உள்ளங்களை உருக்கி உணர்வு நலங்களைப் பெருக்கி உயர் பெருந்தகைமைகளை விளைத்து வியனு விளங்கி மிளிர்கிறது. பிள்ளைப் பாசம் எல்லாரையும் உருக்குகிறது.

புனித எண்ணங்களும் இனிய மொழிகளும் புண்ணிய நீர்மைகளைக் காட்டிக் கண்ணிய மேன்மைகளைத் துலக்கி வருகின்றன. பரிவோடு வெளிவந்த வார்த்தைகள் உள்ளத்தின் பரிபாக நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளச் செய்துள்ளன.

பேச்சின் காட்சி.

“பரதா! உன் தந்தையார் இறந்து மறைந்ததும், தமையனார் அரசு துறந்து வனவாசம் போனதும் பழவினையின் விளைவுகளே; முன்னம் சொன்னபடி குறித்த காலத்தில் வராமல் தாமதித்து நிற்பதும் விதியின் விளையாட்டே; அதிசய மேதைகளையும் விதி சதிசெய்து விடுகிறது; கருமத்தின் வழியே சீவர்களுடைய வாழ்வுகள் யாண்டும் நடந்து வருகின்றன; இந்த உண்மைகளை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்; இன்று நீ செய்ய மூண்டது எவ்வளவு கொடியது! கொஞ்சம் சிந்தனை புரிய நேர்ந்தாலும் நெஞ்சம் நிலை குலைந்துபோம்; நீ எரி புகுந்தால் இந்தத் தேசம் முழுவதும் தீயில் பாயும்; அரச குடும்பம் அடியோடு மடியும்; மந்திரிகள் சேனதிபதிகள் சேனை வீரர்கள் யாவரும் செத்து முடிவர்; நான் முதலாக உன் தாய்மார்கள் எல்லாரும் தீயுள் ஒல்லையில் பாய்ந்து மாய்ந்து போவோம்; குடி சனங்களோடு நில்லாமல் உலக மக்களும் உள்ளம் துடித்து ஒக்க மடிவர்; நேர்கின்ற அழிவு நிலையை யாதும் கவனியாமல் நீ தீது செய்ய எண்ணினையே! தருமமும் நீதியும் சத்தியமும் கருணையும் உன்னுடைய உருவத்தில் மருமமா மருவியுள்ளன; உனது அருமை பெருமை மகிமை மாண்புகளை நீ ஒரு சிறிதும் உணரவில்லையே! ஊழிகாலம் கழிந்தாலும் உன்னுடைய விழுமிய மேன்மை தேயாதே; எவ்வழியும் என்றும் உன் புகழ் ஒளி பொங்கி நிற்குமே. புண்ணிய சீலன் என்று புனித முனிவர்களும் எண்ணிப் புகழ்கின்ற இராமனை நீ அண்ணனுகப் பெற்றிருக்கிருய்; உன்னைத் தம்பியாகப் பெறுதற்கு அவன் என்ன புண்ணியம் செய்தானே? எண்ணில் கோடி இராமர்கள் ஆனலும் உன்னுடைய தகைமைக்கு ஈடு ஆகமாட்டார். உண்மையான புண்ணியமே உன் உயிர்; அதனை நீ வலிந்து போக்க நினைந்தாய்! அதற்கு ஏதேனும் இடையூறு நேர்ந்தால் மண்ணிலும் விண்ணிலும் வாழுகின்ற சீவகோடிகள் யாவும் ஆவலித்து

அழுது அழிய நேருமே! உறுவதை உணராமல் உற்ற மனவேதனையால் கொடிய துயர்களைச் செய்ய நேர்ந்தாய்; அண்ணா இன்று வரவில்லையானால் நாளை வந்து சேருவார்; சொன்ன தவணை ஆன நாளை எண்ணிக் கணக்குப் பார்த்ததில் ஏதேனும் பிழையிருக்கலாம்; பதினான்கு ஆண்டுகளில் நாழிகை முன்னும் பின்னும் ஒரு வேளை கூடியும் குறைந்தும் மாறுபாடாய் மருவி இருக்கலாம்; எதையும் பொறுமையோடு கருதிச் சரியா நோக்க வேண்டும்; நீ ஒருவன் மாண்டால், இந்த உலகம் முழுவதும் அல்லலாய் அவலத் துயரோடு மாண்டு படுமே! என்பதை ஒரு சிறிதும் கருதாமல் நீ மூண்டு முனைந்தது மடமையான கொடுமையே; உரிய தமையன் மேல் அளவு கடந்த பிரியம் கொண்டுள்ளமையால் இவ்வளவு அழிதுயர் விளைந்தது; தாய் தந்தை, மனைவி மக்கள், அண்ணன் தம்பி, அக்கா தங்கை, உறவு சுற்றம், ஒக்கல் பக்கம் என்னும் பாசபந்தங்கள் எல்லாம் மாயப் பொய்யே; செய்த வினைகளுக்கு ஈடாக வந்து கிளைகள்போல் தழுவியிருந்து விரைந்து பிரிந்து மறைந்து போகின்ற மாய உறவுகளை மெய் என நம்பி மறுகி மயங்கலாகாது; உண்மை தெளிந்தவர் நன்மையான மெய்ஞ்ஞானிகள் ஆகின்றார்; பாசப் பற்று அற்று நிற்றலால் அவர் ஈசன் போல் தேசுமிகுந்து திகழ்கின்றார். நித்திய அநித்திய நிலைகளை உணர்ந்து உடல் உயிர்களின் தொடர்புகளைத் தெளிந்து மயல்கள் யாவும் களைந்து உயர்கதி பெறுபவரே உத்தம முத்தராய் ஒளிமிகப் பெறுகின்றார். சிறந்த மதிமானான நீ மாய மையல்களில் மயங்காமல் தூய சிந்தையனாய் உயர்ந்து அருள்" என்று இன்னவாறு கோசலைத்தாய் பரதனுக்குப் புத்திமதிகளைப் போதித்துப் பொறுமையுடன் இருந்து கருமம் கருதும்படி உரிமையோடு தேற்றியருளினாள்.

பெரிய அரசி பேச்சில் அரிய பல அறிவு நலங்கள் பெருகி வந்துள்ளன. பரிவும் பண்பும் உரைகள்தோறும் ஒளி புரிகின்றன. பிள்ளையிடம் உள்ளம் பரிந்து உறவா உரையாடியுள்ளாள்.

என் இழைத்தனை என் மகனே!

இந்த உரையில் மருவியுள்ள பரிவு உள்ளச் செவியால் தெரிய வுரியது. இழைத்தல்=செய்தல். உயிரை நீக்க விரைந்தாயே! இது எவ்வளவு துயரம்? இதனால் விளையும் கொடிய

அழிவுகளை யாதும் கருதாமல் ஏதும் தெரியாமல் மூண்டாயே! என்று நீண்ட துயரோடு நேரே வேண்டியுள்ளாள்.

என் மகனே! என்று பரதனைக் கோசலைத்தாய் உரிமையோடு அழைத்துள்ளது உலக உள்ளங்களை உருக்கி வருகிறது. அவன் உள்ளம் உருகித் தன்சொல் வழியே மீண்டு வரும்படி பிள்ளைப் பாசத்தோடு பெருந் தகவாப் பேசியிருக்கிருள்.

நீ இது எண்ணினையேல்.

பரதன் சாக மூண்ட நிலையை இவ்வாறு விவேகமா விளக்கியுள்ளாள். நினைத்தாலும் நெஞ்சம் நடுங்கும்படியான கொடிய செயலை நீ எண்ணினுயே! என்று கண்ணீர் சொரிந்துள்ளதை இது காட்டியுள்ளது. தன் வாயால் அதனைச் சொல்லக் கூசி இது என்று சுட்டினுள். சொல்ல இயலாதது; கேட்க முடியாதது என உள்ளம் பதைத்துள்ளமையை உணர்ந்து கொள்கிரேம். செத்துத் தொலைய வேண்டும் என்று சித்தம் துணிந்தாயே! இதனுல் எவ்வளவு சாவுகள் நேரும் என்று நீ சிந்தனை செய்தாயா? அந்தோ! அதனைக் கொஞ்சம் நினைந்து பார்! நெஞ்சம் இரங்கி அஞ்சி அருளுவாய்! என நினைவுறுத்தினுள்.

நாடு எரி பாயும் என்றது நாட்டில் உள்ள மக்கள் யாவரும் கூட்டோடு கடிதுமாய்ந்து மடிவர் என்பதைக் காட்டி நின்றது.

அறம் தீயில் வீழும்; உலகும் திரியும்.

பரதன் தீயில் பாய்ந்தால் உடனே நேருகின்ற கேடுகளை இது நேரே கூறி நின்றது. தருமதேவதை கதறி அழுது தீயில் விழுந்து மாயும்; உலகமும் நிலைகுலைந்துபோம் என்றதனுல் இக் குலமகனுடைய நிலைமை தலைமைகளை யூகமா உணர்ந்து கொள்ளுகிரேம். தாய்மொழியுள் வாய்மை தெளிய வந்தது.

தரும நீதிகள் மருவிய அந்தப் புனித ஆன்மா பரமான்வா என வரமாயுள்ளது; அது துயரமாய் மறைய நேரும்பொழுது அகில உயிர்களும் அவலமுறுகின்றன; அதனுல் அழிய நேர்கின்றன; அந்தப் பரம தத்துவம் இங்கே உய்த்துணர வந்தது.

அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐய! நின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ?

பரதனுடைய அருமை பெருமைகளை இவ்வாறு செவ்வையா அறிவுறுத்தி யுள்ளாள். ஊழி என்றது ஞாலம் அழியும் கால முடிவு. யாவும் பேர்ந்து ஒழியும் அந்த யுகமுடிவிலும் பரதனது மகிமை யாதும் பேராது சீரோடு நேரே நிலைத்து நிற்கும் என்பதாம். ஆகவே இவனது மேலான மகிமை தெரிய நின்றது.

இக் குலமகனுடைய குண நீர்மைகளை உணர்ந்து வியந்து அத் தாய் உளம் உவந்து வந்துள்ள நிலைமையை உரைகள் தெளிவா உணர்த்தி வருகின்றன. எண்ணியுள்ள எண்ணங்களை வார்த்தைகள் நேரே சீரோடு வார்த்துக் காட்டுகின்றன.

எண்இல் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?

இது எவ்வளவு மகிமையான புகழ்மொழி! உள்ளம் உருகிய பரவச நிலையில் உரைகள் விரைந்து எழுந்துள்ளன.

கோடி என்பது எண்ணல் அளவையில் பெரிய தொகை; நூறு இலட்சம் கூடியது ஒரு கோடி ஆகிறது. அத்தகைய கோடிகள் பல்லாயிரம் என்று சொல்லாமல் எல்லையில்லாத நிலையில் சொல்லி யுள்ளாள். எண் இல்லாமை எண்ண வந்தது.

ஒரு பரதனையும், எண் அரிய கோடானுகோடி இராமர்களையும் நம் கண் எதிரே நிறுத்தி இந்தப் புண்ணியத் தாய் இங்கே காட்டியிருக்கும் காட்சி யாதும் காணமுடியாத அதிசய மாட்சியாய் நீண்டுள்ளது. இயற்கை நியதி எல்லை கடந்து நிற்கிறது.

தான் பத்துமாதம் சுமந்து பரிந்து பெற்ற அருமைத் திரு மகன் இராமன்; மாற்றுளான சக்களத்தி மகன் பரதன்; அந்தச் சேயர் இருவரிடமும் இந்தத் தூய தாய் அன்பு எத்தகைய நிலையில் எவ்வாறு பெருகி வந்துளது என்பதை உய்த்துணர்ந்து கொள்வது உணர்வின் உயர் சோதனையாய் ஓங்கி நிற்கின்றது.

பெற்ற மகனைவிட உற்ற ஒரு மகனிடம் ஒரு தாய் பெரிதா உரிமை பாராட்டி வருவது உலக வியப்பாய் நிலவி யுள்ளது.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

என்பது பழமொழி. பறவைகளும் விலங்குகளும் வேறு பிராணிகளும் தம்முடைய குஞ்சு குட்டிகளைஎவ்வழியும் கட்டிக் காத்து உரிமையோடு பேணி அருமை பாராட்டி வருகின்றன.

அறிவு நலம் சரியாய் மருவாத அவையே இவ்வாறு ஆயின் பேரறிவுடைய மனித இனம் மகவின் வாஞ்சையில் எவ்வளவு மேலோங்கி யிருக்கும் என்பதைச் செவ்வையாய்த் தெரிந்து சீர்மை நீர்மைகளை இங்கே கூர்மையா ஓர்ந்து கொள்ளலாம்.

அழகிலும் அறிவிலும் அரிய பல குணநீர்மைகளிலும் இராமன் அதிசய நிலையில் உயர்ந்துள்ளான். உலகங்கள் யாவும் அவனை உவந்து புகழ்ந்து துதிசெய்து வருகின்றன. எவ்வகையிலும் எவரும் தனக்கு நிகர் இல்லாதவன் என உயர் புகழ் பெற்றுள்ள இராமனை ஈண்டு அடியோடு தாழ்த்திப் பரதனைக் கோசலைத்தாய் உயர்த்தி உரிமை கூர்ந்து வாழ்த்தி யிருக்கிருள்.

தன் சொந்த மகன் ஆன இராமன் மேல் இத்தாய் கொண்டுள்ள அன்பும் பாசமும் அளவிடலரிய நிலையில் பண்பு சுரந்துள்ளன. பெரிய பிரியம் உடைய அத்தகைய அரிய தாய் உரிய மகனைவிடப் பரதனிடம் பரிவு கொண்டுள்ளாள். பிள்ளைப் பருவத்திலிருந்தே அந்தப் பிள்ளையின் மேல் இந்தப் பெரிய தாய்க்கு ஓர் அரிய பிரியம் நெறிமுறையே பெருகி வந்துள்ளது.

கைகேசி செய்த சதியால் அரசுமுடி இழந்து தனது அருமை மகன் தன்பால் அன்பால் வந்தான்; அந்த நிலையைக் கண்டதும் கோசலை நெஞ்சம் கலங்கினுள்; நேர்ந்ததை நேரே விசாரித்தாள். “என்தம்பி பரதனே அரசன்” என்று இராமன் உரிமையோடு உவந்து சொன்னுன்; அவ்வுரையைக் கேட்டதும் இத்தாய் உவகை மீதூர்ந்தாள். உள்ளத்தின் உவப்பு உரையில் துள்ளி வந்தது. செம்மை மொழி உண்மை ஒளியாய் ஓங்கியது.

மும்மையின் நிறை குணத்தவன்
நின்னினும் நல்லன். (அயோத்தி, நகர்நீங்கு, 5)

தம்பி பரதனே முடிசூடுகின்றுன் என்று நம்பி இராமன் சொன்னபோது கோசலை அம்மகனை நோக்கி இவ்வாறு சொல்லி யிருக்கிருள். இது எவ்வளவு அதிசயம்! எத்துணை வியப்பு! எந்த உலகில் எந்தத் தாய் இந்த வகையில் பேச நேர்வள்?

நின்னினும் மூன்று மடங்கு நிறைந்த குணத்தவன்; மிகவும் நல்லவன் என்று பரதனைக் குறித்து இராமன் எதிரே அங்கே இவ்வாறு கூறினுள். அந்நாளிலிருந்து இந்நாள்வரை பதினுன்கு

ஆண்டுகள் கழிந்துள்ளன; இந்தக் கால நிலையில் பரதனுடைய விரத சீலங்களும், மேலான குணநீர்மைகளும், இரவும் பகலும் கருதி உருகி வரும் பரிவுகளும் கோசலைத் தாயின் உள்ளத்தை யும் உயிரையும் உருக்கி வந்துள்ளன. தன் பிள்ளையின் மேல் தான் கொண்டுள்ள பாசத்தினும் பரதன் பெரிதும் பூண்டு இறுதியில் பிரிவாற்ற முடியாமல் உயிரையும்விடத் துணிந்தான் ஆதலால் அந்தக் குலமகனையும் தனது தலைமகனையும் ஒரு தலை யில் வைத்துத் தூக்கி உலகம் அறிய நிலைமையைத் துலக்கி யருளினுள். எண்ணலளவை எவரும் எண்ணியுணர எழுந்தது.

எண்ணில் கோடி இராமர்களும் நின் அருளுக்கு அருகு ஆவரோ? என்று கோசலை இங்ஙனம் பரதனை நோக்கிக் கூறினுள். அளவரிய கோடிகள் உளவறிய வுற்றன.

ஆயிரம் கோடி இராமர் நின்கேழ் ஆவரோ? என்று குகன் அங்கே தன்னை மறந்து பரதன் எதிரே இன்னவாறு குறித்தான்.

அதிசயமான இத்துதி மொழிகள் பரதனுடைய உயர் மகிமைகளைத் தெளிவாக்கி யுள்ளன. அருள் என்றது பொருள் பொதிந்து வந்துளது. தம்பியோடு தமையனுக்கு இங்கே அளவு கூறவில்லை. அன்பு நலம் கனிந்த அருள் நீர்மைக்கே அரிய அளவு கூறியுள்ளதுஎன்பது கூர்மையோடு சிந்திக்கவுரியது.

அண்ணனையே கருதிக் கருதி உருகி உருகி உடல் மெலிந்து உள்ளம் சோர்ந்து உணர்வு ஓய்ந்து உயிர் தேய்ந்து முடிவில் மாய்ந்து போகவே மூண்டான் ஆதலால் அந்த ஆன்ம உருக்கத் தின் பெருக்கத்தை எண்ணி நின் அருளுக்கு அருகு ஆவரோ? என்று பரவசநிலையில் ஆவேசமாய்ப் பேசினுள். இந்த வார்த்தை அந்த உள்ளத்தின் பரிவைத் தெள்ளத் தெளிய வெளியே வார்த் துக் காட்டியுள்ளது. சொல்லின் தொனிகளையும் துனிகளையும் உள்ளச் செவியால் ஓர்ந்து உண்மைகளை உணர்ந்து கொள்க.

தூய தாய்மையும் மனச் செம்மையும் மதிமாண்பு தோய்ந்த வாய்மையும் அரிய தகைமையும் இப் பெரிய தாயிடம் பெருகி யுள்ளமையை உருகி நோக்கி உணர்ந்து கொள்ளுகிறோம். பரிபவம் மீதூர்ந்து மகனைத் தேற்றிவருகிறுள்; உரைகள் பரிதாப மாய்ப் பெருகி அரிய பொருள்களோடு மருவி வந்துள்ளன.

புண்ணியம் எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

கோசலை எண்ணியுள்ள எண்ணங்களை நம் கண் எதிரே இது காட்டியுள்ளது. புண்ணியமே ஓர் உருவமாய் மருவியுள்ளது எனப் பரதனைக் கருதியுள்ளாள்; அவ்வுண்மையை இவ்வுரையால் நுண்மையா நாம் உணர்ந்து கொள்ளுகிறோம்.

பரதன் மாண்டால் வையமும் வானமும் சீவகோடிகளும் வெய்ய துயரோடு மாய்ந்துபோம் என மறுகியிருக்கிறாள். உயிர்களும் வாழுமோ? என்றது அவை யாவும் யாதும் வாழா; எல்லாம் ஒல்லையில் மாண்டே மடியும்என்பதை வலியுறுத்தியது.

இன்று வந்திலனே எனின்
நாளையே வந்து ஒன்றும்.

தன்னிடம் முன்னம் அண்ணன் சொன்னபடி வரவில்லையே என்று துன்பமாய்த் துடித்துச் சாக நேர்ந்துள்ளான் ஆதலால் இன்னவாறு ஆறுதல் கூறிப் நன்னயமா பரதனைத் தேற்ற நேர்ந்தாள். உன் தமையன் உறுதியாய் விரைவில் வந்துவிடுவான் என்பாள் நாளையே வந்து ஒன்றும் என்றாள். ஒன்றுதல்= பொருந்துதல். நீங்கள் எல்லாரும் ஒல்லையில் ஒன்றாய்க் கூடி மகிழ்வீர்கள்; வாடி வருந்தாதே! மகனே! என்று இத்தாய் பரிந்து தேற்றி இருப்பது இங்கே தெரிந்து கொள்ள வந்தது.

வனவாசம் போயுள்ள இராமன் இன்று வரவேண்டும் என்ற கணக்குப் பிழையாயிருக்கலாம்; அது சரியா இருந்தால் சத்திய சீலன் ஆன அவ்வுத்தமன் வந்தே இருப்பான்; அவன் வராமையால் காலக்கணக்குத்தான் தவறு; பொழுதை எண்ணி அறிவதில் பழுது நேர்ந்துள்ளது; ஆதலால் நாளைவரை பொறுத்திரு என்று குறித்தருளினாள். எப்படியாவது பிள்ளை உள்ளம் திருந்தி ஊருக்கு மீண்டு வரவேண்டும் என்றே உருக்கமா வேண்டியுள்ளாள். மனம் தெளிய மதிமொழி வெளியாயது.

நீ ஒருவன் மாண்டால் உலகம் மாண்டுபோம் என்றதனால் பரதன்பால் உலக உயிர்கள் கொண்டுள்ள அரிய பெரிய நிலைகள் தெரிய வந்தன. எல்லா உயிரினங்களும் இந்நல்லானை நயந்து நிற்பதை உணர்ந்து கொள்ள உரைத்தாள். உரிமைமொழி அருமை நிலைகளை இனிது விளக்கி ஆர்வ ஒளியாய் வந்தது.

கருவும் மாண்டு அறக் காணுதியோ?

தான் மாண்டுபடின் உலகில் மூண்டு விளையும் அழிவு நிலை களை இவ்வாறு விழி தெரிய விளக்கினுள். தன் பெருமை தான் அறியாத் தன்மையனுய் அவன் உள்ளமையை உள்ளம் தெளிய உரைத்தது ஒல்லையில் ஊருக்கு மீளவேண்டும் என்று கருதியே யாம். மருமமான மொழிகள் கருமமே கண்ணுய் வந்தன.

தருமம் நீ அலது இல்லை.

பரதனது உண்மையான உருவ நிலையை இவ்வாறு உரிமை யோடு உரைத்தாள். தருமதேவதையே ஓர் உருவம் மருவி பரதன் என்னும் பெயரோடு இராமனுக்குத் தம்பியாய் அமைந்துள்ளது என நம்பியுள்ளாள். அவ்வுண்மை உரைவழியே ஈண்டு வெளி யாயது. இளைய மகனிடம் அளவிடலரிய பரிவு இத்தாயின்பால் மருவியிருப்பதை உரைகள் தோறும் பலவகையிலும் அறிந்து வருகிறேம். மனம் திருந்திவர மதிநலங்களை மொழிந்து வந்தவள் முடிவில் தெளிந்த ஞான போதனைகளைச் செய்ய நேர்ந்தாள்.

மகனே! பாசத்தை மறக்கை காண் வலி.

இறுதியில் இவ்வாறு உறுதிமொழி கூறியுள்ளாள்.

சீவர்கள் பிறத்தலும் இருத்தலும் இறத்தலும் யாண்டும் இயற்கை நியமமா நடந்து வருகின்றன. செய்த வினைவழியே யாவரும்எய்தியிருந்து மறைந்துபோகின்றனர். சிலநாள் சேர்ந்து வாழ்வதில் கேளும் கிளைகளும் நேர்ந்து விடுகின்றன. வந்து சேர்ந்தபடியே விரைந்து பிரிந்து போகின்றன. இது ஒரு மாயக் கூட்டுறவு. கணவன் மனைவி, அண்ணன் தம்பி, மாமன் மைத் துனன் என உரிமையோடு உறவாய்த் தோன்றி நிற்பன யாவும் மாயத் தொடர்புகள் ஆதலால் விரைந்து விலகி மறைந்து கழி கின்றன. வெய்ய மாயக் கனவுகளா வாழ்வுகள் மருவியுள்ளன.

யாதொரு நிலையும் இன்றிப் புலையாய்க் கழிந்து ஒழிந்து போகின்ற சுற்றத் தொடர்புகளில் பற்று வைப்பதே பாசபந் தங்களாய் நீசங்களை விளைத்து வருகின்றன. மாயமையலால் நேர்ந்த பாசம் அடியோடு நீங்கிய போதுதான் தூய நிலையில் உயர்ந்து ஈசனை அடைந்து உயிர் உயர்பேரின்பத்தை அடைகிறது.

எவ்வழியும் கொடிய துயரங்களில் ஆழ்த்திச் சீவர்களை நீசப்

படுத்தி வருதலால் உலக யந்தங்களைத் துறந்து உண்மை நிலைகளை ஆய்ந்து தோய்ந்து உயர்ந்த ஞானிகள் உய்தி பெறுகின்றனர்.

இந்தத் தத்துவ நிலைகளை உய்த்து உணர்ந்து உற்றபாசத்தை ஒழித்து உள்ளம் தெளிந்து பரதா! நீ உயர்ந்து கொள்ள வேண்டும் என்று உறுதியா வலியுறுத்தி உணர்த்தி யருளினுள்.

அண்ணன் மீது வைத்துள்ள பாசத்தாலேயே இந்தத் தம்பி ஈண்டு வேகமாச் சாக மூண்டான் ஆதலால் அந்தப் பாசத்தை மறந்து விடும்படி பிள்ளைப்பாசத் தோடு பெரிய தாய் இவ்வாறு பேச நேர்ந்தாள். தெளிந்த ஞான போதனை விளைந்து வந்தது.

தனது உரிமை நாயகனை இழந்தவள்; அருமை மகனைப் பிரிந்து அல்லல் பல உழந்தவள்; பேரரசியாயிருந்தும் பெருந் துயரங்களை அனுபவித்தவள் ஆதலால் உலக வாழ்வின் புலைகளையும் நிலையில்லாத நிலைமைகளையும் உணர்ந்து தெளிந்து உண்மையான நிலைகளை இங்கே திண்மையா நன்கு உணர்த்தியருளினுள்.

அல்லல் அடைந்தபொழுது தான் நல்ல ஞானங்கள் தெரிய வருகின்றன. சிற்றின்பச் சீரழிவால் சிந்தை நைந்து தெளிந்தவரே பின்பு பேரின்பப் பெருவாழ்வைப் பெற நேர்கின்ருர்.

மகனே! என்று ஆர்வத்தோடு அழைத்து உலக பாசத்தை மறந்து உய்யும்படி பரதனுக்கு இந்தத் தாய் போதித்துள்ளது போல் சீவகனுடைய தாயும் அவனுக்குப் போதித்திருக்கிருள்.

கொற்றவி மகனை நோக்கிக் கூறினள் என்ப நுங்கோக்
குற்றதைப் பிறர்கள் கூற உணர்ந்தனை ஆயின் நானும்
இற்றென உரைப்பக் கேண்மோ இலங்குபூண் அலங்கல்மார்பிற்
செற்றவர்ச் செகுத்த வைவேல் சீவக சாமி! என்ருள். (1

கடுவளி புடைக்கப் பட்ட கணமழைக் குழாத்தின் நாமும்
விடுவினை புடைக்கப் பாறி வீற்றுவீற்று ஆயின் அல்லால்
உடனுறை பழக்கம இல்லை; ஒழிமதி அத்தை காதல்
வடுவுடைத்து என்று பின்னும் மாபெருந்தேவி சொன்னுள்.
[சீவகசிந்தாமணி]

ஏமாங்கத நாட்டு அரசி ஆன விசயை இவ்வாறு பேசியிருக்கிருள். தனது கணவனைப் பரிதாபமா இழந்தவள்; அதனல் உலக நிலைகளை வெறுத்துத் துறந்து உயர்ந்த ஞான நலம் அடைந்தவள்;

தன் குலமகனுக்கு இங்ஙனம் மதிநலம் கூறியுள்ளாள். வானத்தில் கூடிய மேகக் கூட்டங்கள் கடுங்காற்றால் நிலை குலைந்து சிதறிப்போம்; அதுபோல் வையத்தில் சேர்ந்துள்ள உறவினங்கள் வினையின் வேகங்களால் வேறுவேறு பிரிந்து விலகி மறைந்து போம்; இந்த மாய வாழ்வில் காதல் கொள்வது தீது; தூய வாய்மையை ஓர்ந்து தெளிந்து உற்ற பற்றை ஒழித்து உய்தி பெற வேண்டும் என உறுதி நலனை உணர்த்தியருளினாள்.

மகனே! பாசத்தை மறந்துவிடு என்று கோசலைத் தாய் கூறியது அவன் உள்ளம் தேறி உறுதியுறும் உபாயம் நாடியேயாம். பாச நாசன் என்று ஈசனுக்கு ஒரு பெயர். ஆகவே பாசம் நீங்கினருடைய தேசும் மகிமையும் நன்கு தெரியலாம்.

"பாசக் கடற்குளே வீழாமல் மனதுஅற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ஞானந்தமே!" (தாயுமானவர்)

பாசக் கடலில் வீழாமல் பரிசுத்த நிலையை அருளும்படி ஈசனை நோக்கித் தாயுமானவர் இவ்வாறு வேண்டியிருக்கிறார்.

தன் மகன்மேல் பாசத்தால் மாய நேர்ந்த பாதனை இத்தாய் அறிவு கூறித் தேற்றியிருக்கும் பரிவும் பண்பும் அதிசய நீர்மைகளாயுள்ளன. தகைமையும் தண்மையும் உண்மையும் ஒளிவீசி நிற்கின்றன. தாய்மையின் தூய்மை வாய்மை தோய்ந்து விளங்குகிறது. ஆன்ம உய்தி மேன்மையா அறிய வந்தது.

சீவர்கள் பால் இரங்கியருளுதலால் கடவுளுக்குச் சிவதயாபரன் என்று ஒரு பேர் அமைந்தது. அந்த இறைவனும் தாயின் பேரால் துதிக்க நேர்ந்தான். "ஈன்ற தாய் என இன்னருள் புரிகின்ற இறையே!" என இன்னவாறு பன்னி வருகின்றனர்.

தாயினிற் சிறந்த தெய்வ இலை. [கூர்மபுராணம்]

ஈன்றாளின் என்ன கடவுளும்இல். (நான்மணிக்கடிகை)

தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை.(கொன்றைவேந்தன்

தாயின் மகிமையை இவை தகவோடு காட்டியுள்ளன.

நேரே கண்ட தெய்வம் ஆதலால் தாய் இவ்வாறு துதிக்க நேர்ந்தாள். காணாத கடவுளும் தாய் வழியே காண வருகிறது.

"அன்புறு தாய்என ஆர்வம் பெருகி,
இன்புற அருளும் இறையே!"

என இன்னவாறு இருடிகளும் எத்தியுள்ளனர். கடவுளுக்கும் தாய்க்கும் உள்ள தகவுகளை இதனல் உணர்ந்து கொள்கிறோம். கடவுள் அருளினும் தாய் அன்பு கதிநலம் தருகிறது.

God could not be everywhere and therefore he made mothers. [Anon]

"கடவுள் எங்கும் நேரே இருக்க முடியாது ஆதலால் தாய்மார்களை அங்கங்கே படைத்தருளினர்." என இது குறித்துளது. இதனை ஒரு முதுமொழியாக வழங்கி யூதர்கள் எவ்வழியும் செவ்வையாகத் தாயரைப் பூசித்துப் போற்றி வருகின்றனர்.

Mother is the name for God in the lips and hearts of little children. (Thackeray.)

சிறுபிள்ளைகளுடைய இதயத்திலும் வாயிலும் உள்ள கடவுளுக்குத் தாய் என்று பேர் என்று தாக்கரே என்னும் ஆங்கிலப் புலவர் இங்ஙனம் பாங்கோடு பகர்ந்திருக்கிறர்.

கடவுள் மிக்க மேன்மையோடு விளங்கி நின்றாலும் தாய்களிடமிருந்தே மக்கள் வெளிவந்துள்ளனர். அத்தகைய தாய்மார்களுள் கோசலை தனி மகிமையில் உயர்ந்திருக்கிறள்.

அரிய பரமனே இனிய மகனய் இத்தாயிடம் வந்து பிறந்திருக்கிறன். யாரும் காணுத ஒருவனை எல்லாரும் கண்டு மகிழக் காட்டியருளின கருணைத்தாய் என ஞானமுனிவரும் வான நாடரும் இப் புனித மாதாவை யாண்டும் போற்றி வருகின்றனர்.

"கௌஸல்யா ஸுஷுவே ராமம்
அபி ராம குணாகரம்
ஸ்ரீராம பக்தி பரிதம்
பரதம் கேகயாத்மஜா."

அரிய இனிய குணங்கள் நிறைந்த இராமனைக் கோசலை ஈன்றாள்; அந்த இராமன்பால் பேரன்புடைய பரதனைக் கைகேசி பெற்றாள் என்னும் இது இங்கே காணவுரியது.

பிறவியிலேயே இன்னவாறு உயிரோடு தோய்ந்து வந்துள்ள உழுவலன்பினன் ஆதலால் அம்முன்னவனைப் பிரிந்திருக்க முடியாமல் இன்னலுழந்து இப் பின்னவன் இறந்து படநேர்ந்தான்.

பரிதாபமாய்ச் சாக விரைந்தவனை இடையே தடுத்து நிறுத்தி இப்புனிதத் தாய் புத்தி போதித்தது வித்தக விவேகமாய் விளங்கி நின்றது. மனம் தூய்மையாள் என்றது இவ்வுத்தமியின் சித்த சுத்தியை உய்த்து உணர்ந்து சீர்மை நீர்மைகளைத் தெளியநின்றது.

மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும். [குறள், 456]

தூய உள்ளம் உடையவர்க்கு நல்ல பிள்ளைப் பேறு உண்டாம் என இது உணர்த்தியுள்ளது. பொய்யாமொழியின் இந்த உண்மைக்கு இப்புனிதத் தாய் இனிய சான்றாய் உள்ளாள்.

மனம் மாசு இன்மையே தருமம்; ஆகவே பெரிய புண்ணிய வதியாய் இத்தாய் நண்ணியுள்ளமை எண்ணியுணர வந்தது.

தனது ஆசை மகன்பால் பாசம் மிகவுடையனாய் ஆவியை விடத் துணிந்த பரதனை இடையேபற்றி நிறுத்தி அரிய பல அறிவு நலங்களைக் கூறி இத்தேவி ஆறுதல் செய்தும் தேறுதல் இலனாய் அக்குலமகன் உளம் மிக வருந்தி உருகி உளைந்தான்.

பரிவு நிலை.

பெரிய பட்டத்து அரசி; யாரும் காணாதபடி அந்தப்புரத்திலேயே மறைவாய் இருந்தவள்; இளைய மகன் நிலைமை தெரிந்ததும் நிலைகுலைந்து வெளியேறி வந்தாள்; பிள்ளையைப் பிடித்துக் கொண்டாள்; அவன் உள்ளம் தெளிய உறுதிமொழிகள் கூறினாள்; விதவைக் கோலத்தோடு வெள்ளைச் சேலை உடுத்தி விழுமிய நிலையில் நின்று மதிநலம் கூறுகிற அப்புனிதத் தாயையும், துனி மிகுந்து சோகமாய்ச் சாக மூண்டு நிற்கும் மகனையும் நேரே கண்டவர் யாவரும் நெஞ்சம் உருகி நெடிது புலம்பிக் கொடிய துயரோடு கண்ணீர் சொரிந்து கதறி நின்றனர்.

பொருள் பொதிந்த மொழிகளை அருளோடு ஆர்வத்தாய் கூறி வரும்பொழுது மரியாதையாய் வணங்கிக் கேட்டு நின்ற பரதன் பின்பு பரிதாபமாய் அழுதான்; நேர்ந்துள்ள நிலைகளை எல்லாம் நினைந்து நெஞ்சம் கரைந்தான்; பின்பு துணிந்து தனது இறுதிநிலையை அறுதியிட்டு அன்னையிடம் உறுதியாய் உரைத்தான்.

பேரன்புடைய பெரிய தாயை நோக்கிப் பெருந்துயரோடு பரதன் கூறியது பரிதாபமாய்ப் பெருகி வந்தது. சிந்தை நொந்து வெந்துள்ள நிலையை வார்த்தைகள் வார்த்துக் காட்டியுள்ளன.

மைந்தன் என்னை மறுத்துரைத் தான் எனல்!
எந்தை மெய்ம்மையும் இக்குலச் செய்கையும்
நைந்து போக உயிர்நிலை நச்சிலேன்;
முந்து செய்த சபதம் முடிப்பனால். (1)

யானும் மெய்யினுக்கு இன்னுயிர் ஈந்துபோய்
வானுள் எய்திய மன்னவன் மைந்தனால்
கானுள் எய்திய காகுத்தற் கேகடன்
ஏனையோர்க்கு இது இழுக்கில் வழக்கன்றோ? (2)

தாய்சொற் கேட்டலும், தந்தைசொற் கேட்டலும்,
பாசத்து அன்பினைப் பற்றற நீக்கலும்,
ஈசற் கேகடன்; யானஃது இழைக்கிலேன்;
மாசற் றேன்இது காட்டுவென் மாண்டென்றான். (3)

நேசத்தோடு தன்னைத் தடுத்து நிறுத்தித் தக்க புத்திமதி களைப் போதித்த கோசலைத் தாயை நோக்கிப் பரதன் இவ்வாறு பதில் கூறியிருக்கிறான். உள்ளக் கொதிப்புகள் உரைகளில் அடித்து நிலைகளை நேரே விளக்கி நிற்கின்றன.

பெரிய தாயிடம் பிரியமும் பணிவும் மரியாதையும் என்றும் பிரியாமல் இருந்து வந்தவன் இன்று இங்கே நெடிய அவலக் கவலைகளோடு இங்ஙனம்பரிந்துபதைத்து வருந்தி உரைத்துளான்.

"அம்மா! உன் மகன் உனது கட்டளையை மீறி வேறுபாடாய் மாறுகூறினன் என்று என்னைச் சீறி இகழாமல் திருவருள் புரிய வேண்டுகிறேன்; எனது நிலை மிகவும் பரிதாபம் உடையது; பதினாலு வருடங்களாப் போகா உயிரனாய்ச் சாகாமல் இருந்து வந்துள்ளேன்; அண்ணல் அன்று கூறிய உறுதிமொழியை நாளும் நாளும் எண்ணி எண்ணியே ஆவி உடலில் நண்ணி வந்தது; குறித்த காலம் கடந்தபின் ஒரு கணம் ஏனும் நான் உயிர்வாழ நேர்ந்தால் அது கொடிய பழி; நெடிய பாவம். பழி பாவங்கள் எவ்வழியும் யாதும் படியாத விழுமிய குடியில்பிறந்த நான் வழுவாய் வாழலாகாது; என்னால் என் குலம் தாழ நேர்ந்தது; மீளவும் தாழ்வுறச்செய்வது வெய்ய தீமையாம்; முன்னம் நான் சொன்ன ஆணையின்படி முடிந்து போவதே சிறந்த மேன்மையாம்; சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காகத் தனது அரிய உயிரைவிட்ட அந்த உத்தம வேந்தனுக்கு ஒரு புத்திரனாய் நானும் பிறந்திருக்கிறேன். வாய்மை காத்து வானகம் போன அந்த

மான வீரனுடைய தலைமகன் அதே நோக்கோடு கானகம் போனான். தந்தை இட்ட பணி எந்த நிலையினது ஆயினும் அதனை யாதும் தட்டாமல் எவ்வழியும் செவ்வையா நடப்பதே தனது மேலான கடமை என்று யாண்டும் இராமபிரான் வழுவாமல் ஒழுகி வருகிறார்; அந்தக் கோமகனுக்குத் தம்பி என நேர்ந்த நான் தவறு செய்யலாமா? எனது நிலைமையைச் சிறிது கவனிக்க வேண்டும் தாயே! நான் ஏன் சாக நேர்ந்தேன்? இந்தச் சோகமும் துடிப்பும் அல்லலும் அவலமும் எதனால் விளைந்தன? அண்ணல் சொன்னபடி வந்திருந்தால் இந்த இன்னல் இழவுகள் விளைந்திருக்குமா? யாவும் விவேகமாய்ச் சிந்தித்து நோக்கினால் வினையின் விளைவுகள் தெளிவாய் வெளியே விளங்கும்; தாய் சொல்லைக் கேட்டு நடப்பதும், தந்தையின் பணியை வழுவாமல் செய்து ஒழுகுவதும் விழுமிய தொழிலாக் கொண்டுள்ள நம்பி தம்பிக்குச் சொன்ன உறுதிமொழியைச் சிறிதும் கருதாமல் நழுவி நின்றால் நான் உயிர்வைத்து வாழவேண்டுமா? அண்ணன் சொன்னபடி வரவில்லையானால் உடனே மாண்டு போவேன் என்று முன்னமே நேரில் நான் சொல்லியிருக்கிறேன்; அந்த வாக்கு மாறேன்; உயிரைப் போக்கியே தீருவேன்; என்பால் உரிமையோடு உரைத்த உறுதியைக் கோதண்டவீரன் மாறலாம்; அன்பும் பாசமும் அடியோடு நீங்கிவிடலாம்; அவர் பெரியவர்; பிழைபாடுகள் அவரை அணுகா; நான் மிகவும் சிறியவன்; தினை அளவு பிழையும் என்னை இழிவாக்கிப் பழியில் ஆழ்த்திவிடும்; இழிவுற வாழ்வதினும் அழிவுறுவதே நலம்; முன்னம் சொன்ன உறுதிமொழிப்படி இறந்தே தொலைவேன்; சத்தியமே எனக்கு உயிர்; அதனினும் வேறு எனக்கு உயிர் இல்லை; பொய் படிந்த உயிர் என் மெய் படிந்து இராது; ஆதலால் என் அருமைத் தாயே! என்னைச் சிறுமைப்படுத்தி நிறுத்தாமல் பெருமைப் படுத்தியருளுக" என்று இவ்வாறு பரதன் விழிநீர் சொரிந்து அழுதுதொழுது தாயை வணங்கிவிட்டு நேரேமாய விரைந்தான்.

இக்குலமகனுடைய குணநீர்மைகளையும் மன நிலைகளையும் கருதி உணர்வார் எவரும் உள்ளம் உருகிக் கரைவார். அரிய தவ விரதியாய் இருந்து வந்தவன் உரியவனை நினைந்து கரைந்து உயிரை நீக்க விரைந்துள்ளான். தன்னுடைய இயல்புகளை எல்லாம் தாயின் சிந்தை தெளிய விளக்கிக் கருதியதைச் செய்து

முடிக்க முடிவில் மூண்டு உறுதியாய் முந்தியிருக்கிறான்.

முந்து செய்த சபதம் முடிப்பன்.

நான் வீணே சாக நேரவில்லை; முன்னம் சொன்ன உறுதி மொழியை நிறைவேற்றவே உரிமையோடு போகிறேன்; நேர்ந்த கடமையைச் செய்து முடிப்பதே நீதிமுறை; சோர்ந்திருந்தால் ஆர்ந்த பழிகள் சூழ்ந்து கொள்ளும் எனத் தாயின் உள்ளம் ஓர்ந்து உணர இவ்வாறு தனது நிலைமையை உரைத்தருளினான்.

சபதம் என்றது முன்னே ஆணையிட்டுக் கூறிய வாக்குறுதியை. சாபமாய் நேர்வது சபதம் என வந்தது.

“குறித்த நாளில் அயோத்திக்கு வந்து நீ அரசுமுடி சூடவில்லையானால் நான் தீயில் பாய்ந்து மாய்ந்து போவேன்; உன் மேல் ஆணையா இது உறுதி” என்று இராமன் எதிரே முன்னம் பரதன் சரதம் செய்து விரதம் பூண்டிருந்தான் ஆதலால் அந்தச் சூளுரையின் படியே தனது வாழ்வை முடிக்க மூண்டான்.

யானும் மெய்யினுக்கு இன்உயிர் ஈந்த
மன்னவன் மைந்தன்.

தன்னை இன்னவாறு பரதன் நன்னயமா விளக்கியிருக்கிறான். சத்தியத்தைக் காக்கும் பொருட்டுத் தனது இனிய உயிரைக் கொடுத்த அந்தச் சக்கரவர்த்திக்கு நானும் புத்திரனாய்ப் பிறந்திருக்கிறேன்; ஆகையால் பொய்யனாய் உயிர்வாழும் வெய்ய ஈனத்தை யாதும் யான்செய்யேன் என்று தன்னுடைய உள்ளத் துணிவையும் தூய்மையையும் தாயினிடம் நேரே உரைத்தான். சாக வேண்டியது அவசியம் என்பதை விளக்கினான்.

யானும் என்றதில் உம்மை உரிமையோடு பலவும் காண வந்தது. அண்ணனோடு தம்பிமார்களையும் எண்ணி அறிய நேர்ந்தது. கொடியபாவியான கைகேசி வயிற்றிலிருந்து பிறந்தாலும் நான் தசரத மன்னனுடைய பிள்ளையே என்று உள்ளம் உருகி உளையாடியிருக்கிறான். வாய்மை வழுவி வாழேன் என்பதைத் தெளிவாக்க இவ்வாறு பிறப்புரிமையைச் சிறப்பாக் குறித்து உரைத்தான். உள்ளத் துயரம் உரையில் ஓங்கி ஒளிர்கின்றது.

பொல்லாத மனைவியிடம் ஏமாந்து தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் இன்னுயிரை விடுத்த அந்த

மன்னர் பிரானுக்கு மைந்தன் எனத் தோன்றிய நான் வாக்கு மாறி உயிர் வாழலாமா? சத்திய வாக்கியான இராமன் எதிரே நின்று அவன் மேல் ஆணையிட்டு உறுதியாய்ச் சொல்லி வந்த சபதத்தை முடித்துவிடுவதே நான் எடுத்த பிறவியின் இனிய பயனும். தடுத்து நிறுத்த முயல்வது தவறே யாகும்.

பொய்யனாய் உயிர்வாழ்வதினும் மெய்யனாய்ச் சாவதே மேலான மகிமையாம். பொய் மிகவும் நீசமுடையது; அதனை மருவினவன் நீசனாகிறான்; தேசு மிகுந்த தூய இராச குலத்தில் பிறந்த நான் நீசனாய் நாசம் அடையலாமா? என நவின்றுளான்.

எனது உண்மையான உயிர் சத்தியமே; அந்த உத்தம நீர்மையை நழுவி எத்தகைய சீர்மையிலும் நான் உயிர் வாழேன் என்றுஇவ்வாறு தனது புனித வாய்மையைப் பெரியதாய்எதிரே இனிது விளக்கிக் கருதிய உறுதியை வலியுறுத்தியுள்ளான்.

சத்தியமும் தருமநீதியும் இவ்வுத்தமனிடம் எவ்வழியும் ஒளி புரிந்துவந்துள்ளன; அவ்வுண்மையை ஈண்டு உறுதியா உணர்ந்து கொள்ளுகிறோம். இதனால் இவனுடைய சீலமும் செம்மையும் சீர்மையும் சால்பும் ஞாலம் அறிய நின்றன.

Veracity is the heart of morality. [Huxley]

சத்தியம் ஒழுக்கத்தின் உயிர்நிலை என இது குறித்துளது.

Truth is the most valuable thing we have. Let us economize it. [Mark Twain]

சத்தியம் அரிய விலையுடைய பெரிய பொருள்; அதனை நாம் கவனமாப் பேண வேண்டும் என்னும் இது இங்கே காண வுரியது. மெய் நிலையானமகிமைதருகிறது; பொய் புலையேபுரிகிறது.

The lip of truth shall be established for ever: but a lying tongue is but for a moment. (Bible)

சத்தியவாயன் என்றும் நித்தியமாய் நிலைத்திருப்பான்; பொய் நாவன் அப்பொழுதே அழிந்து ஒழிவான் எனச் சாலமன் என்னும் நீதிமான் இவ்வாறு செவ்வையாக் கூறியிருக்கிறான்.

சத்தியத்தைத் தழுவி வரும் அளவே மனித சமுதாயம் புனிதமாய் உயர்ந்து வருகிறது; அதனை நழுவின் பழியும் துயரும் பாவமும் படிந்து எவ்வழியும் இழிவாய் அழிந்துஒழிகிறது.

பழி படியாத விழுமிய குலமகன் ஆதலால் மெய்யே தனக்கு மெய்யான உயிர் என்று வையம் அறிய விளக்கி யருளினன். தனது உண்மை நிலையை உறுதியா உணர்த்தி வந்த வன் இறுதியில் பெரிதும் திண்மையாய் மறுகி உரைத்தான்.

பாசத்து அன்பினைப் பற்று அற நீக்கல்
ஈசற்கே கடன்; யான்அஃது இழைக்கிலேன்.

இந்த வாசகம் மனக்கொதிப்போடு வெளிவந்துள்ளது. இங்கே ஈசன் என்றது இராமனை. தன்பால் வைத்திருந்த அன்புப் பாசத்தை அந்த நம்பி அடியோடு நீக்கிவிட்டான் என்று இத் தம்பி தவித்துள்ளதை மேலே வந்துள்ள உரைகள் நன்கு உணர்த்தியுள்ளன. மனவேதனை இனமாத் தெரிய வந்தது.

தான் சாக நேர்ந்ததும், தாய் சோகமாய் வந்து துடித்து நிற்பதும், நாடு முழுவதும் நைந்து பதைப்பதும், இராமன் செய்த கொடுமையால் நேர்ந்தன என்று பரதன் உள்ளம் கொதித்திருத்தலை ஈண்டு நுனித்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

சொல்லிய வாய்மொழி பிழையாயது; அன்பும் ஆதரவும் அற்றன; கடமையும் நீதியும் கழிந்தன; எவ்வழியும் செவ்வை யாய்த் தருமநெறியே நடக்க வேண்டிய நீதிமான் நிலை தவறி விட்டான். அவர் பெரியவர்; பெரு நெருப்புக்கு ஈரம் இல்லை என்பது பழமொழி. வியனுன விழுமிய நிலையில் உள்ள அவரை யாதொரு பிழையும் சேராது; என் போன்றவன் அவரைப் போல் துணிந்து வாழநேர்வது மிகுந்த பழியாம்; ஆகவே நான் சாகவே வேண்டும் என்று பரதன் ஈண்டு வேகமாய் மூண்டு முடிவுரை கூறியுள்ளான். நெஞ்சம் நெடிதுசலித்துள்ளமையால் வார்த்தைகள் கொதிப்பேறிக் கடுமையாய் வந்தன.

உள்ளம் தட்டழியவே உரைகள் நிட்டூரமாய் நேர்ந்தன.

தன்னிடம் சொன்ன உறுதி மொழிப்படி இராமன் வர வில்லை; ஆயினும் அது அவர்க்கு ஒரு குறை ஆகாது; அவரிடம் முன்னம் தான் சொன்ன சபதத்தின்படி மாய்ந்து போக வேண்டும்; மாயாதிருந்தால் என்றும் தேயாத பழியாம் என்று பரதன் கருதி உறுதி மீக் கொண்டு முடிவுற மூண்டான்.

மாசு அற்றேன்; இது காட்டுவன் மாண்டு.

முடிவாய் மாண்டு போக மூண்ட போது பரதனுடைய வாயிலிருந்து இந்த வார்த்தை வந்துள்ளது. புனிதமான தனது மாசு அற்ற நிலையை உயிரோடு இருக்கும் வரையும் தெளிவாக் காட்ட முடியாது ஆதலால் மாண்டு காட்டுவன் என்றான்.

மாய்ந்து என்னுமல் மாண்டு என்றதனால் அந்தச் சாவு மாட்சி மிக உடையது என்பது காட்சிக்கு வந்தது. பழி நீங்கி ஒழியப் புகழ் ஓங்கி விளையச் சாதலால் இத்தகைய சாவை வித்தகக் குரிசில்களே வியனுப் பெற நேர்கின்றார். சொல்லிய சொல் வழுவாதபடி புல்லிய உயிரை விடுகின்ற வீரரை உலகம் எல்லாம் புகழ்ந்து கூறி வியந்து போற்றி வருகின்றன.

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்? (குறள், 779)

தாம் கூறிய உறுதிமொழி தவறாதபடி சாக வல்லவரை யாவரும் புகழ்ந்து போற்றுவர்; யாதொரு பிழையும் யாரும் கூறார் எனத் தேவர் இங்ஙனம் தெளிவாக் கூறியுள்ளார்.

அரிய செயல்களால் பெரிய புகழ்கள் விளைகின்றன.

Fame is the perfume of heroic deeds. [Socrates]

அரிய வீரச் செயல்களின் நறுமணமே புகழ் என்று சாக்ரேட்டீஸ் என்பவர் இவ்வாறு கீர்த்தி நிலையைக் கூறியிருக்கிறார்.

தரும நீதியே தனது கருமமா மருவி உறுதி பூண்டிருந்தமையால் பரதனுடைய பெயரும் கீர்த்தியும் யாண்டும் மகிமையா நீண்டு நிலவின. சத்தியம் தவறி உயிர் வாழேன்; சொல்லியபடியே செய்து முடிப்பேன் என்று மூண்டு எழுந்தவன் மீண்டும் தாயின் காலடியில் நெடிது விழுந்து தொழுது கடிது எழுந்து தீயை நோக்கி நடந்தான். தாய் தடுத்தும் முடியாமையால் தயங்கி நின்று தவித்து அழுது பரிதாபமாய்ப் பதைத்தாள். கோப்பெருந்தேவி செயலிழந்து துயர் உழந்தாள்.

பெற்றதாய் உற்றதுயர்.

அருமைத் திருமகன் இறந்து போக விரைந்தான் என்று தெரிந்ததும் கோசலைத் தாய் பின்னேயே கைகேசியும் வந்திருந்தாள்; மைந்தன் எதிரே வரக் கூசிச் சிந்தை நொந்து தியங்கி நின்றாள். அவளுடைய உள்ளமும் உயிரும் அது பொழுது துய

ரத் தீயில் வெந்து துடித்தன. "நீ என்தாய் அன்று; கோடிய நோயே; நெடிய பேயே; நீசப் பிசாசே; உன் குடலில் தங்கி இருந்த இந்த உடலை ஒழித்தால் அன்றி எனக்கு உய்தி இல்லை" என்று பரதன் உள்ளம் கொதித்து முன்னம் வைதிருந்தான் ஆதலால் இக் கோமகன் எதிரே தோன்ற அஞ்சிக் கைகேசி குலை நடுங்கி நொந்தாள். தனது மடமையால் நேர்ந்த கொடிய அழிவுகளை எல்லாம் எண்ணி எண்ணிக் கண்ணீர் சொரிந்து கதறி அழுதாள்.

சுமித்திரா தேவியும் துடித்துப் பதைத்தாள். நகரமாந்தரும் நாட்டு மக்களும் அயல் எங்கணும் கூட்டமாய்த் திரண்டு கூவி அழுது ஆவி அலமந்து புலம்பினர். அவல நிலைகள் நீண்டன.

தீயின் வாய்.

யாககுண்டம் போல் அமைந்திருந்த நெருப்புக் குழியை நெருங்கியதும் பரதன் தென் திசையை நோக்கித் தொழுதான் இராமனை நினைந்து அவனது புனித நாமத்தை ஓதி அருச்சனை புரிந்து தீயைப் பூசித்து வலம் வர நேர்ந்தான். ராமாய நம என்று செபித்துக் கொண்டு மூன்று முறை வலம் வந்து மாண்டு மடிய மூண்டான். தம்பி சத்துருக்கனும் பின் தொடர்ந்து நடந்தான்; முன்னே நடந்து போகிற பரதனுடைய பாதங்களையே கண் ஊன்றி நோக்கிப் பின்னவன் சென்றான். அண்ணன் தீயில் பாயுமுன் தான் பாய்ந்து விடவேண்டும் என்னும் துணிவோடு இளவல் தொடர்ந்தான் ஆதலால் காலடிகளையே கவனித்துப் போனான். யாவரும் உயிர் பதைத்து ஓல மிட்டு நின்றனர்.

அனுமான் வந்தது.

இரண்டாவது சுற்று முடிந்து மூன்றாவது சுற்றுவருங்கால் வானவீதியிலிருந்து ஒரு பேரொலி நேரே தோன்றியது. மாருதி தோன்றினான்; கீழே ஊன்றி நோக்கினான். பொங்கிய கடல் போல் சனத்திரள்கள் எங்கும் நெருங்கி ஓலமிட்டு நிற்பதையும், நெருப்பையும் கண்டான்; நெஞ்சம் துடித்து விரைந்து நேரே தீயின் மீதே பாய்ந்தான். யாவும் அவிந்தன. யாவரும் வியந்தனர். எல்லாம் பெரிய ஒரு மாய சாலமாய் மருவி நின்றன.

மாய்ந்து போக மூண்ட பரதன் நீண்ட திகைப்போடு யாதும் தெரியாமல் மயங்கி நின்றான். இளவலும் வியந்து

விம்மிதமடைந்தான். எய்திய நிலை அதிசய மாயமாய் மருவி நின்றமையால் யாவரும் தெய்வத் திருவருள் என்று புகழ்ந்து மகிழ்ந்தார். மேலே விளைவதை வியந்து விழைந்து நின்றார்.

எய்திய அனுமன் செய்தது.

ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்
மெய்யின் மெய்எனும் நின்உயிர் வீடினால்
உய்யுமே அவன்! என்றுரைத் துட்புகாக்
கையி னால்எரி யைக்கரி ஆக்கினான். (1)

உய்தி சொல்லியது.

ஆக்கி மற்றவன் ஆய்மலர்த் தாள்களைத்
தாக்கித் தன்தலை தாழ்ந்து வணங்கிக்கை
வாக்கிற் கூடப் புதைத்துஒரு மாற்றம்நீ
தூக்கிக் கொள்ளத் தகும்எனச் சொல்லினான். (2)

காலம் குறித்தது.

இன்னம் நாழிகை எண்ணேன் துளஐய!
உன்னை முன்னம்வந்து எய்த உரைத்தநாள்
அன்னது இல்லைஎனின் அடி நாயினேன்
முன்னம் வீழ்ந்திவ் எரியின் முடிவெனால். (3)

உறுதி கூறியது.

ஒன்று தானுளது உன்னடி யேன்சொலால்
நின்று தாழ்த்தருள் நேமிச் சுடர்குணக்
குன்று தோன்றள வும்இது குன்றுமேல்
பொன்று நீயும் உலகமும் பொய்யிலாய்! [4]

உற்றதை உரைத்தது.

எங்கள் நாயகற்கு இன்னமுது ஈகுவான்
பங்க யத்துப் பரத்துவன் வேண்டலால்
அங்கு வைகினன் அல்லது தாழ்க்குமோ?
இங்கண் அல்லதொன்று இன்னமும் கேட்டியால். (5)

ஈண்டு நிகழ்ந்திருக்கும் நிகழ்ச்சிகள் நீண்ட அதிசய ஆனந் தங்களை விளைத்துள்ளன. கொடிய துயரங்கள் யாவும் நொடியில் மறைந்து போயின; நெடிய மகிழ்ச்சிகள் யாண்டும் நீண்டு பரந்து நிறைந்து நின்றன. எல்லாரும் அதிசய பரவசராயினர்.

நிலைமைகளைக் கவி வரைந்து காட்டியிருக்கும் காட்சிகள் கலையின் சுவைகளோடு கனிந்து திகழ்கின்றன. யாவும் விழி எதிரே தெளிவாய் விளங்கித் தோன்றுகின்றன. நேர்ந்துள்ளன ஆர்ந்த வியப்புகளுடையன. கூர்ந்த சிந்தனைகளால் ஓர்ந்து தேர்ந்து கொள்ள வாய்ந்தன. அரிய அதிசயங்கள் தோய்ந்தன.

வான வீதியில் மாருதி வாவி வந்தபோது அயோத்தி நகர் அருகே வரவே கீழே கூர்ந்து நோக்கினான்; பரதன் தீயில் பாய மூண்டு நிற்பதைக் கண்டான்; காணவே "ஆ! அபாயம் நேர்ந்ததே!" என்று விரைந்து உபாயம் ஓர்ந்து "இதோ! ஐயன் வந்தான்; மெய்யன் வந்தான்! எம்பெருமான் வந்தான்! ஆண்டவன் வந்தான்!" என்று நீண்ட பேரொலியோடு கூவிக்கொண்டே மூண்டு எரிகிற தீயுள் முனைந்து பாய்ந்தான். பற்றி எரிந்த நெருப்பு முற்றும் அவிந்தது; குண்டம் முழுவதும் கரித்துண்டங்களாய்க் குவிந்து கிடந்தன; விரைந்து வெளியே தாவினான்; பரதன் பாதங்களில் விழுந்து தொழுது எழுந்து நின்று வாய் பொத்தி வணங்கி மொழிந்தான். "நீதியின் நிலையமே! தீது செய்ய நேர்ந்தது என் சிந்தையை வருத்துகின்றது; மன்னர் பெருமான் எவ்வழியும் சொன்ன மொழி தவறார்; முன்னம் சொன்ன தவணைப்படி அண்ணல் இங்கு வந்து சேர இன்னும் நாற்பது நாழிகைகள் இருக்கின்றன. கூறிய நேரத்துக்கு ஒரு விநாடி முன்னே வந்தாலும் அது பெரிய பிழையாம்; சத்திய சீலனான அந்த உத்தமன் எத்தகைய நிலையிலும் யாதும் வழுவாமல் ஒழுகி வருபவர் ஆதலால் உரிய பொழுதிலேதான் அவரைத் தெரியமுடியும். கணக்கைச் சரியாக் கவனியாமையால் காரியக் கேடு நேர்ந்தது; நான் கூறியபடி எம்பெருமானை இனிது காணலாம்; நாளைச் சூரிய உதயம் வரை பொறுத்துப் பாருங்கள்; குறித்தபடி ஆண்டவன் ஈண்டு வரவில்லையானால் நானே முன்னதாக மாண்டு மடிவேன்; தருமமூர்த்தியின் கருமமாகவே நான் இங்கு வந்திருக்கிறேன்; இலங்கையிலிருந்து மீண்டு வருங்கால் இடையே பாரத்துவாச முனிவர் விருந்துபுரிய விழைந்து வேண்டியமையால் நம் பெருந்தகை ஆண்டு அமர்ந்திருக்கிறார்; நாளை யாவரும் விழி களிப்ப நேரே காணலாம்; இராமநாதனுடைய தரிசனத்தால் திவ்வியமான பேரானந்தத்தை எவ்வுயிரும் எய்தி மகிழ்வதைச் செவ்வையா நாம் கண்டு களிக்கலாம்" என

அனுமான் இன்னவாறு நன்னயமா நேரே கூறி யருளினன்.

அந்த மேதையினுடைய இனிய மொழிகள் இன்ப ஒளி களாய் ஓங்கிப் பரதனைப் பரவசப்படுத்தின. துயரால் உயிரை மாய்க்க மூண்டவனுக்கு உயர் பேரமுதமாய் அவ்வுரைகள் உவகை புரிந்தமையால் உளம் மிக வியந்து செயல் இழந்து அயல் அயர்ந்து நின்ருன். அதிசய ஆனந்தம் மதிமிகுந்து வந்தது.

ககனவீதியில் கதிவேகமாய்க் கடுகி வந்த அனுமான் தீயுள் விரைந்து பாய்ந்து புரிந்த செயல் விஞ்சை மந்திரமாய் விளங்கி நின்றமையால் யாவரும் மெய்ம்மறந்து விம்மிதநிலையில்நின்றனர்.

கையினுல் எரியைக் கரி ஆக்கினுன்

அனுமான் செய்துள்ள செயலை இது தெளிவா விளக்கி யுள்ளது. பரதனுடைய உடலைச் சாம்பல் ஆக்க நேர்ந்த தீயை மாருதி சாம்பலாக்கியிருக்கிருன். காரிய விரைவு கருத்தோடு நிகழ்ந்துள்ளது. கருமநிகழ்ச்சிகள் தருமஉணர்ச்சிகளாயுள்ளன.

வீரிய மதிமானுடைய வேகமும் விவேகமும் வினையாண் மையும் கூரிய சீரிய நீர்மைகளோடு குலாவி உலக விழிகள் ஓர்ந்து நோக்கித் தேர்ந்து உணர ஈண்டு நேர்ந்து நிலவுகின்றன.

நேரே நிலத்தில் வந்து நின்று பரதன் எதிரே விவரமாத் தேறுதல் கூற முடியாதபடி அபாயம் வேகமாய் மீறி நின்றது ஆதலால் விரைந்து மாருதி தீயுள் பாய்ந்தான். பாயவே தீ மாய மாய் மறைந்தது. கட்டைகளில் பற்றிக் கடுமையா எரிந்து நெடுமையா நீண்டு நின்ற நெருப்பு கடிது மறையவே அவை கரித்துண்டங்களாய்க் கிடந்தன. எரிந்தன யாவும் கரிந்தன.

கரி என்னும் சொல் இங்கே இருபொருள் மருவி நின்றது. எரிந்து கரிந்த கட்டை பின்பு தெரிந்து தெளியும் சாட்சி ஆகவும் காட்சிக்கு அமைந்தது. "இராமநாதா! சிறிது நேரம் நான் தாமதமாய் வந்தால் பரத நம்பி இறந்து போயிருப்பார்; ஆண்ட வன் அருளால் உயிர் பிழைத்துள்ளார்; அவர் தீயில் பாய்ந்து சாக மூண்ட நிலையை இந்தக் கரிகளால் தேவரீர் நேரே கண்டு கொள்ளலாம்" என்று இராமபிரானிடம் காட்டி யருளவே எரிந்த கட்டைகளைக் கரிகளாக்கி வைத்தான் ஆதலால் எரியைக் கரி ஆக்கினுன் என்ருர். கையினுல் என்றது தீயை அவித்திருக்

கும் செய்கை தெரிய யாண்டும் அதிசய வேலைகளைச் செய்து இராமனுக்கு ஆதரவு புரிந்துவந்த கைகள் ஈண்டும் உரிமையோடு ஊழியம் புரிந்துள்ளன. ஊழியும் தேயாத புகழ் இவனிடம் உரிமையாய் ஒளி வீசி எவ்வழியும் தேசு மிகுந்துள்ளது.

பஞ்சபூதங்களும் அனுமானுக்கு அஞ்சி அடங்கி நடக்கின்றன. கடல்நீரைக் கடந்தான்; வானவீதியில் வாயு வேகமாய் வந்தான்; இலங்கையில் நெருப்பை வைத்து எரித்தான்; அயோத்தியில் வந்து அதனை அவித்து அணைத்து யாவருக்கும் பேருவகைகளை விளைத்தான். அஞ்சிலே ஒன்றின் அருமை மகன் ஆதலால் மற்ற நான்கும் பாங்கோடு இவனுக்கு உறவுரிமைகளா உதவி புரிந்து வருகின்றன. இயலுரிமை செயலில் விரிகிறது.

எரிகரி அறி கரி என அமைய வைத்தவன் இளவலை உளம் உவந்து நோக்கி உறுதிமொழிகள் கூறினன். மெய்யின் மெய் எனப் பரதனை இங்கே உரிமையாக் குறித்தது அவனது விரத நிலையும் சரதநீர்மையையும் சித்தசுத்தியையும் கருதியேயாம்.

சத்தியம் சத்தியமாய் நிலைத்துவரப் பரதன் நித்திய நியமமா வாழ்ந்து வந்துள்ளான். அவ்வுண்மையை அனுமான் ஈண்டு ஒண்மையா விளக்கியருளினன். இப்பொழுது தான் பரதனை இம் மதிமான் நேரே காணுகின்ருன்; இதற்கு முன் கண்டதில்லை ஆயினும் இக்குலமகனுடைய நிலைமைதலைமைநீர்மைகளைப் பலவகையிலும் கேட்டு வியந்து வந்துள்ளான் ஆதலால் இங்ஙனம் உவந்து புகழ்ந்தான். புகழ்ச்சி மொழி பொருள் பொதிந்து வந்தது. நிகழ்ச்சி நிலைகளை வலியுறுத்தி நெஞ்சைத் தேற்றினன்.

இன்னம் நாழிகை எண் ஐந்து உள.

இராமன் அயோத்தி வந்து சேர வுரிய கால நிலையை இவ்வாறு தேற உரைத்தான். அண்ணன் குறித்தபடி வரவில்லை; கூறிய தவணை கடந்து போகுமுன் இறந்து போக வேண்டும் என்று தம்பி பரதன் விரைந்து மூண்டது நீண்டதவறு; நெடிய பிழைஎன்பதை இவ்வண்ணம் செவ்வையாத் தெளிவுறுத்தினன்.

“ஏழிரண்டு ஆண்டில்வா!” என்று தந்தை சொன்னதாகக் கைகேசி முன்னம் ஆணையிட்டு அனுப்பினள் ஆதலால் அவ்வாறே கானகம் போன இராமன் மீண்டு ஈண்டு வர இன்னம்

நாற்பது நாழிகை ஆக வேண்டும் என்று காலத்தின் கணித நிலையை இனிது விளக்கினன். உள்ள பொழுதை எண்ணி உள்ளம் தெளிந்து இளவல் உறுதியாயிருக்க அளவை அறுதியிட்டு உரைத்தான். காலத்தைக் கணித்துக் காட்டியது வியப்பை யூட்டியது.

சுடர் குணக் குன்று தோன்றளவும் நின்று அருள்.

நாளைக் காலை வரையும் பொறுத்தருளுக; சூரியன் கிழக்கே உதயம் ஆகும் பொழுது இராமச் சந்திரனும் இங்கே உதயம் ஆவார் என இதயம் மகிழ இதமொழி புகன்று இனிது தேற்றினன். குணம்=கிழக்கு. குணக் குன்று என்றது உதயகிரியை.

குணக்குன்றன பரதனுக்குக் குணக்குன்றைக் குறித்துக் காட்டிக் கணக்கைச் சரி செய்திருப்பது கருதி யுணரவுரியது. அன்று மாலையில் எஞ்சிய நாழிகையோடு இரவு முப்பது நாழிகையும் கழிய வேண்டும் என்பது நேரே தெளிய வந்தது.

பரத்துவாச முனிவர் விருந்து புரிய விரும்பி வருந்தி வேண்டியமையால் ஆண்டவன் அங்கே தங்கி யிருக்கிறர்; நாளை உதயத்தில் இங்கே வந்தருளுவார் என்று சிந்தை தெளிய மொழிந்த அனுமான் பின்பு காட்சியான சாட்சியைப் பரதன் எதிரே காட்ட நேர்ந்தான். தெளிவான அடையாளம் விழிதெரிய வந்தது.

அடையாளம் காட்டியது.

அண்டர் நாதன் அருளி அளித்துளது!
உண்டோர் பேரடை யாளம் உனக்கது
கொண்டு வந்தனென் கோதறு சிந்தையாய்!
கண்டு கொண்டருள் வாய்எனக் காட்டினன். (1)

கண்டு மகிழ்ந்தது.

காட்டிய மோதிரம் கண்ணில் காண்டலும்
ஊட்டிய வல்விடம் உற்று முற்றுவார்க்கு
ஊட்டிய நன்மருந்து ஒத்த தாமரோ
ஈட்டிய உலகுக்கும் இளைய வேந்தற்கும். (2)

களிப்பு நிலை.

அழுகின்ற வாய்எலாம் ஆர்த்து எழுந்தன;
விழுகின்ற கண்எலாம் வெள்ளம் மாறின;

உழுகின்ற தலைஎலாம் உயர்ந்து எழுந்தன;
தொழுகின்ற கைஎலாம் காலின் தோன்றலை. (3)

பரதனது பரவசம்.

மோதிரம் வாங்கித்தன் முகத்தின் மேல்அணைத்து
ஆதரம் பெறுவதற்கு ஆக்கை யோஎனு
ஓதினர் நாணுற ஓங்கினன் தொழும்
தூதனை முறைமுறை தொழுது துள்ளுவான். (4)

ஆதிவெந் துயரலால் அருந்தல் இன்மையால்
ஊதுறப் பறப்பதாய் உலர்ந்த யாக்கைபோய்
ஏதிலன் ஒருவன்கொல் என்னல் ஆயது
மாதிரம் வளர்ந்தன வயிரத் தோள்களே. (5)

அழுநகும் அனுமனை ஆழிக் கைகளால்
தொழும்எழும் துள்ளும்வெங் களிதுளக் கலால்
விழுமழிந் தேங்குமபோய் வீங்கும் வேர்க்குமக்
குழுவொடும குனிக்கும்தன் தடக்கை கொட்டுமால். (6)

ஆடுமின் ஆடுமின் என்னும்; ஐயன்பால்
ஓடுமின் ஓடுமின் என்னும்; ஓங்கிசை
பாடுமின பாடுமின் என்னும்; பாவிகாள்!
சூடுமின் சூடுமின் தூதன் தோளெனும். (7)

வஞ்சனை இயற்றிய மாயக் கைகையார்
துஞ்சுவர் இனிஎனத் தோளைக் கொட்டுமால்
குஞ்சித அடிகள் மணடிலத்தில் கூட்டுற
அஞ்சனக் குன்றினின்று ஆடும் பாடுமால். (8)

வேதியர் தமைத்தொழும்; வேந்தரைத் தொழும்;
தாதியர் தமைத்தொழும்; தன்னைத் தான்தொழும்;
ஏதுமஒன றுணர்குறு திருக்கும்; நிற்குமால்;
காதல்என் றதுவுமஓர் கள்ளில் தோன்றிற்றே? (9)

இங்கே நிகழ்ந்துள்ள நிலைகளை வியந்து காண்கின்றோம். மூண்டு எரிந்த தீயை அவித்துப் பரதனைத் தேற்றி உள்ளம் குளிர உறுதி நலங்களை உரைத்த அனுமான் முடிவில் அடையாளமாக் கொண்டுவந்த கணையாழியைக் காட்டினான். இராமனிடமிருந்து விடைபெற்று வரும் போதே முன்எச்சரிக்கையா மோதிரத்தை வாங்கி வந்துள்ளான் ஆதலால் ஈங்கு அதனை இனிது பயன் படுத்தினான். மதி நலம் அதி நயமாய் விளங்கியது.

காரியத்திறம் கூரிய சீரிய விவேகமாய் இவ் வீரியவானிடம் அமைந்துள்ளமையை இடங்கள்தோறும் நாம் உணர்ந்து வருகிறோம். மூண்ட துயரத்தால் உயிரைவிட நேர்ந்தவனை விரைந்து தடுத்து அடுத்து நின்று ஆறுதல் கூறிய பின்பே மோதிரத்தை எடுத்து நீட்டி நேரே கண்டு தெளிய நிலைமையைத் துலக்கினான்.

"அண்டர்நாதன் அளித்தது;
அடையாளம் கொண்டு வந்தனன்;
கண்டு அருள்"

என்று காட்டியபொழுது யாவரும் பேரானந்தம் அடைந்தனர். துன்பக்கடல் இன்பக் கடலாய் மாறியது. எல்லாரும் உள்ளம் களித்துத் துள்ளினர்; எல்லையில்லாத பரவசநிலை எங்கும் பரவி எழுந்தது. அழுது புலம்பிய வாய்கள் எல்லாம் இராமநாதா! என்று ஆர்வம் மீதூர்ந்து கூவி ஆரவாரமாய்த் தொழுது துதித்தன. அவலக் கண்ணீர்கள் ஆனந்தக் கண்ணீர்களாய்ப் பெருகின; தரையில் கவிழ்ந்து புரண்ட தலைகள் நிலையில் உயர்ந்து நெடிய உவகைகளோடு ஓங்கின; இடங்கள்தோறும் திரண்டு நின்றவர் யாவரும் கைகளைத் தலைமேல் கூப்பி மாருதியை நோக்கித் தொழுதனர்; மூண்ட ஆனந்தக் களிப்புகள் யாண்டும் நீண்டு பொங்கி எவ்வழியும் கடிது பரவி நெடிது ஓங்கின.

இளவல் உளநிலை.

இராமபிரான் விரலில் அணிந்திருந்த மோதிரத்தை அனுமானுடைய கையில் கண்டதும் பரதன் அடைந்த பரவசநிலை உரைகளைக் கடந்து எழுந்தது. மாருதி காட்டிய மோதிரம் ஊட்டிய அமுதினும் உவகையை மூட்டியதால் உள்ளமும் உணர்வும் உயிரும் ஒருங்கே களித்துத் துள்ளின. அகத்தில் பொங்கிய மகிழ்ச்சியோடு அந்தக் கணையாழியைக் கையில் வாங்கினான்; கண்குளிர நோக்கினான்; முகத்தில் அணைத்தான்; முத்தமிட்டான்; தலையில் வைத்துச் சிறிது நேரம் நிலைமறந்து நின்றான்; மீண்டும் எடுத்து நேரே பார்த்து நெடிது களித்தான்; விழி நீர் பெருகி ஓடியது; உழுவலன்பால் அழுத கண்ணீர் ஆழியை நனைத்து ஆழமாய் நின்றது. ஆனந்த ஆர்வத்தால் அவ்வாறு அழுதவன் பின்பு அனுமானைச் சுற்றிச் சுற்றி வந்து தொழுது துதித்தான்; துள்ளிக் குதித்தான்; தன்னை மறந்து

ஆனந்தக் கூத்து ஆடினன்; அகத்தில் மூண்ட இன்பம் முகத்தில் நீண்டு நிலவியது; மெலிந்திருந்த உடல் விம்மிப் பருத்து விழுமிய எழிலோடு தெளிவாய் விளங்கி ஒளிமிகுந்து திகழ்ந்தது; களிபெருவகையால் விழி நீர் பெருகி வெளியே பாய்ந்தது; அழுவது, சிரிப்பது, ஆடுவது, பாடுவது, ஓடுவது, வட்டமிட்டு வருவது, துள்ளிக் குதிப்பது, தொடைகளைத் தட்டிக்குனிப்பது, எதையோ எண்ணி அசையாமல் நிற்பது, மறுபடியும் விசையா விரைந்து அயல் எங்கும் திரிவது, மயல் மிகுந்து செயல் விரிந்து வருவது, இன்னவாறான நிலைகளில் மன்னி வந்தவன் பின்னர் மக்கள் கூட்டத்தை நோக்கிப் பக்கம் எங்கும் போய்ப் பரிவோடு பேசினன். "எல்லாரும் ஆடுங்கள்; பாடுங்கள்; எம் பெருமான் வருகிறார் எதிர்கொண்டு ஓடுங்கள்; இங்கே வந்துள்ள தூதனுடைய அடிகளை உங்கள் முடிகளில் சூடுங்கள்; யாதும் தாமதியாமல் எல்லாம் செய்யுங்கள்; பொல்லாத கைகேசி இன்று பொன்றி ஒழிவாள்; நெஞ்சம் துணிந்து வஞ்சம் புரிந்த அந்த மாய்ப் பேய் மாய்ந்து போம்; மாய்ந்து போம்; என் ஆருயிர் ஆன அஞ்சன வண்ணனை நான் கண்டு களிப்பேன்; கண்டு களிப்பேன்" என்று இவ்வாறு களியாட்டம் ஆடினன். அதன்பின் கூட்டங்களை நோக்கித் தனித்தனியே கும்பிட்டான். வேதியர் வேந்தர் வணிகர் முதலிய மாந்தர் யாவரையும் வியந்து மகிழ்ந்து புகழ்ந்து தொழுதான்; பின்பு பெண்கள் குழுவை நோக்கிக் கண்கள் நீர் மல்கி அம்மா! எங்கள் தெய்வம் வந்தருளும் என்று சிந்தை உவந்து மொழிந்தான்; அரண்மனையில் வேலைசெய்கிற தாதிகளையும் ஆதரவோடு அணுகி ஆனந்த அதிசயத்தால் தொழுதான்; முடிவில் தன்னையும் தொழுது கொண்டான்; இன்னவாறு இன்பக் களிப்பில் மூழ்கி எல்லை காணமுடியாத பரவச நிலைகளில் பரதன் வரமாய் நின்றான். அவனுடைய செயல் இயல்கள் மயல்களாய் நின்றன.

தன் அண்ணன் பால் இந்தஇளவல் கொண்டுள்ள உழுவலன்பும் உள்ளப்பாசமும் உயிர் வாஞ்சையும் உலக உள்ளங்கள் உணர்ந்து தெளிய ஈண்டு விரிந்து வியனு வெளிவந்துள்ளன.

ஊட்டிய நன் மருந்து ஒத்தது

அனுமான் காட்டிய மோதிரம் பரதனுக்கும் மாந்தருக்கும்

ஊட்டியுள்ள உவகை நிலையை இது உணர்த்தியுள்ளது. துயரங்களால் துடித்து உயிர்போக மூண்டவர்க்கு உயர் பேரமுதமாய் அது ஆண்டு உய்வு தந்திருப்பதை ஈண்டு நாம் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். ஊட்டிய என்றது உண்டு மகிழ்ந்தமை தெளிய.

சாக நேர்ந்த சமையம் சாகா மருந்தாய் வந்து உதவியுள்ளமையால் நன் மருந்து என அந்த மோதிரம் நயந்து புகழ நேர்ந்தது. அடையாள முத்திரையாய் அமைந்திருப்பது மோதிரம் என வந்தது. இராமநாமம் அதில் நேமமா நிலவியுள்ளது. "மெய்ப்பேர் தீட்டியது; தீட்டரிய செய்கையது" என்று அந்த விரலணி விறலோடு விளங்கியுள்ளதனுல் அதன் காட்சியும் மாட்சியும் காணலாகும்.

"ஆழி காட்டி என் ஆருயிர் காட்டினுன்"

தான் கொண்டு வந்த கணையாழியை அனுமான் காட்டிய போது சீதை மகிழ்ந்து புகழ்ந்ததை இது காட்டியுள்ளது. இலங்கைச் சிறையில் கலங்கியிருந்தவள் முடிவில் இறந்து பட நேர்ந்த சமையம் கடிதில் நேரே போய் இந்த ஆழியைக் காட்டியே அத் தேவியின் ஆவியை அனுமான் மீட்டியருளினுன்.

"விருந்தும் எனலாகியது வீயும்உயிர் மீளும்
மருந்தும் எனலாகியது வாழிமணி யாழி."
(சுந்தர, உருக்காட்டு 69)

வீயும் உயிரை மீட்டிச் சானகியை அங்கே காத்தருளிய அந்த அனகன்கை ஆழியே பரதன் உயிரை இங்கே பாதுகாத்துள்ளது. அதிசய அழகனுடைய விரலணி மனைவிக்கும் தம்பிக்கும் மன்னுயிர்க்கும் இன்னுயிர்தரும் இனிய அமுதமாய் மன்னியுள்ளது. அந்த உண்மையை இங்கே கண்டு சீவிய நிலைகளைத் தெளிந்து கொள்கிறோம். ஆருயிர்களுக்கு ஓர் உயிர் உணர வந்தது.

கணையாழியைக் கண்டதும் அண்ணனை நேரே கண்டு கொள்ளலாம் என்ற எண்ணம் பேரானந்தமாய்ப் பெருகி எழுந்தது ஆதலால் பரதன் பரவச நிலையில் நிலவி நின்றுள்ளான்.

அழும்; நகும்; அனுமனைத் தொழும்;
எழும்; விழும்; துள்ளும்; ஏங்கும்; வீங்கும்.

என்றதனுல் அந்த உள்ளத்தில் ஓங்கியுள்ள உவகைக் களிப்புகளை ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். உற்றதுயரங்கள்

யாவும் ஒழிந்து இன்ப விளைவுகள் பொங்கியுள்ளமையை இங்கே விளைந்துள்ள மெய்ப்பாடுகள் வெளியே தெளிவா விளக்கி யுள்ளன. நேர்ந்துள்ள நிலைகள் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்கவுரியன.

அழுதலும் நகுதலும் வேறுபாடான மாறுபாடுகளுடை யன; அவை ஒருங்கே நிகழ்ந்துள்ளன. சித்தம் பேதமான பித்த ருடைய செயல்களும் மயல்களும் இங்கே பெருகி நிற்கின்றன.

ஈண்டு அழுதது ஆனந்தத்தால்: மூண்ட சோகத்தில் மூழ்கி மாண்டு படநேர்ந்தவன் மீண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் நீண்டு நிற்கின்றான் ஆதலால் அந்த நிலைமையில் விழிநீர் வெளியே பாய்ந்துள்ளது. இராமநாதன் பால் மூண்டுள்ள அன்புப்பாசம் பரதனைப் பெரியபித்தன் ஆக்கி அரியசெயல்களை ஆற்றியிருக்கிறது.

அல்லல்கள் எல்லாம் அறவே நீங்கி எல்லையில்லாத இன்ப வெள்ளத்தில் திளைக்கும் படி செய்துள்ளவன் ஆதலால் மாருதி யைப் பல முறையும் வலமா வந்து தொழுது துதித்திருக்கிறான். உள்ளத்தில் பொங்கிய உவகைப் பெருக்கால் அங்கும் இங்குமா ஓடித் துள்ளிக் குதித்துள்ளான். அவ்வுண்மை எழும், விழும், துள்ளும் என்றதனால் தெரிய வந்தது. ஏங்கும், வீங்கும் என்றது அண்ணனைக் காண அவாவிய ஏக்கமும், கண்டுகளிக்கலாம் என்ற ஊக்கமும் ஒருங்கே ஓங்கி எழுந்துள்ளமையால் நேர்ந்தது.

அகத்தில் மிகுந்த மகிழ்ச்சி விளைந்தபோது புறத்தில் பல வகையான நிகழ்ச்சிகள் விரிந்து நிலைமைகள் தெரியவருகின்றன.

உவந்தோன் அவிநயம் உரைக்கும் காலை
நிவந்தினி தாகிய கண்மலர் உடைமையும்
இனிதின இயன்ற உள்ளம் உடைமையும்
முனிவின் அகன்ற முறுவல்நகை உடைமையும்
இருக்கையும சேறலும கானமும் பிறவும்
ஒருங்குடன் அமைந்த குறிப்பிற் றன்றே.

(அவிநயம்)

உள்ளத்தில் உவகை ஓங்கிய பொழுது அந்த மனிதனிடம் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை இது இனிது விளக்கியுள்ளது. உயிர் அடைந்துள்ள களிப்புகள் உடல் வழியே அயல் அறிய வருத லால் மெய்ப்பாடுகள் எனஇயல்முறையில் பெயர்பெற்றுகின்றன.

ஆடுமின் ஆடுமின் என்னும் ஐயன்பால்
ஓடுமின் ஓடுமின் என்னும்.

பொது சனங்களை நோக்கிப் பரதன் இவ்வாறு ஆவேச மாய்க் கூவியிருக்கிருன் "எம்பெருமான் பரத்துவாச முனிவருடைய ஆசிரமத்தில் வந்து தங்கியிருக்கிருர்; அங்கே ஓடுங்கள்; இங்கிருந்து அங்கு வரையும் ஒரே திரளாய் நீண்டு நின்று ஆண்டவனை எதிர் கொண்டு வரவேற்று உபசரியுங்கள்; விரைந்து போய்ப் புகழ்ந்து போற்றுங்கள்" என்று உவகை மீதூர்ந்து நகரமாந்தரை ஏவி அயல் எங்கும் கூவி நின்றுள்ளான்.

பாவிகாள்! என்றது பரவச நிலையில் வெளிவந்த பாசமொழி: "நேசயக்கள் ஆகிய நீங்கள் எல்லாரும் என்னைப் போல் பாவம் செய்திருந்தமையால் புண்ணிய மூர்த்தியைப் பிரிந்து புலை நிலையில் புலர்ந்திருந்தீர்; இன்றோடு அந்த அவலநிலை ஒழிந்து போயது; இனிமேல் கவலை யாதும் இன்றி உவகையில் ஓங்கி வாழ்வீர்; ஓடிப்போய் ஐயனைப் பாருங்கள்; பார்த்து அவனுடைய கீர்த்தியைப் பாடுங்கள்; பாடலோடு ஆடவர் திலகன் எதிரே ஆனந்தத்தால் ஆடுங்கள்; பேரின்பப் பேறு உங்களுக்கு நேரே கிடைத்துள்ளது" என இன்னவாறு மக்கள் திரளை நோக்கி மகிழ்ச்சி மீதூர்ந்து பேசியிருக்கிருன். வெளியே வந்த வார்த்தைகள் அந்த உள்ளத்தைத் தெள்ளத்தெளிய நேரே வார்த்துக்காட்டியுள்ளது.

வஞ்சனை இயற்றிய மாயக் கைகையார்
துஞ்சுவர் இனி.

பரதனுடைய நெஞ்சக் கொதிப்பை இந்த மொழிகளால் நேரே தெரிந்து கொள்கிறோம். இராமனைக் காட்டுக்கு ஓட்டி நாட்டுக்கு நெடிய துயரங்களை விளைத்த கொடிய பாதகி என்று கைகேசியை எவ்வழியும் வெறுத்துக் கடுத்துப் பழித்து வருவதை இக்குலமகனிடம் யாண்டும் கண்டு வருகிறோம். ஈண்டும் முடிவாக இவ்வாறு காண நேர்ந்தோம். காணுகின்ற காட்சியில் கருமங்கள் மருமமா மருவியுள்ள வருமங்கள் தெரியவருகின்றன.

வஞ்சனை இயற்றிய என்றது தசரதனை வசமா மயக்கி இரண்டு வரங்களை வாங்கி இழவு கூட்டிய அக்களவு நிலையைக் கண்டு தெளிய வந்தது. இனியமனைவி என்று உரிமையாய் நம்பி அரிய அன்புகள் செய்த கணவனைக் கொடுமையா வஞ்சித்தாள்

ஆதலால் அந்த நெஞ்சத் தீமையை நினைந்து நினைந்து இக்கோ மகன் நெஞ்சம் துடித்து நெடிது பதைத்து வெறுத்துள்ளான்.

"உரம்கொள் மனத்தவள் வஞ்சம் ஓர்கிலாதான்."
(கைகேசிசூழ், 9)

கைகேசியின் வஞ்சமனத்தையும், தசரதனுடைய நெஞ்சின் நேர்மையையும் இது நன்கு வரைந்து காட்டியுள்ளது. இதனை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். உரம் கொண்ட வஞ்ச நெஞ்சம் உடையவள் திரம் கொண்ட மன்னனிடம் வரம் கொண்டு தன் மனம் கொண்டபடி செய்யநேர்ந்தாள். அதனால் விளைந்த விளைவுகள் அளவிடலரியன; அதிசயங்கள் உடையன.

இராம சரிதத்தின் விளைவும் விரிவும் பரிவும் பண்பும் வியனிலையில் பெருகி விழுமிய மகிமைகள் தோய்ந்துள்ளன. கருமங்களும் தருமங்களும் மருமங்களாய் மருவியிருத்தலால் விதியின் விளையாடல்களா விளங்கி நிற்கின்றன. வசிட்டமுனிவர் முதலிய பலருடைய மதிகளையும் கடந்து அதிசய நிலைகளில் நிமிர்ந்து நிலவுகின்றன. அரிய மதிகளை வென்று பெரியவிதிபெருகியுளது.

தனது அருமை மகனை அரசன் ஆக்கி அரியணையில் வைத்துக் கண்குளிரக் காண வேண்டும் என்ற ஆசையினாலேயே கைகேசி கைதவம் செய்தாள். அச்செயலால் மயலான துயரங்கள் எங்கும் விளைந்தன. அயோத்தியில் கிளைத்த கிளை இலங்கை வரையும் நீண்டு போய் அரக்கரை அடியோடு கருவறுத்து மீண்டுள்ளது. அந்த மீட்சியுள் அரிய பல காட்சிகள் உள்ளன

உலக உயிர்கள் யாவும் கண் என உயிர் எனக் கருதிப் போற்றும் இராமன்பால் கைகேசி மாத்திரம் மாறுபட்டு மனம் திரிந்து ஊறுபாடுகளை விளைத்தாள்; கொடிய அந்த இடையூறுகளையெல்லாம் கடந்து இராமன் அரிய பெரிய புகழோடு மீண்டு வருகின்றான் ஆதலால் நீண்ட வஞ்சமாய்ச் சதி புரிந்த அவள் மாண்டே மடிந்து போவாள் என்று பரதன் மகிழ்ச்சி மீதூர்ந்து நின்றான். அந்த நிலை இனி மாயக் கைகையார் துஞ்சுவர் என்று இத்தோன்றல் தோள் தட்டி யுள்ளமையால் தெரிய வந்தது.

ஈன்ற தாயை இவ்வாறு இந்த இனிய மகன் துனிமிகுந்து வைதது, புனித அண்ணன் மேல் பொங்கியுள்ள விழுமிய

அன்பை விளக்கி நின்றது. தனக்கு இதம் செய்வதாக நினைந்து கொண்டு தன் உயிரை அதம் செய்தாளே! என்று அன்னையை இன்னலோடு உள்ளே வெறுத்திருத்தலால் உரைகள் வெளியே கடுத்து வந்தன. உரிமையாய் இனியது செய்ய நேர்ந்தாள்; அந்தச் செயலால் சிறுமையாய்ப் பழிகள் பல சேர்ந்தாள்.

> கானுளைப் போஎன்று காகுத்தன்
> தனை அனுப்பிக் கைகைத் தெய்வம்
> வானுளச் செய்ததுஎன வானவர்கள்
> வாழ்த்திவர வையத் தோர்கள்
> ஆனுத கொடும்பாவி அழிகேடு
> செய்தாள்என்று அவங்கள் கூறத்
> தானுள வேண்டும்எனற தன்மகனும்
> தனைப்பழித்தான் தமியள் அந்தோ!

கைகேசி செய்த செயல்களால் விளைந்துள்ள நிலைகளை இங்கே வியந்து காணுகின்றோம். வானம் அவளை உவந்து வாழ்த்தி வருகிறது; வையம் அவளை இகழ்ந்து தூற்றுகிறது. வினையின் விளைவுகள் நினைவரிய நிலையில் நிலவி நெடிது பரவி நிற்கின்றன.

தன் தாயால் நேர்ந்திருந்த துயரம் எல்லாம் ஒழிந்தன என உளம்மிக உவந்த பரதன் தமையனுர் வருவதை நினைந்து நினைந்து நெடிது மகிழ்ந்து பரவசம் அடைந்தான். அந்த அவச நிலையில் நிகழ்ந்த செயல்கள் வியந்து நயந்து மிகுந்து சிந்திக்க வந்தன.

வேதங்களை ஓதியுணர்ந்த மறையவர்களை நோக்கி மகிழ்ந்து தொழுதான்: "நீங்கள் நெறிநியமங்களோடு ஒழுகி வந்த புண்ணியமே எங்கள் அண்ணலை இங்கே கொண்டு வந்துள்ளது" என்று மகிழ்ந்துள்ளமையால் அவரை ஆர்வத்தோடு தொழுது விட்டு அயலேபோய் அரசர் குழுவைத் தொழுது புகழ்ந்தான்: "அரச குலப் பெருமான்களே! நீதி முறையோடு நீங்கள் புரிந்து வந்த ஆட்சியின் மாட்சியாலேயே எம்பெருமான் இங்கே மீண்டு காட்சி தர வருகிருர்; இனிமேல் அவருடைய தலைமையில் உங்கள் நிலைமை மகிமை தோய்து வரும்" என்றுமகிழ்ந்துவணங்கினுன். பின்பு வணிகர் வேளாளர் முதலிய மரபினர்களை யெல்லாம் வரன் முறையே தொழுது புகழ்ந்து தொடர்ந்து சுற்றி வந்தான்.

தாதியர் தமைத் தொழும்.

வேதியரை விழைந்து தொழுது அதன்பின் வேந்தர் முதலிய மாந்தர் யாவரையும் மகிழ்ந்து தொழுது வந்தவன், அங்கே குழுமி நின்ற பெண்களையும் கைகுவித்துக் கண்கள் நீர்மல்கக் கனிந்து தொழுதுள்ளான். “அம்மா! வழிமுறையே ஊழியம் செய்ய நேர்ந்துள்ள நீங்கள் செய்த தருமந்தான் தரும மூர்த்தியான இராமபிரானை ஈண்டு மீண்டு கொண்டு வந்துள்ளது; உங்களுடைய புண்ணியத்தால் என்னுடைய கண்கள் களிக்க என் ஆண்டவனைக் கண்டு களிப்பேன்; எனக்கு இத்தகைய பேரின்பங்களை ஊட்டியருளிய உங்களுக்கு என்றும் என் நன்றி உரிமையாம்” என உவந்து கும்பிட்டு உள்ளம் களித்து நின்றான்.

தன்னைத் தான் தொழும்.

இறுதியில் தொழுதுள்ளதைக் கண்டு ஈண்டு நாம் பெரிதும் வியந்து நிற்கிறோம். பித்துப் பிடித்த பெரிய பயித்தியகாரன் புரியும் செயல்கள் பரதனிடம் நேரே தெரிய வந்துள்ளன.

தன்னைத் தொழுதது ஏன்? இந்தக் கேள்வி இங்கே யாருக்கும் இயல்பாய் எழும். நிகழ்ச்சிகளை நெறியே நோக்கி வந்தவர் முடிவில் முடிவு தெரியாதபடி நெடிது சிந்தித்து நிற்க நேர்ந்துள்ளார். அவரவர்க்குத் தோன்றிய வாறெல்லாம் பதில் கூறும் படி இது அதிசய விதமாய் ஈங்கு விதி தோய்ந்து வந்துள்ளது.

“பரதா! உன்னை நீ ஏன் தொழுது கொண்டாய்?” என்று பரதனிடம் நேரே கேட்டால் அவனும் சரியா விடைகூற முடியாமல் திகைத்தே நிற்பான். உவகை நிலை உரை கடந்துளது.

“பித்தன் செயலுக்கு அத்தம் தெரிவது அரிது” என்பது முதுமொழி. தெளிவாய்த் தெரிய அரிய செயல் பெரிய அரச குல மகனிடம் பெருகி எழுந்து வெளியே யாருங்காண நின்றது.

காண முடியாது என்று கலங்கி நின்று முடிவில் முடிந்து போக மூண்டவன் அண்ணனைக் காண நேர்ந்ததை எண்ணவே தனது பிறவி புனிதம் அடைந்தது; புண்ணிய நலம் உடையது என்று உள்ளம் உவகை மீதூர்ந்தது. எல்லை மீறிய அந்த மகிழ்ச்சியால்தன்னைத்தானேஉரிமையோடு அவன்தொழுதுகொண்டான். அதிசய பரவசம் விழிதெரிய வந்தது. “அடே பரதா! நீ பெரிய பாக்கியசாலி; இராமநாதனைக் கண்டு மகிழும் புண்ணியத்தை நீ நன்கு பண்ணியுள்ளாய்! உன் சன்மம் ஈடேறியது; எடுத்தஇந்த உடல் புனிதமாய் அரிய பலனை அடைந்தது” என இன்னவாறு

தன்னை முன்னிலைப்படுத்திப் பித்தன் புலம்பியுள்ளதுபோல் இராமபத்தியால் சித்தம் களித்துப் புலம்பியிருக்கிறான்; களி மயக்கமான அந்த ஆனந்த நிலை தன்னைத்தான் தொழும் என்றத னால் தெளிவாய் நின்றது. உள்ளத்தில் பேரன்பு பொங்கியுள்ள நிலையை வெளியே நிகழ்ந்துள்ள செயல்கள் விழிதெரிய விளக்கி நின்றன. இன்பக் களிப்புகள் எவ்வழியும் நீண்டுள்ளன.

காதல் ஓர் கள்ளில் தோன்றிற்றே.

மேலே இயல்பாய் நேர்ந்துள்ள செயல்களுக்கெல்லாம் காரணத்தை இது தெளிவாத் துலக்கியுள்ளது. கள்ளைக் குடித்த வன் உள்ளம் தடுமாறி பிதற்றித் திரிந்து பித்தாட்டம் ஆடுவன்; அவ்வாறே பரதனும் இங்கே செய்திருக்கிறான். இராமன்பால் பெருகி எழுந்த பேரன்பால் உள்ளம் உருகி உரை தடுமாறி அயலான செயல்களை மயலோடு செய்துள்ளான் ஆதலால் காதல் கள் வெறியாய் நீண்டு நின்றது என அந்நிலைமையைத் துலக்கினார். வெளியே விளைந்துள்ள வெறியாட்டம் உள்ளே கிளர்ந்துள்ள உழுவலன்பை வெளிப்படுத்தியது. பரவசநிலையில் அரியபல செயல்கள் விரைவா நிகழ்ந்து வியனாய் விரிந்துள்ளன.

ஓர் என்றது அந்தக் கள்ளின் அருமை பெருமைகளை ஓர்ந்துணர வந்தது. மது உள்ளே போக மதி வெளியே போகும் என்னும் பழமொழிப்படி கள்ளைப்பருகினவன் அறிவு கேடனாய் அவகேடுகளைச் செய்வான்; பரதன் இங்கே அவ்வாறு யாதும் செய்யவில்லை; தொழுதலும், அழுதலும், எழுதலும், நகுதலும், புகழ்தலும், போற்றலும் ஆகிய விழுமிய செயல்களே இக்குல மகனிடமிருந்து விளைந்திருக்கின்றன. ஆகவே அதிசயமான இனிய ஓர் கள் எனக் காதல் இங்கே காண வந்தது. பெண் பாலின் பெரிய பிரியமே காதல் என உரியது. ஆண் பால் அன்பை ஈண்டு அப்பெயரால் கூறியது உயர் பேராசையையும் உரிமையான பாசத்தையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ள வந்தது.

"கள்ளினும் காமம் இனிது" (குறள், 1201.)

காதலும் கள்ளும் இதன் கண்ணும் காண வந்துள்ளன.

உரிய நாயகன் பிரிவை ஆற்றாமல் சீதை உயிரைவிட நேர்ந் ததுபோல் பரதனும் சாக நேர்ந்தான் ஆதலால் சாதலை விளைத்த

அந்த அரிய பேரன்பு காதல் என அமைந்தது. அன்பு, பாசம், வாஞ்சை, காதல் என்னும் உரிமை மொழிகள் ஒருமையாய்த் தோன்றினும் பொருள்களில் நுணுகிய வேறுபாடுகளுடையன.

விழுமிய உழுவலன்பு மனிதனைப் பரவசப்படுத்திப் பயித்தியம் ஆக்கிவிடும் என்பதைப் பரதனுடைய செயல்கள் இங்கே நன்கு தெரியச் செய்தன. அரிய பத்தி பெரிய பித்தாய் விரிகிறது.

A man of sense may love like a madman, but not as a fool. [Rochefoucauld]

"ஒரு அறிவாளி அன்பால் பித்தன்போல் தோன்றலாம்; ஆனல் மூடன் அல்லன்" என்னும் இது இங்கு அறிய வுரியது.

Love reasons without reason. [Shakespeare]

"காரணம் கருதாமலே அன்பு காரியம் புரிகிறது" என இது குறித்துளது. அன்பின் நிலை நன்கு அறிய அரியது.

Life is a flower of which love is the honey. [Victor Hugo]

"அன்புள்ள உயிர் தேன் உள்ள மலர்" என இது உரைத்துளது. மதுவும் மலரும் அன்பும் மனமும் அறிய வந்தன.

பரதன் உள்ளம் மதுவுடைய மலர்போல் அன்பு மண்டியுள்ளமையால் கள் உண்டவன்போல் களிமீக்கொண்டு மொழிகளாடித் தொழுது துதித்து எவ்வழியும் ஆனந்தக் கூத்தனுய் மேவிநின்முன். அது வெறியாட்டம் அன்று; இன்பக் கூத்தே.

இராம காவியத்தில் அன்புநிலை பேரின்ப வெள்ளமாய்ப் பொங்கியுள்ளது. உரிய சகோதரர் நால்வரிடமே அன்றி அனுமான் குகன் வீடணன் சுக்கிரீவன் முதலிய யாவரிடமும் அன்பு பெருகி ஓடியுள்ளமையால் இக்காவியம் சீவகோடிகளுக்குச் சிறந்த ஆனந்த நிலையமாய் உயர்ந்து விளங்குகிறது.

பரதன், இராமன், இலக்குவன் என்னும் இக் கோமக்களிடம் மருவியுள்ள உழுவலன்புகள் உலக உள்ளங்களை உருக்கி யாண்டும் விழுமிய மேன்மைகளை இனிது விளைத்து வருகின்றன.

Mutual love, the crown of all our bliss. [Milton]

"ஒருவர்பால் ஒருவர் உள்ளம் கனிந்த அன்பு நம் எல்லாருடைய பேரின்ப முடியாம்" என்னும் இது இங்கே உன்னியுணர வுரியது. அன்பு படியமனிதன் இன்ப நிலையில் உயர்கிருன்.

அன்பு இன்பக் கனி; உயிரின் சாரம். சீவ அமுதம் ஆன இது பரதன் பால் பெருகியுள்ள நிலைமையையும் நீர்மையையும் கூர்மையா ஓர்ந்து உணர்பவர் உள்ளம் கரைந்து உயரின்பம் காணுவர். பேரின்பவெள்ளம் இவன் அன்பில் பெருகிவந்துள்ளது.

ஏதும் ஒன்று உணர்வுறாது இருக்கும்; நிற்கும்.

அன்பு நிலையில் உயர்ந்திருந்த பரதன் இராமனுடைய கணையாழியைக் கண்டபின் பேரின்ப வெள்ளத்தில் மிதந்து திளைத்துள்ளான்; அந்த உண்மையை அவனுடைய இந்தச் செயல்கள் உணர்த்தியுள்ளன. மெய்ப்பாடுகள் மெய்ம்மை தெரிய நின்றன.

அழுது தொழுது குதித்தவன் பின்பு யாதும் பேசாமல் ஏதும் அசையாமல் சித்திரப் பாவை போல் செயலிழந்து நின்றுள்ளான். அண்ணன் வரவை எண்ணி ஆனந்த பூரணனாய் அமைந்திருந்தவன் பின்பு கண்ணைத் திறந்து பார்த்தான்; வந்த அண்ணலை நோக்கி வார்த்தைகள் ஆட நேர்ந்தான். “ஐயா! சோகமாய்ச் சாக நேர்ந்த என்னை வேகமாய் வந்து நிறுத்தி ஏகமான இன்பநலனை அருளியுள்ளாய்; ஆழிகாட்டி என் வாழ்வை நீட்டியருளிய நீர் யார்? உமது பேர் என்ன? யாவும் தெளிவாத் தெரிய விரும்புகிறேன் என்று பரிவோடு கூறினான்.

பரதன் வினவியது.

அத்திறத்து ஆண்டகை அனுமன் தன்னைநீ
எத்திறத்தாய் எமக்கு இயம்பி ஈதியால்
முத்திறத் தவருளே ஒருவன் மூர்த்திவேறு
ஒத்திருந் தாய்என உணர்கின் றேன்என்றான். (1)

மறையவர் வடிவுகொண்டு அணுக வந்தனை
இறைவரின் ஒருவன்என்று எண்ணு கின்றனன்
துறைஎனக்கு யாதுஎனச் சொல்லு சொல் என்றான்
அறைகழல் அனுமனும் அறியக் கூறுவான்: (2)

அதிசய நிலையில் வந்து ஆறுதல் புரிந்து ஆருயிர் தந்துள்ள மாருதியை நோக்கிப் பரதன் கூறியுள்ள மொழிகளை இங்கே விழியூன்றி வியந்து காண்கின்றோம்; நிலைமைகளை ஓர்ந்து நோக்கி நிகழ்ச்சிகளைக் கூர்ந்து உணர்ந்து கொள்ளுகின்றோம்.

வானவீதியில் வாவி வரும்போது அனுமான் இயல்பான வடிவோடே வந்தான்; தீயில் பாய்ந்து வெளியே தாவி எழுந்து

பரதன் எதிரே நிற்கும் பொழுது ஒரு வேதியன் போலவே மேவி நின்றுள்ளான். நிலைமை அவனது தலைமையை விளக்கியுளது.

மறையவர் வடிவு கொண்டு அணுக வந்தனை என்றதனால் அங்கு அணுகுமுன் அவன் வேறு உருவில் மருவியிருந்துள்ளமை தெரிய வந்தது. அவனுடைய வரவும் விரைவும் உரமும் உதவியும் ஊக்கமும் உணர் வொளிகளோடு உலாவி மிளிர்கின்றன.

அரிய பல அதிசய சித்திகள் உடையவன் ஆதலால் கருதிய படியெல்லாம் உருவங்களை எடுத்துக் காரியங்களை அனுமான் முடித்து வருகிறான் அவனுடைய உரையும் செயலும் வியனு விளங்கி நின்றமையால் பரதன் வியந்து புகழ்ந்து நயந்து வினவினான். புதிய காட்சியும் மாட்சியும் அதிசய வியப்பாய் நீண்டன.

சொல்லு சொல் என்னும் அடுக்கு அவனது நிலைமையை அறிவதில் இக்குலமகனுக்கு உள்ள ஆவலை விளக்கி நின்றது. தனது பிறப்பு இருப்பு பேர் ஊர் முதலிய வகைகளை எல்லாம் அறிய விரும்பிப் பரதன் பிரியமா வினவவே அனுமான் நயமாச் சுருக்கி உரைத்தான். உரைகளுள் உணர்வுகள் ஒளி வீசி நின்றன.

காற்றினுக்கு அரசன்பால் கவிக்குலத்துளாள்
நோற்றனள் வயிற்றின்வந்து உதித்து நும்முனுற்கு
ஏற்றிலா அடித்தொழில் ஏவ லாளனேன்
மாற்றினன் உருவொரு குரங்கு மன்னயான்.

தன்னைக் குறித்துப் பரதன் கேட்ட கேள்விக்கு அனுமான் இன்னவாறு பதில் கூறியிருக்கிறான். உரிய பதில் மொழியில் அரிய மதி நலங்கள் மருவியுள்ளன. தனது பிறப்பு முறையைத் துலக்கியருளியதில் குறிப்புகள் பல கூர்ந்து சிந்திக்க வந்தன.

"என் தந்தை வாயுபகவான்; தாய் பெயர் அஞ்சனாதேவி; வானர மரபினள்; அரிய பல விரத நோன்புகள் புரிந்து என்னை உரிமையாப் பெற்றுள்ளாள்; அதனால் எனக்கு ஆஞ்சனேயன் என்று ஒரு பேர் அமைந்தது. பருவம் அடைந்தபின் இராமபிரானுக்கு அடிமையாய் ஏவல் புரியும் பாக்கியத்தைப் பெற்றேன்; அரசர் பெரும! உண்மையில் நான் ஒரு குரங்கு; எனது இயல்பான உருவத்தை மாற்றியே ஈண்டு இவ்வாறு வேறுவடிவில் மேவி வந்துள்ளேன்" என்று இங்ஙனம் மாருதி கூறி நின்றான்.

தந்தையை முந்துற மொழிந்தது, அவனது தெய்வீக நிலையையும் திவ்விய ஆற்றலையும் சிந்தனை செய்து தெளியவந்தது. சீவகோடிகளின் சீவாதாரமாய் அவன் மேவி யிருக்கின்றான்.

உணவு, நீர், காற்று என்னும் இம் மூன்றும் உயிர்களின் ஊட்டமாய் அமைந்து யாண்டும் அவற்றைப் பேணி வருகின்றன. உணவும் நீரும் இன்றிச் சில நாள் உயிர் வாழலாம்; காற்று இல்லை ஆனால் ஒரு கணமும் எவரும் உயிர் வாழ முடியாது; ஆகவே இதன் உபகார நிலையையும் உயர் தலைமையையும் யாவரும் யாண்டும் ஓர்ந்து உணர்ந்து தெளிந்து கொள்ளலாம்.

"மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே"

என இதன் இனிமையையும் உதவியையும் ஞானிகளும் வியந்து புகழ்ந்துள்ளனர் யாதொரு பேதமும் பாராமல் எங்கும் பரந்து எல்லார்க்கும் உரிமையாய் இதம் புரிந்து வருதலால் காற்று பேருபகாரியாய்ப் பெருமை பெற்று யாவரும் போற்றநின்றது

"வளி என மேவி அளியனை ஆண்டாய்!" என்று இறைவனுடைய கருணையும் காப்பும் இவ்வாறு புகழ வந்துள்ளமையால் காற்றின் அருளும் ஆதரவும் அரிய தெய்வீகமும் அறிய நின்றன

Thy favours are but like the wind,
That kisseth everything it meets. [Ayton]

"தான் தோய்ந்த பொருள்களை எல்லாம் இன்புறுத்தி வருகிற காற்றைப் போலவே உன்னுடைய அன்பான ஆதரவுகள் அமைந்துள்ளன" என்னும் இது இங்கே நன்கு அறிய வுரியது.

யாதொரு கைம்மாறும் கருதாமல் மாரி போல் வாயுவும் வையம் வாழ உதவு புரிந்து வருகிறது. அத்தகைய பேருபகாரியான மாருதத்தின் மைந்தன் ஆதலால் மாருதியும் ஈண்டு வந்து ஆருயிர் உதவி அருள் புரிந்துள்ளான். அந்த உதவியின் உயர்வான உயிர் நிலையை ஓர்ந்து தெளியக் காற்றினுக்கு அரசன்பால் வந்து உதித்தேன் என்று தன் தோற்றத்தின் ஏற்றத்தைத் துலக்கி யருளினான். பிறப்பின் பெருமையை இவ்வாறு குறித்து உரைத்தவன் பிறந்து வளர்ந்துள்ளதையும் தெளிவுறுத்தினான்.

மன்ன! யான் ஒரு குரங்கு.

தன்னை இன்னவாறு பணிவோடு நன்னயமா நவின்றுள்ளான்.

இந்த உரைகளைக் கேட்டதும் பரதன் பெரிதும் வியந்தான். வானவீதியில் வாவி வந்ததும், மூண்டு நீண்ட தீயை மாண்டு மடிய அவித்ததும், எதிரே வந்து வணங்கி நின்று முதிர் பேரன் போடு மொழிகள் ஆடுவதும், அதிசய வேலைகளாய் விரிந்து நின்றன. அந்நிலையில் உரைகளில் பொதிந்துள்ள பொருள்களின் சுவைகளை உணர்ந்து மகிழ்ந்து உரிமையோடு புகழ்ந்து நின்றான்.

அதிசய உருவம்.

தனது நிலைமை நீர்மைகளை வியந்து பரதன் மகிழ்ந்து நிற்ப தைக் கண்டதும் அனுமான் விசுவரூபம் கொண்டு விளங்கி நின்றான். அந்த நிலையை அங்கு நின்றவர் அனைவரும் வியந்து நோக்கி அதிசய பரவசராய்த் துதிசெய்து தொழுதார். ஏதோ ஒரு தெய்வமே இவ்வாறு ஈண்டு மேவிவந்து திவ்விய உருவோடு திருவிளையாடல் புரிகிறது என எல்லாரும் உள்ளம் களித்து வந்தாலும் அச்சமும் திகிலும் மருவி அலமந்து நின்றனர்.

அடித்தொழில் நாயினேன் அற்ப யாக்கையைக்
கடித்தடந் தாமரைக் கண்ணின் நோக்கெனப்
பிடித்தபொய் உருவினைப் பெயர்த்து நீக்கினன்
முடித்தலம் வானவர் நோக்கின் முன்னுவான். (1)

வெஞ்சிலை இருவரும் விரிஞ்சன் மைந்தனும்
எஞ்சலில் அதிசயம் இதுவென்று எண்ணினர்
துஞ்சிலது ஆயினும் சேனை துண்என
அஞ்சினது அஞ்சனை சிறுவன் ஆக்கையால். [2]

அனுமானுடைய அற்புத நிலையைக் கண்டு யாவரும் மறுகி மயங்கி வெருவி வியந்துள்ளமையை இவை விளக்கியுள்ளன. விஞ்சைகள் பலவும் நன்கு தெரிந்தவன் ஆதலால் கருதியபடி யெல்லாம் உருவங்களை மருவிக் காரியங்களை விளைத்து வருகிறான். செய்துவரும் வினையாண்மைகள் திவ்விய மேன்மைகளாய்ச் சிறந்து எவ்வழியும் எவரும் வியந்து புகழ வருகின்றன.

அரிய பெரிய விசுவரூபக் காட்சிகளை மூன்று பேர் முன்னிலையில் இத்தோன்றல் நன்னயமாக் காட்டியிருக்கிறான். கிட்கிந்தை மலைச்சாரலில் இராமன் எதிரே முதலில் காட்டினான்; பின்பு இலங்கைச் சிறையில் கலங்கி நின்ற சீதை எதிரே ஐயம் தீர மெய்யுருவம் காட்டி அருள் புரிந்தான்; இங்கே திருவயோத்தி

யருகே நந்திக் கிராமத்தில் பரதன் கண் முன் பேருருவம் கொண்டு நின்று ஆறுதல் செய்து தேறுதல் புரிந்துள்ளான்.

இந்த அற்புத நிலையைக் கண்டு பெருமகிழ்ச்சி யடைந்த பரதன் உருவத்தைச் சுருக்கி யருளும்படி வேண்டினான்; வேண்டவே அந்த ஆண்டகையும் உடனே அடங்கிச் சிறிய உருவில் மருவிப் பழைய நிலையில் கிழமை தோய்ந்து நின்றான்.

அவனுடைய நிலைமையும் தலைமையும் நீர்மையும் சீர்மையும் அளவிடலரிய நிலையில் ஓங்கி உலாவி வருகின்றன. அவை காவிய ஓவியங்களாய் நீண்டு நிலவிவரினும் யாவரும் நேரே ஓவிய உருவங்களா உணர்ந்து மகிழ்ந்து வருகின்றனர். அதிசய மேதையின் செயல் இயல்கள் எவ்வழியும் துதிசெய்து தொழும் படிதோன்றிவருதலால் ஆன்றதெய்வீகங்கள் துலங்கிநிற்கின்றன

இராம சரிதம் சேமமாய்ச் சிறந்துவர இவ்வீரன் யாண்டும் மூண்டு நேம நியமங்களோடு உழைத்து வருகிறான்; அவ் வரவு நிலையை உணர்ந்து வருந்தோறும் அரியஉவகைசுரந்து வருகிறது.

செவிக்குத் தேன்என இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன். (சுந்தர, ஊர்தேடு. 132)

என நம் கவிநாயகன் அனுமானுக்கு இவ்வாறு ஒரு இனிய பேரைச் சூட்டியிருக்கிறார். இந்தப் பெயருக்கு உரிய மாட்சியை இடங்கள்தோறும் காட்சியாக் காட்டி வந்திருப்பினும் ஈண்டு மாருதி நீண்ட சீரோடு நேரே தெளிவாத் துலக்கி யிருக்கிறான்.

விரைந்து வந்து இவ் வீரன் எரியைக் கரி ஆக்கவில்லை ஆனால் பரதன் தீயில் பாய்ந்து மாய்ந்து போவான்; அவ்வாறு அவன் இறந்து போனால் இராமன் நிலை என்னும்? அவனுடைய புகழ் யாதாம்? ஓவிய சரிதம் யாவும் வேறாய் மாறி விபரீதமாய் முடியும். அவ்வகையான அவலங்கள் யாதும் நேராதபடி நேரே வந்து செவ்வையாச் சீர் செய்துள்ளான். இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன் எனத் தனக்கு நேர்ந்த பேரைச் சீரோடு துலக்கிச் செவிக்கு இனிய புகழோடு அனுமான் இங்கே புவிக்கு இனியனாய்த் துலங்கி நிற்கின்றான்.

தன் உயிரைத் தனக்கு அளித்துத் தனது செவிக்கு இராமன் வருகை ஆகிய இன்னமுதத்தை இனிதுவார்த்துப் பேரின்பங்களை

விளைத்து நிற்கும் பேருபகாரியான அனுமானைப் பார்த்துப் பார்த்துப் பரதன் பரவசம் அடைந்தான். அந்தப் பரவசநிலையில் அரியபல பொருள்களை அவனுக்கு வெகுமதியாகவாரிவீசினான்.

சுருக்கிய உருவனைத் தொழுது முன்நின்ற
அருக்கன்மா ணவகனுக்கு ஐயன் அன்பினால்
பொருக்கென நிதியமும் புனைபொற் பூண்களின்
வருக்கமும் வரம்பில நனிவழங்கினான். [1]

கோவொடு தூசுநற் குலமணிக் குலம்
மாவொடு பரிக்குலம் வாவு தேரினம்
தாவுநீர் உடுத்தநல் தரணி தன்னுடன்
ஏவரும் சிலைவலான் யாவும் நல்கினான். (2)

தனது ஆவியை நல்கி அண்ணன் வருகிறான் என்ற சுப சோபனங்களைச் சொன்னான் என்னும் உவகைப் பெருக்கால் பரதன் இவ்வாறு மாருதிக்குச் சன்மானங்களை வாரி வழங்கினான். யானை தேர் குதிரை முதலியன யாவும் வரிசையா வழங்கவே மாருதி உள்ளேயே மெள்ள நகைத்தான். யாதொன்றும் வேண்டாத அரிய ஒரு துறவிக்குப் பெரிய ஓர் அரசன் பெரும் பொருள்களை அள்ளிக் கொடுத்தால் அவன் உள்ளம் எவ்வாறு எள்ளி நிற்குமோ அவ்வாறே அனுமான் அவ்வமையம் அமைந்து நின்றான். ஆசையற்ற நிலை அதிசயதேசா நிலவியது.

தன் அகத்தில் பொங்கி எழுந்த ஆனந்தக் களிப்பால் பரதன் தானமாக நல்கிய பொருள்களை எல்லாம் பார்த்துச் சிரித்த அனுமான் என் ஆண்டவனான இராமபிரானுக்கே இவை யாவும் உரியன என்று கூறி உவகை மீக்கூர்ந்து நின்றான். வேண்டாமை என்னும் விழுமிய செல்வத்தை எவ்வழியும் தனியுரிமையாக உடைய அனுமான் யாண்டும் இராமன் ஒருவனையே வேண்டும் பொருளாக விழைந்து நீண்ட ஆவலோடு பேணி வருகின்றான்.

அந்த உத்தமனுடைய சித்த சுத்தியையும் இராமபத்தியையும் உய்த்துணர்ந்த பரதன் பின்பு சத்துருக்கனை உவந்து நோக்கினான்: "தம்பி! நம் அண்ணா வருகிறார்; அந்தப் புண்ணியமூர்த்தியைக் கண்ணியமா நாம் எதிர்கொண்டு அழைக்க வேண்டும்; அதற்கு வேண்டிய வகைகளை எல்லாம் விரைந்து செய்தருளுக" என்று விழைந்து மொழிந்தான். இளையவனிடம் உளம்மிக

மகிழ்ந்து உரைத்த மொழிகள் உவகை ஒளிகளாய் வெளியே விரிந்து வந்தன. நம்பியைக் காண அவாவித் தம்பியை ஏவினன்.

பரதன் பணிமொழி.

இளவலை அண்ணலுக்கு எதிர்கொள் என்றுநம்
வளைமதில் அயோத்தியில் வாழும் மாக்களைக்
கிளையொடும் ஏகெனக் கிளத்தி எங்கணும்
அளையொலி முரசினம் அறைவிப் பாய்என்ருன். [1]

தோரணம் நட்டுநற் றுகில்பொதிந்துநற்
பூரணப் பொற்குடம் பொலிய வைத்துநீள்
வாரணம் இவுளிதேர் வரிசை தான்வழாச்
சீரணி அணிகெனச் செப்பு வாய்என்ருன். (2)

பரத்துவன் உறைவிடத் தளவும் பைம்பொனீள்
சிரத்தொகை மதிற்புறத் திறுதி சேர்தர
வரத்தகு தாளமென் பந்தர் வைத்துவான்
புரத்தையும் புதுக்குவ புகறி போய் என்ருன். (3)

என்றலும் அவன்அடி இறைஞ்சி எய்தியக்
குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினன்
நன்றுணர் கேள்வியன் நவையில் செய்கையன்
தன்றுணைச் சுமந்திரற்கு அறியச் சாற்றினன். (4)

அவ்வுரை கேட்டலும் அறிவின் வேலையான்
கவ்வையில் அன்பினில் களிக்கும் சிந்தையான்
வெவ்வெயில் எறிமணி வீதி எங்கணும்
எவ்வமின் றறைபறை எற்று கென்றிட. (5)

வானையும் திசையையும் கடந்த வான்புகழ்க்
கோனையின்று எதிர்கொள்வான் கோலமாநகர்த்
தானையும் அரசரும் எழுக தானென
யானையின் வள்ளுவன் முரசம் எற்றினன். (6)

இராமபிரானை எதிர்கொண்டு அழைப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களை விரைந்து செய்யும்படி தம்பி சத்துருக்கனிடம் பரதன் கூறவே அவன் பெருமகிழ்ச்சியுடன் அதிவேகமாய் வேலை செய்துள்ளான். செயல் முறைகள் சிறந்து நிகழ்ந்தன.

தன்பால் அன்பால் தன் தமையன் சொன்ன பணியைக் கேட்டதும் அத்தம்பி யாவும் செய்யுமாறு அமைச்சனிடம் கூறி

யாண்டும் வேண்டிய காரியங்களை வீரியமாய்த் தூண்டி நின்றான்.

தன் துணைச் சுமந்திரன்.

தலைமையான மந்திரியை இந்தவாறு இங்கே குறித்திருத்தலால் சத்துருக்கனுக்குத் துணையாய் நின்று அரச காரியங்களை யாண்டும் செவ்வையாய் அவன் ஆற்றி வந்துள்ளமை அறிய வந்தது. உரியவனை உரிமையோடு உறவா உணர்ந்து கொள்கிறோம். கரும நியதி அரசு நெறியில் முறையே மருவியுளது.

அறிவின் வேலையான் என்று சுமந்திரனை ஈண்டு விளக்கியது அதிசய மேதையாய் அவன் தொழில் செய்து வந்துள்ளமை தெரிய. நீண்டகாலம் உரிமையாப் பாதுகாத்து வந்த பெரிய சக்கரவர்த்தி மாண்டு போனான்; தலைமகன் முடி துறந்து கானகம் போனான்; பரதன் தனியே ஒதுங்கித் தவ நிலையில் இருந்தான். அந்த அவல நிலையில் இருந்த நாட்டை யாதொரு கவலையும் கதுவாதபடி இளவலை வளமையா வைத்துக்கொண்டு யாண்டும் ஆட்சியை மாட்சியா நடத்தி வந்தான் ஆதலால் அவனுடைய மதிமாண்பை மதித்துணரக் கவி இங்கே அதிநயமாக் காட்டியருளினர். அறிவின் காட்சி ஆட்சியின் மாட்சியாயது.

ஆழமாய்ப் பரந்து விரிந்து யாவருக்கும் பயன் புரிந்துவந்த அறிவு ஆதலால் அது கடல் என்று காண வந்தது. வேலை = கரையின்றி விரிந்த பெருங்கடல். வேலை அனைய அரச வேலைகளைத் தனது அறிவினாலேயே வரிசையோடு சாதுரியமாய்ச் செய்து வந்தான். அந்த வரவு நிலையும் உறவா உணர வந்தது.

உடலால் உழைக்கும் உழைப்பினும் அறிவால் உழைக்கும் உழைப்பு அதிசயமுடையது. ஒரு அறிவாளி நெறியே நின்று சரியானபடி வேலை செய்து வந்துள்ளமையால் தேச மக்களுடைய வாழ்வுகள் யாவும் வளமாய் நடந்து நலமாவந்துள்ளன.

வழி முறையே கெழுமி எழுந்த விழுமிய நீர்மையாளன் ஆதலால் இந்த மந்திரியினுடைய கூர்மையான அறிவு எவ்வழியும் சீர்மையாய்ச் செயல் புரிந்து நேர்மையோடு நிலவி வந்தது. நல்ல பண்பாடுடன் கலந்தபொழுதான் அறிவு நலமாய் உயர்ந்து திகழ்கிறது. சிறந்த நீதி உணர்வும், உயர்ந்த விநய சீலமும் நிறைந்த உலக அனுபவமும் இவனிடம் ஒருங்கே உறைந்திருந்தன.

Good - breeding is the blossom of good - sense.
(Edward young)

நல்ல அறிவின் நறுமலராய் நயமான சீலம் விளைந்துள்ளது என்னும் இது இங்கே அறியவுரியது. சிறந்த அறிவும் உயர்ந்த பண்பும் ஒருங்கே அமைந்தபோதுதான் மனிதன்மேலான பெருந் தகையாளனாய் விளங்கி நிற்கின்றான். அந்த நிலையிலுள்ள இந்த மதிமானிடம் இளையவன் கூறியவுடனே எல்லா வேலைகளும் ஒல்லையில் நடந்தன. நகரம் முழுவதும் அழகொளி திகழ அலங் காரங்களாயின. மங்கல தோரணங்கள் வீதிகள் எங்கணும் விரிந்து விளங்கின. நகர மாந்தர் எல்லாரும் இராமபிரானைக் காண விழைந்து வேணவாவோடு விரைந்து நின்றனர்.

முரசுகள் முழங்கின.

சக்கரவர்த்தித் திருமகனை மிக்க மரியாதைகளோடு எதிர் கொண்டு அழைத்தற்குத் தக்க ஆயத்தங்களுடன் யாவரும் புறப்பட வேண்டும் என்று பறைகள் அறைந்து துறைகள் தோறும் முறையே அறிவித்தனர். அந்த அறிவிப்பு ஒலிகளைக் கேட்டதும் எல்லாருடைய உள்ளங்களிலும் பேரின்ப வெள்ளங் கள் பொங்கி ஆர்வம் மீதூர்ந்த அன்புரிமைகள் ஓங்கி எழுந்தன.

முரசொலி கேட்டலும் முழங்கு மாநகர்
அரசரும் மாந்தரும் அந்த ணாளரும்
கரைசெயல் அரியதோர் உவகை கைதரத்
திரைசெறி கடல்என எழுந்து சென்றதால். (1)

அனகனை எதிர்கொள்என்று அறைந்த பேரிநற்
கனகம் நல்கூர்ந்தவன் கைப்பட் டென்னவும
சனகனது ஊர்க்கென முன்னம் சாற்றிய
வணகடிப் பேரியும் ஒத்த வாமரோ. (2)

அறுபதி னாயிரம் அக்குரோணி என்று
இறுதிசெய் சேனையும் ஏனை வேந்தரும்
செறிநகர் மாந்தரும் தெரிவை மார்களும்
உறுபொருள் எதிர்ந்தென உவந்து போயினர். (3)

அன்னையர் மூவரும் அமரர் போற்றிடப்
பொன்னினற் சிவிகையின் எழுந்து போயபின்
தன்னிகர் முனிவரும் தமரும் சூழ்தர
மன்னவன் மாருதி மலர்க்கை பற்றுறு. (4)

திருவடி இரண்டுமே செம்பொன் மௌலியா
இருபுறம் சாமரம் இரட்ட ஏழ்கடல்
வெருவரு முழக்கென வேழம் ஆர்த்தெழப்
பொருவரு வெண்குடை நிழற்றப் போயினான். [5]

இங்கே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை உவந்து காணுகிறோம். இராமனை எதிர்கொண்டு காணவேண்டும் என்ற ஆவலால் குடி சனங்கள் யாவரும் உள்ளங்கள் களித்து வெள்ளங்கள்போல் வெளியேறியுள்ளனர். சேனைத் திரள்கள் போர்க் கருவிகளை ஏந்தி வீர அலங்காரங்களோடு வீறுடன் நடந்துள்ளன. மாந்தர் கள் எழுந்த பின் வேந்தர்கள் முறையுடன் விரைந்திருக்கின்ற னர். மந்திரிகளும் தந்திரிகளும் பிரதானிகளும் தளபதிகளும் உளம் மிக மகிழ்ந்து வளமையோடு வந்துள்ளனர். அதன் பின் னர் அரச குடும்பம் வரிசையோடு முறையே வர நேர்ந்தது.

கோசலைத் தாய் முதலிய மூவரும் தனித் தனியே உயர்ந்த தங்கச் சிவிகைகளில் எழுந்தருளினர். தான் பெற்ற பிள்ளையை நீண்டகாலம் பிரிந்து பரிந்து மறுகியிருந்த அந்தப் பேரன்புத் தாய் நேரே கண்டு களிக்க விழைந்து ஆர்வம் மீதூர்ந்து சிவிகையில் ஏறும்போது யாவரும் குவி கையராய் நின்று உவகை மீதூர்ந்து தொழுதார். வையமும்வானமும் கண்டு களிக் கத் தந்த அந்தமகனை அம் மாதா ஆதரவோடு காண வந்தது அமரரும் கண்டு மகிழும் ஓர் ஆனந்தக் காட்சியாய் நின்றது.

அரண்மனையிலிருந்து தாய்மார்கள் எழுந்தருளிய பின் பரதன் புறப்பட்டான். இராமனுடைய பாதுகைகள் இரண் டையும் தலை மேல் வைத்துக் கொண்டு தொழுதகையனாய் உழுவலன்போடு அக் குலமகன் வந்தது உலக உள்ளங்களை உருக்கி நின்றது. தம்பி பின்பு வர அனுமான் மருங்கு நெருங்கி அருகே வர அப்பெருமான் உரிமையோடு நடந்து வந்தான்.

எல்லாருடைய உள்ளங்களிலும் எல்லை மீறிய மகிழ்ச்சி மண்டி நின்றமையால் எங்கும் சனத்திரள்கள் பொங்கி வந்தன.

கடல் என எழுந்து சென்றது.

இராமனைக் காணவந்த மக்கள் கூட்டத்தை இது இங்ஙனம் காட்டியுள்ளது. திரள் திரளாகத் தொடர்ந்து அடர்ந்து வந்தன ஆதலால் திரை செறிகடல் என அதன் நிலை தெரிய உரைத்தார்.

அனகனை என இராமனை இங்கே இவ்வாறு குறித்திருக்கிருர்.

பாவம் யாதும் படியாத புனிதமான புண்ணியவான் என்னும் பொருளையுடைய இப்பேரை இப்பொழுது சீரோடு கூறியது சீர்மை நீர்மைகளைக் கூர்ந்து கண்டு தேர்ந்துதெளியவந்தது.

பல்லாயிரம் கோடி நிருதர்களைக் கொன்று அரக்கர் குலத்தை அடியோடு கருவறுத்துத் திண்ணிய வீரனு வருகிற பொரு திறலாளனைப் புண்ணியமூர்த்தி என்றது எண்ணியுணர வுரியது.

பாவங்கள் படியாதபடி பாவிகளை அழித்து ஒழித்துப் புண்ணியங்களை வளர்த்துக் கோதண்ட வீரன் யாண்டும் நீதியோடு நிலவி வருகிருன். அவன் ஆற்றி வரும் கருமங்களில் அரிய பல மருமங்கள் மருவியுள்ளன. அந்தக் கருமத்தின் மருமத்தையும் தருமத்தையும் கருதியுணர அனகன் என்னும்பேர் ஈண்டு மருவி வந்தது. புனித நாமம் இனிமை தெரிய நேர்ந்தது.

தீயோர் அழிந்து ஒழிய நல்லோர் உவந்து வாழவே திருமால் இராமனுய் ஒரு வில்லோடு ஈண்டு மூண்டு வந்துள்ளான் என்று காவியம் முழுவதிலும் இடையிடையே காட்டி வந்துள்ளதையே ஈண்டு இறுதியிலும் உறுதியாக் காண நீட்டினுர். தமது காவிய நாயகனைத் திவ்விய சோதி என்றே எவ்வழியும் கவி செவ்வையாக் கருதி வருகிருர். தம்கருத்தைத்திருத்தமாவிளக்கியுள்ளார்.

தருமம் சத்தியம் கருணை என்னும் இந்த மூன்று நீர்மைகளும் கடவுளின் இயல்புகள். இந்தக் குணநலங்களை ஓரளவு மருவியுள்ள சீவர்களிடமே இறைவனுடைய அருள் உரிமையாய் வருகிறது. இவை இல்லாதவர்கள் பால் அவனது நல்ல பிரியம் நில்லாமல் நீங்கி விடுகிறது. நீங்கவே அந்த உயிர்கள் துயர்களாய்த் துடித்து மயல்களில் ஆழ்ந்து மடிகின்றன.

நல்ல குணவான்களை நயந்து ஆதரிப்பதும், பொல்லாத குற்றவாளிகளைக் கடிந்து தண்டிப்பதும் நீதிபதிகளுடைய கடமைகளாகின்றன. தீயவர்களிடமும் கருணை காட்டினுல் அவன் தூயநீதிமான் ஆகான்; தீய அநீதியாளனே யாவான்.

மனிதனே இவ்வாறு ஆனல் கடவுள் எவ்வாறு செவ்வையாய் இருப்பார்? என்பதை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். தெய்வ நீதி எவ்வழியும் திவ்விய சோதியாயுள்ளது.

A God all mercy, were a god unjust. (young)

எல்லாரிடமும் கருணை காட்டினால் அந்தக் கடவுள் அநீதியுடையதாம் என்னும் இது இங்கே நன்கு அறிய வுரியது.

தரும நீதிகளோடு தழுவியே இராமனுடைய கருமங்கள் யாண்டும் நிகழ்ந்து வருகின்றன. இக்கோமகன் வில்லும் வீரமும் சொல்லும் செயலும் எவ்வழியும் அல்லவைகளை நீக்கி நல்லவைகளையே ஆக்கி வருவதைத் தேவர் முதல் யாவரும் நோக்கி வருகின்றனர். புண்ணியம் புரியவே எண்ணி இவன் எய்தியுளன்.

அரிய பெரிய அதிசயங்களை ஆற்றி உலகம் துதிசெய்து தொழுது புகழ விழுமிய வெற்றியோடு வந்துள்ள அந்த அனகனைக் கண்டு மகிழத் தேச மக்கள் எல்லாரும் ஆசை மீதூர்ந்து திரண்டு எழுந்து தென் திசையை நோக்கி நடந்து வந்தனர். மாந்தர் முன்னே செல்ல வேந்தன் பின்னே வந்தான்.

திருவடி இரண்டுமே செம்பொன் மௌலி.

பரதன் வந்துள்ள கோலத்தை இது வரைந்து காட்டியுள்ளது. இராமனுடைய திருவடி தோய்ந்த பாதுகைகளைத் தன் தலைமேல் வைத்துக் கொண்டு இக் குலமகன் வந்தது அத் தலைமகன் பால் பூண்டுள்ள நீண்ட அன்பின் நிலைமையை நேரே விளக்கி நின்றது. பத்திப் பரவசம் பார் அறிய நேர்ந்தது.

மரத்தால் செய்துள்ள அந்த மிதியடிகளை அரிய மணி மகுடமாக் கருதி உரிமையோடு போற்றி வந்துள்ளான். அந்த உண்மை செம்பொன்மௌலி என்றதனால் நன்கு தெரிய வந்தது.

இராமனது திருவுருவையே கருதி உருகி வருகிற பரதன் அவனுடைய மிதியடியைத் தலையில் தாங்கி உவகையில் ஓங்கி வந்தான். அனுமானுடைய இடது கையைத் தனது வலக்கரத்தில் பிடித்துக் கொண்டே வழி நடந்தான். சேனைகள் யாவும் சிந்தை களித்து முந்துற நடந்து போக இந்த இருவரும் பல வகையான உரைகளை நலமாப் பேசி வந்தனர். தென்திசை நோக்கிச் சிறிது தூரம் வரவே பொழுதும் அடைந்தது.

எல்லவன் மறைந்தனன் என்னை ஆளுடை
வில்லியை எதிர்கொளப் பரதன் மீச்செல்வான்
அல்லியங் கமலமே அனைய தாள்களில்
கல்லதர் சுடும்தன கதிரின் என்னவே,

இராமபிரானை எதிர் கொண்டு காண முதிர் பேரன் போடு பரதன் வருகிறான்; அவனுடைய மெல்லிய பாதங்கள் அல்லி யங் கமலங்கள் அனையன; சுடு வெயில் படின் அவை வருந்தும்; அவ்வாறு வருந்தாமல் சுகமாய் எளிதே நடந்து போக வேண்டும் என்று கருதிச் சூரியன் விரைந்து மறைந்து போயினான் என வரைந்து கூறியுள்ள இது ஈண்டு வியந்து நயந்து காண வந்தது.

பகல் கழிவதும், இரவு வருவதும் இயல்பான நிகழ்வுகள்; காலம் சுழன்று வருகிற அந்த நிலையைக் கவி இந்தவாறு சரித நிகழ்ச்சியோடு கலந்து சுவையா விளக்கியிருக்கிறார்.

என்னை ஆளுடை வில்லி என இராமனை இவ்வளவு உரிமையோடு சொல்லியுள்ளமையால் அந்தப் பெருமானிடம் இந்தக் கவிஞர்பிரான் கொண்டுள்ள பேரன்பு நிலையை ஓரளவு நாம் உணர்ந்து கொள்ளுகிறோம். உரிய ஆண்டவனிடம் பெரிய பிரியம் நீண்டுள்ளது; அந்த அன்புநிலை பண்பு சுரந்து திகழ்கிறது.

உள்ளத்தில் உறைந்துள்ள அன்பு உரையில் விரைந்து துள்ளி வருகிறது. தாம் கருதிய கருத்துக்களையும் கற்பனைகளையும் காவியங்களில் ஓவிய உருவங்களாக் கவிஞர் வெளியாக்கி வருவது உணர்வின் காட்சிகளா எவ்வழியும் ஒளிமிகுந்து வருகின்றது.

எல்லவன் = சூரியன். ஒளிசெய்து வருபவன் என்னும் பொருளையுடைய பேரை ஈண்டு வெளிசெய்தருளினார். பரதன் சூரிய குலத்தோன்றல் ஆதலால் அவன் இனிதே வழி நடந்து செல்ல இவன் அளி புரிந்துள்ளான். தன் கருத்தைக் காரணத்தோடு பூரணமாச் சூரியன் மேல் ஏற்றிச் சொல்லியிருத்தலால் ஏதுத்தற்குறிப்பு அணி என்னும் அலங்காரமாய் இது இங்கே துலங்கி நின்றது. சொல்லும் பொருளும் நல்ல ஒளிகளுடையன.

சிறந்த கலை அறிவு உயர்ந்த நிலையில் சுவை சுரந்து வந்துள்ளது. காவியக் காட்சி சீவியங்களை விளக்கி வருவது வியப்புகளை விளைத்து வருகிறது. உணர்ச்சி நலங்கள் மனித சமுதாயத்துக்கு உயர்ச்சி தருவதால் அவற்றைக் கவிகள் உரிமையோடு உரைத்தருளுகின்றனர். நல்ல நிலைகளை நயமாச் சொல்லி விடுகின்றார்.

Poetry is the utterance of deep and heart-felt truth.

(Chapin)

உள்ளம் உணர்ந்த நுண்மையான உண்மையை உலகம் அறியக் கவி உரைத்து விடுகிறது என்னும் இது இங்கே உணரவுரியது.

மானிட மருமங்களையும் தருமங்களையும் இனிது விளக்கி வருதலால் கவிகள் ஞான ஒளிகளாய் நலம் பல புரிந்து வருகின்றன. அரிய மதிநலங்களைக் கவிகள் எளிதே அருளுகின்றன.

பரிதியும் பரதனிடம் பரிவு காட்டியுள்ளமையால் அந்த வரதனுடைய மகிமையை உணர்ந்து கொள்ளுகிறோம். பகல் மறைந்தது; இரவு வந்தது; வரவே வழிநடை சுகமாயிருந்தது. குளிர்ந்த பொழுதில் உரையாடலுடன் உவந்து நடந்து சென்றனர்.

வழிநடையில் விளைந்தது.

அவ்வாறு செல்லுங்கால் இராமன் வனவாசம் போனபின் நடந்த வரலாறுகளை எல்லாம் முறையே சொல்லும் படி பரதன் அனுமானிடம் வேண்டினன். அவ் வீர நாயகனுடைய குண நலங்களையும் வீரப்பிரதாபங்களையும் எவ்வழியும் கருதி மகிழ்ந்து வருகிற மாருதி அவ்வழி நடையில் ஆர்வம் மீதூர்ந்து யாவும் கூற நேர்ந்தான். காகுத்தன் கதை காதுக்கு அமுதமாய் வந்தது.

முன்பு சித்திர கூட மலையிலிருந்து பரதனை அயோத்திக்கு அனுப்பி விட்டுத் தென்திசை நோக்கி வந்த பின்பு இராமபிரானுக்கு நேர்ந்த நிலைகளை எல்லாம் முறையே தெளிவாச் சொல்லத் தொடங்கினன். மொழிகள் உவகை ஒளிகளாய் ஓங்கி வந்தன.

இராம சரிதம்.

தண்டகவனம் புகுந்தது, அங்கே முனிவர்கள் வந்து கண்டது, அரக்கர்கள் செய்து வருகிற அல்லல்களைச் சொல்லி அவர் அடைக்கலம் அடைந்தது, அவர்களுக்கு ஆறுதல் கூறி ஒல்லையில் நல்லது செய்வதாக இவ்வீரன் உறுதிமொழி தந்தது, அத்திரி சுதீக்கண்ணர் முதலிய ஞானயோகிகளுடைய வேண்டுகோளின்படி ஆங்கு ஆங்குத் தங்கி ஆவன செய்தது, பின்பு அகத்திய முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்தது, அவருடைய ஆசிமொழிகளையும் ஆயுத வலிகளையும் பெற்றது, அவரிடம் விடைபெற்று பஞ்சவடியில் போய்ப் பன்னசாலை அமைத்து மனைவியும் தம்பியும் அன்பு புரிந்துவர இன்பமாய் அமைந்திருந்தது, பதின்மூன்று வருடங்கள் அரிய தவ முனிவர்களோடு

இனிது பழகி வந்தவன் கோதாவரி நதி அருகே உவகையாய் வாழ்ந்து வருங்கால் அங்கே சூர்ப்பநகை வந்தது, காதல் கொண்டது, நோதல் கண்டு போனது, மாயமான் வந்தது, அதன் பின்னே இராமன் சென்றது, தம்பியும் பிரிந்தது, அவ்வமையம் இலங்கை வேந்தன் வஞ்சமாய் வந்து சீதையைக் கவர்ந்து சென்றது, தேவியைக் காணுமல் ஆவி அலமந்து நம்பி தம்பியோடு பல இடங்களிலும் தேடி அலைந்தது, சபரியைக் கண்டு மதங்கமலையை அடைந்தது, அங்கே சுக்கிரீவன் நண்பன் ஆனது, வாலியை வதைத்து அவனுக்கு அரசுரிமை தந்தது, எழுபது வெள்ளம் வானரங்களோடு அவன் உதவியாய் வந்தது, அதன் பின் கடல் கடந்து இலங்கை புகுந்தது, போர் மூண்டது, பொருது வென்றது, இந்திரசித்து முதலாக அரக்கர் குலம் அழிந்து ஒழியவே முடிவில் இராவணன் மூண்டு போராடி மாண்டு மடிந்தது, கோதண்ட வீரனுடைய விசய வெற்றிகளை வியந்து மகிழ்ந்து தேவர் முதல் யாவரும் புகழ்ந்து போற்றியது, விபீடணனுக்கு அரசுமுடி புனைந்து இலங்கையை அவனுக்கு உரிமையா உதவியது, யாவும் முடிந்த பின் குபேரனுடைய தெய்வீக விமானத்தில் எல்லாரும் ஏறி அயோத்தியை நோக்கி வந்தது, அவ்வாறு வருங்கால் இடையே பரத்து வாச முனிவர் எதிர் கொண்டு வந்து வான வீதியை நோக்கி இருகைகளையும் ஏந்தி மான வீரன் அங்கே வந்தருளும் படி வேண்டியது, அந்த வேண்டுகோளுக்கு இணங்கி இராமன் ஆண்டு இரங்கியிருப்பது, அருந்தவன் பரிந்து வேண்டிய படி விருந்தினன் ஆய்ப் பெருந்தகையாளன் அவண் அமர்ந்திருக்கும் கால் தனது வரவைத் தம்பிக்கு விரைந்து போய் அறிவிக்குமாறு தன்னை ஏவியருளியது, ஆகிய யாவும் தெளிவாக மாருதி கூறி முடிக்கவே பரதன் கண்ணீர் சொரிந்து உண்ணீர்மையோடு உருகி அழுதான். அண்ணலைத் தனியே விட்டதை எண்ணி மறுகினன்.

பரதன் பரிவு.

காலின்மா மதலை சொல்லப் பரதனும் கண்ணீர் சோர
வேலிமா மதில்கள் சூழும் இலங்கையில் வேட்டம் கொண்ட
நீலமா முகில்பின் போனன் ஒருவன்நான் நின்று நைவேன்
போலுமால் இவைகள் கேட்பேன் புகழுடைத்து அடிமை மன்னே! (1

என்றவன் இரங்கி ஏங்கி இருகணும் அருவி சோர
வன்றிறல் அனுமன் செங்கை வலக்கையால் பற்றிக் காலில்
சென்றனன் இருளின் ஊடு செறிபுனல் கங்கை சேர்ந்தான்
குன்றினை வலம்செய் தேரோன் குணகடல் தோன்று முன்னர். (2

இங்கு நடந்துள்ள நடைமுறைகளை நன்கு உணர்பவர் கவியின் சாதுரிய சாகசங்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்வர். பதினுயிரம் பாடல்களுக்கு மேலாய்ப் பரந்து விரிந்துள்ள இராம சரிதம் ஈண்டு அனுமான் வாய் மொழியாய் இருபத்தைந்து கவிகளில் இனமா இசைந்து சுவை தோய்ந்து வந்திருக்கிறது.

இராம நாதனுடைய காவிய ஜீவியங்களை உலகம் நலமா நினைவில் வைத்து நன்கு பலன் கொள்ள வேண்டும் என்றே மீண்டும் இவ்வாறு கவி ஈண்டு விநயமா வெளியிட்டுள்ளார்.

அரிய பெரிய கம்பராமாயணம் இனிய சிறிய அனுமராமாயணம் ஆய் ஈங்கு வந்திருக்கும் பாங்கு ஊன்றி உணர வுரியது.

இருவரும் சிறந்த கவிராசர்கள்; செவிக்கு அமுது என இராகவன் புகழினைப் புவிக்கு உதவுவதே புண்ணிய கருமமா எண்ணி வருபவர்; எவ்வழியும் அவனுடைய கீர்த்திகளையே செவ்வையாய்ப் பாடி வரும் திவ்விய மேதைகள். இவருடைய புலமைகளும் போதனைகளும் உலக வுயிர்கள் ஒளிபெற்று உயரும் வழிகளிலேயே யாண்டும் எழிலோடு இனிமை தோய்ந்து புனிதமாய் வந்துள்ளன. உரைகளுள் யூகவிவேகங்கள் மிளிர்கின்றன.

தன்னை வெளியே காட்டாமல் பாத்திரத்தின் வாயிலாச் சரித்திரத்தை நடத்தி வந்தாலும் இறுதியில் அதனைக் காட்டியருள்கிருர். காவியக் காட்சி ஜீவிய மாட்சியாய்ச் சிறந்து திகழ்கிறது. உழுவலன்புகள் உரைகள் தோறும் ஒளி புரிந்து வருகின்றன.

அன்பினுல் என்னை நின்பால் ஆழியும் காட்டி ஆன்ற
துன்பெலாம் துடைத்தி!என்றே துரந்தனன் தோன்றல்!என்று
முன்பினுல் இயன்ற எல்லாம் மொழிந்தனன் முதுநீர் தாவி
வன்பினுல் இலங்கை முற்றும் எரிக்குண வாக வைத்தோன்.

இராம சரித்திரத்தைப் பரதனுக்குச் சுருக்கிச் சொன்னவனை இன்னவாறு நன்னயமா நமக்குக் காட்டியிருக்கிருர். பரந்து விரிந்துள்ள கடலை விரைந்து தாவி, யாரும் புகமுடியாத இலங்கையுள் எளிதே புகுந்து, வானவரும் அஞ்சி வணக்கும்

அந்த வீரநகரைத் தீயின் வாய்க்கு நேரே இரையாகச் செய்த தீரன் என்று வீரவெற்றிகளோடு அனுமானை இங்கே கூறியுள்ளார்.

எவரும் செய்ய முடியாத அரிய பெரிய அதிசய காரியங்களை ஆற்றி வந்துள்ள அவ்வீரன் இராமதூதனாய் அன்பு மீதூர்ந்து வந்து பரதனை இங்கே பாதுகாத்துள்ளான். மதிநலம் கனிந்த அவனுடைய இனிய வாய்மொழிகளால் தனது அண்ணனின் வரலாறுகளைக் கேட்டதும் யாவும் எண்ணி எண்ணிக் கண்ணீர் பெருகிவர மறுகி உருகி இத்தம்பி உழுவலன்பால் அழுதுளான்.

நீலமா முகில்பின் போனான் ஒருவன்;
நான் நின்று நைவேன்.

பரதன் சிந்தை நொந்து தன்னை இகழ்ந்துள்ளதை இந்த வாசகம் இனிது காட்டியுள்ளது. அண்ணனோடு சென்று அவனுக்கு எவ்வழியும் துணையாய் நின்று ஊழியம் புரியும் படியான பாக்கியம் தனக்கு இல்லாமல் போயதே! என்று இவன் உள்ளம் வருந்தி மறுகியிருப்பதை உரையில் நேரே தெரிந்துகொள்கிறோம்.

இலங்கையில் வேட்டம் கொண்ட நீலமாமுகில் என இராமனை இங்கே தம்பி இவ்வாறு கருதி யுருகியிருக்கிறான். இராவணனோடு போராடிய அந்தப் பெரிய வேட்டையில் தானும் உதவியாய்க் கூட நின்று தமையனுக்கு ஆதரவு செய்யவில்லையே! என்று எண்ணியிருப்பதால் இவ்வீரமகனுடைய தீரதைரியங்களை உணர்ந்து நாம் உவந்து கொள்கிறோம். பாம்பரையாய் உயர்ந்து வந்த வீரக்குடியில் பிறந்தவன் ஆதலால் சத்துருவை வெல்லும் உக்கிர வீர வெற்றியை மிக்க மேன்மையா விழைந்து நின்றான்.

பின் போனான் ஒருவன் என்றது இலட்சுமணனை. கொடிய நெடிய போராட்டங்களில் உரிய துணையாய் நின்று அண்ணனுக்கு அவன் உதவி புரிந்துள்ளதை இவன் எண்ணி இரங்கியுள்ளான். அவன் சென்று பணிசெய்து வென்றி வீரங்களை விளைத்தான்; நான் நின்று நைந்து நிலைகுலைந்து வாழ்ந்தேன் என்று தனது வாழ்வைத் தாழ்வா நினைந்து தளர்ந்து வருந்தினான்.

தமையனுக்கு இதம் செய்யாததோடு எவ்வழியும் அவனுக்கு "இடராகவே பிறந்தேன்" என்று தனது பிறப்பையும் இருப்பையும் அடிக்கடி இவன் வெறுத்து வந்துள்ளான். அந்த

உண்மையை இடங்கள் தோறும் நாம் நுண்மையா உணர்ந்து வந்துள்ளோம். உள்ளநிலை உரைகளில் துள்ளி வருகின்றது.

புகழ் உடைத்து அடிமை.

இகழ்ச்சிக் குறிப்போடு இங்ஙனம் மொழிந்திருக்கிருன்.

இராமனேடு உடன் பிறந்த தம்பி என்று தன்னைச் சம உரிமையாப் பரதன் எண்ண வில்லை. அவனுக்கு ஓர் அடிமை என்றே முடிவாக் கருதி வந்திருக்கிருன். ஆண்டவனுக்குச் செய்ய வேண்டிய பணியை மெய்யாகச் செய்ய வில்லை; அதனுல் தனது வாழ்வு இழிவாய்ப் பழியடைந்துளது என்று பரிந்து வருந்தி வருகிருன். அந்த நிலையில் புகழ் உடைத்து என்று எதிர் மறையில் இங்கே இகழ்ந்து கொண்டான். இகழ் உடைத்து என்னும் குறிப்பில் இது வெறுப்போடு வெளியே வந்துளது.

இரங்கி ஏங்கி இருகணும் அருவி சோர.

வழி நடந்து வந்துள்ள பரதனை இவ்வாறு விழி தெரிய விளக்கி யிருக்கிருர். அண்ணனை எண்ணுந் தோறும் கண்ணீர் பெருகி ஓடுகிறது. தன்னம் தனியே சென்று அவன் பட்டுள்ள பாடுகளைக் கருதி வருதலால் உள்ளம் உருகி வருகிறது. அந்த உள்ளத்தின் உருக்கம் கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்குகிறது.

இராமனுடைய வரலாறுகளை அனுமான் இனிமையாக் கூறி வந்தான். பரதன் உவந்து கேட்டு வந்தான். பேச்சில் ஈடுபட்டுக் கவனம் செலுத்தி வந்தமையால் வழி நடை எளிதே கழிந்தது. நேரம் போனதும் தூரம் கழிந்ததும் யாதும் தெரியவில்லை.

"Good company upon the road is the shortest cut."

வழித்துணை நல்லது ஆனல் நெடிய வழியும் கடிது சுருங்கி எளிது கழியும் என்னும் ஆங்கிலப் பழமொழி அன்று அவர் பாங்கிலும் தெளிவாய் நின்றது. பேசியபொருள் ஆசைக் கனியா அமைந்தமையால்இருவரும் பேரின்பங்களை அடைந்து வந்தனர்.

அனுமன் செங்கை வலக்கையால் பற்றிச் சென்றனன்.

அந்த இரவில் பரதன் தென்திசை நோக்கி அண்ணனை எதிர்கொண்டு காண நடந்து வந்துள்ள நிலைமையை இது வரைந்து காட்டியுள்ளது. காதகுளிரக் காலின் சேய் சுவையாப்

பேசி வந்தமையால் கால் நடை சுகமாக் கழிந்து வந்தது. விடியுமுன் கங்காநதியின் வடகரை யருகேயிருந்த ஒரு சோலையை அடைந்தனர். சிறிது பொழுது கழிந்தது; கதிரவன் உதயமாயினன். இரவு கழிந்ததும், இரவி எழுந்ததும் அவருடைய வரவு நிலைகளில் உறவாய் உரிமை தோய்ந்து நின்றன.

சூரிய உதயம்.

இராவணன்வேட்டம் போய்மீண்டு எம்பிரான் அயோத்திஎய்தித்
தராதல மகளும் பூவின் தையலும் மகிழச் சூடும்
அராவுபொன் மௌலிக்கேய்ந்த சிகாமணி குணபால் அண்ணல்
விராவுற எடுத்தால் என்ன வெய்யவன் உதயம் செய்தான்.

உதய கால வருணனைகளை இக் காவியம் சீரிய ஓவியமா யாண்டும் காட்டி வருவதை நாம் கண்டு வந்துள்ளோம். ஈண்டும் காண்கின்றோம். என்றும் தோன்றுவதுபோல் சூரியன் அன்றும் தோன்றினன். அந்த உதயக் காட்சி கவியின் இதயக் காட்சியோடு உரிமையாக் கலந்து சரித நிகழ்ச்சி பொதிந்து இவ்வாறு அரிய மாட்சியாய் நமக்கு இனிய காட்சி தருகிறது.

பருவகாலங்களின் எழில் விளக்கங்கள் எல்லாம் இராமன் வாழ்வோடு தோய்ந்து தொழில் புரிந்து ஒளி வழங்கி வருகின்றன. இந்த விழுமிய விளக்கமும் அந்த வழியே இங்கு அழகுற அமைந்தது. எம்பிரான் என்றது இறைமை தெரிய வந்தது.

அமரர் யாவரையும் அடக்கி ஆண்ட இலங்கை வேந்தனை அமரில் வென்று அதிசய சோதியாய் இராமன் தனது இராசதானிக்கு மீண்டு வருகிறான்; வந்து சேர்ந்ததும் சக்கரவர்த்தியாய் முடிசூட நேர்வான்; அந்த அரிய மணிமகுடத்திற்குஉரிய அழகிய ஓர் விழுமிய மணியைத் தேவராசனான இந்திரன் சுந்தரமாய்த் தன் கையில் ஏந்தி வந்ததுபோல் சூரியன் அன்று தோன்றிநின்றான். காரிய நிலை சீரிய தலைமையாய் நிலவியது.

கீழத்திசைக்கு இந்திரன் உரியவன் ஆதலால் குணபால் அண்ணல் என அவனை இங்கே மணமாக் குறித்தருளினர். இந்த வென்றி வீரனுக்கு நன்றியறிவோடு அந்த அமரர்கோன் வெகுமதி செய்ய நேர்ந்தான். நிலைமை ஓர்ந்து உணர வுரியது.

வானவரை எவ்வழியும் இழிவாத் தாழ்த்தி எங்கும் மாட்சியாய் ஆட்சி புரிந்து வந்த இராவணனை அடியோடு வீழ்த்தி

அமரர் குடிவாழ்வை உயர்த்தி வந்துள்ளமையால் இவ் வீரவள்ளனுக்கு அவ் வானவர் கோன் உள்ளம் உவந்து கையுறையாக் கதிர்மணியைக் கொண்டு வந்தான். சிவந்த கிரணங்களை எங்கும் வீசித் திவ்விய சோதியாய்ச்சிறந்து விளங்கினமையால்சிகாமணி என வந்தது. அரசர் பெருமான் தலையில் சூடுகிற முடிக்கு முடிமணியாய் நின்றது. விலையிடலரியது; நிலையில் உயர்ந்தது; உலகிற்கு ஒளி புரிவது என்னும் பொருள் பல பொருந்தியுளது.

இரவி குல திலகனுக்கு இரவியே சிரோமணியாய் எழில் புரிந்து ஒளி விரிந்தது. குலத்தாலும் குணத்தாலும் அறிவாலும் ஆற்றலாலும் ஆட்சியாலும் மாட்சியாலும் இராமன் வான ஒளி போல் வயங்கி வருகிருன். அந்த வரவு நிலை ஈண்டு வரமாய் உணர வந்தது. கருமவீரனிடம் தருமநீதிகள் பெருகி வந்துள்ளமையால் தேவதைகளும் இவன் பால் ஆவலோடு ஆதரவு புரிந்து வருகின்றன. அதிசய வீரனை யாவரும் துதி செய்து நின்றனர்.

இராவணன் வேட்டம் போய்
மீண்டு அயோத்தி எய்தி.

வனவாசம் போய் மீண்டு வந்துள்ள இராமனை ஈண்டு இவ்வாறு நாம் அறிந்து கொள்ளுகிறோம். கானகம் போய்த் திரும்பி வந்தவனை இன்னவாறு கவி காட்டியிருப்பது உன்னியுணர வுரியது. போனதும் வந்ததும் புதுமை தோய்ந்துள்ளன.

மன்னர் மன்னவனுய் இராமன் மன்னியிருக்க நேர்ந்த போது கூனி இன்னலாய்க் கோள் மூட்டி இடர் நீட்டினுள். இராமன் முடி இழந்து காட்டுக்குப் போக மூண்டது இராவணன் குடி மடிந்து அடியோடு அழிந்து போகவே நீண்டது.

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினுள்.

(மந்தரை, 39)

இராமன் அயோத்தியில் அரசனுய்த் தோன்றியிராதபடி கூனி கொடுஞ் சூழ்ச்சியாய்த் தோன்றியது இராவணன் குலத்தோடு அழிந்து ஒழியவே என்பதை இது தெளிந்து கொள்ளச் செய்தது. ஒரு கிழவி செயல் பல கோடி நிருதரை அழித்துளது.

இந்தப் பொல்லாத கூனியின் புலை மொழியைக் கேட்டு நல்ல கைகேசியும் உள்ளம் திரிந்து அல்லல் செய்ய நேர்ந்தாள்.

தூய்மையான தாய்மை உள்ளம் தோய்ந்து எவ்வழியும் வாய்மை வாய்ந்திருந்த அவள் தீமையாய்மாறிய அம் மாற்றத்திற்கு ஏற்ற காரணத்தைக் கவி பூரணமா உரைத்திருகிறார்.

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமான்.
மந்தரை, 78)

இராமனைக் காட்டுக்கு ஓட்டக் கைகேசி துணிந்ததற்கு உரிய மூல காரணத்தை ஞாலம் அறிய இது காட்டியுள்ளது. அரக்கர் செய்த பாவமும், அமரர் பண்ணிய புண்ணியமுமே இராமனைக் கானகத்துக்குக் கொண்டு போயுள்ளது என்பதை இங்கேகண்டுகருமங்களின் மருமங்களைத்தெளிந்துகொள்கிறோம்.

கொடிய பாவங்களைச் செய்து வருகிற நெடிய அரக்கர்களை அடியோடு அழித்து ஒழிக்கவே இக்கோமகன் வில்லோடு வெளியேறிப் போயிருக்கிறான். அந்தப் போக்கும் நோக்கும் பூண்டு மூண்ட பலன்களும் இங்கே புலன் தெரிய வந்தன.

வேட்டம் என்னும் சொல் விளையாட்டாய் விரும்பிச் செய்வது என்னும் பொருளை யுடையது காட்டிலுள்ள கொடிய மிருகங்களை உல்லாசமா வேட்டையாடுவது உலகர் இயல்பு. நாட்டில் வாழும் குடிகளுக்குக் கேட்டை விளைவிக்காதபடி காட்டு விலங்குகளை வீட்டி வருவது வேந்தர் கடமையாம். அந்த நிலையிலேயே இந்த வீரனுடைய வினையாண்மையும் விறலோடு விளைந்துவந்துளது. நிகழ்ச்சிகள் நினைந்துசிந்திக்கவுரியன.

வானவரையும் மானவரையும் வருத்தி வந்த இராவணனை வதைத்து ஒழித்து இம்மான வீரன் வெற்றி வீறுடன் மீண்டு வந்துள்ளான். அந்த உண்மையை நுண்மையா உணர்ந்து நிலைமையைத்தெளிந்து கொள்ள ஈண்டு இவ்வாறு உரைத்தருளினர்.

பன்றி புலி யானை சிங்கம் முதலிய காட்டு மிருகங்களை வீட்டி வருபவர் வேட்டை வீரர் என வருவர். அந்த விலங்கு வேட்டைகள் எவற்றினும் மேலான வெற்றியில் மேவியுள்ளமையால் இலங்கை வேந்தன் வேட்டை ஈண்டு வியந்து புகழ்ந்து போற்ற வந்தது. பெற்ற வெற்றியின் பெருமை தெரியகின்றது.

தனது காவிய நாயகனான இராமனிடம் அரிய பல இனிய சீர்மைகள் நிறைந்திருக்கின்றன. அவற்றுள் எல்லாம் வீரத் திறலையே கவி மிகவும் மேலாக வியந்து போற்றி வருகிறார். கதா நாயகனுடைய குணகணங்களை மணமாக் கூறும் போதெல்லாம் கவிஞருடைய மன நிலைகளை இனமா நாம் அறிந்து வருகிறோம். தாம் பாடியது அரிய ஒரு வீரகாவியமே என்பதை யாவரும் நாடியறியச் செய்கிறார். அந்த வீரனுடைய சீவிய நிலைகளை ஓவிய உருவங்களா உணருந்தோறும் இந்த மேதையினுடைய விழுமிய உணர்வுநலங்களையும் தெளிவா உணர்ந்துகொள்கிறோம்.

இராகவன் அபி நவ கவி நாதன் எனக் கம்பரை உலக கவிகள் உவந்து போற்றி வருகின்றனர். அக்கோமகனுடைய சீவியங்களை உயிர் ஓவியங்களாத் தம் காவியத்தில் காட்டி வருதலால் இக்கலை ஞானியின் நிலைமை தலைமைகளையும் நேரே கண்டு மகிழ்கிறோம். அறிவின் சுவைகள் அரிய அமுதங்களாயுள்ளன.

இவருடைய வாழ்வும் சூழ்வும் இராம காவியத்தைச் சுவையா ஆக்கியருளவே விழுமிய நிலையில் முழுதும் அமைந்திருகின்றன. அந்த அமைதியால் உலகமேதையாய் இவர் நிலவிநிற்கிறார்.

> He who would write heroic poems should make his whole life a heroic poem. [Carlyle]

சீரிய வீரகாவியங்களைச் செய்ய வுரிய கவிஞன் தன் சீவியம் முழுவதையும் ஒரு வீர காவியமாச் செய்து கொள்ள வேண்டும் என ஆங்கிலப் புலவரான கார்லேயில் இவ்வாறு கூறியிருக்கிறார். இக்கவிஞர் பெருமான் இதற்குச் சான்றாயுளர்.

சிறந்த காவியக் கவிஞன் எத்தகைய சீர்மையில் நிறைந்திருக்க வேண்டும் என்பதை ஈண்டு உய்த்துணர்ந்து கொள்கிறோம். வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கவிஞர் சுவையாச் சொல்கின்றார்; நடவாதவைகளையும் நவமா நவில்கிறார். இவருடைய கற்பனைகளிலிருந்து விளைந்து வருவன அற்புதக் காட்சிகளாய்ச் சிறந்து அரிய பல மதி நலங்களை அருளுகின்றன.

சூரிய உதயத்தை நாளும் நாம் கண்டு வருகிறோம்; யாதொரு நலமும் காணாமல் வீணே விலகிப் போகின்றோம். கவிஞர் காணுகிறார்; அக்காட்சியில் அதிசய மாட்சிகளைக் காட்டுகிறார்; அதனை உவந்து நோக்கி உலகம் துதி செய்து போற்றுகின்றது.

கல் செங்கல் சுண்ணும்பு முதலிய சிறிய பொருள்களைக் கொண்டு பெரிய மாடமாளிகைகளையும் அரிய கோபுரங்களையும் புனைந்து வனைந்து சிற்பிகள் உருவக்காட்சிகளை உயர்வாச் செய்தருளுகின்ருர். செயல் முறைகள் உயர்வா ஒளி புரிகின்றன.

கவிகள் கற்பனையினுலேயே அற்புதங்களை ஆக்கி மனித சமுகாயத்துக்கு விற்பனங்களை நன்கு விளைத்து வருகின்றனர்.

கடவுளுக்குத்தான் சிருட்டி கருத்தா என்று பேர். கவிஞரும் அத்தகைய வித்தக நிலையில் வியனுய் விளங்கி நிற்கின்ருர்.

பிரம சிருட்டி கவி சிருட்டி எனச் சிருட்டிகள் இருவகை நிலைகளில் தொகையாய் மருவியுள்ளன. முன்னதினும் பின்னது நன்னய முடையது. அந்த வேதாவின் சிருட்டிகள் விரைந்து மறைந்து போகின்றன; இந்த மேதாவிகளின் படைப்புகள் என்றும் நிலையாய் நின்று எவ்வழியும் சிறந்து வருகின்றன.

கம்பர் சிருட்டியான இராம காவியம் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன; இதன் எதிரே பிரம சிருட்டியாவந்த சீவகோடிகள் எவ்வளவோ மாண்டு போயின. இது யாதும் மாயாமல் ஏதும் தேயாமல் நாளும் நாளும் நவமா ஒளி வீசி உலகசோதியாய் ஓங்கி உயிரினங்கள் எல்லாம் உவந்து புகழ்ந்து வர உணர்வு நலங்களை உதவி உயர் அமுதமாச் சுவை சுரந்து வருகிறது. புலவர்கள் உலகசோதிகளாய் இனிது நிலவுகின்றனர்.

நூலறிவு வாலறிவின் வகையாய் வயங்கி வருதல்போல் கவிஞர்களும் கடவுளின் உறவாத் துலங்கி ஒளிவீசி வருகின்றனர்.

To build from matter is sublimely grea.,
But gods and poets only can creat. (William Pitt)

சடப் பொருள்களிலிருந்து தோன்றுவன பெரிய உருவங்களே; கடவுளரும் கவிஞருமே படைக்க வல்லவர் என்னும் இது இங்கே அறியவுரியது. கற்பனை அற்புத நிலையிலுள்ளது.

கவிகளுடைய மதிநலம் விதிமுறைகளை விளக்கி வைய மாந்தருக்கு மெய்யறிவுகளை விளைத்து வருகிறது. குறிப்பு மொழிகள் கூரிய ஒளிகளாய்ச் சீரிய வழிகளைத் தெளியச் செய்கின்றன. உய்த்துணரும் வகையில் யூக விவேகங்கள் யாண்டும் ஓங்கி நீண்ட விசித்திரங்களாய் நெடிது நிலாவி வருகின்றன.

உதய சூரியன் இராமச்சந்திரனுடைய மகுடமணிபோல் தோன்றினன் என்றது, அன்று முதல் அடுத்து நிகழும் மங்கல விழாக்களை நன்கு உணர்த்தி நின்றது. சரித நிகழ்ச்சியில் அரிய பல உணர்ச்சிகள் பெருகி விழுமிய சுவையோடு மிளிர்கின்றன.

பரதன் சிந்தனை.

காலையில் சென்று பரதன் கங்கை நீராடினன். நேம நியமங்களை நெறியே முடித்தான். அருகேயுள்ள குளிர் பூஞ்சோலையை அடைந்தான். சேனைகள் யாவும் பரந்து விரிந்திருந்த வெளியிடங்கள் எங்கணும் நிறைந்து இராம தரிசனத்தை விழைந்திருந்தன.

பரத்துவாச முனிவருடைய ஆச்சிரமம் அருகேயிருந்தும் இராமன் வந்துள்ள அறிகுறிகள் யாதும் தெரியவில்லை. எழுபது வெள்ளம் சேனைகள் உடன் வந்திருப்பதாக அனுமான் உரைத்திருந்தான் ஆதலால் அதனை நினைந்து வியந்தான். மனத்தில் ஐயம் மறுகி எழுந்தது. மாருதியிடம் நேரே வினவ நேர்ந்தான்.

காலைவந் திறுத்த பின்னர்க் கடன்முறை கமலக் கண்ணன்
கோலநீள் கழல்கள் ஏத்திக் குரக்கினத்து அரசை நோக்கி
சாலவும் கலைகள் வல்லோய்! தவறுண்டு போலும் வாய்மை
மூலமே உணரின உன்றன் மொழிக்கெதிர் மொழியும் உண்டோ?

எழுபது வெள்ளம் சேனை வானரர் இலங்கை வேந்தன்
முழுமுதல் சேனை வெள்ளம் கணக்கில மொய்த்த என்றால்
அழுவநீர் வேலை சுற்றும் அரவமின் றாக வற்றோ?
விழுமிதுஎம் பிரான்வந் தானஎன்று உரைத்தது வீர! என்றான்.

பரதன் உள்ளத்தில் பெரிய சந்தேகம் தோன்றியிருப்பது இங்கே தெரிய வந்தது. அண்ணனைக் கண்ணாரக் காண வேண்டும் என்ற அவா மிகவும் மூண்டு நின்றமையால் ஒவ்வொரு நிமிடமும் நாளும் ஊழியுமாய் நீண்டு தோன்றியது. தோன்றவே மாருதி சொன்னது மாறுபாடான வஞ்சமோ? என்று நெஞ்சம் நினைய நேர்ந்தது. ஐயமான நினைவு வெய்யதா விரிந்தது.

தவறு உண்டு போலும் வாய்மை.

அனுமனிடம் பரதன் இவ்வாறு வினவியுள்ளான். "நீ சொன்னபடி யாதும் காணோமே; உன் வாய்ச்சொல் பிழையாயிருக்குமோ?" என்று என் உள்ளம் உளைகிறது என இங்ஙனம்

உரைத்திருத்தலால் அது பொழுதிருந்த இவனது மனநிலையை உணர்ந்து கொள்கிறோம். மானச கருமங்கள் மருமங்களாயுள்ளன; மதியூகங்கள் அதிவேகமா வேலை செய்திருக்கின்றன.

"இராமன் பெரிய ஒரு சக்கரவர்த்தி; அவன் வந்திருந்தால் இந்தப் பக்கம் எங்கும் பெரிய ஆடம்பரங்களும் ஆரவாரங்களும் நீண்டு நிறைந்திருக்கும்; அவ்வாறு யாதொரு நிலையும் இல்லையே! இது என்னே விந்தை!" என இன்னவாறு சிந்தை யுளைந்தது. சந்தேகங்கள் பெருகி எழுந்தன. ஐயுறவு வெய்ய கவலையாய் நீண்டது. "புதிதாய் வந்தவன் அதிசய நிலையினன்; ஆச்சரியங்கள் பல அவனிடமிருந்து அறிய வந்தன; அவனுடைய பேச்சுகளும் செயல்களும் பெருந்தகைமைகள் தோய்ந்துள்ளன; பொய் பேசும் புலை ஒரு சிறிதும் இலை என்று தெரிகிறது. அவ்வாறு தெரியினும் ஈண்டு நேர்ந்துள்ள நிலை நெடிய சந்தேகமாய் நீண்டுள்ளது" என நெஞ்சம் கவன்று நின்றான். கவலை அவலமாய் நீளவே மாருதியை மீளவும் மறுகி நோக்கிப் பருவரலோடு பரிந்து மொழிந்தான். உரைகள் உள நிலையை உணர்த்தி நின்றன.

எம்பிரான் வந்தான் என்று உரைத்தது விழுமிது!

சந்தேகம் மீதூர்ந்தமையால் இந்தவாறு சிந்தை கவன்று பேச நேர்ந்தான். வீர! என்று அனுமானை இங்கே விளித்தது அவனுடைய மேலான தீரங்களை வியந்தேயாம். நேரே கண்ட காட்சிகள் நிறைந்த மாட்சிகளாய் அவனைப்புகழ்ந்து பாராட்டச் செய்தன. குறித்த விளி கூரிய ஒளியாச் சீர்தலக்கி வந்தது.

"வீரர்கள் எவ்வழியும் நேர்மையுடையவர்கள்; யாதொரு வஞ்சமும் யாரிடமும் நெஞ்சம் துணிந்து செய்யாதவர்கள். அத்தகைய உத்தம நிலையிலுள்ள நீ என்னை வஞ்சித்து என்னிடம் பொய்த்த மொழி பேசியிருக்கமாட்டாய்! ஆயினும் இங்கே நேர்ந்துள்ள நிலைமைகள் என் நெஞ்சில் ஐயங்களை விளைத்திருக்கின்றன" என்று பரதன் பரிதாபமாய் மறுகினான். பெருகி எழுந்த மனமறுக்கம் பரிவோடு பலவும் கருதி நிலைமைகளை நினைந்து தலைமைகளை விழைந்து வியந்து தனியே நீண்டது.

"எம்பிரான் வந்திருந்தால் இந்த இடங்கள் இப்படி இரா; அதிசய ஆடம்பரங்களோடு துதிகொண்டு யாண்டும் பெரிய முழக்கங்கள் பெருகி எவ்வழியும் திருவிழாக் கோலங்களாய்ச்

சிறந்து திகழும்; அவ்வாறு யாதும் இல்லாமையால் ஆண்டவன் ஈண்டு வந்துள்ளான் என்று நீ வந்து என்பால் சொன்னது நீண்ட சந்தேகமாய் மூண்டுள்ளது" என முனிவோடு துனி படிந்து பேசினன். விழுமிது என்றது இளிவுடன் வந்தது.

இவ்வுரைகளைக் கேட்டதும் அனுமான் யாதும் கவலாமல் விநயமாய் மறுமொழி கூறினன். அம்மதிமானுடைய பதிலுரை அதிசயமா மதிநலம் சுரந்து வந்தது. ஐயம் தீர்ந்து அந்த மெய்யன் யாவும் ஆராய்ந்து கூர்ந்துதேர்ந்து தெளிய நேர்ந்து வந்த உரைகளை அயலே ஓர்ந்து காண வருகிறோம்.

பரதன்அஃது உரைத்தலோடும் பணிந்துமாருதியும் சீர்சால்
விரதமா தவத்து மிக்கோய்! விண்ணவர் தம்மை வேண்டி
வரதன்ஆண் டளிப்ப வந்த வரத்தினால் மலரும் தேனும்
சரதமே மாந்தி மாந்தித் துயினறது தானை எல்லாம். (1)

வானவர் கொடுக்க வந்த வரத்தினல் மதுப மூசும்
தேனொடு கிழங்கும் காயும் கனிகளும் பிறவும் சேர்த்துக்
கானகம் பொலித லாலே கவிக்குலம் அவற்றை மாந்தி
ஆனனம் மலர்ந்த தில்லை யாகுமநீ துயரல் எந்தாய்! (2)

இனிஒரு கணத்தின் எங்கோன் எழுந்தருள் தன்மை ஈண்டுப்
பனிவரும் கண்ணின் நீயேபார்த்திஎன்று உரைத்தான்;இப்பால்
முனிதன திடத்து வந்த முளரியங் கண்ணன் வண்ணக்
குனிசிலைக் குரிசில் செய்தது இற்றெனக் குணிக்கல் உற்றாம்.

சந்தேகமாய்ச் சிந்தை தளர்ந்து நின்ற பரதன் யாவும் தெளிந்து மகிழ இந்தவாறு அனுமான் இனிது மொழிந்துள்ளான். அண்ணல் வந்துள்ள அறிகுறியும் அரவமும் யாதும் தெரியவில்லையே! என்று மறுகி மயங்கினன் ஆதலால் அந்த மயக்கம் தீர இன்ன வண்ணம் நன்னயமாப் பதில் கூறியிருக்கிறான். உள்ளக் குறிப்புகள் உரைகளில் துள்ளி ஒளிர்கின்றன.

"பரத்துவாசர் பெரிய ஞானி; அரிய தவயோகி; அற்புத சித்திகளுடையவர்; இந்திர மந்திரத்தைச் செபித்துத் தேவ போகங்களை எல்லாம் ஒருங்கே வரும்படி செய்து இராமபிரானுக்கு அதிசய விருந்துகளை விதிமுறையே அருளியுள்ளார்.

வானர சேனைகள் யாவும் வானவர் போகங்களை உவந்து நுகர்ந்தன. இனிய சுவையான அரிய உணவுகளை அதிகமா

உண்டமயக்கத்தால் எல்லாரும் அங்கங்கே அந்தக் குளிர் பூம் பொழில் முழுவதும் அயர்ந்து உறங்கியுள்ளனர். ஆதலால் யாதொரு அரவங்களும் நமக்குக் கேட்கவில்லை. இந்த உண்மையை உணர்ந்து உள்ளம் தெளியுங்கள்; சூரியன் குணபால் உதயம் ஆனபொழுது ஆரியனை நேரே காணலாம் என்று முன்பு நான் உங்களிடம் கூறியபடியே விரைந்து காட்டுகிறேன்; கண்டு மகிழ்வீர்கள்! ஐயம் கொண்டு அலமாலுற வேண்டாம்; என் வாய் மொழியை மெய்யாக நம்புங்கள்; விரைவாக் காண்பீர்கள்'' என்று இவ்வாறுமாருதி ஆறுதல்கூறித்தேறுதல்புரிந்தான்.

மாந்தி மாந்தித் துயின்றது தானை எல்லாம்.

திண்படைகள் உண்படைகளாய்க் கண்படை கொண்டுள்ள நிலைகளை இது நேரே காட்டியுள்ளது. மாந்திமாந்தி என்ற அடுக்கு அதிமதுரமான பண்டங்களைப் பண்டி நிறைய உண்டிருக்கும் பான்மையை நன்கு உணர்த்தி நின்றது. வயிறு நிரம்ப அவ்வாறு செவ்வையாய் அருந்தினமையால் எவ்வழியும் வெவ்விய மையலா எல்லாரும் பெருந்துயில் கொள்ள நேர்ந்தனர்.

உண்ட மயக்கம் தோண்டருக்கும் உண்டு என்பது பழமொழி. அந்த முதுமொழி இங்கே தெளிவா விழிதெரிய வந்தது.

இராமபிரானோடு சேர்ந்தமையால் குரங்குகளும் அரிய தேவபோகங்களை எளிதே மாந்தி மகிழ்ந்தன. பெரியவர்களோடு உரிமையாய்ச் சேர்ந்தால் சிறியவர்களும் பெருமைமிகப் பெறுவர் என்னும் உண்மை ஈண்டு நுண்மையா உணரவந்தது. மாந்தருடைய வாழ்வுகள் சார்ந்த சார்புகளின் படியே நேர்ந்து திகழ்கின்றன. மருவிய இனத்தின் படியே மனமும் மொழியும் செயலும் உருவாகி வருதலால் சேர்க்கையின் பெருமைகளைத் தெரிந்து வாழ்க்கையின் உருவங்களை உணர்ந்து கொள்கின்றோம்.

நல்லவர்களோடு சேருங்கள்; பெரியாரைத் துணைக்கொள்ளுங்கள்; நீங்கள் நலம் பல பெற்றுப் பெருமையாய் வாழ்வீர்கள் என உரிமையோடு நூல்கள் உணர்த்தி வருகின்றன.

இராமபிரானுடைய சீவிய நிலைகளைத் தலைமையா விளக்கி வரினும் இக்காவியம் மனித மரபுக்கு உரிய அரிய பல உறுதி நலங்களைத் தெளிவா அறிவுறுத்தியுள்ளது. அவ்வுண்மையைக் கவிகளில் நுண்மையா உணர்ந்து தெளிந்து உவந்து வருகிறோம்.

Truth shines the brighter clad in verse. (Pope)

மெய்யான நீதி செய்யுளில் மேலான ஒளியாய் மேவி மிளிர்கிறதுஎன்னும் இது ஈண்டு உரிமையோடு ஊன்றிஉணரவுரியது.

உயிர்க்கு உறுதியான உயர் நலங்களை நயமா உணர்த்தி வருதலால் காவியங்கள் சீவிய ஓவியங்களாச் சிறந்து வருகின்றன. இயல்பான கருமங்களும் தருமங்களும் நூல்களில் உயர்வாய் ஒளி வீசி உறுதி நலங்களை அருளி மிளிர்கின்றன.

சிறந்த விருந்துணவுகளை அருந்தினமையால் வானர வீரர்கள் யாவரும் அயர்ந்து உறங்குகின்றனர்; அதனுல் யாதொரு ஆரவமும் இங்கே கேட்கவில்லை; சிறிதுநேரம் கழியின் யாவும் தெரிய வரும் என்று அனுமான் விநயமா உரைத்தருளினன்.

ஐயன் வந்துள்ளது மெய்யோ? அல்லது பொய்யோ? என்று ஐயமாய் அலமருகின்ற பரதன் உள்ளம் தெளிந்து உறுதியாய் உவகை கூர இம்மதிமான் கூறியது அதிசயமாய் விளங்கியது.

சேனைகள் உண்டதையும் உறங்கியதையும் அனுமான் நேரே கண்டதில்லை; ஆயினும் நிகழ்ந்திருக்கும் நிகழ்ச்சிகளை யூகமாய் ஓர்ந்து விவேக விநயமா இளவலிடம் உரைத்திருக்கிருன்.

அண்ணன் வந்துள்ள நிலையில் சந்தேகமாய்ச் சிந்தை தளர்ந்து கண்ணீர் மல்கிக் கலங்கி நிற்கின்ருன் ஆதலால் இத் தம்பிக்கு நல்ல நம்பிக்கையை ஊட்டி அவன் நன்கு தேற்றினன்.

நீ துயரல் எந்தாய்!

பரதனை இந்தவாறு மாருதி உரிமையோடு தேற்றியிருக்கிருன். அவன் துயரம் அடைந்து அளங்கியுள்ள நிலைமையை இதனுல் உணர்ந்து கொள்ளுகிருேம். ஐயம் நீங்கி அவன் தெளிந்திருக்கும் படி மொழிந்து வந்தவன் இறுதியில் உறுவதை உறுதியாய் வலியுறுத்தி உரிமையோடு அறிவுறுத்தினன்.

இனி ஒருகணத்தின் எங்கோன் எழுந்தருள் தன்மை
பனிவரு கண்ணின் நீயே பார்த்தி!

ஒரு நிமிட நேரத்தில் இராமபிரானை நேரே காணலாம் என்று மாருதி இவ்வாறு கூறியிருத்தலால் அவன் குறித்துள்ள கால நுட்பத்தைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிருேம். பதினன்கு

ஆண்டுகள் முடியும் நேரம் நெருங்கியுள்ளது; இனி அக்கோமகனை விரைந்து காணலாம் என்று கணிக நிலையைத் தெளிவுறுத்திக் காட்டியிருக்கும் காட்சி கருதி யுணர வுரியது.

பனிவரு கண்ணின் நீயே! என்றதனால் பரதன் அதுபொழுதிருந்த பரிதாப நிலையை முழுதும் உணர்ந்து கொள்ளுகிறோம். அண்ணனை நேரே காண அவாவி உள்ளமும் உயிரும் உருகிக் கண்ணீரும் கம்பலையுமாய் மறுகி நிற்கின்றான் ஆகலால் அந்த நிலைமை நீர்மைகளை இந்தவாறு தலைமையா விளக்கியருளினன்.

பார்த்தி! என்றது அண்ணனை விரைந்து கண்ணார நேரே கண்டு மகிழலாம் என உள்ளம் தெளிய உறுதி கூறியுள்ளமை தெரிய வந்தது. அனுமானுடைய இனிய மொழிகள் கவலைகளை நீக்கி உவகைகளை ஆக்கி உயர் நிலைகளில் ஒளி புரிந்து வந்தன.

கங்கா நதியின் வடகரையில் எழில் நிறைந்த குளிர் பூம் பொழிலில் இராமனைக் காண விரும்பிப் பரதன் முதலியோர் ஆவலோடு நின்றனர். அந்த நிலையில் அவர் இருக்க இனிமேல் இராமன் முனிவர் ஆச்சிரமத்தில் இருந்த நிலைமையைக் காண வருகிறோம். உரிய காட்சி அரிய மாட்சியாய் நிலவி நலமா நின்றது.

விருந்து அருந்தி இருந்தது

பெருந்தகைமை நிறைந்த அருந்தவ முனிவர் உவந்து புரிந்த விருந்தினை அருந்தி இராமன் அங்கே மனைவியுடன் மகிழ்ந்திருந்தான். அது பொழுது குகன் உவகை மீதூர்ந்து அவனைக் காண வந்தான். அனுமான் அயோத்தி நோக்கி வான வீதி வழியே முன்னம் வாவி வரும்போது பரத்துவாச முனிவர் தவச்சாலையில் இராமன் வந்துள்ளதைக் குகனிடம் உரைத்துப் போனான் ஆகலால் அவன் பேரானந்தம் உடையவனாய் நேரே காண அவாவித் தனது பரிவாரங்களோடு திரண்டு வந்து இராமனைக் கண்டு தொழுது வணங்கி உழுவலன்புடன் உருகி நின்றான்.

குகன் வந்தது.

அருந்தவன் சுவைகள் ஆறோடு அமுதினிது அளிப்ப ஐயன்
கருந்தடங் கண்ணி யோடும் கனைகழும் துணைவ ரோடும்
விருந்தினிது அருந்தி நின்ற வேலையில் வேலை போலும்
பெருந்தடந் தானையோடும் கிராதர்கோன் பெயர்ந்து வந்தான்.

வணங்கி நின்றது.

தொழுதனன் மனமும் கண்ணும் துளங்கினன சூழ ஓடி
அழுதனன் கமலம் அன்ன அடித்தலம் அதனின் வீழ்ந்தான்
தழுவினன் எடுத்து மார்பில் தம்பியைத் தழுவு மாபோல்
வழுவிலா வலியர் அன்றோ மக்களும் மனையும் என்றான். (2

சேமம் விசாரித்தது.

அருளுனது உளது நாயேற்கு அவரெலாம் அரிய வாய
பொருளலர் நின்னை நீங்காப் புணர்ப்பினால் தொடர்ந்துபோந்து
தெருள்தரும் இளையவீரன் செய்வன செய்க லாதேன்
மருள்தரும் மனத்தி னேனுக்கு இனிதன்றோ வாழ்வுமன்னோ?

ஆற்றி யருளியது.

ஆமன பிறவும் பன்னி அழுங்குவான் தன்னை ஐய!
நீயிவை உரைப்பது என்னே பரதனின் நீ வேறுண்டோ?
போயினிது இருத்திஎன்னப் புளினர்கோன் இளவல் பொற்றாள்
மேயினன் வணங்கி அன்னை விரைமலர்த் தாளின் வீழ்ந்தான்.

அறிமுகம் செய்தது.

தொழுதுநின் றவனை நோக்கித் துணைவர்கள் தமையும் நோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன் மொழிகுவான் முழுநீர்க்கங்கை
தழுவிரு கரைக்கும் நாதன் தாயினும் உயிர்க்கு நல்லன்
வழுவிலா எயினர் வேந்தன் குகன்எனும் வள்ளல் என்பான்.

இங்கே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை வியந்து காண்கின்றோம். தனது வரவைத் தம்பி பரதனுக்கு அறிவிக்கும்படி அனுமானை அனுப்பிவிட்டு இராமன் முனிவரது இனிய விருந்தினனாய் மருவி மகிழ்ந்திருந்தான். பெரிய தவசியோடு அரிய அறிவுரைகள் ஆடி அங்கே உவந்திருக்கும்பொழுது குகன் உழுவலன்போடு வந்து இவ் வீரனைத் தொழுது வணங்கி உரிமையுடன் உருகி நின்றான்.

கண்ணீர் மார்பில் தாரை தாரையாய் வழிந்து ஓட அழுத கண்ணனாய் அவன் நின்றநிலை விழுமிய ஓர் அன்பின் உருவமாய் விளங்கி நின்றது. பரிவால் உருகி நின்ற அவனை உரிமையோடு இராமன் உவந்து நோக்கி "நம் வீட்டில் எல்லாரும் சுகமா இருக்கிறார்களா? காரியங்கள் யாவும் சேமமாய் நடக்கின்றன வா?" என்று ஆர்வத்தோடு விசாரித்தான். அந்த இனிய மொழி

களைக் கேட்டதும் குகனுடைய விழிகளிலிருந்து மேலும் நீர் பெருகி வழிந்தது. அழுது கொண்டே பதில் சொன்னான்: "ஆண்டவா! உங்கள் பின்னே வந்து ஊழியம் புரியாத பாவியான என்னுடைய வாழ்வும் ஒரு வாழ்வா! இளைய பெருமாள் செய்துவரும் ஏவலில் ஓரளவாவது உடன் தொடர்ந்து வந்து அடியேன் செய்ய வேண்டும் என்று விரும்பினேன்; அந்தப் புண்ணியம் எனக்கு இல்லாமல் போயது" என வாய் மொழிந்து கண்ணீர் சொரிந்து நின்றான். அந்தப் பரிதாப நிலை பரிவின் அளவைத் தெளிவா விளக்கி நின்றது. உரிமையோடு உருகி நிற்கின்ற அவனைப் பரிந்து பார்த்து "என் அப்பா குகா! நீ இப்படி மறுகுகிறாய்! தம்பி பரதன் அயோத்தியில் குடும்பத்தைப் பாதுகாத்திருந்தான்; அதுபோல் நீயும் இங்கே இருந்தாய்! எனக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் இளையவன் ஒருவனே உடன்வந்து செய்தான்; நீவிர் இருவீரும் என் ஆணையின் படியே ஆவன புரிந்து அமர்ந்திருந்தீர்! அவ்வாறு உரிமையாயிருந்தும் இவ்வாறு பரிந்து வருந்துகிறாய் உள்ளம் உளையாமல் இளையவனோடு போய் அளவளாவியிரு" என்று இராமன் அன்புரிமையோடு பண்புரையாடினான். அந்த இன்பமொழியால் ஓரளவு துன்பம் நீங்கினான்.

அதன்பின் சானகி தேவியின் அடியில் விழுந்து தொழுதான்; தம்பி இலக்குவனை வணங்கினான். இந்த அன்பனை அங்கே சுக்கிரீவன் முதலிய எல்லாருக்கும் அறிமுகப்படுத்தி இவனுடைய குணநீர்மைகளை எல்லாம் இராமன் வியந்து புகழ்ந்தான். யாவரும் கேட்டு ஆவல் மிகுந்து ஆனந்தம் அடைந்தனர். குகனுடைய அன்புநிலையையும் பண்பாடுகளையும் முன்பு அறியாதிருந்த எல்லாரும் அன்று தெரிந்து அதிசயம் மீதூர்ந்து அகம் மிக மகிழ்ந்தனர்.

பரிவின் நீர்மை ஓர் உருவு கொண்டதுபோல் அவன் மருவி நின்றமையால் அனைவரும் அவன்பால் அன்பாய் உருகிநின்றனர். உழுவலன்புக்கு ஒரு விழுமிய காட்சியாய் அவன் விழி தெரிய நின்றான். அழுத கண்ணீர் அவனது நிலையைத் தெளிவாக்கியது.

தொழுதனன்; மனமும் கண்ணும் துளங்கினன்;
சூழ ஓடி அழுதனன்

இராமனைக் கண்ட பொழுது குகன் கொண்ட நிலைகளை இங்கே நாம் கண்டு உருகுகிறோம். உள்ளே பெருகியுள்ள

அரிய அன்புகளை வெளியே நிகழ்த்துள்ள எளிய செயல்கள் யாவரும் தெளிவாத் தெரியச் செய்து ஒளி புரிந்து நிகின்றன.

வனவாசத்தில் கூடவே தொடர்ந்துபோய் எவ்வழியும் இராமனுக்குச் செவ்வையாய் ஏவல் செய்ய வேண்டும் என்று மூண்டு நின்றான்; அவ்வீரன் தடுத்து நிறுத்தினன். "கானக வாழ்வு முடிந்து மீண்டு நான் அயோத்திக்கு வரும்பொழுது உன்னை வந்து காணுவேன்" என்று பேணி விடுத்து அவன் பிரிந்து போனான். அந்தப் பிரிவில் உள்ளம் உருகிப் பரிதாபமாய் இவன் மறுகியிருந்தான். மீண்டு வருகிற நாளை எண்ணி எண்ணிப் பரதன் போலவே இவனும் நைந்து வந்தான்; ஆண்டவன் வரவைக் காணுமையால் முடிவில் மாண்டு போக மூண்டு நின்றான்; அந்த நிலையில் அனுமான் வான வீதியிலிருந்து ஒலித்துப் போன ஒலியைக் கேட்டு உள்ளம் உவந்து வள்ளலை விரைந்து காண வந்தான். அவ்வாறு வந்து நேரே கண்ட போதுதான் இவ்வாறு தொழுது அழுது உழுவலன்பால் உருகி மறுகி நின்றான் திருவடியில் நெடிது விழுந்து அழுது கிடந்தவனை இருகையாலும் வாரி எடுத்து இராமன் மார்போடு அணைத்து ஆர்வவுரை கூறி ஆற்றியருளினன். அவனது விழுமியநீர்மை வியனுவிரிந்து விளங்கியது.

> தழுவினன் எடுத்து மார்பில்
> தம்பியைத் தழுவு மாபோல்.

தன் காலில் விழுந்து தொழுத குகனை இராமன் ஆவலோடு தழுவி எடுத்துள்ளமையை இது விழிதெரிய விளக்கியுள்ளது. தம்பியைத் தழுவுமாபோல் என்றது அந்த நம்பியின் கெழுதகைமையையும் கேண்மையையும் நன்கு உணர்த்தி நின்றது.

குகன் ஒடும் ஐவர் ஆனேம் என்று முன்னமே * கூறியுள்ள அந்த உரிமை இங்கே பலரும் காணச் செயலில் தெரிய வந்தது.

தம்பி பரதனைத் தழுவுவது போலவே இந்த நம்பி குகனைத் தழுவி யிருக்கிறான். உவமை வாசகத்தில் உள்ளன்பின் உரிமை ஒளி வீசியுள்ளது. உடன் பிறவாதிருந்தும் பிறந்தவனாகவே பேணிப்பேரன்பு பூண்டிருப்பது பெரிய அதிசயமாய் நீண்டு திகழ்கிறது. அரிய பெருந்தகைமை தெளிவாய் அறிய நின்றது.

---

* இந்நூல் பக்கம் 3662, வரி 23 பார்க்கவும்.

ஓர் உயர்ந்த அரசகுலத் தோன்றல் தாழ்ந்த வேடுவனை இவ்வாறு உழுவலன்போடு தழுவி மகிழ்ந்துள்ளது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. சீவான்மா தூய அன்பு தோய்ந்து நின்றால் பரமான்மா அதனை நேயமா உவந்து தழுவிக் கொள்ளும் என்னும் விழுமிய தத்துவ நிலை இங்கே நன்கு உய்த்துணர நின்றது.

உயிர் புனிதமாய் உயரின் அது பரமனோடு இனிது கலந்து இன்பம் மிகப் பெறுகிறது. அன்பின் வழியே ஆண்டவனுடைய அருளின்பங்கள் யாண்டும் வெளியாய் விரைந்து வருகின்றன.

. அன்பின் வழியது உயிர் நிலை. (குறள், 80)

உயிர் இன்பமாய் உயர்வது அன்பினாலேயாம் என்பது இதனால் அறிய வந்தது. கடவுளுடைய அருள் ஒளி அன்பின்வழியே உயிர்களிடம் இன்ப ஒளியாய் இனிது வெளி வருகிறது.

அன்பன் ஆகும் தனதாள் அடைந் தார்க்கெல்லாம்
செம்பொன் ஆகத்து அவுணனுடல் கீண்டவன்
நன்பொன் ஏய்ந்த மதிள்சூழ்திருக்கண்ண புரத்து
அன்பன் நாளும் தன்மெய்யர்க்கு மெய்யனே.
(திருவாய்மொழி)

மெய்யான அன்பர்களுக்கு மெய்யனாய் மருவி இறைவன் இன்ப நிலையை அருளுகிறான் என நம்மாழ்வார் இவ்வாறு அருளியுள்ளார். சீவர்களுடைய மெய்யுணர்வு இறைவனை அறிகிறது; மெய்யன்பு அவனை உரிமையா மருவி மகிழ்கின்றது. அன்பால் அரிய பல இன்ப நலங்கள் விளைந்து வருகின்றன. மணத்தால் மலரும், சுவையால் கனியும் போல் அன்பால் மனிதன் மகிமையுறுகிறான். தனது புனிதமான அன்பினால் சக்கரவர்த்தித் திருமகனோடு குகன் ஒக்க நிற்க நேர்ந்தான். பக்கம் வரவும் கூசுகிற அவனை மிக்க மேலான தலைமையில் உயர்த்தி மேன்மைகள் புரிந்துள்ளது அன்பே ஆதலால் அதன் அதிசயநிலை அறியவந்தது.

மக்களும் மனையும் வலியர்?

வீட்டில் எல்லாரும் சேமமா? மதினியும் குழந்தைகளும் சுகமாயிருக்கிறார்களா? என்று ஒரு அண்ணன் தனது தம்பியிடம் சேம நலங்களை நேமமா விசாரிப்பது போல் இராமன் குகனிடம் இங்கே உரிமையோடு பிரியமா உறவுகளை உசாவி யிருக்கிறான்.

அன்பு மீதூர்ந்து இந் நம்பி இவ்வாறு கேட்டபோது அவன் கண்கள் நீர்ததும்ப வெம்பிவருந்திவெய்துயிர்த்து மொழிந்தான்.

இளைய வீரன் செய்வன செய்கலாதேன்.

இலக்குவன் இராமனுக்கு ஏவல் செய்தது போல் தான் ஆவலோடு செய்ய அவாவி முயன்றும் தனக்கு அது கிடைக்க வில்லையே! என்று மனக்கவலையோடு குகன் மறுகி இருப்பதை இவ்வுரை தெளிவா உணர்த்தி உரிமையைத் துலக்கியுளது.

இவ்வாறு இவன் உள்ளம் உளைந்து மொழியவே அவ் வள் ளல் உரிமையான இனிய மொழிகளால் தேற்றியருளினன். ஆறுதல் உறும்படி தேறுதல் கூறியது சீரிய பண்போடு வந்தது.

பரதனின் நீ வேறு உண்டோ?

பரிவு மீதூர்ந்து இராமன் இவ்வாறு குகனை நோக்கி அறி வுரை கூறியிருக்கிறன். "பரதன் என் குடும்பத்தைப் பாதுகாத் திருந்ததுபோல் நீயும் இருந்தாய்! இரண்டுபேரும் என் ஏவலின் படியே இருந்துள்ளமையால் எனக்கு உதவியாய் ஆதரவு செய் தவர்களே; ஆதலால் நான் மிகுந்த உவகை அடைந்துள்ளேன்" என்று அவன் உள்ளம் மகிழ இவ்வள்ளல் உரைத்தருளினன்.

குகனையும் பரதனையும் ஒரு நிகராக இக்கோமகன் இங்கே குறித்தது முன்பு கூறிய உரிமையை உறுதிப்படுத்தியருளியது.

"முன்பு ஒரு நால்வேம்; இனிநாம் ஐவர்கள்." (கங்கைப்படலம்)

என அன்பு ததும்ப இராமன் முன்பு உரைத்தது ஈண்டு மீண் டும் சிந்திக்க வந்தது. உழுவலன்பால் விளைந்த இனிய கிழமை கெழுதகைமை தோய்ந்து விழுமிய பண்புடன் வெளி வந்துளது

உன்கிளை எனது அன்றே? உறுதுயர் உறலாமோ?
என்கிளை இதுகா! என் ஏவலின் இனிதுஎன்றான்.

குகன் முன்னம் தன்னேடு வனவாசம் செய்ய மூண்டு பின் தொடர்ந்தபோது இராமன் அன்புரிமையுடன் * இன்ன வாறு உரைத்து நிறுத்திச் சென்றான் ஆகலால் அயோத்தியில் பரதன் போலவே சிருங்கிபேரத்தில் குகன் அமர்ந்து தன் குடும் பத்தைக் காத்து வந்ததாக இக் கோமகன் களித்து நின்றான்.

---

* இந்நூல் பக்கம் 1542 வரி 17 பார்க்க.

பெருந்தகைமையும் அரிய பண்புகளும் இக் குலமகனிடம் எவ்வழியும் நலமாய் நிலவி வருகின்றன. உரியவர்களிடம் உரிமையோடு பழகிவரும் கிழமை விழுமிய நீர்மையாய் விளங்கிமிளிர்கிறது. உள்ளம் உவந்து தெளிய உறவுரைகளாடிக் குகனைத்தேற்றியருளிய பின்பு அவனுடைய நிலைமை தலைமைகளையும் நீர்மை சீர்மைகளையும் துணைவர்களிடம் இந்நாதன் நலமா உரைத்தான்.

கங்கை இருகரைக்கும் நாதன்;
தாயினும் உயிர்க்கு நல்லான்.

குகனை இவ்வாறு உரியவர்களிடம் இராமன் தெரியச் செய்துள்ளான். புதிதாய் வந்தவனிடம் அதிக ஆர்வம் பூண்டு ஆண்டவன் உறவுகொண்டாடி வருவதைக் கண்டு அதிசயம் நீண்டு வானர வேந்தன் முதலாயினோர் வியந்து நின்றனர் ஆதலால் அவரது நிலைமையைக் கருதி நோக்கியே இக் குலமகன் குகனுடைய தலைமையைத் துலக்கித் தகுதியை நயமா விளக்கினான்.

தெற்கு வடக்கு என்னும் இரு திசைகளிலுமிருந்து கங்கா நதியைக் கடந்து செல்லும் பிரயாணிகள் நாளும் செலுத்தி வருகிற வரிப்பணமும், கரைகளின் அருகே விரிந்து பரந்திருந்த நில புலங்களும், குடிபடைகளும் இவனுக்குத்தனிஉரிமைகளாயினிது அமைந்திருந்தன ஆதலால் கங்கை இரு கரைக்கும் நாதன் என்றார்.

இவனுடைய அனுமதி இல்லையானால் எவரும் கங்கையைக் கடந்து செல்ல முடியாது. பல தோணிகளும் இவனுக்குக் காணியா யிருந்தன. வருவாய்கள் வளமா மருவி வந்தன.

செல்வமும் அதிகாரமும் பல்வகை ஆற்றலும் நிறைந்திருந்திருந்தாலும் யாதொரு செருக்கும் இன்றி எல்லா உயிர்களிடத்தும் அருள் புரிந்து ஆதரவாய் ஒழுகி வந்தான். அந்தக் கருணை நிலையை யாவரும் கருதியுணரும்படி தாயினும் உயிர்க்கு நல்லான் என அத்தூயவனை இப்புனிதன் இனிது துலக்கியருளினான்.

தன் தாயினும் தன்பால் அன்பால் அவன் உருகி வந்துள்ளமையால் அவ்வுருக்கம் இவ்வீரனுடைய உள்ளத்தை உருக்கி வந்துள்ளது. மானச மருமம் இங்கே தெரிய நின்றது: கானகம் போன தன் பிள்ளையை நினைந்து கோசலைத் தாய் உள்ளம் உருகியிருந்ததினும் இவன் பெரிதும் உயிர் மறுகிஉருகி நின்றுள்ளான்.

"மானேர் விழியாள் உடனே வனமுன்
போனான் ஒருநாள் வருநாள் இலதோ?
தேனே! அமுதே! தெளிவே! தெளிவின்
ஊனே! உயிரே! உலகா ளுடையாய்!"

என்று நாளும் இராமனையே நினைந்து இன்னவாறு உள்ளமும் உயிரும் உருகி வந்துள்ளமையால் இவனுடைய பரிவு நிலையை எவர் எல்லை கண்டு சொல்ல வல்லவர்? இந்த அரிய அன்பு இராமனுடைய உள்ளத்தை எவ்வழியும் கொள்ளை கொண்டுள்ளமையால் யாண்டும் பரவசமாய் இவனைப் பாராட்டி வருகிறான்.

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. (குறள், 74)

அன்பால் விளையும் இன்பங்களைத் தேவர் இங்ஙனம் உணர்த்தியுள்ளார். ஒருவனிடம் உண்மையான அன்பிருந்தால் அவனோடு எல்லாரும் ஆர்வமாய் நண்பராவர் என்னும் இது இங்கே நன்கு சிந்திக்கவுரியது. இனியபண்புமனிதனைத் தனியேஉயர்த்துகிறது.

இராமபிரானுடைய அரிய ஆர்வத்தையும் பெரிய நண்பையும் குகனுடைய அன்பு தனி உரிமையாய்ப் பெற்று யாண்டும் இனிமை தோய்ந்து மகிமை வாய்ந்துள்ளது. அவ்வுண்மை இராமகாவியம் முழுவதிலும் சீவிய ஓவியமா ஒளி வீசி வருகிறது.

கண் எதிரே நேரே காணாதிருந்தாலும் உழுவலன்புடையவர் உள்ள விழியால் கண்டு உயிர்க்கிழமை கொண்டுள்ளனர்.

மங்குல்ஐம்பதி னாயிரம்யோசனை மயில்கண்டு நடம்ஆடும்;
தங்கும்ஆதவன் நூறாயிரம்யோசனை தாமரைமுகம்விள்ளும்;
திங்கள் வெங்கதிர்க் கிரட்டியோசனையுறச் சிறந்திடும்அரக்காம்பல்;
எங்கண் ஆயினும் அன்பராய்இருப்பவர் இதயம்விட் டகலாரே.
[விவேகசிந்தாமணி]

அன்பின் அதிசய நிலையை இது மதி தெளிய விளக்கி யுள்ளது.

விழுமிய உழுவலன்புக்குக் குகன் உலகறிந்த சாட்சியாய் ஒளி மிகுந்து நிற்கின்றான். அவனுடைய நிலைமை நீர்மைகளைத் தன்னைச் சூழ்ந்துள்ள தலைவர்களுக்கு இராமன் இனிது விளக்கினான். விளக்கிய முறை விழுமிய நிலையில் விளங்கி வந்தது.

வழுவிலா எயினர் வேந்தன்;
குகன் எனும் வள்ளல்.

தூய கங்கைத் துறைவன், தாயினும் நல்லவன், என்று சொல்லி வந்தவன் இறுதியில் இவ்வாறு பெருமைகள் தெரிய வுரைத்தான். வேந்தன், வள்ளல் என்றது ஈண்டு ஓர்ந்து சிந்திக்க நேர்ந்தன. அரிய குறிப்புகள் உரைகளில் மருவியுள்ளன.

சக்கரவர்த்தித் திருமகன் ஆன தான் நண்பனுகத் தழுவிக் கொண்டவன் மிக்க ஒரு வேந்தனே; மேலான வள்ளலே என்பதைத் தன்பாலுள்ளவர் எல்லாரும் உள்ளம் தெளிய உணர்த்தினுன். இனிய ஆர்வ மொழிகள் பெரிய சீர்மைகளை விளக்கின.

தன்னேடு துணைவராக நேர்ந்தபோது சுக்கிரீவனும், விபீடணனும் வெறுமையாகவே சேர்ந்தனர். தன்னைச் சார்ந்த பின்பு தான் அவரை இக்கோமகன் வேந்தர் ஆக்கி வைத்தான். குகனை அவ்வாறு இவன் யாதும் ஆக்கவில்லை. இயல்பாகவே ஆக்கமுடைய அரசனுய் அவன் அமைந்திருக்கிருன். புதிய வேந்தராய் வந்த அந்த இருவரும் இயல்பாகவே உயர் வேந்தனுயுள்ள குகன்பால் மதிப்பும் மாண்பும் பூண்டு உரிமையோடுஒழுகும்படி இந்த மதியூகி இவ்வாறு அதிவிநயமாய் உரைத்தருளினுன்.

ஐவர், அறுவர், எழுவர் என்ற நிலையில் குகன், சுக்கிரீவன, வீடணன் முறையே இந்த இறைவனேடு துணைவராய்க் கெழுமியுள்ளனர். தன்னைச் சார்ந்தவரும் வேந்தராய் வர இவ் வேந்தர் வேந்தன் விளங்கியுள்ளான். அவ் வுண்மை இங்கே துலங்கியது.

இப்பெருமான் பேசிய பிரியம் நிறைந்த அறிவுரைகளைக் கேட்டதும் எல்லாரும் பேரன்புடையராய்க் குகனிடம் பெரு மதிப்புப்பூண்டு உரிமையோடு அவனை உவந்து கொண்டாடினுர்.

அண்ணல்அஃது உரைத்தலோடும் அரிகுலத்து அரசன்ஆதி
நண்ணிய துணைவர் யாரும் இனிதுறத் தழுவி நட்டார்;
கண்ணகன் ஞாலம்எல்லாம் கங்குலால் பொதிவானபோல
வண்ணமால் வரைக்கும் அப்பால் மறைந்தனன் இரவி என்பான். [1

அலங்கலந் தொடையினுனும் அந்தியின் கடன்கள் ஆற்றிப்
பொலங்குழை மயிலினேடும் துயிலுறப் புணரிபோலும
இலங்கிய சேனை சூழ இளவலும் எயினர் கோனும்
கலங்கலர் காத்து நின்ருர் கதிரவன் உதயம் செய்தான். (2)

இங்கே நிகழ்ந்துள்ள காரியக் காட்சிகளைக் கூரிய

நோக்கோடு ஓர்ந்து காண்கின்றோம். அனுமான் அயோத்திக்குச் சென்ற அன்றே குகன் இராமனைக் காண வேணவாவோடு முனிவருடைய ஆச்சிரமத்திற்கு வந்துள்ளான். பேரன்பால் உள்ளமும் உயிரும் உருகி வந்துள்ள அவனை இவ்வீர வள்ளல் உரிமையோடு உபசரித்து உற்ற துணைவர்கள் யாவருக்கும் அறிவித்து உவகைமீக் கூர்ந்தான். புதிதாய் வந்த அவனை எல்லாரும் அதிசய ஆர்வத்தோடு பேணி நின்றனர். அந்நிலையில் பொழுதும் அடைந்தது; அடையவே அந்தியில் செய்யவுரிய சந்தி முதலிய கருமக் கடன்களை முடித்துத் தருமமூர்த்தியான இராமன் தவசியோடு சிறிது நேரம் அளவளாவியிருந்து பின்பு உறங்கப் போனான். அந்த இன்பத் துயில் இனிய கனிவாயிசைந்திருந்தது.

பொலன்குழை மயிலினோடும் துயில் உற

அன்று அங்கே இராமன் விழிதுயின்றுள்ள நிலையை உலக விழிகள் காண இவ்வாறு கவி செவ்வையாக் காட்டியிருக்கிறார். மயிலும், துயிலும் என்றது இயலும் செயலும் தெரிய வந்தது. கார்மேகத்தைக் கண்டால் மயில் களித்து ஆடும்; அத்தகைய கரிய பைம் புயல் அயலே இயல்பாய் மருவி இருக்க நேர்ந்தமையால் அதன் ஆனந்தம் அளவிடலரியதாய் ஓங்கி நின்றது.

அவ்வுளவுகள் ஈண்டு உணர வந்தன. கோல மயிலும் நீல மேகமும் சாலவும் மகிழ்வாய்ச் சோலையில் துயின்றுள்ளன.

சேனைகள் யாவும் அங்கங்கே தங்கி உறங்கின.

இளவலும் எயினர்கோனும் காத்து நின்றனர்.

யாவரும் கண் அயர்ந்து உறங்கியிருந்த இரவில் உறங்காமல் நின்றவரை இது நன்கு உணர்த்தியுள்ளது. அந்தக் குளிர் பூம்பொழில் அயலே இலக்குவனும், குகனும் வில்லுகள் ஏந்திய கையினராய் எவ்வழியும் செவ்வையா நோக்கிக் காத்து வந்தனர். கண்ணை இமை காப்பதுபோல் அண்ணனை யாண்டும் காத்து வந்தவன் ஆதலால் ஈண்டுர். இளையவன் இளையாமல் தன் தொழிலை எழிலோடு செய்தருளினான். அவனோடு குகனும் இன்று துணை சேர்ந்தான். ஆகவே பாதுகாவல் உல்லாசமான போது போக்காய் எல்லா நிலைகளிலும் இனிது உலாவி வந்தது.

கதிரவன் உதயம் செய்தான்.

சூரியன் உதித்த சீரிய நிலை இவ்வாறு காரியமாக் காண வந்தது. இருள் கழிந்து ஒளி பரந்து வருவதையே பகல் என்று உலகம் பகர்ந்து வருகிறது. அந்த உதயம் கவிகள் இதயத்தில் மதிநலம் கனிந்து அதிசய ஒளிகளாய் வெளி வருகிறது. அன்று உதயமான இளங்கதிர் இராமனுடைய மணிமகுடத்துக்கு ஓர் ஒளி மணிபோல் எழுந்தது என்று அங்கே பரதன் கண்ட காலையில் கூறினர்; இங்கே யாதும் கூருமல் உதயம் செய்தான் என உதயனது செயலை மாத்திரம் தெரியச் செய்தார். அண்ணனுடைய முடிசூட்டு விழாவைக் கண்டு களிக்க அவாவி நிற்பவன் அத்தம்பியே ஆதலால் அன்றைய கதிரவன் காட்சியை அவனுக்கு இனிய மாட்சியாய்த் தெளிவுறுத்தினர். எங்கே எதைத் துலக்க வேண்டுமோ அங்கே அதை விளக்கி விடுவது கவியின் இயல்பாய் மருவி வருதலால் எவ்வழியும் சுவைபெருகிவருகிறது.

விடை பெற்றது.

இராமன் காலையில் எழுந்தான்; உரிய கருமங்களை முறையே முடித்தான்; பிரயாணத்துக்கு ஆயத்தமானன். அந்த மாதவனிடம் ஆதரவோடு விடைபெற்றான்; பிரிய மனம் இல்லாமல் முனிவர் மறுகி இசைந்தார்; இசையவே யாவரும் விமானத்தில் ஏறினர்; வான வீதியில் அவ்வூர்தி விசையாய் உயர்ந்து எழுந்தது. பின்பு வடதிசை நோக்கி நேரே விரைந்து பறந்து வந்தது.

கதிரவன் உதய காலைக் கடன்கழித்து இளவ லோடும்
அதிர்பொலன் கழலினன்அவ் அருந்தவன் தன்னைஎத்தி
விதிதரு விமானம் மேவி விளங்கிழை யோடும் கொற்றம்
முதிர்தரு துணைவரோடும் முனிமனம் தொடரப்போனன்.

பரத்துவாச முனிவருடைய் ஆச்சிரமத்தில் விருந்தினனாய்த் தங்கியிருந்த இம் மானவீரன் காலையில் விமானம் ஏறி வருகிற காட்சியை இங்கே கண்டு மகிழ்கின்றோம். நிகழ்ந்து வருகிற நிலைகளை நேரே உணர்ந்து சீரோடு தெளிந்து வருகின்றோம்.

முனி மனம் தொடரப் போனன்.

அரிய தவமுடைய அந்தப் பெரியவர் இராமனைவிட்டுப் பிரிய முடியாமல் பிரியம் மீதூர்ந்து வெளியே வந்து வானவீதியை அண்ணாந்து நோக்கி ஆவலோடு நிற்கின்ற நிலையை இது

நேரே காட்டியுள்ளது. விமானம் மேலே போகப் போகப் பார்வையும் ஆர்வமாய்க் கூடவே தொடர்ந்து போயிருக்கிறது.

கண்கள் வெளியே நோக்கிக் காதல் மூண்டு போயினும் உள்ளம் அதனினும் நீண்டு முன்னே போயுள்ளது. அவ் வுண்மை முனிமனம் தொடரப் போனான் என்றதனால் இனிது தெரிய வந்தது. உலக ஆசைகள் யாவும் ஒழிந்து பரமான்மாவை யே மனனம் செய்து வருதலால் முனிவர் என முத்தர்களுக்கு ஒரு பெயர் அமைந்தது. அத்தகைய தத்துவ தரிசியும் இராமனைத் தரிசித்துப் பிரிய முடியாமல் பிரியம் பெருகி உரிமை பூண்டுள்ள மையால் இவனது உண்மை நிலைமையை ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். ஞான யோகிகளின் புனித அறிவில் எழுகிற இனிய அமுதச் சுவை என மாயனைக் கூறி வருவது இத்தூயனைத் தொடர்ந்துவருகிறது. மாதவர்கருதும்மாதவன்மானவனுயினன்.

மேலே படர்ந்து விரைந்து வந்த விமானம் இரண்டு நிமிடத் தில் பன்னிரண்டு மைல்களைக் கடந்து விட்டது; விடவே அங்கிருந்தபடியே அயோத்திமா நகரம் நேரே தெரிய நேர்ந்தது.

தாவிவான் படர்ந்து மானம் தடையிலது ஏகும் வேலைத்
தீவிய கனியது ஆகிச் செருக்கிய காமச் செவ்வி
ஓவியம் உயிர்பெற்று என்ன உம்பர்கோன் நகரும் ஒவ்வா
மாவியல் அயோத்தி சூழும்மதில்புறம் தோன்றிற் றன்றே. [1

பொன்மதில் கிடக்கை சூழப் பொலிவுடை நகரம் தோன்ற
நன்மதிக் கிழவர் தம்மை நோக்கிய ஞான மூர்த்தி
சொன்மதித்து ஒருவராலும் சொலப்படா அயோத்தி தோன்றிற்று
என்னலும் கரங்கள்கூப்பி எழுந்தனர் இறைஞ்சி நின்றார். [2

வானவீதியில் மேலே மிகவும் உயர்ந்து விமானம் பறந்து வந்தமையால் வெகுதூரத்தில் இருந்தே திருவயோத்தி தெரிய வந்தது. தெரியவே இராமன் பிரியமாய் உரிய துணைவர்களை நோக்கி “அதோ! ஒளிகளை வீசி ஓங்கியுள்ளதே அதுதான் அயோத்தி” என்று ஆர்வத்தோடு காட்டினான். பதினான்கு ஆண்டுகள் முடிந்த நேரம்தான் தனது இராசதானியை இராமன் நேரே கண்டான். காணவே வீடணன் முதலிய துணைவர்களிடம் வேணவாவோடு கூறினான். கூறவே யாவரும் எழுந்து நின்று அந்த நகரை நோக்கி உவகை மீதூர்ந்து தொழுது புகழ்ந்தனர்.

கரங்கள் கூப்பி எழுந்தனர் இறைஞ்சி நின்றார்.

வான வீதியிலிருந்து அயோத்தியைக் கண்டபோது வானர வீரர்கள் யாவரும் ஆனந்தம் மீதூர்ந்து கைகளைக் குவித்துத் தொழுது நின்றுள்ள நிலையை இங்கே தெளிவாத் தெரிந்துகொள்கிறோம். தமது ஆண்டவன் நகரம் அதிசயமா நீண்டு நிலவியது.

உம்பர் கோன் நகரும் ஒவ்வா அயோத்தி.

இந்திரன் நகரம் ஆகிய அமராவதியினும் அதிசய அழகுடையது என அயோத்தியை இங்ஙனம் துதி செய்துள்ளமையால் இதன் மகிமை மாண்புகள் இங்கே மதி தெளிய வந்தன.

தேவரும் தேவராசனும் இனிது வாழ முடியாமல் இலங்கை வேந்தனால் கலங்கியிருந்தனர்; அந்த நிலையில் தனது நாயகனான இராமநாதனை அனுப்பி இடர்களை நீக்கி இதம் புரிந்துள்ளமையால் இந்த அயோத்திக்கு அந்த உம்பர் கோன் நகரம் உரிமையான கடனாளியாய் மருவியுள்ளது; அவ்வுண்மை நுண்மையா ஈண்டு உணர வந்தது. மா இயல் என்றது இலட்சுமி எப்பொழுதும் உவந்து வாழும் உயர்வும் இயல்பும் தெரிய நின்றது.

திருமகட்கு இனிய மலர்கொலோ? (நகரம், 2)

என்று முன்னம் குறித்துள்ள குறிப்பு ஈண்டு எண்ணவுரியது.

அழகு செல்வம் முதலிய பெருமைகள் பலவும் நிறைந்த அருமை நகரத்தை உரிமையாளர் காணவே உள்ளம் உவந்து தொழுதனர். தமது ஆண்டவன் அமர்ந்து ஆண்டுவரும் மாட்சிமையுடையது ஆதலால் அதன் காட்சி கழிபேருவகையை விளைத்து வந்தது. உரிய அன்பர்கள் அரிய இன்பங்களில் ஓங்கி வந்தனர்.

வான விமானத்திலிருந்து நெடுந்தூரத்திலுள்ள திருவயோத்தியை அவர்கள் கண்டு மகிழ்ந்து கை கூப்பித் தொழுது வரும் பொழுது அனுமான் கண்ணுக்கு அவ் விமானம் தெரிய வந்தது. வழிமேல் விழி வைத்து வானத்தையே நோக்கி நின்றான் ஆதலால் அந்நிலையில் முந்துற அவனுக்கு அது தோன்ற நேர்ந்தது.

விமானம் தோன்றியது.

அன்னதோர் அளவையின் விசும்ப தாயினும்
துன்னிருங் கதிரவர் தோன்றினர் எனப்

பொன்னணி புட்பகப் பொருவில் மானமும்
மன்னவர்க் கரசனும் வந்து தோன்றினர். (1

அனுமான் காட்டியது.

அண்ணலே காண்டியால் அலர்ந்த தாமரைக்
கண்ணனும் வானரக் கடலும் கற்புடைப்
பெண்ணருங் கலமும்நின் பின்பு தோன்றிய
வண்ணவில் குமரனும் வருகின் றூர்களை. (2

விமானத்தின் நிலை.

ஏழிரண் டாகிய உலகம் ஏறினும்
பாழ்புரம் கிடக்குறு படிய தாயதுஓர்
சூழொளி மானத்துத் தோன்று கின்றனன்
ஊழியான் என்றுகொண் டுணர்த்துங் காலையே. (3

மக்களின் மகிழ்ச்சி.

பொன்னெளி மேருவின் பொதும்பில் புக்கதோர்
மின்னெளி மேகம்போல் வீரன் தோன்றலும்
மன்னெதிர் வருகுநர் ஆர்ப்பு இராவணன்
தென்னகர்க் கப்புறத் தளவும் சென்றதால். (4

பரதன் கண்டது.

ஊனுடைய யாக்கைவிட்டு உம்மை வேண்டிய
வானுடைத் தந்தையார் வரவு கண்டெனக்
கானிடைப் போகிய கமலக் கண்ணனைத்
தானுடை உயிரினைத் தம்பி நோக்கினன். (5

தொழுதது.

கெட்டவான் பொருள்வந்து கிடைப்ப முன்புதாம்
பட்டவான் படர்ஒழிந் தவரிற் பையுள்நோய்
சுட்டவன் மானவற் றொழுதல் உன்னியே
விட்டனன் மாருதி கரத்தை மேன்மையான். (6

அனுமன் அகன்றது.

அக்கணத்து அனுமனும் அவணின் றேகியத்
திக்குறு மானத்தைச் செவ்வன் எய்திஅச்
சக்கரத் தண்ணலைத் தாழ்ந்து முன்னின்றான்
உக்குறு கண்ணநீர் ஒழுகும் மார்பினன். (7

இராமனிடம் இசைத்தது.

உருப்பவிர் கனலிடை ஒளிக்க லுற்றவப்
பொருப்பவிர் தோளனைப் பொருந்தி நாயினேன்
திருப்பொலி மார்பநின் வரவு செப்பினேன்
இருப்பன வாயின உலகம் யாவையும். (8 மீட்சி, 322---329)

நிகழ்ச்சிகளை நிரலே தெரிந்து மகிழ்ச்சி யுறுகின்றோம்.

இராமனை எதிர்கொண்டு காண வேண்டும் என்று வேணவாவுடன் சேனைகளோடு வந்த பரதன் கங்கையின் வடகரையில் தங்கியிருந்தான். சூரியன் உதயம் ஆகவே ஆரியன் உதயத்தை அவாவி வான வீதியை எதிர் நோக்கி நின்றான். ஒவ்வொரு நிமிடமும் உள்ளம் துடித்து விரைந்தது. ஐயனைக் காணாமையால் ஐயமும் நேர்ந்தது. "என்ன அனுமா! அண்ணலை இன்னும் காணோமே? நீ சொன்ன சொல்லை நம்பியே என் உயிர் உள்ளது" என்று பரதன் பரிவோடு மறுகவே மாருதி ஆறுதலாகத் தேறுதல்கூற வாயைத் திறந்தான். அப்பொழுது வானவீதியிலிருந்து விமானம் வருகிற ஓசை கேட்டது; கேட்கவே மேலே கூர்ந்து நோக்கினான்; வானவூர்தி வருவது தெரிந்தது; தெரியவே பேரானந்தம் உடையவனாய் நேரே பரதனிடம் சுட்டிக் காட்டினான்; காட்டவே ஆவலோடு நோக்கினான்; வெகுதொலையில் வருகிற அதனைக் கண்டான்; காணவே கண்ணும் உயிரும் எண்ணரிய இன்பங்களை எய்தின; விமானம் நெருங்கி வரவே கீழே கூடியிருந்த சேனை தளங்கள் எல்லாரும் உள்ளம் களித்துக் கைகளைத் தட்டித் தலைமேல் கூப்பிப் பெரிய ஆரவாரங்கள் செய்தனர்; எல்லை மீறிய ஆனந்தத்தால் துள்ளி முழங்கிய அந்த முழக்கம் வான மண்டலம் முழுவதும் எதிர் ஒலி செய்து தென் திசை நோக்கி விரைந்தது. விமானம் நெருங்கி வந்தபொழுது இரு கைகளையும் குவித்துத் தொழுது உழுவலன்புடன் பரதன் உருகி நின்றான். விழிநீர் பெருகி ஓடியது; கும்பிட விரைந்த போது அனுமானைப் பிடித்திருந்த பிடியை விட்டு விட்டான்; விடவே அவன் விரைந்து மேலே பாய்ந்து போனான். போனவன் வானவூர்தியுள் புகுந்து இராமன் அடியில் விழுந்து தொழுதான்; நிகழ்ந்ததை எல்லாம் நேரே கூறினான். குடிபடைகளோடு பரதன் எதிர்கொண்டு வந்துள்ளதை உரைத்தான்;

அந்த உரைகளைக் கேட்டதும் இராமன் உள்ளம் களித்து உவகை மீதூர்ந்தான். விமானம் வேகம் குறைந்து வானவீதியில் வட்ட மிட்டு நின்றது. கீழே நின்ற யாவரும் விமானத்தை விழைந்து நோக்கித் தொழுத கையராய்த் துதித்து ஆனந்தக் கூத்தாடினர். அந்தக் காட்சிகள் அன்பில் விளைந்த பேரின்ப ஒளிகளாய் யாண்டும் பெருகி நின்றன. களிப்பின் கலிப்புகள் கதித்தன.

ஆர்ப்பு இராவணன் தென்நகர்ப்
புறத்தளவும் சென்றது.

எதிர்கொண்டு காணவந்திருந்த சனத்திரள்கள் வானவீதியில் விமானத்தைக் கண்டதும் பெரு மகிழ்ச்சியால் பேரொலி செய்த ஆரவாரங்களின் நிலையை இது நயமா விளக்கியுள்ளது.

கங்கைக் கரையில் நின்று தேசமக்கள் ஆசையோடு முழக்கிய ஓசைகள் இலங்கை வரையும் சென்று தென்திசை எங்கணும் பரந்து நின்றன. மாண்டு மறைந்துபோன இராவணனை மீண்டும் கவி ஈண்டு இவ்வாறு ஞாபகப்படுத்தி யிருக்கிறார். தங்கள் ஆண்டவன் தென்திசையை வென்று வெற்றித் திருவோடு வந்துள்ளான்; அவனை வரவேற்க வந்த நாட்டு மக்கள் மிக்க மகிழ்ச்சியோடு ஆவலம் கொட்டி ஆர்த்து நின்றனர்; அந்த மகிழ்ச்சி நிலையை இங்ஙனம் புகழ்ச்சியாப் போற்றியுரைத்தார். உரைக் குறிப்புகள் நுனித்து உணர வந்தன.

இராமனுடைய புகழ் திசைகள்தோறும் பரவியுள்ளது; ஆயினும் அவனுடைய இசை தென்திசை வென்றியிலிருந்தே நன்கு வளர்ந்துள்ளது. ஓசை பெற்று உயர்ந்துள்ள அவனது இசையைச் சனங்கள் விளைத்த ஓசை இலங்கை முதலிய எல்லா இடங்களுக்கும் மீண்டும் நீட்டி மேன்மை காட்டி நின்றது.

சக்கரவர்த்தித் திருமகன் பால் தேசமக்கள் கொண்டுள்ள பாசமும் பரிவும் அவர் புரிந்த ஆரவாரமான ஓசைகளால் தெரிய வந்தன. உள்ளத்தில் பொங்கி எழுந்த உவகை உலகம் அறிய ஓங்கிப் பலவகை நிலைகளையும்நேரே உணர்ந்து கொள்ளவிரிந்தது.

அந்த ஆனந்த ஆரவாரத்தின் இடையே ஆகாய விமானமும் நேரே வந்தது. வரவே பரதன் பெருமகிழ்வோடு உருகி நோக்கினன். உரிமையான உயிர்ப் பாசம் பெருகி நீண்டது.

காளிடைப் போகிய கமலக் கண்ணனை
தானுடை உயிரினைத் தம்பி நோக்கினன்.

நீண்ட காலம் பிரிந்திருந்த அண்ணனை நேரே தம்பி பரிந்து கண்ட காட்சியை இது நன்கு வரைந்து காட்டியுள்ளது.

கால் நடையாக் கானகம்போன மானவீரன் மீண்டு வான விமானத்தில் வருகிருன்; அந்தப் போக்கையும் வரவையும் நோக்கி ஆக்க விளைவுகளை அறிந்து கொள்ளக் கானிடைப் போகிய என்ருர். போன என்னது போகிய என்றது போக நேர்ந்த காரணங்களை யூக விவேகமா ஓர்ந்து கொள்ள. கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் தீர்த்த கழல்வேந்து என்பது இராமனுக்கு ஒரு வீர விருதுப் பேராய் மேவியுள்ளது.

அரசுமுடி துறந்து இராமன் கானகம் போனது வானகம் வாழ நேர்ந்தது. விண்ணும் மண்ணும் வியனுய் வாழ வெற்றித் திறலை விளைத்து வீரமூர்த்தி மீண்டு வேந்தர் பெருமானுய் வர நேர்ந்துள்ளான். அவ் வுண்மையை நுண்மையா உணர்ந்து தன்மைகளைத் தேர்ந்து கொள்ள ஆர்ந்த குறிப்புகள் சார்ந்தன.

கமலக் கண்ணனை.

கண் அழகில் இராமனைக் கண்டு மகிழ இவ்வண்ணம் இது வந்துள்ளது. நீரில் பிறப்பது என்னும் காரணத்தால் தாமரைக்குக் கமலம் என்று ஒரு பேர் அமைந்தது. அந்த நீர்மையுடைய கண்களையுடையவன் ஆதலால் கண்ணேடிச் சென்று தேவர்களின் இடுக்கணைத் தீர்த்தருளினன். தாமரை மலர் போன்ற குளிர்ந்த இனிய அழகிய விழுமிய விழிகளின் எழில்கள் நம் விழி தெரிய வந்தன. கண்ணின் காட்சி எண்ணுறு மாட்சியாம்.

தாமரைக் கண்ணன். (குறள், 1103)

திருமாலைத் தேவர் இவ்வாறு குறித்துள்ளார். அந்தப் பெருமானே இந்த உருவில் இராமனுய் வந்திருக்கிருன். கமல நயனு! என்று அமரரும் இவனை வியனு விழைந்து போற்றி வருகின்றனர். கருணை ஒளி கண்ணின் வழியே வெளி வருகிறது.

கமலக் கண்ணன்என் கண்ணினுள்ளான்
காண்பன் அவன் கண்களாலே
அமலங்களாக விழிக்கும் ஐம்புலனும் அவன்மூர்த்தி

கமலத்தயன்நம்பி தன்னைக் கண்ணுதலானொடும் தோற்றி
அமலத்தெய்வத்தோடு உலகம்ஆக்கி என்னெற்றியுளானே.
(திருவாய்மொழி, 1-9, 9)

கமலக் கண்ணன் என்னும் பேரை இதில் காணுகின்றோம்.

கண்ணழகுடைய பெருமான் விண்ணும் மண்ணும் அழகுற விழி பரப்பி ஒளி நிரப்பி அளிபுரிந்து வருகின்றான் ஆதலால் அந்த வரவு நிலையில் உரிமையான இந்த உறவினங்கள் உணர வந்தன.

தான்உடை உயிரினைத் தம்பி நோக்கினான்.

பரதன் இராமனைப் பார்த்த பார்வையைக் கவி இவ்வாறு செவ்வையா வார்த்துக் காட்டி வாய்மை நீட்டியிருக்கிறார்.

தன் அண்ணனைத் தம்பி கண்ணால் கண்டான் என்று சொல்லவில்லை; தன் உயிரினை நோக்கினான் என்றே குறித்திருக்கிறார். இந்தக் குறிப்பு அரிய பல சிந்தனைகளை விளைத்துளது. உருவால் இருவராய் வெளியே தெரிய நின்றாலும் உயிர் ஒன்றாகவே மருவியுளது. உயிர்க்கு உயிராய் அண்ணன் இத் தம்பிக்கு நண்ணியுள்ளான். அந்த உண்மை ஈண்டு உணர வந்தது.

உயிர் கண்ணுக்குத் தெரியாது; ஆயினும் பரதனது உயிர் இராமன் என்னும் பேரோடு உலாவியுள்ளது. அந்த உருவத்தைக் காணாத பரிதாபத்தால் தன் உயிரை இவன் நீக்க விரைந்தமையால் இவனுடைய உண்மையான உயிரை நுண்மையா அறிந்து ஆன்மானந்த நிலையைத் தெளிந்து கொள்கின்றோம்.

எனக்கு உயிர் தனியே வேறு இல்லை; அது ஒரு வில்லைக் கையில் ஏந்திப் பசிய கோலத் திருமேனியோடு மருவியுள்ளது என்று சீதை முன்னம் குறித்தபடியே பரதனும் உரைத்து வருகிறான். உரியவர் உரைகளில் உண்மை நேரே தெரிய வருகிறது.

கண்ணனை உயிரினை நோக்கினான் என்று தன் அண்ணனை நோக்கிய தம்பியைக் கவி இவ்வண்ணம் நயமாக் காட்டி இருவருடைய நிலைமை நீர்மைகளை நேரே துலக்கியிருக்கிறார். கண்ணினும் உயிரினும் பிரியமாக அந்த நம்பியை இந்தத் தம்பி கருதி உருகி வருவதைக் காவியம் முழுவதிலும் கண்டு வருகிறோம். இவனுடைய பெரிய நீர்மையும் அரிய சீர்மையும் பிறவிப் பாசமும் உறவுரிமையும் உணர்வு நலனும் மனித மரபுக்குப் புனித போதனைகளை இனிது அருளி இன்பம் சுரந்து வருகின்றன.

விமானத்தை விழிகளிப்பக் கண்ட இவன் உழுவலன்புடன் தொழுது நிற்கவே அனுமான் விரைந்து மேலே தாவி இராமன் எதிரே மேவி நின்று சேம நிலைகளைத் தெரிய விளக்கினுன்.

உக்குறு கண்ணநீர் ஒழுகும் மார்பினுன்.

நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் மார்பில் வழிந்து ஓட மாருதி அங்கே நின்றநிலையை இங்கே இதனால் அறிந்துகொள்ளுகிருேம். ஆண்டவன் பால் இவன் பூண்டுள்ள அன்புரிமையை நீண்டு வழிகின்ற கண்ணீரால் நேரே தெரிந்து நிலைமைகளை உணர்ந்து நெஞ்சம் கனிந்து நாம் நீர்மை நிறைந்து நிற்கின்ருேம்.

சிறிது நேரம் தாமதித்தால் பரதன் நிலை என்னும்? இறைவன் வரவு யாதாம்? எனக் கருதி உருகி வருகிருன் ஆதலால் அந்த உருக்கத்தால் கண்ணீர் பெருக்கமாய்ப் பெருகி வந்துள்ளது. உள்ளத்தில் பொங்கிய பரிவு கண்ணீர் வெள்ளத்தால் வெளியே தெளிவாய்த் தெரிய வந்தது. எதிரே உருகி நின்றவன் பின்பு உரிமையோடு உண்மையை நயமா உணர உரைத்தான்.

நின் வரவு செப்பினேன்;
உலகம் யாவும் இருப்பன வாயின.

ஆண்டவா! நீ மீண்டு வருவதை அறிவித்தேன்; அதனுல் உலக உயிர்கள் நிலையுடன் வாழ்வன ஆயின என்று அயோத்தியில் நேர்ந்த நிலைமையை இவ்வாறு ஓர்ந்து தெளிய உணர்த்தியருளினுன். குறிப்பு மொழிகள் கூர்ந்து சிந்திக்க வந்தன.

விரைந்து போகாமல் நான் சிறிது தாமதித்திருந்தால் பரத நம்பி தீயுள் பாய்ந்து மாய்ந்திருப்பார்; நாடும் நகரமும் அடியோடு அழிந்திருக்கும்; அவ்வாறு கொடிய அழிவுகள் யாதும் நேராமல் தேவரீரது திருவருளால் எல்லாரும் சேமமாயுள்ளனர்; நின் வரவை யாவரும் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றனர் என்பான் இங்ஙனம் சொற் சுருக்கமா உரைத்து நின்ருன்.

உரையாடுவதில் அதிசய மதியூகி ஆதலால் அரிய பல பொருள்களைச் சிறிய சில மொழிகளில் அடக்கி நயமா விளக்கி வருகிருன். யாவும் இருப்பனவாயின என்றது எல்லாம் இறந்து ஒழிந்துபோக மூண்டன; அங்ஙனம் மாண்டு மடியாமல் ஆண்டவன் அருளால் பிழைத்தன என்பதைத் துலக்கி நின்றது.

மீண்டு வருவதாக முன்னம் குறித்த காலத்தின்நிலை சிறிது தவறி ணுலும் இளையவன் இறந்து போவான் என்று தெரிந்திருந்தும் முனிவர் வேண்டுகோளின்படி ஆண்டு விருந்து அருந்த ஆண்டவன் இணங்கி நின்றது பெருந்தவறு என்பதைச் சொல்லாமல் சொல்லினன். பிழை நேராதபடி தன்னை முன்னதாக அனுப்பிய தே பெருமானுடைய கரும வீரத்தைக் காட்டியுள்ளது என்று கருதி மகிழ்ந்தான். மகிழ்ச்சியில் நிகழ்ச்சிகள் நிலவி நின்றன.

உறுதி நலங்களை உள்ளம் தெளியச் சொல்லுவதில் மிகவும் வல்லவன் ஆதலால் இவனுடைய வாய்மொழிகள் யாண்டும் ஞான ஒளிகளாய் விளங்கி வருகின்றன. சொல்லின் செல்வன் என வில்லின் செல்வன் ஆன இராமனே இவனைப் புகழ்ந்து சொல்லியுள்ளமையால் இவனது சொல்லின் வன்மையை எல்லாரும் அறிந்து கொள்ளலாம். விரிந்த பல பொருள்களை விநயமாச் சுருக்கிச் சொல்வதே இவனிடம் இயல்பாய் அமைந்துள்ளது. பேச்சுக் கலைக்கு இவன் ஒரு புனித நிலையமாய் இனிது நிலவுகிருன். சில மொழிகளுள் பல அறிவு நலங்கள் தெளிவா ஒளி வீசி எவ்வழியும் செவ்வையாய் மிளிர்கின்றன.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர். [குறள், 649]

நல்ல சொல்வன்மை எது? என்று தெளிவா அறிய விரும்புவார்க்குத் தேவர் இதில் இங்ஙனம் தெரிய விளக்கியிருக்கிருர். சொல்லின் சுருக்கம் அறிவின் பெருக்கத்திலிருந்து விளைந்து வருதலால் சிறிது பேசுவோர் பெரிய மேதைகளாய் விளங்குகின்றனர். உணர்வின் சாரம் உரையின் சீரில் உறைந்துள்ளது.

Men of few words are the best men. (Shakespeare)

சில சொல்வோரே சிறந்த மனிதர் என இது வரைந்துளது.

மொழிகளைச் சுருக்கிப் பொருள்களைத் தெளிவா விளக்கி விளைவுகளை நயமாத் துலக்கிய அனுமானது விநய உரைகளைக் கேட்டதும் இராமன் யாவும் யூகித்து உணர்ந்து கொண்டான். கொள்ளவே உள்ளம் வியந்து மாருதியை ஆர்வத்தோடு உவந்து புகழ்ந்தான். மொழிகள் கெழுதகைமையாய்க் கெழுமி வந்தன.

தீவினை யாம்பல செய்யத் தீர்விலா
வீவிலை முறைமுறை விளைவ மெய்ம்மையால்

நீயவை துடைத்து நின்றளிக்க நேர்ந்ததால்
ஆயினும் அன்பினுய்! யான்செய் மாதவம். (1)

என்றுரைத்து அனுமனை இறுகப் புல்லினன்
ஒன்றுரைத் திருப்பதென் உனக்கும் எந்தைக்கும்
இன்றுணைத் தம்பிக்கும் யாய்க்கும் என்றனன்
குன்றிணைத் தனவுயர் குவவுத் தோளினுன். (2)

தன்பால் வந்து நிலைமைகளைச் சொன்னபொழுது இன்னவாறு இராமன் மனம் மகிழ்ந்து தழுவி அனுமானை நோக்கி உருக்கமா உரைத்திருக்கிருன். உரைகள் அந்த உள்ளத்தின் உவகைகளையும் கவலைகளையும் ஒருங்கே விளக்கியுள்ளன. தனக்காக அனுமான் உழைத்து வருகிற உழைப்புகளை எல்லாம் எண்ணி இனைந்து இவ்வீர வள்ளல் அவனை உரிமையோடு வியந்து பாராட்டியிருப்பது விழைந்து நயந்து சிந்திக்கவுரியது.

வென்றி வீரன் நன்றியுரை.

"நான் செய்த தீவினையால் துன்பங்கள் பல என்னைத் தொடர்ந்து அடர்ந்து துயருறுத்தி வருகின்றன; அவ்வாறு மூண்டு வருகிற கொடிய அல்லல்களை எல்லாம் ஒல்லையில் நீக்கி நீ எனக்கு உதவிபுரிந்து உவகைகளை விளைத்து வருகிருய்! உனது உபகார நிலைகள் எல்லையில்லாதன; உற்ற பிள்ளையைப் பெற்ற தாய் பேணுவதுபோல் எவ்வழியும் செவ்வையாய்ப் பேணி வருகிற உன்னுடைய உழுவலன்பும் விழுமிய பண்பும் உறுதியூக்கமும் யூக விவேகமும் அதிசய நிலையில் ஒளி மிகுந்துள்ளன. உன் நீர்மை சீர்மைகளைக் கருதியுணருந்தோறும் என் உள்ளம் உருகி வருகிறது. என்பும் உருகுமாறு உனது அன்பும் அறிவும் என்னை யாண்டும் பரவசப்படுத்தி வருகின்றன. உனக்கு நன்றி செலுத்த எவ்வகையிலும் இயலாது. எல்லாவற்றையும் செவ்வையாக் கருதி நோக்கின் நான் செய்துள்ள ஏதோ ஒரு புண்ணியமே இந்த உருவில் வந்து எந்த வழியும் எனக்கு இதம் புரிந்து வருவதாக உள்ளம் உவந்து உணர்ந்து அடங்குகின்றேன்; உனது மகிமை மாண்புகள் அளவிடலரியன" என்றுஇவ்வாறு உரிமை மீதூர்ந்து இவ்வீரவள்ளல் உரையாடியிருக்கிருன்.

பேசியுள்ள பேச்சால் உள்ளத்தின் பாசமும் நேசமும் உணர்வும் உருக்கமும் நேரே தெரிய வருகின்றன. மதங்க மலை

யில் தன்னைக் கண்டு பழகியதிலிருந்து அனுமான் செய்துவருகிற அரிய தொண்டுகள் யாவும் இராமன் உள்ளத்தில் பெரிய பரிவுகளை விளைத்திருத்தலை ஈண்டு வெளியாயுள்ள மொழிகளால் தெளிவா உணர்ந்து நிலைமை நீர்மைகளை ஓர்ந்து கொள்கிறோம்.

அனுமனை இறுகப் புல்லினான்.

இனிய விநயமொழிகளால் நிலைமைகளை நயமாத் துலக்கியருளிய அனுமனை இராமன் உழுவலன்புடன் தழுவியுள்ளான்; அவ்வுண்மையை இவ்வாசகம் விழி தெரிய விளக்கியுளது. இறுக என்றதனால் மார்போடு அழுந்தத் தழுவியிருக்கும் கெழுதகைமையை அறிந்து கொள்கின்றோம். உரிமையும் உறவும் உள்ளப் பரிவும் உரைகளில் நேரே பெருகி வந்துள்ளன.

உனக்கும் எந்தைக்கும் தம்பிக்கும்
யாய்க்கும் உரைப்பது என்?

ஆர்வம் மீதூர்ந்து தழுவிய கோமகன் பின்பு அன்பு கூர்ந்து இவ்வாறு கூறியருளினான். "அப்பனே! நீ எனக்குச் செய்து வருகிற உதவிநலங்கள் அளவிடலரியன; அவற்றிற்கு யாதொரு கைமாறும் செய்ய இயலாது. நன்றியறிவோடு உபசாரமொழிகளும் நான் கூற விரும்பவில்லை. தன் பிள்ளைக்குத் தாயும் தந்தையும் செய்துவருகிற ஆதரவுபோல நீ எனக்குச் செய்து வருகிறாய்! உனக்கு நான் உபசாரமாய்ப் புகழ்மொழி கூற நேரின் அது பெரிய அபசாரமாம். எல்லையில்லாத உபகாரங்களை உன்னிடமிருந்து நான் பெற்றுள்ளேன்; என்னிடமிருந்து நீ பெற உரியது யாதும் இல்லை. உனது அரிய நீர்மை பெரிய சீர்மையாய்ப் பெருகியுளது" என உருகி உரையாடியுள்ளான்.

தன்னுடைய தந்தை தாயர்கள் நிலையில் இந்த நம்பி அனுமானைச் சிந்தை செய்திருப்பது இங்கே தெரிய வந்தது. வெளியே வந்த வாய்மொழிகள் அந்த உள்ளத்தின் பண்பையும் நண்பையும் பரிவையும் அரிய பெரிய மேன்மைகளையும் தெளிவா விளக்கியுள்ளன. விழுமிய நீர்மைகள் விழி தெரிய வந்தன.

உழுவலன்புடன் எவ்வழியும் செவ்வையாய் ஊழியம் புரிந்து வருகிற உத்தம பத்தனை நோக்கி இக்கோமகன் கூறியுள்ள உரைகள் உலகத் தலைவர்கள் எவரும் உணர்ந்து தெளிந்து

உரிமையா ஒழுகி உயருமாறு இனிமையாய்க் கெழுமி நின்றுள்ளன. வார்த்தைகளில் கீர்த்திகள் கிளர்ந்து மிளிர்கின்றன.

குன்று இணைத்தன உயர் குவவுத் தோளினான்.

இவ்வென்றி வீரனை இவ்வாறு இங்கே விளக்கியிருக்கிறார். யாரும் அடைய முடியாத அதிசய வெற்றிகளை முழுதும்பெற்று உலகம் எல்லாம் துதிசெய்ய வந்துள்ளான் ஆதலால் அத் துதி மொழிகளுக்கு மூலகாரணமாயுள்ள தோள்களின் திண்மைகளையும் திறல்களையும் எழில் வீரங்களையும் விழி தெரிய அழகா வரைந்து காட்டினார். ஆண்மைக் காட்சி மேன்மையா வந்தது.

வீரலட்சுமியும் விசயலட்சுமியும் என்றும் நிலையாக் குடிகொண்டுள்ள எழில் நிலையங்கள் எதிரே தெரிய நேர்ந்தன.

தோள் கண்டார் தோளே கண்டார்.

என்றபடி வாள் கொண்ட கண்ணார் வைத்த கண் வாங்காமல் மொய்த்துவரச் செய்துள்ள அந்த அதிசய அழகுத் தோள்கள் அமரரும் துதிசெய்து தொழ வெற்றித் திருவோடு மீண்டு வந்துள்ளன ஆதலால் ஈண்டு இவ்வாறு அவற்றை நாம் கண்டு மகிழக் கவிஞர்பிரான் செவ்வையாக் காட்டியருளினார்.

ஆளாண்மை வாளாண்மை தாளாண்மை வேளாண்மை வில்லாண்மை வேலாண்மை வெல்லாண்மை முதலிய பேராண்மைகள் எல்லாம் இத்தோளாண்மைகளில் விளைந்து வந்துள்ளன. அவ்வுண்மைகள் நுண்மையா இங்கே ஓர்ந்து உணர வந்தன.

வானவீதியில் வாவிவந்த விமானத்தில் தாவி ஆண்டவனைத் தொழுது ஈண்டு நிகழ்ந்துள்ள நிலைகளை விளக்கினான்; விளக்கவே இராமன் உள்ளம் உவந்து நன்றியறிதலுடன் நயமொழிகள் கூறினான். அவ்வாறு ஆர்வவுரைகள் கூறி வருங்கால் விமானம் கங்கா நதியின் வடகரையை அடைந்தது; அடையவே கீழே நின்றுள்ள பரதனை அனுமான் நேரே சுட்டிக் காட்டினான். அந்தக் காட்சியில் ஆன்ம உருக்கங்கள் மேன்மையா ஓங்கி நின்றன. உரியவனைக் காணப் பெரியவன் பிரியமா நோக்கினான்.

பரதன் தோன்றியது.

ஈடுறு வான்துணை இராமன் சேவடி
சூடிய சென்னியன்; தொழுத கையினன்;

ஊடுயிர் உண்டென உலர்ந்த யாக்கையன்
பாடுறு பெரும்புகழ்ப் பரதன் தோன்றினன். (1)

அனுமன் காட்டியது.

தோன்றிய பரதனைத் தொழுது தொல் அறச்
சான்றென நின்றவன் இனைய தம்பியை
வான்தொடர் பேரரசு ஆண்ட மன்னனை
ஈன்றவள் பகைஞனைக் காண்டி ஈண்டென்றான். (2)

இராமன் கண்டது.

காட்டினன் மாருதி கண்ணில் கண்ட அத்
தோட்டலர் தெரியலான் நிலைமை சொல்லுங்கால்
ஓட்டிய மானத்துள் உயிரின் தந்தையார்
கூட்டுருக் கண்டன்ன தன்மை கூடினன். (3)

இங்கே நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளை நேரே காண்கின்றோம். நெஞ்சம் வியந்த நிலைமைகளைச் சிந்தித்து நீர்மை சீர்மைகளைக் கூர்மையா ஓர்ந்து ஆர்வமாத் தேர்ந்து தெளிந்து கொள்கிறோம்.

அண்ணலைக் காண வேண்டும் என்று வேணவாவுடன் எதிர்கொண்டு வந்து கங்கையின் வடகரையில் பரதன் நிற்கின்றான். தென்திசையையே அண்ணாந்து நோக்கி ஆவல் மீதூர்ந்துள்ளான். தொழுத கையும் அழுத கண்ணுமாய் உழுவலன்புடன் உருகி நிற்கின்ற அந்நிலை பரிதாபமாய்ப் பெருகி விளங்கியது. பிரிவின் துயரால் மறுகியுள்ளமை நேரே தெரிய வந்தது.

ஊடு உயிர் உண்டு என
உலர்ந்த யாக்கையன்.

பரதனுடைய உருவநிலையை இது வரைந்து காட்டியுள்ளது. உடல் இடையே உயிர் ஒன்று உண்டு என்று யூகமாய் அறிந்து கொள்ளும்படி அவன் சோகமாயிருந்துள்ளான். இளைத்து மெலிந்து எலும்பும் தோலுமாய்க் களைத்திருத்தலைக் கருத்தா உணர்ந்து வருத்தம் மிகுந்து மறுகி நிற்கின்றோம்.

உணவின்றி உறக்கம் இன்றித் தமையனையே கருதி யுருகியிருந்தான். அரிய தவ நிலையில் இருந்த அந்த விரத சீலத்தை மெய் மெய்யா உணர்த்தி நிற்கிறது. அந்நிலைமை இங்கே தலைமையாத் தெரிய வந்தது. தேக மெலிவு சோக விளைவாகின்றது.

உலர்ந்த யாக்கையன் என்ற இந்த உரைக் குறிப்பால் இக் குலமகன் உயிர் வாழ்ந்து வந்துள்ள துயர நிலையைத் தெளிவாத் தெரிந்து கொள்ளலாம். இராமனைப் பிரிந்து சீதை மறுகியிருந்தது போலவே பரதன் உருகியிருந்தான்; அவள் அயல் இடத்தே கொடிய அரக்கிகளிடையே நெடிய துயரில் இருந்தாள்; இவன் உரிய உறவினரிடையே அரிய இராச போகங்கள் நிறைந்த இனிய சூழலில் இருந்தான். இருந்தும், யாதும் உண்ணுமல் ஏதும் உறங்காமல் எப்பொழுதும் அண்ணனையே கருதி ஏங்கியிருந்துள்ளான். அரிய தவயோகிகளும் பெரிய துறவிகளும் இவனுடைய விரத நிலையை வியந்து புகழ்ந்திருக்கின்றனர்.

பிரிந்து போன அண்ணனை மீண்டும் காண வேண்டும் என்றே கடுந்தவம் புரிந்து காலம் கருதி வருந்தியிருந்தான். கொடிய பிரிவு உயிரை வாட்டி வந்த நிலையை உடலின் உலர்வு நேரே காட்டி நின்றது ஆவி அலமந்துள்ளமை அறிய வந்தது.

பிரிவாற்ருமையால் மறுகியிருப்பவர்க்கு அரிய இனிய போகங்கள் எல்லாம் கொடிய நெடிய துயரங்களாய்த் தோன்றும் ஆதலால் அரச சுகங்களை இவன் வெறுத்து வந்தான். உயிர் வாழ்வின் இயல்புகளும் மானச மருமங்களும் யாரும் தெளிவாய் அறியமுடியாத அரிய நிலையில் மருவியிருக்கின்றன. பிரிவின் பரிவு காதலரிடம் பெரிய சோதல்களை விளைத்து நெடிய வேதனைகளை விரித்து வருதலால் அவர் ஆதரவின்றி அலமந்துழலுகின்றனர்.

அறுகால் முரலும் நறுங்கூந்தற்
　　சீதை ஒருத்தி ஆவியுய்யப்
பெறுவான் வரைகள் அனைத்துநெடுங்
　　கடல்வாய்ப் பெய்த பெருங்கவிகள்
சிறுகால் உயிர்க்கும் தமிழ்வரையை
　　முந்நீர் அகத்தில் சேர்த்தியவேல்
உறுகா தலரைத் தணந்துறையும்
　　மடவார் பலரும் உய்வாரே. [1]

சீதை ஒருத்தி காதலரைத்
　　தணந்து ளாரில் சிறப்புடையள்
ஆதல் உணர்ந்தேம் அருகிருந்தோர்
　　அரக்க மாதர் ஆதலினல்

காதல் உளர்போல் தோழியர்சூழ்ந்
திவ்வாறு இயற்றின் கழிதுயரால்
ஏதம் உழந்துள் உயிர்சோரும்
என்போல் அயர்வுற்றிருப்பாளே. (2) [நைடதம்]

பிரிவில் மருகியிருந்த சீதையைக் குறித்துத் தமயந்தி இவ்வாறு கருதியிருக்கிறாள். பொருள் நயங்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். உணர்வின் சுவைகளைக் கவிஞர்கள் எவ்வாறு உலகிற்கு ஊட்டி உறுதிநலங்களை விளக்கி வருகின்றனர் என்பதை இவை செவ்வையாக் காட்டியிருக்கின்றன.

இராமன் சேனைகளோடு இலங்கைக்குப் போவதற்காகக் கடலிடையே நெடிய ஓர் அணை கட்ட நேர்ந்தது. வானரங்கள் மலைகளை வாரிக் கொண்டு வந்து அலைகடலில் இட்டன; அப்பொழுது பொதிய மலையையும் அகழ்ந்து கொண்டு போயிருந்தால் மந்தமாருதம் இந்தவாறு வந்து சிந்தையை வருத்திச் சீரழிவுசெய்யாது என்று தமயந்தி இங்ஙனம் வருந்தியிருக்கிறாள்.

தென்றலும் நிலவும் உயிர்களுக்கு உவகையான இனிய பொருள்கள். அவை பிரிவிலுள்ளவர்களுக்குப் பெரிய துயரங்களாய் நேருகின்றன. ஐம்புலன்களும் ஆர நுகரவுரிய இன்ப நலங்கள் எங்கும் நிறைந்திருந்தும் பரதன் அவற்றை வெறுத்து விலக்கியிருக்கிறான். அந்த அதிசயமான வைராக்கிய நிலையை இவனது இளைத்த உடல் நன்கு விளக்கியிருக்கிறது.

உயிர் உண்டு என்றும் உலர்ந்த யாக்கை என்றும் குறித்திருக்கும் குறிப்புகள் கூர்ந்து நோக்கி ஓர்ந்து சிந்திக்க வந்தன.

பாடுறு பெரும்புகழ்ப் பரதன்.

வாடி மெலிந்து வற்றல் உடம்பினனாய் வந்துள்ள இளவலை இவ்வாறு உளம் அறிய வளமையா நன்கு உணர்த்தியிருக்கிறார்.

தனது விரத சீலத்தால் வெளியே ஊன் உருகி வந்தாலும் உள்ளே உயிர் ஒளி பெருகி வந்துள்ளமையாமல் பரதன் இங்ஙனம் புகழோடு உலகம் தெரிய வந்தான். சிலர் புகழ் அடைந்திருக்கலாம்; அது பெருமையாய்ச் சிறந்திராது; ஒருவாறு அவ்வகையில் சிறந்திருந்தாலும் உயர்ந்தோரால் பாடும் பலனைப் பெறாமல் மறைந்து போயிருக்கும் அவ்வாறு கழிந்து ஒழிந்து போகாமல் எல்லாரும் உவந்து புகழ்ந்து பாடும்படி ஒளிமிகுந்து

வந்துள்ளமையால் பாடுறு பெரும் புகழ் என அதன் பீடும் பெருமையும் நேரே தெரிய அது நிலவி நின்றது. இராம காவியத்தில் இவனை வியந்து பாடியுள்ளவர் பலர். சிலர் அயலே வருகின்றனர்.

தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளம்எனும் தகையான்; பரதன் எனும் பெயரான்.
(விசுவாமித்திரர்)

நீதியும் தருமமும் நிறுவ நீயிது
கோதறு குணத்தினாய்! (வசிட்டர்)

ஆழியை உருட்டியும் அறங்கள் போற்றியும்
வேள்வியை இயற்றியும் வளர்க்க வேண்டுமோ?
ஏழினோடு ஏழெனும் உலகம் எஞ்சினும்
வாழிய நின்புகழ் என்று வாழ்த்தினார். (அமைச்சர்)

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!
(குகன்)

தூயவன் மைந்தனேநீ பரதன்முன் தோன்றினாயே. (வாலி)

மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன்.
(விபீடணன்)

மெய்யின் மெய். (அனுமன்)

மறுவேதும் இலாப் பரதன்.
தவம்புரி ஆற்றல் சான்ற பரதன். (சீதை)

தருமம் நீ அலது இல்எனும் தன்மையாய்!
எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ? (கோசலை)

எனைத்துள மறையவை இயம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே.

சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை. [இராமன்]

பரதனைக் குறித்து இன்னவாறு யாவரும் உவந்து புகழ்ந்து கூறியுள்ளனர். இவனுடைய தரும நீதிகளும் புனித நீர்மைக

ளும் மனித மரபுக்கு இனிய போதனைகளாய்த் தனியே உலாவி நிற்கின்றன. விரத மாதவன் எனப் பரதனை மேலோர் பலரும் வியந்து பாராட்டி யாண்டும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

பரதன் பெரிது உத்தமன்; எத்தாயர் வயிற்றினும் இவனை ஒத்தார் உதித்தல் அரிது என்று இராமபிரானே உவந்து புகழ்ந்திருத்தலால் இவனது அருமையும் பெருமையும் மகிமையும் மாண்பும் அறிய அரிய நிலையில் மருவி யுள்ளமை தெரியலாகும்.

மேலே விமானத்தில் இருந்தபடியே அனுமான் இராமனிடம் கீழே வந்து நிற்கிற பரதனைக் குறித்துப் பரிவோடு காட்டினன். அக்காட்சி அதிசய மாட்சியாய் வந்தது.

வான்தொடர் பேரரசு ஆண்ட மன்னனை
ஈன்றவள் பகைஞனைக் காண்டி.

தன்னைக் காண வந்துள்ள பரதனை இன்னவாறு இராமபிரா மன்பால் அனுமான் சுட்டிக் காட்டியிருக்கிறான். பெருமை நிறைந்த அரச ஆட்சியை மாட்சிமையோடு நடத்திமகிமையுடன் சுக போகங்களை மாந்தி வந்துள்ள மன்னர் பிரானைக் காண்டி என்றது மாறுபாடான வேறு குறிப்பில் விநயமா நீண்டு வந்தது.

உயிர் உண்டோ? இல்லையோ? என்று ஐயுறுமாறு உலர்ந்த யாக்கையனாய் வந்து நிற்கிற அந்தப் பரிதாப நிலையை இந்தவாறு பரிவு கூர்ந்து குறித்தான். அரசை ஆண்டு சுகமாய் வாழவில்லை; தங்களையே நினைந்து நெஞ்சு உருகி அழுது துயரமாய் இருந்துள்ளான் என்னும் உண்மையை நுண்மையா நுவன்றருளினன்.

ஈன்றவள் பகைஞன்

பரதனுக்கு இவ்வாறு ஒரு பெயரை அனுமான் இங்கே சூட்டியிருக்கிறான். தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயைக் கொடிய பேய் என்று இவன் வெறுத்து வைது உள்ளம் கொதித்திருக்கிறான். அண்ணனை அரசு ஆள ஒட்டாமல் அல்லல் செய்தமையால் பெற்ற தாயை இவ்வண்ணம் எள்ளி இகழ்ந்து எவ்வழியும் கூசாமல் எவ்வமா ஏசி விலக்கினன்.

"நோயீர் அல்லீர் நும் கணவனை தன் உயிர் உண்டீர்
பேயீரே நீர் இன்னம் இருக்கப் பெறுவீரே?
மாயீர்! மாயா வன்பழி தந்தீர்!"

என்று இந்தவாறு சிந்தை நொந்து கைகேசியை ஏசியிருத்தலால் தாய் மேல் இவன் கொண்டுள்ள சினமும் சீற்றமும் தெரிய நின்றன. உள்ளம் கொதித்து வையும் போதும் பண்பமையிலேயே பேசியிருக்கிறான். எவ்வழியும் மரியாதையும் மதிப்பும் பெருந்தன்மையும் நிறைந்து வரப் பேசிப் பழகிய விழுமிய குடிப் பிறந்தவன் ஆதலால் வெய்ய கோபத்திலும் அந்த வாசனைவீசியுள்ளது.

தந்தையைக் கொன்று தமையனுக்கு இடர் செய்தவள் என்று தன் தாயை இவன் நிந்தனை செய்துள்ளான். தன் கண்ணினும் உயிரினும் பிரியமா எண்ணி ஒழுகி வந்த அண்ணனைக் காட்டுக்கு ஓட்டி விட்டாளே! என்ற துயரக் கொதிப்பு உயிரை வதைத்து வருதலால் உரைகள் யாண்டும் கொடிய சீற்றமாய் நெடிது நீண்டு கடுமையான நிலைகளைக் காட்டி வருகின்றன.

உரிமையாய் ஈன்ற தாயின்மேல் கொடுமையான பகைமை மூண்டுள்ளவன் என்று பரதனை ஈண்டு இராமனிடம் அனுமான் இவ்வாறு விநயமாக் காட்டியது, வியனுனபயனை அவன் நினைவுற நீட்டியது. உங்கள் மேல் வைத்துள்ள போன்பே பெற்ற தாயையும் இக் கோமகன் வெறுத்துப் பகைத்து வேறுபாடாய் விலகும்படி செய்துள்ளது என வினையின் உண்மையை அம்மதிமான் அதிநயமா வெளியிட்டு நிலைமைகளை நலமா விளக்கியருளினன்.

உற்ற அரசை வெறுத்து உரிய தாயைப் பகைத்து இனிய சுக போகங்களை எல்லாம் கொடிய நஞ்சா எள்ளி விலக்கி உடலை வாட்டி உயிரைத் துயரில் நீட்டிப் பரதன் உழந்து வருவது,கானகம் போன உன்னைக் காண வேணடும் என்ற வேணவாவினலேயாம் என மாருதி இங்கே குறித்துள்ளான். நேர்ந்து நின்று நேரே கூறுகிற மருமம் கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணர வந்தது.

நிலைமைகளைச் சொல்லி வருவதிலேயே தலைமையான உண்மைகளைத் துலக்கி வருகிறான். "மெய்ம்மையின் வேலி போல்வான்" என அனுமானுக்கு ஒரு பெயர் காவியத்துள் மேவி வந்துள்ளது.

போய்யில்லா உள்ளத்தான் என இராமன் புகழடைந்துள்ளான். அந்தச் சத்திய சீலனிடம் இந்த உத்தம வீரன் இவ்வாறு உண்மை நிலைகளைத் தெளிவா விளக்கியிருக்கிறான்.

மெய்யான பரம் பொருள்போல மெய் விளங்கியுள்ளமையால் மேலோர் யாவரும் அதனை உளங் கொண்டு உரிமையோடு

பேணி வருகின்றார். வாய்மை தோய்ந்து வரும் அளவு தூய்மை வாய்ந்து வருகிறது. சத்தியத்தை எவன் சார்ந்துள்ளானோ அவன் உத்தமனாய் உயர்ந்து ஒளி மிகுந்து நிற்கின்றான். உண்மை என்றும் அழியாத உயர்பொருள் ஆதலால் அதனையுடையவர் யாண்டும் விழுமிய மேலோராய் நன்கு விளங்கி நிற்கின்றார்.

One of the sublimest things in the world is plain truth.
(Bulwer)

"உலகில் உன்னதமான உயர்பொருள் தூய உண்மையே" என்னும் இது ஈண்டு எண்ணவுரியது. சத்தியத்தை எந்நாடும் உத்தமமாப்போற்றி எவ்வழியும்உரிமையுடன்புகழ்ந்துவருகிறது.

சத்திய விரதனான இராமனையே பரதன் தாய் தந்தை தெய்வம் உயிர் என உரிமையோடு கருதி ஒழுகி வந்துள்ளான். அந்த உண்மையை அவனுடைய சீவிய சரிதத்தில் யாண்டும் நாம் கண்டுவந்துளோம். வாய்மொழியும் அதனை வலியுறுத்தியுளது.

"எந்தையும் யாயும் எம்பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன்" [பள்ளியடை, 58]

பரதன் இராமனைக் கருதி வந்துள்ளமையை இது உறுதியாக் காட்டியுள்ளது. அண்ணனை இவ் வண்ணம் இளமையிலிருந்தே உழுவலன்போடுஎண்ணி வந்துள்ளமையால் அவனுக்கு இடர் செய்தவர் எவராயினும் அவரைக் கொடிய விரோதிகள் என்று கடிது இகழ்ந்து எவ்வழியும் இவன் வெறுக்கநேர்ந்தான்.

இராமன் பால் உரிமையான அன்புடையவரே தனக்குப் பிரியமான தாய் தந்தையர் ஆவர்; அல்லாதவர் எல்லாரும் பொல்லாத பகைவரே என்று இவன் உறுதியாக்கருதி வந்துள்ளான். ஆகவே அவனுக்குத்தீயது செய்த தாயை நோயே! பேயே! என்று நொந்து வைதான். அண்ணன்பால் பதிந்த அன்பு அதிசயமாயது.

கடவுள்பால் பத்திபுரிந்து வருகிற உத்தம மகான்கள் அவனுடைய அருளை அடைந்த அன்பர்களையே தம்முடைய இன்ப உறவினங்களாக எண்ணி மகிழ்கின்றனர்; பிறர் எவரையும் அயலான மயலாளர்கள் என இயல்பா இகழ்ந்து விலகி விடுகின்றனர். உயிர் உறவில் உடலுரிமைகள் ஒருவுகின்றன.

அந்த நிலை பரதனிடம் இங்கே நன்கு தெரிய வந்தது.

ஏசுநாதரை ஈன்ற தாயும் உறவினரும் ஒருமுறை அவரைக் காண வந்தனர். அவ்வாறு வந்துள்ள அவ்வரவை அவர் அருகே இருந்த சீடர்கள் அவரிடம் உரிமையா உரைத்தார். அப்பொழுது அவர் கூறிய உரைகள் அவருடைய பரிபாக நிலையைத் தெளிவா விளக்கி ஒளிபுரிந்து நின்றன. அவை அயலே வருகின்றன.

Whosoever shall do the will of my Father which is in heaven, the same is my brother, and sister, and mother. [Bible]

"பரமண்டலத்திலுள்ள எனது பிதாவின் சித்தத்தின்படி செய்பவர் எவரோ அவரே எனக்குத் தாய் தங்கை தமக்கை தம்பி தமையன்" என இவ்வாறு அவர் பேசியிருக்கிறார். இதனால் அவருடைய மனநிலையும் மதிநலனும் இனிது தெரிய வந்தன.

இன்னவாறு பரமபத்தி நிலையில் பரதன் இராமனைக் கருதியிருக்கிறான். அண்ணன்பால் இவன் பூண்டுள்ள உண்மையான அன்பு நிலையை அனுமான் ஈண்டு நளினமா விளக்கியருளினான்.

உயிரின் உருக் கண்டனன்.

அனுமான் காட்டிய பொழுது விமானத்திலிருந்து இராமன் கீழே நின்ற பரதனை நோக்கினான். அவ்வாறு நோக்கியபோது அவன் நேரே கண்ட காட்சியை இது மாட்சியாக் காட்டியுளது.

தம்பியைக் கண்டான்; அல்லது பரதனைக் கண்டான் என்று சொல்லியிருக்க வேண்டும். அவ்வாறு சொல்லவில்லை. உயிரின் உருக்கண்டான் என்றே சொல்லியுள்ளார். இதில் தோய்ந்துள்ள பொருளின் சுவைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். ஈருடலில் ஓருயிர் என்னும் பேருண்மை ஈண்டு உணர வந்தது.

தன்னுடைய இன்னுயிர் பரதன் உருவில் மருவியிருப்பதையே இராமன் நேரே கண்டான்; காணவே வேணவாவுடன் கீழே இறங்க விரைந்தான்; விரையவே விமானம் விரைந்து இறங்கித் தரையில் நின்றது. அந்த நிலையை அயலே காணுக.

விமானம் இறங்கியது.

அவ்வயின் அயோத்தி வைகும் சனமொடும் அக்குரோணி
தவ்வலில் ஆறு பத்தா யிர மொடும் தாயரோடும்
இவ்வயின் அடைந்துளோரைக் காண்பன் என்று இராமன் உன்னச்
செவ்வையின் நிலத்தை வந்து சேர்ந்தது விமானம் தானும். (1)

புட்பகத்தின் அற்புதம்

எவ்வயின் உயிர்கட்கும் இராமன் ஏறிய
செவ்விய புட்பகம் நிலத்தைச் சேர்தலும்
அவ்வவர்க்கு அணுகிய அமரர் நாடுய்க்கும்
எவ்வமில் மானம்என் றிசைக்க லாயதே. (2)

இங்கே நிகழ்ந்துள்ள நிலைகளைக் கூர்ந்து காணுகிறோம்; உண்மைகளை ஓர்ந்து உணர்கிறோம். நாட்டு மக்களும் நகரமாந்தரும் கூட்டம் கூட்டமாய்த் திரண்டு யாண்டும் நாட்டமாய் நின்றனர். கங்கா தீரம் எங்கணும் பொங்கிய சனத்திரள்கள் பொலிந்து நின்றன. யாவரிடமும் பேராவல்கள் பெருகி ஓங்கின.

வான வீதியில் வட்டமிட்டு நின்ற விமானம் நிலத்தை அடையவே யாவரும் அதிசய பரவசராய்த் துதிசெய்து தொழுதனர். உள்ளே பொங்கி எழுந்த உவகைப் பெருக்கால் எல்லாரும் இன்ப வுலகிலிருப்பவர்போல் யாண்டும் பொலிந்து விளங்கினர். சூரியன் உதயமாகவே இருள் நீங்கி ஒளி ஓங்குவதுபோல் இராமபிரான் எய்தியவுடனே அவலக் கவலைகள் யாவும் ஒழிந்து எங்கும் ஆனந்த எழில்களே தெளிவாய்ப் பொங்கி விளங்கின.

அமரர் நாடு உய்க்கும் மானம்.

வந்த புட்பக விமானம் அங்கு நின்றவர் யாவர்க்கும் நேரே பேரின்ப நிலையமாய் நிலவி நின்றதை இந்த வாசகம் இனிது விளக்கியுள்ளது. உய்தி புரிய வந்தது உய்க்கும் என நின்றது.

அரிய தவங்களையும் பெரிய புண்ணியங்களையும் நெறியே செய்துள்ளவர்களைத் தேவ லோகத்துக்குக் கொண்டு போக வந்துள்ள தெய்வ விமானம் போல் அது மேவி நின்றது. இராமனைத் தெரிசிக்க வேண்டும் என்று ஆவலோடு அங்கே வந்துள்ளவர் யாவரும் தேவராக நேர்ந்தனர். அந்தப் புண்ணிய மூர்த்தியைக் கண்ணாரக் காண வேண்டும் என்று எண்ணிய அளவிலேயே மண்ணவர் விண்ணவர் என மருவி நின்றனர் என்றதனால் அவனுடைய மகிமையும் மாண்பும் இனிதுதெரியவந்தன.

விமானம் பூமியில் இறங்கிய போது அங்கே கூடி நின்ற மாந்தர் எல்லாரும் பேரானந்த நிலையில் பெருகியுள்ளனர். அவ்வுண்மையை நுண்மையாஈண்டுஉணர்ந்து கொள்கிறோம். இராம

நாதனைக் காண நேரவே அக் காட்சி ஒவ்வொருவருக்கும் உள்ளம் கனிந்த உயர்ந்த பேரின்ப வெள்ளமாய் ஓங்கி எழுந்தது.

தாயருக்கு அன்று சார்ந்த கன்றுஎனும் தகையன்ஆனான்;
மாயையில் பிரிந்தோர்க்கு எல்லாம் மனேலயம் வந்ததுஒத்தான்:
ஆயிளை யார்க்குக் கண்ணுள்ஆடிரும் பாவை யானான்;
நோயுறுத் துலர்ந்த யாக்கைக்கு உயிர்புகுந்தாலும் ஒத்தான். [1

எளிவரும் உயிர்கட்கெல்லாம் ஈன்றதாய் எதிர்ந்தது ஒத்தான்
அளிவரு மனத்தோர்க் கெல்லாம் அரும்பத அமுதம்ஆனான்
ஒளிவரப் பிறந்தது ஒத்தான் உலகினுக்கு ஒண்கணார்க்குத்
தெளிவரு களிப்புச் செய்யும் தேம்பினித் தேறல் ஒத்தான். [2

ஆவியங் கவனலால் மற்றின்மையால் அனையன் நீங்கக்
காவியங் கழனி நாடும் நகரமும் கவன்று வாழும்
மாவியல் ஒண்க ணாரும் மைந்தரும் வள்ளல் எய்த
ஓவியம் உயிர்பெற் றென்ன ஓங்கினர் உணர்வு பெற்றார். [3

சுண்ணமும் சாந்தும் நெய்யும் சுரிவளை முத்தும் பூவும்
எண்ணெயும் கலின மாவி லாழியும் எண்ணில் யானை
வண்ணவார் மதமும் நீரும் மான்மதம் தழுவு மாதர்
கண்ணவாம் புனலும் ஓடிக் கடலையும் கடந்த வன்றே. [4

இராமனைக் கண்ட போது மக்கள்கொண்ட மகிழ்ச்சி நிலைகளை இவை சுவையாய் வரைந்து காட்டியுள்ளன. யாவரும் அதிசய அன்பினராய் மருவியிருதலமையால் ஆனந்த பரவசராய்ப் பெருகி நின்றனர். ஒரு உருவம் பலருக்கும் தனித்தனியே இனித்த பேரின்பத்தை அருளியுள்ளது. அந்த உண்மையை எவரும் தெளிவாய்த் தெரியக் கவி செம்மையா விளக்கியிருக்கிறார்.

தேச மக்கள் பலவகை நிலைகளில் பரந்து விரிந்து வந்துள்ளமையால் அவரவருடைய நிலைமை நீர்மை தலைமைகளுக்குத் தக்கவாறு இராமபிரான் ஒக்க நின்று உவகைகளை விளைத்திருக்கிறான்.

தான் வருந்தி ஈன்ற இளங்கன்றைச் சிறிது நேரம் தாய்ப்பசு பிரிந்திருந்தது; பின்பு நேரே கண்டது; காணவே வேணவாவுடன் விரைந்து கரைந்து அதனை விழைந்து தழுவி மகிழ்ந்தது; அதுபோல் மாதர் யாவரும் இராமனை நோக்கி உவந்து நின்றனர். உவகை நிலைகளில் உயிர்களின் பான்மைகள் மேன்மையா ஒளி புரிந்து உலாவுகின்றன. அரிய ஓவியங்கள் இனிது உணரவந்தன.

ஒன்பது உவமானங்கள் இங்கே வந்துள்ளன. யாவும்கூர்ந்து

ஓர்ந்து ஆழ்ந்து சிந்திக்கவுரியன எதிர் கொண்டு காண வேண்டும் என்று நேர்ந்து வந்து நிற்கின்ற சனத்திரள்கள் எளிதே எண்ணி அளவிட முடியாதனவாய் எல்லை கடந்துள்ளன.

அன்பு மீதூர்ந்து பொங்கிய கடல் எனக் கங்கா தீரம் எங்கணும் மாந்தர் குழாங்கள் நிறைந்து நிற்கின்றன. இராமனது வரவை அறிந்த பொழுது எல்லாருடைய உள்ளங்களிலும் எல்லை கடந்த இன்ப வெள்ளங்கள் பெருகியிருக்கின்றன. அந்த இன்பப் பெருக்குகளை ஓரளவு கவி சுருக்கமா உரைத்திருக்கிறார்.

அரிய திறலுடைய ஆடவர்கள்.
உரிய பருவம் முதிர்ந்த அரிவையாகள்.
இளமைஎழில் பொங்கிய மங்கையர்கள்.
குறுநில மன்னர்கள்.
பெருநில வேந்தர்கள்.
தெளிந்த தத்துவ ஞானிகள்.
சிறந்த தவயோகிகள்.
உயர்ந்த முனிவரர்கள்.

இன்னவாறு பலவகை நிலைகளில் பரவியுள்ள மனித மரபுகள் அங்கு வந்திருந்தன. எல்லாரும் எல்லையில்லாத இன்ப நலங்களை எய்த நேர்ந்தனர் அவ்வாறு அவர் நேர்ந்தது நேரே வந்துள்ளவனது அதிசய மகிமைகளைத் துதிசெய்து துலக்கி நின்றது.

தாயரை முந்துறக் கூறியது அவரது தூய அன்புரிமை தெரிய. மாதாவின் வாய்மொழியை வேத விதியினும் மேலாக மதித்து ஒழுகுபவன் ஆதலால் இராமனது வரவில் அவர் முதன்மையாய் வந்தனர். மாதுர் வாக்கிய பரிபாலனன் என்று இராமனுக்கு ஒருபெயர் நேம நியமமாய் மருவியுள்ளது.

சேய், குழந்தை, பிள்ளை என வேறு பேர் யாதும் கூறாமல் கன்று என்றது இயல் பாகவே பரிவு மீதூர்ந்த பசுவின் பாச அன்பு தெரிய வந்தது. காவிய மரபும் இங்கே சீவிய ஒளியாய் மேவியுளது. கன்றும் கறவையும் நன்கு ஒன்றி வந்துள்ளன.

கன்று பிரிந்துழிக்
கறவைஒப்பக் கரைந்து கலங்கினாள். (நகர்நீங்கு, 14

கன்றுபிரி காராவின் துயருடைய கொடி (குகப்படலம்,66)

இராமனைப் பிரிந்து கோசலைத்தாய் மறுகியிருந்த பரிதாப நிலையை இவை பரிவோடு காட்டியுள்ளன. கன்றும்,காராம்பசுவும் இங்கே காண வந்தன. காட்சியில் அன்புகள் கனிந்துள்ளன.

இடையே பிரிந்துபோன அந்த அரிய கன்று பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு மீண்டு ஈண்டு வந்துள்ளது. அதனைக் கண்டபோது உலக மாதர் யாவரும் கோசலை போலவே உள்ளம் உவந்து உயர் பேரின்பமாய் ஓங்கி நின்றனர். அந்த நிலையைத் தாயருக்கு அன்று சார்ந்த கன்று எனும் தகையன் ஆனான் என்னும் இந்த வாசகம் கனிவுடன் இங்கேஇனிது விளக்கி நின்றது.

ஆயிளையார்க்குக் கண்ணுள்
ஆடு இரும்பாவை ஆனான்.

பருவம் முதிர்ந்த அரிவையர் நீர்மையை முன்னம் அறிந்தோம்; இதில் தருணமங்கையரின் தகைமையைக் காணுகிறோம்.

அரிய அன்பும் பெரிய பிரியமும் முறையே தெரிய வந்தன.

அவரவருடைய பருவம் இயல்பு பழக்க வழக்கங்களின் படியே எவரும் கருதி வருகின்றனர். அனுபவ நிலைகள் அரிய மருமங்களுடையன. பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் இராமனைக் கண்டதும் ஈன்ற குழவியை எய்தியதுபோல் உள்ளம் உருகி நின்றனர். அவ்வாறு பெறாத பருவமங்கையர் இராமனது உருவ அழகை விழி களிப்ப நோக்கி உளம் மிகக் களித்தனர். கார் வண்ணனை அக் கமலக் கண்ணனைக் கண்டு கண்டு களித்தமையால் பெண்களின் கண்தோறும் ஒரு புதிய நீல ஒளி நிலவி நின்றது. கண்ணுள் ஆடும் பாவை ஆனான் என்றதனால் கண்ட கோமளங்களையும், காண நின்ற கோமகனையும் ஒருங்கே கண்டு உள்ள நிலைகளை உணர்ந்து கொள்ளுகிறோம். இளையர் என்றது இளமைநலம் கனிந்து எழில் சுரந்துள்ள விழுமிய அழகிகளை. அவர்களுடைய கண்ணுள் மணிபோல் இராமன் ஆனான் என்றதனால் அந்த அழகனைக் கண்ட கண்களால் வேறு எதையும் காண முடியாமல் களித்து நின்றனர் என்பது காண வந்தது.

காட்சி யின்பம் அதிசய மாட்சியாய் நின்றது.

கண்ணினால் காதல்என்னும் பொருளையே காண்கின்றோம்;இப்
பெண்ணினீர் மையினால் எய்துமபயன் இன்று பெறுதும
என்பார். (உலாவியல் 3)

முன்பு மிதிலை வீதியில் பவனி வரும்பொழுது இராமனைக் கண்டு மகிழ்ந்த பெண்கள் இவ்வாறு பேசியிருக்கின்றார். அங்கே அவர்களுடைய கண்கள் கண்டுகொண்டதையும் அந்தக் காட்சி யின்பத்தையும் இந்தப் பேச்சால் தெரிந்து கொள்கிறோம்.

பெண்பாலும் ஆண்பாலும் இராமன்பால் பேரன்பு பூண்டு பெருமகிழ்ச்சி கொண்டு வருவதை யாண்டும் கண்டு வருகின்றோம். அன்பு கனிந்த இன்ப நிலைகள் அதிசயங்களாகின்றன.

மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வதிட்டன் ஒத்தார்; வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார்; அன்னாள் திருவினை ஒத்தாள்;அவ்வூர்
சாதுகை மாந்தர் எல்லாம் தயரதன் தன்னை ஒத்தார். [1

பொங்கிய உவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் முகத்தார் நம்பி தம்பியர் அனையர் ஆனார்
செங்கயல் நறவ மாந்திக் களிப்பெனச் சிவக்கும் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோள் குமரர் எல்லாம்.
(கைகேசி சூழ்வினை)

முடிசூடக் கருதி அயோத்தி நகரின் இராச வீதியில். இராமன் வரும்போது நேரே கண்டவர்களுடைய மகிழ்ச்சி நிலைகளை இவை காட்டியுள்ளன. பெற்றதாய், உற்ற தந்தை, உரியகுரு, இனிய மனைவி, அரிய தம்பியர் போலவே தேசமக்கள் அனைவரும் இந் நம்பிபால் அன்பு மீதூர்ந்துள்ளமையைக் கவி இங்ஙனம் சுவையா விளக்கி உவகை நிலைகளை நயமாத் துலக்கியுளார்.

முன்பு குறித்திருப்பதும் இங்கே கூறியுள்ளதும் கூர்ந்து சிந்திக்க வுரியன. ஒத்தார், ஆனார் என உரிமையோடு கண்டவர்களைக் கொண்டு அங்கே கூறினார்; ஒத்தான், ஆனான் என நேரே காணகின்ற இந் நம்பியையே இங்கே நயமாக் குறித்திருக்கிறார். குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தன.

கலியாண கோலத்திலும், முடிசூட நேர்ந்த வைபவத்திலும் இராமனைக் கண்டு களித்த காட்சிக்கும், வெற்றி பெற்று மீண்டு வந்துள்ள இப்பொழுது காணும் காட்சிக்கும், வேறுபாடுகள் உள்ளன. அக் கூறுபாடுகளைக் குறிப்பு மொழிகளால் நுனித்து உணர்ந்து மானச மருமங்களைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

தேசத்தை ஆளுகிற ஒரு அழகிய இராச குமாரனை ஏதோ சனங்கள் ஆசையோடு பார்த்தார்கள் என்பது இல்லை; தங்கள் தங்களுடைய இனிய உயிரை, அரிய கண்ணை, ஈன்ற குழவியை ஆவலோடு நேரே கண்டு மகிழ்ந்ததாகவே யாவரும் உவகையில் திளைத்துள்ளனர். ஆனந்தக் காட்சிகள் அயலறிய வந்தன.

கண்டுகொண்டு என்கண்ணிணை யாரக் களித்து
பண்டை வினையாயின பற்றோடு அறுத்து
தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்
அண்டத்தமரர் பெருமான் அடியேனே. [திருவாய்மொழி]

திருமாலை நம்மாழ்வார் கண்டு களித்துள்ளமையை இங்ஙனம் காட்டியுள்ளார். கண்இணை ஆரக்களித்து அவர் திளைத்துள்ளது போலவே பெண்மணிகள் தங்கள் கண்மணியா இராமனைக் கண்டு களித்துள்ளனர். கண்ணின் நடுவே கருவிழியுள் மருவி இருக்கும் சீவ ஒளி இங்கே பாவை என வந்தது.

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம். (குறள், 1123)

என் கண்ணின் கருமணியில் உறையும் பாவையே! நான் விரும்பும் எனது காதலி இருத்தற்கு இடம் வேண்டும் ஆதலால் நீ சிறிது விலகிப் போவாயாக என்று ஒரு காதலன் தன் கண்மணியை நோக்கி இன்னவாறு கூறியிருக்கிறான். உழுவலன்புடைய காதலர் ஒருவரை ஒருவர் தம் கண்மணி எனக் கருதி உண்ணீர்மையோடு ஒழுகி வருவது இதில் இனிது தெரிய வந்தது.

காணுதற்கு இனிய நீள வெண்மையில் கருமைகாட்டி
வாணுதற் சீதை கண்ணின்மணிஎன வயங்குவானை.
(விபீடணன் அடைக்கலம் 134)

கடல்கரை அருகே வெண்மையான மணல் பரப்பில் தனியே அமர்ந்திருந்த இராமனை இது இனிது காட்டியுள்ளது சீதை கண்ணின் மணி என இந்த அழகன் அங்கே இருந்த அழகை இங்கே நாம் விழி களிப்பக் காண்கின்றோம். சீதையின் கண்மணியான மணிவண்ணன் பெண்கள் எல்லாருக்கும் கண்ணுள் உலாவும் இனிய ஒளியாய் ஈண்டு அளிபுரிந்து நின்றுள்ளான்.

உலர்ந்த யாக்கைக்கு
உயிர் புகுந்தாலும் ஒத்தான்.

நோயால் வாடி மாய நேர்ந்துள்ள உடலுக்கு ஓர் உயிர் புகுந்ததுபோல் இராமன் போந்துள்ளான். உலர்ந்த யாக்கையனாய் வந்துள்ள பரதன் உயர்ந்த ஒளியோடு விளங்க நேர்ந்துள்ளதை இங்கே கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து கொள்கிறோம். உவமான உவமேயங்களில் யூக விவேகங்கள் ஒளி புரிந்து உலாவுகின்றன.

கன்று.

கண்ணுள் ஆடும்பாவை.

உயிர்.

ஈன்ற தாய்.

அமுதம்.

ஒளி.

தேம்பிளித் தேறல்.

ஓவியம் உயிர் பெற்றது.

மனோலயம்.

இராமனுக்கு ஒத்த உவமைகளாய் இவை ஈண்டு வந்துள்ளன. குணநீர்மைகள் கூர்மையாய் உய்த்து உணரத்தக்கன.

உருகும் வாஞ்சை, பருகும் ஆவல், அரிய ஜீவாதாரம், உரிய பேரன்பு, இன்ப விளைவு, துன்பஒழிவு, இனிய சுகபோகம், அதிசய ஆனந்தம் முதலிய அனுபவ நீர்மைகள் கூர்ந்து ஓர்ந்து உணர வந்தன. கருதுவார் எவர்க்கும் களிப்பாயுள்ளான்.

எளிவரும் உயிர்கட்கு எல்லாம் ஈன்றதாய்

பொருள், வலி, ஆதரவு முதலிய நிலைகளில் குறைபாடுடைய எளியவர் யாவர்க்கும் இராமன் இனிய தாயாய் அன்பு கூர்ந்து ஆதரித்து வந்துள்ளமையை இந்த வாசகம் சிந்தை தெளியச் செய்துள்ளது. வளர்ப்புத்தாய் செவிலித் தாய்கள் போல் அயலா இல்லாமல் இயல்பாகவே பெற்றதாய்போல் உரிமையோடு உளம் உருகி எவரையும் பேணி வருபவன் ஆதலால் ஈன்ற தாய் என்று ஆன்ற அன்புகள் தோன்ற மொழிந்தார்.

தாயை முன்னிய கன்றென நின்று உயிர் தளிர்ப்ப.

[மந்திரம், 60]

இராமனைக் கண்டபொழுது உயிரினங்கள் உள்ளம் உவந்து நின்ற நிலையை இது உணர்த்தியுள்ளது. தாயை நண்ணிய கன்றுகள்போல் இப் புண்ணிய மூர்த்தியைச் சீவகோடிகள் எண்ணி உருகி வருவதால் இவனுடைய இயலும் செயலும் இனிய நீர்மைகளும் அயலே தெளிவாய்த் தெரிய வந்தன.

உலகினுக்கு ஒளி.

இருளை நீக்கி இன்பம் விளைக்கும் சூரியனைப் போலக் கொடிய துயரங்களை நீக்கி உலக உயிர்களுக்கு உவகைகளை விளைத்து வருதலால் ஒளி என நேர்ந்தான். இராவணனுடைய அடலாண்மையால் அல்லலுழந்து இருண்டு மருண்டு வெருண்டு கிடந்த சீவகோடிகள்யாவும் துயர் ஒழிந்து உயர் வாழ்வடைய இராமன் ஒளிபுரிந்துள்ளான். அவ்வுண்மையை உலகினுக்கு ஒளி என்னும் இப்பொருள் மொழி ஈண்டுத் தெளிவுறுத்தி நின்றது.

அரக்கர் என்றபேர் இருளினை இராமனும் இரவி
துரக்க வெஞ்சுடர்க் கதிரவன் புறத்திருள் துரக்கப்
புரக்கும் வெய்யவர் இருவரை யுடையவர் போல
நிரைக்கு நல்ஒளி பரந்தன உலகெலாம் நிமிர.
(இராமா, யுத்த, படைத்தலைவர் 56)

அரக்கர் என்னும் கொடிய இருளை அடியோடு நீக்கி உலகம் எல்லாம் உவகை ஒளி பரவச் செய்தமையால் இராமன் ஓர் அதிசய இரவி ஆய் யாண்டும் துதி செய்ய நின்றான். அந் நிலையை இனிது குறித்துள்ள இது ஈண்டு எண்ணி யுணர வுரியது. இராமதிவாகரன், இராமச்சந்திரன் என அறிவுலகம் இக்குலமகனை நிலையான ஒளிமொழிகளால் வழிபாடுசெய்து வருகிறது.

அரும்பத அமுதம் ஆனான்.

உருவ அழகும் உயர்குண நீர்மையும் எவரையும் பரவசப் படுத்திக் காணுந்தோறும் கருதுந்தோறும் பேரின்பம் பயந்து வருதலால் அரிய இனிய அமிர்தம் என இராமன் இங்ஙனம் தெரிய நின்றான். ஆனந்த நீர்மை அமிழ்தம் என வந்தது.

அமிழ்தின் மொய்க்கும் ஈ இனம் என்னலானார். [உலா,5

மிதிலை வீதியில் இராமனைக் கண்டபோது மண்டிவந்த குழாங்களை இது குறித்துளது. எவரும் உள்ளம் உருகி இன்புற

இவ் வள்ளல் மருவியுள்ளமையைக் காவியம் முழுவதிலும் கண்டு வருகிறோம். காட்சியின்பம் மாட்சி மருவி வந்துளது.

மாயையில் பிரிந்தோர்க் கெல்லாம்,
மனோலயம் வந்தது ஒத்தான்.

இந்த ஒப்புமை மிகவும் நுட்பமானது. உலக வாழ்வில் மருவியுள்ள ஆண் பெண் அனைவரும் இராமன் பால் பேரன்பும் பெருமதிப்பும் அரிய பிரியமும் பெரிய மரியாதையும் பெருகி வந்துள்ளமையை உரிமையா உரைத்து வந்தவர் உலகப்பற்றுகள் யாவும் அற்ற முனிவர்களை இதில் இனிது விளக்கியுள்ளார். மாயையில் பிரிந்தோர் என்றது அவரது தூய நிலை தெரிய வந்தது. பாச பந்தம் அற்றவர் ஈசனது சம்பந்த மாகிறார்.

சீவர்கள் உண்மை நிலையை உணராமல் பொய்யான மையல் மயக்கங்களில் இழிந்து உழலும் மருள்நிலை மாயை என வந்தது. உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் மருட்டிக் காட்டிமையலை நீட்டிவருவது மாயைக் காட்சியாம்.

நில்லாத பொருள்களை நிலையின என்றும், இடையே தேக சம்பந்தமாய் எய்தியுள்ள மனைவி மக்கள் முதலிய மாயத் தொடர்புகளை மெய் என்றும் நம்பி மயங்கி யுழல்பவர் மாயை வசப்பட்டவராவர். ஆகவே அவர் அஞ்ஞானிகள் என அவல நிலையில் நின்று எவ்வழியும் இழிந்துகவலைகளில்உழலுகின்றனர்.

உண்மை தெளிந்த மெய்ஞ்ஞானிகள் பாசத் தொடர்புகள் அறவே அற்று விடுகின்றனர்; விடவே ஈசனைத் தோய்ந்து இன்புறுகின்றனர்; அவர் நித்திய முத்தராய் நிலவுகின்றனர்.

சீவான்மா பரமான்வை மருவி மகிழ்கிற புனித நிலையே யோகம் ஆம். அந்த அரிய நிலை அதிசய மகிமையுடையது.

யோகம் தியானம் சமாதி என்பன மகான்களுடைய மேலான நிலைகளைக் குறித்து வருகின்றன, மனம் புலையானவழி களில் அலையும் வரையும் மனிதன் நிலையான பரம இன்பத்தை அடைய முடியாது. பாசப் புலைகளில் படியாமல் எவனுடைய மனம் ஈசனிடம் படிந்து நிற்கிறதோ அவன் தேசுடைய ஞானி யாய் உயர்ந்து திவ்விய முனிவனாய்ச் சிறந்து திகழ்கின்றான்.

கறங்கெனு மாறுழல் கின்ற கருத்துப்
பிறந்திற வாத பெரும்பிர மத்தில்
இறந்திடில் யானென தென்னும் அகந்தை
மறைந்திடும் அன்றி மறைந்திடு மோதான். (1)

யான்இது செய்வல் எனக்கிது செய்வர்
ஏனையர் என்ன இருந்த கருத்தால்
மேனிகழ் முத்தி விரும்பல் இருட்டால்
பானுவை மேவுறு பற்றை நிகர்க்கும். (2)

வாரணம் ஆகும் மனத்தை அடக்கின்
காரண மாயை களைந்து ஒழியாத
பூரணம் ஆகிய போதம் அடைந்திட்டு
ஆரணம் ஓதும் அரும்பொருள் ஆவன். [3]

(பிரபுலிங்க லீலை, மனோலயகதி)

மாயை அழிந்து ஒழியும் வழியை இங்கே தெளிவாய்த் தெரிந்து தூய பரம விளைவுகளை உணர்ந்து கொள்கிறோம்.

மனம் இறைவனிடம் மருவினால் பிறவி தீரும்; பேரின்பம் விளையும். இலயம் = அடங்கி ஒடுங்கி நிற்கும் நிலை. புலன் வழி போகாமல் மனம் ஒடுங்கிய பொழுது உணர்வு பரமனை மருவி மகிழ்கிறது. அது ஆன்மானந்தமாய் மேன்மை யுறுகின்றது.

உணர்வில் உம்பர்ஒருவனை அவனதருளால் உறற்பொருட்டுஎன்
உணர்வின் உள்ளே இருத்தினேன் அதுவும் அவனது இன்னருளே
உணர்வும் உயிரும் உடம்பும் மற்றுஉலப்பினவும் பழுதேயாம்
உணர்வைப் பெறவூர்ந்திறவேறி யானும் தானாய் ஒழிந்தானே. [1

யானும் தானாய் ஒழிந்தானை யாதும்யவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனு மாகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும் அமுதும்ஆகித் தித்தித்துஎன்
ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே. [2

நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு அதனுள் நேர்மை அதுஇதுஎன்று
ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது; உணர்ந்தும் மேலும் காண்பரிது
சென்று சென்று பரம்பரமாய் யாதும் இன்றித் தேய்ந்தற்று
நன்று தீதென் றறிவரிதாய் நன்றாய் ஞானம் கடந்ததே. [3

(திருவாய்மொழி)

மாயையைப் பிரிந்த நம்மாழ்வார் மாயனை மருவி மகிழ்ந்துள்ளமையை இவை வரைந்து காட்டியுள்ளன. ஆன்ம அனுபவங்களைப் பான்மையோடு மேன்மையா ஆய்ந்து தேர்ந்து

கொள்ள வேண்டும். தேனும் பாலும் கன்னலும் அமுதும் என் பன பரமானந்த நிலையை ஓரளவு நேரே சேரத் தெரிய வந்தன.

முன்பொலா இராவணன் தன் முதுமதிள் இலங்கை வேவித்து
அன்பிஞல் அனுமன் வந்து ஆங்கடியிணை பணிய நின்ருர்க்கு
என்பெலாம் உருகி யுக்கிட்டு என்னுடை நெஞ்சம் என்னும்
அன்பிஞல் ஞானநீர்கொண்டு ஆட்டுவன் அடியனேனே.
(பெரிய திருமொழி)

மாயை தீர்ந்து மனேலயம் அடைந்துள்ள திருமங்கையாழ்வார் என்பெல்லாம் உருகும் இன்ப அமுதாக இராமனை எண்ணி அனுபவித்துள்ளமையை இங்ஙனம் அவர் இயம்பியிருக்கிருர்.

எண்ணி நோக்கி இயம்பரும் இன்பம்
பண்ணின் நோக்கும் பரா அமுது. (கங்கை, 11)

உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவை. [சவரி 7]

பெரிய ஞானமுனிவர்கள் இராமனைக் கருதி மகிழ்ந்துள்ள உரிமையை இவ்வாறு இவை உணர்த்தியுள்ளன. மனித உருவில் ஒரு அரச குமாரனுய் மருவியிருந்தாலும் இராமன் பரவாசுதேவனே என்பதைக் கவி நயமா ஞாபகப்படுத்தி வருவதைக் காவியத்தில் யாண்டும் நாம் கண்டு வருகிருேம்; ஈண்டும் இவ்வாறு காண நேர்ந்தோம். தத்துவக் காட்சி வித்தக மாட்சியது.

ஆவிஅங்கு அவன் அலால் மற்று இன்மையால்.
ஓவியம் உயிர்பெற்று என்ன ஓங்கினர்

இராமன் பிரிந்து வனம் போனபோது மக்கள் யாவரும் உயிர்போன உடல்கள்போல் துயரோடு மயலுழந்திருந்தனர். அவனை நேரே காணவே எல்லாரும் உள்ளம் களித்து உயிர் உணர்ச்சி பெற்று ஓங்கி விளங்கினர். ஆவி அகன்றமையால் யாவரும் செயலிழந்து உருவ அளவில் ஓவியங்கள்போல் இருந்தனர்; இன்று ஆவி வரவே உள்ளுணர்ச்சி மிகுந்து துள்ளி எழுந்து உயர் பேரின்பமாய் ஓங்கி ஒளிபெற்று நின்றனர். அந்நிலை உயிர் பெற்றுர் உணர்ச்சி பெற்றுர் என்றதனுல் உணர வந்தது.

தாவில் ஐம்பொறி மறுகுறத் தயரதன் என்ன
ஆவி நீக்கின்றது ஒத்தது அயோத்திமா நகரம்.
(நகர்நீங்கு, 216)

இராமன் முடிதுறந்து கானகம் போனபொழுது அயோத்தி இருந்த நிலையை இது குறித்துள்ளது. அங்ஙனம் நீங்கின ஆவி மீண்டு வந்தமையால் மாந்தர் எல்லாரும் உயிர் ஒளி ஓங்கி நின்றனர். சீவிய நிலை ஓவியக் காட்சியாய் உணர வந்தது.

முன்னம் குறித்த ஆவி நீக்கத்தை மீட்டிக் கொண்டு வந்து இங்கே பொருத்தி எழிலோடு எழுப்பியிருக்கும் வித்தகம் வியந்து சிந்திக்கத் தக்கது. ஓரிடத்தில் தான் குறித்து வைத்த குறிப்பைத் திருத்தமா முடித்து மணம்பெறச் செய்யும் மாட்சி நமது கவி நாயகனிடம் அதிசயக் காட்சியாய் அமைந்துள்ளது.

"இயங்கு பல்உயிர்க்கு ஓர் உயிர்என நின்ற இராமன்"
(நகர், 217)

இலங்கைவரையும் போய் மீண்டு வந்துள்ளான்; வரவே எல்லா உயிர்களும் ஒளிபெற்று உவகைகளில் ஓங்கி விளங்கின.

சீவகோடிகளுக்குச் சீவநாயகனாய் மேவியுள்ள இராமன் ஆங்கு வந்துள்ள தாயர் மூவரையும் கண்டான்; காணவே வேணவாவோடு விரைந்து அடி விழுந்து தொழுதான். யாரை முதலில் தொழுதான்? அந்தப் பேரை அயலே காணவருகிறோம்.

இராமன் தாயரை வணங்கியது.

கைகயன் தனையை முந்தக் காலுறப் பணிந்து மற்றை
மொய்குழல் இருவர் தாளும் முறைமையின் வணங்கும்செங்கண்
ஐயனை அவர்கள் தாமும் அன்புறத் தழுவித் தத்தம்
செய்யதா மரைக்கண்நீரால் மஞ்சனத் தொழிலும்செய்தார். [1

அன்னமும் முன்னர்ச் சொன்ன முறைமையின் அடியில்வீழ்ந்தாள்
தன்னிகர் இலாத வென்றித் தம்பியும் தாயர் தங்கள்
பொன்னடித் தலத்தில் வீழத் தாயரும் பொருந்தப் புல்லி
மன்னவற்கு இளவல்நீயே வாழிஎன்று ஆசி சொன்னார். [2

இங்கே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை வியந்து காண்கின்றோம். உழுவலன்பும் விழுமிய பண்பும் கெழுதகைமையும் உறவுரிமைகளும் உலகவிழிகள் காண ஒளிபுரிந்து எழில் சுரந்து நிற்கின்றன.

தன்னைப் பெற்ற தாய் ஆன கோசலையையே இராமன் முதலில் தொழுதிருக்க வேண்டும்; அவ்வாறு தொழவில்லை தனது அரசுரிமையைத் தடுத்து அரிய மணி முடியைப் பறித்துக் காட்டுக்கு ஓட்டிய கைகேசியையே முன்னுற வணங்கியிருக்கிறான்.

இது எவ்வளவு பெருந்தகைமை? எத்தனை வியப்பு! உய்த்துஉணர வேண்டும். சிறிய இடர் செய்தாலும் மனம் மாறிக் கொடிய பகைமையாய் அவர் மேல் நெடிது மூண்டு நிற்பதே பெரும்பாலும் மனிதர் இயல்பா மருவியுளது. அந்த மானிடமருமத்தைக் கடந்தவர் பெரிய மகான்களாய் மகிமை தோய்ந்து மிளிர்கின்றார். எவ்வழியும் யார்க்கும் இனிய இதங்கள் செய்பவரே புனித நீரராய்ப் பொலிந்து புண்ணிய மூர்த்திகளா விளங்கி வருகிறார்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். [குறள், 314]

என்னும் இனிய பெரிய புனித நீர்மை இதில் தனியே தெரிய வந்துள்ளது. தமக்குத் துயர் செய்தவர்க்கு எதிரே துயர் செய்வது சிறியர் செயல்; அவ்வாறு செய்யாமல் இருப்பது பெரியர் இயல்பு; அங்ஙனம் அமைந்ததோடு நில்லாமல் மேலும் அவர்க்கு நன்மை செய்வது உன்னதமான உயர் சீர்மையாம்.

தனக்கு இன்னல் இழைத்தவர்க்கும் நன்னயம் புரிவதே ஆன்ற மேன்மையாம் என்னும் இந்த முறையில் இத் தோன்றல் இங்கே செய்யவில்லை. இயல்பான அன்பும் உயர்வான பண்பும் தோய்ந்தே இக் கோமகன் கைகேசியின் காலில் விழுந்து பணிந்திருக்கிறான். மானச நீர்மைகள் அரிய மருமங்களாயுள்ளன

அந்தச்சிறிய தாயிடம் பெரிய ஒரு பிரியம் இளமையிலிருந்தே இக்குலமகனிடம் வளர்ந்து வந்திருக்கிறது. தன்னை இனிது வளர்த்து வந்தவள்; தந்தையும் அவள் பால் பெருங்காதல் கொண்டு எவ்வழியும் பெருமேன்மை செய்து வந்தான்; ஆகவே அத்தாயிடம் இச் சேய்க்குப் பிரியமும் மதிப்பும் பெருகி வந்தன. அவ்வரவு நிலைகள் செயல்களில் யாண்டும் தெரிய நின்றன.

சீதையை மணம் புரிந்தவுடனே முதலில் கைகேசி காலிலேயே விழுந்து வணங்கி யிருக்கிறான். மாப்பிள்ளைக் கோலத்தோடு மணமகன் செய்த வணக்கம் அரிய குண நீர்மையாய்ப் பெருகி நின்றமையால் அனைவருக்கும் அதிசயங்களை விளைத்தது.

கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கா
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள்தொழலோடும். (கடிமணம்,95)

ஈன்ற தாயினும் ஆன்ற அன்போடு கைகேசியை முன்பு இத் தோன்றல் தொழுதுள்ளதை இதனால் அறிந்து கொள்ளு கிறோம். இந்த உத்தம புத்திரனிடம் பிள்ளைப் பாசம் பெருகி யிருந்தாள்; இருந்தும் கூனி செய்த கோளால் உள்ளம் கூனி இக் கோமகனுக்குக் கொடுமை செய்ய நேர்ந்தாள். அந்தக் கொடுமை அரக்கர் செய்த பாவமாய் அமரர் புரிந்த புண்ணிய மாய் மூண்டு முடிந்தது. முடிவில் மீண்டு வந்தான்; ஈண்டு இவ்வாறு பழமைபோலவே கிழமை தோய்ந்து கெழுதகைமை யோடு வணங்கி உழுவலன்புகள் புரிந்து விழுமிதா விளங்கினான்.

மணம் புரிந்த உடனே வணங்கியது, தன் வாழ்க்கை மணம் பெற்று மகிமையுறும்படி வாழ்த்த வேண்டியே: "அம்மா! சானகியை மணந்து கொண்டேன்; இனி நான் வந்த காரியம் செய்ய வேண்டும்; அதனைச் சிந்தையில் கொண்டு ஆக வேண்டி யதை விரைந்து செய்தருளுங்கள்!" என்று வேண்டிய படியாய் மருமமா மூண்டு இவனது கரும தருமங்களை அது காட்டிநின்றது.

மீண்டு வந்துள்ள இப்பொழுது தொழுதது: "தாயே! நீங் கள் செய்து வழி காட்டியபடியே நான் வனம் போனேன்; காரியங்கள் யாவும் இனமா முடிந்தன; என் பிறப்பு நன்கு சிறப் படைந்தது; எனது புகழ் திசைகள் தோறும் பரவி ஒளி வீசு கின்றது; அரிய பெரிய மகிமைகள் என்னை மருவும்படி அளி புரிந்தருளிய உங்களுக்கு நான் எழுமையும் நன்றிபுரியக்கடமைப் பட்டுள்ளேன்" என்று உழுவலன்போடு தொழுத படியாய் ஈண்டு புரிந்த வணக்கம் விழுமிய பண்புடன் நீண்டு நிலவுகின்றது.

செய்கைகள் தெய்வ இரகசியங்களாய் நிகழ்ந்துள்ளன. யூக விவேகங்கள் எவ்வழியும் செவ்வையா உலாவி வருகின்றன.

கைகேசியை இவ்வாறு வணங்கியபின்பு ஈன்ற தாயடியில் ஆன்ற அன்புடன் விழுந்து தொழுதான். அதன் பின் சுமித் திரையை வணங்கினான். மூன்று தாய் மாரும் முறையே இப் பிள்ளையை அள்ளித் தழுவி உள்ளம் உருகி உவந்து வாழ்த்தினர்.

கோசலைத்தாய் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது. அன்பும் ஆனந்தமும் அகத்தே பெருகியுள்ள நிலையைப் புறத்தே பெருக்கெடுத்து ஓடிய அந்த விழிநீர் தெளிவா விளக்கி நின்றது.

புத்திர வாஞ்சையால் அத்தாயின் உயிரும் உணர்வும் உள்ளமும் ஒருங்கே கரைந்தமையால் கண்ணீர் வெள்ளம் விரிந்து வந்தது.

செய்யதா மரைக்கண் நீரால்
மஞ்சனத் தொழிலும் செய்தார்.

தாய்மாரின் விழிகளிலிருந்து பெருகி வந்த நீரால் இராமன் திருமேனி முழுவதும் நனைந்து நின்றது. அந்த நிலையை இது வனைந்து காட்டியுளது. அன்பும் ஆனந்தமும் பெருகியுள்ளன.

முடிசூடுதற்கு உரிய மங்கல நீர் ஆடுவதற்கு முன்னதாகவே தாய் மாருடைய தூய அன்புக் கண்ணீரால் நீராடியிருக்கிருன். மஞ்சனத்தொழில் என்றதனுல் அந்த நீராட்டம் நன்கு தெரிய வந்தது. தூய தாய்களின் பரிவுகள் நீராய்ப் பெருகி நின்றன.

தன் தாய்மார்களின் அடியில் விழுந்து தனது நாயகன் வணங்கியதுபோலவே சீதையும் அந்த முறையே வணங்கினுள்.

அன்னமும் முன்னர்ச் சொன்ன
முறைமையின் அடியில் வீழ்ந்தாள்.

தன்னுடைய மாமிமார்களைச் சீதை தொழுதிருக்கும் விழுமிய நிலைமையை இது விழி தெரிய விளக்கியுள்ளது கைகேசியை முதலில் வணங்கினுள்; பின்பு கோசலையைத் தொழுது பணிந்தாள்; அதன்பின் சுமித்திரையை வணங்கி நின்ருள். இராமன் தொழுதபடியே இப் பெண்ணரசியும் கண்ணியமாத் தொழுதிருக்கிருள்; அவ்வுண்மை முன்னர்ச் சொன்ன முறைமையின் என்றதனுல் நேரே தெரிய நேர்ந்தது. பத்தாவின் சித்தத்தின் படியே ஒழுகும் உத்தம பத்தினி என்பது ஈண்டு உய்த்துணர வந்தது. கண்ணும் ஒளியும்போல் இக்குலமகள் மருவியுள்ளாள்.

அந்த அழகன் தாயரைத் தொழுததும், இந்த அழகி மாமியரை வணங்கியதும் மனித சமுதாயத்துக்குப் புனிதமான இனிய போதனைகளை அருளி இன்பவழிகளாய் நிலவி நின்றன.

சீதையை இங்கே அன்னம் என்றது நீர்மை சீர்மைகளை நினைந்து தெளிய. அழகுநடை அன்பு பண்பு மென்மை மேன்மை முதலிய நிலைகளில் அன்னம் தலைசிறந்து நிற்றலால் சிறந்த பெண்மைக்குத் தகுந்த உவமையாய் அந்த விழுமிய பறவை வந்தது.

நீரை நீக்கிப் பாலை மாத்திரம் பருகும் இயல்பு அன்னத்தினிடம் இயற்கையாய் அமைந்துள்ளது. குற்றத்தை மறந்து குணத்தை மட்டும் நினைந்து கொள்ளும் நீர்மை சீதையிடம் சீர்மையா நிறைந்துள்ளது. அந்த உண்மை ஈங்கு எண்மையாய்த் தெளிய நின்றது. உவமைக் குறிப்பால் உண்மை நிலை உணர வந்தது.

எல்லையில்லாத அல்லல்களைக் கைகேசி இழைத்திருந்தும் அவற்றை எல்லாம் அறவே மறந்து அருமை மாமி ஆகவே உரிமையொடு கருதி அவளுடைய அடியில் விழுந்து தொழுதிருக்கிருள். அரிய அரசி நீர்மை இனிய பறவைபால் உறவாயுள்ளது.

நீர்நீக்கிப் பால்நுகரும் அன்னம்போல் சீதை நேர்
சீர்தூக்கி நின்ருள் சிறந்து.

இவ்வாறு நிறைந்த பெருந்தகைமையளாய் உயர்ந்திருத்தலால் அன்னம் என மன்னிய புகழோடு மருவி நின்றுள்ளாள்.

பாலும் நீரும் பாற்படப் பிரித்தல்
அன்னத் தியல்பென அறிந்தனர் கொளலே. [இளம்பூரணம்

அன்னப் பறவையின் இயல்பை இது நயமா விளக்கியுளது.

அன்றில், புரு, அன்னம் என்னும் இம் மூவகைப் பறவைகளும் காமக் கலவியில் நேம நியமங்களுடையன. முன்னைய இரண்டும் நிலத்தில் மாத்திரம் வாழ்வன. அன்னம் நீரிலும் நிலத்திலும் சீர்மையாய் வாழும் நீர்மையது. தனது சேவலிடம் ஆவல் மிகவுடையது. கலவியால் அலகில் இன்பம் தருவது; அன்பு மிக அமைந்தது. அதிசய நீர்மைகள் இயல்பாய் இனிது வாய்ந்தது.

"புதுமைக் காரிகை புதுநாண் திளைப்பக்
கதிர்விளங்கு ஆகத்துக் காமம் கழுமி
அன்னத்து அன்ன அன்புகொள் காதலொடு
பொன்னகர்க்கு இயன்ற புகரில் புகழ்நகர்
வரைவில் வண்மை வத்தவ மன்னற்குப்
பொருவில் போகம் புணர்ந்தன்ருல் இனிது."
[பெருங்கதை, 2-7]

வத்தவ தேயத்து மன்னன் மனைவி வாசவதத்தையை இன்னவாறு இது குறித்துள்ளது. அன்னத்து அன்ன அன்பு கொள் காதல் என அந்த அழகியை இங்ஙனம் விளக்கிப் பொருவில்

போகம் தருவதைத் துலக்கியிருக்கும் இது ஈண்டு நுனித்து உணரவுரியது. பெண்மைப் பிறவியுள் இப்பறவைபெரியநிலையது.

காதலால் காம பூமி கதிரொளி யவரும் ஒத்தார்
மாதரும் களிறனுனும் மாசுண மகிழ்ச்சி மன்ற
ஆதரம் பெருகு கின்ற அன்பினுல் அன்னம்ஒத்தும்
தீதிலார் திளைப்பின் ஆமான் செல்வமே பெரிதும்ஒத்தார்.
(சீவகசிந்தாமணி, 189)

ஏமாங்கத நாட்டு மன்னன் மனைவி ஆகிய விசயையின் இனிய இன்ப நலங்களைத் தேவர் இங்ஙனம் விளக்கியிருக்கிருர். ஆதரம் பெருகுகின்ற அன்பினுல் அன்னம் என்றதனுல் இதன் ஆர்வ நிலையை அறிந்து இன்ப நீர்மையைத் தெரிந்து கொள்ளுகிருேம்.

மென்னடைப் பேடை துணைதரத் தற்சேர்ந்த
அன்னவான் சேவல் புணர்ச்சிபோல் ஒண்ணுதல்
காதலன் மன்ற அவனைவரக் கண்டாங்கு
ஆழ்துயரம் எல்லாம் மறந்தனள். (கலி, 147)

அன்னத்து அன்ன மென்னடை அன்னத்துப்
புணர்வின் அன்ன தண்டாக் காதல். (பெருங்கதை 4-11)

அன்னத்தின் நீர்மைகள் இன்னவாறு தெரிய வந்துள்ளன. உரியதுணை மீது பிரியமான காதலோடு இணைபிரியாமல் மருவி யிருக்கும் இயல்பினையுடையது ஆதலால் கற்புக் காதலிகளுக்கு அது நேர் உவமையாயது. மிதிலை அன்னம் விழி தெரிய நின்றது.

கன்னி நன்னகரில் கமழ் சேக்கையுள்
அன்னம் இன்னணம் ஆயினள்; ஆயவள்
மின்னின் மின்னிய மேனிகண் டானெனச்
சொன்ன அண்ணலுக்கு உற்றது சொல்லுவாம்.
[மிதிலை, 82]

முன்னம் கன்னி மாடத்தில் இராமன் நேரே கண்டபோதே சீதையை அன்னம் என்று இன்னவண்ணம் இது குறித்துள்ளது.

பிரிவில் மறுகி யிருந்தவள் தனது இனிய நாயகனேடு அன்புரிமையாய் இன்ப போகங்களை நுகர நேர்ந்துள்ளமையைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுமாறு இந்த உருவகம் இங்கே சார்ந்து வந்தது. அழகனும் அழகியும் அன்பின் விளைவுகளாயினர்.

தம்பியும் தாயர் பொன்னடியில் வீழ.

அண்ணனும் அண்ணியும் வணங்கிய பின்னர் இலக்குவனும் அம்முறையே அடியில் விழுந்து தொழுது வணங்கினன். பெற்ற தாய் சுமித்திரை; பெரிய தாய் கோசலை; உரிய தாய் கைகேசி. அந்த மூன்று தாய் மாரும் ஆன்ற ஆவலோடு தழுவி எடுத்து உழுவலன்புடன் இந்த இளவலை நோக்கி உளம் உவந்து வாழ்த்தினர். ஆர்வ மொழிகள் சீர்மை தோய்ந்து நேர்மையா வந்தன.

மன்னவற்கு இளவல் நீயே
வாழிஎன்று ஆசி சொன்னர்.

இலட்சுமணனை இவ்வாறு தாய்மார்கள் ஆர்வம் மீதூர்ந்து வாழ்த்துரை கூறிப் போற்றியிருக்கின்றார். அரசர் பெருமானாய் அவனியை ஆள வந்துள்ளமையால் மன்னவன் என இராமனை இன்னவாறுமகிழ்ந்து மொழிந்து பின்னவனை வியந்து புகழ்ந்தார்.

மணிமுடி சூடி அரியணை அமர்ந்து இக் கோமகன் ஆட்சி புரியும் மாட்சியைக் காணும் காட்சி உள்ளத்தில் நீட்சியா யுள்ளது; அவ்வுண்மையை உரைகள் வெளிப்படுத்தின. அந்தஅருமை அண்ணனுக்கு உரிமையான தம்பி நீ ஒருவனே என வியந்து புகழ்ந்தனர்; "இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாமல் பின்சென்ற பெரியான்" எனப் பரதன் உள்ளம் உருகி இலக்குவனை உவந்து கூறியிருப்பது ஈண்டு உணர்ந்து கொள்ளவுரியது. இளவல் நீயே! என்றதில் ஏகாரம் தனிமையான தலைமையை விளக்கி இளையபெருமாளின் நிலைமையைத் துலக்கியது.

இராமனுக்கு ஊழியம் புரிந்ததால் ஊழியும் தேயாத புகழோடு நீ வாழி என வாழ்த்தி யருளினர். அண்ணனோடு ஆர்வமாய்ச் சென்றது இத் தம்பிக்கு எண்ணரிய மகிமைகளை இனிது விளைத்துள்ளது. யாவரும் புகழ இசைகள் வளர்ந்தன.

இன்னவாறு முன்னவனையும் பின்னவனையும் கண்டு அன்னையர் மகிழ்ந்து நிற்குங்கால் பரதன் பரிவோடு வந்து பாதுகைகள் இரண்டையும் இராமன் பாதங்களில் நேரே வைத்து நெடிது விழுந்து தொழுது கண்ணீர் சொரிந்து கரைந்து கிடந்தான்.

பரதன் பணிந்தது.

சேவடி இரண்டும் அன்பின் அடியுறை யாகச் சேர்த்திப்
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி

நாவிடை பெயர்ப்பது ஒன்றும் உணர்ந்திலன் நின்ற நம்பி
ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினன் அழுது சோர்வான். (1)

இராமன் தழுவி அழுதது.

தழுவினன் நின்ற காலைத் தத்திவீழ் அருவி காலும்
விழுமலர்க் கண்ணீர் மூரி வெள்ளத்தான் முருகின்செவ்வி
வழுவுறப் பின்னி மூசு மாசுண்ட சடையின் மாலை
கழுவினன் உச்சி மோந்து கன்றுகாண் கறவை அன்னான். (2)

இங்கே நேர்ந்துள்ள அன்பு நிலைகளையும் பரிவின் பண்புகளையும் உயிர் உருக்கங்களையும் ஓர்ந்து காண்பவர் உள்ளம் உருகி அயர்வர். நிகழ்ச்சிகள் நிலைமை நீர்மைகளைத் துலக்கிநிற்கின்றன.

தமையனையே கருதி யுருகி நாளும் மறுகியிருந்த பரதன் நேரே அண்ணனைக் காணவே பேரானந்தம் மீதூர்ந்து விரைந்து அடியில் விழுந்து தொழுதான்; உழுவலன்பால் விழி நீர் பெருகி ஓடியது. அவனுடைய பரிவு நிலையைக் கண்ட இராமன் யாதும் பேச முடியாமல் பாசம் மீதூர்ந்து பெரிய துயரமாய் உருகி நின்று விரைவில் அவனை வாரி எடுத்து மார்பில் இறுகத் தழுவி மறுகி அழுதான். விழிநீர் வெளியே பெருகி ஓடியது.

ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினன்.

இராமன் பரதனைத் தழுவியுள்ள நிலையை இது விழி தெரிய விளக்கியுள்ளது. பிரியமாய்த் தொழுதவரை உரிமையாத் தழுவி உபசரிப்பது பேரன்பர்களிடையே நிகழ்ந்துவரும் ஒரு வழக்கம். அந்த வழி முறையில் வந்துள்ளது ஆயினும் அரிய பெரிய கிழமையும் கெழுதகைமையும் இங்கே கிளர்ந்து வளர்ந்துள்ளன.

பிரிந்துபோன அன்பர்கள் மீண்டு காண நேரின் ஒருவரை ஒருவர் உவந்து நோக்கி உரிமையுரைகள் பேசி மகிழ்வர். தழுவிக் கொள்வது மிகவும் அரிது. மிகுந்த கிழமையாளரே தழுவ நேர்வர்; அவ்வாறு தழுவினும் உள்ளம் தழுவாமல் தழுவி உடலளவில் மருவி வெளியே உரையாடி அயலே ஒருவிப் போவர்.

ஈண்டு நேர்ந்திருப்பது அதிசய ஆர்வங்கள் தோய்ந்துள்ளன. உயிரும் உள்ளமும் உடலும் ஒருமையாய் மருவிப் பிரியம் மீதூர்ந்து பெருகியிருக்கின்றன. இராமன் உயிர் பரதன் உயிரையும், அவனது இனிய மேனி இவனுடைய புனித உடலையும் இனிது தழுவி அரிய பரவசமாய் உணர்வு உருகியுள்ளது. அவ்

வுண்மையை நுண்மையாய் ஈண்டு உணர்ந்து கொள்ளுகிறோம். ஆவியும் உடலும் ஒன்றத் தழுவி யுள்ளமையால் உரிமையான கிழமையும் கெழுதகைமையும் தெளிவாய்த் தெரிய வந்தன.

தம்பி நிலையைக் கண்டதும் இந்நம்பி பரிவு மீதூர்ந்து உருகி யிருக்கிறான். அதனால் யாதும் பேசமுடியாமல் மோனமாய் நின்றான். பேச்சு அடங்கியதில் பெரிய பரிவுகள்பெருகியுள்ளன.

பொருமி விம்மி நா இடை பெயர்ப்பது ஒன்றும் உணர்ந்திலன் என்றதனால் இராமன் அதுபொழுது நின்ற நிலையையும் நெஞ்சின் கவலைகளையும் நன்கு உணர்ந்து கொள்ளுகிறோம்.

அரசு புரிய உரிய தன் அருமைத் தம்பி தனது பிரிவுத் துயரால் உள்ளம் உருகி உயிர் மறுகி உடல் மெலிந்து வந்துள்ளதை நேரே காணவே இக்கோமகன் நெஞ்சம் கரைந்து நிலைகுலைந்து தளர்ந்தான். ஆகவே நாவு அசையாமல் பேச்சிழந்து பித்தன் போல் பிரமை கொண்டு சித்தம் கரைந்து தியங்கி நின்றான்.

பரிதாப உணர்ச்சி உள்ளத்தில் பெரிதாக ஓங்கி நின்றால் பேச்சிழந்த மவுனம் ஆட்சி புரிய வருகிறது. அது இங்கே காட்சிக்கு வந்தது. உள்ளம் உருகவே சொல் அருகிவிடுகிறது.

"The deepest feelings are not the most garrulous."

"ஆழ்ந்த இரக்க உணர்ச்சிகள் பேச்சுகளை இழந்துவிடுகின்றன" என்னும் இது ஈண்டு உணர்ந்து கொள்ள வுரியது.

மானச மருமங்களும் மனித இயல்புகளும் அறிய அரிய அதிசய நிலைகளில் பெருகியுள்ளன. அந்த உண்மைகளை இராம காவியத்தில் இடங்கள்தோறும் இனிது அறிந்து வருகிறோம்.

தம்பியைக் கண்டபோது இந்த நம்பி நின்ற நிலையைச் சீவிய ஓவியமாக் கவி எழுதிக் காட்டியிருக்கும் காட்சி அதிசய வியப்பை ஊட்டி வருகிறது. உள்ளப் பாசமும் உயிர் இரக்கமும் உழுவலன்புகளும் விழுமிய பண்புகளும் இங்கே விழி தெரிய வந்துள்ளன.உருகிய அன்பில்பெருகிய அழுகைமருவிஎழுகிறது.

அழுது சோர்வான்.

பரிவோடு இளவலைத் தழுவி நின்றவன் இவ்வாறு அழுது மறுகி உருகியிருக்கிறான், மலைபோல் யாண்டும் திண்மையாய்

நிற்கின்ற உண்மை வீரன் ஈண்டு வெண்ணெய்போல் இளகி மெலிந்திருப்பது விழுமிய கெழுதகைமையை விளக்கி நிற்கிறது.

தம்பி பால் பூண்டுள்ள அன்புப் பாசம் இந்நம்பியை நைய உருக்கியிருக்கிறது. தன்னையே நினைந்து கரைந்து உண்ணும் உணவும் பருகும் நீரும் துறந்து கண்ணும் உறங்காமல் ஏங்கி யிருந்த பாங்கு தெரியவே நெஞ்சம் நெடிது கரைய நேர்ந்தது.

உழுவலன்போடு தழுவி உயிரும் உடலும் ஒருமையாய் மருவி உருகி நின்றபொழுது கண்களிலிருந்து வெள்ளம் பெருகி வழிந்தது. விழிகள் வழியே பொங்கி வந்த நீர் தம்பியின் உடல் முழுவதையும் கழுவி ஓட இந்நம்பி அன்பின் அவசமாய்நின்றான்.

கண்ணீர் வெள்ளத்தால் கழுவினன்.

அண்ணன் கண்ணீரால் பரதன் முழுகியுள்ளமையை இது தெளிவாக்கியுள்ளது. மாசு படிந்த மணியைக் கழுவுவதுபோல் தூசு படிந்திருந்த அவனது மேனியை விழி நீர் கழுவி ஒளி செய்துளது. தூய கங்கை நீரினும் நேய நீர் தோய நேர்ந்தது.

பின்னி மூசு மாசுண்ட சடை.

மணிமுடி தரித்து அரசை ஆண்டருள் என்று இராமன் உரிமையோடு உரைத்து விடுத்தும் பரதன் அவ்வாறு புரியாமல் விரத மாதவனாய் மருவி யிருந்துள்ளான். அந்த இருப்பை இந்த வாசகம் இனிது காட்டி அவனது புனிதநிலையைத் துலக்கியுள்ளது.

கானகம் போன இராமன் ஆவது அங்கே கனி காய் கிழங்குகளை உண்டு சுகமாய் வாழ்ந்து வந்தான். இனிய இராச போகங்கள் இடையே யிருந்தும் பரதன் யாதும் உண்ணாமல் ஏதும் நண்ணாமல் அரிய தவ நிலையில் உருகி யிருந்துள்ளான்.

எண்ணெய் இன்றி முழுக்கின்றி இருந்தமையால் தலைமயிர் அடையாய்ச் சடை செறிந்திருந்தது. மாசுண்ட சடை என்றதனால் அது புழுதி படிந்து பழுதடைந்துள்ளமை தெரிய நின்றது.

பட்டினி கிடந்து உடலை ஒறுத்துத் தரையில் கிடந்து இராமனையே கருதி யுருகிக் கடுந்தவம் தொடர்ந்துள்ளான். உடலின் மெலிவும் சடை முடியும் இவன் வாழ்ந்து வந்துள்ள வாழ்வையும் சூழ்ந்து நின்ற சோர்வையும் ஓர்ந்து கொள்ள நேர்ந்தன.

இந்த இராச குமாரன் முருகப் பெருமான்போல் பேரழகு உடையவன்; அந்த எழில் நலமெல்லாம் உரியவனைப் பிரிந்த பெரிய துயரால் ஒளி மழுங்கி வாடி மெலிந்து வதங்கி நின்றன.

எலும்பும் கூடுமாய் வந்தவனைக் கண்ணுரக் காணவே அண்ணன் கடுஞ்சோகமாய்க்கரைந்து நெடும்பரிவாய் நின்முன்.

கன்று காண் கறவை அன்னுன்.

பரதனைக் கண்ட இராமனை இது வரைந்து காட்டியுள்ளது. தான் ஈன்ற இளங்கன்றைத் தாய்ப் பசு கண்டதுபோல் ஆன்ற பரிவோடு உருகி நின்றுள்ளான். அவ்வுண்மை உவமையால் தெரிய நின்றது. உள்ளப் பாசம் பேரளவில் பேச வந்தது.

உச்சிமோந்து என்றது அன்பின் உச்ச நிலையை ஓர்ந்து கொள்ள நின்றது. தெளிவா அறிய முடியாத அன்புருக்கங்களை மொழிகளால் ஓரளவு விழி தெரிய வெளியாக்கி யருளினர்.

தன் அடியில் வீழ்ந்து தொழுத தம்பியை வாரி எடுத்து மார்போடு இறுக அணைத்து அண்ணன் பரிவு மீதூர்ந்து நிற்கவே அருகே நின்ற இலக்குவன் பரதன் காலில் விழுந்து பணிந்து தொழுதான். இளையவன் அவ்வாறு தொழுத பொழுது அனைவரும் உளம் மிக உருகி உரிமையோடு பரிவு கூர்ந்து வியந்தார்.

இலக்குவன் தொழுதது.

அனையதோர் காலத்து அம்பொற் சடைமுடி அடியதாகக்
கனைகழல் அமரர் கோமாற் கட்டவற் படுத்த காளை
துணைபரி கரிதேர் ஊர்திஎன்றிவை பிறவும் தோலின்
வினையுறு செருப்புக் கீந்தான் விரைமலர்த் தாளின் வீழ்ந்தான். [1

பரதன் தழுவியது.

ஊடுறு கமலக் கண்ணீர் திசைதொறும் சிவிறி ஓடத்
தாள்தொடு தடக்கை ஆடத் தழுவினன் தனிமை நீங்கிக்
காடுறைந்து அலைந்த மெய்யோ கையறு கவலை கூர
நாடுறைந்து உலைந்த மெய்யோ நைந்ததென்று உலகம்நைய. [2

இளைய பெருமாள் பரதன் அடியில் விழுந்து தொழுதிருப்பதும் அவன் உருகி அழுதுள்ளதும் உலக வுயிர்களை உருக்கியுள்ளன. நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளில் ஆர்ந்த பரிவுகள் தோய்ந்து நிற்கின்றன. நிலைமைகள் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தன.

அண்ணனுக்கு அல்லலாய்த் தோன்றினனே! என்று முன்னம் மாறுபாடாய் மூண்டு நின்ற பழைய வேறுபாடுகள் எல்லாம் இவ்வீர மகனிடம் ஈண்டு அடியோடு நீங்கிப் போயின. உண்மையான உரிமைப் பாசங்கள் ஓங்கி நின்றன. விரத நிலையில் மெலிந்துள்ள பரதனது உருவநிலை இலக்குவன் உள்ளத்தை உருக்கி நின்றது. உழுவலன்போடு விழிநீர் ஓட அடியில் விழுந்து தொழுதான். பரிவு மீதூர்ந்து அவ்வாறு தொழுத அவனைத் தழுவி எடுத்து மார்போடு அணைத்து விழிநீர் வெளியே சிதறிஓட அழுத கண்ணனைப் பரதன் பரவசமாய் நின்றான். பெருகி வழிந்த கண்ணீர் இளவலின் உடலை நனைத்து ஓடியது. அரிய உழுவலன்பின் உருவங்களாய்க் கெழுமி நின்ற இந்த இருவரையும் ஒருமையாக் கண்டு அனைவரும் பரிவோடு அழுதுநின்றனர்.

பார்த்தவர் எல்லாரும் பரிதாபமாய் உருகி அழ வார்த்தைகள் யாதும் இன்றி வார்த்துநின்ற ஓவியங்கள் போல் ஆர்த்தியுடன் தழுவிஇருவரும்மருவிப் பருவரலோடு பெருகிவிளங்கினர்.

அடலாண்மை மண்டி யாண்டும் அதிசய வீரனாய் நின்ற இளையவன் பரதனைக் கண்டதும் பரிதாபமாய் ஈண்டு உருகியுள்ளான். அன்புரிமையும் பிறவிப் பாசமும் ஆர்வ நலன்களும் அரிய பண்புகளும் என்புகளும் உருக இங்கே திகழ்கின்றன.

இந்திரனைப் பாசத்தால் பிணித்து இலங்கையில் கொண்டு வந்து சிறை வைத்து அந்த அதிசய வெற்றியால் இந்திரசித்து என்று பேர்பெற்று எவ்வுலகங்களும் வியந்து போற்ற உயர்ந்து நின்ற அவ் வீரனைப் போரில் வென்று சீரிய வெற்றியோடு சிறந்து வந்துள்ள பொருவருவீரன் ஈண்டு உரிய தமையனைக் கண்டு இவ்வாறு பிரியமும் பரிவும் பெருகி உருகியிருக்கிறான்.

அமரர் கோமானை வென்றவன் பொன்றி ஒழிய வென்ற காளை என்று இலக்குவனை இங்கே குறித்தது, அத்தகைய சுத்த வீரன் அண்ணன் அடியில் வீழ்ந்து உருகியிருக்கும் உரிமை தெரிய. பலவகையான அரிய நீர்மைகள் அறிய நேர்ந்தன.

மேலான வீரமும் மெய்யன்பும் இக் குலமகனிடம் குடி கொண்டுள்ளன. அவ்வுண்மைகள் நுண்மையா ஈண்டு உணர வந்தன. சிறந்த குல நீர்மைகள் சீர்மையா உயர்ந்துள்ளன. இனிய பான்மைக்கும் அரிய மேன்மைக்கும் தனியான சான்

ருய் இத்தோன்றல் தோன்றியுள்ளான். அதனை எவ்வழியும் இவனுடைய வாழ்க்கைக்குறிப்புகள் வரைந்து காட்டியுள்ளன.

செருப்புக்கு ஈந்தான்.

பரதனுக்கு ஒரு சிறப்புப் பேராய் இது ஈங்கு வந்துள்ளது. தனக்கு உரிமையா இராமன் கொடுத்த அரச செல்வங்களை எல்லாம் அவனுடைய திருவடிகளுக்கே உரிமை செய்து தான் ஒரு அடிமையாயிருந்து வந்தான் ஆதலால் அந்த நிலைமையைக் கவி இங்ஙனம் தலைமையா விளக்கி நயமாத் துலக்கியருளினர்.

கரி பரி தேர் ஊர்தி என்றது நால்வகைச் சேனைகள் முதலிய அரச வளங்கள் யாவும் தந்து தனக்கு யாதொரு தொடர்புமின்றித் துறவு நிலையில் ஒதுங்கியிருந்த பரதனது பெருமை தெரிய வந்தது. பெரிய அரசகுமாரன் அரிய துறவியா யிருந்துள்ளான்.

உரிமையான இடங்களில் அருமையான நீர்மைகளைச் சீர்மையா விளக்கி வருதலால் இக் காவியம் சீவிய ஓவியமாச் சிறந்து எவ்வழியும் செவ்வையாய்ச் சுவை சுரந்து வருகிறது.

பரதனுடைய விரத சீலம் தவ ஒழுக்கம் ஞானம் வைராக்கியம் மானம் வீரம் மரியாதை மாண்பு பெருந்தகைமை நேர்மை நீதி தரும நிலை அன்பு அமைதி முதலிய நீர்மைகள் எல்லாம் அதிசய நிலைகளில்ஓங்கிஎவரும்வியந்து துதிசெய்யநின்றுள்ளன.

சகோதர வாஞ்சையில் இக் குலமகன் நிலை உலகம் புகழ ஒளி செய்து உலாவுகிறது. இளையவனைக் கண்டபொழுது இவனுடைய கண்களிலிருந்து நீர் பொங்கி அயலெங்கும் ஓடியுள்ளது.

ஊடுறு கமலக் கண்ணீர்
திசை தொறும் சிவிறி ஓட.

பரதனுடைய விழி நீர் வெளியே சிதறியுள்ள நிலையை இது தெளிவாக்கியுள்ளது. இதனை உள்ளக் கண்ணால் காண்பவர் உருகி மறுகுவர். எவ்வளவு பேரன்பு உள்ளத்தில் பொங்கியிருந்தால் இவ்வாறு கண்ணீர் ஓடியிருக்கும்! சோகப் பெருக்குகளை யூகமா ஓர்ந்து கொள்ளுமாறு கண்ணீர்ப் பெருக்கு நேமமாய் நேர்ந்து வருகிறது. உரைகளும் செயல்களும் துறைகள்தோறும் உண்மைகளை உணர்த்திவிடுகின்றன. அண்ணனேடு பின்போய் அரிய ஊழியங்கள் செய்த பெரியவன் என்ற பிரியம் பெருகி

யுள்ளமையால் உள்ளம் உருகி உயிருறத் தழுவிச் செயலயர்ந்து நின்றான். அந்த நிலை அன்பின் பரவசமாய் ஓங்கியது.

தாள்தொடு தடக்கை ஆடத் தழுவினன்.

முழந்தாள் அளவும் நீண்டு நிலவுகின்ற அழகிய கைகளால் இளையவனைத் தழுவியிருப்பதை விழி தெரிய இது விளக்கியுளது. சாமுத்திரிகம் என்னும் உருவ நூலில் கூறிய எழில் நலங்கள் எல்லாம் இனிது அமைந்த திருமேனி பரதனுக்குத் தனி உரிமையாய் மருவியுள்ளமையை ஈண்டு நுணுகி உணர்ந்துகொள்கிறோம். அழகன் தம்பியிடம் அழகு விழுமிய நிலையிலுளது.

தடக்கை ஆட என்றதனால் தம்பியைத் தழுவுகின்றபொழுது கைகள் நடுங்கியுள்ளமை தெரிய வந்தது. அரிய பாசப் பண்புகளை மெய்ப்பாடுகள் நன்கு அறியச் செய்கின்றன. உள்ளமும் உயிரும் பரிவின் பரவசங்களில் படிந்தபொழுது உடல் தளர்ந்து கிளர்ந்து நடுங்க நேர்கின்றது. சீவ இயல்பு தெரிய நின்றன.

காடு உறைந்து அலைந்த மெய்யோ கையறு கவலைகூர
நாடு உறைந்து உலைந்த மெய்யோ நைந்தது?

பரிவோடு தழுவி உருகி நிற்கின்ற பரதனையும் இலக்குவனையும் பார்த்து நின்ற சனத்திரள்கள் தங்களுக்குள்ளேயே பரிதாபமாய் வார்த்தையாடி மறுகியுள்ள பரிவுகளை இவை வார்த்துக் காட்டியுள்ளன. வாய்மொழிகள் ஆர்வஒளிகளா நிலவுகின்றன.

இரண்டு அரசிளங்குமரர்களும் சுகபோகமாய் இனிது வாழ வுரியவர்; அவ்வாறு இன்ப நிலையில் வாழாமல் துன்பம் தோய்ந்து உடல் மெலிந்து சடைமுடி படிந்து தளர்ந்துள்ளனர்; அந்த நிலை உலக மாந்தருடைய சிந்தையை உருக்கி வெந்துயரை விளைத்து நின்றது. அவ்வாறான பரிவினால் இந்த மொழிகள் இவ்வாறு விளைந்து இயல்புகள் தெளிய வந்துள்ளன.

உலகம் நைய என்றது அங்கே கூடி நின்ற மக்களின் அளவுகளை அறிந்துகொள்ள அமைந்தது. சீவகோடிகள் யாவரும் உரிமை கூர்ந்து உருகி யுரையாடியுள்ளமையால் இக்குல மக்களுடைய பெருமகிமைகள் தெளிவாய் வெளியே தெரிய வந்தன. பெற்றதாய்கள்போல் உற்றவர் உருகிமறுகியுள்ளனர்.

அரிய ஆர்வமாய் உரிய துணைவர் மருவி நின்றபோது எல்லார்க்கும் இளையவன் ஆன சத்துருக்கன் இராமன் திருவடியில் நெடிது விழுந்து ஆவலோடு அழுது தொழுதான்.

மூவர்க்கும் இளைய வள்ளல் முடிமிசை முகிழ்த்த கையன்
தேவர்க்கும் தேவன் தாளும் செறிகழல் இளவல் தாளும்
பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தான் எடுத்தனர் பொருந்தப்புல்லி
வாவிக்குள் அன்னம் அன்னாள் மலரடித்தலத்து வீழ்ந்தான்.

யாவர்க்கும் பின்னோனை இளையவன் முன்னே வந்து முன்னோரைத் தொழுதிருக்கும் நன்னய வுரிமைகளை இங்கே நாடிக் காண்கின்றோம். நயந்து நின்று வியந்து சிந்திக்கின்றோம்.

இராமன் பரதன் இலக்குவன் என்னும் இந்த மூன்று அரச குமாரர்களுக்கும் பின்னே பிறந்த தம்பி ஆதலால் மூவர்க்கும் இளைய வள்ளல் எனச் சத்துருக்கனை இவ்வாறு வித்தக விநயமாக் குறித்தார். முன்னவர் தலைமையும் பின்னவன் நிலைமையும் உன்னி யுணர வந்தது. உறவுகள் உரிமை தோய்ந்துள்ளன.

"முன்னர்ச் சென்றனன் மூவர்க்கும் பின் உளான்"
(மீட்சி. 218)

முன்னமும் இன்னவாறு பின்னவனைக் கூறியுள்ளது ஈண்டு எண்ண வுரியது. பரதனது உருவ நிழல் போலவே எத்தகைய நிலையிலும் சத்துருக்கன் அவனைப் பிரியாமல் மருவியிருந்தான். அரச குடும்பத்தில் பிறந்திருந்தும் தனக்கு என்று ஒரு சுகத்தையோ பெருமையையோ இவன் யாண்டும் விரும்பியதே இல்லை. அறிவும் அடக்கமும் அமைதியும் நேர்மையும் இவனிடம் சீரிய நீர்மைகளாய்ச் சிறந்து எவ்வழியும் செவ்வி சுரந்திருக்கின்றன.

கண்ணை இமை காத்ததுபோல் பெரிய அண்ணனை இலக்குவன் பேணி நின்றான்; அவ்வாறே சின்ன அண்ணனைக் கண்ணும் கருத்துமா இவன் கருதிக் காத்து வந்தான். உடல் பொருள் ஆவி யாவும் பரதனுக்கே உரிமையா உதவி இவன் ஒழுகி வந்தமையால் வள்ளல் என உள்ளம் உவந்து கவி இங்கே இவனை நயமா விளக்கி யருளினர். குறிப்பு மொழி கூரிய சீரிய கருத்தோடு கலந்து வந்துள்ளது. யாவும் கருதி உணர வுரியன.

தனக்கு என வாழாமல் எவ்வழியும்பிறர்க்கு உரிமையாளனாய்

இவன் வாழ்ந்து வந்துள்ளமையை வரலாற்று முறையில் கிரமே ஓர்ந்து கொள்ளுகிறோம். இளமையிலிருந்தே பரதனோடு இணை பிரியாமல் வளமையாய் இவன் பழகி வந்துள்ளான்.

பரதனும் இளவலும் ஒருநெர்டி பகிராது
இரதமும் இவுளியும் இவரினும் மறைநூல்
உரைதரு பொழுதினும் ஒழிகிலர் எனையாள்
வரதனும் இளவலும் எனமருவினரே. (திருஅவ, 131)

துணைவர்கள் மருவியுள்ள உறவுரிமைகளை இதனால் இனிது தெரிந்து கொள்ளுகிறோம். அரசிளங் குமரர்கள் நால்வரும் இரு வகை நிலைகளில் ஒருமையாய் இவ்வாறு ஒன்றியுள்ள உறவு முறை பெரியவர் ஆனபோதும் பிரியாமல் பிரியமாய்ப் பெருகி நின்றது. அருமைத் துணைகள் உரிமை இணைகளாயுள்ளன.

இரண்டு சோடிகளாய் இணைந்து நின்று யாண்டும் உழு வலன்போடு விழுமிய நிலையில் இவர் ஒழுகி வந்துள்ள மாட்சி உலக வுயிர்களுக்கு உயர்ந்த உவகைக் காட்சியாய் ஒளிபுரிந்து வந்தது. பாசப் பண்புகள் நேசம் நிறைந்து நின்றன.

பரதனைத் தன் கண் என இவன் எண்ணி இயங்கி வந்துள்ள மையால் அண்ணன் அடியில் தொழுதபடியே பணிந்து தொழு தான். மூத்த தமையனை இந்த இளைய தம்பி வணங்கியபொழுது அவனுடைய பாதங்களில் நறுமணமான மலர்களைத் தூவியே பெரியமரியாதை அன்புகள் மருவி ஆவலோடு தொழுதிருக்கிறான்.

பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தான்.

இராமன் அடியில் விழுந்து சத்துருக்கன் தொழுதிருக்கும் முறையை விழி தெரிய இது நேரே விளக்கியுள்ளது.

இனிய பூம்பொழிலில் தங்கியிருந்தான் ஆதலால் முன்ன தாகவே நல்ல பல மலர்களை நாடித்தொகுத்து வைத்திருக்கிறான் என்று தெரிகிறது. பூக்களைப் பெய்தே பாதங்களில் பணிந்திருக் கிறான். உத்தம பத்தி நிலை உய்த்துணர வந்தது.

உடன் பிறந்த அண்ணனைத் தொழுவதுபோல் உறவுமுறை கொண்டு தொழவில்லை. அரிய தெய்வத்தை வணங்குவதாக அஞ்சி ஒடுங்கி அடியில் விழுந்து பணிந்துள்ளான். இவனுடைய மனநிலையின் பாவனையை இனமா அறியவே தேவர்க்கும் தேவன் என்றார். அவதார மருமம் ஈண்டு உரிமையாத் தெரிய வந்தது.

செறிகழல் இளவல் தாளும்.

இராமனைத் தொழுத பின்பு இலக்குவனுடைய அடியில் விழுந்து பணிந்துள்ளான். தொழுத தம்பியைத் தழுவி எடுத்து உழுவலன்போடு அவன் உளம் உவந்து நின்றான். அந்த நிலை அரிய அன்புக் காட்சியாய் எல்லார்க்கும் இன்பம் சுரந்து விளங்கியது. பிறப்புரிமைகள் பெரிய பிரியங்களாய்ப் பெருகின.

இலக்குவனும் சத்துருக்கனும் ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள். சகோதரர் என்னும் கிழமைக்கு முழு உரிமையுடையவர்கள். இந்த அருமைத் துணைவர்கள் அன்புருவங்களாய் மருவி நின்றது பெருமகிமையாய்ப் பொங்கி மிளிர்ந்தது. இராமனும் பரதனுமே அந்தக் காட்சியைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டனர். முன்னவர் இருவருக்கும் முறையே இப் பின்னவர் இருவரும் மன்னிய உருவ நிழல்கள்போல் மருவியுள்ளனர். இளையவனை இலக்குவன் தழுவி நின்றது விழுமிய கிழமையாய் விளங்கி நின்றது. குடலின் தொடர்பு உடலிலும் தொடர்ந்து ஒளிபுரிந்தது.

இலங்கையிலிருந்து அதிசய வெற்றியோடு உலகம் துதி செய்து போற்ற வந்துள்ளான் ஆதலால் செறிகழல் இளவல் என வீரச் சிறப்போடு வெற்றியும் விளங்கி வியனாய் நின்றான்.

இளைய பெருமாளுடைய நீர்மை சீர்மைகளும் நெறி நியமங்களும் போர் வீரங்களும் இராம காவியத்தில் எவ்வழியும் சீவசோதிகளை வீசி வருகின்றன. அவ்வரவுகளின் உறவுகளையெல்லாம் இடையிடையே கண்டு இதயங்கள் களித்து வருகின்றோம்.

உடன் பிறந்த அண்ணனை உழுவலன்புடன் தொழுது வணங்கின பின்பு சீதாதேவியின் காலில் விழுந்து தொழுதான்.

வாவிக்குள் அன்னம் அன்னாள்
மலரடித் தலத்து வீழ்ந்தான்

தன் அண்ணியின் காலில் விழுந்து சத்துருக்கன் தொழுதிருப்பதை இதனால் அறிந்து கொள்ளுகிறோம். அந்தப் பெண்ணரசி பேரன்போடு இந்த இளவலை வாழ்த்தியருளினாள்.

சானகியின் அடியில் பரதன் விழுந்து வணங்கவில்லை. அரசகுல மரியாதைகள் கருதி யுணர வுரியன. அன்புரிமையும் பண்புடைமையும் மரபு முறையும் விநய விவேகங்களும் இவர்களிடம்

எவ்வழியும் விழுமிய நிலையில் கெழுமி மகிமை தோய்ந்துள்ளன.

இந்த அரச குமாரர்களுடைய சகோதர வாஞ்சைகள் மனித சமுதாயங்களுக்கு இனிய புனித போதனைகளாய்ப் பொலிந்து அரிய பல பண்பாடுகளை அருளி வருகின்றன.

உழுவலன்புடன் தொழுது வணங்கிய தம்பியர் இருவரையும் தழுவி அணைத்துக் கெழுதகைமையுடன் நின்ற இராமன் தன்னோடு வந்துள்ள துணைவர்களை அந்தக் குரிசில்களுக்கு உரிமையோடு காட்டி உவகைகளை ஊட்டியருளினன்.

பின்இணைக் குரிசில்தன்னைப் பெருங்கையால் வாங்கி வீங்கும்
தன்இணைத் தோள்கள்ஆரத் தழுவிஅத் தம்பிமாருக்கு
இன்னுயிர்த் துணைவர் தம்மைக் காட்டினன்; இருவர்தாளும்
மன்னுயிர்க்கு உவமைகூர வந்தவர் வணக்கம் செய்தார்.

தன்பால் அன்பால் எவ்வழியும் உதவிபுரிந்து வருகிற உரிமையாளர்களைத் தனது அருமைத் தம்பியர் இருவருச்கும் அறிமுகம் செய்ய விரும்பி இராமன் ஆர்வமாத் தெரியப் படுத்தினன்; உடனே சுக்கிரீவன் விபீடணன் அங்கதன் முதலிய தலைவர்கள் எல்லாரும் இக்குமரர்களைத் தொழுது வணங்கினர்.

இன் உயிர்த் துணைவர்.

குகன் முதலிய உரிமையாளர்களை இவ்வாறு கூறியுள்ளார். யாண்டும் ஆதரவாய் உரிமை பூண்டு ஊழியம் புரிந்து வந்துள்ளமையால் ஈண்டு இங்ஙனம் அவர் உறவாய் நேர்ந்தனர். உடலின் தொடர்பாய் உடன் பிறவாதிருந்தாலும் உயிர்க்கிழமையுடையராய் எவ்வழியும் உதவி செய்து வந்தவர் ஆதலால் உயிர்த் துணைவர் என நின்றார். ஆத்தும பந்துக்கள் என்பது இந்த வார்த்தையால் தெரிய வந்தது. அரிய அன்புரிமை உரையில் மருவியுளது.

குகன், குன்று சூழ்வான் மகன், அகமனமர் காதலுடைய வீடணன் ஆகிய மூவரும் நால்வரோடு சேர்ந்து எழு புதல்வர்கள் ஆனோம் என்று முன்னரே இராமன் உரிமை கொண்டு உறுதி செய்துள்ள விழுமிய கிழமையும் ஈண்டு உணர வந்தது.

இயல்பாகவே இனிது அமைந்த தன்னுயிர்த் துணைவர்க்கு அந்த இன்னுயிர்த் துணைவரைக் காட்டியருளவே அக் காட்சி அவர்க்குப் பெருங்களிப்பை ஊட்டிப் பெருமையை நீட்டியது.

மன் உயிர்க்கு உவமை கூர
வந்தவர் வணக்கம் செய்தார்.

இராமனோடு விமானத்தில் வந்த தலைவர் அனைவரும் பரதனை யும் சத்துருக்கனையும் உவந்து பணிந்து உரிமையோடு தொழு துள்ளனர். அவ்வுண்மையை இதனால் உணர்ந்து கொள்ளுகி றோம். இனிய உயிர் என்று எண்ண உரிய அரிய உறவினர்.

தன்னுடைய அருமைத் தமையனுக்கு யாண்டும் உரிமைத் துணைவராய் நின்று எவ்வழியும் இதமாய் ஏவல் புரிந்து வந்தவர் என்று தெரியவே அவர்பால் பரதனுக்கு ஆவல்மிகுந்து நின்றது. தான் செய்யவுரிய கடமையை அண்ணனுக்கு அவர் செய்து வந்துள்ளமையை எண்ணி எண்ணி அன்பு மீதூர்ந்தான். அவரை உரிமையோடு உவந்து நோக்கி நயமா நன்றி கூற நேர்ந்தான்.

குரக்கினத்து அரசைச் சேயைக் குமுதனைச் சாம்பன் தன்னைச்
செருக்கிளர் நீலன் தன்னை மற்றும் அத் திறத்தி னோரை
அரக்கருக்கு அரசை வெவ்வேறு அடைவினின் முதன்மைகூறி
மருக்கமழ் தொடையல் மாலை மார்பினன் பரதன் நின்றான்.

இராமபிரானோடு விமானத்தில் வந்திருக்கிற தலைவர்கள் எல்லாரையும் மரியாதையா உபசரித்துப் பரதன் ஆதரித்திருக்கும் முறைகளை இங்கே நன்கு அறிந்து கொள்ளுகிறோம். தனியே கானகம் போன தமையனுக்கு இனிய துணைவர்களாய் இடை யே சேர்ந்து தடைகளை எல்லாம் நீக்கி உதவி புரிந்து வந்துள்ள உபகார நிலைகளை உணர்ந்து உளம்மிக உவந்து அவரை இனிது போற்றியிருக்கிறான். உபசார முறைகள் உயர்வாய் வந்தன.

தன் அண்ணனுக்குத் துணையாய் நண்ணி நின்று சுக்கிரீவன் முதலாயினோர் தொழில் புரிந்த நிலைகளைப் பரதன் நேரே காண வில்லை ஆயினும் அனுமான் வந்துகூறிய நயமொழிகளால் யாவும் தெளிவாத் தெரிந்து கொண்டான். அம்மதிமான் உரைத்த உரை கள் துறைகள்தோறும் நிகழ்ந்த காரிய வினைவுகளைச் சீரியமுறை யில் செவ்வையாய்த் துலக்கி நின்றன ஆதலால் முழுவதும் வழுவாமல் இவ்விழுமியோன் தெளிவா அறிய நேர்ந்தான்.

எழுபது வெள்ளத்துற்ற குரக்கினம் எழுந்து பொங்கி
அழுவநீர் வேலைஎன்ன அடைந்துழி அருக்கன் மைந்தன்

தழுவிய திசைகள்தோறும் தனித்தனி இரண்டுவெள்ளம்
பொழுதிறை தடாது மீளப் போக்கினன் திருவை நாடி. [1

தென் திசை இரண்டு வெள்ளம் சேனையும் வாலிசேயும்
வன்திறற் சாம்பனேடு வாவினர் ஏவ நாயேன்
குன்றிடை இலங்கை புக்குத் திருவினைக் குறித்துமீண்ட
பின்றைவன் தளக்கர்வேலை பெரும்படை இறுத்த தன்றே

அறிவினுக்கு அறிவுபோல்வான் வீடணன் அலங்கல் தோளான்
செறிபுயத்துஅரக்கன் தம்பி திருவினை விடுதி அன்றேல்
இறுதியுற்றனைநின் வாழ்நாள் என அவன் உரைப்பச்சீறிக்
கறுவுறப் பெயர்ந்து போந்து கருணையான் சரணம் பூண்டான்.

ஆங்கவற்கு அவயம் நல்கி அரசொடு முடியும் ஈந்து
பாங்கினல் வருணன் தன்னை அழைத்திடப் பரிவிலாமை
தாங்கினன் சிறிது போது தாமரை நயனம் சேப்ப
ஓங்கிநீர் ஏழும் அன்னன் உடலும்உம் வெந்த வன்றே [4

மற்றவன் அவயம் என்ன மலர்ச்சரண் அடைந்த வேலை
வெற்றிவா னரர்கள் பொங்கி வெற்பினல் வேலை தட்டல்
முற்றுற நன்கியற்றி மொய்யொளி இலங்கை புக்குப்
பற்றினர் சுற்றி ஆர்த்தார் வானவர் பயங்கள் தீர்ந்தார்.

மலையினை எடுத்த தோளும் மதமலை திளைத்த மார்பும்
தலைஒரு பத்தும் சிந்தித் தம்பிதன் தோளும் தாளும்
கொலைதொழில் அரக்கர் ஆயோர் குலத்தொடும் தலத்து வீழச்
சிலையினை வளைவித்து ஐயதேவர்கள் இடுக்கண் தீர்த்தான்.

இலக்குவன் பகழி ஒன்றால் இந்திர சித்துஎன்று ஓதும்
விலக்கரு வலத்தினனும் இளைஞரும் கிளையும் வீழ்ந்தார்
அலக்கணுண் டுழலும் தேவர் அலர்மழை தூவி ஆர்த்தன்று
உலக்குநர் குழுக்கள் தோறும் உடற்குறை ஆடல்கண்டார். [7

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் தெரிவை மாரும்
மூவகை உலகுளோரும் தனித்தனிப் புகழ்ந்து மொய்ப்பப்
பூவைபோல் நிறத்தி னனும் வீடணப் புலவர் கோமாற்கு
யாவையும்இயம்பி மாண்டோர்க்குஇயற்றுதி கடன்கள்என்றான்.

வெள்ளம்ஓர் ஏழு பத்து விலங்கரும் வீரர்ஆகி
உள்ளவர் அறுபத்தேழு கோடியும் ஒற்றைஆழி
வள்ளல்தன் மகனும் உள்ள மகிழ்வுற விமானம் ஈந்தான்
எள்ளலிலாத கீர்த்தி வீடணன் இலங்கை வேந்தன். (9)

ஆரியன் பின்னை நின்னை அன்பினல் நினைந்து காதற்
சூரியன் மகனும் தொல்லைத் துணைவரும் இலங்கைவேந்தும்
பேரியற் படையும் சூழப் பெண்ணினுக்கு அரசி யோடும்
சீரிய விமானத்து ஏறிப் பரத்துவன் இருக்கை சேர்ந்தான். [10

இன்னவாறு இராமபிரானுடைய சரித்திர நிகழ்ச்சிகளைச் சுருக்கி அனுமான் பரதனிடம் உரைத்திருந்தான் ஆதலால் அவ் வரலாறுகள் எல்லாம் இக்குலமகன் உள்ளத்தில் தெளிவாய்ப் பதிந்து நின்றன அந் நிலைகள் உரைகளில் ஒளிர்கின்றன.

தன்னுடைய அரிய பெரிய சேனைகளோடு வந்து வானர மன்னன் உதவி புரிந்திருப்பதை உணர்ந்து மகிழ்ந்தான் ஆதலால் அவனை முன்னுறப் புகழ்ந்து போற்றினன். புகழ்ச்சி மொழிகளில் மரபும் மாட்சியும் உறவாய் ஒளிசெய்து தோன்றின.

குரக்கினத்து அரசைச் சேயை.

சுக்கிரீவனையும் அங்கதனையும் தலைமையாக முதலில் உபசரித்திருப்பது இதனால் தெரிய வந்தது. சேர்ந்து உழைத்தவர்களுடைய சீரும் சிறப்புகளும் முறையே ஓர்ந்து உணர நேர்ந்தன. செய்த உதவிகள் தெளிவாய்த் தெரிய வந்தன.

வானர சேனைகளின் மேன்மைகளால் சுக்கிரீவன் மதிப்பும் மாண்பும் அடைந்துள்ளான். குரக்கு இனத்து அரசு என்றது அந்த உண்மையை நுண்மையா உணர்த்தி நின்றது. நன்றியறிவோடு பாராட்டுகின்றான் ஆதலால் ஒவ்வொன்றின் நன்மையும் தன்மையும் உரிமையுடன் நன்கு உரைக்க வந்தன.

குமுதன், சாம்பன், நீலன் முதலானவர்கள் வானர சேனைகளின் பெரிய தலைவர்கள் ஆதலால் அவர்களுடைய நிலைமைகளைத் தெரிந்து முதன்மை கூறி நயமா உபசரித்தருளினன்.

அரிய பல அற்புத நிலைகளில் வீரியமாக் காரியங்கள் செய்துள்ள அனுமானுக்கு இங்கே உபசார நன்றிகள் யாதும் கூறவில்லை. தன் தந்தை தாய் தம்பி என அனுமானை இராமன் உறவுரிமையோடு தழுவிக் கொண்டான்; ஆகவே அவனுக்கு முகமன உபசாரம் கூறுவது அபசாரமாம் என அயல் ஒதுங்கினன் செயல் இயல்கள் வியன விளைந்து நின்றன.

வையகம் வானகம் முதலிய எத்தகைய மேலான நிலைகளும் கைம்மாறு செய்ய முடியாதபடி அவ்வுத்தமன் உதவி செய்துள்ளான். அவ்வுண்மை இங்கே உய்த்து உணர நின்றது. ஒப்புயர் வற்ற உதவியாளன் அயோத்தி அரசகுடிக்குத் தனியுரிமையாய் மருவி நின்றான். நிலைமை தலைமைகள் நினைந்து சிந்திக்க வந்தன

அரக்கருக்கு அரசை முதன்மை கூறி.

விபீடணனை ஈண்டு இவ்வாறு குறித்திருக்கிறார்.

அரக்கர் குலத்துக்கெல்லாம் தனித்தலைமைச் சக்கரவர்த்தியாய் நிலவி நின்ற இராவணனை வென்று இலங்கை ஆட்சியை மாட்சிமையோடு தந்து நிலைத்த நிருதர் குலபதியா அவனை இராமன் ஆக்கி யருளியுள்ளான். உரிமையான அவ்வுண்மை இவ்வுரையால் அறிய வந்தது. கருமங்கள் மருமங்களா மிளிர்கின்றன.

மருக்கமழ் தொடையல் மாலை மார்பினன்.

பரதனை இங்கே இவ்வாறு விளக்கியிருக்கிறார். வற்றி உலர்ந்த உடம்பினனாய்ச் சோகமே உருவாய் வந்துள்ளவன் அதிவேகமாய் மாறி அழகிய அரச கோலத்தோடு நிலவி நிற்கின்றான், இந்த அழகுக் காட்சி அயலே விளைய நேர்ந்துள்ள இராச குல மாட்சியைத் துலக்கி நின்றது. இராமன் சக்கரவர்த்தியாய் ஆட்சி புரியப் போகிறான் பரதன் இளவரசனாய் நின்று அவனுக்கு உரிமையாய் உதவி செய்ய வருகிறான். அவ்வரவு நிலை உறவாத் தெரிய மருக்கமழ் மாலை மார்பினன் என அரிய இனிய அரச கோல நீர்மைகள் தெரிய மொழிந்தார். மரு=வாசனை.

ஊதினாலும் பறந்துபோகும்படியான பரிதாப நிலையில் வந்தவன் அண்ணனைக் கண்ணாரக் காணவே அதிசய ஆனந்தம் உடையனாய் உலகம் துதிசெய்ய ஒளி மிகுந்து நிற்கின்றான். விழுமிய அந்நிலைமையும் தலைமையும் விழி தெரிய வந்தன.

முன்னவனோடு வந்துள்ள துணைவர்களைப் பரதன் கிழமையாய் உபசரித்து உவகை உரையாடிய முறைகள் விழுமிய பண்பாடுகளாய் விளங்கி நின்றன. இங்ஙனம் இளவல் உளம் உவந்து அவர்களோடு அளவளாவி நின்றபொழுது சுமந்திரன் முதலிய அமைச்சர் குழாங்கள் ஆர்வமாய் வந்து இராமனைத் தொழுது வணங்கின. உழுவலன்புகள் கெழுமி நின்றன.

முதல் மந்திரி வந்தது.

மந்திரச் சுற்றத் துள்ளார் தம்மொடும் வயங்கு தானைத்
தந்திரத் தலைவ ரோடும் தமரொடும் தரணி ஆளும்
சிந்துரக் களிறு போல்வார் எவரொடும் சேனையோடும்
சுந்தரத் தடந்தோள் வெற்றிச் சுமந்திரன் தோன்றினனால். [1]

தொழுதது.

அழுகையும் உவகையும் தானும் தனித்தனி அமர்செய்து ஏறத்
தொழுதனன் எழுந்து விம்மிச் சுமந்திரன் நிற்ற லோடும்
தழுவினன் இராமன் மற்றைத் தமபியும் அனையநீரான்
வழுவினி யுளதன் றிந்த மாநிலக் கிழத்திக்கு என்றான். (2)

மதியூகிகளான மந்திரிகள் அதிசய தீரர்களான சேனாதிபதிகள் தானாதிபதிகள் தளபதிகள் பிரதானிகள் முதலிய அரசியல் தலைவர்கள் பலரும் வரன் முறையாய் வந்து சக்கரவர்த்தித்திரு மகனைத் தக்க மரியாதைகளுடன் மிக்க ஆர்வமாய்ப் பணிந்து போற்றி வணங்கி நின்றனர். அந்நிலை மரபுமுறையாய்மருவியது.

சுந்தரத் தடந்தோள் வெற்றிச் சுமந்திரன்.

தலைமை அமைச்சன் நிலைமையை இது விளக்கியுள்ளது. இவன் சிறந்த மதிமான்; நல்ல நீதிமான்; பல கலைகளையும் நன்கு பயின்று தெளிந்தவன். அரசியல் முறைகளில் அதிசய மேதை; சாதுரிய சாகசங்களோடு ஆட்சியை மாட்சியா நடத்தி வந்தவன்; பேசுவதில் நிபுணன்; தசரத மன்னனிடம் முதல் மந்திரியாயிருந்து நீதிமுறைகளை இனிது புரிந்தவன். இராமன் வனம் போக நேர்ந்தமையால் அம் மன்னர்பிரான் மாய்ந்தான்; அரசினை இழந்து நாடு பரிதாபமாயிருந்தது; பரதன் விரதசீலனாய்த் துறவு நிலையில் ஒதுங்கியிருந்தான். அந்த நிலையில் சத்துருக்கனுக்கு உற்ற துணையாய் நின்று ஆட்சியை எவ்வழியும் செவ்வையா இவன் செய்து வந்தான். சீரிய முறையில் காரிய சித்தியைப் பெற்று வந்தமையால் வெற்றிச் சுமந்திரன் என்று இங்கே வியன் பேர்பெற்று நின்றான். குறிப்புமொழிசிறப்புணாவுற்றது.

இராமபிரான் பால் பேரன்புடையவன்; அந்த மூர்த்தியை நேரே கண்டதும் உள்ளம் உருகி உவகை மீதூர்ந்து உழுவலன் போடு தொழுது விழுமிய பண்பாடுடன் விழிநீர்மல்கி நின்றான்.

அழுகையும் உவகைதானும் தனித்தனி
அமர்செய்து ஏறத் தொழுதனன்.

சுமந்திரன் வந்து தொழுதிருக்கும் நிலையை விழி தெரிய இது விளக்கியுள்ளது. வெளியே கண்ணீர் பெருகி ஓடியிருக்கிறது; உள்ளே பெருமகிழ்ச்சி பொங்கி நிற்கிறது. துன்பமும் இன்பமும் சமமாய் ஒன்றோடு ஒன்று போராடியுள்ளன. வேறுபாடான இந்த மாறுபாடுகள் விசித்திர மருமங்களை வெளிப்படுத்துகின்றன. வந்து தொழுதவனைச் சிந்தனை விழியால் தெரிகிறோம்.

அழுகையும் உவகையும் தனித்தனி அமர்செய்து ஏற என்றது நுனித்து உணர நின்றது. பதினான்கு ஆண்டுகளாகத் தன் சக்கரவர்த்தித்திருமகன் பிரிந்து போயிருந்தது பெரிய துயரமாயிருந்தது; துன்பத்தால் பதைத்து வாடியிருந்தான் ஆதலால் நேரே அந்தக் கோமகனைக் கண்டதும் அன்பு மீதூர்ந்து அழ நேர்ந்தான். பிரிந்த கன்றைத் தாய்ப் பசு கண்டால் கரைந்து கண்ணீர் மல்கும்; அந்த உண்ணீர்மை ஈண்டு இவன் பால் உணர வந்தது. அழுகை அரிய நிலைகளை அறியச் செய்கிறது.

வனம் போகும்போது இராமனைத் தேரில் கொண்டுபோனவன் இவனே. அவனைப் பிரியமுடியாமல் அங்கே மறுகி நின்று இவன் உருகி அழுதான். அறிவுரைகள் பல கூறி இவனைத் தேற்றி நிறுத்திவிட்டு அப் போர் வல்லான் பேர்ந்து போனான். சோர்ந்து அழுது கண்ணீர் சொரிந்து இவன் மீண்டு வந்தான். வெய்ய துயரோடு அவனது மீட்சியையே எதிர்நோக்கியிருந்தான்; இன்று காட்சியுறவே கண்ணீர் பொங்கி ஓடியது. சுகமாய்வந்து சேர்ந்ததை நினைந்து இன்பம் மீதூர்ந்தான். அன்பின் பெருக்காலும் இன்பக் களிப்பாலும் விழிகளிலிருந்து நீர்பெருகி வந்தது ஆதலால் இது ஆனந்தக் கண்ணீராய் மருவி நின்றது.

உழுவலன்போடு உருகி வந்து தொழுத இவனை இராமனும் இலக்குவனும் தழுவி மகிழ்ந்தார். கிழமை அன்புகள் கெழுமி நின்றன. குலமரபுகள் குலாவி விளங்கின.

மாநிலக் கிழத்திக்கு இனி வழு அன்று

வந்த கோமகனைத் தொழுது மகிழ்ந்த சுமந்திரன் இந்தவாறு உரிமையோடு உறுதிமொழி கூறியுள்ளான். ஒளிஇழந்த வானம் போல் இராமனைப் பிரிந்தமையால் ஞாலம் இருண்டு மருண்டு

கிடந்தது. இப்பொழுது அப் பெருமான் வந்துள்ளான்; தரும மும் நீதியும் பெருகி வளர அரசு புரிவன்; புரியவே உயிரினங் கள் எவ்வழியும் செவ்வையாய் இன்புற்று வாழும்; வாழவே உலகம் யாண்டும் வளமாய் ஒளிமிகுந்து விழுமிய மேன்மை யோடு விளங்கி நிற்கும். அந்த நிலைமைகளை எல்லாம் நலமா நினைந்து தெளிய மாநிலத்தின் மாட்சியை இங்ஙனம் கூறினன்.

கிழத்தி என்றது பெண்மை நீர்மையின் ஒண்மை தெரிய. தனக்கு உரிய தலைவன் இராமன். பெருநிலக்கிழவன் என்னும் பேரினன்; விழுமிய அந்தக் கிழவனுடைய கிழமை தோன்ற இங்கே கிழத்தி தோன்றினள். உலகநிலை இனிது உணர வந்தது.

பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள். (கங்கை, 48)

அரசுமுடி துறந்து வனம்புகுந்து இராமன் கங்கை அருகே இருந்தபோது குகன் வந்து கண்டான்; கண்ணீர் சொரிந்து அழுதான்; அது பொழுது இன்னவாறு சொன்னன். இராமனை அரசனகப் பெற்றும் பூமிதேவி அந்தப் பயனைப் பெருமல் இழந்துவிட்டாளே! என்று பரிதாபமாய்க் கண்ணீர்விட்டு அவன் அங்கே அழுது கூறியது இங்கே அமைச்சன் வாய்மொழியால் மாறி முழுதும் தேறி வந்தது வைப்பு முறைகள் நுட்பமா ஊன்றி உணரவுரியன. கலையின் சுவைகள் கனிந்து வருகின்றன.

இனி என்றது இராமபிரான் வந்துள்ள இந்த நேரம் முதல் இனிமேல் மாநிலம் மேல் நிலமாய் மகிமையடைந்து விளங்கும் என்பது வியனு உணர நின்றது. வந்துள்ள மூர்த்தியின் அதிசய மகிமைகளை இந்த உரைகள் தெளிவா நன்கு விளக்கியுள்ளன.

அன்பும் அறிவும் பெருந்தன்மையும் நிறைந்த சுமந்திரன் இங்ஙனம் உரிமை கூர்ந்து உரைத்ததைக் கேட்டு அனைவரும் உவகை மீதூர்ந்தனர். இராமபிரான் அவனைப் பரிவோடு தழுவி மகிழ்ந்து எல்லாரையும் விமானத்தில் ஏறும்படி பணித்தான்.

ஏறுக சேனைஎல்லாம் விமானமீது என்று தன்போல்
மாறிலா வீரன்கூற வந்துள அனிக வெள்ளம்
ஊறிரும் பரவை வானத்து எழிலியுள் ஒடுங்கு மாபோல்
ஏறிமற் றிளையவீரன் இணையடி தொழுத தன்றே. 1]

உரைசெயின் உலகம் உண்டான் மணியணி உதரம்ஒவ்வா;
கரைசெயல் அரிய வேதக் குறுமுனி கையும் ஒவ்வா;

விரைசெறி அலங்கல் மாலைப்புட்பக விமானம்என்றென்று
உரைசெய்து வானுளோர்கள் ஒண்மலர் தூவி ஆர்த்தார்.

அசனியின் குழுவும் ஆழி ஏழும்ஒத்து ஆர்த்தது என்ன
விசையுறு முரசும் வேதத்துஓதையும் விளிகொள் சங்கும்
இசையுறு குரலும் ஏற்றின் அரவமும் எழுந்து பொங்கித்
திசையுறச் சென்று வானோர் அந்தரத்துஒலியில் தீர்ந்த.

அவ்வயின் விமானம்தாவி அந்தரத்து அயோத்திநோக்கிச்
செவ்வையில் படர லுற்ற செகதல மடந்தை யோடும்
இவ்வுல கத்து ளோர்கள் இந்திரர்உலகு காண்பான்
கவ்வையின் ஏகுகின்ற நீர்மையைக் கடுக்குமன்றே. [4

ஆனதோர் அளவையின் அமரர் கோனொடும்
வானவர் திருநகர் வருவ தாமென
மேனிறை வானவர் வீசும் பூவொடும்
தானுயர் புட்பகம் நிலத்தைச் சார்ந்ததால். [5

(மீட்சிப்படலம், 354-358)

நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளையும் நிலைகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். சரித்திரம் நடந்து வருவதில் விசித்திரக் காட்சிகள் விரிந்து வருகின்றன. அண்ணனை எதிர்கொண்டு காண வேண்டும் என்று சேனைத் திரள்களோடு வந்த பரதன் கங்கா நதியின் வடகரையில் தங்கியிருந்தான். தம்பி அங்கே வந்துள்ள நிலைமையை அனுமான் வாய்மொழியால் அறிந்து மகிழ்ந்த இராமன் வானவீதியில் வேகமாய்ப் பறந்து வந்த விமானம் நேரே வரவும் கீழே இறங்க நினைந்தான். கருதியபடியே மானம் இறங்கியது; இறங்கவே இராமன் தாய்மார்கள் அடியில் விழுந்து தொழுதான்; தம்பியைத் தழுவி உழுவலன்போடு அழுதான்; வந்தவர் யாவருக்கும் ஆதரவுகூறி மந்திரிகளை மகிழ்வித்து எல்லாரையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு இக் கோமகன் தனது மாநகருக்கு அருகே நந்தியம்பதியில் இறங்கியுள்ளான். இந்த உண்மைகளை மேலே வந்துள்ள பாசுரங்கள் தெளிவா வரைந்து காட்டியுள்ளன. காட்சிகள் கருதிக் காணவுரியன.

அளவிடலரிய சேனைகளை விமானம் எளிதே தாங்கி வந்துள்ளது. தெய்வீகமான புட்பகம் ஆதலால் அற்புத நிலையில் அதிசயங்களை ஆற்றி உலகம் வியந்து துதிசெய்ய வந்தது. தேசமக்கள்

யாவரும் அதில் ஏறியபோது மேலும் விரிந்து சீரிய ஒளியோடு அது சிறந்து விளங்கியது. அதன் நிலைமை தலைமையா நிலவியது.

பரவை வானத்து எழிலியுள்
ஒடுங்கு மாபோல்

தன்பால் திரண்டு வந்த சனத்திரள்களை அந்த விமானம் தாங்கிக் கொண்ட நிலையை இந்த உவமானம் இனிது விளக்கி யுள்ளது. பரவை=கடல். எழிலி=மேகம். பூமியில் பரந்து விரிந்துள்ள பெரிய சமுத்திரத்தை வானத்தில் இருந்த ஒரு மேகம் வாரி வைத்துக் கொண்டதுபோல் வந்திருந்த சேனைத் திரள்களை எல்லாம் விமானம் இயல்பா ஏற்றுக்கொண்டது. ஏறிய சீவகோடிகளையும் ஏற்ற தேவமானத்தையும் நேரே கண்டு நிலைமை தலைமைகளை யூகமா யுணர்ந்து உவந்து கொள்ளுகிறோம்.

சலசமுத்திரமும், சனசமுத்திரமும் இனமாத் தெரியவந்தன. தேசமக்கள் யாவரும் திரண்டு தங்கள் அதிபதியை ஆசையோடு காண வந்துள்ளனர். கடலில் அலைகள் அடர்ந்து தொடர்ந்து வருதல்போல் பலவகை நிலைகளிலுள்ள அனைவரும் அணி அணி யாப் படர்ந்து வந்திருத்தலால் அந்த வரவு பரவை என இங்கே தெரிய வந்தது. கரையின்றிப் பரந்து விரிந்து யாண்டும் நிறைந் திருப்பது ஆதலால் கடலுக்கு இப்படி ஒரு பெயர் அமைந்தது.

கரைசெயல் அரியதோர் உவகை கைதரத்
திரைசெறி கடல்என எழுந்து சென்றதால்.

முன்னம் அயோத்தியிலிருந்து வந்த சனங்களை இந்தவாறு குறித்திருக்கிறார். திரைசெறிகடல் என வரவு நிலையை முன்னம் குறித்தமையால் மீண்டு செல்ல நேர்ந்தபோது அதனை ஞாபகமா ஈண்டு உரைத்தருளினர். குறிப்புகளும் வைப்பு முறைகளும் இராம காவியத்தில் சீவிய ஓவியங்களாய் யாண்டும் மேவி மிளிர்கின்றன. கருதி உணரும் அளவு சுவைகள் தெரிகின்றன.

கடல் நீரை வாரிக்கொண்டுபோய் மறுபடியும் பூமியில் மழையா மேகம் பொழிந்துவிடும்; அதுபோல் சனங்களை எடுத் துக்கொண்டு வானவீதியில் உல்லாசமாய்ப் போகின்ற விமானம் அயோத்தியாபுரிக்கு அருகே சுகமா இறக்கிவிடும். முகில், புயல், மேகம் என வேறு பெயர்களைக் கூருமல் எழிலி என்றது அதன் அழகும் தொழிலும் காண. மேலே ஆகாய வீதியில்

அழகா எழுந்து உலாவுவது எழிலி என நேர்ந்தது. எழில் மிகுந்து வருகிற விமானத்துக்கு உவமானமாக வந்தமையால் எழிலி என்ற இனிய பேரோடு இசைந்து இயல்பு தெரிய வந்தது.

வானம் தரும் நீரால் வையம் மகிழ்கிறது. இந்த விமானம் கொண்டு வருகிற மக்களும் மழைபோல் உலகிற்கு நல்லவர்; இனிய நீர்மையர்; எவ்வழியும் யார்க்கும் இதமா உதவி புரிப வர். எழில் வண்ணன் ஆன இராமபிரானேடு சேர்ந்து வருத லால் சார்ந்ததின் வண்ணமாய் மாந்தர் யாவரும் மகிமை தோய்ந்து வருகின்றனர். அவ்வரவு உறவா உணர வந்தது.

கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதி

இராமனது உருவ அழகைக் கவி இவ்வாறு அழகு மொழி களால் விழுமிய நிலையில் விளக்கி யிருக்கிருர். வாடிய பயிர் களுக்கு மேகம் போல் நீடிய துயரோடிருந்த உயிர்களுக்கு இராமன் ஆதரவாய் அருள் சுரந்து இன்பம் புரிந்து வருகிருன்.

The kind refresher of the summer heats. [Thomson]

கோடை வெயிலால் வாடிய வெப்பத்தைக் குளிரச்செய்து இனிய சுகம் அருளுவது என மழையை இது குறித்துள்ளது.

இத்தகைய இனிய நிலையில் நல்ல நீர்மையாளரோடு கூடி இராமபிரான் வான விமானத்தில் வருகிருன். அந்தப் புண்ணிய மூர்த்தியின் வரவு எண்ணரிய இன்பங்களை எவ்வுயிர்க்கும் அருள வருதலால் பொருள் பொதிந்த மொழிகளால் இவ்வாறு ஈண்டு எண்ணி யுணர வந்தது. குறிப்புரைகள் கூரிய சீரிய நீர்மையன.

விருந்துஎவன் செய்கோ தோழி! சாரல்
அரும்பற மலர்ந்த கடுங்கால் வேங்கைச்
சுரும்பிமிர் அடுக்கம் புலம்பக் களிறட்டு
உரும்பில் உள்ளத்து அரிமா வழங்கும்
பெருங்கல் நாடன் வரவறிந்து விரும்பி
மாக்கடல் முகந்து மணிநிறத் தருவித்
தாழ்நீர் னனந்தலை அழுந்துபடப் பாஅய்
மலைஇமைப் பதுபோல் மின்னிச்
சிலைவல் ஏற்றெடு செறிந்தஇம் மழைக்கே.

(நற்றிணை, 112)

போர் மேல் முனைந்துபோன தனது நாயகன் இன்னும்

வாவில்லையே! என்று வருந்திய தலைவிக்கு அவளுடைய தோழி இவ்வாறு இதைக் கூறியிருக்கிருள். யானைகளை அடர்ந்து வென்று வீர கம்பீரமாய்த் திரிகின்ற சிங்க ஏறுபோல் நமது தலைவன் விரைந்து வருவன்; அவன் வருவதற்கு அறிகுறியாக மேகம் வாரி நீரை வாரி எங்கும் மாரி பெய்கிறது; இந்த மழைக்கு நான் என்ன விருந்து செய்வேன்? என்று நன்றியறிவோடு உள்ளம் உவந்து இங்ஙனம் அவள் உரையாடியுள்ளாள்.

கடல் முகந்து வானம் வையம் உய்யப் பெய்தல்போல் பரவையை வாரி விமானம் வேகமாய் வருகிறது. நீலமாமுகிலும், கோல மழையும், போர் வென்று வருகிற வீரசிங்கமும், நேர் சென்று கண்டு நீர்மை தோய்ந்த மேன்மையான திரளும் மேவி வருதலால் விழுமிய இக்காட்சி இங்கு மாட்சியாய் வந்தது.

இந்த உலகத்திலுள்ள மாந்தர் இந்திர உலகத்தைக் காணச் செல்வதுபோல் அந்தரத்தில் வாவிவந்த அவ்விமானம் அயோத்தி நகரை நணுகியது. தென்திசையிலிருந்து வருகிறது ஆகலால் தென்பால் இரண்டு கல் தூரத்திலுள்ள நந்தியம்பதியைக் கண்டது. காணவே தம்பி பரதன் விரதம் பூண்டு தங்கியிருந்த தலம் என்று தெரிந்து இராமன் அங்கேயே இறங்க எண்ணினன். அந்தப் புண்ணிய சீலன் எண்ணியவுடனே விமானம் ஆண்டு இறங்கியது. உல்லாச விநோதமாய் உலாவி வந்து அது கீழே இறங்கும்போது மேலிருந்து அரிய பரிமளமுடைய தெய்வ மலர்கள் மழைபோல் பெய்தன. பூமாரியுடன் பூமியில் நின்றது.

வானவர் வீசும் பூவொடும்
புட்பகம் நிலத்தைச் சார்ந்தது.

இலங்காபுரியிலிருந்து விரைந்து பறந்து வந்த விமானம் இங்கே இவ்வாறு வந்து சேர்ந்துள்ளது. தாங்கள் மானமா இனிது வாழ இன்ப வாழ்வை அருளி வந்துள்ள பெருமான் ஆதலால் இராமனது விமானத்தின் மீது தேவர்கள் பூமாரி பொழிந்துள்ளனர். அமரர்கள் அகத்தே அடைந்திருக்கும் உவகை நிலைகளை வெளியே வீசும் பூக்கள் தெளிவா விளக்கி நின்றன. வானவர்கள் மகிழ்ந்து சொரிந்த பூமாரியோடு விமானம் வையத்தை அடைந்துள்ளமையால் அதில் வந்துள்ள தலைவ

னது நிலைமையையும் நீர்மையையும் சீர்மையையும் கூர்மையா உணர்ந்து கொள்கிறோம். அரியபொருள் உரிய தகவுடன் வந்தது.

அமரர் கோனொடும்
வானவர் திருநகர் வருவது

தேவராசன் தேவ விமானத்தில் ஏறித் தேவலோகத்தில் உள்ள அமராவதி நகரை அடைந்ததுபோல் இராமன் குபேர விமானத்தில் அமர்ந்து அயோத்தி நகருக்கு வந்திருக்கிறான். மனித மரபில் மருவியுள்ளமையால் இராமனுக்கு அமரர்கோன் உவமையாய் நேர்ந்தான். ஈண்டு வந்தவன் இறைமைநீண்டவன்.

"முனைவரும் அமரரும் மூவர் தேவரும்
எனையவர் எனையவர் யாவர் யாவையும்
நினைவரும் இருவினை முடிக்க நின்றுளோன்."

எடுத்த வில்லோடு வென்றிவீரனாய் ஈண்டு வந்து நின்றுள்ள இராமனை அனுமான் இவ்வாறு வடித்துக் காட்டியுள்ளான்.

யாரும் செய்ய முடியாத அதிசய காரியத்தைச் செய்து முடித்துள்ள சீரிய தருமவீரனைச் செவ்வையாக் கொண்டு வந்துள்ளமையால் விமானம் வியனான மேன்மையை அடைந்தது.

தான் உயர் புட்பகம் என்றது அதன் அற்புத நிலையையும் அதிசய இயல்பையும் கருதியுணர வந்தது. பிரமதேவனால் அழகாகப் படைக்கப்பட்டது; பேரழகு உடையது; பெருமித நிலையது; எவ்வழியும் யாதும் தனக்கு நிகரில்லாதது; அத்தகைய உத்தமமான தெய்வ விமானம் குபேரனிடமிருந்து பறிக்கப்பட்டு இலங்கை வேந்தனிடம் பழிபட்டுக் கலங்கியிருந்தது. அந்த இழிவுகள் யாவும் நீங்கி விழுமிய நிலையில் இதுபொழுது விளங்கியுள்ளது. இந்த அழகனை அழகியோடு சுமந்து வந்தமையால் எழிலும் ஏற்றமும் புகழும் புண்ணியமும் பொருந்தி உயர்ந்தது. தான் தோன்றிய தோற்றத்துக்கு ஆன்ற பயன் அமைந்தது என்று ஓங்கிய மகிழ்ச்சியோடு அம்மானம் உயர்ந்துள்ளது. அந்த உண்மை தான் உயர் என்றதனால் நுண்மையாத் தெரிய வந்தது.

தலம் சார்ந்தது.

ஒளிவீசி வானவீதியில் எழிலோடு கதிவேகமாய் வந்த விழுமிய விமானம் நந்தியம்பதியில் வந்து நேரே இறங்கியது.

இறங்கவே இராமனும் சீதையும் தம்பிமாரும் முறையே இறங்கினர். அதன்பின் யாவரும் ஒருங்கே இறங்கினர். எங்கும் சனத்திரள்கள் பொங்கி நின்றன. சிறிய ஊர் பெரிய ஒரு இராசதானிபோல் யாண்டும் பெருமையாய் நீண்டு விளங்கியது.

தவக்குடில் கண்டது.

கீழே இறங்கிய இராமன் தேவியோடு நேரே பரதனது ஆசிரமத்திற்கே போனான்; தம்பி தங்கியிருந்த தவக்குடிசையை உள்ளே நுழைந்து பார்த்தான். பசிய நாணல் புல்லால் வேய்ந்திருந்த குடிலை நோக்கியதும் இந்த நம்பியின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் நிலத்தில் துளித்தன. சித்திரகூட மலையில் தனக்கு இலக்குவன் அமைத்திருந்த பன்னசாலைபோலவே அந்தக்குடில் மன்னி இருந்தமையால் உன்னி உணர்ந்து உருகி மறுகினான். அரிய பெரிய அரண்மனையில் இருந்து சுகபோகமாய் ஆட்சிபுரியவுரியவன் தனக்காக யாவும் துறந்து கடுமையான விரதங்களைப் பூண்டு அரிய தவசியாயிருந்துள்ளதை நினைந்து நினைந்து இராமன் மறுகியது போலவே சீதையும் பரிவாய் உருகினாள். இளவலை எண்ணிக் கண்ணீர் சொரிந்தவன் தேவியோடு திரும்பினான். அதன்பின் அயலே யிருந்த அரச மாளிகைக்குப் போய் வரிசையாய் அமர்ந்தான். உரிய காரியங்களைக் கருதினான்.

வந்திருந்த யாவருக்கும் வரன்முறையே இடங்கள்தோறும் உபசார விருந்துகள் நடந்தன. காரிய விசாரணைகளில் சீரிய சதுரர்கள் எவ்வழியும் செவ்வையாக் கவனித்து வந்தனர். எல்லாரிடமும் யாங்கணும் உவகை மகிழ்ச்சிகள் ஓங்கிநின்றன.

தவ வேடம் நீங்கியது.

வனவாச காலத்தில் இராமன் கொண்டிருந்த தவ வேடங்களை நீக்கிப் புனித நீரில் இனிது முழுகினான். நீராடி முடியவே அரச கோலங்கள் புனைய வுரிய பணியாளர்கள் அணிஅணியாய் வந்தனர். இந்நம்பி அருளியபடியே தம்பிமார் மூவரும் தண்புனல் படிந்து இளவரசருக்குரிய அலங்காரங்களை மருவி நின்றனர். ஒப்பனைகள் யாவும் செப்பமாய் முடிந்த பின் இராசதானிக்கு இராமன் வரிசையோடு எழுந்தருளினான். அந்தக் காட்சி அதிசய மாட்சிகளாய்த் துலங்கி நின்றன. எங்கும் இன்ப வளங்கள் பொங்கி விளங்க யாவரும் அன்பு கனிந்து நின்றனர்.

நம்பியபரத னோடு நந்தியம் பதியை நண்ணி
வம்பலர் சடையு மாற்றி மயிர்வினை முற்றிமற்றைத்
தம்பியரோடு தானும் தண்புனல் படிந்த பின்னர்
உம்பரும் உவகைகூர ஒப்பனை ஒப்பச் செய்தார். [1

நிருதியின் திசையில் தோன்றும் நந்தியம் பதியை நீங்கி
குருதிகொப் பளிக்கும் வேலான் கொடிமதில் அயோத்திமேவச்
சுருதியொத் தனைய வெள்ளைத் துரகதக் குலங்கள் பூண்டு
பருதியொத் திலங்கும் பைம்பூண் பருமணித் தேரனுன். [2

ஊழியின் இறுதி காணும் வலியினது உயர்பொன் தேரின்
ஏழுயர் மதமா வன்ன இலக்குவன் கவிகை ஏந்தப்
பாழிய மற்றைத் தம்பி பால்நிறக் கவரி பற்றப்
பூழியை அடக்கும் கண்ணீர்ப் பரதன்கோல் கொள்ளப்போனுன்.

வீடணக் குரிசில் மற்றை வெங்கதிர்ச் சிறுவன்வெற்றிக்
கோடணை குன்றம் ஏறிக் கொண்டல்தேர் மருங்கு செல்லத்
தோடணை மவுலிச் செங்கண் வாலிசேய் தூசிசெல்லச்
சேடனைப் பொருவும் வீர மாருதி பின்பு சென்ருன். [4

அறுபத்தேழ் அமைந்தகோடி யானைமேல் வரிசைக்கான்ற
திறமுற்ற சிறப்ப ராகி மானுடச் செவ்வி வீரம்
பெறுகுற்ற அன்பர்உச்சி பிறங்குவெண் குடையர் செச்சை
மறுவுற்ற அலங்கல் மார்பர் வானரத் தலைவர் போனர். [5

எட்டமை இறுத்த பத்தின் ஏழ்பொழில் வளாக வேந்தர்
பட்டம்வைத் தமைந்த நெற்றிப் பகட்டினர் பைம்பொன்தேரர்
வட்டவெண் குடையர் வீசு சாமரை மருங்கர் வானைத்
தொட்டவெஞ்சோதி மோலிச் சென்னியர்தொழுது சூழ்ந்தார்.

வானர மகளிர் எல்லாம் வானவர் மகளிராய்வந்து
ஊனமில் பிடியும் ஒண்தார்ப் புரவியும் பிறவும் ஊர்ந்து
மீனினம் மதியைச் சூழ்ந்த தன்மையின் விரிந்து சுற்றப்
பூநிற விமானம் தன்மேல் மிதிலைநாட்டு அன்னம் போனள். [7

தேவரும் முனிவர்தாமும் திசைதொறும் மலர்கள் சிந்த
ஓவலின் மாரி ஏய்ப்ப எங்கணும் உதிர்ந்து வீங்கிக்
கேவல மலராய் வேரோர் இடமின்றிக் கிடந்த வாற்ருல்
பூவெனும் நாமம் இன்றிவ் வுலகிற்குப் பொருந்திற்றன்றே. [8

கோடையில் வறந்த மேகக் குலமெனப் பதினலாண்டு
பாடுறு பதம்செய் யாத பணைமுகப் பரும யானை
காடுறை அண்ணல் எய்தக் கடாந்திறந் துகுத்த வாரி
ஓடின உள்ளத்துள்ள களிதிறந் துடைந்த தேபோல். [9

துரகத்தார்ப் புரவிஎல்லாம் மூங்கையர் சொற்பென்ன
அரவப்போர் மேகம் என்ன ஆலித்த; மரங்கள் ஆன்ற
பருவத்தால் பூத்த என்னப் பூத்தன பகையில் சீறும்
புருவத்தார் மேனிஎல்லாம் பொன்னிறப் பசலைபூத்த. [10

ஆயதோர் அளவில் செல்வத்து அண்ணலும் அயோத்தி நண்ணித்
தாயரை வணங்கித் தங்கள் இறையொடுமுனியைத் தாழ்ந்து
நாயகக் கோயில் எய்தி நானிலக் கிழத்தியோடும்
சேயொளிக் கமலத்தாளும் களிநடம் செய்யக் கண்டான். [11
(திருமுடிசூட்டு படலம் 1-11)

ஈண்டு நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை நேரே காண்கின்றோம். நிலைமைகளைத் தெரிகின்றோம்; நெஞ்சம்வியந்து களிக்கின்றோம்.

அயோத்திக்கு எழுந்தருளியது.

வான விமானத்தில் வந்த இராமபிரான் நேரே நந்தியம்பதியில் இறங்கினான்; நறும்புனல் படிந்தான்; அரச கோலங்கள் புனைந்தான்; தம்பியர்களோடு தனது நகருக்கு எழுந்தருளினான். அந்தப் பதியிலிருந்து வடகீழ்த்திசையில் திருவயோத்தியுள்ளது. வழி முழுவதும் எவ்வழியும் எழில்களோடு விழுமிய நிலைகளில் அலங்காரங்கள் துலங்கி நின்றன. சக்கரவர்த்தித் திருமகன்மிக்க சீரோடு விளங்கியிருந்த இரதத்தில் ஏறினான்; அது சிறந்த பொன்னால் அமைந்தது; உயர்ந்த அழகிய வெள்ளைக்குதிரைகள் நான்கு பூண்டது; அயல் எங்கும் ஒளி வீசுகின்ற அந்தத் தங்கத் தேரில் இராமன் ஏறியபோது மகிழ்ச்சி ஆரவாரங்கள் யாண்டும் நீண்டு எழுந்தன; இனிய மலர்களை வாரி யாவரும் உவகை மீதூர்ந்து வீசினர்; தேவரும் முனிவரும் சிந்தை மகிழ்ந்து வேதமந்திரங்களை ஓதினர்; பரதன் உவகை மீதூர்ந்து தேரில் ஏறிச் சாரதியாய் அமர்ந்து தங்கச் சவுக்கைக் கையில் கொண்டான்; இலக்குவன் அண்ணல் அயலே நின்று வெண் கொற்றக் குடையைச் செங்கையால் தாங்கினான்; சத்துருக்கன் பின்புறம் நின்று வெண் சாமரைகளை இருகைகளாலும் உரிமையோடு வீசினான்; தம்பிமார் மூவரும் முன்னும் பின்னும் அருகும் மருவி அன்போடுபணி புரிய இந்த நம்பி அந்த அதிசய அழகுடைய இரதத்தில் அமர்ந்திருந்த காட்சியைக் கண்டு யாவரும் ஆனந்த பரவசராய்த் தொழுது உழுவலன்பால் பெருகி நின்றனர். தாங்கள் கண்கள் கொண்ட பயனை அன்று கண்டதாக ஆண்களும் பெண்களும்

ஆர்வம் மீதூர்ந்து உவந்து புகழ்ந்தனர். உள்ளத்தில் பொங்கிய உவகைகள் உரைகளில் எங்கணும் துள்ளி வந்தன். உளமும் உணர்வும் உயிரும் அளவிலா ஆனந்தங்களை அடைந்துவிளங்கின.

அருமைத் துணைவர்கள் உழுவலன்பு சுரந்து உரிமையுடன் புடைசூழ்ந்து நிற்கஇடையே சிறந்தஆசனத்தில் மன்னர்பிரான் மன்னியிருந்தான். பொன்மயமான இரதம் நன்னயமாய் நகர்ந்தது; வெண்ணிறப் புரவிகள் உண்ணிறைந்த பெருமிதத்தோடு பண்ணமைதி தோய்ந்து நடந்தன. விபீடணனும், சுக்கிரீவனும் உயர்ந்த யானைகளில் ஏறித் தேரின் வலமும் இடமுமாய்முறையே சாரி வந்தனர். அங்கதன் போருடைதரித்து உடைவாள் ஏந்தி முன்னே சென்றான். தேரின் பின்னே அனுமான் சீரிய பாதுகாவலனாய்ச் சேர்ந்து வந்தான். குகன் உவகை மீதூர்ந்து மாருதி மருங்கே மாண்புடன் நடந்தான். அறுபத்தேழு கோடி வானரத் தலைவர்கள் சேனைகளோடு சேர்ந்து சென்றனர். தேசாதிபதிகளான அரசர்கள் தேசு மிகுந்த அலங்காரங்கள் சிறந்துவிளங்க ஆசை மீதூர்ந்து அவரவர்களுக்கு உரிய வாகனங்களில் ஏறி வந்தனர். குடைகள் கொடிகள் ஆலவட்டகள் முதலிய அரச சின்னங்கள் அதிசய நிலைகளில் யாண்டும் உலாவி நிலாவின. மங்கல முரசங்கள் எங்கணும் பொங்கி முழங்கின. காகளமும் பல்லியமும் கருங்கடல்போல் முழங்கி வர மருங்கு எங்கும் சேனைதளங்கள்சேமமாநடந்துவரக்கோமகன் தேர் சேமமாய்நேரேசென்றது.

தனது நாயகன் ஏறியிருந்த தேர் சீரோடு முன்னே செல்லவே சீதைஅமர்ந்திருந்த சிவிகை சிறப்போடுபின்னேசென்றது. அரச குலமகளிர் யாவரும் தேவியின் விமானத்தை வரிசையோடு சூழ்ந்து ஊர்திகளில் வந்தனர். வானர மகளிர் எல்லாரும் தேவ குலமாதராய்த் தேசு மிகுந்து சிறந்து உரிமையோடு அடர்ந்து தொடர்ந்தனர். சென்ற வழி முழுவதும் செவ்விய நறுமலர்கள் பரந்து விரிந்து சிதறியிருந்தன. பரிமளங்கள் யாண்டும் நீண்டு வீசி நின்றன. யானைகளும் குதிரைகளும் தேர்களும் சிவிகைகளும் மானவர் குழாங்களும் வானவர்கள்போல் மன்னவர்திரளும் மருங்கு எங்கும் நெருங்கி நடந்தமையால் நந்தியம்பதியிலிருந்து அயோத்திவரையும் இந்திரவுலகம் போல் எழில்கள் மிகுந்து விளங்கின. தேசமக்கள் யாவரும் ஆசை மிகுந்து யாண்

டும் கண்டு மகிழ்ந்து கைகுவித்து வணங்கி உழுவலன்பினராய்த் தொழுது நின்றனர். அழகிய இரதம் அயோத்தி நகர் புகுந்து நெடிய இராச வீதிகளைக் கடந்து அரசகுல மாளிகைகளை அடைந்தது. மணி ஒளிகளை வீசி எழிலோடு விளங்கி நின்ற விழுமிய அரண்மனையை அடையவே இராமன் இரதத்தின்றும் இறங்கினான். மணி மாளிகையுள் புகுந்தான்; நேரே தாயர் மூவர் தாள்களிலும் விழுந்து தொழுதான்; எழுந்த பொழுது கோசலைத்தாய் கண்களிலிருந்து ஆனந்த அன்புநீர் பொழிந்து வழிந்தது; கைகேசியும் சுமித்திரையும் கண்ணீர் மல்கி நின்றனர். மூதிர்பேரன்போடு தொழுது வணங்கிய பின்பு இந்நம்பி தம்பியரோடு தனது மாளிகையை அடைந்தான். நந்தியம்பதியிலிருந்து முன்னதாகவே வந்து சுமந்திரன் வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வைத்திருந்தான் ஆதலால் யாவும் செவ்வையாய் விளங்கி நின்றன. உடன் வந்த படைபரிவாரங்களும் சேனைதளங்களும் இடங்கள்தோறும் உரிமையோடு தங்கின. உவகைக்களிப்புகள் எங்கும்பொங்கின.

சிவிகையிலிருந்து இறங்கிய சீதாதேவி மாமிமாரை வணங்கி எழுந்து அந்தப் புரத்தை அடைந்தாள். அங்கேயிருந்த தங்கையர் மூவரும் உழுவலன்போடு அழுத கண்ணராய்த் தம்க்கை அடியில் விழுந்து தொழுதார். அவரை வாரிஎடுத்து ஆர்வ வுரை கூறி ஆதரித்தருளினாள். ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி என்னும் இம்மூவரும் சானகியின் தங்கையர்; இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகிய இம்மூன்று அரசகுமாரர்களுக்கும் முறையே மனைவியர். பதினான்கு ஆண்டுகளாக அருமைத் தமக்கையைப் பிரிந்து உரிய சுகபோகங்கள் யாவும் ஒருவிப் பரிதாப நிலையில் மறுகியிருந்தனர். இன்று தங்கள் அரசியைக் காணவே பேரானந்தம் அடைந்தனர். அந்தப் புரத்திலிருந்த பணிப் பெண்கள் யாவரும் அன்புரிமையால் கண்கள் நீர் ததும்பி வழியச் சீதையின் காலடியில் விழுந்து தொழுதனர். அவர் யாவரையும் உரிமையோடு நோக்கி உவகையுரைகள் கூறியருளினாள். இத் தேவியின் அழகிய திருவுவைக் கண்டும் இனிய மொழிகளைக் கேட்டும் எல்லாரும் உள்ளம் உவந்து களித்தனர்; உவளகம் எங்கும் உவகை பொங்கி நின்றது. இன்பமலர்ச்சிகள் எவ்வழியும் இலங்கின.

அரச மாளிகையில் அமர்ந்திருந்த இராமனை அரச குலமும் அமைச்சர் குழாமும் தொழுது மகிழ்ந்தன. எல்லாரையும் அன்

புடன் நோக்கி இன்பவுரைகளாடி அனுப்பித் தம்பியரோடு இந் நம்பி தனியே இனி தமர்ந்து கனிவுரைகளாடியிருந்தான்.

கானக வாழ்வில் இருந்து வந்தவன் எத்தகைய அதிசய வாழ்வுகளையுடையவன்! என்பதை இங்கே நேர்ந்துள்ள நிகழ்ச்சி களால் ஓர்ந்து உணர்ந்து உள்ளம் உவந்து கொள்ளுகிறோம்.

சுருதி அனைய வெள்ளைத் துரகதக் குலங்கள்.

இராமனது தேரில் பூட்டியிருந்த குதிரைகளை இவை காட்டி யுள்ளன. வேதங்களை உவமை கூறியிருப்பது வியப்பை விளைத்து நிற்கிறது. வேதம் அறிவுநலம் உடையது; கேள்வியால் கிளர்ந்து வருவது; அத்தகைய நீர்மைகள் சீர்மையாய் அமைந்திருப்பன என்பதைக் கூர்மையா உணர்ந்து கொள்ளும்படி இந்த ஒப்பு நேர்மையாய் ஈண்டு நேர்ந்து நின்றது. சுருதி=வேதம். செவிச் செல்வமாய்ச் செழித்து வருவது என்னும் பொருள் இப்பேரில் நேரே மருவியுள்ளது. சுருதியின் உறவு கருதியுணர வந்தது.

பாகனது குறிப்பறிந்து நடப்பன; கசை குசைகளின் அசைவு இல்லாமலே கதிவேகமாய்ச் செல்வன; அதிவேகம் உடையன எனக் குதிரைகளை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். துரக தம்=குதிரை. துரிதமான கதிகளையுடையது என்னும் ஏதுவால் வந்தது. குலம் என்றது தலைமையான நிலைமைகள் தகுதியா அமைந்தன எனச் சாதி இனம் தெரிய நின்றது. வேதம் என்ற குறிப்பால் நான்கு குதிரைகள் பூண்டுள்ளமையை ஈண்டு அறிந்துகொள்கிறோம். தொகையும்வகையும்தொடர்புகளாயின.

சிறந்த பட்டத்துக் குதிரைகள் அரசர் பெருமானுக்கு வாக னங்களாய் வாய்ந்து நிற்கின்றன. தங்கள் அருமைச் சக்கர வர்த்தியை உரிமையோடு திருநகருக்குக் கொண்டு போகும்படி தமக்கு நேர்ந்த பாக்கியத்தை ஓர்ந்து உள்ளம் களித்து அவை ஊக்கி நின்றன. காதுகளை நேரே நெரித்து நிறுத்தித் தலைநிமிர்ந்து அவை நிலவி நின்றநிலை அதிசய கம்பீரமாய் இனிது விளங்கியது.

அரச செல்வங்களின் வரிசைகளில் குதிரை ஒன்று. பழு தான சுழி முதலிய வழுவுகள் இன்றி விழுமிதாய் அமையின் அப் பரி அந்த அரசுக்குப் பெரிய பாக்கியமாம். நல்ல உத்தம குணங்கள் அமைந்ததையே பட்டத்துப் பரி எனப் பாராட்டுவர்.

மாதர்தம் மணம்என மிக்க மணத்தது
வாழை மடல்என வளர்ந்த செவியது
நாலு தாளும் எருத்தும் முகனும்
வெந்நும் முன்னும் வெண்மை யுடையதாய்
எண்பத் திருவிரல் உயரம் உயர்ந்தது
பண்புடை அரசர்க்கு ஆவது பரியே (பிங்கலந்தை)

அரசர்க்கு உரிய பரியின் இலக்கணத்தைப் பிங்கலமுனிவர் இங்ஙனம் குறித்திருக்கிறார். அங்க அடையாளங்கள் யாவும் நன்கு சிந்திக்கவுரியன. சிறந்த வேந்தரிடம் சேர்ந்திருக்கத்தக்க செவ்விய வாசியின் வாசியை இங்கே கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து கொள்ளுகிறோம். உருவும் குணமும் இனமும் உயர்தகவாயின.

மாதர்தம் மணத்தை ஒத்த மணத்தாய் வாழையுற்ற
கோதிலா மடலே போலக் கொழுந்துள செவியதாகிப்
பாதம்முன் வெள்எருத்துப் பகர்முகம் பால்மைத்தாகி
ஓதும்எண்பத்தி ரண்டு அங் குலியுயர் பரிமன்னர்க்காம்.
(சூடாமணி நிகண்டு)

மன்னர் பரியின் நன்மைகளை மண்டல புருடர் இன்னவாறு கூறியிருக்கிறார். இந்த நாட்டில் அரசர்கள் முன்னம் சீரும் சிறப்புமாய் வாழ்ந்திருந்தமையை இலக்கணங்களும் இலக்கியங் களும் நன்கு துலக்கியுள்ளன. நமக்குக் கிடைத்த நூல்களால் பழங்கால வளங்களை ஓரளவு நாம் யூகமாய் உணர்ந்து கொள்கிறோம். வாகனவகைகளால் அரச போகங்கள் அறிய வந்தன.

பலவகை வண்ணங்களுள்ளே வெண்ணிறம் உடையது கண்ணியமானது ஆதலால் வெள்ளைத் துரகதக் குலங்கள் என அயோத்தி அரசர் குதிரைகள் இங்கே எண்ணி யுணர வந்தன.

எவ்வண்ண பேதமிகுந் திருந்தாலும்
வெள்ளைகலந் திருந்த தானால்
அவ்வண்ணப் பரிநன்று; கரும்புரவிக்கு
அகடேனும் அகன்மார் பேனும்
செவ்வண்ணம் இருக்கின்அது சயமுளது; அப்படி
வெண்மை சேர்ந்தால் அந்த
மைவ்வண்ணப் பரியின்பேர் வாருணமாம்;
சயம்கொடுக்கும் மாற்றார் போரில். (1)

மகவளிக்கும் பிடர்வெளுப்பு; மகிழ்வளிக்கும்
உரவெளுப்பு; மணித்தார் கண்டத்து
அகவெளுப்புப் பொருள் கொடுக்கும்; முகவெளுப்புச்
சயம்கொடுக்கும்; அதன்பின் பக்கத்
தகவெளுப்புச் சுகம்பயக்கும் இடவெளுப்புச்
சந்தானம் தழைக்கும் செல்வம்
மிகவளர்க்கும் தனம்பல தானியநல்கும்
வலப்புறத்து வெள்ளை மாதோ. (2)

நற்புறம்வால் முகம்மூன்றும் வெளுத்தபரி
வென்றிதரும்; நாபி தொட்டு
முற்புறமெலாம் பரிதிஎனச் சிவந்து
மதிஎனப்பின் முழுதும் வெள்கும்
பொற்புடைய வயப்பரிக்குப் பகல்விசய
மதிஎன முற்புறம்பு வெள்கிப்
பிற்புறமெல்லாம் கதிர்போல் சிவந்தபரிக்
கிராவிசயம் பெருக்கு மன்றே. (3)

குலமகள்போல் கவிழ்முகமும் கருநெய்தல்
எனக்கண்ணும் கொண்டு கார்போல்
நிலவியசீர் வண்ணமும்கார் நெய்தலெனக்
கடிமணமும் நிறைந்து நாற்ற
மலரகில்சந் தெரிமணிப்பூண் அலங்கரிக்கில்
ஆனுத மகிழ்ச்சி எய்தி
இலகுவதுத் தமவாசி என்றுரைப்பர்
பரிவேதம் எல்லை கண்டோர். (திருவிளையாடல்)

மதுரையம்பதியிலிருந்து அரசு புரிந்த பாண்டிய மன்னனிடம் மாணிக்கவாசகருக்காகப் பரமபதியே பரிகளைக் கொண்டு வந்து நிறுத்தி அவற்றின் நீர்மை சீர்மை நிலைமை தலைமைகளை இவ்வாறு உல்லாச விநோதமாக்கூறி அருளாடல் புரிந்துள்ளார். உரைகளில் மருவியுள்ள பொருள்களை நுணுகி உணர்ந்துகொள்ள வேண்டும். எவ்வண்ணம் இருந்தாலும் வெள்ளை கலந்திருந்தால் அவ்வண்ணப் பரி நன்று என்றது இங்கே நன்கு அறிய வுரியது.

சுருதி அனைய என்றது இருவகை நிலைகளையும் கருதி யுணர வந்தது. இப்பொழுது இங்கே இரதத்தில் அமர்ந்திருக்கும் சக்கரவர்த்தி முன்பு அங்கே சக்கரதரனுயிருந்தவன். அந்த மாத

வனுக்கு வேதங்கள் பரிகளாயிருந்தன. சுருதி அவாவி அறிய வுரிய பொருள் ஆதலால் பரம்பொருளுக்கு அது பரிஎன வந்தது.

"வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து
நாகம் நாணு மலைவில் லாக
மூவகை ஆர்எயில் ஓர்அழல் அம்பின்
முளிய மாதிரம் அழல எய்து. (பரிபாடல், 5)

வேதங்கள் குதிரைகள்; பூமி இரதம்; வாசுகி நாண்; இமயமலை வில்; அழல் அம்பு என அமையத் திரிபுரத்தை எரித்த இறைவனே!என்று சிவபெருமானை இது குறித்துத்துதித்துளது.

மனவட்டம் இடும்சுருதி வயப்பரி. [மதுரைக்கலம்பகம், 2]

கட்புலம் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத்து ஒருபரி யுகைத்தோய்!
[மதுரைக்கலம்பகம், 103]

சுருதி பரமனுக்குப் பரியாயுள்ளமையை இது இனிது விளக்கியுள்ளது. உருவகமா மருவியுள்ள பொருள்கள் கருதி உணர வுரியன. வேதம் புரவி என்றது ஆதியிலே அறிய வந்தது.

பருதி ஒத்த தேரில் சுருதி அனைய பரிகள் பூண்டுள்ளன; அரசர் பெருமான் அதில் இனிது அமர்ந்துள்ளான். பரதன் சாரதியாய்நடத்துகிறான். இளையபெருமாள் அருகே மருவிச் சுந்தரமான சந்திரவெண்குடையைசிந்தையுவந்து பிடித்துநிற்கிறான்.

ஏழுயர் மதமா அன்ன
இலக்குவன் கவிகை ஏந்த.

இந்நம்பி அயலே தம்பி கவிகை ஏந்தி நிற்கும் காட்சியை இது மாட்சியாக் காட்டியுள்ளது. மதயானை அனையவன் என இளையவனை இங்கே அதிசய வகையாக் குறித்துள்ளார்.

அரிய ஆற்றல், உரியவனிடம் பணிவு, பெரிய அறிவு, பேரமைதி, சீர்மையான ஆண்மை, வீர கம்பீரம் முதலிய நீர்மைகளால் மதமா இவனுக்கு இதமா ஈண்டு உவமையாயது.

காய்ந்தெறி கடுங்கல் தன்னைக் கவுட்கொண்ட களிறுபோல
ஆய்ந்து அறிவுடையர் ஆகி அருளொடு வெகுளி மாற்றி

வேந்தர்தாம் விழைபஎல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக வுழவர்ஏறே நன்பொருள் ஆவது என்றான்.
(சீவகசிந்தாமணி, 2910)

யானையின் இயல்புகளை நயமா விளக்கி வேந்தர் அதுபோல் ஒழுகி வருவர் என இது உணர்த்தியுளது. ஆய்வு, அறிவு, அடக்கம் முதலிய குணநலங்களை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். மதநலமுடைய மதமா மன்னர்க்கு நேர் ஆயது.

அறிவறி வாகாச் செறிவினை ஆகிக்
களிறுகவுள் அடுத்த எறிகற் போல
ஒளித்த துப்பினை ஆதலில் வெளிப்பட
யாங்கனம் பாடுவர் புலவர்? (புறம், 30)

நலங்கிள்ளி என்னும் சோழ மன்னனுக்கு யானையை இது உவமை கூறியுள்ளது. பிறன் எறிந்த கல்லைத் தனது வாயில் அடக்கி யானை வயிரம் கொண்டிருத்தல்போல் கைகேசி சொல்லைக் கேட்டுத் தன் தந்தை செய்ததை இம்மைந்தன் சிந்தையுள் அடக்கிச் சினம் நீங்காதிருந்துள்ளமை இங்கே சிந்திக்கவுரியது. அரிய மானவீரன் பெரியயானை எனநேர்ந்தான்.

என்பின்னே திருநகர் தீர்ந்து போந்த யானை.
(மூலபலம், 67)

இலக்குவனை இராமன் இவ்வாறு குறித்திருக்கிறார். தன் தம்பியை யானை என்று இந் நம்பி அங்கே கூறியதைக் கவி இங்கே சுவையா விளக்கியுள்ளார். ஏழ் உயர் மதமா என்றது சிறந்த யானையின் சீர்மையும் நீர்மையும் நேரே தெரிய வந்தது.

கால்ஓர் நான்கும் தனிக்கையும் கோசமும்
வாலுறுப்பு ஏழும் மாநிலம் தோய்வதும்
பாலும் சங்கும் போலும் காலுகிர்
காலினும் தன்தனிக் கையினும் மெய்யினும்
வாலினும் மருப்பினும் கோறல்வல் லதுவாய்
ஏழ்முழம் உயர்ந்துஒன் பானமுழம் நீண்டு
பதின்மூன்று முழம் சுற்றுடைத் தாகித்
தியுமிழ் சிறுகண்ணும் செம்புகரும் உடைத்தாய்
முன்புறம் உயர்ந்து பின்பணித் தாய
யானை அரசுவா ஆகும் என்ப. (பிங்கலந்தை)

கால்ஒரு நாலு கோசம் கைவால்ஏழ் நிலத்தில் தோய்ந்து
பாலொடு சங்குபோலும் பதத்துகிர் விதத்தில் சூழ்ந்து
வாலொடு கால்மெய் கைவெண் மருப்பினுல் உயிரைக்கொள்றே
ஏலவேழ் உயர்ந்து ஒன்பான்நீண்டு ஈரைந்து முழத்ததாகி. [1

பெறுமுறை முன்புயர்ந்து பின்பணிந் தழகி தாய
தறுகண்ண தாகிச் சூழி சார்ந்தமத் தகத்த தாகி
முறநிகர் கன்னதான மூரிமால் யானை தானே
அறநெறி செலுத்தும் செங்கோல் அரசுவா ஆகும்என்பர்.
(சூடாமணி நிகண்டு)

செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தர்க்கு உரிய பட்டத்து யானையின் இலக்கணங்களை இவை இங்ஙனம் குறித்துள்ளன. ஏழு முழம் உயர்ந்து, ஒன்பது முழம் நீண்டு, பதின்மூன்று முழம் சுற்றளவுடையதாய் அது இருக்க வேண்டும் என உரைத்திருத்தலால் அதன் நிலைமை தலைமைகளை உணர்ந்து கொள்கிறேம். மன்னர் திருவும் மதயானையும் உன்ன வுரியன.

இத்தகைய உத்தம இலக்கணத்தைக் கருதியே ஏழ்உயர் மதமா எனக் கவி வித்தகமா விளக்கினர். இலக்குவன் எல்லா உத்தம குணங்களும் ஒருங்கே உடையவன்; அரசகுல மகன்; இராச கம்பீரமுடையவன்; அவனுடைய நிலைமை நீர்மைகளுக்குத்தக்கபடி சீர்மையான உவமை ஈண்டு நேர்மையாய் வந்தது.

பாழிய மற்றைத் தம்பி
பால்நிறக் கவரி பற்ற.

சத்துருக்கன் செய்த பணியை இது இனிது குறித்துள்ளது. இந்த இளைய தம்பியின் ஊழியம் மற்றை இருவரினும் பெரியதாயது. வெண்சாமரைகளை இரண்டு கைகளிலும் இதமாக் கொண்டு இனிது வீசியிருக்கிருன். பாழிய என்றது அவனது மீளிமை தெரிய வந்தது. பாழி=பெருமை, வலிமை. அரசதிருவில் பிறந்தும் தனக்கு என்று எதையும் விரும்பாமல் பொறிகளை அடக்கி நெறியே நிலைத்திருந்த நிலைமையை இது உணர்த்தி நின்றது. உரிய தகைமை பெரிய மகிமையை அருளியது.

பூமியை அடக்கும் கண்ணீர்ப்
பரதன் கோல் கொள்ளப் போனுன்.

சாரதியாய் அமர்ந்து தேரை நடத்திச் சென்ற பரதனை இவ்வாறு காட்டியிருக்கிருர். கண்களிலிருந்து பொங்கி வழிந்த நீர் கீழே புழுதியை அடக்கியுள்ளது அன்பின் உருக்கத்தால் எவ்வழியும் இத் தம்பி உருகி வருவது கண்ணீர்ப் பெருக்கம் அயலே தெரியச் செய்கிறது உள்ளத்தில் எண்ணியுள்ள பரிவு களைக் கண்கள் வெளியே தெளிவாகக் காட்டிவிடுகின்றன. "இந்த அரசகுலத் தோன்றல் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னமே மணிமுடி சூடி அரசாண்டிருக்க வேண்டும்; அங்ஙனம் ஆளாத படி பாழான விதி தடை செய்துவிட்டது; அந்த அல்லல்கள் யாவும் நீங்கி இன்று நல்லகாலம் பிறந்துள்ளது" என்றுஉள்ளத் தில் உவகை ஓங்கி எழுந்தது. அந்த மகிழ்ச்சி நிலையைக் கண்ணீர் உணர்த்தி நின்றது. பிரிவால் முன்பு உருகியழுதது துன்ப அழுகை; இன்று அன்பின் பரிவால் பெருகி வருதலால் இன்ப அழுகையாம். பரதனிடமிருந்து ஆனந்தக் கண்ணீர் பொங்கி வந்துள்ளதை இங்கு நாம் நன்கு அறிந்து கொள்ளுகின்றோம்.

அண்ணனுடைய அரசகோலங்களைக் கண்டு களித்துள்ள மையால் தம்பியின் கண்ணீர் தாராளமாய்ப் பெருகி ஓடியது.

அரசுவீற்றிருந்து ஆளவும், ஆய்மணிப்
புரைசை யானையின் வீதியில் போகவும்
விரைசு கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய்து என்னை என்ஊழ்வினை உன்னுவேன்.

(சூளாமணி, 36)

என்று சீதை எண்ணி யுருகி ஏங்கியிருந்தபடியே பரதனும் மறுகியிருந்தான். நீண்டு நின்ற அந்தக் கவலை யாவும் நீங்கி இன்று இருவரும் இந் நம்பியின் அரச கோலத்தைக் கண்டு பேரானந்தம் அடைந்தனர். அத் தேவி சிவிகையில் இருந்தபடி யே தனது ஆவி பீதாம்பரதாரியாய் மணியணி புனைந்து, வயிர கண்டிகை கழுத்தில் திகழ, முத்துமாலை மார்பில் புரள, சத்திர சாமரைகள் எத்திசைகளிலும் சூழ அழகிய அதிசய இரதத்தில் எழிலோடு செல்வதைக் கருதி நோக்கி உள்ளம் உவகையில் திளைத்து வந்தாள். தம்பியும் அவ்வாறே சாரதியாய்ச் சார்ந் திருந்து பேரானந்தம் அடைந்து வந்தான்; குதிரைகளும் உல்லாச விநோதமாய் நடன கதியில் நன்கு நடந்து சென்றன.

கண்ணீர்ப் பரதன் என்றது அவனது உண்ணீர்மையை உணர்ந்துகொள்ள வந்தது. மானச மருமங்களும் மனஉருக்கங்களும் உண்மை நிலைகளும் எண்மையா எதிரே தெரிய உரைகள் உணர்த்தி யருளுகின்றன. பரதனைக் குறித்துக் கூறும்போதெல்லாம் உருக்கமும் பரிவும் பெருக்கமாய் வருகின்றன. அவனது விழி நீர் அரிய பல பொருள்களைத் தெளியச் செய்து உயிர்களை உயர்த்தியருளுகிறது. அன்பின் விளைவுகள் அழுகையாகின்றன.

Poetry is the sister of sorrow; every man that suffers and weeps, is a poet; every tear is a verse; and every heart a poem. (Andre)

"கவி துன்பத்தின் தங்கை; வருந்தி யழுகிற ஒவ்வொரு மனிதனும் ஒரு கவிஞனே; ஒவ்வொரு கண்ணீரும் ஒரு பாட்டே; ஒவ்வொரு இதயமும் ஒரு காவியமே" என்னும் இது இங்கேநன்கு அறியவுரியது. கண்ணீர் யாவும்காட்டியருளுகிறது.

பரதன் நடத்திய இரதம் அயோத்தி நகரை அடைந்த பொழுது எல்லா உயிர்களிடத்தும் பேரின்பங்கள் பொங்கி எழுந்தன. பறவைகள் மிருகங்கள் முதலிய பிராணிகளும் பெரிய உவகைகளை அடைந்து யாண்டும் நீண்டு துள்ளிக் களித்தன.

"ஆவும் அழுத; அதன்கன்று அழுத; அன்று அலர்ந்த பூவும் அழுத; புனல்புள் அழுத" என முன்னம் இராமன் கானகம் போனபோது மறுகி அழுத சீவகோடிகள் எல்லாம் அக் கோமகன் மீண்டு வந்ததை அறிந்ததும் நீண்ட மகிழ்ச்சிகளால் நிறைந்து நின்றன. உரிய நாயகன் வரவே உயிர்கள் உவந்தன.

செல்வத்து அண்ணலும் அயோத்தி நண்ணி

பரதேசியாய் வனவாசம் போயிருந்த இராமன் பதினான்கு ஆண்டுகள் கழிந்து மீண்டுவந்து தனது அழகிய பதியுள் புகுந்த காட்சியை இது இங்ஙனம் வரைந்து காட்டியுள்ளது. கருவிலேயே திருவுடையனாய்ப் பிறந்துள்ளவன் ஆதலால் செல்வத்து அண்ணல் என நேர்ந்தான். இலட்சுமி நாயகன்ஆன திருமாலே இந்த அண்ணலாய் வந்துள்ள அந்த உண்மையும் நுண்மையாய் இதில் உணர வந்தது. செல்வம் இவனால் சீர்மையுற்றது.

எல்லாச் செல்வங்களையும் இயல்பாகவே உடைய இவன் யாதும் இல்லாதவனாய்க் கானகம்போய் வானவர் துயரங்களை

நீக்கி யருளி வானளாவிய புகழோடு வந்திருக்கிறான். போன போக்கும் வந்த வரவும் அதிசய நிலைகளில் துதிகொண்டுள்ளன. தனது சீவிய நிலை அரிய பெரிய ஒரு காவியமாய் வர இவ் ஓவிய உருவன் ஈங்கு வந்துள்ளான். அவ்வரவு உறவா உணர வந்தது.

நாயகக் கோயில் எய்தி.

தலைமையான நிலைமையில் எவ்வழியும் எழில் நிறைந்து ஒளி மிகுந்துள்ள அரசமாளிகையுள் புகுந்தான்; அரதன மேடையில் அமர்ந்தான். நிலமகளும் மலர்களும் அங்கே களிநடம் புரியக் கண்டான். அக் காட்சி வந்தவன் மாட்சியைக் காட்டி நின்றது

நானிலக் கிழத்தியும் கமலத்தாளும்
களிநடம் செய்யக் கண்டான்

அயோத்தி அரண்மனையுள் இராமபிரான் புகுந்தபொழுது பூமிதேவியும் இலட்சுமிதேவியும் பெருமகிழ்ச்சியடைந்து அதிசய பரவசராய் ஆனந்தக் கூத்தாடியுள்ளனர். அந்த உண்மையை இந்த உரைகளால் உணர்ந்து நாமும் உவந்து கொள்கிறோம்.

உரிய தலைவன் பிரிந்து போனமையால் பதினாலு வருடங்களா உலகம் பரிதாபநிலையில் இருந்தது; அவன் திரும்பி வந்துள்ளான்; வரவே துயரம் நீங்கியது; உயிர் உவகை ஓங்கியது; ஓங்கவே அதிசயக்கூத்து நேர்ந்தது. ஆனந்தநிலைகள் அறியவந்தன.

நாட்டில் நல்ல ஆட்சியில்லாமையால் யாண்டும் செல்வ வளங்கள் குறைந்து அல்லல்கள் நிறைந்திருந்தன. இனிமேல் இராமன் அரசு ஆள வந்துள்ளமையால் எங்கும் தருமமும் நீதியும் ஓங்கி எவ்வழியும் செல்வங்கள் செழித்துவிளங்கும்; ஆகவே செல்வத்தின் அதிதேவதையான இலட்சுமிதேவி சிந்தை களித்து நின்றாள்; அந்த நிலையில் அவன் எதிரே களிநடம்புரிய நேர்ந்தாள்.

பூமிதேவியும் பூமகளும் இராமன்பிரிவால் பொலிவிழந்து துயருழந்து ஒளி மழுங்கியிருந்தனர்; இன்று களிநடம் புரிந்தனர்.

மண்செய்த பாவம் உளதென்பார்; மாமலர்மேல்
பெண்செய்த பாவம் அதனில் பெரிது என்பார்;
புண்செய்த நெஞ்சை விதிஎன்பார்; பூதலத்தோர்
கண்செய்த பாவம் கடலின் பெரிது என்பார்.

(நகர்நீங்கு, 105

இராமன் அரசு இழந்து வனம் போக நேர்ந்த பொழுது உலக மக்கள் இவ்வாறு அழுது புலம்பியுள்ளனர். மண்மகளும் மலர்மகளும் பாவிகள் ஆயினரே! என்று அன்று பரிதபித்தனர்; இன்று அவர் புண்ணியசாலிகளாய் உவகை ஓங்கியுள்ளனர். குறிப்புகள் கூர்ந்து சிந்திக்கத்தக்கன. நேர்ந்துள்ள நிலைமைகளை எல்லாம் ஓர்ந்து உணர்பவர் உண்மைகளைத் தேர்ந்து கொள்வர்.

வந்துள்ளவன் தருமமூர்த்தி என்பது மருமமாய்த் தெரிய வந்தது. உலகவுயிர்கள் எவ்வழியும் நலமாய் வாழச் செங்கோல் செலுத்தச் சேர்ந்திருக்கிறான். அந்த நிலைமை தலைமைகள் பல வகையிலும் தெளிய நேர்ந்தன. பின்விளைவன முன்வெளியாயின.

அரிய பல இனிமை நீர்மைகள் வாய்ந்த உரிய கோமகன் வரவே ஊரும் நாடும் ஒருங்கே பேருவகை நீண்டு பெருங்களிப் படைந்தன. பரவசமான களிப்புகள் பார்வைக்கு வந்துள்ளன.

வேசியர் உடுத்த கூறை வேதியர் சுற்ற; வெற்றிப்
பாசிழை மகளிராடை அந்தணர் பரிந்துசுற்ற;
வாசமென் கலவைச் சாந்தென் றிணையன மயக்கம் தன்னால்
பூசினர்க்கு இரட்டியானார் பூசலார் புகுந்துளோரும். [1

இறைப்பெரும் செல்வம் நீத்த ஏழிரண்டாண்டும் யாரும்
உறைப்பிலர் ஆதலானே வேறிருந்தொழிந்த மின்னார்
பிறைக்கொழுந்தனைய நெற்றிப் பெய்வளைமகளிர் மெய்யை
மறைத்தனர் பூணினமைந்தர் உயிர்களும் மறுக்கம்தோன்ற.

விண்ணுறைவோர் தம் தெய்வவெறியொடு வேறுளோர் தம்
தண்ணறு நாற்றம தமமில தலைதடு மாறு நீரால்
மண்ணுறை மாதரார்க்கும் வானுறை மடந்தைமார்க்கும்
உண்ணிறைந் துயிர்ப்பு வீங்கி யூடலுண் டாயிற்றன்றே. [3

புண்ணிய மூர்த்தியான இராமன் அரசுபுரிய வந்துள்ளதை அறிந்ததும் தேசம் எங்கணும் மக்கள் ஓங்கிய மகிழ்ச்சியால் உள்ளம் களித்து ஆனந்த பரவசராய் நீண்டு நின்ற நிலைகளை இவை நேரே உணர்த்தியுள்ளன. மாந்தர் பால் மண்டியுள்ள இன்ப நிலைகள், தங்கள் வேந்தன் பால் அவர் கொண்டுள்ள அன்பு நிலைகளை நன்கு விளக்கி நின்றன. ஆடவரும் மகளிரும் நீடிய களிப்புகளால் நிலைமயங்கித் தலை தடுமாறியுள்ளனர்.

இராமனைக் காண நேர்ந்ததால் விளைந்த களிப்புகள் கள் உண்ட மயக்கம்போல் எல்லாருடைய உள்ளங்களிலும் ஓங்கி யுள்ளமையால் தெளிவாகச் செய்யும் செயல்களை மறந்து மயலுழந்து வந்தனர். களிமீதூர்ந்த நிலைகள் விழிதெரியநின்றன.

ஏழிரண்டு ஆண்டும் யாரும் உறைப்பிலர்.

இராமன் அயோத்தியை நீங்கிப் போனதிலிருந்து கோசலா தேசத்து மக்கள் வாழ்ந்துள்ள வாழ்வை இது வரைந்து காட்டி யுள்ளது. உறைப்பு இலர் என்றது சுகபோகங்கள் எதையும் யாரும் யாதும் யாண்டும் தீண்டவில்லை என்பதை தெளிவுறுத்தி நின்றது. உப்பு இல்லாத உணவுபோல் உறைப்பு இல்லாமல் அவருடைய உயிர் வாழ்வுகள் சுவையிழந்து துயரடைந்துள்ளன. அந்தஉண்மைகள் ஈண்டுஉணரவந்தன. உறைப்பு=சாரம்; பதிவு.

ஏழிரண்டு ஆண்டுகளா உறைப்பின்றி உறைந்திருந்தவர் தங்கள் ஆண்டவன் வந்தான் என்று தெரிந்ததும் நீண்ட பேரின் பங்களால்மூண்டு எழுந்து வேண்டிய அலங்காரங்களை விரைந்து புனைந்து நேரே காண நினைந்து வேணவாவுடன் வேகமாய் நின்ற னர். ஆவலான அந்த வேகத்தில் செயல்கள் தடுமாறி மயல்கள் நெடிது ஏறி அயல்கள் எங்கணும் ஒயிலாக் கடிது உலாவினர்.

பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ? என்று சீதை மயங்கி ஏங்கியது போலவே தேசமக்களும் ஆனந்தக்களிப்பால் மயங்கி யாண்டும் தியங்கியுள்ளனர். அந்த உண்மைகளை உரைகள் நளினமாத் துலக்கியிருக்கின்றன. நீண்டகாலமாச் சுவைகுன்றி ஒளிமழுங்கித் துயரமாயிருந்தவர் ஆதலால் இன்று உயர்வாழ்வை அடைய நேர்ந்ததும் நெடிய உவகைகள் நேரே ஓங்கி எழுந்தன.

தங்களுடைய உயிர்வாழ்வுகளை எவ்வழியும் செவ்வையா இன்பமுறச் செய்யும் தெய்வ அமுதமாக இராமனை யாவரும் உரிமையோடு கருதியிருக்கின்றனர். ஆகவே எல்லாரும் அவன் மேல் பேரன்பு பூண்டு யாண்டும் நீண்டு வருகின்றனர். வழி முறையே நல்ல சுவைகளைக் கண்டு வந்தவர் ஆதலால் இந்த விழுமிய கோமகனிடம் விழைவு மீதூர்ந்து உழுவலன்போடு கெழுமி நின்றனர். ஆட்சியின் மகிழ்ச்சி காட்சிக்கு வந்தது.

கண்ணினை இமைஎனக் காத்து நீதியாய்
மண்ணினை யாண்டுமே ஆண்டு வந்தனர்.

இராமனுடைய முன்னோர் இன்னவாறு உயிரினங்களைப் பேணி வந்துள்ளனர். அவர் எவரினும் இராமபிரான் அதிசய நிலையினன். தன்னுடைய குணநீர்மைகளாலும் தருமநீதிகளாலும் எவரையும் எளிதே பரவசப்படுத்தி வருகின்றான். அவன் நேரே வந்து அரசுபுரிய நேர்ந்துள்ளதை அறிந்ததும் உலகம் எங்கணும் உவகைகள் பொங்கி உயர் நிலைகளில் ஓங்கி நின்றன.

குடிசனங்கள் சிறந்தவராய் உவந்துவரச் செய்வோரே உயர்ந்த முடிமன்னராய் யாண்டும் விளங்கி வருகின்றனர்.

A sovereign's great example forms a people; the public breast is noble or vile as he inspires it. (Mallett)

"தன் குடிமக்களைத் தக்கவரா உருவாக்கி வருவதே ஒரு சக்கரவர்த்தியின் பெரிய நிலை; பொதுசனங்கள் மனம் மேன்மையாகவோ கீழ்மையாகவோ இருப்பது அவன் செய்துவரும் பான்மையளவேயாம்" என்னும் இது இங்கே நன்கு சிந்திக்கத் தக்கது. மாந்தர் வாழ்வு வேந்தர் நிலையால் விளங்கி வருகிறது.

எந்த நாட்டில் குடிகள் உவந்து வாழ்ந்து வருகின்றார்களோ அந்த நாட்டில் கோன் உயர்ந்து ஒளி சிறந்து வருகின்றான். உடலும் உயிரும்போல் குடிகளும் அரசனும் தொடர்பு கொண்டுள்ளனர். இந்த உரிமையான உவமையையும் கடந்து அயோத்தி வேந்தர் மாந்தரை யாண்டும் ஆர்வமா ஆதரித்து வந்திருக்கின்றார்.

வையம் உயிர் மன்னன் உடல்.

என இன்னவாறு மாதவரும் வானவரும் புகழ்ந்துவர ரகு, சிபி முதலிய அரசர்கள் அருள் நீதியோடு ஆட்சி புரிந்து யாண்டும் மாட்சியடைந்து வந்துள்ளனர். அந்த வழி முறையில் வந்துள்ள இராமன் அவர் எவரினும் உயர்ந்து அதிசய நிலையின் ஒளி மிகுந்து நிற்கின்றான். உலக ஒளிகளுள் சூரியன்போல் இரவி குலத்து அரசர்களுள் இராமன் என்று எவரும் தொழுது புகழ இக்கோமகன் தோன்றியுள்ளான். இதுபொழுது இவன் செங்கோல் ஏந்த நேர்ந்துள்ளமையால் உலகமக்களோடு உம்பருலகமும் உவகை ஓங்கி இன்ப நிலைகளில் ஈங்கு அன்பாய் வந்தது.

மண்ணுறை மாதரார்க்கும்
வானுறை மடந்தை மார்க்கும்.

இராமன் சக்கரவர்த்தியாய் முடிசூட வந்துள்ளதை அறிந்து மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒருங்கே மகிழ்ந்துள்ளமையை இத்தொடர்மொழி கண் எதிரே காட்டியுள்ளது. உயிர்க்கு உயிரான சீவநாயகனாகவே இந்தச் சீதை நாயகனை யாவரும் கருதியிருக்கின்றனர். தேவரும் தேவமாதரும் மகிழ்ந்து வருதலால் இவனது ஆதிமூல நிலைமையையும் இடையே நாம் உணர்ந்து கொள்ளுகிறோம். ஆண்பாலாரும் பெண்பாலாரும் நீண்ட அதிசய ஆனந்தங்களால் யாண்டும் உள்ளங்கள் துள்ளி ஓங்கி வர இவ்வீர வள்ளல் பாங்கோடு பலவும் கருதியிருந்தார்.

உடன் வந்திருந்த சேனை தளங்கள் எல்லாம் யாண்டும் ஆனந்த பரவசங்களை அடைந்து வந்தன. விபீடணன் சுக்கிரீவன் முதலிய தலைமைத் துணைவர்களுக்கு அங்குள்ள அரசமாளிகைகளின் நிலைகளைக் காட்டியருளும்படி இந்நம்பி தம்பி பரதனை நயமாநோக்கியருளினான். காரியநோக்கு சீரிய நிலையில்நிலவியது.

> ஆயதோர் அளவில் ஐயன் பரதனை அருளின் நோக்கித்
> தூயவீ டணற்கும் மற்றைச் சூரியன் மகற்கும் தொல்லை
> மேயவா னரங்கள் ஆய வீரற்கும் பிறர்க்கும் நந்தம்
> நாயகக் கோயில் உள்ளநலமெல்லாம் தெரித்தி என்றான்.

> என்றலும் இறைஞ்சி மற்றைத் துணைவர்கள் யாவரோடும்
> சென்றனன் எழுந்துமாடம் பலஒரீஇ உலகில்தெய்வப்
> பொனதிணிந்து அமரரோடும் பூமகள் உறைந்து வாழும்
> குன்றென விளங்கித் தோன்றும்நாயகக் கோயில்புக்கான்.

> வயிரம் மாணிக்கம் நீலம் மரகதம் முதலாயுள்ள
> செயிரறு மணிகள்ஈன்ற செழுஞ்சுடர்க் கற்றைசுற்ற
> உயிர்துணுக் குற்று நெஞ்சும உள்ளமும் ஊசல் ஆட
> மயர்வறு மனத்தின வீரர் இமைப்பிலர் மயங்கி நின்றார்.

> விண்டுவின் மார்பில் காந்தும் மணிஎன விளங்கு மாடம்
> கண்டனர் பரதன் தன்னை வினவினர் அவர்க்குக் காதற்
> புண்டரிகத்து வைகும் புராதனன் கன்னல் தோளான்
> கொண்டநற்றவம் தன்னாலே உவந்துமுன கொடுத்ததுஎன்றான்.

> பங்கயத்து ஒருவன் இக்கு வாகுவிற்கு அளித்த பான்மைத்து
> இங்கிது மலராள் வைகும மாடம் என்று இசைத்தபோதில்
> எங்களால் துதிக்க லாகும் இயல்பதோ? என்று கூறிச்
> செங்கைகள் கூப்பி வேறோர் மண்டபம் அதனில் சேர்ந்தார்.

இங்கே நடந்துள்ள நிலைகளை வியந்து காணுகிறோம். உயர்ந்த அரசகுலத்தோன்றல்கள் பரம்பரையாய் ஆண்டு வந்துள்ள அதிசய மாளிகைகளும் மணி மண்டபங்களும் அணி மாடங்களும் நியாய சபைகளும் தரும நிலையங்களும் செம்பொற் கோயில்களும் அரதன அரங்குகளும் எழில் ஒளிகளை வீசி எவ்வழியும் திவ்விய நிலைகளில் சிறந்து திகழுகின்றன. புதியராய் வந்தவர்கள் அங்கங்கே நிறைந்துள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து ஆச்சரியங்கள் மிகுந்து அதிசய பரவசராய்த் துதி செய்து நின்றனர்.

தங்களோடு ஒருவனாய் வெளியே எளிய நிலையில் வாழ்ந்து வந்தவன் எவ்வளவு செல்வ வளங்களையுடையவன்! எத்தனை மகிமைகள் வாய்ந்தவன்! எத்தனை அதிசய போகங்களையுடையவன்! என்று உள்ளம் வியந்து உணருந்தோறும் இலங்கை வேந்தனும் கிட்கிந்தை மன்னனும் வெட்கமடைந்து வெருவி மகிழ்ந்தனர். பெரிய மணி மாடங்களுள் நுழையும் போதெல்லாம் அரிய தெய்வத் திருக்கோவிலுள் புகுவது போலவேபயபத்தியும் பரவச புத்தியும் தலையெடுத்து நின்றன. உணர்ச்சிகள் பொங்கி உரைகள் ஆடாமலே விழிகள் களிப்ப நோக்கி வியந்து விழைந்து உவந்து வந்தனர். பார்வைகளில் ஆர்வங்கள் ஓங்கி வந்தன.

அயோத்தி அரசுகளின் நிலைமை தலைமைகளைத் துணைவர்கள் நேரே கண்டு தெளிய வேண்டும் என்றே இளவலிடம் இக் குல மகன் நலமா உணர்த்தியருளினன். காரியக் காட்சிகள் சீரிய மாட்சிகளாய்ச் சிறந்து உபசார முறைகளில் உயர்ந்து வந்தன.

நம்தம் நாயகக் கோயில் உள்ள
நலம் எலாம் தெரித்தி

இராமன் பரதனைப் பார்த்து இவ்வாறு பணித்திருக்கிறான். தன்னோடு உரிமையாய் வந்தவர்களை மரியாதையா உபசரிக்கும் முறையில் இந்த ஆதரவுகள் நடந்திருக்கின்றன. நந்தம் என்று தன்மைப் பன்மையாக் குறித்திருப்பதில் அரிய பெருந்தன்மையும், பெரிய இராச கம்பீரமும் பெருகி நிற்கின்றன. தம்பி பரதனையும் உடன் தழுவி விழுமிய நிலையில் நம் கோயில் என்றான்.

அருமைத் தம்பியை உழுவலன்புடன் உரிமை கூர்ந்து மருவிப் பெருமைசெய்துவருவது இப்பெருந்தகையிடம் திருந்திய நீர்

மையாய்ச் சிறந்து வருகிறது. இனிய பண்புகள் எவ்வழியும் கனிவு சுரந்து செவ்விய அன்புகள் செறிந்து மிளிர்கின்றன.

நோக்கித் தேரித்தி என்றதில் அந்த அழகிய கண்பார்வையும், விழுமிய வாய்மொழியும் நேரே நிலவி நிலைமை தலைமைகளை நல மாத் துலக்கி நிற்கின்றன. குளிர்ந்த நோக்கும் கோமள வாக்கும் இக் கோமகனிடம் யாண்டும் குலாவி நீண்டு நிகழ்கின்றன. இயல் செயல்கள் யாவும் உயர்தகவா ஒளி வீசி வருகின்றன.

உரிமையோடு தமையன் கூறவே தம்பி மரியாதையாய்த் தொழுது வணங்கி அவரை அழைத்துப் போயிருக்கிருன்.

என்றலும் இறைஞ்சி என்றதனல் பரதன் உழுவலன்போடு பணிந்து போயுள்ளதைத் தெளிந்து கொள்கிறோம். அண்ண னுடைய குறிப்பறிந்து யாண்டும் இவன் கண்ணியமாய் ஒழுகி வருவது விழுமிய ஒரு புண்ணியக் காட்சியாய்ப் பொலிந்து வருகிறது. அரிய பெருந் தன்மைகள் நெறியே தெரிய நிலவுகின்றன.

தம்பிமார்களை இராமன் ஆர்வமாய் ஆதரித்து வருவதும், அந்த அழகனிடம் இந்த இளவல்கள் உழுவலன்போடு ஒழுகி வருவதும் உலக உள்ளங்களுக்கு உணர்வு நலங்களை அருளி ஒளி புரிந்து வருகின்றன. இராமனது சீவிய சரிதத்தில் சகோதர வாஞ்சைகளும், அன்புரிமைகளும், நண்பு நயங்களும், பண்புபல சுரந்துள்ளமையால் மனித சமுதாயங்கள் இந்த இனிய நீர்மை களை உணருந்தோறும் உவந்து புனித நிலைகளையடைந்து உயர்ந்து கொள்ளுகின்றன. உலகம் உயர்ந்து வர ஒளி புரிந்துள்ளனர்.

அரிய பல சோதனைகள் மருவியுள்ள இராமனுடைய வர லாறுகள் எவ்வழியும் உயிரினங்களுக்குப் புனித போதனைகளை அருளி இனிய மேன்மைகளை உதவி இசை மிகுந்து வருகின்றன.

The best teachers of humanity are the lives of great men.
(Orson Squire)

பெரிய மனிதருடைய சீவிய சரிதங்கள் மனிதகுலத்தின் இனிய ஆசிரியர்களாயுள்ளன என்னும் இதனுண்டு உன்னியுணர வுரியது. அயலார் உயர்ந்து வர இயல்கள் இசைந்துள்ளன.

தனது உருவ அழகாலும், உணர்வு நலங்களாலும், உரை செயல்களாலும், புனித நீர்மைகளாலும் இராமன் சீவ கோடி களுக்குத் தேவ அமுதமாய் மேவித் தேசு மிளிர்ந்துள்ளான்.

மன்பதைக் கென்றும் மகான்கள் சரிதங்கள்
அன்பின் அமுதங்கள் ஆதலால்---இன்பமைந்த
சீராமன் சீரும் சிறப்பும் செயல்இயலும்
ஓராதார் காணார் உயர்வு.

இது இங்கே ஓர்ந்து உணர்ந்து கொள்ளவுரியது.

செவிக்குத் தேன் என இராகவன் கதை புவிக்கு இனிமையாய்ப் பரந்து விரிந்துள்ளது. அவ்வுண்மையை மாந்தர் யாண்டும் மாந்தி மகிழ்ந்து நன்மை தோய்ந்து வருகின்றனர்.

மாடம் பல ஒரீஇ
நாயகக் கோயில் புக்கான்.

விபீடணன் முதலிய தலைவர்களை அழைத்துக் கொண்டு அரச மாளிகைகள் பலவும் காட்டிக் கடந்து பரதன் நடந்து போயுள்ளதை இங்கே காணுகின்றோம். அரிய பெரிய மணிமாடங்களை அங்கங்கே விழைந்து கண்டு வியந்து நின்று மகிழ்ந்து சென்றுள்ளனர். இந்திர உலகம் போல் எவ்வழியும் சுந்தரச் சோதிகளை வீசி இராசமாளிகைகள் மணி ஒளிகளை வீசி அணி அணியாய் அதிசய நிலைகளில் வரிசைகள் தோய்ந்து நின்றன.

காணுந்தோறும் காட்சியின்பங்கள் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டமையால் யாதும் உரையாடாமல் அதிசய பரவசராய்த் துதி செய்து நின்றனர். இயல்பாகவே உயர்ந்த மனத் திண்மையும் சிறந்த செல்வப் பேறுகளும் உடையராயிருந்தும் இங்கே பார்த்த புதுமைக் காட்சிகளால் உள்ளம் தடுமாறியுள்ளனர். அவருடைய வியப்பு நிலைகள் வியனாய் நின்றன.

மயர்வறு மனத்தின் வீரர்
இமைப்பிலர் மயங்கி நின்றார்.

பரதன் பின்னே சென்ற வீரர்கள் அரசகுல மாளிகைகளைக் கண்ட போது நிலைமயங்கி நின்ற நிலைகளை இது விளக்கியுள்ளது. நேர்ந்துள்ள மெய்ப் பாடுகளால் அவர் ஓர்ந்து நுகர்ந்துள்ள இன்ப நலங்களைக் கூர்ந்து நாம் உணர்ந்து கொள்கிறோம். அதிசய ஆனந்தம் அகத்தே பெருகி நின்றமையால் புறத்தே புதுமையாய் மதி மயங்கி விதி முறைகளை மறந்து வியந்து நின்றனர்.

உயிர் துணுக்குற்று உள்ளம் ஊசல் ஆட என்றதனால் அவரடைந்துள்ள ஆச்சரிய வியப்புகள் அறிய வந்தன. இதுவரையும் யாண்டும் கண்டிராத அற்புத நிலைகளைக் காண நேர்ந்தமையால் திகைப்பும் வியப்பும் சேர்ந்து எழுந்தன. மகிழ்ச்சி இன்பங்கள் மிகுந்த பொழுது உள்ளம் துள்ளிக் களிக்கின்றது; களிக்கவே அந்தஇன்ப நிகழ்ச்சிகள் உடலில் தோன்றுகின்றன.

இன்பமொடு புணர்ந்தோன் அவிநயம் இயம்பின்
துன்பம் நீங்கித் துவர்த்த யாக்கையும்
தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையும்
மயங்கி வந்த செலவுநனி உடைமையும்
அழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையும்
எழிலொடு புணர்ந்த நறுமலர் உடைமையும்
கலங்கள்சேர்ந் தகனற தோள்மார் புடைமையும்
நலங்கெழு புலவர் நாடினர் எனப. (அவிநயம்)

வியப்பான இன்பங்களில் மனம் அழுந்திய பொழுது மெய்யில் நிகழும் நிகழ்ச்சிகளை இது விளக்கியுள்ளது. உணர்ச்சிக் குறிப்புகளை ஊன்றி உணர்ந்து உண்மைகளைத் தேர்ந்து கொள்ள வேண்டும். மானசதத்துவங்கள் நன்கு உய்த்து உணரத் தக்கன.

நேர்ந்த காட்சிகளின் மாட்சிகள் நேரே பார்த்தவர்களைப் பரவசப் படுத்தியுள்ளன. அந்த உண்மைகளை அவர்களுடைய நிலைகள் தெளிவா வெளியே வார்த்துக் காட்டியிருக்கின்றன.

கன்னல் தோளான்.

இட்சுவாகுமன்னனை இன்னவாறு கூறியிருக்கிறார். சூரிய குலத்து அரசர்களுள் இவன் முதன்மையானவன். அரிய பல குண நீர்மைகள் அமைந்தவன். எவ்வுயிர்க்கும் இனியனாய் யாண்டும் புகழ் ஓங்க இவன் ஆண்டு வந்தான். இக்கு = கரும்பு. வாகு = தோள் ஆகவே கன்னல் தோளான் என இவனது நாமம் நன்னயமாய் அமைந்து நின்றது. உருவ அழகாலும் உரை செயல்களாலும் எவ்வழியும் இனிய நீர்மையனாய் விளங்கி நின்றமையால் இப் பேரால் இவன் வழங்க நேர்ந்தான்.

சிறந்த புண்ணியங்களை யுடையவன் ஆதலால் விண்ணவர்களும் இவனை வியந்து புகழ்ந்து வந்தனர். அரிய தெய்வ மணிகளால் அமைந்த அற்புத மாளிகை ஒன்று சத்திய லோகத்தில்

இருந்தது. இலட்சுமிவிலாசம் என்னும் பேருடைய அது பிரம சபையில் பேரொளி செய்து சீரிய நிலையில் சிறந்து விளங்கியது. அது உள்ள இடத்தில் எல்லா இன்பநலங்களும் பொங்கிநிற்கும். திருவின் உயிர் நிலையமாய் மருவியிருந்த அதனை பிரமதேவன் இக்குவாகு மன்னனுக்கு உரிமையோடு உவந்து கொடுத்தான். அரச மாளிகைகளுள் அங்கே அது தலைமையாய் நிலவி நின்றது.

விண்டுவின் மார்பில் காந்தும் மணி

திருமாலின் மார்பில் ஓர் அதிசய மணி அமைந்துள்ளது. அதற்குக் கௌத்துவம் என்று பெயர் அந்த அற்புத அரதனம் போல் இந்த மாளிகை அதிசயநிலையில் ஒளி வீசியிருந்தமையால் அதனை இதற்கு உவமை கூறியருளினர். சிருட்டி கருத்தா தனக்குப் பிரியமாத் தந்த அந்த மணிமாடத்தைத் திருவின் உருவமாகவே கருதி அம்மன்னர்பிரான் போற்றி வந்தான். அயோத்தி நகருக்கும் அரசகுடிக்கும் ஆன்ம ஒளியாய் மேன்மையோடு அது விளங்கி நின்றது. அதனைக் கண்டதும் யாவரும் கை குவித்து மெய்ம்மறந்து நின்றார். அந்த அதிசய மணி மாளிகையைக் குறித்து பரதனிடம் விநப்போடு கேட்டனர்; அதனுடைய நிலைமை தலைமைகளை எல்லாம் அக்குலமகன் விவரமா உரைத்தான்.

பங்கயத்து ஒருவன் இக்குவாகுவிற்கு அளித்தது;
இங்கிது மலராள் வைகும் மாடம்.

இங்ஙனம் கூறவே எல்லாரும் அதனை உவந்து தொழுதார். நிலைமைகளை எல்லாம் உணர்ந்து புகழ்ந்தார். எங்களால் துதிக்கலாகும் இயல்பதோ! என்று அவர்கள் வியந்து புகழ்ந்திருப்பதால் அயோத்தி அரசின் அதிசய செல்வங்களையும் அற்புதநிலைகளையும் அரிய பல மேன்மைகளையும் அறிந்து கொள்கின்றோம்.

செங்கைகள் கூப்பி வேறுஓர்
மண்டம் அதனில் சேர்ந்தார்.

இந்திர உலகம்போல் இலங்கி நின்ற இராச பவனங்களைக் கண்டு களித்தவர் கருதித் துதித்து அயலே வந்து ஒரு மாளிகையில் அமர்ந்திருந்தார். செய்யவுரிய நிலைகளைச் சேர்ந்து தேர்ந்தார்.

காரிய ஆலோசனைகள்.

சூரிய குமாரன் முதலிய தலைவர்கள் எல்லாரும் இராம

பிரானுடைய முடிசூட்டு விழாவை விரைந்து காண விழைந்தார். பரத நம்பியிடம் கலந்து ஆலோசனைகள் புரிந்தார். ஆகவேண்டியனயாவும் விவேகமாய் ஆராய்ந்தார். அரிய பல புனித தீர்த்தங்கள் வரவேண்டும் என்று இளவல் கூறவே அனுமானைச் சுக்கிரீவன் ஆர்வமாய் நோக்கினன். நோக்கவே அந்த அதிசய வீரன் அதிவேகமாய்விரைந்துவிதிமுறைகளைநினைந்துவெளியேபோனன்

இருந்தனர் இனையமாட்த்து இயல்பெலாம் எண்ணி எண்ணிப்
பரிந்தனன் இரவிமைந்தன் பரதனை வணங்கித் தூயோய்!
கருந்தட முகிலினர்க்குக் காப்புநாண் அணியும் நன்னள்
தெரிந்திடாதுஇருத்தல் என்னே?என்றலும் அண்ணல்செப்பும்.

ஏழ்கடலதனில் தோயம் இருநதி பிறவில் தோயம்
தாழ்விலாது இவன்வந்தெய்தற்கு அருமைத்தோர் தன்மைத்தென்ன
ஆழியொன் றுடையோன் மைந்தன் அனுமனைக் கடிதின்நோக்கச்
சூழ்புவி யதனைஎல்லாம் கடந்தனன் காலின் தோன்றல். (2)

கோமுனியோடு மற்றைக் கணிதரைக் கொணர்க என்று
ஏவினன் தேர்வலான்சென்று இசைத்தலும் உலகம் ஈன்ற
பூமகன் தந்த அந்தப் புனிதமா தவன்வந்து எய்த
யாவரும் எழுந்து போற்றி இணையடி தொழுது நின்றார். (3)

இந்திர குருவும் அன்னர் ஏனையர் எனவும் நின்ற
மந்திர விதியினரும் வசிட்டனும் விரைந்து விட்டார்
சந்திர கவிகை ஓங்கும் தயரத ராமன் தாமச்
சுந்தர மவுலி சூடும் ஓரையும் நாளும் தூக்கி. (4)

அதிசய நிலைகளில் ஒளிசெய்துள்ள இராச மாளிகைகளைக் கண்டு வியந்து சிந்தை மகிழ்ந்து அவர் வந்த பின்பு இந்தவாறு காரியங்கள் நடந்துள்ளன. வந்துள்ள துணைவர்களுடைய ஆர்வ நிலைகள் யாவும் இராமனது மகுடாபிடேகத்தையே சீர்மையா நோக்கி விரைந்திருக்கின்றன. அந்த நினைவு நிலைகளை வெளியே வந்துள்ள வாய்மொழிகளால் கூர்மையா ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம். மானச மருமங்கள் மவுனமா வந்துள்ளன.

அஞ்சன வண்ணனுடைய மஞ்சன நீராட்டுக்குக் கடல்களிலிருந்து தீர்த்தம் வரவேண்டும் என்று பரதன் வாயிலிருந்து வார்த்தைகள் வரவே அனுமானைச் சுக்கிரீவன் ஆர்வத்தோடு பார்த்திருக்கிறன். அந்தப் பார்வையில் அவனுடைய சீர்மையும் நீர்மையும் சிறந்த மேன்மையும் தேசுகள் வீசி நின்றுள்ளன.

ஆழிஒன்று உடையோன் மைந்தன்
அனுமனைக் கடிதின் நோக்க.

வானர குல வேந்தன் அந்த மானவீரனை உரிமையோடு நோக்கியிருக்கும் நிலையை இங்கே நாம் நோக்கி மகிழ்கின்றோம். பார்வையால் பேசுவது அரச மரபினருக்கு ஓர் வரிசையாய் அமைந்துள்ளது. இராமநாதனோடு நெடிது பழகி வந்துள்ளமையால் இந்தக் கோமகனுடைய இராச கம்பீரங்கள் அவனிடமும் நேமமாய் நிலவி நின்றன. சார்ந்த சார்புகளின்படியே மாந்தரும் வேந்தரும்மருவி வருகின்றார். அவ்வரவுகள்ஈண்டு அறிய வந்தன.

ஆழி ஒன்று உடையோன் என்றது சூரியனை. அவன் உரிமையாய் ஏறிவரும் தேர் ஒரே உருளையை யுடையது ஆதலால் இவ்வாறு பேரடைய நேர்ந்தான். ஓர் ஆழித்தேரோன் மைந்தன் என்றது உறவுரிமைகளை ஈண்டு ஓர்ந்து சிந்தனை செய்ய வந்தது. சூரியகுலத் தோன்றலாகிய இராமனை மூடிசூட்ட அவாவிச் சூரியன் மகன் வீரிய மாருதன் மகனைக் காரியமா ஏவினன்.

அனுமானை அவன் குறிப்போடு நோக்கவே அந்த மதியான் கதிவேகமாய் மேலே போனான். வானவீதியில் அம் மானவீரன் வாவிப் போனது வானவர்க்கும் மானவர்க்கும் மகிமைக்காட்சியாய் நிலவி நின்றது. அதிசய வேகம் துதி செய்ய நேர்ந்தது.

சூழ்புவி அதனை எல்லாம் கடந்தனன்
காலின் தோன்றல்.

அயோத்தியின் இராசமாளிகையைவிட்டு வெளியே போனவன் பின்பு யார் கண்ணுக்கும் தோன்றாமல் விண்ணின் வழியே ஏகியுள்ள வேகநிலையை இதில் யூகமாய் ஓர்ந்துகொள்ளுகிறோம்

வாயு வேகமாய் விரைந்து மேலே போயிருக்கிறான். அந்தக் கோலமுஞ் சீலமும் தெரியக் காலின் தோன்றல் என்றார். கால்= காற்று. இங்கே அதன் அதிதேவதையான வாயுபகவானைக் குறித்து நின்றது. யார் கண்ணுக்கும் தோன்றாத அவனுக்கு எல்லார் கண்ணுக்கும் தோன்றி விண்ணும் மண்ணும் புகழ்ஓங்கி வர இப்படி ஒரு தோன்றல் தோன்றி வந்திருக்கிறான்.

சூரியகுலத் தோன்றலுக்கு எவ்வழியும் சீரிய துணையாய் நின்று இத் தோன்றல் காரியம் புரிந்து வருகிறான். இலங்கை

வெற்றியில் உறுதியாய் மூண்டு உரிமையோடு உழைத்து வந்தான் அந்த வெற்றிக் குரிசிலைக் கொற்ற முடிசூட்டிச் சக்கரவர்த்தியாக் கண்டு மகிழக் கழிபேராவல் உள்ளே பூண்டுள்ள உரிமையாளன் வெளியே இவ்வாறு வேகமாய் நீண்டு போனன்.

புவிஎல்லாம் கடந்தனன் என்றது கடல்நீரைக் கொண்டு வரப் போனவனது அடலாண்மையும் அதிசய வேகமும் அறிய வந்தது. மணி மாடத்தைவிட்டு வெளியே சென்றவன் அடுத்த ஒரு நாழிகைக்குள் அகிலத்தையும் கடந்திருக்கிறன். வாயுவின் தோன்றல் மனேவேகமாய்ப் பாய்ந்து போயுள்ளான். அவ் வுண்மையை நுண்மையாய் ஈண்டு உணர்ந்து கொள்கின்ருேம்.

குறிப்பு மொழிகள் சிறப்பு நிலைகளைத் தெளிவா விளக்கி யிருக்கின்றன. காரிய நிகழ்ச்சிகளோடு சீரிய உயிர் உணர்ச்சி களையும் கவி காட்டியருளுவது சுவைகளை யூட்டி வருகிறது.

Poetry is the intellect colored by feelings. (Wilson)

“அரிய உணர்ச்சிகள் தோய்ந்த பெரிய அறிவு நிலையமே காவியம்” என்னும் இது இங்கே ஓவியமா நன்கு காணவுரியது.

இராம காவியம் எவ்வழியும் திவ்விய சீவிய ஓவியமாய்ச் சிறந்து திகழுகிறது. சிறந்த குலமக்களுடைய நிலைமை நீர்மை களைக் கவிகளில் காணுந்தோறும் உலகம் உவகையடைந்து உயர்ந்து வருகிறது. அனுமநாயகனுடைய அதிசய ஆற்றல்களை யும் அறிவு நலங்களையும் ஆர்வ நிலைகளையும் கருதியுணர்பவர் எவரும் உள்ளம் உருகி யுயர்வர். யாண்டும் எத்தகைய காரியங் களை இவ்வுத்தமன் செய்து வந்துள்ளான்! இராமசரிதம் இவ் வீரனல் விழுமிய நிலையில் விளங்கி மிளிர்கிறது அந்த மூர்த்தி யின் அவதாரம் கீர்த்தியோடு பூர்த்திபடைந்து வர இவ் வீரன் உழைத்து வந்துள்ளதை வார்த்தைகளால் வரைந்து காட்ட இயலாது. இவனுடைய செயல்கள் யாவும் அதிசய முடையன.

Only the carrying out of Sri Rama's behest is the one vow of his life. (Vivekananda)

“இராமபிரானுடைய காரியத்தைச் செய்து முடிப்பதே தனது உயிர் வாழ்வின் பயனுக அவன் கருதியுள்ளான்” என அனுமானைக் குறித்து விவேகானந்தர் இவ்வாறு கூறியிருக்கிருர்.

இந்த அதிசய மதிமானுடைய செயலும் சொல்லும் காவியம் எங்கும் சீவிய ஒளிகளை வீசி நிற்கின்றன. தனது ஆண்டவன் மங்கல நீராடுதற்கு உரிய புனித தீர்த்தங்களைக் கடல்களிலிருந்து கொண்டு வர ஆகாய வீதியில் அதிவேகமாய் இவன் போகவே வசிட்டர் முதலிய முனிவர்களோடு ஆராய்ந்து நல்ல முகூர்த்தத்தைத் தலைவர்கள் தெளிவாத் தெரிந்து கொண்டனர்.

முன்னம் குறித்து வைத்த நாள் இன்னலுடையதாய்ப் பதினான்கு ஆண்டுகளைக் கவர்ந்து கொண்டமையால் முனிவர் இதுபொழுது கிரகதேவதைகளை எல்லாம் உறவா ஓர்ந்து ஊன்றி நோக்கி மங்கல ஓரையை நன்கு தெளிந்து நயமா மொழிந்தார்.

இந்த முடிசூட்டு விழாவுக்கு உரிய புனித நாழிகையை அதிசய மேதைகள் பலர் கூடி ஆராய்ந்து தேர்ந்துள்ளனர். தேவ குருவை ஒத்த மதிநலமுடையவர் நுணுகி ஆய்ந்து மந்திர முறைகளைச் சிந்தனை செய்துள்ளமையால் இந்திர குருவும் அன்னார் ஏனையர் என அவரை இன்னவாறு குறித்தருளினர்.

சுந்தர மவுலி சூடும்
ஓரையும் நாளும் தூக்கி.

மகுடாபிடேகத்துக்குத் தகுதியான நேரத்தை ஞான முனிவர்கள் கூடி நாடி ஆராய்ந்திருக்கின்றனர். அந் நிலையை இது நன்கு காட்டியுள்ளது ஓரை என்பது ஓர்ந்து முடிவான நல்ல பொழுதை. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் இந்த ஏழு கோள்களுக்கும் தனித்தனியே உரிய நேரம் ஓரை என வந்தது. இரண்டரை நாழிகை அளவினையுடையது. இந்தக் கிரகஓரைகள் முறையே சுற்றிவரும். தத்தமக்கு உரிய பலன்களை எத்தகைய நிலையிலும் வழுவாமல் விளைத்துவிடும். விளைவுகள் நியமமா நிகழ்கின்றன.

சூரிய ஓரை காரியக் கேடு.
சந்திர ஓரை சிந்தை மகிழ்ச்சி.
செவ்வாய் ஓரை வெவ்வாய்த் துயர்.
புதன் ஓரை இதம் மிகவுடையது.
வியாழ ஓரை விழுமிய செல்வம்.
சுக்கிர ஓரை மிக்கவும் நலம்.
சனி ஓரை துக்கச் சிறை.

அருக்கன் புகர்புந்தி இந்துதுன் மந்தனோடு அந்தணன்சேய்
இருக்கும் கடிகை இரண்டரையாம் இந்த ஓரைகளில்
மரிக்கும் மணம்செய்யும் மக்களைப் பெற்று மகிழ்ந்திருக்கும்
சிரிக்கும் சிறைப்படும் செல்வமும் போரெனத் தேர்ந்துகொள்ளே.
(ஓரைநிலை)

இதனைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். இங்கே குறித்த முறைப்படி கிரகங்களின் ஓரை நிரலே சுழன்று வரும். பலன்களும் அதன்படியே படிந்து வரும். அந்த அந்த நாளுக்கு உரிய உதய காலமே அக்கோளின் ஓரையாம். ஞாயிற்றுக் கிழமை காலையில் சூரிய ஓரை நேரும். திங்கள் உதயத்தில் சந்திர ஓரை தோன்றும். இந்தவாறே பிறவும்முறையே இயங்கியருளும்.

சந்திர கவிகை ஓங்கும்
தயரத ராமன்.

முடிசூட நேர்ந்துள்ள கோமகனை இவ்வாறு குறித்துள்ளார். யாரும் அறியமுடியாதபடி அரிய நிலையில் இருந்த பரமனைத் தனது மகனாகப் பெற்றெடுத்து உலகம் கண்டு மகிழ உதவியருளிய பெரிய புண்ணியவான் ஆதலால் அம் மன்னர் பிரானை நன்றியறிவோடு இன்னவாறு மருவி யுரைத்தார். அவனுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் மன்பதை எங்கும் இன்பமாய் வாழ இனிமை புரிந்து வந்தன; அந்த வரிசையில் இந்தக் குமரன் வந்துள்ளான். வழிமுறை தழுவி விழுமிதாய்க் கெழுமியுள்ள அவ்வுற வுரிமைகளின் இயல்பு தெரியத் தயரத ராமன் என்றார். பெரிய அரசகுலம் பேரொளியாயுளது

இந்த அருமைத் திருமகனை மணிமுடி சூட்டி அரியணையில் அமர்த்திச் சக்கரவர்த்தியாக் காண விழைந்து வேணவாவுடன் முயன்று வந்த அந்த வேந்தர்பிரான் விதிசெய்த சதியால் அன்று காணாது போயினன். இன்று தெய்வவுருவினனாய்ச் செவ்வையாக் காண நேர்ந்துள்ளான். அக் காட்சியின் மாட்சியும் கருமநிலையும் இப்பெயரின் ஆட்சியால் உயர்வா உணர வந்தன.

தீர்த்தங்கள் கொண்டுவர அனுமான் போன பின்பு ஞான முனிவர்களோடு ஆராய்ந்து நாள் நலம் தெளிந்தனர். தெளிந்த பின் தேச மன்னர்க்கு திருமுகங்களை அனுப்பினர். மிதிலை முதலிய உரிமையான இடங்களுக்குத் தூதுவர்களை ஆதரவோடு உய்த்த

னர். இந்த இனிய மங்கல மொழிகளைக் கேட்டதும் ஞாலம் எங்கணும் மகிழ்ச்சிகள் பொங்கிச் சாலவும் ஓங்கி எழுந்தன.

இராமபிரானுடைய பட்டாபிடேக வைபவத்தைக் காண விழைந்து அரசர் முதல் யாவரும் தத்தம் வரிசைகளோடு அயோத்தி நகரை அடைந்தனர். நதிகள் கடலை அடைந்தது போல் உலகமக்கள் தலைமையான இப்பதியில் வந்துசேர்ந்தனர்.

அடுக்கிய உலக மூன்றும் ஆதரத் தூதர் கூவ
இடுக்கொரு பேரும்இன்றி அயோத்திவந்துஇறுத்ததுஎன்றால்
தொடுக்குறு கவியால் மற்றைத் துழனியை இறுதிதோன்ற
ஒடுக்குறுத்து உரைக்கும் தன்மை நான்முகத்து ஒருவற்கு
[உண்டோ?

இராமபிரானுடைய முடிசூட்டு விழாவைக் காண விழைந்து வெளியிடங்களிலிருந்து அங்கே வந்துள்ள சனத் திரள்களைச் சிந்தை தெளிய இது நன்கு விளக்கியுள்ளது. பல தேசங்களிலும் இருந்து வேந்தர்களும் மாந்தர்களும் நீண்டு திரண்டு நெடிய ஆரவாரங்களோடு ஆண்டு அடைந்திருக்கின்றனர். அளவிடலரிய நிலைகளில் வந்துள்ள அந்தக் கூட்டத்தை வார்த்தைகளால் வரைந்து கூற முடியாது எனக் கவி நயமாக ஒதுங்கியிருப்பது விநய விவேகமாய் ஓங்கி விளக்கங்களை நன்கு துலக்கி நிற்கிறது.

உரைக்கும் தன்மை நான்முகத்து
ஒருவற்கு உண்டோ?

புவிச் சக்கரவர்த்தியின் மகுடாபிடேகத்துக்கு வந்திருக்கின்ற மக்கட் பரப்பைக் கவிச்சக்கரவர்த்தி தன் கவிகளால் கூறமுடியாது என்று விலகியதோடு அமையாமல் பிரமதேவனும் சொல்ல இயலாது என்று உரமா முடிவு செய்திருக்கிறார்.

இராம சரித்திரத்தை அரிய பெரிய அதிசய காவியமாப் பாடி வந்த கவிநாயகன் முடிவில் முடிசூட்டு விழாவைப் பாட்டுகளால் விரித்துக் காட்ட முடியாது என்று இப்படி விசித்திரமாக் காட்டியிருப்பது வியப்பை ஊட்டி நயப்பை நீட்டி நிற்கிறது.

கவியால் கூறமுடியாது என்று பாரறியச் சொன்னால் தன் பெருமைக்குச் சிறுமை நேருமே! என்று மறுக நேர்ந்தார்; நேரவே வேறு ஒரு துணையையும் சேர்த்துக் கூறினர். படைப்புக் கடவுளான அந்த நான்முக னுமே உரைக்க முடியாததை

நான் உரையாமல் விட்டது எனக்கு ஒரு குறையாகாது என்று மனத் துணிவோடு விலகி அமைதி எய்தியிருக்கிறார்.

நான்முகத்து ஒருவன் எனப் பிரமதேவனை இங்கே இவ்வாறு குறித்தார். நான்கு திசைகளிலுமிருந்து பொங்கி வருகிற சன சமுத்திரங்களை நேரே பார்த்துக் கூறுவதற்குச் சீரோடு நான்கு முகங்கள் அமைந்துள்ளன; அவ்வாறு அமைந்திருந்தும் அந்த வேதாவும் கூறமுடியாது என்றால் ஒரு முகத்தையுடைய நான் எவ்வாறு கூறமுடியும்? என இவ்வாறு வினவி மன அமைதி அடைந்துள்ளார். பல கவிகள் பாடி விரித்து விளக்கியிருந்தாலும் இந்த விநய விளக்கம்போல் சுவை ததும்பி இனிமை பயவாது.

தமது கதாநாயகனை உலகம் போற்றிவரும் நிலைமையைப் பல வகையினும் தலைமையாத் துலக்கி வருகிறார். நிருபர்களுக்கு நிருபங்கள் அனுப்பிய வுடனே வசிட்டர் முதலியோர் இராமனிடம் வந்து நேமநியமங்களை உரைத்தார். அவருடைய வரவுகளும் வாய்மொழிகளும் அரிய பெரிய இராச மரியாதைகளை உரிமையாய் மருவி நின்றன. எவ்வழியும் யாவும் நயமா நடந்தன.

அவ்வயின் முனிவனோடும் பரதனும் அரியின் சேயும்
செவ்விய நிருதர்கோனும் சாம்பனும் வாலி சேயும்
எவ்வமில் ஆற்றல் வீரர்யாவரும் எழுந்து சென்றாங்கு
அவ்வியம் அவித்தசிந்தை அண்ணலைத் தொழுதுசொன்னார்.

நாளைநீ மவுலி சூடும் நலந்திகழ் பெரிய நன்னாள்
காளைநீ அதனுக் கேற்ற கடமைகள் கருது கென்று
வேளையே பொடியதாக விழிக்குமநீள் நுதலின் வெண்பூம்
பூளையே சூடுவானைப் பொருவுமா முனியும் போனான். (2)

நான்முகத்து ஒருவன்ஏவ நயனறி மயன்என்று ஓதும்
நூன்முகத்துஓங்கு கேள்விநுணங்கியோன் வணங்குநெஞ்சன்
கோன்முகத் தளந்து குற்றம்செற்றுல கெல்லாம் கொள்ளும்
வான்முகத்து ஒருவன் நன்னாள் மண்டபம் வயங்கக் கண்டான். [3

சூழ்கடல் நான்கின் தோயம் எழுவகையாகச் சொன்ன
ஆழ்திரை ஆற்றின் நீரோடு அமைந்தன என்னவாமென்று
ஊழியின் இறுதி செல்லும் தாதையின் உலாவி யன்றே
ஏழ்கடல் நீரும்தந்தான் இருந்துய்ய மருந்து தந்தான். (4)

எரிமணிக் குடங்கள் பன்னூற் றியானைமேல் வரிசைக் கான்ற
விரிமதிக் குடையி னிழல் வேந்தர்கள் பலரும் ஏந்திப்

புரைமணிக் காளம்ஆர்ப்பப் பல்லியம் துவைப்பப் பொங்கும்
சரயுவின் புனலும் தந்தார் சங்கினம் ஆர்ப்ப மன்னே! (5)

அஞ்சன வண்ணனுடைய மஞ்சன நீராட்டுக்குப் பல நதிகளிலுமிருந்து புனித தீர்த்தங்கள் வரிசை வரிசையாய் வந்துள்ளன. மறுநாள் மகுடாபிடேகம் என்று தெரியவே உலகமாந்தர்களும் உயர்குல வேந்தர்களும் ஆங்கு வரன்முறையே வந்து சேர்ந்தனர். எங்கும் பேரின்பக் காட்சிகளே பெருகி நின்றன. சீவகோடிகள் யாவரும் தேவருலகத்தைச் சேர்ந்தவராய் யாண்டும் தேசு மிகுந்து விளங்கினர். இராமபிரானுடைய நாமமும், உருவமும் எல்லாருடைய வாயிலும் கண்ணிலும் தூய ஆனந்தங்கள் தோய்ந்து தலங்கின. எவ்வழியும் உயிரினங்கள் உவகை நிலைகளில் பொங்கி வருங்கால் வானவீதியிலிருந்து ஒரு பேரொலி ஓங்கி எழுந்தது. யாவரும் அதிசய பரவசராய் மேலே அண்ணாந்து நோக்கினர். ஆகாயத்தில் சிறிய ஓர் உருவத்தை முதலில் கண்டனர். அடுத்த நிமிடத்தில் அரண்மனை வாசலில் பல வகையான நீர்க்குடங்களோடு பெரிய வீரன் அரிய சாகசமாய் வந்து நின்றான். அந்த நிலை அனைவருடைய சிந்தனைகளிலும் திகைப்பையும் வியப்பையும் சேர விளைத்தன. இராமநாதனுடைய தூதன் என்று கேள்வியுற்றிருந்தவர் எல்லாரும் அனும நாயகனை நேரே கண்டு ஆனந்தம அடைந்தனர். அரசர் பலரும் வியந்து நோக்கி உவந்து புகழ்ந்தனர். எங்கும் மகிழ்ச்சிகள் பொங்கின.

வானவீதியில் வாவிப்போன அம் மான வீரனது வரவை எதிர்நோக்கிநின்ற பரதன் சுக்கிரீவன் குகன் வீடணன்முதலிய அனைவர் யாவரும் பெருமகிழ்ச்சியுற்றனர். காரிய சித்தியோடு விரைந்து வந்த அவனது சீரிய சத்திகளை நினைந்து மகிழ்ந்தனர்.

ஏழ்கடல் நீரும் தந்தான்;
இருந்து உய்ய மருந்து தந்தான்.

இராமனுடைய மங்கல நீராட்டுக்கு எங்கணுமிருந்து அரிய தீர்த்தங்களைக் கொண்டு வந்துள்ள அனுமனைக் கவி இங்ஙனம் நயமாக் காட்டியிருக்கிறார். அந்த உபகாரியினுடைய உதவி நிலைகள் கவியின் இதயத்தைக் கவர்ந்திருத்தலால் உலக இதயங்கள் உணர்ந்து தெளிய யாண்டும் சுவையா உணர்த்தி வருகிறார். உரைக் குறிப்புகள் அரிய பல சிறப்புகளை விளக்கி வருகின்றன.

பல திசைகளிலும் விரைந்து சென்று கடல் நீர்களை வரைந்து வாரி வந்துள்ளான். அந்த உண்மை ஏழ்கடல் நீரும் தந்தான் என்றதனல் தெரிய வந்தது. இதுபொழுது இவ்வாறு திவ்விய நீரைச் செவ்வையா வாரி வந்துள்ளவன் யார் தெரியுமா? முன்பு அமுத சஞ்சீவியைக் கொண்டு வந்து இலக்குவன் முதலிய எல்லாரையும் உயிர்த்து எழச் செய்தவன். இவனது தெய்வீக உதவிகள் எவ்வழியும் சிந்தனை செய்ய வுரியன. அன்று அவ்வாறு இவன் உதவி செய்யவில்லையானல் இன்று இவ்வாறு இராம பட்டாபிடேகம் நடக்குமா? அந்த நிலைமைகளை எல்லாம் நன்றியறிவோடு எண்ணியுணருமாறு இங்கு இனிது தெளிவுறுத்தினர். இருந்து உய்ய மருந்து தந்தான் என்ற இதில் பொருந்தியுள்ள சீவ நிலைகளைக் கருதியுணர்பவர் இவனுடைய அருமை பெருமைகளை நேரே தெரிந்து கொள்ளுவர். இராமபிரானுடைய வீர வாழ்வு முழுவதும் இத் தீரனுடைய ஆதரவால் ஒளிமிகுந்து எழில்சுரந்து விளங்குகின்றது. எவ்வழியும் திவ்வியநிலைகளை ஆற்றி வருகிருன்.

வானவீதியில் வேகமாய் இம்மானவீரன் வாவிப்போன தும் விரைந்து மீண்டு வந்துள்ளதும் அதிசய வியப்புகளை விளைத்து நிற்கின்றன விஞ்சை முறைகளிலும் யோக சித்திகளிலும் இவன் காயசித்தி பெற்றுள்ளான். பஞ்ச பூதங்களின் ஆற்றல்களும் இவனிடம் தஞ்சம் புகுந்துள்ளன அதனல் வானிலும் மண்ணிலும் யாண்டும் விரைந்து சென்று எண்ணிய காரியங்களை எல்லாம் எளிதே முடித்து ஒளியோடு உயர்ந்து வருகிருன்.

திசைகள் தோறும் பறந்து சென்று திரைகடல் நீரை விரைந்து கொண்டு வந்த அனுமனைக் கண்டு அனைவரும் அதிசய பரவசராய்த் துதி செய்து ஆனந்தம் மீதூர்ந்து நின்றனர்.

அதன் பின் தேச அரசர்கள் சரயு நதியிலிருந்து புனித தீர்த்தங்களைத் தங்கக் குடங்களில் நிறைத்துப் பெரிய மதயானைகளின் மேல் வைத்து அரிய பல முரசங்கள் முழங்கி வர விதி நியமங்களோடு வரிசை வரிசைகளாக் கொண்டு வந்தனர்.

நூற்றெட்டு யானைகள் மேல் மன்னர்கள் வெண்கொற்றக் குடைகள் சூழத் தீர்த்தங்களைத் தாங்கி வந்த காட்சிகள் கண் கொள்ளா மாட்சிகளாய்க் கனிந்து விளங்கின. தங்கள் சக்கரவர்த்தியின் முடிசூட்டு விழாவில் மிக்க மகிழ்ச்சிகள் மூண்டு

வின்றமையால் வேந்தர் குழாங்கள் யாண்டும் மாந்தர் குழாங்களோடு சேர்ந்து காரியங்களைச் சீரிய முறைகளில் செய்து வந்தனர். செயல் முறைகள் உயர் தகவா ஒளி வீசி வந்தன.

வீரமதிக் குடையின் நீழல்
வேந்தர்கள் பலரும் ஏந்தி.

அரிய பொற் குடங்களில் அரசர்கள் வரிசையோடு தீர்த்தங்களைக் கொண்டு வந்துள்ள காட்சியை இது வார்த்துக் காட்டியுள்ளது. புனித ஆற்று நீர் இனிதே போற்றி வரப் பெற்றது.

சரயுவின் புனலும் தந்தார்.
சங்கினம் ஆர்ப்ப.

அயோத்தி நகரின் அருகே ஓடுகிற சீவநதிக்குச் சரயு என்று பெயர். இரவி குலத்து வேந்தர்களுடைய வழிமுறைபோல் எவ்வழியும் உயிர்களுக்கு இனிய நீர்மையாய் இதம் புரிந்து வருவது; என்றும் குன்றாத நீர்வளம் உடையது "சரயு என்பது தாய்முலை அன்னதுஇவ், வுரவுநீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கெலாம்" என்றதனால் இதன் பாங்கும் பயனும் ஈங்கு நன்கு அறியலாகும். இந்தப் புண்ணிய நதியிலிருந்து புனித தீர்த்தங்களை இறுதியில் உரிமையோடு வேந்தர்கள் கொண்டு வந்தனர். இராச புரோகிதர்கள் மிகவும் மரியாதையோடு வாங்கி வேத மந்திரங்களை ஓதி மணி மாளிகையில் அணியணியா வைத்தனர். அதன்பின் நீர் ஆட்டு விழா நேரே தொடங்கியது. சீராட்டுகள் சிறப்பா நடந்தன.

பட்டாபிடேகம்

மாணிக்கப் பலகைதைத்த வயிரத்தின் கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்றும்உச்சி அழகுறச் சமைத்த பீடம்
ஏணுற்ற பளிக்கு மாடத்து இட்டனர் அதனின்மீது
சேணுற்ற திரள்தோள் வீரன் திருவொடும் பொலிந்தான் மன்னோ.

மங்கல கீதம்பாட மறைஒலி முழங்க வல்வர்ச்
சங்கினம் குமுறப் பாண்டில் தண்ணுமை ஒலிப்பத் தாவில்
பொங்குபல் லியங்கள் ஆர்ப்பப் பூமழை பொழிய விண்ணோர்
எங்கள்நாயகனை வெவ்வேறு எதிரபிடேகம் செய்தார். [2

மாதவர் மறைவலாளர் மந்திரக் கிழவர் மற்றும்
மூதறி வாளர் உள்ளம் சான்றவர் முதல்நீர் ஆட்டச்

சோதியான் மகனும் மற்றைத் துணைவரும் அனுமன்தானும்
தீதிலா இலங்கை வேந்தும் பின்னபி டேகம் செய்தார். [3

மரகத சயிலம் செந்தா மரைமலர்க் காடுபூத்துத்
திரைகெழு கங்கைவீசும் திவலையால் நனைந்து செய்ய
இருகுழை தொடரும் வேற்கண் மயிலொடும் இருந்தது ஏய்ப்பப்
பெருகிய செவ்வி கண்டார் பிறப்பெனும் பிணிகள் தீர்ந்தார்.

தெய்வநீர் ஆடற்குஒத்த செய்வினை வசிட்டன் செய்ய
ஐயமில் சிந்தை யானைச் சுமந்திர அமைச்சனோடு
நொய்தினின் இயற்றி நோன்பின் மாதவன் நுனித்துக்காட்ட
எய்தினன் இயன்ற பல்வேறு இந்திரற்கு ஏய்ந்த என்ன. (5)

மஞ்சன நீராட்டு நிகழ்ந்துள்ள மாட்சிகளை இவை காட்சிகளாக் காட்டியுள்ளன. அயோத்தி அரசுகளின் குலமுறைப்படி யாவும் வரன்முறையே வரிசையாய் இனிது நடந்திருக்கின்றன.

பளிங்கு மணி மாளிகையில் அபிடேகவிழா அதிசய நிலைகளில் நிகழ்ந்துள்ளது. அழகிய மணிகள் மருவிய பொற்பீடத்தில் இராமன் எழுந்தருளியிருக்கிறான்; சீதாதேவி அயலே அமர்ந்திருக்கிறாள். மங்கல கீதங்களை மங்கையர் இங்கிதமாப் பாடி நிற்கின்றனர்; வேதங்களை மந்திர முறையோடு வேதியர் ஓதி வருகின்றனர்; சங்கினங்கள் முதலிய இனிய இயங்கள் எங்கணும் முழங்குகின்றன. மறைகளை முறையே பாடி வசிட்டர் முதலிய தூய முனிவர் முதலில் நீராட்டுகின்றனர்; பின்பு வேந்தர்கள் ஆட்டுகின்றனர்; அதன்பின் வரன்முறையே உரியவர்கள் எல்லாரும் வரிசையாய் நீராட்டு விழா நடத்தினர். அந்தக் காட்சிகள் யாவர்க்கும் அதிசய ஆனந்தங்களை விளைத்தன. கண்கள் களிப்ப நோக்கிக் களிபேருவகை பூத்தனர்.

மரகத சயிலம் செந்தா
மரை மலர்க்காடு பூத்து

குடமுழுக்கு விழாவில் இராமபிரான் அமர்ந்திருந்த கோலத்தை இது அழகா வரைந்து காட்டியுளது. இக்கோமகனது உருவ அழகும் அவயவ சோபையும் எழில் ஒளியும் விழிகள் களிப்ப விளங்கியுள்ளன. பச்சை மலை ஒத்த படிவத்தன் ஆதலால் அந்த அழகிய திருமேனியை இங்கே விழுமிய நிலையில் விளக்கியருளினர். மரகதசயிலம் என்றது அருமையும் பெருமை

யும் ஆண்மையும் மேன்மையும் தெரிய வந்தது. செந்தாமரை மலர்கள் போன்ற செவ்விய கண்கள் கைகள் கால்களை யுடைய வன் ஆதலால் மலர்க்காடு பூத்து என்ருர். பொன் குடங்களில் நிறைந்திருந்த மங்கல தீர்த்தங்களை இராமன் திருமுடியில் பெய்த பொழுது கங்காதேவி கழிபேருவகை யடைந்தாள். சானகி மீது சொரிந்தபோது சானவி மானசீகமாய் மகிழ்ந்து ஞானபோதங் களில் உயர்ந்தாள். பெண்ணரசி பேரரசியாக சீரரசி செய்தாள்.

இருகுழை தொடரும் வேல்கண் மயில்.

சீதையை இவ்வாறு குறித்திருக்கிருர். செங்கிறத்திருமேனியள் ஆன சானகியை மயில் என்றது நீண்டு செறிந்து நெறிந்து குழைந்த கூந்தல் விரிந்து சரிந்து கிடக்கும் சாயல் தெரிய. உலக மயில்கள் மலைகளின் சாரல்களில் உலாவி மகிழும்; இந்தச் சனக குலமயில் மரகத சயிலத்தை மருவி கிலவி அன்போடு உவந்து களித்துளது. உள்ளக் களிப்புகள் சொல்லைக் கடந்துள்ளன.

காரிய பெரிய அழகிய கண்கள் ஆகலால் அவ்விழிகளின் விழுமிய எழில்களை உலக விழிகள் காண இங்ஙனம் அழகு மொழிகளால் கூறினர். வேல் கண் வில்வீரனை வென்றுள்ளது.

பெருகிய செவ்வி கண்டார்
பிறப்புஎனும் பிணிகள் தீர்ந்தார்.

அபிடேக விழாவில் அமர்ந்திருந்த இராமனையும் சீதையை யம் நேரே காண நேர்ந்தவர் கண்ட பலன்களை இது காட்டி யுள்ளது. இந்த அழகிய சதிபதிகளைக் கண்கள் குளிரக் கண்ட இருபாலரும் மறுபிறவி இலராய்ப் பேரின்பங்களைப் பெற்றுள்ள னர். அவ்வுண்மையை இன்னவாறு நுண்மையா உணர்த்தி யருளினர். பெருகிய செவ்வி என்றது பெறலரியது தெரிய

பரமபதநாதனும், திருமகளும் மனித உருவில் மருவி இவ் வாறு இனிய காட்சிகளை யருளியுள்ளமையால் அந்தப் புனித மாட்சிகள் புலனாய் நின்றன. பெரிய புண்ணிய சீலர்கள் ஆத லால் அவரை நேரே கண்டவர் அரிய புண்ணியங்களை அடைந்த னர்; அடையவே பிறவிகள் அடையாமல் நீங்கிப் போயின; பேரின்பங்கள் ஓங்கி வந்தன. தம்மைக் கண்டவர்களுடைய அல்லல்களை நீக்கி என்றும் நல்ல ஆனந்தங்களை அருள வல்லவர் கள் ஈண்டு அரசனும் அரசியுமாய் ஒருங்கே அமர்ந்துள்ளனர்.

மங்கல நீராட்டு முடிந்த பின்னர் அரச கோலங்கள் புனைந்தனர். அதிசய நிலையில் அமைந்திருந்த விழுமிய மணி மாளிகையை அடைந்தனர் அதன் நடுவே எழில் ஒளிவீசியிருந்த சிம்மாசனத்தில் அமர்ந்தனர். இந்திர வுலகம்போல் சுந்தரச் சோதியாய்த் துலங்கி நின்ற அந்த மணி மண்டபம் எங்கணும் மாந்தரும் வேந்தரும் வரன்முறையே நிறைந்திருந்தனர். பரதன் முதலிய தம்பிமார் மூவரும் இந்நம்பி அயலே உழுவலன்போடு தொழுது நின்றனர். சுமந்திரன் முதலிய அமைச்சர் குழாங்கள் வரிசையாய் நின்றனர். உரிய நாழிகை வரவே பெரிய மாதவர்கள் புடைசூழ வசிட்ட முனிவர் வந்தார். அரிய சடங்குகள் யாவும் நடந்தன மணி மகுடத்தை இம் மன்னன் முடியில்சூட்ட நேர்ந்த போது மாந்தரும்வேந்தரும் பேரின்ப மகிழ்ச்சியில் ஊர்ந்தனர்.

முடி சூடியது.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதனவெண் குடைகவிக்க இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

உலகம் உவந்தது.

வெள்ளியும் பொன்னும் என்போர் விதிமுறை மெய்யில்கொண்ட
ஒள்ளிய நாளில் நல்ல ஓரையில் உலகம் மூன்றும்
துள்ளின குனிப்ப மௌலி சூடினன் கடலின் வந்த
தெள்ளிய திருவும் தெய்வப் பூமியும்சேரும் தோளான். (2)

உயிர்களின் உவகை நிலை.

சித்தர் ஒத்தனன் என்று ஓதும் திருநகர்ச்செல்வம் என்ன
உத்தமத்துஒருவன் சென்னி விளங்கிய உயர்பொன்மௌலி
ஒத்தமூ வுலகத்தோர்க்கும் உவகையின் உறுதி யுன்னில்
தத்தம் உச்சியின்மேல் வைத்ததுஒத்தெனத் தளர்வுதீர்ந்தார்.

பூமிதேவி தழுவி மகிழ்ந்தது.

பன்னெடுங் காலம் நோற்றுத் தன்னுடைப் பண்பிற்கு ஏற்ற
பின்னெடுங் கணவன் தனைப்பெற்றிடை பிரிந்து முற்றும்
தன்னெடும் பீழை நீங்கத் தழுவினள் தளிர்க்கை நீட்டி
நன்னெடும் பூமி என்னும் நங்கைதன் கொங்கை யார. 4)

இன்ப நிலை

விரதநூல் முனிவன் சொன்ன விதிநெறி வழாமை நோக்கி
வரதனும் இளைஞர்க்கு ஆங்கண் மாமணி மகுடம் சூட்டிப்
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து நாளும்
கரைதெரி விலாத போகக் களிப்பினுள் இருந்தான மனனே.

(திருமுடிசூட்டுபடலம், 38-42)

இராமபிரான் அரியணையில் அமர்ந்து உலகம் நலமுற மணி மகுடம் புனைந்துள்ள காட்சிகளை இங்கே கண்டு மகிழ்கின்றோம். நிகழ்ச்சிகள் அந்த அரசகுல முறைகளையும் அதிசய மகிமைகளையும் விளக்கி நிற்கின்றன. எவ்வழியும் திவ்விய எழில்கள் செவ்விய ஒளிகளை வீசிச் சிறந்து திகழ்கின்றன. மணி மாளிகை எங்கணும்மங்கலக்காட்சிகள் இங்கிதமாப்பொங்கிமிளிர்கின்றன

சிங்க உருவங்கள் சுமந்த அரியணையின் கீழ் அனுமன் உழுவலன்புடன் உருகி அமர்ந்துள்ளான். அங்கதன், வீர வாளைக் கையில் ஏந்தி வீரகம்பீரமாய் முன்னே நிற்கின்றான்; பரதன் வெண்கொற்றக் குடையைத் தாங்கி அருகே ஆர்வமாய் நிற்கின்றான்; இலக்குவனும், சத்துருக்கனும் வெண்சாமரைகளைக் கைகளில் கொண்டு வலமும் இடமுமாய் நலமா நிலவி நிற்கின்றார்; இராமன் சீதாதேவியோடு அரியணையில் மணியாசனத்தில் அமர்ந்திருக்கின்றான்; வேத முனிவர்கள் வேத கீதங்களை ஓதி வர வசிட்ட முனிவர் புனிதமாய் முன்னே வந்தார்; வரவே சடையப்பவள்ளலின் மரபின் மூதாதையரான சரராமன் என்பவர் கையில் தெய்வபத்தியோடு வைத்திருந்த இரத்தின கிரீடத்தை வசிட்டரிடம் கொடுத்தார்; அந்த மணி மகுடத்தை வாங்கி இராமன் திருமுடியில் அம்மாதவர் சூட்டி யருளினர். அது பொழுது மாந்தர் திரளும் வேந்தர் குழாமும் அதிசய ஆனந்தங்களில் திளைத்து அரசர் பெருமானைக் கண்டு களித்து நின்றனர்.

வரன்முறையே மன்னர்கள் வந்து தக்க மரியாதைகளோடு சக்கரவர்த்தியை வணங்கினர். குறுநில மன்னரும் பெருநிலக் கிழாரும் வரிசை வரிசையாத் தொழுது மகிழ்ந்தனர். எல்லாருடைய உள்ளங்களிலும் இன்பவெள்ளங்கள் பொங்கிநின்றன.

புண்ணியமூர்த்தி செங்கோல் ஏந்த நேர்ந்ததைக் கண்டு மண்ணும் விண்ணும் மகிழ்ந்து விளங்கின. எவ்வழியும் யாண்டும் தெய்வீக உவகைகள் செறிந்து தேசுமிகுந்து திகழ்ந்தன.

வெண்ணெயூர்ச் சடையன் மரபுளோர்.

இராமபிரான் திருமுடியில் சூடிய மணிமகுடத்தைக் கையால் எடுத்துக் கொடுத்த மரபினரை வையம் காண இது காட்டியுள்ளது. சோழ நாட்டிலே திருவெண்ணெய் நல்லூரிலே தோன்றி வான்தோய் புகழோடு வாழ்ந்து வந்தவர் சடையப்ப வள்ளல். தாளாண்மை மிக்க வேளாளர் மரபினர். எவ்வுயிரும் இன்புறச் செவ்விய அன்பு புரிந்து வந்தவர். பிறர்க்கென வாழ்ந்த பெருங்கொடையாளர். கம்பரை உரிமையோடு ஆதரித்து யாண்டும் பெருமை புரிந்து வந்த பெருந்தகையினர்.

தன்பால் அன்பால் இளமையிலிருந்தே பண்போடு பேணி வந்த அந்த உபகாரியை நினைந்து எவ்வழியும் நன்றி பாராட்டி வருவது நமது கவிநாயகனுடைய இயல்பாய் வந்துள்ளது. இராம காவியத்தில் இவருடைய மகிமை மாண்புகளை இடையிடையே நயமா விளக்கி வந்துள்ளார். முடியில் முடிசூட்டு விழாவில் முடிமணியா இவரை இவ்வாறு கொண்டுவந்து ஈண்டு நிறுத்தியுள்ளார். தம் காலத்தில் இருந்த இந்தச் சடையப்பருடைய முன்னோர் சூரியகுலத்து அரசர் காலம் முதல் வரிசையோடு வளர்ந்து வந்துள்ளனர். அந்த உண்மையை இந்தவாறு இங்கே உணர்த்தியருளினர். என்றும் மேன்மையான அந்த வழிமுறையில் வந்தவர் என இவரது விழுமிய புகழை இங்ஙனம் விளக்கியிருக்கிருர். தலை முறையின் நிலை நலமா அறிய வந்தது.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல் (குறள், 44)

பிறக்கு அன்னம் இட்டுத் தரும நீர்மையோடு ஒழுகி வருபவனது வழிமுறை என்றும் விழுமிய நிலையில் ஒளிசெய்து வரும் என்னும் இது ஈண்டு எண்ணவுரியது. சீவர்களுக்கு இதம் செய்து வருபவன் தேவஇனமாச் சிறந்து தேசு வீசி வருகிருன்.

சடையப்ப வள்ளல் செய்துள்ள உதவிகள் உள்ளத்தை உருக்கி வந்துள்ளமையால் நம் கவி வள்ளலுடைய உரைகள் இவ்வாறு பரவசமாய் வெளிவந்துள்ளன. அவர்மீது பூண்டுள்ள பிரியம் அவருடைய ஊர் மரபு குலம் முதலிய எல்லாவற்றிலும் பரவி எவ்வழியும் யாண்டும் பெரிய ஆர்வமாய் நீண்டுள்ளது

வேதியர்தம் உயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தம்குலமும்
சாதிவளம் படைத்துடைய தாய்அனைய காராளர்
கோதில்குலம் தனக்குநிகர் உண்டாகில் கூறீரே. [கம்பர்]

வெண்ணெய்ச் சடையப்பர் செய்து வந்த அன்புரிமைகள் கம்பரை எவ்வாறு வசப்படுத்தியிருக்கின்றன என்பதை இன்னவாறு வந்துள்ள நன்னயமான கவிகளால் நன்கு அறிந்து கொள்ளுகிறோம். மானச மருமங்களும் நேரே தெரிகின்றன.

செய்நன்றி மறவாமை என்னும் திவ்விய நீர்மை இவர்பால் செவ்விய சீர்மையோடு சிறந்து வந்துள்ளது. பிறர்செய்தஉதவிகளை உணர்ந்து வருபவர் உயர்ந்தவராய் விளங்கி வருகின்றார்.

In noble hearts the feeling of gratitude has all the ardor of a passion. [Poincelot]

"மேன்மையான உள்ளங்களில் நன்றியின் உணர்வு மிகுந்த ஆவலாய்ப் பொங்கியுளது" என்னும் இது இங்கே நன்கு அறியவுரியது. தமக்கு அயலார் புரிந்த ஆதரவுகளைச் சிந்தித்தவரின் அந்த வுயிர் அரிய பெரிய மேன்மைகளை அடைந்து கொள்கிறது.

சிறந்த மேதைகளுக்கு உதவிசெய்தவர் உயர்ந்த மகிமைகளை எய்தி ஒளிமிகுந்து நிற்கின்றார். இராமபிரானுடைய மணிமுடியோடு இணைத்துவைத்துச் சடையப்பருக்குக் கம்பர் புகழ்முடி சூட்டியிருக்கும் காட்சி உயர்தகவை நீட்டி நிற்கிறது.

பரதன் முதலிய தம்பிமார் மூவரும் அண்ணனுடைய அரச கோலத்தைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி நின்றனர். அப் பெருமான் அருகே நின்று ஊழியம் புரிவதையே பேரின்பப் பேருகக்கருதிமகிழ்ந்தனர். உரிமைகள் உழுவலன்புகளாகின்றன.

பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமனோடு மைதிலியும்
இரவும்நன் பகலும் துதிசெய்யநின்ற
இராவணாந்தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில்கள்நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

(பெரிய திருமொழி, 2-3, 7)

தம்பியர் மூவரும் என்றும் பிரியாமல் அன்பு மீதூர்ந்து துதி செய்து வரச் சீதையோடு இன்பம் மீதூர்ந்திருக்கும் பெருமான் என இராமநாதனைத் திருமங்கையாழ்வார் இவ்வாறு துதிசெய்திருக்கிருர். சகோதரவாஞ்சையும் பெருந்தன்மையும் பேராண்மையும் பெருகியுள்ள பண்பு நிறைந்த விழுமிய குழுவை உலக விழிகள் உவந்து காண இங்கே நலமா எழுதிக் காட்டியுள்ளார். இராவணாந்தகன் என இராமனுக்கு ஒரு பெயரைச் சூட்டியிருக்கிருர். நீண்ட பாவ வுருவைப் பூண்டோடு நீக்கியருளிய புண்ணிய மூர்த்தி என்பதை ஈண்டு இவ்வண்ணம் துலக்கி யருளினர்.

பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி வீச

இராமன் அரசர் பெருமானய் மணிமுடி சூடியபொழுது இளவல்கள் உழுவலன்புடன் அருகு நின்றுள்ளனர். அந்த இனிய நிலைமையை இது தெளிவா விளக்கியுள்ளது. பண்புகள் நிறைந்த அன்பின் உருவங்களைக் கருதியுணருந்தோறும் இன்பங்கள் பெருகி எவ்வழியும்செவ்விய தன்மைகள் மருவுகின்றன.

இனிய குணநீர்மைகள் நிறைந்த இந்த விழுமிய குழுவைப் பல மொழிகளிலும் கவிகள் சுவையா எழுதி உவகை எய்தியுள்ளனர். காளிதாச மகாகவி ரகுவம்சம் என்னும் காவியத்தில் வரைந்துள்ள சுலோகம் ஒன்று அயலே வருகின்றது.

ஸௌமித்ரிணா ஸாவரஜேந மந்தமாதூத வாலவ்யஜநோ ரதஸ்த:
த்ருதாதபத்ரோ பரதேந ஸாக்ஷாதுபாயஸங்காத இவ ப்ரவிருத்த:
(ரகுவம்சம், 14-11)

"தம்பி சத்துருக்கனுடன் இலக்குவன் சாமரங்களை மெல்ல வீச, பரதன் குடை பிடிக்க, இடையே மருவியிருந்த இராமர் சாம பேத தான தண்டம் என்னும் நான்கு உபாயங்கள்போல் நிலவி நின்றனர்" என இது குறித்துளது. இராச குமாரர்களுக்கு இராச தருமங்கள் இங்கே உரிமையான உவமைகளா வந்தன.

இராமனது மகுடதாரணம் மாநிலம் முழுவதுக்கும் பேரின்ப மகிழ்ச்சியாப் பெருகி நின்றது. மாந்தரும் வேந்தரும் மாதர் முதல்யாவரும் ஒருங்கேஉள்ளம் பூரித்து உவகைகளில் ஓங்கினர்.

உத்தமத்து ஒருவன் சென்னி மௌலி
தத்தம் உச்சியின்மேல் வைத்தது ஒத்தது.

வித்தக விளக்கமாய் வந்துள்ள இது இங்கு நன்கு உய்த்து உண ரத் தக்கது. ஒரு சக்கரவர்த்தித் திருமகன் மணி முடிசூடினன்; அதனைக் கண்டு தேச மக்கள் யாவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர் என்று இயல்பாக் கூறியிருக்கலாம்; அவ்வாறு கூறவில்லை.

இராமபிரான் தலையில் சூடியுள்ள அரச கிரீடம் தன் தன் தலையில் சூடியிருப்பதாகவே ஒவ்வொருவரும் கருதி உள்ளம் களித்துள்ளனர். அவ்வுண்மை இவ்வுரையால் உணர வந்தது.

தம் கண்ணினும் உயிரினும் அரிய இனிய பொருளாக இராமனை யாவரும் எண்ணி வருகின்றனர்; அவனைக் கருதுந்தோறும் அன்பு சுரந்து பேரின்பம் பெருகி வருகின்றது; அந்தப் புண்ணிய மூர்த்தி இன்று அரச பதவிக்கு வந்ததைக் காணவே அதிசய ஆனந்தம் அடைந்தனர். உயிரின் பரவசமான அந்த அரிய பெரிய இன்ப நிலையைக் கவி இங்ஙனம் சுவையா விளக்கியருளினர்.

இராமன் சக்கரவர்த்தியாய் வந்தது எல்லாரும் சக்கரவர்த்திகளாய் நின்று நிலவச் செய்தது. அவனது தலைமையில் வாழ நேர்ந்தது பரமபத வாழ்வாகவே சூழ நேர்ந்தது. ஒருவர் இருவர் இவ்வாறு கருதவில்லை; உலகிலுள்ள சீவகோடிகள் யாவுமே ஆவலோடு கருதி ஆனந்த பரவசங்களை அடைந்துள்ளன.

இராமன் முடிசூட இசைந்தான் என்று முன்பு அறிந்த போது மாந்தர் யாவரும் மகிழ்ச்சி மீதூர்ந்து நின்றனர்; யாண்டும் புகழ்ச்சி மொழிகள் பொங்கி உணர்ச்சிகள் ஓங்கி வந்தன.

பாவமும் அருந்துயரும் வேர் பறியும் என்பார்;
பூவலயம் இன்றுதனி அன்று; பொது என்பார்;
தேவர்பகை யுள்ளன இவ்வள்ளல் தெறும் என்பார்;
ஏவல்செயும் மன்னர்தவம் யாவதுகொல் என்பார்;
(அயோத்தி, கைகேசி சூழ், 98)

அரசன் ஆக இராமன் அமைந்தான் என்று தெரிந்தபொழுது உலக மாந்தர் உவகை மிகுந்து இவ்வாறு உரையாடியுள்ளனர். உரைகளில் மருவியுள்ள பொருள்களைக் கருதியுணர வேண்டும்.

இராமன் தனித் தலைமைச் சக்கரவர்த்தியாய் அமர்ந்திருந்தாலும் எல்லாரும் மானம் மரியாதைகளோடு தனித் தனியே இனித்த போகங்களை எவ்வழியும் செவ்வையாய் அனுபவிக்க

லாம் ஆதலால் இவ்வாறு மக்கள் யாவரும் யாண்டும் ஒக்க நீண்டு ஒருதொகையா மிக்க மகிழ்ச்சிகளை அடைய நேர்ந்தனர்.

பூவலயம் இன்று போது என்று இராமனது ஆட்சியை உலகம் அன்று மாட்சியாக் கருதியுள்ளது. போது உடைமை என இந்நாள் ஈண்டுமூண்டுநின்று கூத்தாடும் பேயாட்டம்யாண்டும் நோயாட்டமாய் நீண்டுள்ளது. காலவேற்றுமைகள் எவ்வழியும் வெவ்விய நிலையில் சால வித்தைகளாய்க் கலித்து வருகின்றன.

மனித வாழ்வின் நிலைமைகளையும், இனிய தலைமைகளையும், இயற்கை அமைதிகளையும், நெறிநியமங்களையும், நீதிவரம்புகளையும் கருதியுணர்பவர் எவரும் அரசநீதிகளின் முறைகளை உரிமையாத் தெளிந்து கொள்வர். சீவர்களுக்கு இதம்செய்யும் தெய்விக நிலையில் அவர் தேசு மிகுந்து சிறந்து நிற்கின்றார்.

உத்தமத்து ஒருவன் என இராமனை இங்கே குறித்தது, இக்கோமகனது சீலம் செம்மை சீர்மை நீர்மை முதலிய மேன்மைகள் யாவும் தெரிய. உலகம் நலமாய் வாழவே இக் குலமகன் தலைமை தாங்கியுள்ளான். நிலமும், நிலத்துவாழ் உயிர்களும் யாண்டும் இவனால் உயர்ந்து உவகையடைந்து ஓங்கியுள்ளன.

இராமராச்சியம் என்பது உலகப் பழமொழியாய் ஒளி வீசி வந்துள்ளது. அரியபல பொருள்கள் இதில் மருவியுள்ளன. தரும நீதிகள் தழுவி மனித சமுதாயம் எவ்வழியும் புனிதமாய் இனிது வாழ்ந்து வரவே வேந்தர் பெருமானாய் இவன் நேர்ந்து நிற்கின்றான். தேவலோகத்தில் தேவர்கள் இன்பமாய் வாழ்தல் போல் சீவகோடிகள் இவனது இராச்சியத்தில் யாண்டும் சுகசீவிகளாய் வாழ்ந்தனர். அவ் வாழ்வு வளமையா வந்துளது.

The kingdom of God is the only absolute monarchy that is free from despotism. [C. Simmons]

"கொடுங்கோன்மை யாதும் இல்லாத இனிய தனி ஏகாதிபத்தியமே கடவுள் அரசாம்" என்னும் இது ஈங்கு ஊன்றி உணர வுரியது. இனிய ஆட்சி தனியே காட்சிக்கு வந்துள்ளது.

கொடுமை யாதும் இன்றி எவ்வழியும் செம்மை ஓங்கி எவ்வுயிர்க்கும் நன்மை சுரந்து வருவதே திவ்விய ஆட்சியாம். அந்தக் கடவுள் இராச்சியமே இராம இராச்சியமாய் இங்கே

மேவியுள்ளது. அந்த உண்மையை உயிரினங்களின் உவகைகள் உணர்த்தியுள்ளன. இராமன் சென்னியில் சூடிய பொன்மகுடம் தத்தம் உச்சிமேல் வைத்தது போலவே மூவுலகத்தவரும் சித்தம் களித்துள்ளமையால் அந்த உத்தமன் பால் அவர் கொண்டுள்ள உரிமையும் உறுதியும் தெளிவாய் வெளியே தெரிய வந்தன.

அவனைக் கண்டவரும் கருதினவரும் இனியராகவே தனி மகிமை தோய்ந்துள்ளனர். அவனது ஆட்சியில் மாந்தர் யாவரும் வேந்தராகவே விளங்கி யாண்டும் மாட்சியாய் வாழ்ந்தனர்.

"எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ!"
(நகரப்படலம், 74)

கோசலா தேசத்து மக்கள் நிலைமையை இது தலைமையா வரைந்து காட்டியுள்ளது. காட்சியில் பொதிந்துள்ள மாட்சிகள் கருத்தூன்றி ஓர்ந்து சிந்திக்கத் தக்கன. அரசும் குடியும் ஆட்சியும் மாட்சியும் வாழ்வும் வளமும் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஈண்டு நுட்பமா உணர்ந்து கொள்ளுகிறோம்.

இன்னவாறு எல்லாரும் மேன்மையா வாழ வழி கோலி எவ்வழியும் செவ்விய நீதியாய்ச் செங்கோல் செலுத்தி வந்தமை யால் இராமபிரானைத் தங்கள் உயிர் என உயர்வாக் கருதி உலக மக்கள் யாண்டும் உழுவலன்போடு போற்றி வர நேர்ந்தனர்.

அயோத்தி நகரின் அரச மாளிகையுள்ளே அரியணையில் அப் பெருமான் அமர்ந்திருந்தாலும் ஒவ்வொருவருடைய உள்ள மும் அவனுக்கு உரிய சிங்காதனமாய் இனிது மருவியிருந்தது. அதனால் அந்த முடி மன்னனும் குடி சனங்களும் எந்த வகை யிலும் நெடிய பேரின்ப நிலைகளில் நெடிது நிலவி நின்றனர்.

Happy the kings whose thrones are founded on their people's hearts. [Ford]

"மக்கள் உள்ளங்களைத் தங்கள் அரியணைகளாக் கொண்டுள்ள அரசர் மிக்க இன்பங்களை மேவியுள்ளனர்" என ஜாண் போர்டு என்னும் ஆங்கில அறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

குடிகள் மகிழ்ந்துவரும் அளவே கோன் உயர்ந்து உவந்து வருகிறான். குடி தழைத்துவரக் கோல் செலுத்திவரின் முடி

நிலைத்து வரும். எந்த வேந்தன் மாந்தர் உள்ளங்களை மகிழச் செய்து வருகிறானோ அந்த அரசன் வேந்தர் வேந்தனாய் என்றும் விளங்கி வருகிறான். சீவர்கள் இன்பூர்ந்துவர அன்பூர்ந்து நன்கு ஆட்சி புரிந்து வருபவனிடம் தேவ தேவனுடைய மாட்சி நிலை மருவி வருகிறது. இறைமை இனிய முறைமையால் மகிமையுறும்.

மன்னுயிர்க்கு இதம்புரிந்து மாநிலம் புரப்பதே மன்னவர் கடமை எனச் சூரிய குலத்து அரசர்கள் ஆதியிலிருந்தே நீதி நெறியோடு காரியம் புரிந்து வந்துள்ளனர். அந்த வழிமுறையில் இராமபிரான் விழுமிய பேரொளியாய் விளங்கி நின்றுள்ளான்.

இக் கோமகன் கோமுடி சூடியபொழுது பூமிதேவியும் இலட்சுமிதேவியும் புதிய எழில்களோடு பொலிந்து மகிழ்ந்தனர். மகிபதி என்று அரசனுக்கு ஒரு பெயர். அழகிய கணவனை உழுவலன்போடு தழுவி மகிழும் மணமகள்போல் இராமனை மருவி மகிதலம் மகிழ்ந்துள்ளது. அவ்வுண்மை உரையால் உணரவந்தது.

பூமி என்னும் நங்கை தன்
கொங்கை ஆரத் தழுவினாள்.

இந்த ஐயன் செய்ய கோல் ஏந்தியபோது வையம் விழைந்து உவந்துள்ள நிலையை இது நயமா வரைந்து காட்டியுளது.

உலகினுக்கு அரசன் உயிர் என நிலவியுள்ளான். அந்த உண்மையும் உரிமையும் இந்த உருவக உரையால் உணர வந்தன. தருமமும் நீதியும் செவ்வையாய் வளர்ந்து இராமனது ஆட்சியில் யாண்டும் மாட்சிகள் விரிந்து வரும்என்று தெளிந்து கொண்டமையால் பூமாதேவி நேரே பேருவகையில் பெருகி நின்றாள்.

இனிய குணநலங்களாலும் அரிய செயல் முறைகளாலும் இராமன் பெரிய மகிமைகளில் ஓங்கியுள்ளான்; அவனது அரசு நெறி உயிரினங்களுக்கு உயர்பேரின்பங்களை அருளி வரும்என்று அறிய நேர்ந்தனர்; நேரவே யாவரும் பேரானந்தம் உடையராய் எவ்வழியும் திவ்விய நிலையில் விளங்கி நின்றனர்.

தேநாஸ லோக; பிதுர்மாந் விநேத்ரா
தேநைவ சோகாபநுதேந புத்ரா. (ரகுவம்சம். 14-23)

“அறிவு நலங்களை அருளுவதில் தந்தை ஆகவும், சோகங்களை நீக்கிச் சுகங்களைச் செய்வதில் புத்திரன் போலவும் நின்று மக்க

ளுக்கு இராமன் ஆதரவு புரிந்து வந்தமையால் எல்லாரும் யாண்டும் உள்ளம் உவந்து இருந்தனர்" எனக் காளிதாசர் இவ்வாறு குறித்திருக்கிருர். பரிபாலன முறை பரம நீர்மையா நிகழ்ந்தது.

தாம் பெற்ற பிள்ளைகளைத் தாய் தந்தையர் பேணியதுபோல் உலக மாந்தரை இராமன் பாதுகாத்து வந்துள்ளான்; ஆகவே சீவகோடிகள் யாவும் இக் கோமகனைத் தேவ தேவனுக எண்ணி உழுவலன்போடு தொழுது வந்துள்ளன. இனிய ஆட்சியால் அரியமாட்சிகள்பெருகிப்பெரிய இன்பங்கள்மருவியிருக்கின்றன.

The king will best govern his realm who reigneth over his people as a father doth over his children. [Agesilaus]

"தன் பிள்ளைகளைத் தந்தை பேணுவதுபோல் தனது குடிசனங்களை இனிது பேணி வருகிற அரசன் உலகைக் காணியா நன்கு ஆளுவான்" என்னும் இது இங்கே அறிய வுரியது. அரசாளும் முறையில் இரவி குலத்து அரசர் வரிசையாய் உயர்ந்து வந்துள்ளனர். அவர் எவரினும் இக் கோ மகன் உயர் ஒளியாய் நிலவி நிற்கின்ருன். இராமன் ஆண்டது சேமம் நீண்டது.

அன்பும் நீதியும் அமைந்த ஆட்சியில் இன்பம் பெருகி வருதலால் எல்லா மாந்தரும் அவ் வேந்தனை உவந்து போற்றி வருகின்ருர். இனிய நீர்மைகளால் அரிய சீர்மைகள் பெருகி விளைகின்றன. உயிர்கள் உவகையுற உயர் மகிமைகளுறுகின்றன.

வையம் இன்புற
ஐயன் ஆண்டனன்.

இராமனது ஆட்சிமுறையை வியந்து வானவரும் இவ்வாறு புகழ்ந்து மகிழ்ந்துள்ளனர். தெய்வங்களும் தரும நீதிகளும் உவகை கூர்ந்து வர இராமபிரான் கோமுறை பேணி வந்தான்.

தான் சக்கரவர்த்தி யான பின் தம்பிமார் மூவரையும் இளவரசுகள் ஆக்கினுன். திசைகள்தோறும் இசைகள் பரவி வரக் காரியங்களைச் சீரோடு அவர் கவனித்து வர நேர்ந்தனர்.

தனது ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் தம்பி பரதனிடமே இந் நம்பி உரிமையோடு உவந்து அருளிப் பெருமை புரிந்தான்.

பரதனைத் தனது செங்கோல்
நடாவுறப் பணித்து

அரசுமுடி சூடிய இராமன் ஆளும் உரிமையைப் பரதனிடமே அருளியிருக்கிறான். உறவுரிமைகளும் உழுவலன்புகளும் விழுமிய பண்புகளாய் ஒளிவீசி வியனுற விளங்கி நிற்கின்றன.

அரிய கருமங்களும் உரிய தருமங்களும் பெரிய மருமங்களை மருவி வந்துள்ளன. தலைமையாயிருந்து அரசாளும் நிலைமையைத் தம்பிக்குத் தந்துள்ளது சிந்திக்க வந்தது. கைகேசித் தாய் உள்ளம் உவந்துவர அவளுடைய பிள்ளைக்கு இவ் வள்ளல் இவ்வாறு அருளியுள்ளான். விழுமிய வினையங்கள் கெழுதகைமைதோய்ந்து மிளிர்கின்றன. அரிய குணநலங்கள் தெளிவா அறிய நின்றன.

தன் கண்ணைப்போல் தம்பியை இந்த அண்ணல் எண்ணியுள்ளான்; அவ்வுண்மை தனது ஆட்சியை அவனிடம் தந்த காட்சியால் தெரிய வந்தது. எல்லாரும் இன்புற்றுவர இந் நல்லான் அன்புற்று அருள்புரிந்து ஆதரவு செய்து வருகின்றான்.

தன் பால் வைத்த பணியை அன்பால் ஏற்றுப் பரதன் எவ்வழியும் செவ்வையாய் ஆற்றி வந்தான். தன்னை அரசனாக்கி வைத்தாலும் அத்தம்பி இந் நம்பியின் அடிமையாகவே கருதி யாண்டும் கருமங்களை உரிமையோடு புரிந்து உலகவூழியனாய் ஒளிசெய்து நின்றான். இனிய பண்புகள் கனிவுகள் தந்தன.

சூரியன் ஒளியில் காரியங்கள் யாவும் எளிதே நடத்தல்போல் சீரிய கூரிய இம் மன்னன் எதிரே அரசியல் முறைகள் யாவும் விழுமிய நெறியில் எவ்வழியும் தெளிவாய் நடந்து வந்தன.

ஆட்சிகளை உல்லாச விநோதமாக் காட்சி புரிந்து இனிய சுகபோகியாய் இராமன் தனியே இருந்தான். முடி மன்னன் ஆன பின் படிபுரந்து வந்துள்ள பான்மை மேன்மையாய்த் தெரிய வந்தது. தனிமையில் இனிமைகள் தனியே விளைந்தன.

கரைதெரி விலாத போகக்
களிப்பினுள் இருந்தான்.

அரச நீதிகளை எவ்வழியும் செவ்வையா நடத்தி வருமாறு தம்பியரை நியமித்துவிட்டு இந் நம்பி இன்ப நிலையில் அமைதியாயிருந்துள்ளான். வனவாச காலம் முதல் மன அமைதியிலேயே பழகி வந்துள்ளமையால் மன்னர் பெருமானாய் மருவிய பின்னரும் மாதவமான அன்ன நீர்மையிலேயே மன்னி நின்றான்.

ஆகி அனைய தனது தேவியோடு இக்கோமகன் மேவி மகிழ்ந்துள்ளான். நீண்ட காலமாப் பிரிவுத்துயரால் மறுகியிருந்த அந்தப் பேரழகியோடு இந்த அதிசய அழகன் அன்பு கனிந்த இன்ப போகங்களை நன்கு நுகர்ந்திருக்கிறான். கரை தெரியாத போகக் களிப்பு என்றதனால் அரிய பெரிய இனிய இன்பக் கடலுள் இந்த இருவரும் மூழ்கித் திளைத்துள்ளமையை யூகித்து உணர்ந்து கொள்ளுகிறோம். சுக வாழ்வின் தகவு தெரிய வந்தது.

ஸ: ரேமே விதேஹாதிபதேர் துஹித்ரா. (ரகுவம்சம், 14-24)

“விதேக தேசத்து வேந்தன் மகள் ஆகிய சீதையோடு அயோத்தி வேந்தனான இராமன் ஆனந்தபோகங்களை அனுபவித்தான்” என வடமொழி நூல்களும் இங்ஙனம் குறித்துள்ளன. சரித நிலைகள் வளமையான வாழ்வுகளை விழுமிய நெறிகளில் விளக்கி இராச போகங்களை நன்கு துலக்கி யிருக்கின்றன.

முடிசூட்டுவிழா முடிந்த பின்னர் உலக மாந்தர் எல்லாரும் அவரவர் நிலையிலிருந்தே இராமனைத்தொழுது துதித்து உழுவலன்புடன் போயினர். உரிமையான அரசர்களுக்கும் கிழமையாளர்க்கும் இராமன் வரிசைகள் பல வரன்முறையே வழங்கினான்.

கொலு விருந்த நிலை.

நாளும் அரசிருக்கையில் அமர்ந்து இக்கோமகன் காட்சி தந்து மாட்சி புரிந்து வந்த முறைகள் அதிசய மகிமைகளாய் விரிந்து விளங்கின. செவ்விய சீர்மைகளும் திவ்விய நீர்மைகளும் எவ்வழியும் எழிலொளிகள் வீசி இலங்கி நின்றன. காண்பவர் எவரும் கழிபேருவகைகளில் ஓங்கி வர நேம நியமங்களோடு சேம சிம்மாசனத்தில் இராமபிரான் எழுந்தருளி யிருந்தான்.

பூமகட்கு அணியது என்னப் பொலிபசும் பூரி சேர்த்தி
மாமணித் தூணில் செய்த மண்டபம் அதனின் நாப்பண்
கோமணிச் சிவிகைமீதே கொண்டலும் மின்னும் போலத்
தாமரைக் கிழத்தியோடு தயரத ராமன் சார்ந்தான். [1

விரிகடல் நடுவுள் பூத்த மின்என ஆரம் வீங்க
எரிகதிர்க் கடவுள் தன்னை இனமணி மகுடம் ஏய்ப்பக்
கருமுகிற்கு அரசு செந்தா மரைமலர்க் காடு பூத்துஓர்
அரியணைப் பொலிந்ததுஎன்ன இருந்தனன் அயோத்திவேந்தன்.

மரகத சயிலமீது வானிலாப் பாய்வது என்ன
இருகுழை இடறும் வேற்கண் இளமுலை இளநலார்தம்
கரகமலங்கள் பூத்த கற்றையங் கவரி தெற்ற
உரகரும் நரரும வானத் தும்பரும் பரவி ஏத்த. [3

உலகம் ஈரேழும் தன்ன ஒளிநிழல் பரப்ப வானில்
திலகவாணுதல் வெண்திங்கள் சிந்தைநொந்து எளிதில்தேய
கலகவாள் நிருதர் கோனைக் கட்டழித் திட்ட கீர்த்தி
இலகிமேல் நிவர்ந்ததுஎன்ன எழுதனிக் குடைநின்றேய. [4

மங்கல கீதம் பாட மறையவர் ஆசி கூறச்
சங்கினம் குமுறப் பாண்டில் தண்ணுமை துவைப்பத் தாவில்
பொங்குபல் வியங்கள்ஆர்ப்பப் பொருகயல் கருங்கட்செவ்வாய்ப்
பங்கய முகத்தி னார்கள் மயில்நடம் பயில மாதோ! [5

திரைகடற் கதிரும் நாணச் செழுமணி மகுடகோடி
கரைதெரி விலாத சோதிக் கதிரொளி பரப்பநாளும்
வரைபொரு மாடவாயில் நெருக்குற வந்து மன்னர்
பரசியே வணங்குந் தோறும் பதயுகம் சேப்பமன்னோ. [6

மந்திரக் கிழவர் சுற்ற மறையவர் வழுத்தி ஏத்தத்
தந்திரத் தலைவர் போற்றத் தம்பியர் மருங்கு சூழச்
சிந்துரப் பவளச் செவ்வாய்த் தெரிவையர் பலாண்டுகூற
இந்திரற்கு உவமை ஏய்ப்ப எம்பிரான் இருந்த காலை.' [7

ஏனையர் பிறரும் சுற்ற எழுபது வெள்ளத்திற்ற
வானரரோடும வெய்யோன் மகன்வந்து வணங்கிச் சூழத்
தேனிமிர் அலங்கல் பைந்தார் வீடணக் குரிசில் செய்ய
மானவாள் அரக்கரோடு வந்தடி வணங்கிச் சூழ்ந்தான். [8

வெற்றிவெஞ் சேனையோடும் வெறிப்பொலிப் புலியின்வெவ்வால்
சுற்றுறத் தொடுத்துவீக்கும் அரையினன் சுழல்செங் கண்ணன்
கற்றிரள் வயிரத் திண்டோட் கடுந்திறல் மடங்கல் அன்னான்
ஏற்றுநீர்க் கங்கைநாவாய்க்கு இறைகுகன் தொழுது சூழ்ந்தான்.

வள்ளலும் அவர்கள் தம்மேல் வரம்பின்றி வளர்ந்த காதல்
உள்ளுறப் பிணித்த செய்கை ஒளிமுகக் கமலம் காட்டி
அள்ளுறத் தழுவினான்போல் அகமகிழ்ந்து இனிதின் நோக்கி
எள்ளலிலாத மொய்ம்பீர்! ஈண்டினி இருத்திர் என்றான். (10)

நன்னெறி அறிவு சான்றோர் நான்மறைக் கிழவர் மற்றைச்
சொன்னெறி அறிவு நீரார் தோமறு புலமைச் செல்வர்
பன்னெறி தோறும் தோன்றும் பருணிதர் பண்பின் கேளார்
மன்னவர்க்கு அரசன் பாங்கர் மரபினால் சுற்ற மன்னோ. (11)

தேம்புனல் படப்பை மூதூர்த் திருநகர் அயோத்தி சேர்ந்த
பாம்பணை அமலன் தன்னைப் பழிச்சொடும் வணக்கம் பேணி
வாம்புனல் பரவை ஞாலத்து அரசரும் மற்றுளோரும்
ஏம்பலுற் றிருந்தார் நொய்தின் இருமதி கழிந்த தன்றே. (12)

சக்கரவர்த்தித் திருமகன் மணிமகுடம் புனைந்த பின் மறுநாள் முதல் அதிசய அழகுடைய மணி மண்டபத்தினிடையே விதிமுறையே அமைந்த சிம்மாசனத்தில் சீதா தேவியோடு அமர்ந்து உரிமையான அரசர் முதல் யாவருக்கும் காட்சி தந்து வந்துள்ள மாட்சிமைகளை இங்கே நாம் கண்டு மகிழ்கின்றோம்.

கொலுமண்டபத்தில் பட்டத்து அரசியுடன் இப்பெருமான் அரியணையில் அமர்ந்தபோது அமரரும் வியந்து மகிழ்ந்தனர். வெண்கொற்றக் குடை மேலே எழிலோடு ஒளி வீசி நிலவ, அழகிய தருண மங்கையர் இருபுறங்களிலும் நின்று சாமரைகள் வீச, மாதவர் மாமறைகள் ஓத, சங்கீதங்களில் தலைமையான மாதர்கள் மங்கல கீதங்கள் பாட, எங்கணும் இனிய அலங்காரங்கள் பொங்கி மிளிர, தேவ மாதர் என மேவிய எழிலுடைய காவிய மகளிர் ஓவிய உருவங்களா நடனம் ஆட எவ்வழியும் சீவிய இன்பங்கள் தேவியல்களாய்ச் சிறந்து திகழ்ந்தன.

இராச கம்பீரங்களோடு தெய்வீக மேன்மைகளும் சேர்ந்து விளங்கின. தனது அருமைத் தேவியுடன் அரியணையில் அமர்ந்து இப்பெருமான் யாவருக்கும் இனிய செவ்வியனாய்க் காட்சி தந்தது அரிய பெரிய மாட்சிகளோடு அதிசய ஆனந்தங்களை அருளிநின்றது. அன்புகனிந்த இன்பவுருவங்கள் எழில்புரிந்தன.

தாமரைக் கிழத்தியோடு
தயரத ராமன் சார்ந்தான்

உரிய மனைவியுடன் மருவியிருந்து உரிமையாளர்க்குத் திருமுகச் செவ்வியை இவ்வாறு அருளியிருக்கிறான். இந்தச் சுந்தரன் புரிந்த இராச கோலங்கள் இந்திர திருவினும் எழில் கூர்ந்திருந்தன. மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்து காண எண்ணரிய மகிமைகளோடு மரகத வண்ணன் மருவியிருந்துள்ளான். தேவியுடன் மேவியிருந்தது திவ்விய தேசு வீசிநின்றது.

கொண்டலும் மின்னும் என்றது இக்கோமகனையும் அக்கோமகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள. பசிய கோலத் திரு

மேனியன் ஆன இராமன் அருகே செந்நிறத் திருமேனியள் ஆன சீதை சேர்ந்திருந்த சீர்மை இவ்வாறு நீர்மையாக் காணவந்தது. நீர் நிறைந்த கார்மேகம் மின்னலோடு கூடிய போதுதான் நன்னயமா உவந்து முழங்கி உலகம் நலமுற மழை பொழிந் தருளுகிறது. சானகியோடு சேர்ந்த பின்பே வையம் உய்ய இராமன் செய்யகோல் தாங்கி இங்கே சீர் ஓங்கியுள்ளான்.

உருவ அழகிலும் பருவ எழிலிலும் கொண்டலும் மின்னும் எனக் குலாவியுள்ளவர் மண்டலம் மகிழ மணிமுடி சூடிக் கண்டவர் எவர்க்கும் காட்சியின்பங்களை மாட்சியா அருளியிருக் கின்றனர். வடிவங்களை வரைந்து காட்டுவதில் குண நீர்மைகள் மணமாய்ச் சுரந்து வந்துள்ளன. குறிப்புகளும் சிறப்புகளும் ஏகமாச்சேர்ந்து நேர்ந்த துணைகளின்நிலைகளை துலக்கிநிற்கின்றன.

பாகம்தரும் நுதலாளொடு பவளம்தரும் இதழான்
மேகம்தனி வருகின்றது மின்னோடுஎன நடவா.

(அயோத்தி, கங்கைப்படலம், 4)

கானகம் போகும்போது சானகியோடு இராமன் நடந்து போயுள்ளதை இது நயமாக் காட்டியுள்ளது. அன்று அவ்வாறு மேகமும் மின்னும் போல் போனவர் மீண்டு வந்து ஈண்டு இவ் வாறு ஏகமாய் அமர்ந்திருக்கிறார். பல ஆயிரம் பாடலுக்கு முன்பு குறித்த அந்த உவமைகளை ஞாபகத்தில் வைத்திருந்து கோண் டலும், மின்னும் என இங்கே உரைத்திருப்பது உவகைகளை விளைத்து நிற்கிறது. தமது காவிய நாயகனையும், மேவிய நாயகி யையும் நமது கவிநாயகன் சீவிய ஓவியங்களாக் காட்டி வருவது கலையின் சுவைகளோடு நிலையான மகிழ்வுகளை ஊட்டிவருகின்றது.

காட்டில் அன்று நடந்து போனவர் இன்று அரியணையில் அமர்ந்து நாட்டு மக்களுக்கு நல்ல காட்சிகளைத் தந்து எல்லாரும் உள்ளம் மகிழச் செய்கின்றார். இந்த அரசர் பெருமானும் அரசர் பெருமாட்டியும் எவ்வளவு அல்லல்களை அடைந்து எத்தனை இடர்களைக் கடந்து, எத்தனை வெற்றிகளைப் பெற்று வந்துள்ளனர்! என்பது ஈண்டு நன்கு உய்த்து உணர வந்தது.

தாமரைக் கிழத்தி என்று சீதையை இங்கே குறித்திருக்கி றார். இலட்சுமிதேவியே இந்த உருவமும் நாமமும் மருவி ஈங்கு வந்து இவ்வாறு பாங்கு புரிந்துள்ள பான்மை தெரிய வந்தது.

தேவர் வேண்டுகோளுக்கு இரங்கித் திருமால் தசரத வேந்தன் மகனாய் அவதரிக்கு முன்னமே திருமகள் சனக மன்னன் மகளாய் ஈங்கு வந்து பாங்கோடு தோன்றியுள்ளாள். அந்த உண்மையை நுண்மையா உணர்ந்து கொள்ளும்படி இங்ஙனம் குறித்தருளினர். குறிப்புமொழி சிறப்புகளைத்தெளித்தருளியது.

அவதார மருமங்களும் கருமதருமங்களும் தெய்வ இரகசியங்களாய்ச் செறிந்து நிற்கின்றன. அழகிய செந்தாமரை மலரில் கிழமையாய் மருவியிருந்த விழுமிய செந்திரு மிதிலை அரசர் குடியில் தோன்றி அயோத்தி அரசர் குடியில் புகுந்து அதிசய சோதியாய் விளங்கியிருக்கிறுள். அந்த விளக்கம் மின் என்னும் குறிப்பால் துலங்கி நின்றது. குல விளக்கம் நில விளக்காயுளது.

பிறந்த இடமும் புகுந்த குடியும் பெருமகிமைபெற வந்துள்ளாள். அந்த வரவின் இடையே யாண்டும் கொடுமையாய் நீண்டு பரந்து நெடிது ஓங்கியிருந்த நிருதர் குலம் அடியோடு மாண்டு மடிய நேர்ந்துள்ளது. ஒளி வர இருள் விலகியது.

செந்திரு வந்துள்ள வரவும், சேர்ந்து விளைந்துள்ள விளைவுகளும் ஓர்ந்து சிந்தனை செய்ய வுரியன நேர்ந்திருக்கின்ற நிலைமை தலைமைகளைக் கூர்ந்து உணர்ந்து கொள்ளுமாறு சார்ந்த மொழிகள் சாலவும் ஒளி வீசி ஞாலம் தெளிய நிலவி யுள்ளன.

உரிய திருவோடு மருவி அரிய பரமபதநாதனைப் யாரும் அறியாதபடி அதிசய நிலைகளில் இருந்த அந்த ஆதி முதல்வனைத் தனது புதல்வனு இங்கே எல்லாரும் எளிதே அறியத் தந்த பெரியவன் ஆகலால் தயரதராமன் என அவ்வுயர் குல வேந்தனை நயமாத் துலக்கியருளினர். அவன்கருதி வந்ததும்தெரியநின்றது.

"கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தரணி."

(பால, அவதார 28)

தேவர்களை நோக்கித் திருமால் இவ்வாறு கூறியுள்ளமையால் இந்த அரசர்பிரானுடைய மகிமை மாண்புகளை நயமா உணர்ந்துகொள்ளுகிறேம். முன்பு குறித்தபடியே தோன்றிவந்து மூண்டு நின்ற அரிய காரியங்களை எல்லாம் முடித்துக் காரிய வெற்றி அடைந்த பின்பு அரசுமுடி சூடி ஆட்சிபுரிய நேர்ந்தான்.

இந்திரற்கு உவமை ஏய்ப்ப
எம்பிரான் இருந்த காலை.

இராமபிரான் பூவுலக வேந்தனாய் முடி புனைந்திருந்தாலும் தேவராசனும் வியந்து விழைந்து உவந்து புகழும்படி விழுமிய நிலையில் ஒளிமிகுந்துள்ளமையை இது தெளிவாஉணர்த்தியுள்ளது.

இன்னவாறு நாளும் கொலு வீற்றிருந்து எல்லாருக்கும் உல்லாச விநோதமா நல்ல காட்சிகளை அருளி வந்தான். தினமும் சிறந்த விருந்துகள் அருந்தி, இனிய இசைகளை நுகர்ந்து, நடனம் முதலிய உயர்ந்த காட்சிகளைக் கண்டு யாவரும் தேவருலகத்தவர் போல் சிந்தை களித்து வந்தார். உள்ளக்களிப்புகள் ஓங்கிவந்தன.

ஏம்பல் உற்று இருந்தார் இருமதி.

இரண்டு மாத காலங்களாக இவ்வாறு உல்லாச போகங்களில் எல்லாரும் திளைத்து வந்துள்ளனர். பின்பு அரசர்பிரான் வழி அனுப்ப நேர்ந்தான். உரிமையாளர் யாவர்க்கும் தகுதி நோக்கித் தக்க வெகுமதிகளை வழங்கினான் ஏம்பல்=இன்பம்.

அந்தணர்க்கு அருளியது.

மறையவர் தங்கட்கு எல்லாம் மணியொடு முத்தும் பொன்னும்
நிறைவளம் பெருகு பூவும் சுரபியும் நிரைத்து மேன்மேல்
குறையிதென் றிரந்தோர்க் கெல்லாம் குறைவறக் கொடுத்துப்பின்னர்
அறைகழல் அரசர் தம்மை வருகென அருள வந்தார்.

அரசர்க்கு அளித்தது

ஐயனும் அவர்கள் தம்மை அகமகிழ்ந்து அருளின் நோக்கி
வையகம் சிவிகை தொங்கல் மாமணி மகுடம் பொற்பூண்
கொய்யுளைப் புரவி திண்டோர் குஞ்சரம் ஆடை இன்ன
மெய்யுறக் கொடுத்த பின்னர்க் கொடுத்தனன் விடையும் மன்னே.

வேதங்களை நன்கு ஓதியுணர்ந்த வேதியர்களுக்கு வேண்டிய பொருள்களை வேண்டியவாறு வாரிக் கொடுத்தான். சிறந்த கறவைப் பசுக்கள், உயர்ந்த ஆடைகள், நிறைந்த செந்நெல்கள், பொன் மணி முதலிய அரிய விலையுடைய பெரிய பொருள்கள் யாவும் உரிமையோடு உவந்து தந்தான். இம்மானவீரன் மறையவர்கட்குத் தானமாத் தந்தன வானமாரிபோல் வரம்பின்றி நின்றன. வந்திருந்த அந்தணர்கள் யாவரும் சிந்தை மகிழ்ந்து

துதித்து வேதமந்திரங்களை முறைமுறையே ஓதி வாழ்த்தி உவந்து போயினர். இன்ப நிலைகளில் அன்புகள் பெருகி நின்றன.

வேதியர் போனபின் வேந்தர்களை அழைத்தான்.

முடிமன்னர்கள் யாவரையும் பெரு மகிழ்வோடு நோக்கிப் பேரருள் புரிந்தான். அரிய யானைகள், பெரிய குதிரைகள், சிறந்த இரதங்கள், உயர்ந்த மாணிக்கக் கடகங்கள், இரத்தின கண்டிகைகள், முத்து மாலைகள், வீரக் கழல்கள், வெற்றி விருதுகள் முதலிய அற்புதப் பொருள்களை அவரவர்களுடைய மகிமை மாண்பு தகவு தன்மைகளுக்கு ஏற்ப மிகவும் வாரி வழங்கினன்.

இந்த வள்ளல் இனிது முகமலர்ந்து புனித மொழிகள் புகன்று அரிய அன்புரிமையோடு அள்ளி அளிக்கும் அருமைப் பண்புகளைக் கருதியுணரும்தோறும் அரசர்களுடைய உள்ளங்களில் பேரின்ப வெள்ளங்கள் நேரே பொங்கி எழுந்தன.

மணிமகுட மன்னர்கள் அணி அணியாய் அமர்ந்து தங்கள் சக்கரவர்த்தியைப் பணிவோடு தொழுது நின்ற காட்சி அரச குலங்களின் விழுமிய மாட்சியாய் விளங்கி எழில் வீசி நின்றது.

ஐம்பத்தாறு தேசங்களிலிருந்து வந்திருந்த அரசர்களுக்கு வரிசையோடு மரியாதைகள் செய்து அனுப்பிய பின் உரிமைத் துணைவர்களுக்கு அருமையான பெரிய சன்மானங்கள் புரிந்தான்.

சுக்கிரீவன் அங்கதன் அனுமான் வீடணன் குகன் முதலிய அன்புரிமையாளர்க்கு அதிசய வெகுமதிகளை அருளினன். ஆர்வம் கனிந்து தந்த அந்தப் பரிசில்கள் சீர்மை சுரந்து சிறப்புகள் நிறைந்திருந்தன. நம்பி அருளியன இன்ப நிலையினவாயின.

சம்பரன் தன்னை வென்று தயரதன் நின்ற காலத்து
உம்பர்தம் பெருமான் ஈந்த ஒளிமணிக் கடகத்தோடும்
கொம்புடை மலையும் தேரும் குரகதக் குழுவும் தூசும்
அம்பரத்து அனந்தர் நீத்தான் அலரிகாதலனுக்கு ஈந்தான்.

அங்கதம் இலாத கொற்றத்து அண்ணலும் அகிலம்எல்லாம்
அங்கதன் என்னும் நாமம் அழகுறத் திருத்து மாபோல்
அங்கதன் கன்னல் தோளாற்கு அயன்கொடுத்ததனை ஈந்தான்
அங்கதன் பெருமை மண்மேல் ஆரறிந்து அறைய கிற்பார்? (2)

பின்னரும் அவனுக்கு ஐயன் பெருவிலை ஆரத்தோடும்
அன்னநுண் தூசும் மாவும் மதமலைக்கு அரசும் ஈயா
உன்னைநீ அன்றி யிந்த உலகினில் ஒப்பி லாதாய்!
மன்னுக கதிரோன் மைந்தன் தன்னொடு மருவி என்ருன். [3

கிட்கிந்தை மன்னனுக்கு இராமன் தந்திருக்கின்ற அரிய பொருள்கள் இங்கே தெரிய வந்துள்ளன. சம்பரன் என்பவன் அசுர வேந்தன். பெரிய போர் வீரன்; அரிய வர பலங்களையுடையவன்; அமரர்களை அடக்கி வந்தான்; அவனைவெல்ல முடியாமல் தேவராசன் தசரதனிடம் வந்து துணைபுரிய வேண்டினன். இம் மன்னன் சென்று அவனை வென்று அமரருலகைக் காத்தருளினன்; தேவர் யாவரும் உவந்தார்; அதுபொழுது இந்திரன் இவனுடைய வலது கையில் ஓர் உயர்ந்த இரத்தின கடகத்தை அணிந்தான். அது தெய்வமணிகளால் செய்யப்பட்டது; திவ்விய எழில் உடையது. தனது தந்தைக்கு இந்திரன் அன்று வெற்றிப் பரிசாகத் தந்த அந்த அரிய கடகத்தை உரிமையோடு எடுத்து இக் கோமகன் சுக்கிரீவன் கையில் அணிந்தான். அது அதிசய வெகுமதியாய் யாவராலும் அங்கே துதிசெய்ய நின்றது. உம்பர் தம் பெருமான் ஈந்த ஒளி மணிக் கடகம் என்றதனல் அதன் அருமையும் பெருமையும் அழகும் அமைதியும் அறியலாகும். அந்த அணியோடு மேலும் பல அரியபொருள்களை நல்கினன். கோம்பு உடை மலை என்றது யானையை. பெரிய மதகரிகளையும் அரிய பரிகளையும் இனிய தேர்களையும் உரிமையாக உதவியருளினன்.

அலரி காதலன் என்றது சுக்கிரீவனது தலைமையும் நிலைமையும் தெரிய. அலரி=சூரியன். அவனது அரிய மகனய்த்தோன்றி இராமனுக்கு உரிய துணைவனைச் சேர்ந்து சிறந்திருக்கிருன். திருமால் இராமனு அவதரிக்க நேர்ந்தபோது சூரியன் வானரங்களின் தலைவனு வந்துள்ளான்; அவ்வுண்மை இங்கே சிந்திக்க வந்தது. கருமத் துணைவர்களாய் வந்துள்ள உரிமையாளர்க்கு இத் தருமவீரன் பெருமை செய்து அருமைப் பொருள்களை ஆதரவா அருளி வருகிருன். உதவும் நிலையில் உவகைகள் ஓங்கின.

அந்த வரிசையில் அங்கதனுக்கு ஓர் உயர்ந்த தோளணியை உவந்து வழங்கினன். அந்த அணி அரிய மகிமையுடையது; இட்சுவாகு மன்னனுக்குப் பிரமதேவன் பிரியமா அருளியது. வெற்றி விருதா வந்த அந்த வாகுவலயத்தை அங்கதன் தோளில்

இக்கொற்றக் குரிசில் அணிந்தபோது யாவரும் ஆனந்தம் அடைந்தனர். பேரின் சீர் அதில் நேரே நிலவி நின்றது.

அங்கதன் என்னும் நாமம்
அழகுறத் திருத்துமாபோல் ஈந்தான்

அந்த வானர வீரனுடைய பேருக்கு இசைந்தபடி இந்த மானவீரன் மாண்பு செய்தருளினன். தோளில் புனைகின்ற அணிக்கு அங்கதம் என்று பெயர். அழகிய அந்த அணியை இந்த அழகன் அவ் வீர இளவலுக்குத் தந்தது அவனது பேரின் சீர்மையை மேன்மையாக்கி நின்றது. அங்கதன் என்னும் பெயரை இயல்பாக அவன் முன்பே பெற்றிருந்தாலும் இந்த அங்கதத்தைப் பெற்ற பின்னரே அந்தப் பேர் பேரெழிலோடு பெருகி விளங்கியது. உற்ற பேர் ஒளிபெற்று வர உயர் பேறு பெற்றான்.

சிறந்த வீரர்கள் அணிய வுரிய வாகுவலயத்தை வாலி மகனுக்கு இக் கோமகன் நாமவுரிமையோடு நேமமா நல்கி யருளினன். தனது அருமைத் தந்தையை இழந்தும் யாதொரு மாறுபாடும் கருதாமல் தன்பால் பேரன்போடு ஒழுகி எவ்வழியும் செவ்வையாய் ஊழியம் புரிந்து வந்துள்ளான் ஆகலால் அவ் வீர மகனிடம் இவ் வெற்றிக் குரிசில் ஆர்வம் மீதூர்ந்து யாண்டும் சீர்மை புரிந்து சிறப்புகள் அருளி நின்றான். அந்நிலைகள் பல வகையிலும் காவியத்தில் சீவிய ஓவியமாய்த் தெரிய வந்துள்ளன.

உன்னைநீ அன்றி இந்த
உலகினில் ஒப்பு இலாதாய்!

இராமபிரான் திருவாயால் அங்கதன் இவ்வாறு புகழப் பெற்றிருக்கிறான். உள்ளம் கனிந்து வந்துள்ள இவ்வள்ளலுரை உள்ளி யுணர வுரியது. மானச நீர்மைகள் மருவி மிளிர்கின்றன.

உலகில் எவரும் நிகரில்லாத தலைமையான நிலைமையன் என்றதனால் அக் குல மகனுடைய பெருந்தன்மையை இக் கோமகன் நினைந்து வியந்து வந்துள்ள நிலை நேரே தெரிய நின்றது.

மன்னுக கதிரோன் மைந்தன்
தன்னொடு மருவி.

அங்கதனுக்கு இப்படிப் புத்திமதிகள் போதித்திருக்கிறான். சிறிய தந்தை பால் உரிமையாய் அன்பு கூர்ந்து இளவரசனாய்

இருந்து இனிது வாழுக என்று உளம் உவந்து வாழ்த்தியுள்ளான். அவ்வுண்மை உரையில் தெரிய வந்தது. எல்லாரும் மன நலம் உடையராய் இனிது வாழவேண்டும் என்று இக்குலமகன் உலகம் நலமுற உணர்த்தி வருகிருன். வாய்மொழிகள் அவ்வுள்ளத்தின் உயர்தகவை வெளியே தெளிவா ஒளிசெய்து காட்டுகிறது. சீவர்கள் நீதியாய் வாழின் அது தேவ வாழ்வாகிறது.

அங்கதனுக்கு அரிய பரிசிலும் பிரிய வுரைகளும் உரிமையா உதவிய பின்பு அனுமானை ஆர்வம் மீதூர்ந்து நோக்கினுன். அந்த மதிமானை இந்த அதிபதி கிழமை கூர்ந்து பார்த்தபோது அனைவரும் உளம் மிக மகிழ்ந்து உறுவதை எதிர் நோக்கி நின்றனர்.

அனுமானுக்கு அளித்த வெகுமதி.

அரிய நவமணிகளையும் பெரிய உயர் பொருள்களையும் யானை குதிரை தேர் முதலிய அரச செல்வங்களையும் பிறர்க்கு வாரி வழங்கிவந்த இராமபிரான் அனுமானுக்கு யாதும் தராமல் சிறிது போது மறுகி உருகியிருந்தான். பின்பு உழுவலன்போடு உவந்து எழுந்து அவனை மார்போடு அழுந்தத் தழுவி மகிழ்ந்து நின்ருன். அந்த நிலை அங்கிருந்த யாவரையும் பரவசப்படுத்தியது. "பேரன்புடைய பெரியோய்! உனக்கு உதவ உரிய அரிய பொருள் என்பால் ஒன்றும் இல்லையே!" என்று ஏங்கிய உள்ளத்தனுய் இவ்வீர வள்ளல் அத்தீரனைத் தழுவியபொழுது அவன் நாணி அழுது மெல்ல நழுவி ஒதுங்கினுன். உழுவலன்புகள் கெழுமி நின்றன.

மாருத விமல சேயை மகிழுந்தினிது அருளின் நோக்கி
ஆருத விடுதற்கு ஒத்தார் நீயலால் அன்று செய்த
பேருதவிக்கு யானசெய் செயல்பிறிது இல்லை; மெய்ப்பூண்
போருதவியதிண் தோளாய்! பொருந்துறப் புல்லுகெனருன்.

இங்கே நிகழ்ந்துள்ள நிலைகளை விழைந்து காண்பவர் அந்த உள்ளங்களின் உரிமைகளை உணர்ந்து உருகுவர். அந்த அருந்திறலாளன் புரிந்துள்ள ஊழியங்களும் உதவி நிலைகளும் இந்தப் பெருந்தகையின் உள்ளத்தை எவ்வழியும் உருக்கி வந்துள்ளன. அவ்வுண்மைகளை உரைகளாலும் செயல்களாலும் இடையிடையே உணர்ந்து வந்துள்ளோம். ஈண்டு உயர்தகவாத் தெரிய வந்தன. நன்றியறிவு இவ்வென்றி வீரனை நன்குவென்றுள்ளது.

நீசெய்த பேர் உதவிக்கு

யான்செய் செயல் பிறிது இல்லை.

அனுமனை இனிது நோக்கி இராமன் இவ்வாறு பேசியிருக்கிறான். யாரும் எவ்வகையிலும் யாதும் கைம்மாறு செய்யமுடியாத பேருதவிகளை அவ் வீரன் செய்துள்ளான். அந்த உண்மைகளை உணர்ந்து இந்த வள்ளல் உள்ளம் களித்துள்ளமையை உரைகள் உணர்த்தி உருக்கங்களை நன்கு விளக்கியுள்ளன.

அரிய பெரிய அரச செல்வங்களையுடைய உயர்ந்த மன்னர் பெருமான் அனுமானுக்கு உரிமையாக உதவத் தக்க பொருள் யாதும் இல்லையே! என்று உள்ளம் உருகியிருப்பது அவன் புரிந்துள்ள உபகாரங்களின் உயர்நிலைகளை உலகம் அறிய நன்கு உணர்த்தியுள்ளது. அரியஉதவிகளை அப்பெரியவன்செய்துளான்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (குறள், 101)

இந்தப் பொய்யாமொழியோடு இப்புனிதன் வாய்மொழி ஈண்டு இனிது பொருந்தியுளது. அனுமான் புரிந்துள்ளனயாவும் செய்யாமல்செய்தஉதவிகள் ஆதலால் அவற்றிற்கு வையகமும் வானகமும் ஈடு ஆகாஎன்று இந்த ஐயன் தெளிந்துகொண்டான்; கொள்ளவே யான் செய் செயல் பிறிது இல்லை என்று செயலிழந்து நின்றான். உயர் பெருந்தகைமை ஈண்டு ஒளி வீசியுளது.

பெரிய அரச சபையில் இருந்த அனைவரும் கேட்க அகிலமும் அறிய இவ்வாறு கூறியிருக்கிறான் செய்ந்நன்றி அறிதல் என்னும் அரிய பண்பு இப்பெருந்தகையிடம் சிறந்த சீரோடு நிறைந்துள்ளது. அவ்வுண்மையை உரை உணர்த்தியுளது.

Gratitude is the sign of noble souls. (Aesop)

நன்றியறிவு என்பது உயர்ந்த மேன்மக்களின் சிறந்த அடையாளமாயுளது என்னும் இது இங்கேநன்கு அறியவுரியது.

அரியபல குணநலங்கள் எல்லாம் இக்குலமகனிடம் தனியுரிமையாய் இனிது அடைந்துள்ளன. இயலும் செயலும் எவ்வழியும் உயர் சீர்மைகளாய் ஒளிவீசி ஓங்கி மிளிர்கின்றன.

முன்பு தான் செய்துள்ள தவமே அனுமான் உருவமாய் வந்து தனக்கு இப்பிறவியில் எவ்வழியும் செவ்வையாய் இனிய உதவிகளைச் செய்து வருகிறது என இந்த ஆண்டகை யாண்டும்

அவனைக் கருதி * மகிழ்ந்து வந்துள்ளான் ஆதலால் ஈண்டு வேறு பொருள்களை வெளியே கொடாமல் தன்னையே உரிமையாக அவனுக்குத் தந்தருளினன். அரியதை உரியவனுக்கு உதவினன்.

பரமபதநாதனே இராமன் என ஈங்கு வந்துள்ளான். தனது திருமேனியை அவனுக்கு இவன் இனிது அருளியுள்ளமையால் அதிசய ஆனந்தமுடைய பேரின்ப வீட்டை நேரே தந்தபடியாம். தன்னையே தமர்க்கு நல்கும் தனிமுதல் தலைவன் என்னும் அரிய மறைமொழியை இங்கே இனிய நிறைமொழியா இயற்றியருளினன். அரிய அன்பனுக்கு உரிய இன்ப நலனை இனிது நல்கினன்.

அந்தம் இல்லாத ஆனந்த நிலையைத் தந்ததோடு அமையாமல் மேலும் பல பொருள்களை உலகம் காண உதவ நேர்ந்தான். உள்ளப் பாசமும் உழுவலன்பும் விழுமிதாக் கெழுமி நின்றன.

இக் குலமகன் உரிமையோடு தழுவிய பொழுது மாருதியின் விழிகளிலிருந்து நீர் பெருகி வழிந்தது. உருகிய அன்பால் உள்ளமும் உணர்வும் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கின. தனது சிறுமையை நினைந்து அரிய பெருமானது பெருமையை வியந்து யாதும் பேசாமல் அயலே கூசி நின்றான். நாணி ஒடுங்கி நின்ற அம் மேதையை மகிழ்ந்து புகழ்ந்த இக் கோமகன் அயலே நின்ற பரதனை நயமா நோக்கினன். இந் நம்பியின் குறிப்புகளை எல்லாம் அத் தம்பி நன்கு தெரிந்து கருதிய பொருள்கள் அனைத்தையும் உரிமையோடு தொகுத்து மருமமா அருளினன்.

எதையும் விரும்பாமல் யாதொரு ஆசையுமின்றி அரிய துறவிகளினும், பெரிய முனிவர்களினும் நிராசையோடு நிலவி நின்ற அனுமானுக்கு அரிய பல பரிசில்களை இராமன் வரிசையுடன் வலிந்து வழங்கினன். தான் கொடுத்ததோடு அமையாமல் அடுத்திருந்த தனது அருமைத் தேவியையும் உரிமையோடு உதவுமாறு உவந்து நோக்கினன். அந்த இனிய பார்வையில் விநய விவேகங்கள் வியனு விளங்கி நயனேடு தலங்கி நின்றன.

என்றலும் வணங்கி நாணி வாய்புதைத்து இலங்கு தானை
முன்றலை ஒதுக்கி நின்ற மொய்ம்பனை முழுதும் நோக்கி
பொன்திணி வயிரப் பைம்பூண் ஆரமும் புனைமென் தூசும்
வன்திறல் கயமும் மாவும் வழங்கினன் வழங்கு சீரான். [1

* இந் நூல் பக்கம் 5611 வரி 2 பார்க்க.

பூமலர்த் தவிசை நீத்துப் பொன்மதில் மிதிலை பூத்த
தேமொழித் திருவை ஐயன் திருவருள் முகந்து நோக்கப்
பாமறைக் கிழத்தி ஈந்த பருமுத்த மாலை கைக்கொண்டு
ஏமுறக் கொடுத்தாள் அன்னாள் இடர்அறிந்து உதவினாற்கே.

உள்ளம் உவந்து உரிமையோடு தழுவிநின்ற இராமன்பின்பு அனுமானுக்கு அரியபல பெரிய செல்வங்களை இனிய சன்மானமாக இனிது வழங்கியுள்ளான். வயிரப்பைப்பூண், மணிஆரம், பொன்னுடை, யானை, குதிரை முதலியன அருளியிருத்தலால் அப்பொருள்களின் பெருமித நிலைகளைநேரே தெரிந்து கொள்கிறோம்.

பேரன்போடு ஆண்டவன் அருளிய சன்மானங்களைக் காணுந்தோறும் அனுமான் உள்ளம் நாணம் அடைந்தது. அடிமைக்குத் தந்தன யாவும் ஆண்டவனுக்கே சொந்தம் என்று சிந்தை துணிந்து வெளியே யாதும் பேசாமல் அளி மீதூர்ந்து நின்றான்.

சீதை உதவியது.

தனது அருமைநாயகன் உரிமையாளனுக்கு அருளிய பரிசில்களைக் கண்டு ஓரளவு உளம்உவந்த சீதை ஓர் அரிய முத்துமாலையை அனுமானுக்கு ஆர்வமாய்க் கொடுத்தாள். அது தெய்வீகமான மணியாரம்; கலா தெய்வமான சரசுவதிதேவி இந்தப் பெண்ணரசிக்கு உரிமையாத் தந்தது; மணப்பரிசாய் வந்தது; பெரிய சம்பத்தாப் பேணி வந்த அந்த முத்து ஆரத்தை அரசி பரிசா அருளியபோது அவன் பரிவாத் தொழுது பணிவோடு இருகையாலும் வாங்கி இனிது நோக்கினான். வெண்மையான ஒவ்வொரு மணியிலும் இராமனது பசிய கோலத்திருவுருவம் தெரிய வந்தது. தன் உள்ளத்தில் என்றும் கருதியுள்ள மரகத வண்ணனை வெண்முத்தில் காணவே தனது கண்ணில் ஒற்றிக் கழுத்தில் அணிந்து கொண்டான். எதையும் ஒருபொருளாக மதியாதவன் சானகி தந்ததை ஆனந்தமா வாங்கிக் கழுத்தில் பூண்டு கொண்டதைக் கண்டு ஆண்டு இருந்த எல்லாரும் ஆனந்தம் அடைந்தனர். தெய்வ நிதியாய் வந்தது திவ்விய மதிமானைச் சேர்ந்து சிறந்து நின்றது.

பாமறைக் கிழத்தி ஈந்த
பரு முத்த மாலை.

என்றதனால் அந்த மாலையின் மகிமையை உணர்ந்து கொள்கிறோம். பாடும் புலமைக்கும் கலைக்கும் தனியுரிமையான இனிய

தலைமைத் தெய்வம் ஆதலால் பாமறைக்கிழத்தி எனச் சரசுவதி தேவியை இவ்வாறு நாம நியமமாக் குறித்தருளினர்.

தாமரைக் கிழத்தியாயிருந்தவள் சனகன் மகளாய் வந்துள்ளமையால் பழமையான அந்தக் கிழமையும் வளமையாய்த் தெரிய வந்தது. வெள்ளைக்கலையுடுத்தி வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் வெண்திரு அளித்திருந்த வெண்முத்த மாலையை வித்தக விவேகிக்கு உத்தம அரசி உரிமையாத் தந்தாள். செந்திரு தந்தது சிந்தை மகிழ வந்தது.

பூமலர்த் தவிசை நீத்துப்
பொன்மதில் மிதிலைபூத்த தேமொழித்திரு.

செந்தாமரை மலரில் அமர்ந்திருந்த இலட்சுமி தேவியே மிதிலாபுரியில் வந்து தோன்றியிருக்கிருள். பூத்த என்றது எங்கும் புகழ்மணம் பரப்பியிருக்கும் மகிமை தெரிய. இப்பொழுது அயோத்தி அரசின் இராச கொலுவில் சக்கரவர்த்தி அருகே சக்கரவர்த்தினியாய் அமர்ந்திருப்பவள் எத்தகைய நிலையினள்! என்பதை உய்த்து உணர இங்ஙனம்வித்தக விநயமாஉரைத்தருளினர்.

திருவை ஐயன் திருவருள் முகந்து நோக்க.

அனுமானுக்கு இனிய ஒரு சன்மானம் செய்யும்படி தனது அருமை மனைவியை இராமன் உரிமையோடு பார்த்த பார்வையை இது வார்த்துக் காட்டியுள்ளது. இக் கோமகனது குறிப்பு நோக்கம் கூரிய சீரிய மேன்மைகளோடு குலாவி வருகிறது. கண் பார்வையால்கருத்துக்களை உணர்த்துவதும், அவற்றைநேரே கருதி உணர்வதும் சிறந்த அரச நீர்மைகளாய்ச் சீர்மைதோய்ந்து திகழ்கின்றன. அந்த அரிய மதிநலம் இனிது அறிய வந்தது.

இந்தப் பெண்ணரசியை அந்தப் புண்ணிய வேந்தன் தண்ணளியோடு பார்த்திருக்கிருன். திருவருள் முகந்து நோக்க என்றதனல், அந்தப் பெருமானுடைய அகம் முகம் கண் பார்வை கருணை கம்பீரம் கிழமை கேண்மை அழகு முதலிய விழுமிய நீர்மைகள் யாவும் வெளியே தெளிவாய் விளங்கி நிற்கின்றன.

தன் தேவியை உரிமையோடு இங்கே இவ்வீரன் நோக்கியது தங்கள் ஆவிகளை எங்கும் பெருமையாக் காத்து வந்தவனுக்கு நன்றி கூறி ஏதேனும் ஒன்று தருகவெனக் கருதியேயாம். வேறு

யாருக்கும் செய்யாத மரியாதையை மாருதிக்குத் தனி உரிமை யாச் செய்ய வேண்டியே தனது அருமைமனைவியை இனிமையா நோக்கினன். இக் கோமகன் குறிப்பை எதிர் நோக்கி இருந் தாள் ஆதலால் அதனைக் காணவே அக் குலமகள் உளம் மிக மகிழ்ந்து அழகிய அரிய பெரிய பொருளை உரிமையா உதவினள்.

ஏமுறக் கொடுத்தாள் அன்னாள்
இடர் அறிந்து உதவி னாற்கே.

பரிசில் கொடுத்தவள் நிலையையும், அப்பொருளை ஏற்றுக் கொண்டவன் தகவையும் இங்கே நன்கு கண்டு கொள்கிறோம்.

தான் சாக நேர்ந்தபோது வேகமாய் வந்து தன் ஆருயிரைக் காத்தருளிய பேருபகாரி என்று அனுமானைச் சீதை ஈண்டு நன்றி யறிவோடு கருதியிருக்கிறாள். இடம் அறிந்து உதவினான் என்றது மாருதிக்கு ஒரு பெயராய் நின்றது. முன்னம் மூண்டு படர்ந் திருந்த நீண்ட துயரங்களை எல்லாம் நினைந்து கொள்ள இது ஈங்கு நேரே வந்தது குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்க நேர்ந்தன.

நீண்ட புலைச்சிறையிலிருந்து நீங்கி மாண்டு மடிந்துபோக மூண்டு முனைந்த சமையத்தில் விரைந்து புகுந்து தன்னைக் காத்து நிறுத்தித் தனது அருமைநாயகனிடம் உரிமையாச் சேர்த்தருளிய பெரியோன் என்று மாருதியைச் சானகி யாண்டும் நினைந்து போற்றி வருகிறாள். உபகாரநிலை உள்ளத்தை உருக்கியுள்ளது.

''இரக்கமே ஆகவந்து இங்கு எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத், தந்தான் உயிர்; இதின்உதவி உண்டோ?''
(சுந்தர, உருக்காட்டு, 27)

இரக்கமே உருவமாக வந்து என் உயிரைத் தந்தான் என்று சீதை முன்பு உருகி மொழிந்துள்ள பரிவுரை ஈண்டு உணர வுரியது. இப்பொழுது தனது நாயகன் அருகே பட்டத்து அரசி யாய் வீற்றிருக்கின்ற சீதையின் சீவன் அனுமான் அருளியது என்பதை இங்கே உரிமையாச் சிந்தனை செய்து கொள்கிறோம்.

எவ்வளவு பேருபகாரி! எவ்வளவு சீரிய மேதை! எத்தகைய உத்தமன்! எத்துணை வெற்றி வீரன்! எத்தனை காரிய தீரன்! எத்தனை வித்தகன்! அத்தனையும் ஈண்டு உய்த்து உணர வேண்டும்.

அனும நாயகனுடைய அற்புத ஆற்றல்கள் இராமநாதனு

டைய சீவிய காவியத்துக்கு சீவாதாரங்களாய் மேவி நிற்கின்றன. இராமகதையைச் செவிக்கு அமுதாப் புவிக்குத்தந்துளான்.

தங்கள் துன்பங்களை எல்லாம் நீக்கி இன்பங்களை ஆக்கியருளியுள்ள அரிய அன்பனுக்கு உரிய சன்மானங்களாக இராமனும் சீதையும் சேமமா வழங்கிச் சிந்தை மகிழ்ந்தனர்.

பின்பு வானர வீரர்களுள் தளபதிகளாய் நின்ற சேனைத் தலைவர்கள் எல்லாருக்கும் வரிசையாச்சீராமன்பரிசில்களை அருளினான். தந்த வெகுமதிகள் தகவு தோய்ந்து மிகவும்நயமா வந்தன

சாம்பவனுக்குத் தந்தது.

சந்திரற்கு உவமை சான்ற தாரகைக் குழுவை வென்ற
இந்திரற்கு ஏய்ந்த தாகும் என்னும் முத்தாரத்தோடு
கந்தடு களிறு வாசி தூசணி கலன்கள் மற்றும்
உந்தினன் எண்கின் வேந்தற்கு உலகமுந்து உதவினனே.

நீலனுக்கு உதவியது.

நவமணிக் காசும் முத்து மாலையும் நலங்கொள் தூசும்
உவமைமற்றிலாத பொற்பூண் உலப்பிலபிறவும் ஒண்தார்க்
கவனவெம் பரியும் வேகக் கதமலைக் கரசும் காதல்
பவனனுக்கு இனியநண்பன் பயந்தெடுத்தவனுக்கு ஈந்தான். [2]

சதவலிக்கு ஈந்தது.

பதவலிச் சதங்கைப் பைந்தார்ப் பாய்பரிப் பணைத்திண்கோட்டு
மதவலிச் சைலம் பொற்பூண் மாமணிக் கோவை மற்றும்
உதவலில் தகைவ வன்றி இல்லன உள்ள எல்லாம்
சதவலிதனக்குத் தந்தான் சதுமுகத்தவனைத் தந்தான்.

கேசரிக்கு அருளியது.

பேசரிது ஒருவர்க்கேயும் பெருவிலை இதனுக்கு ஈதுக்
கோசரி இலதென்றுஎண்ணும் ஒளிமணிப் பூணும்தூசும்
மூசரிக்குவமை மும்மை மும்மதக் களிறும் மாவும்
கேசரிதனக்கும் ஈந்தான் கிளர்மணி முழவுத்தோளான். [4

நளன் முதலியோர்க்கு நல்கியது.

வளனணி கலனும் தூசும் மாமதக் களிறும் மாவும்
நளனொடு குமுதன் தாரன் நவையறு பனசன் மற்றோர்

உளமகிழ் வெய்தும் வண்ணம் உலப்பில பிறவும் ஈந்தான்
களனமர் கமல வேலிக் கோசலக் காவ லோனே. (5)

வானரத் தலைவர்கள் எல்லாருக்கும் இன்னவாறு நன்னயப் பரிசில்களை மன்னர்பிரான் இன்மொழிகளோடு இனிது வழங்கியுள்ளான். தகுதி தன்மை வன்மை தறுகண்மை தலைமை முதலிய நிலைமைகளில் உயர்ந்துள்ள தளபதிகள் அனைவரும் ஒரு நிகரா உளம் மிக மகிழ இக் குலமகன் பொருள்களை நலமா அருளினன்.

சேனாதிபதிகளுக்குச் செய்தன சேனைகளுக்கெல்லாம் சேர்ந்து நின்றன. உரிமையாய் ஊழியம் புரிந்து வந்த வானர வீரர்களுக்குச் சன்மானங்களை அருளிய அருமைகளை யாவரும் பெருமையா வியந்து புகழ்ந்தனர் அரசு முறைகளோடு வரிசைகளை அறிந்து உதவும் மாட்சிகள் இவ்வீர வள்ளலிடம் அதிசயக் காட்சிகளா விளங்கி நின்றன. தருமமூர்த்தியாய் வந்துள்ளவன் உரிமையான கருமங்களில் உயர்ந்த கீர்த்திகளை அடைந்து ஒளி மிகுந்து நின்றான். எவ்வழியும் யாவும் எழில்களாய் விளங்கின.

உலகம் முந்து உதவினன்.

சதுமுகத்தவனைத் தந்தான்.

கிளர்மணி முழவுத் தோளான்.

கோசலக் காவலோன்.

வானர வீரர்களுக்கு உரிமையோடு அரிய வெகுமதிகளை வாரி வழங்கிய வள்ளலை உலக உள்ளங்கள் தெளிவா உணர்ந்து கொள்ள நம் கவிஞர் பெருமான் இவ்வாறு செவ்வையா வரைந்து காட்டியிருக்கிறார். காட்சிகள் மாட்சிகளாயுள்ளன.

உரைகளில் மருவியுள்ள பொருள்களையும் தொனிகளையும் நுணுகி உணர்ந்து கொள்ள வேண்டும். யாண்டும் தெய்வீக நீர்மைகளையே தெளித்து வையம் காண வழங்கி வருகின்றார்.

கோசலா தேசத்து வேந்தனைய் இப்போது ஈண்டு மணிமுடி சூடியுள்ளவன் பரமபதநாதனே என்பதை நெஞ்சம் கனிந்து கவி நினைவுறுத்தியிருக்கிறார். எவ்வழியும் தெய்வ மணம் கமழத் தமது காவியத்தைத் திவ்விய பேரின்ப உலகமாப் படைத்துள்ளார். அவ்வுண்மையை உரைகள்தோறும் இடையிடையே

உணர்ந்து வருகிறோம். சீர்மையும் நீர்மையும் காவியநாயகனிடம் தேவியல்போடு சிறந்து சீவிய ஓவியங்களாய் மிளிர்கின்றன.

அரிய போர்வீரர்களை உரிமையா உபசரித்துப் பெரிய வெகுமதிகளைப் பேணி யருளியபின் இனிய துணைவர்களைக் கருணையோடு கருதி நோக்கினன். விபீடணனை இலங்கைத்தம்பி என்று இக் கோமகன் நேமமா அழைத்து வருவது வழக்கமாய் வந்தது. அவனுக்கு அரிய வெகுமதிகளை அருள விரும்பினன். அவனிடம் பெரிய செல்வங்கள் பெருகியுள்ளன. தேவருலகமும் காணுத திவ்விய பொருள்கள் இலங்காராச்சியத்தில் எவ்வழியும் துலங்கி நிற்கின்றன. அந்த இலங்கைத் தலைவனை நலமா வழி அனுப்ப நேர்ந்த இக்குல மகன் விழுமிய பண்போடு விழைந்து நோக்கி இனிய மொழிகள் ஆடினன். "சூரியன் எவ்வளவு தொலையில் இருந்தாலும் தாமரை மலர்கள் அவனை நோக்கி மலர்ந்து மகிழ்ந்து கிளர்ந்து வளர்ந்து திகழ்கின்றன. அதுபோல் உண்மையான உரிமையாளர்கள் நெடிய தூரத்தில் ஒதுங்கி யிருந்தாலும் நினைவில் என்றும் நிலைத்து இனிமை சுரந்து வருவர். சிறந்த மதிமானுன நீ உயர்ந்த நெறியோடு ஒளிபுரிந்து வாழ்வாய் என்று நான் உளம் மிக மகிழ்ந்துள்ளேன்" என்று இன்னவாறு நன்னயமா மொழிந்து அரிய வெகுமதிகளைப் பிரியம் மீதூர்ந்து அருளினன். இனிய மொழியோடு உதவியது எழிலா நிலவியது.

வீடணனை வியந்தது.

மின்னையேர் மௌலிச் செங்கண் வீடணப் புலவர் கோமான்
தன்னையே இனிது நோக்கிச் சராசரம் சுமந்த சால்பின்
நின்னையே ஒப்பார் நின்னை அலதிலர்; உளரேல் ஐய
பொன்னையே இரும்பு நேரும் ஆயினும் பொருவன்று என்றான்.

வெகுமதி அளித்தது.

என்றுரைத்து அமரர் ஈந்த எரிமணிக் கடகத்தோடு
வன்திறற் களிறும்தேரும் வாசியும் மணிப்பொற் பூணும்
பொன்திணி தூசும் வாசக் கலவையும் புதுமென் சாந்தும்
நன்றுற அவனுக்கு ஈந்தான் நாகணைத் துயிலைத் தீர்ந்தான். (2)

விபீடணனைக் குறித்து இராமபிரான் எண்ணியுள்ள எண்ணங்கள் இங்கே தெரிய வந்துள்ளன கொடிய தீயரிடையே தோன்றியும் இனிய தூயனுய் அவன் உயர்ந்து உய்ந்துள்ளமை

யை நினைந்து வியந்துள்ளான். தருமமும் நீதியும் தழுவி வாழ்ந்தமையால் இருமையும் பெருமை அடைய நேர்ந்தான். மாற்றுயர்ந்த தங்கம் என்று போற்றியிருத்தலால் அவனது ஏற்றமும் இயல்பும் அறிய வந்தன. வெவ்விய இரும்புகளிடையே செவ்விய பொன் தோன்றியதுபோல் இவன் தோன்றியிருக்கிறான். பொல்லாத அரக்கர் குழுவில் இந்த நல்லவன் பிறந்து நலமாய் உயர்ந்திருப்பது எல்லார்க்கும் வியப்பை விளைத்துள்ளது.

தன்பால் பேரன்போடு யாண்டும் உண்மையாய் உழைத்து வந்துள்ளமையால் இவன் பால் இராமனுக்கு ஆதி முதலே பேரன்பு பெருகி வந்துளது. தம்பி என்றே முன்பு தழுவிக் கொண்டமையால் இந் நம்பியிடம் உள்ளம் உருகி உயிர்க் கேண்மை பூண்டு எவ்வழியும் செவ்வியனாய் அவன் ஒழுகியுள்ளான். அவனுடைய குண நீர்மைகளையும் மனநலத்தையும் உணர்ந்து மகிழ்ந்து வந்த பெருமான் இன்று பெருமையாகப் பாராட்டி அரிய பரிசில்களை உரிமையோடு அவனுக்கு உவந்து உதவினான்.

அமரர் ஈந்த எரிமணிக் கடகம்

இந்த வீர வள்ளலுடைய குல முதல்வர்களுக்குத் தேவர்கள் பல வெற்றிப் பரிசில்களைத் தந்திருக்கின்றனர். ரகு, ககு முதலிய மானவீரர்கள் தானவர்களுடைய இடர்களை நீக்கி வானவர்களைக் காத்து வந்துள்ளனர். அந்த வரவில் அமரர்கள் சிந்தை மகிழ்ந்து அரிய தெய்வநிதிகளைத் தந்துள்ளனர். பெறுதற்கு அரிய பெரும் பொருள்களா வந்துள்ள அணிகளை எல்லாம் உரிய துணைவர்களுக்கு இப் பெரியவன் பிரியமாய் வழங்கினான். அமரில் தமராயிருந்து ஆர்ந்த உதவி புரிந்தவனுக்கு அமரர் ஈந்த அரிய மணி அணியை இக்குமரன் கொடுத்தருளினான். இரத்தின கடகத்தோடு இரதம் முதலிய அரச நிதிகளையும் ஆர்வமாய் ஈந்தான் வாரி வழங்கியது சீரிய பண்பாய்ச்சிறந்துவிளங்கியது.

உபசார மொழிகளும் உதவிய நிலைகளும் யூக விவேகங்களாய் ஒளிமிகுந்து வந்தன மாந்தர் யாவரும் மகிழ்ந்துவர இவ் வேந்தர் பெருமான் விளைந்து வந்து விதி முறை புரிந்துள்ளான்.

நாகணைத் துயிலைத் தீர்ந்தான்.

அரசர் பெருமானைய் அமர்ந்து உரிமையாளர்களை உபசரித்

தருளும் குரிசிலை இவ்வாறு குறித்திருக்கிறார். பஞ்சணை பாம்பணையாகப் பள்ளிகொண்டுள்ள அப்பரமனே ஈண்டு இந்த அஞ்சன வண்ணனாய்த் தோன்றி இவ்வாறு அருளாடல் புரிகின்றான் என்று பொருளைச் செவ்வையா அறிவுறுத்தியுள்ளார்.

தாம் பாட நேர்ந்த இராம காவியம் பூர்த்தியாக நேர்ந்துள்ளமையால் தம் காவிய நாயகனுடைய பூர்வ நிலையைக் கவி இங்ஙனம் ஆர்வமாய்த் துதித்து வருகிறார். ஆதியில் தேவர் வந்து வேண்டியபோது மேவியிருந்த நிலைமையைத் தலைமையாக ஈங்கு விளக்கியிருக்கிறார். விளக்கியது வியனிலையில் விளங்கியுளது.

"அலைகடல் நடுவண்ஓர் அநந்தன் மீமிசை
மலைஎன விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பன்என்று
உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையை." [அவதாரம், 6

அமரர் வந்து வேண்டும்பொழுது திருமால் அனந்தன் மீது விழி துயின்றிருந்த நிலையை இதில் உணர்ந்து கொள்கிறோம். அருமையான அந்த அறிதுயிலை அறவே துறந்து அமரரைக்காக்க அயோத்தி வேந்தனாய் வந்துள்ளான் ஆதலால் அத்துறவும் வரவும் உறவாத் தெரிய நாகணைத் துயிலைத் தீர்ந்தான் என்றார்.

"நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்.
நாகத் தணையானை நாள்தோறும் ஞானத்தால்
ஆகத்தணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மானை"
(திருவாய்மொழி)

நாகணைப் பள்ளியானை நம்மாழ்வார் இவ்வாறு துதித்திருக்கிறார். தீர்ந்தான் என்றது அந்தப் பேரின்ப நிலை பிரிய அரியது என்பது தெரிய நின்றது அரவணையில் அவன் துயில் துறந்த போதே அமரர் இனம் துயர் துறந்தது; அரக்கர்குலம் அயல் இறந்தது. தேவர் வாழத் தெவ்வர் மாள மேவிவந்துளான்.

வந்த காரியம் முடிந்தமையால் முடிவில் முடிசூடி அரசர் பெருமானாய் அவனி புரக்க நேர்ந்தான். சேர்ந்தவர் எவர்க்கும் சிந்தை மகிழச் சீர்மைகள் பல ஓர்ந்து உவந்து செய்தான்.

இலங்கைத் தம்பிக்கு இனிய சன்மானங்களை அருளிய பின்பு கங்கைத் தம்பியைக் காதலோடு நோக்கினான். குகனை இவ்வாறு கூறிவருவது இக் கோமகனிடம் நீர்மையாய் வந்தது.

குகனுக்கு உதவியது.

சிருங்கிபே ரியம்என்று ஓதும் செழுநகர்க்கு இறையைநோக்கி
மருங்கினி உரைப்பது என்னே மறுவறு துணைவற்கு என்னக்
கருங்கைமாக் களிறும் மாவும் கனகமும் தூசும் பூணும்
ஒருங்கற உதவிப் பின்னர் உதவினன் விடையும் மன்னே!

குகனிடம் இராமன் கொண்டுள்ள உறவுரிமைகளை ஈண்டு ஊன்றி உணர்ந்து கொள்ளுகிறோம். பிறரை விழைந்து புகழ்ந்து உபசரித்ததுபோல் இவனை வியந்து புகழவில்லை. இவனுடைய இயல்புகளையும் மனநிலைகளையும் தெளிவாத் தெரிந்துள்ளமையால் வெளியே உபசார மொழிகளை விரித்துக் கூறாமல் சுருக்கி நின்றான். உழுவலன்புடையனாய் எவ்வழியும் தன்னையே கருதி உருகியுள்ளவன் ஆதலால் குகன்பால் இக்கோமகன் அகனமர் காதலனாய் மருவியிருந்தான். முகமன் கூறாமல் உவகை கூர்ந்து நின்றான். உறவுரிமை உயரவே உபசார உரைகள் ஒருவி நின்றன.

மருங்கு இனி உரைப்பது என்னே?

உபசார உரைகள் விரிவாக யாதும் சொல்லாமல் சுருங்கிய அளவில் இவ்வாறு உரைத்திருக்கிறான். உழுவலன்பு சுரந்து உரிமை நிறைந்துள்ள இனிய துணைவனைத் தனியுரிமையோடு கருதி யுள்ளமையால் வெளியே புகழாமல் விலக நேர்ந்தான்.

மறுவறு துணைவன் எனக் குகனை இங்ஙனம் குறித்திருத்தலால் அவனுடைய சித்தசுத்தியையும் உத்தம பத்தியையும் உய்த்து உணர்ந்து கொள்ளுகிறோம். உள்ளன்பு கனிந்து எவ்வழியும் இராமனை நினைந்து உருகி வருவதில் பரதனுக்கு அடுத்தபடி குகனே தலைசிறந்து நிற்கின்றான். குகனோடும் ஐவர் ஆனோம் என்று இராமன் முன்பு கிழமையாய்த் தழுவியுள்ளதில் இவனது விழுமிய நிலைமை தெளிவாய் நின்றது. கோசலைத் தாயும் முன்பு இவனை ஒரு பிள்ளையாக் கருதிப் பேரன்பு செய்துள்ளார்.

மாசில்லாத இராமன் வாயால் மாசற்றவன் என்று பேசப் பெற்றுள்ளமையால் இவனுடைய தேசும் தூய்மையும் இங்கு நன்கு தெரிய வந்தன. அரிய நீர்மைகளில் பெருகியுள்ள இவனுக்கும் உரிய முறைப்படி பெரிய வெகுமதிகளைப் பேணியருளினான். அரச பதவிக்குத் தகுதியாக யானை குதிரை சிவிகை தேர் பொன்னுடை முதலியன புனைந்து தந்தான். தந்த பரிசில்கள்

எல்லாம் இராமனுக்கே சொந்தம் என்று நாம உச்சாரணம் செய்து ஏற்றுக்கொண்டான். அவனுடைய பண்பும் பணிவும் அன்பும் அறிவும் அதிசயநிலைகளில் வெளியே ஒளிவீசி நின்றன.

உரிமையான சன்மானங்களை உவந்து தந்து அன்று இவ் வென்றி வீரன் அரிய ஒரு விருந்து புரிந்தான். யாவர்க்கும் தேவ விருந்தாய் அது சிறந்திருந்தது. இனிய போகங்கள் கனிவாயின.

மறுநாள் எல்லாரையும் வாழ்த்தி வழி அனுப்பினான். அப் பொழுது அனுமான் கண்களிலிருந்து நீர் பெருகி ஓடியது. உழுவலன்பால் அழுகிற அவனைக் கெழுதகைமையோடு நோக்கி இவ்விழுமியோன் விவேக நீதிகளைப் போதித்தான். "கிட்கிந்தை ஆட்சி சுக்கிரீவனுக்குக் கிடைத்தது உன்னுடைய மதிமாட்சி யாலேயாம். அந்த அரசுக்கு உறுதித்துணையாய் நின்று எவ்வழி யும் செவ்விதாமுறை புரிந்துவருவது உனக்குத் தனியுரிமையான இனிய கடமையாம்; தம் கருமம் செய்வதே தருமமும் தவமு மாய் மருவி வருகிறது; என்னைப் பிரிந்துபோவதை நினைந்து நீ வருந்தலாகாது. அமைச்சனாய் அங்கிருந்து நீ ஆட்சி புரிவது இங்கு அமர்ந்து காட்சி புரிவதேயாம்; அதிசய மேதையான உனக்கு மதிநலம் கூறுவது மிகையாம்; உரிமையை உணர்ந்து அரசனுக்குப் பெருமை செய்து அருள்!" என்று இவ்வாறு இக் கோமான் பேசியருளினான். இனிய மொழிகளில் அரிய உணர் வொளிகள் பெருகி வந்துள்ளன. அன்புப் பாசங்கள் யாண்டும் நீண்டு நிலவுகின்றன. உள்ளப் பரிவுகள் பிரிய மறுகுகின்றன.

விடை கொடுத்தது.

இராமநாதனைப் பிரிய மனமில்லாமல் பிரியம் மீதூர்ந்து மறுகி நின்ற அனைவரையும் இப் புனித மூர்த்தி இனிது நோக்கி விடையருளினான். வழி அனுப்பியமுறை கெழுதகைமை தோய்ந்து கிழமை வாய்ந்து விழுமியபண்பாய் விளங்கிநின்றது.

அனுமனை வாலி சேயைச் சாம்பனை அருக்கன் தந்த
கனைகழற் காலினானைக் கருணையங் கடவுள் நோக்கி
நினைவதற்கு அரிது நும்மைப் பிரிவுஎன்றல் நீவிர்வைப்பும்
எனதது காவற்கு இன்றெனன் ஏவலின் ஏகும் என்றான். (1)

இலங்கைவேந் தனுக்கும் இவ்வாறு இனியன யாவும்கூறி
அலங்கைவேல் மதுகையண்ணல் விடைகொடுத்து அருளலோடும்

நலங்கொள்பே ருணர்வு மிக்கோர் நலனுறு நெஞ்சர்பின்னர்
கலங்கலர் ஏய செய்தல் கடனெனக் கருதிச் சூழ்ந்தார். (2)

பரதனை இளைய கோவைச் சத்துருக் கனனைப் பண்டை
விரதமா தவனைத் தாயர் மூவரை மிதிலைப் பொன்னை
வரதனை வலங்கொண்டு ஏத்தி வணங்கினர் விடையும் கொண்டே
சரதமா நெறியும் வல்லோர் தத்தம பதியைச் சார்ந்தார். [3]

குகனைத்தன் பதியின் உய்த்துக் குன்றினை வலஞ்செய்தேரோன்
மகனைத்தன் புரத்தில்விட்டு வாள்எயிற் றரக்கர் சூழக்
ககனத்தின் மிசையே எய்திக் கனைகடல் இலங்கை புக்கான்
அகனுற்ற காதல் அண்ணல் அலங்கல் வீடணன்சென் றன்றே. [4
(விடை கொடுத்த படலம், 32-35)

முடிவில் நேர்ந்துள்ள நிலைகளையும், சேர்ந்து வந்திருந்தவர் சிந்தை தணிந்து சென்றுள்ள செலவுகளையும், சிறந்த சீர்மை நீர்மைகளையும் இங்கே கூர்ந்தோர்ந்து கொள்ளுகிறோம்.

பிரிந்து போகமுடியாமல் வருந்திநின்ற துணைவர்களை இப் பெருந்தகை தேற்றி அனுப்பியிருப்பது திருந்திய பண்பாய்ச் சிறந்து திகழ்கின்றது. அன்பின்கனிவுகள் ஆனம ஒளிகளாயின.

மறுகிநின்றவர் அனைவரும் உள்ளம் தெளிந்து உறுதிபெற உரைகள் வந்துள்ளன. "அருமைத் துணைவர்களே! உங்களைப் பிரிய நேர்ந்தது பெரிய துயரமே; உரிய கருமங்களை உணர்ந்து செய்வது உயர்ந்த தருமங்கள் ஆகலால் அந்த நிலையில் நாம் அகல நேர்ந்துள்ளோம்; இயற்கை நியமங்கள் வியத்தகு வழிகளில் வெளியே விரிந்துள்ளன. காலமும் இடமும் கருமமும் மருமமாச் சீவர்களைப் பிரிவுசெய்து நிற்கின்றன. ஒன்றாய்க்கூடி நின்ற மேகங்கள் காற்றால் கலைந்து பிரிந்து வேறு வேறு திசைகளில் விரைந்து போவதை வானவீதியில் நாம் நேரே கண்டு வருகிறோம். பெய்யும் புயல்கள் வையம் வாழ வகை புரிகின்றன.

அந்த மேகக் குழாங்கள் போலவே தேகக்குழாங்களும் சிறிது காலம் சேர்ந்திருந்து பின்பு பிரிந்து போகின்றன. வினையின் அளவே கூடி உயிரினங்கள் யாண்டும் வினைகளைச் செய்து வருகின்றன. வாழ்வின் வரவு செலவுகள் சூழ்வின்படியே தோய்ந்து தோன்றுகின்றன. யாதும் நிலையில்லாத இந்த உலகத்தில் என்றும் நிலையான தருமத்தைச் செய்து கொள்வதே நல

யான விவேகமாம். பிறவுயிர்கட்கு அன்பாய் இதம்புரிந்து வருப வன் தன் உயிர்க்கு இன்பம் செய்து கொள்ளுகிருன்; இடர் செய்பவன் தனக்கே கொடிய துயரங்களை விளைத்துக் கொள்கிருன். விதைத்தபடியே விளைவுகள் வருகின்றன; வினைகளின்படி யே பலன்கள் விளைகின்றன. சீவர்கள் அடைகிற சுக துக்கங் களுக்கு அவரவருடைய கருமங்களே காரணமாயுள்ளன. வெளியிலிருந்து எதுவும் வருவதில்லை; யாவும் உள்ளத்திலிருந்தே உதயமாகின்றன. ஒருவனுடைய உள்ளம் நல்லது ஆனுல் அவன் எல்லா நன்மைகளும் உடையனுய் ஒளிமிகுந்து உயர்ந்து உய்தி பெறுகிருன்; அது தீயது ஆனுல் அவன் தீயனுய் இழிந்து கழிந்து அவமே அழிந்து போகிருன். ஈசனுய் உயர்வதும், நீசனுய் இழிவதும் நினைவுகளின் தூய்மை தீமைகளால் முறை யே நேர்ந்து வருகின்றன. மனம் புனிதம் ஆனுல் மனிதன் தெய்வம் ஆகிருன். மகான்கள் முனிவர்கள் ஞானிகள் யோகி கள் சான்ருேர் ஆன்ருேர் என வான்தோய் புகழோடு வந்தவர் எவரும் மனத்தின் தூய்மையிலிருந்தே தோன்றியுள்ளனர். இனிய மனம் இன்ப நிலையம் அதனை இழந்த அளவு எவ்வழி யும் துன்பமே. எங்கே இருந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும் உள்ளம் தூய்மையுடையவர் பேரின்ப வெள்ளத்தை நேரே பெறுகின்ருர். மனநலம் மன்னுயிர்க்கு யாண்டும் மகிமையும் இன்பமும் தகவாய் அருளி வருகிறது. மதிநலம் உடைய உங் களுக்கு யான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. உங்களுடைய இனநலத்தால் நான் அரிய பல நலன்களை அடைந்துள்ளேன். வெற்றி வீரனுய் விளங்கி வேந்தர் வேந்தனுய் மாந்தர் மகிழ ஈண்டு நான் மணிமுடி சூடியிருப்பது உங்கள் ஆண்டகைமை யின் ஆதரவாலேயாம். கருதிய காரியம் யாவும் இனிது முடிந் துள்ளமையால் நீங்கள் பிரிந்துபோய் உரிய கருமங்களைச்செய்ய நேர்ந்துள்ளீர்கள்! இந்தப் பிரிவு ஒரு பிரிவாகாது. என்னுடைய காரியங்களையே அங்கங்கே தங்கி ஆர்வமாய்ச் செய்யப் போகி றீர்கள்! எங்கே இருந்தாலும் தருமசீலர்களாய் நெறிமுறையே ஒழுகி உயிர்களுக்கு இதம்செய்து உயர்நிலையில் ஒளிமிகுந்து யாண்டும் அளிபுரிந்து வருவீர்கள் என்று நான் தெளிவாக நம்பி யுள்ளேன். உங்கள் சீரும்சிறப்பும் பேரும் பெருமையும் பெருகி வருவதையே எவ்வழியும் நான் கருதி வருகிறேன். பொருந்திய

கடமைகளைத் திருந்திய பண்போடு தெளிந்து செய்ய நீங்கள் பிரிந்து போவதால் உங்கள் பிரிவு அரிய ஒரு தருமமா மருவி மிளிர்கிறது" என இன்னவாறு இத் தருமமூர்த்தி உணர்வுரைகள் கூறி உரியவர்களுக்கு விடை யருளினர். அரிய பொருள் மொழிகள் பெரிய அறிவொளிகளாய் அருள்சுரந்துவந்துள்ளன.

கருணையங் கடவுள்.

இராமபிரானை ஈண்டு இவ்வாறு கவி குறித்திருக்கிருர்.

யாரும் எளிதே அறிய முடியாத அரிய பரமன் அருள் புரிந்து வந்து மனித உருவில் மருவியிருந்து குரங்குகளோடு உறவாடி நிரம்பிய நீர்மையில் அன்பு கனிந்து இன்பமொழிகளை இனிது கூறியுள்ளமையால் இங்ஙனம் பொருள் பொதிந்த பேரை இப் புனிதனுக்கு அருளினர். பேரருளுடைய பெருமாள் பாரருள வந்துள்ளான். அளிபுரிந்து யாவும் காக்கும் கடவுள் இங்கே வையம் காக்க இவ்வழியில் வெளியே வந்து ஒளி வீசியுள்ளது. மனித வுருவில் மருவியுள்ள புனித தெய்வம் இனிது காண வந்தது. அந்தக் காட்சியில் மாட்சிகள் மிளிர்கின்றன.

எனது அது காவற்கு இன்று
என் ஏவலின் ஏகும்.

தன்னைப் பிரிந்து போகமுடியாமல் வருந்தி மறுகி்ன்ற உரிமையாளரை நோக்கி இப் பெருமான் இவ்வாறு பேசியிருக்கிருன். சிருங்கி பேரத்திலும், கிட்கிந்தையிலும், இலங்கையிலும் எனக்கு வளமான நிலங்கள் இருக்கின்றன. விரிந்து பரந்துள்ள பெரிய இராச்சியங்கள் ஆதலால் அவற்றை நன்கு பாது காத்து எங்கும் இனிது பேண எனது தம்பிகள் ஆகிய நீங்கள் விரைந்து செல்ல வேண்டும். இங்கே உள்ள அரசாட்சியைக் கவனித்தற்கு மூன்று தம்பிகள் ஆன்ற துணைகளா அமர்ந்திருக்கின்றனர்; நீவிர் மூவிரும் அங்கே சென்று ஆகவேண்டியதை விவேகமாய்க் கவனியுங்கள்என்று குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகிய அம் மூவரையும் முகமலர்ந்து பார்த்து இக்கோமகன் இங்ஙனம் கூறியுள்ளான். உரைகள் ஊன்றி உணர வந்தன.

எனது காவல் அது என்றது உரிமையும் ஒருமையும் தெரிய. தங்கள் கடமைகளை உரிமையோடு கருதிச் செய்ய வேண்டும்

என்னும் உறுதிநிலை இதில் உணர வந்தது. பேசியுள்ள மொழிகளில் பாசப் பண்புகள் நேசமாய் ஒளி வீசியுள்ளன. அன்பு கனிந்த உரைகள் அனைவரையும் பரவசப்படுத்தி இன்பம் சுரந்து வருகின்றன. மானச தத்துவங்களை உய்த்துணரும்படி வார்த்தைகள் ஞான நலங்கள் தோய்ந்து வளமா வந்திருக்கின்றன.

என் ஏவலின் ஏகும் என்றதனால் ஏகமுடியாமல் ஏகமாய் இணைந்து நின்றவரை நோக்கி வேகமா விளம்பியுள்ளமை விளங்கி நின்றது. நின்றவரது நிலைமையையும், இருந்தவனது தலைமையையும் உரைகள் உணர்த்தி உறுதி நலங்களை விளக்கி நிற்கின்றன.

இவ்வீரனுடைய உறுதிமொழிகளால் அவர் தெளிவடைந்து தேற நேர்ந்தனர். உரிய கடமைகளை உணர்ந்து உரிமைகளைத் துணிந்து அரிய செயல்களைத் தெளிந்து ஆற்ற விரைந்தனர்.

கலங்கலர் ஏய செய்தல்
கடன்எனக் கருதிச் சூழ்ந்தார்.

இலங்கைத் தம்பி முதலானவர் கலங்குதல் நீங்கி நெஞ்சம் தெளிந்துள்ள நிலைமையை இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம். ஆண்டவன் ஏவியபடி செய்வதே அடிமைகளுக்கு அழகு என ஒருங்கே முடிவு செய்துள்ளனர். உள்ளே உறுதிபூண்ட அவ்வுண்மையை உரைகள் வெளியே தெளிவா உணர்த்தியுள்ளன. ஏய செய்தல் கடன் என்றதனால் அவரது உடன்பாடு உடனே தெரிய நின்றது. இவனது ஏவலில் அவர் கொண்டுள்ள ஆவலும் மதிப்பும் அயலே தெளிவா அறிய வந்தன. விடைபெற்று மீள நேர்ந்தவர் இராமபிரானுடைய அடியில் விழுந்து தொழுதனர். அதன்பின் சீதையை வணங்கினர்; கோசலைத்தாய், கைகேசி, சுமித்திரைகளைத் தொழுது துதித்தனர். பரதன் முதல் மூன்று தம்பியரையும் ஆன்ற அன்புரிமையோடு பண்பாய்ப் பணிந்தனர்.

மீண்டும் வந்து இராமனைத் தொழுது "ஆண்டவா! போய் வருகிறோம்" என்று நேய நெஞ்சினராய் யாவரும் பிரிந்தனர்.

குலம் கொண்ட அமரர் எல்லாம்
குனிசிலை வீரன் தன்னை
வலங்கொண்டு விடையும் கொண்டு
போயினர் வாழ்த்தி வாழ்த்தி. (தக்கயாகப்பரணி)

என்றபடி இக்கோமகனை வணங்கி வாழ்த்தி வழி வாய்ந்து போயினர். பிரிவு நிலைகளில் பரிவுகள் மிகவும் பெருகி ஓங்கின.

அனுமான் மாத்திரம் பருகு காதலோடு உருகி நின்முன். இராமன் அருள் கூர்ந்து நோக்கிப் "போய் வருக" என்னும் பொருளோடு ஊக்கினன். அந்த விழுமிய பசிய கோலத் திரு மேனியைத் தன் உள்ளத்தில் அழகு ஒழுகப் பாவித்தான்; அதன் பின் அழுத கண்ணனாய் உழுவலன்போடு தொழுது மீண்டான். அவனுடைய உழுவலன்பையும் உள்ளப் பாசத்தையும் புனித நிலையையும் கருதி இராமனும் சீதையும் மறுகி உருகினர். இருவர் கண்களிலும் நீர் பெருகி நின்றது. அன்பின் ஆர்வமும் அருளின் நீர்மையும் அதிசய நிலைகளில் பண்பு படிந்து விளங்கின. ஆன்ம உருக்கங்கள் மேன்மைகளாய் மேவி நிலவின.

விமானம் ஏறியது.

இலங்கையிலிருந்து வந்த தெய்வ விமானத்தில் யாவரும் ஏறினர். திருவயோத்தியை நோக்கித் தொழுதனர். "ராமஜெயம்! ராமஜெயம்!" என்ற நாம கீதங்கள் எல்லாருடைய வாய்களிலு மிருந்து நேம நியமங்களாய் எழுந்தன விமானமும் உல்லாச விநோதமா மேலே எழுந்தது; பின்பு வானவீதியில் வேகமாய்த் தென்திசையை நோக்கிச் சென்றது. விரைந்து பறந்த விமானம் கங்காநதியை அடைந்தது; அடையவே அதன் கரையில் இறங்கியது; தனது உறவினங்களோடு குகன் கீழே இறங்கினன். உரியவர்கள் அனைவரையும் பிரியமாய்த்தொழுது விடைபெற்றுத் தன் ஊரை நோக்கிப் போனன். போகவே விமானம் மீண்டும் மேல் ஓங்கி வேகமாய்ப் பறந்து போயது. கிட்கிந்தாபுரியை அடைந்தது. சுக்கிரீவன் முதலிய எல்லாரும் அங்கே இறங்கினர். வீடணன் யாவரையும் உழுவலன்போடு தொழுது கெழுதகைமையுடன் விடை பெற்முன். அதன்பின் அதிசய புட்பகம் அற்புத வேகமாய் விரைந்து பறந்து இலங்காபுரியை எய்தியது.

ககனத்தின் மிசையே எய்திக்
கனைகடல் இலங்கை புக்கான்

தன்னோடு விமானத்தில் வந்த துணைவர் அனைவரையும் அவரவர் பதிகளில் இறக்கிவிட்டு இறுதியில் வந்து விபீடணன்

இலங்கையை அடைந்துள்ளமையை இது வரைந்து காட்டியுள்ளது. விரைந்து வந்துள்ள வகை விழி தெரிய நின்றது.

ககனத்தின் மிசையே எய்தி என்றது வந்த வழியும் வகையும் தொகையாச் சிந்தை தெளிய வந்தது. ககனம் = ஆகாயம். வானவீதியும் விமான வேகமும் இம் மானவீரர்க்கு ஆன ஆதரவா அமைந்து அதிசய இன்பங்களை அருளி நின்றன.

நிறைந்த செல்வமும் சிறந்த கல்வியும் தெளிந்த அறிவும் உயர்ந்த ஆண்மையும் அரிய போர் வீரம் முதலிய பல வலிகளும் நலமா உடைய மேலான தீரர்கள் இராமனுக்கு எவ்வழியும் உரிமையாளராய்த் துணைபுரிந்துள்ளனர். ஆகவே இராமகாவியத்துள் அவர் சீவிய ஓவியங்களாய் மேவி மிளிர்கின்றனர். அவருள் அனுமான் அதிசய சோதியாய் யாண்டும் விழுமிய ஒளிகளை வீசி நிற்கின்முன். இராமகீதம் இம்மேதையால் மேல் ஓங்கியுளது.

இராமன் அரசு புரிந்தது.

உழுவலன்புடைய கிழமையாளர்கள் பிரிந்து போனபின் இராமபிரான் அரசு முறைகளை நெறியே கருதிப் புரிந்தான். தருமநீதிகள் எவ்வழியும் உரிமையா ஒளி மிகுந்து வந்தன. துயரினம் யாதும் தெரியாமல் உயிரினங்கள் யாவும் உயர் பேரின்பங்களில் தோய்ந்து வாழ்ந்தன வையகம் முழுவதும் செய்ய கோல் பரவிச் செய்யோன் எனத் தேசு வீசி வந்தது.

ஐயனும் அவரைநீக்கி அடிதொழு துணைவ ரோடும்
வையகம்முழுதும் செங்கோல் மனுநெறி முறையில்செல்லச்
செய்யமா மகளும் மற்றச் செகதல மகளும் சற்றும்
நையுமாறின்றிக் காத்தான் நானிலப் பொறைகள்தீர்த்தே. (1)

உம்பரோடு இம்பர் காறும் உலகம் ஓரேழும் ஏழும்
எம்பெரு மான்என்று ஏத்தி இறைஞ்சிநின்று ஏவல்செய்யத்
தம்பியரோடும் தானும் தருமமும் தரணி காத்தான்
அம்பரத்து அனந்தர்நீங்கி அயோத்திவந்து அமர்ந்தஅண்ணல்.
[விடை கொடுத்த படலம், 36, 37]

இராமபிரான் அரசு ஆண்டு அகிலமும் புரந்துள்ள நீர்மைகளை ஈண்டு ஊன்றி உணர்ந்து கொள்ளுகிறோம். பரிபாலன முறைகள் பண்பாடுகள் படிந்து வந்துள்ளன. சீவகோடிகளும் தேவகோடிகளும் மகிழ இவனது செங்கோல் எங்கும் சீரோடு

ஓங்கியுள்ளது. சூரியன் ஒளியில் பாரியல்கள் இயல்பா நிகழ்தல் போல் இக்கோமகன் ஆட்சியில் எல்லா மாட்சிகளும் எளிதே நிகழ்ந்துள்ளன. ஊரும் நாடும் உலகமும் உயர் பேரின்பநிலையில் ஒளி வீசி நின்றன. எவ்வழியும் திவ்விய மகிமைகள் விளங்கின.

வையகம் முழுதும் செங்கோல்
மனுநெறி முறையில் செல்ல.

இந்த ஐயனுடைய செங்கோல் ஆற்றியிருக்கும் அதிசய நீதிகளை இது துதிசெய்துள்ளது. ஆதவன் சோதி யாண்டும் பரவி ஒளி செய்தல்போல் இவனது நீதி எவ்வழியும் எளிதே பரவி ஒளிசெய்து உவகைகளை விளைத்து வந்தது. குற்றங்கள் நீங்கி யாவரிடமும் குணநலங்கள் ஓங்கி வர இக் குணசீலன் குறிக்கோளோடு செய்து வந்தான் ஆதலால் யாண்டும் எல்லா நன்மைகளும் இயல்பா நீண்டு வந்தன. உள்ளம் திருந்தினல் உலகம் திருந்தும் என்ற மானச மருமத்தை இவ்வள்ளல் நன்கு அறிந்துள்ளமையால் அதனை எங்கும் இயற்றி யருளினன்.

திருந்திய பண்புடைய பெருந்தகை எதிரே யாவும் திருத்த மாய் நேர்ந்தன. இயல்பான நியமங்கள் உயர்வா ஒளி புரிந்து ஓங்கின. அரசனுடைய அதிகார ஆற்றல்களைவிட அவனது நெறி நீர்மைகள் பேராற்றலுடையன ஆதலால் அவை யாண்டும் நீண்ட நன்மைகளை நேரே ஆற்றிநெடிய கீர்த்திகளை ஆக்கிவந்தன.

மன்னன் எப்படி, மன்னுயிர் அப்படி.

என்ற பழமொழி இம் மன்னர்பிரானிடம் நன்னயமா ஒத்து நின்றது. எவ்வுயிரும் யாண்டும் இன்புற ஆண்டு வருவதே ஆட்சி என்பதை இவன் காட்சியாக் காட்டி வந்தான். மாந்தர் மகிழ்ந்து வருவதையே இவ் வேந்தர் பெருமான் ஆழ்ந்த ஆவலோடு சூழ்ந்துவந்தான் ஆதலால் யாவரும் இவன்பால் பேரன்பு பூண்டு வந்தனர். ஆட்சி முறை அதிசய மாட்சியாயது.

பிறர் முகமலர்ந்து வாழ்வதைக் காண்பதே இப் பெருமானுக்குப் பேரின்பக் காட்சியாய் யாண்டும் பெருகி வந்தது.

The most delicious pleasure is to cause that of other people. (La Bruyere)

"பிறர் உவந்துவரப் புரிந்து வருவது உயர்ந்த இன்பமாய்

விளைந்து வருகிறது" என்னும் இது இங்கு அறிய வுரியது.

பிரஞ்சு தேசத்துப் பேரறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிருர். மன்னுயிர்க்கு இதம்செய்வதே மன்னவன் கடமை என்பதை எந் நாட்டு அறிஞரும் எவ்வழியும் இயம்பி வருகின்றனர்.

சீவர்களுக்கு இரங்கி அருள் புரிபவன் தெய்வீக நிலையில் உயர்ந்து வருகிருன். யாவரும் இன்புற அன்புசெய்து ஆண்டமையால் யாண்டும் ஆண்டவன் என இந்த ஆண்டகையைத் திசைநோக்கித் தொழுது எல்லாரும் துதித்து வந்தனர்.

தாயினும் உயிர்க்கு நல்லன் என்று தாய் வயிற்றிலிருந்து தோன்றிய மானிடர் எல்லாரும் இத்தூயவனை உழுவலன்போடு உவந்து போற்றி வந்தார். விழுமிய பண்போடு ஆட்சி நடந்து வந்தமையால் யாண்டும் மாட்சிகள் நீண்டு நிலவின. நிலமகளும் மலர்மகளும் நெஞ்சம் களித்து வந்தனர். நல்ல விளைவுகளும் செல்வ வளங்களும் எங்கணும் நன்கு பொங்கிப் பொலிந்தன.

வையம் முழுதும் தெய்வ நிலையமாய்ச் சிறந்து திகழ்ந்தது.

நையுமாறு இன்றிக் காத்தான்
நானிலப் பொறைகள் தீர்த்தே.

இந்த ஐயன் காத்துவந்துள்ள சீர்த்தியை இது வார்த்தைக் காட்டியுள்ளது. அரசனுக்குக் காவலன் என்று ஒரு பெயர் மேவியுளது. வேலி பயிர்களைக் காத்து வருதல்போல் அரசன் உயிர்களைக் காத்து எவ்வழியும் இனிது ஆதரித்து வருகிருன்.

அரச வேலி அல்லது யாவதும்
புரைதீர் வேலி இல். [சிலப்பதிகாரம், 23]

அரசனை வேலியாக மதுராபதி என்னும் தெய்வம் இங்ஙனம் கூறியுள்ளது. அரசன் காவல் இல்லையேல் வேலி இழந்த பயிர்கள்போல் உயிர்கள் நிலை குலைந்து சாலவும் வருந்த நேரும்.

யாரும் யாரையும் நலியாமல் எல்லாரும் நலமாய் வாழ நாளும் நாடி ஆய்ந்து எங்கும் நன்கு காத்து வருபவனே நல்ல அரசன் ஆகிருன்; அவன் பாங்கோடு தாங்கியுள்ளது செங்கோல் ஆகிறது. அவனுடைய ஆட்சியே யாண்டும் மாட்சியடைந்து வருகிறது. அவ்வரவு இங்கே உறவாத் தெரிய வந்தது.

பரிபாலனமான பாதுகாப்பு முறையில் பரம்பரையாகவே இந்த அரசகுடி உயர்ந்து வந்துள்ளது. முடிவில் காப்புக் கடவுளே இராமனாய் வந்து காக்க நேர்ந்துள்ளான். நையுமாறு இன்றிக் காத்தான் என்றது வையகத்தை எவ்வழியும் காணியாப் பேணி வந்துள்ளமை காண வந்தது. தருமம் சத்தியம் கருணை முதலிய இனிய நீர்மைகள் இப் புனிதனிடம் பெருகி வந்துள்ளமையால் மனித சமுதாயம் எங்கணும் அத் தேசத்தில் நல்ல திவ்விய குணங்கள் செவ்வையாய்ச் செழித்து விளங்கின.

உம்பரும் இம்பரும் உலகம் ஈரேழும் இப் பெருமானை உவந்து புகழ்ந்து உரிமை கூர்ந்து பேரன்பு புரிந்து வந்தன. இக் குலமகனுடைய ஆட்சியில் உலக வுயிர்கள் யாண்டும் மாட்சியாய் உவந்து வாழ்ந்து வந்துள்ளன. அவ்வுண்மைகளை உரைகளும் செயல்களும் தெளிவா விளக்கி ஒளிசெய்து நிற்கின்றன.

எம்பெருமான் என்று ஏத்தி
இறைஞ்சி நின்று ஏவல் செய்ய.

சீவகோடிகள் யாவும் இப் புண்ணிய மூர்த்தியை எண்ணி ஏத்தி வந்துள்ளமையை இது கண்ணியமாக் காட்டியுள்ளது. பிள்ளைகள் பெற்ற தாயைக் கருதியதுபோல் உலக மக்கள் இராமனை ஆர்வத்தோடு போற்றி வந்தனர் என்று கூறவில்லை; பரம் பொருள் என்றே எண்ணிப் பய பத்தியோடு துதித்து வந்தனர் எனத் துதி நிலையை உணர்த்தியிருக்கிறார். இராமநாதனுடைய உருவத்தை நேரே காணாதவரும் இவனது பேரை ஒரு புனித மந்திரமாக ஓதி இனிய அன்பு புரிந்து வந்துள்ளனர்.

சூரியன் ஒளிபோல் இக்கோமகனுடைய சீரிய புகழ் ஒளி யாண்டும் பரவி நீண்டு நிலவியுளது. இராம திவாகரன், இராமச் சந்திரன் என நூலோரும் மேலோரும் இச் சத்திய சீலனைப் போற்றி வருகின்றனர். கதிரவன் ஒளி பகலில் மாத்திரம் தெரிய வரும்; சந்திரன் ஒளி இரவில் மட்டும் இருளை நீக்கி மறைந்து போம்; இராமபிரானுடைய ஆணையும் ஆட்சியும் மாட்சியும் கீர்த்தியும் பகல் இரவு எப்பொழுதும் உலகம் எங்கணும் பரவி உயர் சோதியாய் ஒளிகள் வீசி எவ்வழியும் உலாவி யுள்ளன.

பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் இன்றும் இவ் வென்றி வீரனது விழுமிய பேர் எங்கும் சீரோடு பொங்கிப் பொலிந்துள்

ளது. ராமா என்னும் இந்த இரண்டு எழுத்துப்பேர் இம்மையும் மறுமையும் இன்பம் தரும் இனிய அமுதமாக மனித இனம் மதித்து வருகிறது. மாதவரும் தாரக மந்திரமா இதனை ஆதரவோடு ஓதி வருகின்றனர். புனிதநாமம்புண்ணியநிலையமாயுளது.

இக்கோமகன் கோமுறை புரிந்த சீவியகாலத்தில் இவனது நாமம் சீவசஞ்சீவியாகவும் தேவநிதியமாகவும் யாவரும் ஆவலோடு பேசி வர யாண்டும் தேசு வீசி நீண்டு நிலவி வந்தது.

ராமோ ராமோ ராமஇதி ப்ரஜாநாம் அபவங்கதா:
ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி.
(வால்மீகி, யுத்த, *131-101*)

"இராமபிரான் தேசத்தை ஆண்டு வரும்பொழுது ராம ராம ராம என்னும் இந் நாம ஒலிகள் எல்லாரிடமும் நேமமா நிலவியிருந்தன; உலகம் முழுவதும் இராமமயமாகவே இருந்தது" என வால்மீகி முனிவரும் இவ்வாறு பாடியுள்ளார்.

மாந்தருடைய உள்ளங்களில் இவ் வேந்தர்பிரான் விளங்கி வந்துள்ளமையை இதனல் உணர்ந்து கொள்கிறோம். அரிய ஆதரவுகள் செய்து வரவே உரிய மாதா என்று உலகம் கருதி உருகிவர நேர்ந்தது. பேரைக் கூறுவதே பேரின்பமாக எண்ணி வந்துள்ளமையால் இப் புண்ணியமூர்த்தி செய்துவந்துள்ள தண்ணளியும் தகவும் தாய்மைப் பாதுகாப்பும் தெரிய நின்றன.

தம்பியரோடு தானும் தருமமும்
தரணி காத்தான்.

யாவரும் சேமமாய் வாழ நேமநியமமா இராமன் பாது காத்து வந்துள்ளான். அவ்வுண்மையை இது நுண்மையா விளக்கியுளது. சிறந்த மதிமந்திரிகள் பலர் அமைந்திருந்தாலும் தம்பிமார் மூவருமே இந் நம்பியின் அயலே நின்று பரிபாலன முறைகளை நன்கு கவனித்து வந்தனர். ஆட்சித் திறம் அதிசய மாட்சிகளாய் யாண்டும் நீண்டு நெறியோடு நிலவி நின்றது.

மலைகள் கடல்கள் முதலாக அளவிடலரிய பொருள்களைத் தரித்துள்ளமையால் பூமிக்குத் தரணி என்று ஒரு பெயர் நேர்ந்தது. எல்லாவற்றையும் இயல்பாகத் தாங்கியுள்ள இப் பூமண்ட

லத்தை இக்கோமகன் உயர்வாகத் தாங்கி உரிமையோடு பாது காத்து வந்தான். பரிபாலனம் பரம பாலனமாய் வந்தது.

கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனவன் என இம் மானவனை *முன்னம் குறித்தார். அக்குறிப்பைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள ஈண்டு விரித்து விளக்கினர். இனிய உரிமையாளனைப் பிரிந்து தனிமிகுந்த பரிதாபமாய் மறுகியிருந்த நிலமகள் அரியபல சிறப்புகளை அடைந்து பெரிய மகிமைகளோடு விளங்க இப் பெருமான் இதுபொழுது காத்தருளினன். உலக உயிர்களுக்கு உயிர் என இக் குலமகன் மருவியுள்ளமையை மருமமா உணர்த்தித் தரும நீர்மைகளைத் தகவா விளக்கியுள்ளது.

பாதுகாப்புமுறை எவ்வழியும் செவ்வையாய் நீதிநெறியோடு நிலவி நின்றது. மனித சமுதாயத்தின் வாழ்வுகள் யாண்டும் இனிமை சுரந்து புனிதநிலைகளில் பொலிந்து வந்தன. ஆட்சியின் ஆதரவால் மாட்சிகள் எங்கணும் நீண்டு நிலவின. அந்த நிலைமை தலைமைகள் காட்சிகளாக் காண வந்தன.

தானும் தருமமும் என்றது இக் கோனின் மகிமையைத் தகுதியா விளக்கி நின்றது. பசியகோலத் திருமேனியனாய் இராமன் என்று ஒரு பெயரைத் தாங்கி மனித உருவில் மருவி மன்னர் மன்னவனாய் ஆட்சி புரிந்திருந்தாலும் ஒரு தரும தேவதையாகவே இக் கருமவீரன் காட்சி புரிந்து வந்தான்.

தருமமூர்த்தி என்பது இராமனுக்கு உரிமையாய் அமைந்த பெயர். பேரின் சீர்மை, நீர்மைகளால் நிறைந்து எழுந்தது. அந் நிலைமையை யாண்டும் கூர்மையா நேரே உணர்ந்து வருகிறோம்.

இயலாலும் செயலாலும் உரையாலும் முறையாலும் எவ்வழியும் அறம் வளர இக்குலமகன் உரமா வளர்ந்து வந்துள்ளான். புண்ணிய சீலர்களையும் நீதிபதிகளையும் கண்ணியமாப் புகழ்ந்து சொல்லும்பொழுது இராமமூர்த்தி! என்று உவந்து கூறுவது இந் நாட்டில் யாண்டும் வழக்கமாயுள்ளது. தனது அருமை நாயகனை உரிமையாக் கூறும்பொழுது புண்ணியமூர்த்தி என்று சீதை யாண்டும் பெருமையாப் போற்றி வந்துள்ளாள்.

தாதைசொல் தலைமேல் கொண்ட
தாபதன் தரும மூர்த்தி. (நாகபாசம், 275)

* இந் நூல் பக்கம் 5518 வரி 5 பார்க்க.

இராமபிரானது நிலைமை நீர்மைகளை இதில் தலைமையாக் காணுகிறோம். தருமமூர்த்தி என்று பலராலும் காவியத்தில் இவ்வாறு இப்பெருமான் போற்றப் பெற்றுள்ளான். இக்கொற்றக் குரிசில் இன்று கோமுறை புரிய நேர்ந்துள்ளமையால் தரும தேவதை பெருமகிழ்ச்சி அடைய நேர்ந்தது. அறம் காக்க வந்தவன் அவனியைக் காத்து யாண்டும் அருள் புரிந்து வருகிறான்.

அம்பரத்து அனந்தர் நீங்கி
அயோத்திவந்து அமர்ந்த அண்ணல்.

ஈண்டு அரசுமுடி சூடி ஆட்சிபுரியும் மன்னர்பிரானை இன்னவாறு நன்னயமா விளக்கி உண்மையைத் துலக்கி யிருக்கிறார்.

அம்பரம்=கடல் அது இங்கே பாற்கடலைக் குறித்து நின்றது. அங்கே அரிதுயில் அமர்ந்திருந்த திருமால் அதனைநீங்கி அயோத்தி நகரில் வந்து அரசர் பெருமானாய் மணிமுடி சூடி அரியணையில் அமர்ந்து அகிலமும் புரந்து அருள் புரிந்திருக்கிறார்.

தன்னிகரில்லாத் தலைவன் ஆன தேவ தேவனே தனது காவியநாயகன் என்பதை இடங்கள்தோறும் கவி சுவையாக் குறித்து வந்தார்; ஈண்டு முடிவில் இவ்வாறு முடித்திருக்கிறார்.

பரமபதநாதன் அயோத்தி வேந்தனாய் ஆட்சி புரிந்துள்ளான். அந்த மாட்சி காட்சிக்கு வந்தது. கடலில் உறங்கியிருந்த பெருமாள் அவ்வுறக்கத்தைவிட்டு எழுந்து நிலத்தில் வந்து தங்கி விழிப்போடு வேலை செய்கிறார். அச் செயல் தெரிய நின்றது.

பழைய காப்புக் கடவுள் புதிய காவலனாய் வந்து பூவலயத்தைக் காத்தருளுதலால் இந்தப் பாதுகாப்பால் சீவகோடிகள் யாவரும் பேரறிவுடையராய்ப் பேரின்பங்களை நுகர்ந்து வந்தனர். சுகபோகங்கள் யாண்டும் உயர் விவேகங்களோடு தோய்ந்து தரும நீதிகள் வாய்ந்து ஒளி மிகுந்து வந்தன.

இராம காவியத்தின் பயன்.

அரிய பல இனிய நீர்மைகள் நிறைந்த இப்புனிதனது சீவிய சரித்திரம் மனித மரபுக்கு எவ்வழியும் செவ்வையா மதிநலங்களை அருளி வருகிறது. உள்ளத்தைப் பண்படுத்தி உணர்வை ஒளி செய்து உயிரை உயர்த்தி வருதலால் இக் காவியம் சீவிய அமுதமாய்ச் சுவை சுரந்து சிறந்து திகழ்கிறது. கருதி உணர்வார்

எவர்க்கும் உறுதி நலங்களை உதவி உய்தி புரிந்து வருதலால் இது தெய்வீக நூலாய்ச் சிறந்து எங்கும் தேசு புரிந்து வருகிறது.

இராவணன் தன்னைவீட்டி இராமனாய்வந்து தோன்றித்
தராதல முழுதும் காத்துத் தம்பியும் தானும் ஆகப்
பராபரம் ஆகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி ஆகிப் பின்னும் நமனையும் வெல்லு வாரே.

தான் செய்த நூலின் பலனைக் கவிஞர் பெருமான் இவ்வாறு சால்போடு விளக்கியிருக்கிறார். இங்ஙனம் பயனை வியனா உணர்த்தியது நயனும் நன்மையும் தெரிய. ஓதி உணர்வதில் உயர்ந்த அறிவின்பங்கள் தானாகவே நேரே உளவாகின்றன.

மனிதன் எதனோடு பழகி வருகிறானோ அதன்படியே ஆகி வருகிறான். புனித மூர்த்தியான இராமனுடைய இனிய குண நீர்மைகள் இக்காவியத்துள் யாண்டும் இனிது நிறைந்திருக்கின்றன. அற்புதக் கற்பரசியான சீதாதேவியின் திவ்விய குண நலங்கள் எவ்வழியும் செவ்வி சுரந்துள்ளன. அவற்றை உள்ளே கருதி உணருந்தோறும் வெளியே பிறர்க்கு உரிமையா உரைக்குந்தோறும் அரிய தரும நீர்மைகள் பெருகி வருகின்றன. வரவே அந்த உயிர் புண்ணிய நிலையில் பொலிந்து விளங்குகிறது; அதனால் இந்த உலகத்தில் உயர்ந்த அரச பதவியை அடைந்து சிறந்து மகிழ்கிறது; பின்பு பிறவி தீர்ந்து பேரின்பம் பெறுகிறது.

இம்மை மறுமை என்னும் இருமையும் இன்பம் தந்து என்றும் நிலையான பேரின்ப வீட்டையும் அருளும் என்றதனால் பரம்பொருளின் காவியம் ஆகிய இது சீவகோடிகளுக்குச் சீவசஞ்சீவியாய்த் தேவ அமுதமாய்த் தேசு மிகுந்துள்ளமை தெரிய வந்தது. நூலின் பலனை நுவன்றது ஞாலம் தெளிந்து நலம்பெற. உயிரின் ஊதியம் உயர்நீதியுடையதாய் ஒளிவீசியுளது.

நராபதி ஆகிப் பின்னும்
நமனையும் வெல்லுவாரே.

இராவணனை வென்று வெற்றித்திருவுடன் வந்து திருவயோத்தியில் அமர்ந்து அரசுமுடி சூடி ஆட்சி புரிகின்ற இராமபிரானுடைய சீவிய சரிதையை ஓதி உணர்பவர்க்கு உளவாகின்ற ஊதியங்களை உறுதியாய் இறுதியில் இங்ஙனம் உணர்ந்து கொள்ளுகிறோம். அரிய பெரிய இனிய பலன்கள் தெரிய வந்தன.

நராபதி என்றது மனித சமுதாயத்துக்குத் தலைவனுயுள்ள அரசனை. அரசபதவி உலகில் மிகவும் பெரியது; அது இங்ஙனம் அறிய வந்தது. பிறப்பு இறப்புகள் ஆகிய துன்பங்கள் யாவும் அறவே நீங்கி என்றும் நிலையான பேரின்ப நலனைப் பெறுவர் என்பார் நமனையும் வெல்லுவாரே! என்றார் இதில் மருவியுள்ள ஏகாரத்தின் இனிய தொனியை நுணுகி உணர வேண்டும்.

இருமையும் பெருமையாய் மகிமை தருகிற இத்தகைய பெரிய ஆன்ம ஊதியத்தை இழந்துவிடாதீர்கள்! இழந்தால் அது கொடிய நெடிய பரிதாபமேயாம் எனக் கவி பரிவு கூர்ந்து உரிமையோடு உறுதிநலனைத் தெளிந்து துணிந்து மொழிந்துள்ளார்.

அவ்வுண்மை நுண்மையா உணர வந்தது. பண்பினைப் பகருவார்கள் என்றது காவியத்தின் சீவிய நீர்மைகளைக் கூர்மையா ஓர்ந்து தெளிய. குணநலங்களே மணமா மருவியுள்ளன.

இராமசரிதம் அரிய பெரிய இனிய நீர்மைகள் தோய்ந்தது; அன்பு கனிந்தது; அருள் சுரந்தது; சத்தியம் தருமம் முதலிய உத்தம நீர்மைகள் யாவும் ஒருங்கே நிறைந்தது; காதல் வீரம் முதலிய நிலையில் சிறந்து மிளிர்வது; ஓதியுணர உவகை தருவது; புனித நெறிகள் இனிது பொலிந்தது; மனித மரபு மதி தெளிந்து விதிமுறை ஒழுகிவிழுமியநிலையில்உயரஎவ்வழியும் ஒளிபுரிந்துளது.

நீதிநெறிகளில் ஒழுகி எவ்வழியும் திவ்விய நீர்மைகளோடு சீர்மையாய்ச் சிறந்திருந்த இராமபெருமானுடைய காவியம் ஓதி ஓதி உணருந்தோறும் சீவகோடிகளுக்குச் சீவிய அமுதமாய் இன்பம் சுரந்து வருதலால் உலக மொழிகள் பலவும் இதனைக் கிழமையாத் தழுவி மகிழ்ந்துள்ளன. வடமொழியிலும் தென் மொழி முதலிய மொழிகளிலும் பல முனிவர்களும் கவிஞர்களும் இராம சரிதத்தை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து பாடியுள்ளனர்.

தாயரும் இளைஞரும் சனகன பாவையும
மேயபூ வுலகரும விண்ணு ளோர்களும
ஏயபேர் மகிழ்ச்சியோடு இருப்ப எங்கணும்
நேயனோர் மதிக்குடை நிழற்றினன் அரோ. (1)

உரை தரு தீயன ஒழிந்து பாறின;
மருவுநல அறமெலாம வளர்ந்த; மாமழை
இருவளம சுரந்தன; ஏகதாரனும்
கரியவன கடற்புவி காவல் செய்யவே. (2)

கரங்களில் கணைபொழி கரிய மாமுகில்
தரங்கநற் கடற்புவி சார்ந்து காக்குநாள்
புரங்களும் நதிகளும் புள்ளும் மாக்களும்
மரங்களும் மலைகளும் மகிழ்ச்சி கூர்ந்தவே. (3)

[பாகவதம், 9-9]

இராமபிரான் இராவணனை வென்று அயோத்தியை அடைந்து அரசுமுடி புனைந்து ஆட்சி புரிந்தபொழுது உலகஉயிர்கள் உவந்து வாழ்ந்து வந்துள்ள நிலைகளைச் சுகமுனிவர் இவ்வாறு உவகை மீதூர்ந்து உரைத்திருக்கிறார். உரைகளில் மருவியுள்ள பொருள் நயங்களையும் நிலைகளையும் ஊன்றி உணர்ந்து கொள்ளவேண்டும்.

அமுத குண சீலனான அதிசய வீரனுடைய புனித சரிதம் மனிதமரபுக்கு அரியபல குணநலங்களை அருளி இனிய நிலையமாய் எழில் மிகுந்து திகழ்கின்றது. கருதுவார் எவர்க்கும் உறுதியான பலன்களை உதவிவருதலால் அற்புதக் கற்பகம்; அரிய காமதேனு; பெரிய தெய்வநிதி; பேரின்ப நிலையம் என வையம் இதனை வாழ்த்தி வணங்கிப் போற்றி வருகிறது.

இராமபிரான் தோன்றியுள்ளமையால் இந்த நாவலந்தீவு பூவலயத்தில் புகழ் ஓங்கியுள்ளது. இவனது அதிசய சீவியம் இதிகாசமாய் இசைபெற்று நிற்கிறது. மண்ணவர்க்கு, விண்ணவர் அமுதமாய் இப்புண்ணிய மூர்த்தியின் சரித்திர வரலாறுகள் எண்ணரிய மேன்மைகளை அருளிக் கண்ணியம் சுரந்து வருகின்றன.

Biography is the most universally pleasant and profitable of all reading. [Carlyle]

“சிறந்த சீவிய சரித்திரம் எல்லா நூல்களினும் எங்கும்மிகுந்த இன்பமும் பயனும் ஈய வல்லது எனக் கார்லைலில் என்னும் ஆங்கில அறிஞர் இங்ஙனம் பாங்கோடு கூறியிருக்கிறார்.

மேன்மையான குணங்களை நினைந்து வருதலால் மாந்தர் மேலானவராய் உயர்ந்து வருகிறார். நல்ல நீர்மைகள் நிறைந்துள்ளமையால் இராம சரிதம் யாண்டும் நலம் பல பயந்து வருகிறது. படித்தவர் கேட்டவர் அனைவரும் பலனை அடைகின்றார்.

வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடை யாதொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத்து இராமன் தன்கதை
அடைவுடன் கேட்பவர் அமரர் ஆவரே. (1)

இராகவன் கதையில் ஒருகவி தன்னில்
ஏகபா தத்தினை உரைப்போர்
பராவரு மலரோன் உலகினில் அவனும்
பன்முறை வழுத்த வீற்றிருந்து
புராதன மறையும் அண்டர்பொற் பதமும்
பொன்றுநாள் அதனினும் பொன்று
அராவணை அமலன் உலகெனும் பரம
பதத்தினை அடைகுவர் அன்றே.

இன்னவாறு பல சுருதிகள் பல வந்துள்ளமையால் இராம பிரானது திவ்விய சரிதத்தால் உலகம் அடைந்துள்ள நலன்களை அறிந்து இதன் புனித நிலைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

தருமமும் நீதியும் வீரமும் உண்மையும் வண்மையும் ஓர் அழகிய உருவமாய் மருவியிருந்து விழுமிய நிலையில் உலகம் புரந்து வந்தது என மாதவர் பலரும் மகிழ்ந்து புகழ்ந்து வர இராமன் மாட்சியாய் ஆட்சி புரிந்து வந்தான். அதிசய நீதிமான் பாது காத்து வந்தமையால் உயிரினங்கள் எவ்வழியும் திவ்விய போகங்களை நுகர்ந்து யாண்டும் சுகமா வாழ்ந்து வந்தன. நாடும் மக்களும் மேலும்மேலும் நலமாய்வாழ்ந்துவரச் செங்கோல்செலுத்தி வருங்கால் இடையிடையே அரியபல வேள்விகளை இனிது செய்தருளினன். வேத விதிகளும் நீதிமுறைகளும் இந்நீதிமானுடைய செயல் இயல்களாய் நிலவி வந்தன. இந்த ஆண்டகையின் ஆட்சி முறையில் பூமகளும் புவிமகளும் நீண்டகாலம் நெடிது மகிழ்ந்து வந்தனர். பதினோராயிரம் ஆண்டுகளாக இவ் வேந்தர் பெருமான் மாந்தர் மகிழ ஆண்டுவந்தான் என மூலநூல்கள் பலவும் வியந்து புகழ்ந்துள்ளன. அரச நெறிகள் தரும ஒளிகளா மிளிர்கின்றன.

திருமகள் முலைகள் திளைத்திடு தழும்பில்
சிலைத்தழும்பு இருந்ததோள் இராமன்
புரவிமா மகம்ஓர் பத்துஇனி தாற்றிப்
பூசுரர்க்கு இருநிதி வழங்கி
உரவுநீர் வேலி உலகெலாம பதினொ
ராயிரம் பருவம்ஓர் குடைக்கீழ்த்
தருமமும் தவமும் மெய்மையும மேனமேல்
தழைப்புறப் புரந்தன னன்றே (கூர்ம புராணம்)

இப் பெருமானுடைய ஆட்சியில் நீதியும் தருமமும் சத்தியமும் தழைத்து வந்துள்ள நிலைகளை இது நன்கு விளக்கியுள்ளது.

———

எட்டாவது அதிகாரம்.

காவிய சீவியம்.

இராமபிரானுடைய சரித வரலாறுகளில் அரியபல மகிமைகள் மருவியுள்ளன. மனித இனம் புனிதமாய் இனிது வாழ்ந்து மறுமை நலங்களை அடையவுரிய நெறிமுறைகள் நிறைந்திருக்கின்றன. தந்தை, தாய், தமையன், தம்பி, மனைவி, மக்கள், உறவினர், நண்பினர், ஊரார், நாட்டார் முதலிய பலவகை நிலையினரிடமும் ஒருவன் கண்ணியமாய்ப் பழகி ஒழுக வேண்டிய பான்மைகள் மேன்மையா விளங்கி நிற்கின்றன. கலையின் சுவைகளும் நெறி நியமங்களும் தரும நீதிகளும் யாண்டும் நீண்டு நிலவுகின்றன. எவ்வழியும் திவ்விய தேசுகள் செவ்வையாய் ஒளி வீசியுள்ளன. ஆன்ம நீர்மைகள் மேன்மையா மேவுகின்றன.

அறிவிற்கு அமுத போகமாய் அமைந்துள்ள இக் காவியத்தின் சீவிய நிலைகளை ஓரளவு இனிமேல் இதில் காண நேர்ந்துள்ளோம். புலமை உலகத்தின் நிலைமை நீர்மைகள் தலைமையான இன்பங்களை அருளி வருகின்றன. மானச மருமங்கள் ஞான ஒளிகளை வீசி நலன்கள் பல சுரந்து நன்கு மிளிர்கின்றன. அரிய குலமுறைகள் பெரிய தலைமுறைகளாய் வந்துள்ளன.

அசன்.

இந்தக் காவிய நாயகனுன இராமனைத் தனக்கு இனியமைந்தனுப் பெற்று உலகம் இன்புறத் தந்துள்ள தந்தை தசரதன். அந்த அரசர் பெருமானைப் பெற்றருளினவன் அசன். அந்த மன்னன் தந்தை ரகு. ஆகவே இராமனுக்கு அசன் பாட்டன்; ரகு பூட்டன். இராகவன் என்று இராமனுக்கு ஒரு பெயர் மருவியுளது. இரகு மரபில் பிறந்தவன் என்பது அதன்பொருள். இந்த அரசகுலம் வைவசுவத மனுவிலிருந்து வழிமுறையே விழுமிய நிலையில் விளங்கி எவ்வழியும் கெழுதகைமையாய் வந்துள்ளது.

அசன் சிறந்த அழகன்; தெளிந்த அறிஞன்; உயர்ந்த போர் வீரன். இவனுடைய மனைவி பெயர் இந்துமதி. அவள் விதர்ப்பதேசத்து அரசன் மகள். பேரழகி. அவளுடைய திருமணம் சுயம்வரமாய் நடந்தது. அவளை மணந்து கொள்ள விழைந்து

அரசர் பலர் அங்கு வந்திருந்தனர். அசனும் சென்றிருந்தான். அப்பொழுது இவனுக்கு வயது இருபத்தேழு. அந்த மன்னர் குழுவில் இவன் மகிமையோடு விளங்கியிருந்தான். இளமை எழிலும் உருவ நலனும் பருவ வளமும் ஆண்மையும் இராச கம்பீரமும் இவனிடம் மேன்மையாய் அமைந்திருந்தமையால் யாவரும் இவனை வியந்து நோக்கி உவந்து நின்றனர். ரகு வம்சம் என்னும் வடமொழிக் காவியத்தில் இந்தச் சுயம் வரத்தின் நிலைமையையும், இவனது தலைமையையும் காளிதாசர் மிகவும் அழகாக விளக்கியிருக்கிறார். எழிலும் வீரமும் மருவியிருந்தமையால் முருகப் பெருமானை இவனுக்கு உவமை கூறியுள்ளார். உவமானங்களை நவமா இணைப்பதில் அந்த மகா கவிஞர் அதிசய சாதுரியம் வாய்ந்தவர். "ஒப்பனையில் கற்பனையில் ஒப்புயர் வில்லாக்கவிஞர்" என அவரது அற்புத நிலையைக் கவிகள் உவந்து போற்றியுள்ளனர். அவர் இந்த இளவரசனை அழகா விளக்கி யிருக்கிறார்.

பூயிஷ்டம் ஆஸீ துப மேய காந்தி:
மயூர ப்ருஷ்டாச்ரயிணா குஹேந. (ரகுவம்சம், 6, 4)

"மயில்மீது அமர்ந்திருந்த குகன்போல் மிகுந்த எழிலோடு சிறந்த சிம்மாசனத்தில் அசன் அமர்ந்திருந்தான்" என இங்ஙனம் குறித்திருத்தலால் இவனுடைய உருவம் பருவம் அழகு கம்பீரம் வீரம் முதலிய நிலைகளை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

வந்திருந்த வேந்தர் எவரையும் விரும்பாமல் இந்துமதி இச் சுந்தரனையே தனது கணவனாக உவந்து மணமாலை சூட்டினாள். சூட்டவே அரசர் யாவரும் வாட்டம் அடைந்தனர். அவருள் மகத தேசத்து மன்னன் வீரவாதம் கூறிப் போரை மூட்டினான்: "அழகால் மாத்திரம் அரச குலத்தில் ஒருவன் மகிமை காண முடியாது; வீரமே மேன்மைக்கு அறிகுறி; போரில் வென்ற வீரர்க்கே இந் நேரிழை உரிமையாம்" என்று அவன் மூட்டி விடவே போர் மூண்டது. இந்துமதி சிந்தை கலங்கினாள். அவளைத் தேற்றித் தந்தையிடம் இருத்தி விட்டு இவன் போரில் ஏறினான். யாவரும் இவன் எதிரே யாதும் செய்ய முடியாமல் தோல்வியடைந்து தொலைந்தனர். அதன்பின் இவன் மனைவியோடு திருவயோத்தியை அடைந்தான். இவனுடைய பேரும் சீரும் பாரெங்கும் பரவி ஓங்கின. எல்லாரும் இவனை உயர்ந்த வில் வீரன் என்று வியந்து புகழ்ந்து உவந்து போற்றி வந்தனர்.

வில்என்னும் நெடுவரையால் வேந்துஎன்னும் கடல்கலக்கி
எல்என்னும் மணிமுறுவல் இந்துமதி எனுந்திருவை
அல்என்னும் திருநிறத்த அரிஎன்ன அயனஎன்பான்
மல்என்னும் திரள்புயத்துக்கு அணிஎன்ன வைத்தானே.

(இராமா, குலமுறை, 12)

இராம காவியத்தில் இராமனுடைய பாட்டன் இவ்வாறு பாராட்டப்பட்டுள்ளான். இந்தக் கவியின் பொருளையும் சுவையையும் கருதிக் காணுங்கள். திருமால் மந்தரமலையை நாட்டிப் பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து கிடைத்த இலட்சுமியைத் தனக்கு உரிய மனைவியா மணந்து கொண்டான்; அதுபோல் தன் வில்லைக்கொண்டு வேந்தர்கள் ஆகிய கடலைக் கலக்கி அதிலிருந்து எழுந்த அமுதமயமான இந்துமதி என்னும் திருவை அசன் மணந்து அதிசய வீரனாய் விளங்கி நின்றான். தேவர்களுள் திருமால் சிறந்துள்ளதுபோல மனிதர்களுள் அசன் உயர்ந்துள்ளான்: அவன் உலகங்களை இனிது காத்துக் காப்புக்கடவுள் என நிலவியுள்ளான்; இவன் உயிரினங்களை உரிமையோடு பேணிக் காவலன்,புரவலன் எனஒளிமிகுந்துள்ளான் ஆர்வமாக்கொண்ட திருவை அவன் மார்பில் மணியா வைத்தான்; வெற்றி நிலையில் இவன் பெற்ற திருவைத் தோளுக்கு அணியா வைத்தான். அரியோடு சரிசமானமாய் இம் மன்னன் மருவியுள்ளமை கருதியுணர வந்தது. அசன் அயன் என வருதலால் நயனும் வியனும்.

வேந்தரைக் கடல் என்றது அடலாண்மையோடு அளவிடலரிய நிலையில் பொங்கி மூண்டு பொருத அவரது வலிமையும் நிலைமையும் தெரிய. ஆண்மையும் வீரமும் அரச மரபின் பான்மைகள் ஆகலால் அந்தமேன்மைகள் யாவும் இவனிடம் கேண்மைகளாய் மேவியுள்ளன. அவ்வுண்மைகள் ஈண்டு உணர வந்தன. தன்னந்தனியே நின்று வேந்தர் பலரையும் வென்று வந்தமையால் வெற்றிக் குரிசில் எனவிழுமிய புகழோடு இவன் ஒளிமிகுந்துநின்றான். தன்னுடைய இசை திசைகள் தோறும் பரவிவர இம்மன்னர் மன்னவன் மன்னிய சீரோடு நன்னயமாய் மருவியிருந்தான்.

அதிசய அழகியாகிய இந்துமதியுடன் அமர்ந்து அரிய பல போகங்களை நுகர்ந்து இவன் அரசுபுரிந்துவந்தான். தருமநீதிகள் எங்கும் பொங்கி வர ஆட்சியை மாட்சியாய் நடத்தி வருங்கால் முதல்வன் அருளால் இவன்பால்ஒருஇனிய புதல்வன் பிறந்தான்.

இந்துமதி திருவயிற்றில் இருந்துபல கலைநிறைந்த
சந்திரன்போல் ஒருபுதல்வன் தரணிதனில்வந்துதித்தான்.

இந்தக் குழந்தையைக் கண்டு சதிபதிகள் இருவரும் அதிசய ஆனந்தம் அடைந்தனர். எவ்வழியும் ஆரா அன்போடு பேணி வந்தனர். அரிய தவ நிலையில் வந்துள்ள இந்த அருமை மகனே தசரதன் என்னும் பெயரால் உயர் புகழோடு ஒளி மிகுந்துள்ளான். இக் குலமகனால் உலகம் பல வழியிலும் உயர்ந்தது.

திசைவிளங்கநல் அறத்தினை நிறுவிய செங்கோல்
இசைதரும்படி செலுத்திய ரகுஎனும் இறைவன்
அசன்எனும் பெயர் அரசனை அளித்தனன்; அசனும்
தசரதனதனைத் தந்தனன் முச்சகம் தளிர்ப்ப.

(பாகவதம், 9-8)

ரகுமகன் அசன்; அசன்மகன் தசரதன் என வழிமுறையை இது விழி தெரிய விளக்கியுளது. தீர்க்கவாகு என்பவன் அசனுடைய பாட்டன்; ரகுவின் தந்தை. வந்த மரபு வரிசை வாய்ந்தது.

கரும்பெனத் திரண்டு கவின்வளர் மென்தோட்
கன்னியர் கண்ணொடு நெருங்கிச்
சுரும்புவீழ் மலர்த்தார் ஆங்கவன் புதல்வன்
தீர்க்கவா குப்பெயர்த் தோன்றல்
பொருந்தலர்க் கடந்த ஆங்கவன் புதல்வன்
புரந்தரன் வெஞ்சமத்து அஞ்சி
இரிந்துவென் கொடுப்ப வாளமர் கடந்த
இரகுஎன்று உரைத்திடும் ஏந்தல்.

அணையகதிர் வேலுழவன் தந்த மைந்தன்
அரசர்மணி முடியுரிஞ்சி அலங்கு சோதிப்
புனைகழற்கால் தழும்பிருந்த அயனஎன்று ஓதும்
போர்வேற்கை முனைவன் முக்கட் புனிதற்போற்றி
வினையறநோற்று இனிதருளும மைந்தன்நாமம்
வெள்வேலால் திசைபத்தும் வென்ற சீர்த்திக்
கனைகடலும் நெடுவரையும் வெண்மை தீற்றும்
கதிர்மௌலித் தயரதன்என்றுரைப்பர் மாதோ.

(கூர்ம புராணம், சூரியன் மரபு 51-52)

தசரதனுடைய தந்தை, பாட்டன், பூட்டன்களை இதில் நாட்டமா அறிந்து மரபு முறைகளை நன்கு தெரிந்து கொள்ளுகிறோம்.

திசை பத்தும் வென்ற சீர்த்தித் தயரதன் என்றது இம் மன்னனுடைய பெயருக்கு உரிய காரணத்தைப் பூரணமாக் காட்டி நின்றது. அயோத்தி அரசாது குலமுறையும் குடிப்பிறப்பும் உலகம் நலமுற ஒளிபுரிந்து வந்துள்ளன. சூரியனிடமிருந்து வெளிவருகிற கதிர் ஒளிகள்போல் சூரிய குலத் தோன்றல்கள் தோன்றியுள்ளனர். அவருடைய தோற்றங்கள் ஏற்றங்களாம்.

தசரதன்.

இந்த அரசர் பெருமான் அதிசய மகிமைகள் உடையவன். அசமகாராசனின் அருமைப் புதல்வன். இந்துமதி ஈன்றருளிய ஏந்தல். இளமையிலேயே அரிய பலகலைகளையும் பயின்று தெளிந்து பெரிய மதிமானாய் இவன் விளங்கியிருந்தான். வாள் வேல் வில் முதலிய படைக் கலப் பயிற்சிகள் இவனிடம் அடைக்கலம் புகுந்திருந்தன. அரிய திறல்களோடு இனிய குண நீர்மைகளிலும் தனியே இவன் உயர்ந்து விளங்கினான். தன் மைந்தனைக் காணுந்தோறும் இந்துமதி மிகவும் சிந்தை மகிழ்ந்து வந்தாள். உரிய பருவம் எய்திய போது முறையே இவன் அரசுரிமையை அடைநதான். இறை மாட்சிகள் யாவும் இவனிடம் நிறைமாட்சிகளாய் நிலவி நின்றன. மாந்தரும் வேந்தரும் மகிழ்ந்து வாழ்ந்துவர யாண்டும் செங்கோல் இவன் செலுத்தி வந்தான்.

இவனுடைய பட்டத்துத் தேவி பெயர் கோசலை.

கைகேசி, சுமித்திரை என்னும் வேறு இரண்டு அரச குமாரிகளையும் இவன் மணந்து கொண்டான். அன்புநலம் கனிந்தஇன்ப போகங்கள் இவன்பால் பண்பு படிந்து வந்தன. செவ்விய நலங்கள் எவ்வழியும் திவ்விய நிலையில் செழித்து நின்றன. அரசியல் முறைகளில் அதிசய சதுரன் ஆகலால் உலகம்துதி செய்துவர விதிமுறையே ஆட்சியை இவன் மாட்சியாய் நடத்தி வந்தான். உயிரினங்கள் யாண்டும் யாதொரு துயரும் உறாமல் ஓம்பி வந்தமையால் உலகம் இவனைத் தெய்வமா உவந்து போற்றி வந்தது. பாதுகாப்பு முறையில் இந்நீதி மன்னன் ஆற்றியருளியது எவ்வழியும் அதிசய ஆட்சியாய்த் தோற்றி மாட்சி மிகுந்துநின்றது.

வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்உயிர் ஒப்ப ஓம்பலால்

செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதுஓர் உடம்பும் ஆயினன்.
(இராமா, அரசியல், 10

உலகமக்களை இவன் பாதுகாத்து வந்துள்ள நிலையை இது நலமா விளக்கியுள்ளது. உண்ணும் உணவாலும் பருகும் நீரா லும் மாந்தர் உயிர்வாழ்ந்து வந்தாலும் அவை கண்ணியமா நிறைந்து யாதொரு இடையூறும் இன்றி அவர் இனிது மகிழ்ந் திருப்பது வேந்தனுடைய பாதுகாவலான ஆதரவாலேயாம். ஆகவே மன்னுயிர்க்கு மன்னர் உயிர் என மன்னி நின்றனர்.

தான் அருமையாய் பெற்ற பிள்ளைகளை உரிமையான ஒரு தந்தை பேணி வந்தது போல் குடிசனங்களை இவன் அன்போடு ஆதரித்து வந்தான் என்று கூருமல் தன் உயிர் ஒப்ப ஓம்பினுன் என்று கூறியிருத்தலால் இவனது பரிபாலன முறையும் நெறியும் நீர்மையும் நேரே தெரிய வந்தன சீவகோடிகள் யாவும் இவ னுடைய செங்கோல் ஆட்சியில் தேவ கோடிகளாய்ச் சிறந்து வந்துள்ளன. அந்த உண்மையை உரைகள் தெளிவா உணர்த்தி யிருக்கின்றன. உயிர்களுக்கு உயிர் ஆய் உரிமை செய்துளன்.

செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிர்எலாம் உறைவதுஓர் உடம்பும் ஆயினுன்.

ஓர் அறிவுடைய கொடி செடிகள் முதல் ஆறறிவுடைய மனிதர் வரையுள்ள உயிரினங்கள் எல்லாம் இனிதுவாழ இவன் இதம் புரிந்துள்ளான். அவ்வுண்மையை இது துலக்கியுள்ளது. சென்றுவாழ் உயிர் என்றது சரங்களை நின்று வாழ் உயிர் என்றது அசரங்களை தரும ஆட்சியின் மருமம் அறிய வந்தது.

உயிர்க்கும் உயிராய் நின்று அருளுவது இறைவன் ஒரு வனே. அந்த உயிர்களின் செயல் இயல்களுக்குத் தக்கபடி அவை பலன்களை நுகர்ந்து வர அவன் சீவ சாட்சியாய் மேவி நிற்கின்றுன் அந்த நிலையில் சீவர்களுக்குத் தேகம்போல் அமர்ந்து போகங்களை இவன் நன்கு அருளி வந்துள்ளான்.

உண்ணுவது உறங்குவது உலாவுவது தொழில்கள் புரிவது முதலிய உடலின் செயல்கள் எல்லாம் உயிர் சுகமாய் வாழவே யாம். அதுபோல் இவன் எண்ணுவதும் பேசுவதும் செய்வதும்

எல்லாரும் இன்பமாய் வாழ்ந்துவரும் வகையே தோய்ந்து வந்துள்ளன. நனவிலும் கனவிலும் உயிர் இனங்கள் உயர்நலமாய் வாழவே கருதி இவன் வாழ்ந்திருக்கிறான். பலவகை நிலைகளிலும் உலகையும் உயிர்களையும் உயர்வா ஓம்பி வந்துள்ளான் இவனது பரிபாலனமுறை காவியத்தில் ஜீவிய ஓவியமாத் தீட்டப்பட்டுளது. பாரில் யாரும் இவனால் சீரும் சிறப்பும் எய்தியுளர்.

யாவரையும் அன்போடு ஆதரிப்பதில் தாய்.

அரிய இன்பநலங்களை இனிது அருளுவதில் தவம்.

சிந்தை மகிழச் செல்கதி தருவதில் மைந்தன்.

பிழைகளை நீக்கி நீதிகள் புரிவதில் தருமதேவதை.

கலைகளை ஆய்ந்து ஆலோசனைகள் கூறுவதில் அறிவு.

யாண்டும் இதமாய் இனிமை ஈவதில் அமுதம்.

இன்னவாறு சீரிய நீர்மைகளில் எவ்வழியும் சீவர்களைச் செவ்வையாய் இவன் பேணியருளினான். அறிவு ஈகை ஆண்மை வீரம் அமைதி அனுபவம் தருமநீதி முதலிய அரிய தலைமைகள் யாவும் இவனிடம் தொகையாய் இனிது அமைந்திருந்தன இனிய குணநலங்கள் புனித மணங்களாய்ப் பொலிந்து வந்தன

பெருந்திருவும் பெருந்தகவும் பேராண்மையும் பேரரசாட்சியும் மாட்சியா நிறைந்திருந்தும் பிள்ளைப்பேறு இல்லாமையால் இவன் உள்ளம் வருந்தி உளைந்து வந்தான் முடிவில் கலைக்கோட்டு முனிவரை அழைத்து வந்து புத்திரகாமேட்டி என்னும் யாகம் செய்தான். செய்யவே தெய்வீகமான குழந்தைகள் பிறந்தன. மக்கட்பேறு மகிமைப் பேறுகளாய் விளங்கியது.

கோசலை வயிற்றில் இராமன் பிறந்தான்.

கைகேசி வயிற்றில் பரதன் தோன்றினான்.

சுமித்திரையிடமிருந்து இலட்சுமணனும் சத்துருக்கனும் உதித்தினர். அதிசய நிலையில் உதயமான இந்த அருமைப் புதல்வர்களைக் கண்டு மன்னன் பெருமகிழ்ச்சி கொண்டான். உளம் மிக உவந்தமையால் அளவிடலரிய தான தருமங்களை வளமையாய்ச் செய்தான். பேரின்பம் பெற்றவனாய் ஆர்வம் மீதூர்ந்து பார் எங்கும் உவகை நிலைகள் ஓங்கிவர உதவிகள் புரிந்தான்.

மக்கள் நால்வரும் மறைகள் என மகிமைகளோடு வளர்ந்து மதிநலங்கள் நிறைந்து தக்க பருவங்களை அடைந்தனர்.

தலைமகனுக்குப் பதினறு வயது நடந்து வந்தது. அவ்வாறு வருங்கால் விசுவாமித்திர முனிவர் இவ் வேந்தனிடம் வந்தார்; அவர் புரிந்து வருகிற யாகத்துக்குத் துணைபுரியும்படி இராமனை வேண்டினர் மன்னன் முதலில் மறுகினன்; பின்னர் உள்ளம் துணிந்து பிள்ளையை உதவினன்; இராமன் வில் ஏந்தி வெளி ஏறினன்; தம்பி இலட்சுமணனும் தொடர்ந்து சென்றான்; முனிவர் உளம் உவந்து அரசனை வாழ்த்திவிட்டுக் குமரர் இருவரையும் அழைத்துக்கொண்டு போனர்; இடையே எதிர்ந்த தாடகை மடிந்தாள்; வேள்வி முடிந்தது; மிதிலையில் இராமனுக்குத் திருமணம் நேர்ந்தமையால் அங்கே இம் மன்னர்பிரான் சென்று தலைமகன் திருமணத்தைக் கண்டு களித்தான்; மருமகளோடு மகனை அழைத்து வந்தான்; இராமனுக்குத் திருமுடி சூட்ட விழைந்து அரசர் அவையைக் கூட்டினன்; அதில் இவன் பேசிய உரைகள் பேரறிவு நிறைந்து சீரிய கூரிய நீர்மைகள் சுரந்து தத்துவ ஞானங்கள் பொலிந்து தகவோடு வந்தன.

மந்திரிகள் முதலிய அனைவரும் சிந்தை மகிழ்ந்தனர். தனது அருமை மகனை அரசன் ஆக்கி வைத்துவிட்டுத் தான் துறவு நிலையில் மருவி யிருக்க இப் பெரியவன் உரிமையோடு விரும்பினன்

இராமனுக்கு அரசுமுடி சூட்ட இவ்வேந்தர்பிரான் முயன்றான்; இடையே கைகேசியால் இடையூறு நேர்ந்தது; நேரவே உள்ளம் உடைந்தான்; உணர்வு ஒழிந்தான்; உயிரும் போயது.

புத்திர வாஞ்சையால் இம் மன்னன் மாண்டது மாநிலம் எங்கணும் அதிசயமாய் நீண்டது. சொன்ன சொல்லைக் காப்பாற்றும் பொருட்டே தன் உயிரை நீத்தான் ஆதலால் சத்திய விரதன் என்று எத்திசையும் இவனை வியந்து துதித்தது. இந்த மன்னனுடைய குணநலங்களை உவந்து பலரும் புகழ்ந்துள்ளனர். தரும நீதிகள் செழித்துவர இவனுடைய செங்கோல் எவ்வழியும் செவ்வையாய்த் தழைத்து யாண்டும் புகழ் பூத்து வந்துளது.

இம்மாண் கதைக்குஓர் இறையாய இராமன் என்னும்
மொய்ம்மாண் கழலோற்றரும் நல்லறமூர்த்தி அன்னன்.
[பால, அரசியல் 1]

இராம காவியத்தில் கவிநாயகன் இவ்வாறு இவனை முதலில் நமக்கு அறிமுகம் செய்திருக்கிருர். தமது காவிய நாயகனைத் தந்தவன் என நன்றியறிவோடு இவ்வென்றி வீரனை விளக்கி யிருக்கிருர். உரைகளில் அரிய பல பெருமைகள் மருவியுள்ளன.

நல்லற மூர்த்தி என்றது இவனது தரும நீர்மையைக் கருதி யுணர வந்தது. தருமமூர்த்தியான இராமனைப் பெற்றருளிய பெருமையால் இவனுடைய பேரும் சீரும் பாரெங்கும் பரவி யுள்ளன. குறித்துள்ள பெயர்கள் கூர்ந்து சிந்திக்கவுரியன.

அரசர்க்கு அரசன்.
ஆழி நெடுங்கை மடங்கலாளி.
ஆய்ந்த அற மூர்த்தி.
கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்தன்.
தருகை நீண்ட தயரதன்.
அறன் ஒன்று திருமனத்தான்.
குன்றென உயரிய குவவுத் தோளினன்.
அயன் புதல்வன் தயரதனை அறியாதார் இல்லை.
தள்ளரும் பெரும்புகழ்த் தயரதப் பெயர் வள்ளல்.
மன்னர் மன்னவன்.
தனுவன்றித் துணையில்லான்.
தருமத்தின் கவசத்தான்.
மனுவென்ற நீதியான்.
செங்கோல் மன்னன்.
வெண்குடை வேந்தர் வேந்தன்.
சுரர் நாடு ஈந்தான்.
இந்திர திருவன்.
தயரதன் எனும் பெயர்த் தனிச்செல் நேமியான்.
சம்பரப்பேர்த் தானவனை வென்றவன்.
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான்.
வீரியர் வீரம விழுங்கி நின்ற வேலான்.
சதமகனுக்கு உம்பர் அரசு தந்தவன்.
உயர்கீர்த்திச் செங்கோல் வேந்தன்.
நந்தா விளக்கனைய நாயகன்.
நானிலத்தோர் தந்தை.

தனி அறத்தின் தாய்.
தயா நிலையம்.
புரவலர் தம் புரவலன்.
பொய்ப் பகை.
மெய்க்கு அணி.
புகழின் வாழ்வு.
மைந்தன் அலாது உயிர் வேறிலாத மன்னன்.
வாய்மையும் மரபும் காத்தவன்.
வள்ளல்; தூயவன்.
உயிரினும் ஒழுக்கம் நன்று எனப் பொன்றிய புரவலன்.
மெய்யினுக்கு உயிர் அளித்து
உறுபுகழ் படைத்தோன்.

இன்னவாறு பலராலும் இம் மன்னன் புகழப் பெற்றுள்ளான். இந்தக் குறிப்பு மொழிகளால் இவனுடைய சிறப்பு நிலைகளும் சீர்மை நீர்மைகளும் செயல் இயல்களும் தெரியலாகும்.

தனது தலைமைப் புதல்வனுன இராமன்பால் இவன் பூண்டிருந்த அன்பு அதிசய நிலையது; தன் கண்ணினும் உயிரினும் அருமையாக அவனை இவன் எவ்வழியும் கருதியுருகியிருக்கிருன்.

ஆவி அவன் அலாது இல்லை.

இராமனைத் தசரதன் கருதி வந்துள்ள உண்மையைக் கவி இவ்வாறு காட்டியிருக்கிருர். பிள்ளைப் பாசத்தால் இவன் உள்ளம் உருகியுள்ளமை காவியம் முழுவதிலும் தெளிவாய் வெளியாகியுளது. அந்த உருக்கம் எல்லாரையும் உருக்கி யிருக்கிறது.

இந்த அருமைத் திருமகனை உலகம் நலமுற அருளியுள்ளமையால் இவ் வேந்தர் பெருமான் மாந்தர் புகழ்ந்துவர ஏந்திய சீரோடு என்றும் நின்று நிலவுகின்ருன் தசரதன் பெற்றதே பேறு என்று உலகில் ஒரு பழமொழி உலாவி வருதலால் இவனுடைய பிறப்பும் சிறப்பும் பேறும் பிறவும் யாரும் அறிய நேரே தெரிய நின்றன. தாசரதி என இராமனும் நிலவி வருகிருன்.

வசிட்டர்.

இவர் அரிய பல கலைகளை அறிந்து தெளிந்தவர். நெறி நியமங்களுடையவர். இவரது அருமை மனைவி பெயர் அருந்ததி.

பெண்மைக்குலத்தின் உண்மையான கற்புத் தெய்வமாய் ஒளி மிகுந்துள்ள அப் புனிதவதியோடு அமர்ந்து இவர் இல்லறம் புரிந்து வந்தார். சிறந்த ஞானசீலரான இவரைத் தனக்கு அரச குருவாக் கருதித் தசரத மன்னன் எவ்வழியும் செவ்வையா இனிது பேணி வந்தான். சுமந்திரன் முதலிய மதி மந்திரிகள் எவர்க்கும் தலைவராய் அமர்ந்து அரசுக்கு உறுதிநலங்களை இவர் உணர்த்தி வந்தார். தருமநீதிகளை நன்கு தெரிந்த புனித மாதவர் ஆதலால் இவருடைய அறிவுரைகள் அரசனுக்கு அரிய பல உறுதி நலங்களை அருளி வந்தன. இடையே ஆட்சியில் நேர்ந்த அல்லல்களில் எல்லாம் இவருடைய ஆதரவுகள் யாவருக்கும் பேருதவிகளாய் நின்றன. கானகம் போன இராமனைத் திருப்பி அழைத்து வரலாம் என்று துணிந்து சேனைகளோடு பரதன் எழுந்தபொழுது இவரும் தொடர்ந்து போனார். பரிதாப நிலையில் உருகி வந்துள்ள தபதியைக் கண்டதும் இராமன் பெரிதும் மறுகினான். பின்பு தந்தை இறந்து போனதை அறிந்ததும் உள்ளம் துடித்து அல்லல் உழந்து அவ்வீர வள்ளல் அழுது புலம்பினான் பிதாவின் பிரிவு பெருந்துயரமாய் விரிந்து நின்றது.

அப்பொழுது அக்குலமகன் ஆறுதலாய்த் தேறுதலுறும்படி இவர் கூறிய அறிவுரைகள் மனித சமுதாயத்துக்கு இனிய புனித போதனைகளாய்ப் பொங்கி எழுந்தன. "ரகுநந்தனா! உன் தந்தை பிரிந்து போனதை நினைந்து நீ சிந்தை வருந்துகிறாய்; இவ்வுலகில் எதுவும் நிலையாய் நில்லாது; நிலையாமையே யாண்டும் நிலைத்துள்ளது. உயிரினங்கள் வந்து வந்து தோன்றி விரைந்து மறைந்து போகின்றன; நீர்மேல் குமிழிகள்போல் பார்மேல் பிறவிகள் படிந்து மறைகின்றன தேவர் முதல் யாவரும் அழிவு நிலையிலேயே வழி தொடர்ந்துள்ளனர். தேவதேவரான மூவருமே காலவசமாய் மறைய நேர்வர்; ஆகவே சீவகோடிகளும் பூத பௌதிகங்களும் நிலைகுலைந்து அழிந்து போவதை நினைந்து ஞானிகள் வியந்து கொள்வதில்லை கொள்ளி வட்டமும் காற்றாடியும் போல் வினைகளுக்கு ஈடாக உயிரினங்கள் உருவங்களை எடுத்துச் சுழன்று திரிந்து உழன்று வருகின்றன. இன்னவாறு அவல நிலையில் அலைந்து உழலுகிற சீவர்களுள் உனது தந்தை இதுபொழுது தேவர்களும் அடைய முடியாத திவ்விய பதவியை அடைந்திருக்கிறான். எங்கும் புகழ் ஒளிவீசப் புண்ணிய சீலனாய்

உயர்ந்துள்ள அந்தப் புனிதனுக்கு மனித மரபின்படி இனிய கருமங்களைச் செய்தருள்; சிறந்த மேதையான உனக்கு மேலும் நான் மதிநலம் கூறுவது மிகையாம்” என இன்னவாறு இம் மாதவர் ஆதரவு கூறியருளினர். இவருடைய அறிவுரைகள் நெறி நியமங்களோடு உறுதி நலன்களை நன்கு வலியுறுத்தி யுள்ளன உண்மை நிலைகளை எண்மையாத்தலக்கியிருக்கின்றன.

“மூலம்வந்து உதவிய மூவர்க்கு ஆயினும்
காலமஎன்று ஒருவலை கடக்க லாகுமோ?”

(இராம, கிளை, 73)

நிலையாமையின் நிலைமையைத் தெளிவாக விளக்க இவ்வாறு மூவரைத் தலைமையாக் காட்டி யிருக்கிறார். காலம் ஒரு வலை என்றது கருதி யுணர வந்தது. வலையில் அகப்பட்ட மீன்கள் வெளியே போக முடியா; அதுபோல் காலத்தின் வாய்ப்பட்ட சீவர்களும் எந்த ஞாலத்திலும் எவ்வழியும் தப்ப முடியாமல் அழிவையே காணுகின்றனர். இத்தகைய தத்துவ நிலைகளை இவ் வித்தக முனிவர் வாய்மொழிகள் விநயமா விளக்கியுள்ளன. அரசு முறைகளையும் தருமநீதிகளையும் தத்துவ நிலைகளையும் இடங்கள்தோறும் இவர் நன்கு போதித்திருக்கிறார். இராம காவியத்தில் இவரது பாகம் ஞான மணம் கமழ்ந்து விவேக போதனைகள்விரிந்துவிதிநியமங்கள்நிறைந்து நலம்பலசுரந்துளது.

விசுவாமித்திரர்

இவர் அரச முனிவர். அதிசய ஆற்றல்கள் உடையவர். மகோதயம் என்னும் நகரிலிருந்து அரசு புரிந்த காதி மன்ன னுடைய அருமைத திருமகன். இளமையிலேயே கலைகள் பலவும் பயின்று புலமை நிலையில் தலைமை எய்தியிருந்தார். வில் வித்தை யில் எவரும் தனக்கு நிகரில்லாதவராய் உயர்புகழோடு இவர் ஒளிமிகுந்து நின்றார். உரிய பருவம் வந்தவுடன் அரசபதவியை அடைந்து நெறிமுறையே இவர் ஆண்டு வந்தார். அவ்வாறு ஆண்டு வருங்கால் ஒருநாள் வேட்டையாடலில் நாட்டமாய்க் காட்டை அடைந்தார். அங்கே முனிவர் சிலர் தனியே அமர்ந் திருக்கும் தகைமையைக் கண்டார். உவகை மீக் கொண்டு உள்ளம் வியந்தார். என்ன சுகத்தை நாடி இன்னவர் இன்ன வாறு தன்னம் தனியே தங்கியுள்ளனர்? என்று உன்னி உசாவி

உவப்பும் வியப்பும் மன்னி நடந்தார். முடிவில் வசிட்ட முனிவருடைய ஆசிரமத்தை அணுகினர். அணுகவே அம்மாதவர் இம் மன்னர் பெருமானை உவந்து உபசரித்தார். சிறந்த விருந்து புரிந்தார். தேவ போகமாய் வந்த அந்த அதிசய விருந்தை உண்டு மகிழ்ந்த இவர் அரிய தவத்தின் பெரிய மகிமைகளை உணர்ந்தார். வறிய நிலையில் யாதொரு பொருளும் இல்லாத அம் முனிவர் சேனைகளோடு வந்த பெரிய ஒரு அரசனுக்கு அரிய இனிய விருந்து புரிந்தது அருந்தவத்தின் பெருந்திறலே என்று தெளிந்தார். மீண்டும் அவரது அற்புத நிலையை உணர்ந்ததும் தனது அரச பதவியை வெறுத்து விட்டு அருந்தவம் புரிய நேர்ந்தார். மோன விரதராய் ஞானசீலம் மருவியுள்ள மாதவர் வானமும் வையமும் வணங்கி வாழ்த்த விளங்கி நிற்கும் மாட்சியைக் கண்டதும் உலக செல்வங்களை எல்லாம் ஒருங்கே துறந்து இவர் தவம்புரிய மூண்டது யாவருக்கும் அதிசய வியப்பாய் நீண்டது.

கண்டனன் அரசன் காணுக் கலைமறை முனிவர்க்கு அல்லால்
திண்டிறல் வலியும் தேசும உளவெனல் சீரி தமமா
மண்டலம்முழுதும் காக்கும் மொய்ம்பொரு வலியன்றுஎன்னு
ஒண்டவம்புரிய எண்ணி உமபர்கோன திசையை யுற்ருன.

(இராமா, மிதிலை, 104

அரச போகங்களை வெறுத்துவிட்டு இவர் தவம் செய்யச் சென்றுள்ள நிலைமையை இது தலைமையாத் துலக்கியுளளது. தத்துவக் காட்சி இவரிடம் வித்தக விநோதமாய் விளைந்திருக்கிறது. மண்தலம் முழுதும் காக்கும் மோய்ம்பு ஒரு வலி அன்று என்று இவர் உறுதி செய்து போயிருத்தலால் இவருடைய உள்ளத் துணிவையும் உண்மை யுணர்வையும் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். முதலில் இந்திர திசையை அடைந்து அருந்தவம் புரிந்தார். பின்பு தென்திசையை நண்ணிச் சிந்தையை அடக்கி அரிய தவங்களை ஆற்றியிருந்தார். அங்கேதான் திரிசங்கு மன்னனுக்கு இவர் திவ்விய பதவியை அருளினர். தன் பால் வந்து அடைக்கலம் புகுந்த அந்த மன்னனை மனித தேகத்தோடு தேவ லோகத்துக்குப் போகும்படி இம் முனிவர் செய்தருளியதைப் பொறுக்காமல் தேவர்கள் இடையூறு செய்யவே இவர் சினந்து சீறி "அகில வுலகங்களையும் படைக்கவும் துடைக்கவும் என்னல் முடியும்" என்று வீர வாதம் கூறி அவ்வாறே ஆற்ற நேர்ந்தார்.

இவருடைய தவத்தின் மகிமையை அறிந்ததும் தேவ தேவரும் இவர் எதிரே தோன்றி ஆறுதல் கூறி நேரே அருள் புரிந்தனர்.

பிரமாவினும் வேறு ஒரு சிருட்டியைச் செய்வேன் என்று இவர் மூண்டு புரிந்தது யாண்டும் அதிசய வியப்பாய் நீண்டது. அந்த அற்புதநிலை விசுவாமித்திர சிருட்டி என வீறு கொண்டு விளங்கியது. இவரது தவ வலிமை தனி மகிமை யுடையது.

பேணலாது இகழ்ந்த விண்ணோர் பெரும்பத முதலா மற்றைச்
சேண்முதல் அமைப்பல் என்னாச் செழுங்கதிர் கோள்நாள் திங்கள்
மாணொளி கெடாது தெற்கு வடக்கவாய் வருகஎன்று
தாணுவோடு ஊர்வஎல்லாம் சமைக்குவென் என்னும்வேலை.

நறைத்தரு வுடையகோனும் நான்முகக் கடவுள் தானும்
கறைத்தரு களனும் மற்றைக் கடவுளர் பிறரும் தொக்குப்
பொறுத்தருள் முனிவ! நினைப் புகல்புகுந் தவனைப் போற்றும்
அறத்திறம் நன்று தாரா கணத்தொடும் அமைக அன்னான்.

அரசமா தவனீயாதி ஐந்துநாள் தென்பால் வந்துன்
புரைவிளக்கிடுக எனாக் கடவுளர்போய பின்னர்
நிரைதவன் விரைவின் ஏகி நெடுங்கடற்கிறைவன் வைகும்
உரவிட மதனை நண்ணி உறுதவம் உஞற்றும் காலை. (3)

[இராமாயணம்]

இக்கதைய அதிசய நிலைகளில் உயர்ந்து அரிய தவங்களைச் செய்து பெரிய மகானாய் ஒளி பெற்றிருந்த இவர் இராமனது அவதார மகிமையை நன்கு தெரிந்து கொண்டார்; நேரே அயோத்திக்கு வந்தார்; தசரத மன்னனைக் கண்டார்; தாம் புரிகின்ற மாமகம் இனிது முடியும்படி அக்கோமகனை வேண்டினார்; மன்னன் மறுகி இசைந்தான்; இசையவே இராமனோடு இலக்குவனையும் உடன் அழைத்துச்சென்று வேள்வியை முடித்தார்; பின்பு மிதிலாபுரிக்குக் கொண்டுபோய்ச் சனக மன்னனிடம் இக் குல மகனுடைய அருமை பெருமைகளை இனிது விளக்கிச் சீதையைத் திருமணம் முடித்தருளினார். தசரதராமன் சானகிராமன் ஆயினான் என வானவரும் மானவரும் ஒருங்கே மகிழ வாழ்த்தியருளி இம் மாதவர் விடைபெற்றுப் போயினார்.

இராம காவியத்தில் இவருடைய பாகம் அரிய பல சுவைகளை யுடையது. சத்திரிய வீரோடு தத்துவ ஞானமும் தவ வலியும்

பெருகி நின்றமையால் எவ்வழியும் இவரிடம் வீர கம்பீரம் மியனாய் விளங்கி நின்றது. அத்திர வித்தைகளை நன்கு அறிவித்தருளினமையால் தனுவேதத்தின் ஆசிரியராக இவரை இராமன் போற்றி வந்தான். இவருடைய அருந்தவமும் பெருந்தகவும் மதிநலனும் அதிசய நிலைகளில் யாண்டும் துதிகொண்டுள்ளன.

அத்திரி முனிவர்.

இவர் சிறந்த தத்துவ ஞானி. சித்த சுத்தியுடைய வித்தக யோகி. அருந்தவர் பலரும் உவந்து போற்றும் பெருந்தகை யாளர். இராமன் வனவாசம் வந்த காலத்தில் இவருடைய ஆசிரமத்தில் ஒருநாள் தங்கியிருந்தான். சானகியோடு கானகம் போந்த அவ்வீர வள்ளலைக் கண்டதும் இவர் உள்ளம் உவந்து உரிமை மீதூர்ந்து உபசரித்தருளினர். இவருடைய மனைவி பெயர் அநசூயை. அந்த அம்மாள் சீதைக்கு அரிய இனிய ஆடை அணிகளை ஆர்வமாய்க் கொடுத்தாள் அரிய தவமுடைய பெரிய ஞானயோகி அக் கோமகனிடம் பேரன்பு கூர்ந்து ஆர்வவுரை களாடிப் பேணியருளியது மிகவும் பெருமையாக் காண வந்தது.

குமரர்நீர் இவண் அடைந்து உதவுகொள்கை எளிதோ?
எமரின் யார் தவம் முயன்றவர்கள் என்று உருகினன்.

இராமனைக் கண்டபோது அத்திரி முனிவர் இவ்வாறு உருகி உரையாடி உபசரித்திருக்கிறார். கானக வாழ்வில் அம் மானவீரன் ஞானயோகிகளோடு பழகிவந்துள்ளமை அவனது பான்மைகளைவிளக்கிமேன்மையானபகிமைகளைவிளைத்துவந்தது.

"முக்குறும்பு அற எறிந்தவன்; அருந்தவன்; மோன முனிவன்" என இன்னவாறு இவரைக் குறித்திருத்தலால் இவருடைய மெய்யுணர்வுகளையும் திவ்விய நிலைகளையும் செவ்வியநெறிகளையும் விரத சீலங்களையும் தெளிவா உணர்ந்து கொள்கிறோம்.

சரபங்கர்.

இவர் முற்றத்துறந்த முனிவரர். பொறிகளை வென்று நெறி நின்று ஒழுகி வருகிற விழுமிய துறவிகள் யாவரும் இவரைத் தொழுது வாழ்த்தி வந்துள்ளனர். மன்மத பாணங்களை அறவே வென்றவர் ஆகலால் சரபங்கர் என்னும் பெயர் காரணக்குறியாய் மருவி நின்றது. யோக சித்தியால் மூன்று கால நிலைகளை

யும் இவர் நன்கு தெரிந்திருந்தார். இராமன் அரசுமுடி துறந்து கானகம் வருவான் என்று ஞான நோக்கால் இவர் நன்கு உணர்ந்திருந்தார் ஆகலால் அந்த அழகன் வரவை ஆவலோடு கருதி அருந்தவம் புரிந்து வந்தார். அவ்வாறு வருங்கால் இந்திரன் இவரிடம் நேரே வந்தான். இவருடைய அரிய தவத்தை வியந்து பிரமதேவன் தேவராசனை அனுப்பியிருந்தான் ஆதலால் அந்த அமரர்கோன் இவர்பால் நேரே வந்து தவத்தின் பரிபூரண நிலையை உணர்த்திப் பரகதிக்கு எழுந்தருளும்படி உறவுரிமையோடு வேண்டினன். அந்தவேண்டுகோளையும் இவர்வேண்டாதிருந்தார்.

எந்தாய்! உலகியாவையும் எவ்வுயிரும்
தந்தான் உறையும் நெறி தந் தனனால்
நந்தாத பெருந்தவ நாடதுநீ
வந்தாய் எனினநின் எதிரே வருவான். (1)

எல்லா உலகிற்கும் உயர்ந்தமையால்
சொல்லாவகை நீயுணர் தொன்மையையால்
நல்லாய்! உடனே நடநீ எனலும்
அல்லேன்என வாலறிவான் அறைவான். (2

(இராமா, சரபங்கர், 16, 17)

இந்திரன் இவ்வாறு இவரிடம் உரிமையோடு வேண்டியுள்ளமையால் இப் பெரியவருடைய மகிமை மாண்புகளை நாம் நன்கு உணர்ந்து கொள்கிறோம் வாலறிவான் எனக் குறித்தது, இவரது மேலான ஞான சீலத்தை விளக்கி நின்றது. "பிரமபதமும் வேண்டியதில்லை; மீண்டும் பிறவி நேராத அமல முத்தியே அடைய நேர்ந்துள்ளேன்" என்று வானவர் கோனிடம் இவர் கூறி விடவே அவ் வேந்தன் வியந்து புகழ்ந்து மீண்டு போனன்.

அன்றே இராமன் அங்கு வந்தான். நீண்ட காலம் எதிர் பார்த்திருந்தார் ஆதலால் அப் பெருமானைக் கண்டதும் பெருமகிழ்வு கொண்டு உரிமையுடன் உபசரித்தார். அன்று இராமன் இம்முனிவரது ஆசிரமத்தில் தங்கியிருந்தான். தம்பியும் மனைவியும் நம்பியும் இம்மாதவருடைய அன்புரிமையையும் அறிவுரைகளையும் பண்புகளையும் அறிந்து வியந்து ஆர்வம் மீதூர்ந்திருந்தார்.

திவ்விய ஞானியாய்ச் சிறந்துள்ள இம் முனிவர் குடிலையில் அம் மூவரும் ஒரு நாள் தங்கியிருந்தது பேரின்பமாய்ப்

பொங்கி நின்றது. மனிதவுருவில் மருவி இராமன் வனவாசமாய் வந்திருந்தாலும் அவனது அவதார நிலையை முனிவர் இனிது தெளிந்துள்ளார். மேலே விளையவுள்ள விளைவுகளையும் தெரிந்திருந் தார். அவ்வுண்மை உரையாலும் உவகையாலும் உணர வந்தது.

ஆழியில் விழிதுயில் அவன் என மகிழ்வான் என்றதனால் இவரது தத்துவக் காட்சியும் வித்தக மாட்சியும் நன்கு விளங்கி நின்றன. இவ்வாறு மகிழ்ந்திருந்த மாதவர் சூரியன் உதயமாக வும் யோக சித்தியால் தமது தேகத்தை நீக்கிவிட்டு மேலான முத்தியை அடைந்தார். இவருடைய அரிய தவநிலையை வியந்து புகழ்ந்து உரிய துணைகளோடு உவகை மீதூர்ந்து இராமன் வெளி ஏறிப் போனான். தத்துவ ஞானிகளுடைய யோக சித்திகளும் சத்துவ போதனைகளும் வித்தக விவேகங்களை விளைத்து வந்தன.

சுதீக்கணர்.

அருந்தவ நிலையில் இவர் மிகவும் சிறந்தவர். தண்டகவனத் தின் இடையே தனியே தவ யோக சித்தராய் இவர் ஒளிபெற் றிருந்தார். கானகம் வந்த இராமன் இந்த ஞான முனிவரைக் கண்டு வணங்கினான். அந்த வீரவள்ளலைக் கண்டதும் இவர் பேரானந்தம் உடையராய்ப் பெரிதும் புகழ்ந்து உபசரித்தார்.

விடரகங்களும் வேய்செறி கானமும்
படரும் சினனெறி பைப்பைய நீங்கினார்
சுடரும் மேனிச் சுதீக்கணன் என்னும் அவ்
இடரிலானுறை சோலைசென்று எய்தினார். (1)

அருக்கன் அன்ன முனிவனை அவ்வழிச்
செருக்கில் சிந்தையர் சேவடி தாழ்தலும்
இருக்க ஈண்டென்று இனியன கூறினான்
மருக்கொள் சோலையில் மைந்தரும் வைகினார். (2)

இந்த முனிவருடைய ஆசிரமத்தில் இராமன் வந்து தங்கிய பொழுது பொங்கிய உவகைகள் எங்கும் பொலிந்து விளங்கின. தெளிந்த நல்ல ஞானக்காட்சியை யுடையவர் ஆதலால் சுதீக்க ணர் என நேர்ந்தார். அரிய பெரிய தவங்களை இவர் செய்து முடித்துள்ளமையால் யாவரும் இவரைப் போற்றி நின்றனர். பொறிபுலன்களை வென்று உலக பந்தங்களைத் துறந்து எப்பொழு தும் ஆன்மானந்தத்தில் தோய்ந்திருந்தார் ஆதலால் இடர்இலான்

என இங்கே குறிக்க நின்றார். துன்பங்களுக்கெல்லாம் ஆசை யே மூலகாரணம் ஆதலால் அதனை அறவே நீங்கித் துறவியா யிருந்த பாங்கும் பயனும் ஈங்குத் தெரிய வந்தன. அரிய தவ விரதங்களால் ஆன்ம ஒளி மேன்மையா நன்கு விளங்கி நின்றது.

அருக்கன் அன்ன முனிவன்.

இவருடைய அரிய நிலைமையையும் பெரிய தலைமையையும் இது சுருக்கமா விளக்கியுளது. இருளைநீக்கி ஒளிபுரியும் சூரியன் போல் அஞ்ஞான மருளை அறவே ஒழித்து மெய்ஞ்ஞான ஒளி யோடு மேவியுள்ளவர் ஆதலால் அருக்கன் இவர்க்கு உவமையா நேர்ந்தான். தமது தவக்குடிலில் இராமபிரான் வந்து தங்க நேர்ந்தது இவர்க்குப் பேருவகையாய்ப் பொங்கி நின்றது. பெரிய சக்கரவர்த்தித் திருமகன் வறிய தனது குடிசையைப் பிரியமாய் நாடி வந்துள்ளதை நினைந்து பெருமகிழ்வடைந்தார்.

வைகும் வைகலின் மாதவன் மைந்தன்பால்
செய்கை யாவையும் செய்திவண் செல்வ!நீ
எய்த யான்செய்தது எத்தவம்? என்றனன்
ஐயனும் அவற்கு அன்பினன் கூறுவான்.

முனிவருடைய மனமகிழ்ச்சியை இவ்வுரைகளால் இனிது தெரிந்து கொள்கிறோம். செல்வ! என்றது கருவிலேயே திரு வுடையனுய் அவன் மருவி வந்துள்ளமையைக் கருதி வந்தது. செல்வத்துக்கு அதிதேவதையான இலட்சுமிநாயகன் என்பதும் மருமமாய்த் தெரிகின்றது. அரிய திருவாளன் உரிய அன்போடு பிரியமாய் வலிய வந்தது அதிசமாய்த் துதிசெய்ய நேர்ந்தது.

நீ எய்த யான் செய்தது எத்தவம்?

"இராமநாதா! நீ ஈண்டுவர நான் என்ன தவம் செய் தேன்?" என்று அரிய தவமுனிவர் இவ்வாறு பரவசமாய்க் கூறி யிருத்தலால் வந்துள்ளவனது உண்மை நிலையை நாம் ஊன்றி உணர்ந்து கொள்கிறோம். இவ்வாறு உழுவலன்போடு உபசரித்து விருந்து புரிந்தபின் அருந்தவர் ஆர்வ வுரைகளாடினர். "தரும மூர்த்தியான உனது காரிய சித்திக்கு எனது சீரிய தவம் முழுவ தையும் உரிமையோடு தந்துள்ளேன்; உவந்து கொள்க" என்று விழைந்து வேண்டி விதி முறையே புகழ்ந்து போற்றியருளினர்.

இந்த மாதவருடைய அன்பையும் ஆதரவையும் கண்டு இராமன் ஆனந்தம் மீதூர்ந்து புகழ்ந்து போற்றினன். அதன் பின் அவர்பால் விடைபெற்றுத் தென்பால் சென்றான். செல்லும் நெறிகளைத் தெளிவுறக் கூறி நல்ல ஆசிகளை வழங்கி ஞான முனிவர் மோனமாய் நின்றார். அவரது நிலை உவகைநிலையமாவோங்கியது.

வழியும் கூறி வரம்பகல் ஆசிகள்
மொழியு மாதவன் மொய்மமலர்த் தாள்தொழாப்
பிழியும் தேனிற் பிறங்கரு வித்திரள்
பொழியும் சோலை விரைவினில போயினர்.

சுதீக்கண்ணருடைய ஆசிரமத்தில் தங்கியிருந்து இராமன் தென்திசை நோக்கிச் சென்றுள்ளதை இது நன்கு விளக்கியுள்ளது ஞானயோகிகளைக் கண்டுமகிழ்ந்து கானக வாசத்தை அம் மானவீரன் மதிநலமாக் கழித்துள்ளான். அரிய மகான்களுடைய இனிய உறவுகள் பெரிய மகிமைகளாய்ப் பெருகி வந்துள்ளன. ஆன்றோர்தொடர்பு வான்தோய்புகழாவயங்கியது.

அகத்திய முனிவர்.

இவர் அதிசயமான மகத்துவம் உடையவர் தத்துவ ஞானத்திலும் தவத்திலும் சிறந்துள்ள இந்த வித்தக முனிவர் ஆற்றியிருக்கும் அற்புதங்கள் பல. இராமகாவியத்துள் இவருடைய சரிதம் இடையே மகிமையாய் மருவியுளது. அகத்தியப் படலம் என ஒரு பகுதி தனியே ஆரணிய காண்டத்தில் அமைந்திருக்கிறது. இராமன் இவரது ஆசிரமத்தை அடைந்தபோது இவர் மிகவும் ஆச்சரியம் அடைந்து எதிர்கொண்டு அழைத்து முதிர் பேரன்போடு உபசரித்தார். தீயவர்களை அழித்து ஒழித்து நல்லவர்களை நன்கு காக்க வந்துள்ள தருமவீரன் என்று தெரிந்து கொண்டமையால் அதற்கு உரிமையாக அரிய போர்க் கருவிகளை ஆர்வத்தோடு அருளினர். அதிசயமான வில்லும் வாளும் அம்புக தூணியும் துதிசெய்து கொடுததார். அந்தக் கொடை வீரதேவதையின் வெற்றிக் களிப்பாய் விளங்கி நின்றது. வீரமூர்த்தியான இராமன் இலங்கைவரையும் சென்று நிருதர் யாவரையும் வென்று வெற்றத்திருவுடன் மீண்டுவந்து திருவயோத்தியை அடைந்து அரசுமுடி புனைந்து நீண்டிய புகழோடு ஆட்சி புரிந்து வந்தான். அந்த மன்னர் பெருமானைக் கண்டு மகிழ

மன்னிய ஆர்வத்தோடு அகத்திய முனிவர் அங்கு வந்தார். அது பொழுது அரிய பல வரிசைகளோடு அரசர்பெருமான் அரியணையில் அமர்ந்திருந்தார். அந்தக் காட்சி அதிசய மாட்சிகளாய்த் துலங்கி நின்றது. அரசகோலமான அந்நிலைகளை அயலேகாணுக.

சக்கரவர்த்தி இருந்த காட்சி.

கண்ணார் உலகில் கருதார்குலக் கட்டை வாங்கித்
தண்ணார் தருமம் தழைக்கத் தனிக்காவல் பூண்டு
மண்ணோர் வணங்க மதிவெண் குடைமேல நிழற்ற
விண்ணோர் குலம்வாழ இராகவன் வீற்றிருந்தான். [1]

கண்கால் கரம்செங் கமலத் தடங்காடு காட்டத்
திண்கார் வரைபோல் திருமேனி திகழ்ந்து காட்ட
தண்கால் தடவத் தடம்பூண்முலைத் தையலார்கள்
வெண்சா மரைவீசிட வேதியர் ஆசி கூற. [2]

சீரார் மணிச்சோதி திரண்டெழும் செம்பொன்மௌலி
காரார் வரைமேல் கதிரோன்எழுங் காட்சி காட்ட
வாரார் தடங்கொங்கை மடந்தையர் வாட்கண் மொய்ப்ப
ஏரார் திருமேனியவ் இந்திரன் மேனி ஏய்ப்ப. (3)

சீரொத்த முத்தம் திகழ்நீள்வடம் சேர்ந்த சன்ன
வீரத்தொளியாகிய வெள்ளை நிலாவை ஓட்டி
ஆரத்தெழும் செம்மணிக்கோவை யலம்பிடத்தன்
கார்ஒத்த மேனி கருஞாயிறு போன்று காட்ட. [4]

தடஞ்சேர் வலயம் தழுவும் திருத்தோள்கள் நாக
வடஞ்சேர் வடமந்தர மாமலை தன்னை மானப்
படஞ்சேர் அரிமாமணிப் பஃறலைக் கோவை கோத்த
புடஞ்சேர் எழிற்பொன் னிற வாடை பொலிந்திலங்க. [5]

கொடிமன்னு மாடக் குலமென்னும் அயோத்தி எய்திக்
கடிமன்னு வாயிற் கடைநின்றருள் காலம் நோக்கிப்
படிமன்னி வாழும் பலமன்னியர் மண்டலீகர்
முடிமன்னர் எல்லாம் முறையே புகுந்து ஏவல்கேட்ப. [6]

மூவா முனிக்கூட்டமும் முன்பு முப்பத்து மூவர்
தேவாதிபரும் திருப்பாற் கடல்எய்தி எம்மைக்
காவாய் எனப்போற்றிடக் கண்டுயில் நீங்கிஇன்பம்
ஓவாது தான்வீற்றிருக்கும்படி ஒத்திருந்தான். [7]

(திருவோலக்கம்)

அரசகோலம் புனைந்து அரியணையில் இராமன் அமர்ந்திருக்கும் காட்சிகளை இவை மாட்சியாக் காட்டியுள்ளன. நேர்ந்துள்ள நீர்மை சீர்மைகள் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்க வுரியன. தேவர்கள் ஆவலோடு தொழுது நிற்கப் பரமபதநாதனாய் அங்கே எழுந்தருளியிருந்த பெருமான் மண்ணுலகில் வந்து மனிதர் குழாங்கள் கண்டு களிக்க வேந்தர் வேந்தனாய் இங்கே விளங்கியிருக்கிறான்.

மண்ணோர் வணங்க
விண்ணோர் குலம் வாழ

இராகவன் ஈண்டு மன்னர் பெருமானாய் மன்னியிருந்த நிலையை இன்னவாறு இனிது விளக்கியுள்ளார். விண்ணவரும் மண்ணவரும் விழுமிய நிலையில் உயர்ந்துவாழ இக் கோமகன் நேமமாய் ஈண்டு வந்திருக்கிறான். அந்த வரவுநிலையை இடங்கள் தோறும் உணர்ந்து வருகிறோம். மணிமுடி சூடி மன்னர்பெருமானாய் வீற்றிருந்தது மகிமைக் காட்சியாய் விளங்கி நின்றது. அரிய தத்துவ ஞானிகளும் பெரிய வித்தக முனிவர்களும் விழைந்து வந்து இராமனை வாழ்த்தி யருளினர். முடிவில் அகத்தியமுனிவர் வந்தார். மகத்துவம் மிகவுடைய இந்த மாதவரைக் கண்டதும் உவந்து பணிந்து அருகே ஓர் ஆசனத்தில் அமர்ந்தருளும்படி புரிந்து அக்குலமகன் நலமாய் உபசரித்தருளினான்.

குறுமுனிவர் குறுமுறுவலோடு இனிது அமர்ந்து அரிய இனிய உணர்வுரைகளை உவந்து மொழிந்தார்: "மாந்தர் மகிழ வேந்தர் பெருமானாய் விளங்கியிருக்கும் உனது புகழ் திசைகள் தோறும் ஓங்கி ஒளி வீசியுள்ளது. இராமநாதா! உன்னுடைய அவதாரம் அரிய மருமங்களுடையது. அதிசயங்கள் நிறைந்தது. அமரர் பண்ணிய புண்ணியமும், அரக்கர் ஆற்றிய பாவமும் உன்னை இந்த உருவில் இங்கே கொண்டு வந்துள்ளன; வந்த காரியம் முடிந்தது. இனி மாநிலம் மேல் நிலையில் வாழ்ந்து வரும்படி நீ கோன் நிலையில் குலாவி யிருக்கின்றாய்! உனது செங்கோல் ஆட்சி அரசகுலத்துக்கெல்லாம் மங்காத மாட்சியாய்க் காட்சி புரிந்து வர நீ சாட்சியாய் அமர்ந்துள்ளாய்! அமிர்த குண சீலனான உனது மகிமை மாண்புகள் அளவிடலரியன" என்று இவ்வாறு கும்பமுனிவர் அன்புரிமையோடு கூறினார். அருந்தவ சீலரான இவரை அப்பெருந்தகைக் குரிசில்

உவந்து நோக்கி, "அமரர்களையும் அடக்கியாள வல்லவராய் அரக்கர்கள் தோன்றியிருத்தலால் அவருடைய பிறப்பு இருப்பு சிறப்பு முதலிய நிலைகளைத் தெளிவா விளக்கி யருளுக" என வேண்டி யருளினர். அந் நம்பி இங்ஙனம் வேண்டவே இவர் நயமா உரைக்க நேர்ந்தார். அரசர் பெருமான் வினவியதும், அரிய மாதவர் பதில் மொழிந்ததும் நிருதர் நிலைமைகள் தெரிய நேர்ந்தன. முனிவர் உரை விநயவிவேகமா இனிமைசுரந்து வந்தது.

மரகதக் கொண்டல் மணிமுடி சூடி
மகிழ்வுடன இருக்குநாள் தனனில்
பரவருந் தவத்தின அகத்தியன முதலாய்ப்
பகர்ந்திடு முனிவரர் யாரும
விரைவினில எய்தி வாழ்த்தலும் ஐயன்
வியப்புடன் பூசனை புரிய
உரவுநீர்க் கடலோர் ஏழையும் பருகும்
தமிழ்முனி ஈங்கிவை யுரைப்பான். (1)

இந்திரசித்தை இருபது பணைத்தோள்
இராவணன தனை இகல விளைக்கும்
கந்தடு புழைக்கைக் கடாக்களி றனைய
கும்பகன னனைக்களப் படுத்தி
உந்துல கேழும வாழ்ந்திட அளித்தாய்!
எனறலும் உரவுவேல் இராமன்
அந்தமில சீர்த்திக் குறுமுனி யோடும்
அகங்குழைந் தீங்கிவை யுரைப்பான்: (2)

வெள்ளியங் கிரியை வேரொடும பிடுங்கும்
அரக்கனை முதலவிளம பாமல்
எள்ளருந் திறல்கூர் இந்திர சித்தை
இயமபியது எவன? அவன திறலும்
தள்ளருஞ்சீர்த்தி அரக்கர்தம தோறறம
முழுவதும சாற்றுதி என்னக்
கொள்ளைவண் டறைதார் இராகவன் உரைப்பக்
குறுமுனி யாங்கவை புகல்வான். (3)

குமரிவண் டரற்றும் தாமரைக் கிழவன்
குமரனாற் புலத்தியன எனபோன
திமிரநீள் மாயை கடந்துநற் றவஞ்செய்
திரணவிந் துவினுயர் சாலை

அமைவுடன் எய்தித் தவஞ்செய் காலத்தில்
அம்பகட் டிளமுலைத் துவர்வாய்
இமையவர் மாதர் அளப்பிலர் எய்தி
ஈர்ம்புன லாட்டயர்ந் தனரால். (4)

ஆங்கவர் தம்மைப் புலத்தியன் நோக்கி
ஆயிழை மகளிர் யாரேனும்
ஈங்கினி எய்திற் கருப்பமுற்றிடுக
என்றலும் அவர்வெரீஇ அகல
ஓங்குசீர்த் திரண விந்துவின் மகளீது
உணர்ந்திடாது ஆங்கண் எய்திடலும்
கோங்கிள முலையாள் கருப்பமுற்றிடத்தன்
தந்தைபால் குறுகியீ துரைத்தாள். (5)

உரைத்தலும் திரண விந்துவென் றுரைப்போன்
புலத்தியற் குவப்பொடும் அந்த
விரைக்கருங் குழலை அளிப்ப மற்றவளும்
விச்சிர வாவினை ஈன்றாள்
பரத்துவன் மகளை ஆங்கவன் வேட்டு
வயிச்சிர வணன்றனைப் பயந்தாள்
வரைப்பரு மறைதேர் வயிச்சிர வணன்மூ
வாயிரம் வருடம் நோற்றனனால் (6)

குறுந்துளி தூற்றுங் கங்கைதாழ் சடையோன்
கோதறு முனிதவம் நோக்கிச்
செறிந்திடும் இயக்கர் வேந்தன் ஆகென்னச்
செப்பினன் அகறலும வேதன்
பறந்துசெல் விமானம அளித்தனனஏகப்
பரிவொடும் தந்தையை வணங்கி
உறைந்திடு நகர்ஒன்று அளிக்கென இலங்கை
மாநகர் உறைதி என்றுரைத்தான. (7)

தொன்றுதொட்டு அரக்கர் வாழ்வுறும் இலங்கைத்
தொன்னக ரதனிடைக் குபேரன
ஒன்றருஞ்செல்வத் தமர்ந்தனன் என்ன
உவப்பொடு வரிசிலை இராமன்
நன்றறிமுனிவ! புலத்தியன அளிக்கும்
முன்னமும் நாண்மதி எயிற்று

வென்றிசேர் அரக்கர் உளர்கொலோ அவர்தம்
காதையை விளம்புக என்றான். [கூர்மபுராணம்]

இராச சபையில் அமர்ந்து இராமன் எதிரே அகத்திய முனிவர் அரக்கருடைய மரபு முறைகளை வரன்முறையே இவ் வாறு பேச நேர்ந்துள்ளார். முதலில் இயக்கர் குலத்தைச் சுருக்கமா உரைத்தார்: "புலத்திய முனிவர் பொறி புலன்களை வென்ற அரிய தவமுடையவர்; பிரமாவின் அருளால் பிறந்த வர்; சிறந்த பிரமசாரியாயிருந்த அவர் பேரழகுடைய வசுந்தை யை மணந்தார்; இல்லறம் புரிந்தார்; ஒரு புதல்வன் பிறந்தான்; அம் மகனுக்கு விச்சிரவசு என்று பெயர்; அவன் இளமையி லேயே அரிய கலைகள் பயின்று பெரிய மதிமானாய் விளங்கியிருந் தான்; பருவம் எய்தியவுடன் பரவசி என்னும் தருணமங்கையை மணந்து இனிய போகங்களை நுகர்ந்து வந்தான்; வருங்கால் ஒரு மகன் பிறந்தான்; அவனுக்கு வயிச்சிரவணன் என்று பெயர். சிறந்த அறிவுடைய அவன் சிவபெருமானை நினைந்து அருந்தவங்கள் புரிந்தான். இறைவன் அருளால் உயர் நலங்களை அடைந்தான். இயக்கர் குலத்துக்கெல்லாம் தனித் தலைமை வேந்தனாய் அவன் விளங்கி நின்றான். அவனுடைய தகுதிக்கு இசைய பிரமா ஒரு விமானம் அருளினான். கருதிய இடங்களுக் கெல்லாம் எளிதே விரைந்து சென்று வருகிற அந்தப் புட்பகத் தோடு அற்புத செல்வங்கள் யாவும் அடைந்தான். முன்னர் நிருதர் குலத்துக்கு உரிமையாயிருந்த இலங்காபுரியும், அளகா புரியும் அந்த இயக்கர் வேந்தனுக்கு இனிய இராசதானிகளாய் நன்கு அமைந்திருந்தன" என இங்ஙனம் குறுமுனிவர் கூறி வரவே இராமன் உவந்து கேட்டு வந்தான். புலத்திய முனிவர் மரபில் இராவணன் தோன்று முன்னமே இராட்சசகுலம் ஓங்கி யிருந்தது என்று அறியவே இராமன் வியந்தான்; அந்த அரக்கர் நிலைகளைத் தெளிவாகச் சொல்லும்படி கூறினான். கூறவே முனி வர் யாவும் விளக்கி யுரைத்தார். ஆதிநிருதர் முதல் இராவணனு டைய பிறப்பு சிறப்பு தவம் ஆற்றல் ஆட்சி முதலிய மாட்சிகள் எல்லாம் இவருடைய உரைகளால் தெளிவா அறிய வந்தன. அரிய பல மருமங்களை அறிந்து இராமன் பெருமகிழ்வடைந் தான். இராமநாதன் சரித்திரத்தில் இம் மாதவன் சரிதம் இடையிடையே நயமா மருவி மிளிர்கிறது. விதி நியமமான அதிசயங்கள் இப் பெரியவர்பால் வியனுப் பெருகி வந்துள்ளன.

தமிழ்எனும் அளப்பரும் சலதி தந்தவன்.
தீதுறும் அவுணர்கள் தீமை தீர்த்தவன்.
கடல்எலாம் ஒருகை மொண்டிடு மாதவன்.
சொற் கலை முனிவன்.
தமிழ்த் தலைவன்.
நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்.
கடல்எல்லாம் உண்டு உமிழ்ந்தான்.
உலகின் ஆர்இடர் களைந்தான்.
நாகமது நாகம் உற நாகம்என நின்றான்.
ஈசன்நிகராய் உலகு சீர்பெற இருந்தான்.
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.
எண்திசையும் ஏழுலகும் எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்தான்.
என்றுமுள தென்தமிழ இயம்பி இசைகொண்டான்.
துண்டமதி வைத்தவனை ஒத்தமுனி.
குறுமுனி குடித்த வேலை.
குடங்கையில் வாரிதி அணைத்துக் கொண்டவன்.
மாறிலாத் தமிழ்முனி.
ஊறிலா முனிவரன்.

இராம காவியத்தில் அகத்திய முனிவர் இன்னவாறு பேர் பெற்றுள்ளார். குறித்துள்ள பேர்களால் இவருடைய திவ்விய மகிமைகளைக் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்கிறோம்.

பரத்துவாசர்.

இவர் அரிய தவமுடையவர்; பெரிய முனிவர். அதிசய வரபலங்களுடையவர். கானகம் போன இராமனைத் தேடிப் பரதன் பரிதாபமாய்ச் சேனைகளோடு வந்தபொழுது இடையே இம் மாதவரைக் கண்டான். அரச போகங்கள் யாவும் துறந்து அண்ணனையே நினைந்து கண்ணீர் சொரிந்து உள்ளம் உருகிவந்த அந்த அரசிளங்குமரனைக் கண்டதும் இவர் மிகவும் உவந்து உபசரித்தார். சிறந்த விருந்து செய்ய விழைந்து அக்கினியில் ஆகுதி பெய்து இந்திர மந்திரத்தைச் செபித்தார். செபிக்கவே அமுதம் முதலிய தெய்வ வுணவுகள் திவ்விய நிலையில் வந்தன. அரசர் முதல் அடியவர் ஈறாக அங்கே வந்திருந்த சேனைகளுக்கெல்லாம் வானரமகளிர் வகை வகையா விருந்துகள் புரிந்தனர். அந்த அதிசய விருந்து அனைவரையும் எவ்வழியும் பரவசம் செய்தது.

துறந்த செல்வன் நினையத் துறக்கம்தான்
பறந்து வந்து படிந்தது பல்சனர்
பிறந்து வேறோர் உலகுபெற் றோர்என
மறந்து வைகினர் முன்னைத்தம் வாழ்வெலாம். (1)

நந்தல் இல்அறம் நந்தின ராமென
அந்தரத்தின் அரம்பையர் அன்பினர்
வந்துவந்துஎதிர் ஏத்தினர் மைந்தரை
இந்துவிற் சுடர் கோயில்கொண்டு ஏகினர். (2)

நானம் நன்குரைத் தார்நளிர் வானிடை
ஆன கங்கை யரும்புனல் ஆட்டினர்
கான மாமணிக் கற்பகம் தாங்கிய
ஊன மில்மலர் ஆடை உடுத்தினர். (3)

கொம்பினின்று நுடங்குறு கொள்கையார்
செம்பொ னின்கல ராசி திருத்தினர்
அம்பரத்தின் அரம்பையர் அன்பொடும்
உம்பர் கோனுகர் இன்னமிர்து ஊட்டினர். (4)

ஏந்து செல்வத்து இமையவர் ஆமெனக்
கூந்தல் தெய்வ மகளிர் கொண்டாடினர்
வேந்தர் ஆதி சிவிகையின் வீங்குதோள்
மாந்தர் காறும் வரிசை வழாமலே. (5)

இன்னர் இன்னணம் யாவரும் இந்திரன்
துன்னு போகங்கள் துய்த்தனர் தோன்றல்தான்
அன்ன காயும் கிழங்கும்உண்டு அப்பகல்
பொன்னின் மேனி பொடியுறப் போக்கினன். (6)

(இராமா, கிளைகண்டு)

பரத்துவாசருடைய தவத்தின் மகிமைகளை இங்கே உவந்து நோக்கி வியந்து நிற்கின்றோம். மண்ணுலகத்தை விண்ணுலகமாக்கியிருக்கிறார். மனித வாழ்வு தெய்வ வாழ்வாய் மாறியிருக்கிறது. அந்த ஆச்சிரமத்தைச் சூழ்ந்து நான்கு திசைகளிலும் ஐந்து யோசனை அளவும் பொன்னுலகமாய்ப் பொலிந்து எவ்வழியும் எழில்களோடு திவ்விய போகப் பொருள்கள் நிறைந்துள்ளன. புண்ணிய முனிவர் புனிதமான மந்திர முறையோடு எண்ணியவுடனே விண்ணுலக வாழ்வுகள் விரைந்து வந்திருக்கின்றன. அவ்வரவுகள் அரிய பெரிய அதிசயங்களாய் வியந்து காண நேர்ந்தன. வியப்புகள் யாண்டும் விரிந்து நீண்டன.

துறந்த செல்வன் நினையத் துறக்கம்
பறந்து வந்து படிந்தது.

இன்பமயமான சுவர்க்கம் இவர் கருதியவுடனே ஈண்டு வந்துள்ள உண்மையை இது நன்கு காட்டியுள்ளது. இதனால் இவரது தவத்தின் அதிசய ஆற்றலை அறிந்து கொள்ளுகிறோம்.

துறந்த செல்வன் என இவரை இங்கே குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கவுரியது. உலகப் பொருள் யாவும் துறந்தவர்; கையில் யாதொரு பொருளும் இல்லாதவர்; ஆயினும் எல்லாம் வல்ல பரம்பொருளை உரிமையாகவுடையவர் ஆதலால் செல்வன் என நின்றார். பரத்துவாசர் என்னும் பேர் பரத்தில் வசிப்பவர் எனக் காரணக் குறியாய் இவரது பூரண நிலையைத் துலக்கியுளது.

பரதனுக்கு இவர் ஆர்வமாய்ப் புரிந்த விருந்தில் யாவரும் பேரின்ப நிலையில் பொருந்தியிருந்தனர். அக்குலமகன் மாத்திரம் தேவமாதர்கள் ஊட்டிய போகப் பொருள்களுள் யாதும் புசியாமல் அச்சோலையிலிருந்த காயும் கிழங்கையும் உண்டு தரையில் படுத்திருந்தான். புனிதனது தவநிலை இனிது விளங்கி நின்றது.

தோன்றல் பொன்னின் மேனி
பொடியுறப் போக்கினான்.

மாதவர் ஆதரவோடு செய்த விருந்தில் பரதன் யாதும் பொருந்தாமல் விரதசீலனாய் மருவியிருந்துள்ள நிலையை இங்கே தெரிந்து மறுகுகிறோம். அண்ணன் கானக வாழ்வு செய்ய நேர்ந்தான் என்றபோதே உலக வாழ்வுகள் எல்லாம் துறந்து அரிய துறவியாய் அக்குலமகன் உறுதிபூண்டுள்ளான். அந்த உத்தமத் தம்பியின் சித்தசுத்தியை அறிந்து இந்த வித்தக முனிவரும் வியந்து புகழ்ந்தார். எவரையும் மயக்க வல்ல தெய்வீக இன்பங்கள் அவ்விரத வீரனிடம் யாதும் செய்ய முடியாமல் தேய்ந்து நின்றன. நெறிமுறைகள் பொறிகளை வென்று விளங்கின.

அன்று இரவு கழிந்தது; சூரியன் உதயம் ஆயினான் ஆகவே வானுலக போகங்கள் யாவும் மாயமாய் மறைந்து போயின. வந்த வரவும் போனபோக்கும் சிந்தை தெளிய முடியாத அதிசயக் கனவுகளாய்த் தோன்றித் தவசியின் மகிமைகளை விளக்கின.

நீல வல்லிருள் நீங்கலும் நீங்குமம்
மூலம்இல் கனவில் திருமுற்றுற
ஏலும் நல்வினை துய்ப்பவர்க்கு ஈறுசெல்
காலம் என்னக் கதிரவன் தோன்றினன். [1]

ஆறி நின்று அறம் ஆற்றலர் வாழ்வெனப்
பாறி வீழ்ந்தது செல்வம் பரிந்திலர்
தேறி முந்தைத்தம் சிந்தையர் ஆயினர்
மாறி வந்து பிறந்தன்ன மாட்சியார். [2]

தெய்வீகமாய் வந்த சிறந்த விருந்து காலையில் மறைந்து போன நிலையை இவை வரைந்து காட்டியுள்ளன. குறிப்பு மொழிகள் கூர்ந்து சிந்திக்கவுரியன. பரதனோடு சேர்ந்து வந்ததனால் அயோத்தி நகரவாசிகள் அமுதவுணவு அருந்தி ஒரு நாள் இரவு தெய்வ சுகங்களை அனுபவித்திருக்கின்றனர். பரத்துவாசர் பரதனுக்கு விருந்து புரிந்ததுபோல் இராமன் இலங்கையிலிருந்து சேனைகளோடு மீண்டு வருங்கால் எதிர்கொண்டு கண்டு அக் கோமகனுக்கும் சிறந்த விருந்தை அருளியுள்ளார். ஓமத் தீயில் ஆகுதி பெய்து விண்ணுலக போகங்களைக் கண் எதிரே காட்டி ஊட்டியிருப்பது, இவரது அரிய தவத்தின் பெரிய மகிமையை யாவரும் அறிய விளக்கியிருக்கிறது. அற்புத யோக சித்திகளுடைய இவர் இராம சரிதத்தில் விற்பன சோதியாய் விளங்கி நிற்கின்றார். இவருடைய பேரும் சீரும் பெருமித நிலையில் உள்ளன.

பரத்தின் ஓங்கும் பரத்துவன்.
வரத்தின் மிக்குயர் மாதவன்.
இந்து மோலி அன்னன்.
மாதவத்து ஓங்கல்.
மறையின் கேள்வன்.
மாதவப் பயன் உருவு கொண்டவன்.
நீதி வித்தகன்.
மாமறைத் தபோதனன்.
மறைகளின் இறுதி கண்டான்.
நீதி மாதவத்தின் மிக்கோன்.

இன்னவாறான பேர்கள் இவர்க்கு இசைந்திருக்கின்றன.

கௌதமர்.

இவர் அரிய தவங்கள் நிறைந்த பெரிய முனிவரர். கலைகள்

பலவும் தெளிந்தவர். அதிசய அழகியான அகலிகையை மணந்து விதிமுறையே வாழ்ந்து வந்தார். மதிநலமுடைய துறவிகளும் இவருடைய நெறி நியமங்களை வியந்து புகழ்ந்து அறிவு நலங்களை அடைந்து வந்தனர். பேரெழிலுடைய இவரது மனைவியை விழைந்து இந்திரன் கரவாய் நுழைந்து பிழை புரிந்தான்; அந்தத் தீமையை அறிந்ததும் இவர் அவனைச் சினந்து சபித்தார். இவரது சாபத்தால் தேவராசனும் அவமானமடைந்து அல்லல் படிந்து அவலமுழந்து நொந்தான் கள்ளம் புரிந்த இந்திரனை எள்ளி இகழ்ந்து விட்டு உள்ளம் பிரியாத தனது நல்ல மனைவியையும் கல்லாகும்படி சபித்தார். கோபத்தால் கொதித்து வந்த அந்தச் சாபத்தைக் கேட்டபோது அக் குலமகள் குலை துடித்தாள்; அவளது நிலையை உணர்ந்து நெஞ்சம் இரங்கிய இம் முனிவரர் அக் கல் உருவுக்கு ஓர் எல்லையைநேரே கூறியருளினர்.

தழைத்து வண்டு இமிரும் தண்டார்த் தசரதராமன் என்பான்
கழல்துகள் கதுவ இந்தக் கல்உருத் தவிர்தி என்றான்.

இந்தச் சொல்லால் இவருடைய எல்லா மகிமைகளையும் எளிதே தெரிந்து கொள்ளுகிறோம். பரமபத நாதனான திருமால் தசரத மன்னன் மகனாய் இராமன் என்னும் பேரோடு இவ் வுலகில் அவதரிக்கிறான் என்பதை முன்னதாகவே இவர் உணர்ந்துள்ளார். அந்த உண்மையை இந்த வாய்மொழி இங்கே தெளிவா விளக்கியுள்ளது. அரிய தவத்தால் யாவும் தெரிய நேர்ந்தார்.

முக்காலமும் முந்துற முன்னுணரும்
எக்காலமும் ஈசனை எய்தியுறும்
அக்காலமும் அவ்வுலகும் புகலும்
மிக்கானமெய்ஞ் ஞான வினோதனிவன்.

இத்தகைய வித்தக ஞானியாய் விளங்கியிருந்த இம் முனிவரை இராமன் நேரே காண நேர்ந்தான் விசுவாமித்திரரது யாகத்தை முடித்து விட்டு மிதிலையை நோக்கி நடந்து வருங்கால் வழியிடையே கிடந்த கல் உருவம் எழில் மிகுந்த பெண்ணுருவாய் எழுந்து நின்றதைக் கண்டு இராமன் வியந்து நின்றான். கோசிக முனிவர் உண்மையை உணர்த்தினர்; உணர்த்தவே அக் கோமகன் உள்ளம் இரங்கி அகலியை உடன் அழைத்துக் கொண்டு இம் மாதவருடைய ஆச்சிரமத்தை அடைந்தான் அடையவே

அதிசய பரவசராய் இவர் எழுந்தார். எழுந்த முனிவர் கையில் அகலிகையைத் தந்து "இந்தக் கற்பரசியோடு கூடி இனிது வாழுக" என்று தொழுது வேண்டினன். நீண்ட காலமாக்காண வேண்டும் என்று வேணவாவுடன் எதிர்பார்த்திருந்த இராம பிரானைக் கண்டதும் பேரானந்தம் கொண்டு இனிய மனைவியை யும் எய்தி மகிழ்ந்தார். இவரது வாழ்வு இன்பமாய் விளங்கியது.

குணங்களால் உயர்ந்த வள்ளல் கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன் வலங்கொண்டு ஏத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை அவன்கை யீந்து ஆண்டு அருந்தவனேடும் வாச
மணங்கிளர் சோலை நீங்கி மணிமதில் கிடக்கை கண்டார்.
(இராமா, அகலிகை, 86)

இராம சரிதத்துள் கோதமரது சரித்திரம் மருவியுள்ள நிலைமையை ஈண்டு நலமா அறிந்து கொள்ளுகிறோம். அரிய தவ சீலரான இப் பெரியவரது பெருமைகள் எவ்வழியும் திவ்விய ஒளிகளை வீசியுள்ளன. குண நீர்மைகள் உயர் சீர்மைகளாயின.

அவ்வியம் அவித்த சிந்தை முனிவன்.
பொய்யிலா உள்ளத்தான்.
முக்கணன் அனைய ஆற்றல் முனிவன்.
தடுப்பரும் சாபம் வல்ல வரந்தரு முனிவன்.
செய்ய தூயவன்.
அழல்தரும் கடவுள் அன்னன்.
புனித மாதவன்.
கஞ்சமா முனிவன் அன்ன முனிவன்.
அருந்தவன்; மெய்ம்முனி
தேவர்கோன் தனக்குச் செங்கண் ஆயிரம் அளித்தோன்.

கோதமருக்கு இன்னவாறு சிறப்புப் பேர்கள் நேர்ந்துள்ளன. இந்தக் குறிப்பு மொழிகளால் இவருடைய குணநலங்களும் நெறிநியமங்களும் தவவிரதங்களும் தத்துவ ஞானங்களும் வித்தகமான யோக சித்திகளும் நன்கு உய்த்து உணரலாகும்.

சதானந்தர்.

இவர் கௌதமருடைய அருமைப் புதல்வர். இளமையிலிருந்தே தெளிந்த ஞானசீலராய் வளமையா இவர் வளர்ந்து வந்

துள்ளார். இவருடைய அமைதி அறிவு நெறி நியமம் முதலிய மேலான நீர்மைகளைக் கண்டு முதிய தவமுனிவர்களும் இவர் பால் ஆர்வம் மீதூர்ந்து வந்தனர். விதேக தேசத்து வேந்தனான சனகன் இவரது புனித நிலையையும் ஞானசீலத்தையும் அறிந்து மகிழ்ந்து இவரைத் தனக்கு உரிய துணையாக அணைத்துக்கொண்டான் மந்திரிகள் முதல் யாவரும் இவர்பால் மதிப்பும் மரியாதையும் புரிந்து வந்தனர். எவ்வழியும் தூய சிந்தையராயிருந்து வந்தமையால் யாண்டும் இவர் திவ்விய தேசோடு சிறந்து விளங்கினார். இராமலட்சுமணரை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரர் மிதிலை நகருக்கு வந்து சனக மன்னனுடைய விருந்தினராய்த் தங்க நேர்ந்தபோது இவரே அம்முனிவரை உபசரித்து உடனிருந்து உரிய கடமைகள் யாவும் உவந்து செய்தார். இராமனை இவருக்கு அவர் அறிமுகம் செய்தபோது அதிசய பரவசராய்ப் பெருமகிழ்ச்சி அடைந்து உரிமை கூர்ந்து உவந்தார்.

பூந்தண் சேக்கைப் புனிதனை யேபொரு
வேய்ந்த கேண்மைச் சதானந்தன் என்றுரை
வாய்ந்த மாதவன் மாமுகம் நோக்கிநூல்
தோய்ந்த சிந்தைக் கௌசிகன் சொல்லுவான்: [1]

வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளல்தான்
இடித்த வெங்குரல் தாடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியும் நின் அன்னை சாபமும்
முடித்தென் நெஞ்சத்து இடர்முடித்தான் என்றான். [2]

[மிதிலைக்காட்சி]

கோசிகமுனிவர் சதானந்தரை நோக்கிக் கூறியுள்ள இவ் வாசகங்கள் ஈங்கு ஊன்றி உணரவுரியன. எவ்வழியும் எவ்வுயிர்க்கும் வெவ்விய துயரங்களைச் செய்து வந்த கொடிய தாடகையை முடியநூறி, நீண்டகாலம் முடியாதிருந்த எனது அரிய வேள்வியை இனிது முடித்து, உனது அருமைத் தாய்க்கு நேர்ந்திருந்த பொல்லாத சாபத்தை நீக்கி, என் உள்ளக் கவலைகளையெல்லாம் ஒழித்து எல்லையில்லாத இன்ப நலங்களை நல்கியருளிய வள்ளல் என இராமனைக் குறித்துக் கௌசிகர் உரைத்துள்ள உரைகளில் உழுவலன்பும் விழுமிய பண்பும் நன்றியறிவும் ஒளிபுரிந்துமிளிர்கின்றன உள்ளம்தெளியஉரைகள்வந்துள்ளன.

வடித்த மாதவ! என்று சதானந்தரை இங்கே விளித்திருக்கிறார். யாரும் செய்ய முடியாத அரிய தவங்களைச் செய்துள்ள

பெரிய மாதவர் இவ்வாறு உரிமையோடு பேசியிருத்தலால் இவருடைய திவ்விய தவநிலையை நாம் உணர்ந்து கொள்ளுகிறோம். அல்லலான அரக்கியை அழித்து ஒழித்தான் என்றது உலகத்திற்கு நல்லது செய்ய வந்துள்ளமை தெரிய. என் வேள்வியைப் பூர்த்தி செய்து, உன் அன்னை சாபம் தீர்த்தான் என்றது அவனது அதிசய ஆற்றலும், அற்புத மகிமையும் அறிய வந்தது. தீயோரைக் களைந்து நீக்கி நல்லோரைக் காக்கவந்த பெருமான் என்பதை மருமமா விளக்கி உரிமையைத் துலக்கியருளினர்.

பூந்தண் சேக்கைப் புனிதன் என்றது பிரமாவை. வேதங்களை ஓதியுணர்ந்து அரிய தவசீலராய் எவ்வழியும் புனித நிலையில் ஒழுகி வருதலால் இந்த மாதவருக்கு அந்த வேதா உவமையா வந்தார். இத்தகைய வித்தக முனிவர் இராமனைக் கண்டபோது உள்ளம் உவந்து வியந்து எல்லையில்லாத இன்பம் அடைந்தார்.

சீதையின் திருமணத் தேர்வுக்கு உரிமையாயிருந்த திவ்விய வில்லைக் குறித்து அன்று இவர் பேசிய பேச்சு அறிவின் சுவைகள் நிறைந்து அதிசய நிலைகளில் ஒளிவீசி நின்றது. “இந்த வில் அந்தமும் ஆதியும் இல்லாத ஆண்டவனுடையது; அந்த ஈசன் திருவருளால் ஈண்டு வந்தது; எந்த வகையிலும் ஏற்றம் வாய்ந்தது; அதிசய ஆற்றல் அமைந்தது; இதனை வளைத்தவன் எவனோ அவனே எம் மன்னன் திருமகளை மணமகளாக் கொள்ள வுரியவன். பெண்மை யுலகம் பெருமையடையும்படி தோன்றியுள்ள எங்கள் பெண்ணரசியை விழைந்து மண்ணுலகில் வாழுகிற அரசிளங்குமரர்கள் பலரும் திரண்டு வந்தார்; வந்தவரனைவரும் இந்த வில்லை நோக்கியவுடனே வேறு யாதும் நோக்காமல் உள்ளம் நாணி அவமானமாய் மீண்டே போயினர். அவ்வாறு போனவர் எவ்வகையிலும் ஈண்டு வரும் திரும்பி வரவேயில்லை.”

> அன்றுமுதல் இன்றளவும் யாரும் இந்தச் சிலை அருகு
> சென்றும்இலர்; போய்ஒளித்தார் தேர்வேந்தர்; திரிந்துமிலர்;
> என்றும்இனி மணமுமிலை என்றிருந்தோம் இவன்ஏற்றின்
> நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதுஎன்றான்.

சீதையின் திருமண நிலையைக் குறித்து இவ்வாறு சதானந்தர் பேசிய வசனங்களைக் கேட்டுக் கோசிக முனிவரும் வியந்தார். “இங்கே மணமகனாய் வந்துள்ள இராமன் சக்கரவர்த்தித்

திருமகன்; இளமையும் எழிலும் வளமையாய் வாய்ந்துள்ள பேரழகன்; உயர்குணக் குரிசில்; ஆயினும் வில்லை வளைத்தல் அன்றித் திருமணம் செய்ய இயலாதே" என்று வினயமா மொழிந்துள்ள இவரது இனிய உரைகளைக் கேட்டதும் முனிவர் முடிதளக்கி முடிவுநாடி மூண்டு புரிந்தார். கோசிக முனிவருடைய பிறப்பு இருப்பு துறவு தவம் மகிமை முதலிய நிலைகளைச் சதானந்தர் தனியே இராமனிடம் உரைத்தார்; அரிய வில்லின் வரலாற்றைப் பெரிய இராச சபையிலிருந்து எல்லாரும் அறியும் படி கோசிகரை நோக்கி விரிவாவிளக்கியருளினர். பேசுப்முறையில் இவர் பெரிய சதுரராய்ப் பெருகிநிற்கின்றார். இராமகாவியத்தில்இவரது சீவிய சரித்திரம் இவ்வகையில் இடம் பெற்றுள்ளது.

கபில முனிவர்.

இவர் அரிய தவயோகி. உலக பாசங்கள் யாவும் துறந்து தனியே பாதலத்தில் ஓர் இனிய பொழிலிடையே அமர்ந்து அருந்தவம் புரிந்திருந்தார். அக் காலத்தில் அயோத்தியிலிருந்து அரசு புரிந்த சகரமன்னன் ஒரு அசுவமேத யாகம் செய்தான். அவ்வேள்விக்கு உரிய விழுமிய பரி விதிமுறையின்படி உலகை வலம் வருங்கால் இடையே கரவா இந்திரன் அதனைக் கவர்ந்து கொண்டுபோய் இம்முனிவர் பின்னே நின்ற ஒரு மரத்தில் பிணித்துப் போனன். அக் குதிரையைத் தேடிவந்த வேந்தன் புதல்வர் நாடெங்கும் அலைந்து திரிந்து முடிவில் இவரிடம் வந்து சேர்ந்தார்; தங்கள் அசுவத்தைக் கண்டார்; அயலே முனிவரையும் பார்த்தார்; இவரே தங்கள் யாகத்துக்கு இடையூறாகப் பரியை மறைத்து வைத்தார் என்று சகரர் அனைவரும் சினந்து சீறிப் போராட மூண்டார்; மூளவே முனிவர் கண்ணைத் திறந்து கனன்று நோக்கினர்; நோக்கவே எல்லாரும் ஒல்லையில் எரிந்து சாம்பலாய்க்குவிந்தனர். ஒற்றர்கள் உள்ளங்கலங்கிஓடிஒழிந்தார்.

மூளும்வெஞ்சினத்து அருந்தவன் முனிந்து எரிவிழிப்பப்
பூளை சூடிதன் நகையினில எயில் பொடிந்தனபோல்
ஆளும் மைந்தர் ஆறயுதரும் சாம்பராய் அவிந்தார்
வேள்விகொண்டநல் வேந்தனுக்கு உரைத்தனர் வேய்கள்.

இவரது தவத்தின் அதிசய ஆற்றலை இதனல் உணர்ந்து கொள்ளுகிறோம். சிவபெருமானுடையநெற்றிக்கண் நெருப்பால் திரிபுரங்கள் எரிந்து அழிந்ததுபோல் இவருடைய பார்வையால்

யாவரும் பாழாய் அழிந்துள்ளனர். பின்பு சகரமன்னன் பேரனை அஞ்சுமான் வந்து இவரை வணங்கி வேண்டவே குதிரையைக் கொண்டு போகும்படி அருள் புரிந்து விடுத்தார். இந்த முனிவரது முனிவால் மாண்டு மடிந்த சகரரை நல்ல கதியில் உய்க்கவே ஆகாய கங்கையைப் பகீரதன் இங்கே கொண்டுவர நேர்ந்தான். அரிய காரியம் ஆற்றிய பெரிய தீரனை மருவியுளன்.

கலைக்கோட்டு முனிவர்.

இவர் அரிய பெரிய தவயோகி. விபாண்டகன் என்னும் விழுமிய மாதவருடைய அருமைப் புதல்வர் இளமையிலிருந்தே உலக நிலைகள் யாதும் தெரியாமல் தனியே வனத்தில் அமர்ந்து தவம் புரிந்திருந்தார். தூயமனமுடைய இவரது மாதவத்தை வியந்து வையமும் வானமும் வாழ்த்தி வந்தன. இவரால் இவ்வுலகம் அடைந்துள்ள நலங்கள் பல. புத்திரப் பேறின்றி வருந்தியிருந்த தசரதன் இவரை அரிதின் அழைத்து வந்து யாகம் புரிந்த பின்புதான் மக்களைப்பெற்று மகிழ நேர்ந்தான். ஆகவே இராமனது அவதாரத்துக்கு இவர் உபகாரமாயிருந்துள்ளமை தெரிய நின்றது. இந்தப் புனித முனிவரது மகிமை மாண்புகளைக் குறித்து வசிட்ட முனிவர் தசரதனுக்கு முதலில் தெளிவாக விளக்கி யருளினர். அருந்தவ நிலையில் உயர்ந்தவர் மொழிகள் ஒளிபுரிந்து வந்தன. அவருடைய அறிவுரைகளை அயலே காண்க.

வருகலை பிறவும் நீதி மனுநெறி வரம்பில் வாய்மை
தருகலை மறையும் எண்ணின் சதுமுகற்கு உவமைசான்றோன்
திருகலை யுடைய இந்தச் செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை முகச்சிருங்க உயர்தவன் வருதல் வேண்டும். (1)

பாந்தளின் மகுட கோடி பரித்தபா ரதனில் வைகும்
மாந்தரை விலங்கென் றுன்னும் மனத்தன்; மாதவத்தன்; எண்ணில்
பூந்தவி சுகந்து ளோனும் புராரியும் புகழ்தற்கு ஒத்த
சாந்தனால் வேள்வி முற்றின தனயர்கள் உளராம என்றான்.

இவருடைய நிலைமை நீர்மை கலைஅறிவு தவநெறி தத்துவ ஞானம் முதலிய வித்தக நிலைகளை இவை தெளிவா விளக்கியுள்ளன. இவரது உருவத்தோற்றமும் உணர்வின் காட்சியும் விதி நியமங்களும் அதிசய நிலையின. கலைமான் கொம்பு ஒன்று இவர் நெற்றியில் நிலவியிருந்தது; ஆகவே கலைக்கோட்டு முனிவர் என

நேர்ந்தார். உலக நாட்டமின்றித் தனியே ஒதுங்கியிருந்தமையால் மனிதரை இரண்டு கால் மிருகங்களாகவே இவர் கருதி வந்தார்.

மாந்தரை விலங்கு என்று உன்னும் மனத்தன்.

உலக மாந்தரை இவர் கருதி வந்துள்ளமை இதனல் காண வந்தது. மெய்யுணர்வு இழந்து வைய மையல்களில் அழுந்தி வெய்ய மடமையாய் வீணே நாளைக் கழித்து விளிந்து ஒழிந்து போதலால் மக்களை மாக்களாகவே இவர் இகழ்ந்து வந்துள் ளார். அவ்வுண்மையும் நுண்மையா இதில் உணர வந்தது.

பிரமதேவனும் சிவபெருமானும் புகழ்ந்து போற்ற வுரிய பெரியவன் எனக் கூறியிருத்தலால் இவரது அரிய மகிமைகளை அறிந்து கொள்கிறேம். தேவதேவரும் உவந்து புகழ உயர்ந்த தவசீலராய்ச் சிறந்த மகிமையுடன் இவர் விளங்கியிருந்துள்ளார்.

புராரியும் புகழ்தற்கு ஒத்த சாந்தன்.

தத்துவ ஞானியாய்ச் சமாதியில் அமர்ந்திருந்த இவரது சித்த சாந்தியின் நிலைமையைத் தலைமையா ஈண்டு உணர்ந்து கொள்கிறேம். தவசிரேட்டரான வசிட்டர் இவரை இவ்வாறு உவந்து புகழ்ந்துள்ளார். திவ்விய தவ மேன்மை தெரியவந்தது.

இத்தகைய வித்தக முனிவரைத் தொழுது கொண்டு வந்து விழுமிய வேள்வி புரிந்து மேலான மைந்தரைத் தசரதன் பெற் றுள்ளான் என விசுவாமித்திர முனிவர் சனக மன்னனிடம் நயமா விளக்கியிருக்கிறர். தேசு மிகுந்த அந்த மாதவர் பேசி யுள்ள வாசகங்கள் மதிநலம் சுரந்து கலைமணம் கமழ்ந்து அரிய பல சுவைகள் பெருகி விழுமிய எழிலோடு வெளி வந்துள்ளன.

தசரதன் கருதியது.

சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
விலைக்கோட்டும பேரல்குல் மினனுடங்கும் இடையாரை
முலைக்கோட்டு விலங்குஎனறங் குடனணுகி முனநின்ற
கலைக்கோட்டுப் பெயர்முனியால் துயர்நீங்கக் கருதினன். [1

தவசியிடம் வேண்டியது.

தார்காத்த நறுங்குஞ்சித் தனயர்களென் தவமின்மை
வார்காத்த வனமுலையார் மணிவயிறு வாய்த்திலரால்

நீர்காத்த கடல்காத்த நிலம்காத்தேன் என்னிற்பின்
பார்காத்தற்கு உரியாரைப் பணிநீஎன்று அடிபணிந்தான்.

மாதவர் அருளியது.

அவ்வுரைகேட்டு அம்முனியும் அருள்சுரந்த உவகையனாய்
இவ்வுலகம் அன்றியே எவ்வுலகும் இனிதளிக்கும்
செவ்வியிளம சிறுவர்களைத் தருகினறேன் இனித்தேவர்
வவ்விநுகர் பெருவேள்விக்கு உரியவெலாம வருகென்றான்.

வேள்வி புரிந்தது.

காதலரைத் தரும்வேள்விக் குரியவெலாம் கடிதமைப்ப
மாதவரிற் பெரியோனும மற்றதனை முற்றுவித்தான்;
சோதிமணிப் பொற்கலத்துச் சுதையனைய வெண்சோறுஓர்
பூதகணத் தரசேந்தி அனல்நின்றும் புறப்பட்ட. (4)

அமுது வந்தது.

பொன்னின்மணிப் பரிகலத்தில் புறப்பட்ட இன்னமுதைப்
பனனுமறைப் பொருளுணர்ந்த பெரியோர்ன்தன் பணியினால்
தனனனைய நிறைகுணத்துத் தசரதனும் வரன்முறையால்
நனனுதலார் மூவருக்கும நாலுகூறிட்டளித்தான. (5)

[இராமா, குலமுறை]

கலைக்கோட்டு முனிவரது தகைமையும், அவர் யாகம் செய்த வகைமையும், அதிலிருந்து அரிய அமுதம் வெளிவந்ததும், அதனைப் பாகம் செய்து மன்னன் மனைவியர்க்குத் தந்ததும் இங்கே நன்கு தெளிய வந்துள்ளன. வசிட்ட விசுவாமித்திரர்களால் வியந்து புகழ்ந்து போற்றப்பட்டுள்ளமையால் இம்மாதவருடைய மகிமையும் மாண்பும் வியனாய் விளங்கியுள்ளன. இராமபிரான் இவ்வுலகில் தோன்றுதற்கு ஆன்ற துணையாய் இச் சாந்த சீலர் அமைந்துள்ளமையை ஓர்ந்து கொள்கிறோம்.

சனக மன்னன்.

இந்த அரசன் அதிசய ஞானி. விதேக தேசத்தின் தலைநகரமாகிய மிதிலையிலிருந்து அரசு புரிந்து வந்தான். சிறந்த முனிவர்களும் உயர்ந்த தவசிகளும் தெளிந்த ஞானிகளும் இம் மன்னனிடம் வந்து அரிய தத்துவ நிலைகளை உணர்ந்து சித்தங்கள் தெளிந்துள்ளனர். உலக நிலையையும் பரநிலையையும் ஒரே காட்சியில்

தெளிவா நோக்கி ஆட்சியை மாட்சியாப் புரிந்து வந்துள்ளான். திருமகளின் அவதாரமான சீதை இந்த வேந்தனுடைய அருமைத் திருமகளாய் விளைந்து வந்து தோன்றியுள்ளாள். தந்தை என்று சிந்தை மகிழ்ந்து அந்த மகள் சொல்லிவரும் போதெல்லாம் இந்த அரசன் உள்ளம் உருகி உவகை மீதூர்ந்து வந்தான். பருவ மங்கையாய்ச் சானகி மருவியிருக்கும் சமையம் நோக்கியே இராமனை விசுவாமித்திரர் மிதிலைக்கு அழைத்து வந்தார். சனகனைக் கண்டார். அரிய ஒரு வேள்வியை முடித்து அழகிய மணி மண்டபத்தில் விழுமிய மாந்தரும் மாதவரும் சூழ வீற்றிருந்த வேந்தன் இராமனைக் கண்டதும் பெருமகிழ்ச்சி கொண்டான்.

முடிச்சனகர் பெருமானும் முறையாலே
மறைவேள்வி முற்றிச் சுற்றும்
இடிக்குரலின் முரசியம்ப இந்திரன்போல்
சந்திரனதோய் கோயில் எய்தி
எடுத்தமணி மண்டபத்துள் எண்தவத்து
முனிவரொடும் இருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனும்
தம்பியும்மருங்கி னிருப்ப மாதோ.

ஞானமுனிவர் புடைசூழப் பெரிய இராச சபையில் சனக மன்னன் இருந்துள்ள நீர்மை சீர்மைகளை இங்கே கூர்மையாத் தெரிந்து கொள்ளுகிறோம். இவ்வாறு இருந்தபோதுதான் இராமனைக் கண்டான். அந்த அதிசய அழகனைக் காணவே இந்த மதிமான் ஆனந்தம் மீதூர்ந்து கோசிகரிடம் ஆசையோடு வினவினான். அரிய கலை ஞானியான அவர் யாவும் பேசியருளினர்.

உருவ அழகை நோக்கி உள்ளம் களித்திருந்த சனகன் இராமனது குலமுறையின் நிலைமையை அறியவே பெருமகிழ்வடைந்தான். பின்பு அவன் வில்லை வளைத்ததைக் கண்டதும் எல்லையில்லாத பேரின்பம் எய்தினான். நல்ல நாளில் மணம் புரிய நேர்ந்தான். தனது அருமை மகனுடைய திருமணத்தைக் கண்டு மகிழச் சேனைகளோடு திருவயோத்தியிலிருந்து தசரதன் மிதிலைக்கு வந்தான் அந்த வேந்தர் பெருமானை இச் சாந்தசீலன் எதிர்கொண்டு கண்டு முதிர்பேரன்போடு உபசரித்து அழைத்து வந்து அதிசய வசதிகள் புரிந்து ஆர்வம் மீதூர்ந்து போற்றினான்.

வந்தனன் அரசன்என்ன மனத்தெழும் உவகைபொங்கக்
கந்தடு களிறும தேரும கலினமாக் கடலும சூழச்
சநதிரன இரவிதனனைச் சார்வதோர தனமைதோன்ற
இநதிரதிருவன தனனை எதிாகொள்வான எழுந்துவந்தான்.

தசரத மன்னனைச் சனகராசன் எதிர்கொண்டு கண்டுள்ள விழுமிய நிலைமையை இது விழி தெரிய விளக்கியுளது. சூரியன் சந்திரன் என்ற உவமைகள் உயர்வு தாழ்வுகளோடு மரபுமுறை களையும் விளக்கி நின்றன. சனகன் சந்திரகுல வேந்தன் என்பது இங்கே தெரிய வந்தது. இரவிகுலதிலகனுடன்சம்பந்தனுயினன்.

வெங்கண் ஆனையி னான தனி வெண்குடை
திங்கள் தங்கள் குலக்கொடி சீதையாம
மங்கை மாமணம காணிய வந்தருள்
பொங்கி ஓங்கித் தழைப்பது போனறதே. [உலாவியல், 52

தசரத மன்னனது வெண்கொற்றக் குடை பூரணசந்திர னைப்போல் பொலிந்து விளங்கியது தன் குல திலகமான சீதை யின் திருமணத்தைக் கண்டு மகிழவே சந்திரன் அந்த வெண் குடை வடிவில் அங்கு வந்திருந்ததுபோல் சுந்தரமாய்த் துலங்கி நின்றது எனக் கவி இவ்வாறு சுவையா விளக்கியிருக்கிறார்.

பூமகளும் பொருளும் என நீ என்
மாமகள் தன்னொடு மன்னுதி!

என்று இராமன் கையில் தாரைவார்த்துச் சீதையைச் சனக மன்னன் தந்தபோது அனைவரும் அதிசய பரவசராய்த் துதி செய்து தொழுதனர். தனது அருமை மகளுக்குத் தகுதியான மணமகன் அமைந்ததை நினைந்து சனகன் மனம் மிகமகிழ்ந்தான்.

அரிய தந்தை என்று சீதையும், இனிய மாமன் என்று இராமனும் உரிமையோடு எவ்வழியும் உவந்து கூறும் பெருமை யை இம்மன்னன் செவ்வையா எய்திச் சீர் நிறைந்துள்ளான்.

அனகன் இந்நகர் எய்தியது ஆதியில்
சனகன் செய்த தவப்பயன்.

இன்னவாறு எவ்வழியும் தேச மக்கள் உள்ளம் உவந்து பேசியுள்ளனர். இம்மன்னனுக்குக் கிடைத்திருக்கும்மாப்பிள்ளை மாதவத்தின் பெரும் பயனுன மகாபாக்கியமேயாம் என யாவ ரும் ஆவலோடு போற்றியிருக்கின்றனர். இராமனுக்குப் பெண் கொடுத்த மாமன் எனக் காவியத்தில் உரிமை தோய்ந்துள்ளான்.

இராமன்.

இராமன் திருமாலின் அவதாரம். விண்ணவர் துயர் தீர மண்ணவர் மரபில் மருவியுள்ள புண்ணியமூர்த்தி. எண்ணரிய மகிமைகள் இயல்பா வாய்ந்தவன். தசரதன் புரிந்த அருந் தவத்தின் பெரும் பயனாக அம்மன்னனுக்கு மகன் எனப் பிறந்தான். தாய் பெயர் கோசலை. இக்குலமகன் பிறந்தபொழுது உலகம் உவகையில் நிறைந்து நின்றது. பரதன் இலக்குவன் சத்துருக்கன் என்னும் இம் மூவரும் இந்நம்பிக்குத் தம்பியராய்த் தோன்றியுள்ளனர். இத்தோன்றல் அதிசய அழகன்; மதிநலம் மிகுந்தவன்; அரிய பல கலைகள் தெளிந்தவன்; அற்புதவீரன். சத்தியம் கருணை தருமம் நீதி முதலிய உத்தம நீர்மைகள் எல்லாம் இவனிடம் ஒருங்கே குடிகொண்டுள்ளன. சிறந்த பெருந்தகைமையாளன்; அகில மங்கள குணகண நிலையினன். இக்கோமகன் பருவம் எய்தியிருந்தபோது கோசிக முனிவர் அயோத்திக்கு வந்தார்; வேந்தனைக் கண்டார்; தாம் புரிகிற வேள்விக்குத் துணைபுரிய இராமனை வேண்டினார்; மன்னன் முதலில் மறுகினான்; பின்னர் இசைந்தருளினான். அருளவே இக் குமரன் வில் எடுத்து வீர கம்பீரமாய்ப் புறப்பட்டான்; இலக்குவனும் பின் தொடர்ந்தான்; முனிவர் உவந்து அழைத்துப் போனார்; இடையே எதிர்ந்த கொடிய தாடகையைத் தொலைத்தான்; எல்லாரையும் கொல்ல வல்ல பொல்லாத அரக்கி புலையாய் மடியவே மாதவர் மகிழ்ந்தார். வானவரும் வியந்து வாசமலர்களை வாரி வீசி இவ் வீரனைப் புகழ்ந்தார். அரக்கர்களால் தமக்கு நேர்ந்துள்ள துயரங்கள் யாவும் இக்கோமகனால் நீங்கிப்போம் என்று அமரர் யாவரும் உவகை மீதூர்ந்து உரிமையுடன் ஓங்கி நின்றார்.

யாமுமெம் இருக்கை பெற்றேம் உனக்கிடை யூறும் இல்லை
கோமகற்கு இனிய தெய்வப்படைக்கலம் கொடுத்தி என்னா
மாமுனிக்கு உரைத்துப் பின்னர் விற்கொண்ட மழையனான்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயினாரே.

இவ் வீர மகனுடைய வில்லாடலைக் கண்டு விண்ணவர் மகிழ்ந்து கோசிக முனிவரை நோக்கி ஆசையோடு புகழ்ந்து கூறிப் பூமாரி பொழிந்து போயுள்ளனர். இக்கோக் குமாரனால் அமரர் பாக்கியம் அடையநேர்ந்துள்ள உண்மையை இது நுண்மையா உணர்த்தியுளது. வெற்றி நிலை வியப்புகளை விளைத்தது.

முன்னதாக மூண்ட இந்தக் கன்னிப்போர் இவன் ஈண்டு வந்துள்ள காரியத்தை நன்கு விளக்கி நின்றது. பின்பு முனிவரது வேள்வியை இனிது நிறைவேற்றினன்; அகலிகையின் சாபத்தை நீக்கி அவளைக் கோதமரிடம் சேர்த்தருளினன்; கோசிகர் குறிப்பின் வழியே மிதிலையை அடைந்தான்; இராச வீதி வழியே நடந்து செல்லுங்கால் கன்னிமாடத்திலிருந்த சீதையைக் கண்டான்; காதல்மீக் கொண்டான்; உள்ளம் நோதலோடு சனகன் மாளிகையை அடைந்தான்; அன்று அம் மன்னன் விருந்தினனாய் மருவியிருந்தான்; மறுநாள் அரிய வில்லை எளிதே வளைத்தான்; எல்லாரும் உள்ளம் களித்தார்; இப் பிள்ளைப் பெருமாலைப் பெரிதும் புகழ்ந்தார்; கொற்ற வில்லை வளைத்த வெற்றிப் பரிசாகச் சீதையை இராமனுக்குச் சனக மன்னன் உரிமையாத் தந்தான் திருமணம் பெருமகிழ்வோடு இனிது நடந்தது இலக்குமியின் அவதாரமாய்ச் சீதை இலக்கோடு அங்குத் தோன்றியிருந்தாள் ஆதலால் பழைய கிழமைகள் விழுமிய நிலையில் பதிந்து புதிய திருமணம் அதிசய நிலையில் விதிமுறையே அமைந்தது. கண்டவர் எவரும் பெருமகிழ்வெய்தினர்.

எங்கள்செய் தவத்தினில் இராமன்என வந்தோன்
சங்கினொடு சக்கரம உடைத்தனி முதல்பேர்
அங்கணரசு ஆதலின அவ் வல்லி மலர்புல்லும்
மங்கையிவள் ஆமென வசிட்டன் மகிழ்வுற்றான்.

இந்த உத்தம மணமக்களைக் குறித்துத் தத்துவ ஞானிகள் இவ்வாறு மருமமா யுணர்ந்துள்ளமையால் இவருடைய தரும கருமங்களை எவ்வழியும் செவ்வையா நாம் தெரிந்து கொள்ளுகிறோம். அந்தப் பெண்ணரசியோடு எண்ணரிய வரிசைகளையும் எய்தி இராமன் தன் நகர்க்கு மீண்டான்; மீண்டு வருங்கால் பரசுராமர் மூண்டு போராட நேர்ந்தார்; அவரை எளிதே வென்று வெற்றித்திருவுடன் திருவயோத்தியை அடைந்தான். அன்பு நலம் கனிந்த இன்ப போகங்களில் இனிது திளைத்திருந்தான். புதிய மண வாழ்வு அதிசய இன்பங்களை அருளி வந்தது.

தசரதராமன், கோசலைராமன் எனக் குலாவி வந்தவன் சானகிராமன் என உழுவலன்போடு செழுமியிருந்தான். அதிசய அழகியுடன் உல்லாச உரைகளாடி எல்லியும் பகலும் இடை

தெரியாமல் உள்ளம் உவந்து உயர்ந்த போகங்களை நன்கு நுகர்ந்து வந்தான். ஆண்டுகள் சில ஆனந்தமாய்க் கழிந்தன. இன்ப வாழ்வில் இவ்வாறு இனிது மகிழ்ந்து வருங்கால் இக்கோமகனுக்கு மன்னன் முடிசூட்ட விழைந்தான். மணி மகுட விழாவை அறிந்து மாநிலம் எங்கணும் பெருமகிழ்வடைந்தது. குறித்த நாள் வந்தது; மந்தரை புரிந்த வஞ்சத்தால் சிந்தைதிரிந்த கைகேசி அரசனைத் தந்திரமா வசப்படுத்தி முடிசூட்ட ஒட்டாமல் தடுத்தாள்; அவ்வளவோடு அமையாமல் இராமனைப் பதினான்கு வருடம் வனவாசம் செய்துவரும்படி பணித்தாள். சிறிய தாய் சொன்னபடி செய்வதே தனக்குப் பெரிய தவம் என்று உரிமையோடு அவளை உவந்து தொழுதுவிட்டு இப் பெருந்தகை விரைந்து கானகம் போனான். சீதையும் இலக்குவனும் ஆதரவோடு இவன் பின்னே போனார்; கங்கைநதி அருகே வந்து இராமன் தங்கியிருந்தபோது குகன் அங்கே வந்தான்; இக் கோமகனைக் கண்டு உழுவலன்பால் உருகி நின்றான்; அவனை உரிமையோடு தழுவி உறவுகொண்டு சிறத்திவிட்டுச் சித்திரகூட மலையில் போயிருந்தான். பின்பு தண்டகவனம் புகுந்து முனிவர் பலரைக் கண்டு மகிழ்ந்தான். கானகவாசம் இம்மான வீரனுக்கு ஞான சீலமாய்க் கழிந்தது; முடிவில் கோதாவரி நதி அருகே ஒரு இனிய பூஞ்சோலையில் பன்னசாலை அமைத்து நன்னயமா அமர்ந்திருந்தான் மனைவியும் தம்பியும் இனமா இதம புரிந்துவர இக்குலமகன் நலமா மகிழ்ந்து வாழ்ந்து வருங்கால் ஒருநாள் இலங்கைவேந்தன் தங்கை அங்கே வந்தாள். இந்த அழகனைக் கண்டாள்; உளம் மிக உருகிக் காதல்மீக் கொண்டு காமவெறியளாய்க் கலந்து மகிழ விரைந்தாள்; இக் கோமகன் அவளை வெறுத்து விலக்கினான்; அவள் உள்ளம் கடுத்து ஒல்லையில் சென்று கரனிடம் உரைத்தாள்; அந்த அரக்கர் அதிபதி பெரிய சேனைகளோடு திரண்டு வந்து இராமனோடு போராடி மாண்டு மடிந்தான்; மடியவே சூர்ப்பநகை இலங்கையை அடைந்து இராவணனிடம் சீதையின அதிசய அழகைத் துதி செய்து சொன்னாள். அந்த சொல்லைக் கேட்டதும் அவன் உள்ளம் உருகினான்; உயிர் மறுகினான்; காமவெறியனாய்க் கடுகி வந்து மாரீசனை அணுகச் சதிபுரிய ஏவினான்; அவன் ஓர் அழகிய மாய மானாய் வந்து தோன்றினான்; இத் தோன்றல் அதனைப்

பிடிக்கத்தொடர்ந்தான்; தம்பியும் இந்நம்பி பின் நயந்துபோனான்; போகவே இராவணன் ஒரு முதிய மாதவன் போல் வேகமாய் வந்து பேதம புரிந்து சீதையைக் கவர்ந்து கொண்டு வானவீதி வழியே விமானத்தில் விரைந்து போனான். இடையே மூண்டு எதிர்த்த சடாயுவை வீழ்த்தி வேகமாய்ச் சென்று இலங்கை அருகே அசோக வனத்தில் அப்பெண்ணரசியைச் சிறை வைத்தான்.

மாயமான் பின்போன இராமன் அதனை மாய்த்து வீழ்த்தி மீண்டு வந்தான்; பன்னசாலையைப் பார்த்தான்; சீதையைக் காணும்; உள்ளம் துடித்து உயிர் பதைத்தான்; தம்பியோடு தென திசையை நோக்கி விமானச் சுவட்டின் வழியே விரைந்து ஓடித் தேடினான்; இடையே வெட்டுண்டு கிடந்த சடாயுவைக் கண்டான; வானவீதியில் இராவணனோடு போராடி வாளாலடி பட்டு வீழ்ந்துள்ளதை அறிந்து நீண்ட துயரோடு நெடிது அழுதான்; மாண்டுபோன அவனைத் தகனம் செய்துவிட்டுக் காடும் மலையும் நடந்து கவந்த வனத்தைக் கடந்து சவரியைக் கண்டு வழி வகை தெரிந்து மதங்கமலையை அடைந்தான். அங்கே அனுமானைக் கண்டு அவன் மூலமாச் சுக்கிரீவனை நட்புக் கொண்டான்; அவனுடைய அல்லல்களைக் கேட்டு உள்ளம் இரங்கி வாலியை வதைத்து அரசுரிமையை நல்கினான். அவனுடைய படை வீரர்கள் நான்கு திசைகளிலும் சென்று சீதையைத் தேடினர். சேனைகளோடு தென்திசையில் சென்ற அனுமான் கடல் கடந்து இலங்கை புகுந்து பலவும் ஆராய்ந்து சீதையைக் கண்டு மீண்டு வந்து இராமனிடம் உண்மையைச் சொன்னான். சொல்லவே எல்லாரும் களித்தார். உடனே எழுபது வெள்ளம் சேனைகளோடு சுக்கிரீவன் துணைவர இராமன் உக்கிர வீரமாய் எழுந்து தெற்கு நோக்கி வந்தான்; இடையே கிடந்த கடலைக் கடந்து இலங்கையை அடைந்தான். விபீடணனும் துணைசேர்ந்தமையால் பகைப்புலன்களின் வகைகளை எல்லாம் நன்கு தெரிந்து அங்கதனைத் தூது விடுத்தான். யாதும் பயன் இல்லாமையால் போர் மூண்டது; பல்லாயிரம் கோடி அரக்கர்கள் பாழாய் மடிந்தனர்; கும்பகருணன் அதிகாயன் இந்திரசித்து முதலிய அதிசய வீரர்கள் எல்லாரும் அழிந்து ஒழிந்தனர்; மூலபலத்தோடு நிருதர்குலம் முழுவதும் நாசமாயது. முடிவில் இராவணன் தேர்ஏறிப் போராட மூண்டான். இராமன் எதிரே நீண்ட

நேரம் வில்லாடல் புரிந்து இறுதியில் மாண்டு விழுந்தான். அரக்கர் குலத்தை அடியோடு வென்று அதிசய வெற்றி வீரனாய் நின்ற கோதண்டராமனை மூதண்டங்களும் புகழ்ந்து போற்றின. இலங்கை அரசை வீடணனுக்கு உரிமையாக்கி முடிசூட்டி வைத்துச் சீதையைச் சிறைமீட்டிச் சேனை தளங்களோடு இராமன் புட்பக விமானத்தில் ஏறி மீண்டு வந்து அயோத்தியை அடைந்தான். நெறிமுறையின்படி மணிமகுடம் புனைந்து அரசர் பெருமானாய் அரியணையில் அமர்ந்து அகிலமும் இனிது புரந்து வந்தான். உயிரினங்கள் யாண்டும் உவந்து வாழ்ந்து வந்தன.

இந்த இராம சரித்திரம்தான் பலவகையான கிளைகளோடு விரிந்து பரந்து இராமாயணம் என்னும் இதிகாசமாய் விளைந்து வந்துள்ளது. இராமகாவியம் சீவகோடிகளுக்குச் சீவிய அமுதமாய் மேவியுள்ளமையால் யாவரும் பேருவகை அடைந்து வருகின்றனர். அறிவு நலங்களை அருளி அது ஒளி புரிந்து வருகிறது.

இராமனுடைய குண நீர்மைகள் மனித மரபுக்குப் பல வகையிலும் இனிய போதனைகளாய் இசைந்து நிற்கின்றன. தந்தை தாயர்கள் சிந்தை மகிழ எந்த வகையிலும் மைந்தன் இதமாய் ஒழுகுதல்; மனைவியைக் கணவன் மாண்பா நடத்தல்; தம்பியரைத் தமையன் அன்பாய் அணைத்தல்; அடுத்தவரை யாண்டும் ஆதரித்தல்; எவ்வுயிர்க்கும் இரங்கி யருளுதல்; தீமையை நீக்கி நன்மையை ஆக்குதல்; தரும நீதிகள் தவறாமல் பேணுதல்; சத்தியம் தழுவி எவ்வழியும் உத்தமனாய் வாழுதல் முதலிய நிலைகளை இராமன் யாவரும் காண ஒழுகிக் காட்டி யிருக்கிறான்.

இராம காவியத்தினிடையே இக் கோமகனுடைய வாய் மொழிகள் நேம நியமங்கள் தோய்ந்து நெறிமுறைகள் வாய்ந்து அறிவின் ஒளிகளாய் வெளி வந்துள்ளன மனிதன் புனிதமாய் வாழ வழி காட்டி நிற்கின்றன. சில அயலே வருகின்றன.

ஏகும் நல்வழி என் மனம்.
அல்வழி யாதும் ஆகாது.
இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்
சிந்தையாலும் தொடேன்.
நன்புடைளது எனின் அன்றோ சுகம் உளது.
அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி.

சிறியர்என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்.
தீயன வந்தபோது சுடுதியால் தீமையோரை.
நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது
வஞ்சம் அன்று மனு வழக்கு.
மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்.
இறப்பினும் திருவெலாம் இழப்பஎய்தினும்
துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே.
அறம்திறப்பல் அருங்கடி மங்கையர் திறம்திறப்பல்.
மறம்திறம்பல் வலியம்என மனம் புறம்திறப்பல்.
நன்று தீதுஎன்று இயல்தெறி நல்லறிவு
இன்றி வாழ்வது விலங்கு.
வினையினல் வரும் மேன்மையும் கீழ்மையும்.
வேண்டேன் இம்மாயப் புன்பிறவி வேண்டேனே.
தீவினைப் பிறவிவெஞ் சிறையில் பட்டயாம்
நோயுறு துயர்என நுடங்கல் நோன்மையோ?
பிரிபவர் யாவரும் பிரிக; பேரிடர்
வருவன யாவையும் வருக.
எம்பி நீயுளை இனி அரணும் வேண்டுமோ?
ஒன்று வேண்டலராயினும் ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவரேல் அவர் சிறுமையில் தீரார்.
மறுமை கண்ட மெய்ஞ்ஞானியர் ஞாலத்தவரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யார் என விரும்பார்.
பெருமையும் வண்மைதானும் பேரெழில் ஆண்மைதானும்
ஒருமையின் உணரநோக்கின் பொறையினது ஊற்றம்.
புயத்துறை வலியர்எனும் பொறையொடும் பொருந்தி
வாழ்தல் சயத்துறை; அறனும் அஃதே.
மதியினும் விதி வலியது.
அறத்தினல் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தினல் அரிதுஎனபது மனத்திடை வலித்தி.
ஆளையா! இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா!
பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்தும் என்னர்.
அழியும்கால் தரும் உதவி

மொழியுங்கால் தரும் உயிரின் முற்றுமே.
தக்கஇன்ன தகாதன இன்னஎன்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்தஉள
மக்களும் விலங்கே; மனுவின்நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே.

இராமநாதனிடமிருந்து இத்தகைய வாசகங்கள் வித்தக விவேகங்களாய் வந்துள்ளன. பொருள் நிலைகளை நன்கு உய்த்து உணர்ந்து கொள்ள வேண்டும். மனிதன் எவன்? மிருகம் எது? என இறுதியில் குறித்திருப்பது யாவரும் கருதியுணர வுரியது.

காவியத்தில் இந்த தருமமூர்த்தியைக் குறித்து வந்துள்ள குறிப்புகள் அரிய பல மருமங்களை விளக்கிப் பெரிய நீர்மைகளோடு பெருகி நிற்கின்றன. அயலே சில அறிய வருகிறோம்.

ஒருபகல் உலகெலாம் உதரத்துள் பொதிந்து
அருமறைக்கு உணர்வரும் அவன்.
கருமுகில் கொழுந்து எழில்காட்டும் சோதி.
காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவன்.
வாலுணர்வினுக்கு அணுகும் காட்சியான்.
மறையும் தடவுதல் அறிவரு தனிமுதல்
எமையுடை இறைவன்.
வானவர் தனிமுதல்.
முப்பரம் பொருளுக்கு முதல்வன்.
கரிய செம்மல் ஒருவன்.
கொற்றவில் ஒன்று தாங்கினன் உலகம் தாங்கினன்.
எவர்க்கும் மேல் நின்றான்.
ஆடவர் பெண்மையை அவாவும் தோளினன்.
சங்கு உறைகரத்து ஒரு தனிச் சிலை தரித்தான்.
கைவரை எனத்தகைய காளை.
மன்னர் மன்னவன் காதலன்
படிகாத்தவர் பெரியோன்.
கங்கைத் தீம்புனல் நாடன்.
காசுலாம் கனகப் பைம்பூண் காகுத்தன்.

வில் கொண்ட மழை அனான்.
பூவைபோல் நிறத்தினான்.
அருவினை அறுக்கும் ஆரியன்.
திருவின் கேள்வன்.
அண்டர் நாயகன்.
திருமகள் நாயகன்.
சுந்தர வில்லி.
அகிலமும் அணிவயிற்று அடக்கினான்
அரிய ஒரு வேள்வி காத்தான்
எழுத கீர்த்தியான்
தழைகது வண்டு இமிரும் தண் தார்த் தசரதராமன்.
மழை வண்ணத்து அண்ணல்
குணங்களால் உயர்ந்த அண்ணல்.
கமலச் செங்கண் ஐயன்.
வீங்கிய கனைசழல் வீரன்.
வசையில் ஐயன்.
அந்தமில் அழகன்.
வில்லொடும் இழிந்ததோர் மேகம்.
இந்திரநீலம் ஒத்து இருண்ட குஞ்சியன்.
சுந்தர மணிவரைத் தோளன்.
அள்ளல் வேலையும் அப்புக சாலமும்
விள்ளும் வியூடப்பானலும் பேவுமெய் வள்ளல்.
கொல்லாழிநீத்து அங்கோர் குனிவயிரச்
சிலைதடக்கை கொண்ட கொண்டல்
எழுதரிய திருமேனிக் கருங்கடல.
அலையுருவக் கடலுருவத்து ஆண்டகை,
முந்தை நான்முகத்தவற்கு முந்தையான.
கோதமன் தன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்தது இவன்
போதுநின்றதெனப் பொலிந்த பொலன்கழற்கால பொடி.
காதல்என்றன உயிர்மேலும் இக்கரியோன பால்உண்டு.
வனைந்தனைய திருமேனி வள்ளல்.
மாக மடங்கலும மால்விடையும பொன்

நாகமும் நாகமும் நாண நடந்தான்.
புயல்இவன் மேனி: பூவையும் பொருவும்.
கயல்பொரு கடலுள்வைகும் கடவுளே.
விண்ணுளே எழுந்தமேகம் மார்பினூலின் மின்னொடும்
மண்ணுளே இழிந்ததென்ன வந்துபோன மைந்தன்.
மயல்விளை மதனற்கும் வடிவு மேன்மையான்.
அராவணை அமலன்என்று அயிர்க்கும் ஆற்றலான்.
வானவன் குலத்துளமர் வரத்தின் வந்தவன்.
வேனில் வேள்.
தேவரும் தொழுகழற் சிறுவன்.
தேவதேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகன்.
ஓவியம் சுவைகெடப் பொலிவதோர் உருவன்.
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியன்.
வையம்முற்றும் வயிற்றின் அடக்கிய ஐயன்.
கூனும்சிறிய கோத்தாயும் கொடுமைஇழைப்பக் கோல்துறந்து
கானும்கடலும் கடந்துஇமையோர் இடுக்கண்தீர்த்த கழல்வேந்து.
இராமன் என்நோவை நீக்குவான் வந்தனன்.
இப்பெருமான் இம்மையும் மறுமையும் ஈவான்.
அறத்தின் மூர்த்திவந்து அவதரித்தான்.
திறத்துமூவரும் திருந்திடத்திருத்தும் அத்திறலோன்.
பொன்னுயிர்த்தபூ மடந்தையும் புவிஎனும் திருவும்
இன்னுயிர்த்துணை இவன்என நினைக்கின்ற இராமன்.
கண்ணினும் நல்லன்; கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்.
யாரும் யாம்செய்த நல்லறப் பயன்என இருப்பார்.
இனிஇம் மன்னுயிர்க்கு இராமனில் சிறந்தவர் இல்லை.
பூண்ட போர்மழு வுடையவன் பெரும்புகழ் குறுக
நீண்ட தோளினன்.
சுந்தரத் திரள்தோள் அமைந்த மைந்தன்.
பூவெழு மழுவினல் பொருது போக்கிய
சேவகன் சேவகம் செகுத்த சேவகன்.
கவிஅமை கீர்த்திஅக் காளை.
வீராவரும் புவிக்கெலாம் வேதமேஅன இராமன்.

செயலருந் தவங்கள் செய்துஇச் செம்மலைத் தந்தசெல்வத்
தயரதற்கு என்னகைமமாறு உடையம் யாம?
நாரணன் ஒக்கும் இந்த நம்பிதன் கருணை.
ஆரணம் அறிதல் தேற்ற ஐயன்.
நீலமா முகிலனான்.
நிறைவினோடு அறிவின் சீலன்.
மூலமாய் முடிவிலாத மூர்த்திஇம் முன்பன்.
தேவர் பகையுள்ளன இவ்வள்ளல் தெறும்.
பாவமும் அருந்துயரும வேர்பறியும்.
பூவலயம் இனறுதனி அன்று பொது.
யாரும் செப்பரும் குணத்து இராமன்.
வணைந்தபொற் கழற்கால் வீரன்.
வரிசிலைக் கை நபி.
தென்சொற் கடந்தான்; வடசொற்கடற்கு எல்லைதேர்ந்தான்.
வேனில் மதனை மதன் அழித்தான்.
செல்லும் சொல் வல்லான்.
பெருந்தாமரைக்கட் கருமுகில்.
வானோர் கேள்விச் செல்வம்.
அழியா அழகு உடையான்.
விடையன்ன நடையான்.
பொருப்பேந்திய தோளான்.
பண்ணின் நோக்கும பரா அமுது.
மதுர வாரி அமுது.
அமுதை அருந்த அமரரை யூட்டினான்.
மறைகளைத் துறந்துபோய் வனத்துள் வைகுவான்.
சிங்கஏறு அனைய வீரன.
கார்குலா நிறத்தான்.
கோதைவிற் குரிசில்.
அஞ்சன நாயிறு அன்ன ஐயன்.
தோள்முதற்கு அமைந்த வில்லான்.
காவியின்மலர் காயாக் கடல்மழை அனையான்,
தாமரை நயனத்தான்.
பகலவன அனையான்.

மல்லினும் உயர் தோளான்.
பவநோயின் மருத்துவன்.
அநகன்.
இகலடு சிலை வீரன்.
கொய்குல மலர் மார்பன்.
தாமரைச் செங்கண் அங்க நாயகன்.
ஆலை பாய்வயல் அயோத்தியர் ஆண்டகை.
தேவர்க்கும் நமக்கும் ஒத்து ஒரு நெறிநின்ற அனகன்.
ஆயிரம் பெயருடை அமலன்.
வினையி னீங்கிய வேதியர் விருந்தினன்.
மனையின் மெய்எனும் மாதவம் புரிந்தவன் மைந்தன்.
அந்தியை நோக்கினான்; அறிவை நோக்கினான்.
தவத்தின் எய்தினான்.
நன்னெடும் திசை மூகனகத்தும் நம்மனோர்க்கு
உன்னரும் உயிருளும் ஒக்க வைகுவான.
நோன் சிலையோன்.
எம்பிரான்.
கண்ணுடை நுதலவன் சிலைநூறிய புதல்வன்.
முறையின் எய்திய கொற்றவன.
அந்தமில் பெருங்குணத்து இராமன்.
வில்லார் தோளன்.
வில் அணைத்து உயர்ந்த தோள் வீரன்.
மேகத்தை ஒப்புடை அண்ணல்.
அஞ்சன வண்ணன்.
ஆருயிர் நாயகன்.
வார்சிலைத் தடக்கை வள்ளல்.
அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்.
மூன்றுலகும் ஈன்றானை முன் ஈன்றான்.
யாவர்க்கும தொழுகுலமாம் இராமன்.
கருணை யார்கலி.
கார்ப்பொரு மேனியக் கண்ணன்.
நியாயம் அத்தனைக்கும் ஓர்நிலையம் ஆயினான்.
வானின உம்பரான.
குவவுத்தோட் கோளரி.

கொற்றக் குரிசில்.
மறைகளின் வரம்பு கண்டவன்.
உயிர்தொறும் உணர்வு நல்குவான்.
முந்தை நான்முகத்தவற்கு முந்தையான்.
ஏத்தரும் பெருங்குணத்து இராமன்.
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான்.
எண்ணுடைக் குரிசில்.
ஞானம் வீசுதாள் வள்ளல்.
அருநான் மறையின் கனி.
சீதை கேள்வன்.
அல்லித் தாமரைக் கண்ணன்,
வில்லியல் தடக்கை வீரன்.
அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயன்.
நளின நாட்டத்தான்.
மெய்ஞ்ஞானக் கண்ணருள் செய்கண்ணன்.
வேதமுதல்.
எழுதரு மேனியான்.
அராவணை அமலன் அன்னுன்.
வேதத்தின் அறிவை வென்ருன்.
வரிசிலை வடித்த தோளான்.
பூவைப் பூ வண்ணத்தான்.
மரகதத்தின் மலை.
வெம்பிணிக்கு மாமருந்து.
அங்கண் அரசு.
துறைகெழுநீர் வள நாடன்.
நெல்எலாம் சுரந்தளிக்கும் நீர்நாடன்.
சிவனும் மலர்த்திசைமுகனும் திருமாலும் தெறுகுலிசத்
தவனும்அடுத்து ஒன்ருகி நின்றன்ன உருவோன்.
ஏத்து வாய்மை இராமன்.
கருநிறக் கமலக் கண்ணன்.
தனிச்சிலை தரித்த மேரு,
எழூந்த செல்லும் மடங்கல்.
வெல்லலாம் தன்மை அல்லன்.
மன்னர் மன்னவன் மதலை.

பகலோன் என ஒளிரும் வில்லாளன்.
மேகத்தினை நிகர் வில்லி.
கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான்.
தன்னிகர் வீரன்.
தரும மன்னவன் தோன்றல்.
உச்ச வீரன்.
நிமலன்.
வரி விற்கை மதயானை.
தானுருவு கொண்ட தருமம்.
அண்டர் நாதன்.
மன்னர் மன்னவன் செம்மல்.
கொண்டல் நிறத்தினன்.
சுந்தரத் தனி வில்லி.
தீர்த்தன்.
இனிய சிந்தை இராமன்.
அண்ணல் வீரன்.
எல்லொன்று கமலச் செங்கண் இராமன்.
யாவர்க்கும் எழுதொணுத தன்மையன்.
அஞ்சனக் குன்றம் எனன வந்தான்.
போர் வில்லி.
தேமலரோன் அம்மான்.
தேவரை இடுக்கண் தீர்ப்பான்.
பொன்னின்ற வயிரத் தோளான்.
சதமுகன் தாதை.
சிந்தூரப்பவளச் செவ்வாய் முறுவலன்.
சிகரச் செவ்விச் சுந்தரத் தோளினுன்.
தனிக்கடல் மேனியான்.
குற்றம் நீந்த குணத்தின் எங்கோமகன்.
கார்எனக் கரியஅக் கமலக் கண்ணன்.
பொருப்பு அனையான்.
தயரதன் தொல்குலத் தலைவன்.

அறந்தரு வள்ளல்.

பொற்பழியா வலம் பொருந்தும் போர்வலான்.

பஞ்சணை பாம்பணை யாகப் பள்ளிசேர்

அஞ்சன வண்ணனே இராமன்.

வேறற அரக்கரைவென்று வெம்பழி தீருவன்.

புண்டரீகத் தடங்காடு பூத்த கொண்டல்.

நெடுந்தகையோன்.

நீலமேனி நல் நெடியவன்.

மற்குநோக்கிய திரள் புயத்து அண்ணல்.

புண்டரீகக் கண் புரவலன்.

திருவின் நாயகன்.

புள்ளிற்கும் புலனில்பேய்க்கும் தாய் அன்ன புலவுவேலோன்.

புயல்நிற வண்ணன்.

ஆடவர்க்கு அரசன்.

நன்னூல் மந்திர நெறியில் வல்லான்.

வெல்வகைக் குமரன்.

தேமரு தெரியல் வீரன்.

இராமன் என்னும் புண்ணியன்.

மறைஎல்லை நோக்கினர் யாவரும் நோக்குவான்.

ஆடுங்களி மாமத யானையனுன்.

மன்னவர் மன்னவன்.

யார்க்கும் கண்ணின் நின்றவன்.

பரமேட்டி.

பரம்பரன்.

நெறி நின்ருர் நேர் நின்ருன்.

தேவர் செய்த பாக்கியத்தால் வந்தவன்.

முன் எண்ணலாவதோர் மூலம் இல்லான்.

உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்ருன்.

பேரளிக்குப் பிறந்த இல் ஆயினுன்.

அன்னமாய் அருமறைகள் பாடினுன்.

அஞ்சனக்கிரி அனைய மஞ்சன்.
பஞ்சுஎனத் திரண்டகோல மேனியன்.
கஞ்சம்ஒத்து அலர்ந்த செய்ய கண்ணன்.
வாலியின் உயிர்தெறக் காலன் வந்தனன்.
வெவ் விராதனை இராவணை தடைத் தருளினன்.
மாயமான் ஆயினன் மாய மானுயினன்.
தன்னையே அனையவன்.
மரகதக் கிரியனன்.
திருநெடுமாலே இங்கு உதித்தனன்.
அமலர்க்கும் அமலன்.
வானவர்க்கு இறைவன்.
ஆளுடை வில்லி.
அறத்தினுக்கு ஆருயிர்த் துணைவன்.
அன்னை ஒப்புடையவன்.
அறத்தின் ஆறெலாம் இழைத்தவன்.
தன் துணை ஒருவரும் தன்னின் வேறிலான்.
அருளின் ஆழியான்.
நுதியிழை மதியினன்.
வெற்றி வீரன்.
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்து.
கார்முகில் கமலர்பூத்து வரிவில்ஏந்தி வருவது.
ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தான்.
கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன்.
நன்னூற்கெல்லாம் இறைவன்.
மனு நீதியான்.
இராமன் அறநெறி நிறுத்த வந்த இறை.
பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன்.
வீரன் வீடு தந்தான்.
மேல்ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்.
வில்லும் தாங்கிக் கால்தரை தோய நின்றது.
மால்தரும் பிறவிநோய்க்கு மருந்து.

பொய்யடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவன்.
ஆலிலைப் பள்ளியான்.
உரைசெயற்கு எளிதமாகி அரிதமாம் ஒழுக்கில் நின்றான்.
மெய்த்தலை நின்ற வீரன்.
தொல்லை ஊழி நாயகன்.
திருமகள் தலைமகன்.
எல்லணை மணிமுடி துறந்த எம்பிரான்.
இருளுடை உலகினுக்கு இரவி.
திருவுறை மார்பன்.
சேயுயர் கீர்த்தியான்.
வினையின் கூற்றுவன்.
தன்னலது ஒப்பு இலன்.
நீல மேனியான்.
கைவில் ஏந்தி இலங்கையில் பொருதான்.
மறைகளுக்கு இறுதி யாவான்.
அல்லியங் கமலமே அனைய செங்கண்ஓர் வில்லி.
நினைவரும் இருவினை முடிக்க நின்றுளான்.
நீட்டிய பகழிஒன்றால் முதலொடு நீக்க நின்றான்.
பூவலயத்தை ஆண்ட புரவலன் புதல்வன்.
வேதமும் அறனும் சொல்லும் மெய்யற மூர்த்தி.
வாரணம் காக்க வந்தான்; அமரரைக் காக்க வந்தான்.
மூலமும் நடுவும் ஈறும் இல்லவன்.
காலமும் கணக்கும் நீத்த காரணன்.
ஆலமும் மலரும்வெள்ளிப் பொருப்பும்விட்டுஅயோத்திவந்தான்.
அறந்தலை நிறுத்தப் பிறந்தனன்.
தன்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.
அஞ்சன மேனியான்.
ஓவியர்க்கு எழுத ஒண்ணா உருவத்தன்.
மறை பிழையாதவன்.
அன்புறு சிந்தையன்.
குறிப்பினால் உணரும் கொள்கையான்.

விற்பெருந் தடந்தோள் வீரன்.
கங்குல் பொழுதும் துயிலாத கண்ணன்.
சிலைமேல் கொண்ட திருநெடுந்தோள் நெடியோன்.
வீர வில்லி.
கங்கைத் திருநாடுடை யான்.
தன்னின் முன்னிய பொருளிலா ஒருதனித் தலைவன்.
எல்லையில் பெருங்குணத்து இராமன்.
உலகம் யாவுக்கும் களைகண்.
புன்புலப் பிறவியின் பகைஞன்
பகலவன் வழி முதல்.
தருமமும் ஞானமும் தவமும் வேலியான்.
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணன்.
புண்டரீகத் தடம் புரையும் பூட்சியான்.
அருளின் வேலை.
மனுமுதல் யாவையும் வரம்பு கண்டவன்.
அருளின் ஆழியான்.
அறிவின் மேலுளான்.
வேதநூல் எனத்தகைய திருவுளத்தன்.
தெய்வ நாயகன்.
துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன்.
கார்க்கடல் கமலம் பூத்ததெனப் பொலிவான்.
வெள்ளிய கடலில் பள்ளிதீர்ந்திருந்தான்.
சீதை கண்ணின் மணிஎன வயங்குவான்.
பேர்வரும் பிறவிநோய்க்கு மருந்து.
தாமரைத் தடமென இருந்த நீதியான்.
கருணையங் கடல்.
எல்லாம் ஈன்று மீளக் காக்கு நாயகன்.
ஆயிர நாமத்து ஐயன்.
சுடர்போல் ஒளிர் வெற்றி வீரன்.
ஒரு கரு ஞாயிறு.
கமலத்தின் காடுபூத்த காளமா மேகம்.

வென்றியை நிறையத்தேக்கிப் பொங்கிய தோளினன்.
கருணையின் நிலைய மன்னன்.
பூதநாயகன்; நீர்சூழ்ந்த புவிக்கு நாயகன்.
சீதை நாயகன்; வேறுள்ள தெய்வநாயகன்.
வேதநாயகன்; மேல்நின்ற விதிக்கு நாயகன்.
கருமத்தின் எல்லைகண்டவர் காணும் காட்சியான்.
வேதத்தின் சிரத்தின் போதம் ஒத்தனன்.
அண்ணல் அஞ்சன வண்ணன்.
சுருதி ஆளும் நாயகன்.
முளரியங் கண்ணன்.
கோசலை நாடுடை வள்ளல்.
அறம்என நின்ற நம்பன்.
கார்க்கோல மேனியான்.
தும்பியந் தொடையல் வீரன்.
கொந்தளக் கோலக் கொண்டல்.
கொண்டலிற் பொலிதரு கோலத்தான்.
அரசர் உருக் கொண்டமைந்த வேதியன்.
ஆசையின் கனி.
புண்ணிய மூர்த்தி.
மேகம்ஒன்றுகார்முகம்தாங்கி யார்க்கும் இனிதாகிநிற்கும்.
புனத்துளாய் மாலையான்.
ஆயிர நாமத்தாழி அரி.
ஆணி இவ்வுலகுக்கான ஆழியான்.
வரிசிலை ஒருவன்.
அலங்கல் வீரன்.
மனு என்னும் வயங்கு சீர்த்தி மருமான்.
தேவர்க்கும் தெரிகிலாதான்.
மறைகளே தேறத் தக்க இறையவன்.
மாயப் பிறவியின் பகைஞன்.
அறந்தரு சிந்தை யன்பன்.
தாதைசொல் தலைமேல் கொண்ட தாபதன்.
ஈதைகள் தீர்க்கும் நாமத்து இராமன்.

அரக்கர்என்ற பேரிருளினுக்கு இரவி.
கங்கைநீர் தழுவுநாட்டுக் கொண்டல்.
இசையினுக்கு இசைந்த தோளான்.
தேவர் தம்பிரான்.
என்னை யாளுடை நாயகன்.
மறைகளே தேறத்தக்க இறையவன்.
ஏடவிழ் அலங்கல் மார்பன்.
அறத்தின் வாழ்வு.
செய்யமள்ளர் கமலத்தோடு நெல் அறுக்கும் திருநாடன்.
அம்பரத்து அனந்தர்நீங்கி அயோத்தி வந்து அடைந்த அண்ணல்.
கறைமிடற்று இறைவன் ஒத்தான்.
தன்னொரு மூர்த்தி ஒத்தான்.
கானம் விண்ணவர் தவத்தின் மேவினன்.
யார்க்கும் துயர் துடைத்தான்.
நீலநிற ஞாயிறன்ன நெடியவன்.
தருமம்என்று அறிஞர்சொல்லும் தனிப்பொருள்.
காதலித்த உருவாகி அறம்வளர்க்கும் கண்ணாளன்.

இராமகாவியத்தில் இராமபிரானுக்கு இன்னவாறு பேர்கள் நன்னயமா வந்துள்ளன இடம் பொருள் இயல்பு நிலைகளுக்கு ஏற்றபடி நாமங்கள் நேம நியமங்களாய் நேர்ந்திருக்கின்றன. சார்ந்துள்ள சார்புகளைக் கூர்ந்து ஓர்ந்து குறிப்புகளைத் தேர்ந்து கொள்ள வேண்டும். கருதும் அளவு கருத்துகள் தெரிகின்றன.

பரதன்.

பரதன் தசரத மன்னனுடைய இரண்டாவது புதல்வன். கைகேசி வயிற்றில் பிறந்தவன். சிறந்த குணங்கள் யாவும் நிறைந்தவன். பேரழகன். இராமன் பால் பேரன்புடையவன். அந்த அண்ணனைத் தன் கண்ணினும் உயிரினும் இனியனாக் கருதிப் பேணி வந்தவன். உருவ அழகிலும் குணநீர்மைகளிலும் இராமன் எனவே இக் குலமகன் குலாவியிருந்தான். பருவம் எய்தினன். தன்னை மன்னன ஆக்கக் கருதி அன்னை சதி புரிந்தாள்; அதனால் தந்தை வானகம் புகுந்தான்; தலைமையன் கானகம் போனான். அதுபொழுது இக் கோமகன் கேகய தேசத்தில்

பாட்டன் அரண்மனையில் இருந்தான். மீண்டு வந்தான். மூண்டுள்ள நிலைகளை அறிந்தான்; உள்ளம் கொதித்தான்; உயிர் பதைத்தான். தாயை எள்ளி இகழ்ந்தான். தகப்பனது ஈமக் கடனைக் கழித்தான்; தமையனை அழைத்துவரத் துணிந்து சேனைகளோடு கானகம் போனான்; அண்ணனைக் கண்டு அடிவிழுந்து தொழுது கண்ணீர் சொரிந்து கதறி அழுதான். உழுவலன்பால் இவன் உருகி அழுவதைக் கண்டு அப் பெரியவன் மறுகி உருகினன். தாய் பணித்தபடியே பதினான்கு ஆண்டுகள் வனவாசம் புரிந்து மீண்டு வருவதாக உறுதி கூறித் தனது பாதுகைகளைத் தந்து ஆதரவு செய்து அனுப்பினன். அந்த அண்ணல் ஆணையை எண்ணி உருகி அடிபணிந்து தொழுது அழுத கண்ணனாய் மீண்டு வந்து நந்தியம்பதியில் தங்கி அரிய தவ நிலையில் மருவியிருந்தான். சிந்தை முழுவதும் இராமனையே கருதி உருகியது.

நந்தி யின்பதி யின்தலை நாள்தொறும்
சந்தி யின்றி நிரந்தரம் தம்முனார்
பந்தி யங்கழல் பாதம் அருச்சியா
இந்தியங்களை வென்றிருந் தானரோ. [1]

நோக்கில் தென்திசை அல்லது நோக்குறான்;
ஏக்குற்று ஏக்குற்று இரவி குலத்துளான்
வாக்கில் பொய்யான் வரும்வரும் என்றுஉயிர்
போக்கிப் போக்கி உழக்கும் பொருமலான்; [2]

உண்ணும் நீர்க்கும் உயிர்க்கும் உயிரவன்
எண்ணும் கீர்த்தி இராமன் திருமுடி
மண்ணு நீர்க்கு வரம்புகண்டால் அன்றிக்
கண்ணின்நீர்க்குஓர் கரைஎங்கும் காண்கிலான். [3]

அண்ணனையே எண்ணி பரதன் உருகியிருந்த நிலையை இவை வரைந்து காட்டியுள்ளன. சீவிய ஓவியங்களாய் நிலவியுள்ள இந்தக் காவியக் கவிகளைக் கருதிக் காண்பவர் இத் தம்பியின் அன்புரிமைகளையும் பண்பு நிலைகளையும் பாசப் பரிவுகளையும் நன்கு தெரிந்து கொள்வர். முன்பு கூறியபடியே இராமன் மீண்டு வந்து மணிமுடி சூடி அரசன் ஆனபோதுதான் இவன் துன்பம் யாவும் நீங்கி இன்பநிலையில் ஓங்கி இனியனாயிருந்தான்.

அண்ணன்பால் எழுமையும் தொடர்ந்த உழுவலன்போடு இவன் உருகி வந்துள்ள பரிவுகள் உலக உள்ளங்களை எவ்வழி

யும் உருக்கி வருகின்றன. இவனுடைய விரத சீலங்களும் விழுமிய பண்புகளும் உழுவலன்புகளும் கெழுதகைமைகளும் உயிரினங்களுக்கு உயர்நலங்களை அருளி ஒளி மிகுந்துள்ளன.

நீதியின் நிலையம்.
எழிலாலும் குணத்தாலும் இராமன்.
உயிர்என அண்ணனை உன்னி நின்றவன்.
செம்மை நன்மனத்து அண்ணல்.
வற்கலையின் உடையான்.
மாசு அடைந்த மெய்யான்.
நகை இழந்த முகத்தான்.
கல்கனியக் கனிகின்ற துயரான்.
நம்பியும் என்நாயகனை ஒக்கின்றான்.
துன்பம் ஒருமுடி வில்லான்.
திசை நோக்கித் தொழுகின்றான்.
உண்டு இடுக்கண் ஒன்று உடையான்.
உலையாத அன்புடையான்.
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான்.
மலர் இருந்த அந்தணனும் வணங்குமவன்.
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ?
சேண் உயர் தருமத்தின் தேவு.
செப்பமையின் ஆணி.
தயாமுதல் அறம்.
அன்பு உருக்கொண்டவன்.
மறவு ஏதும் இலான்.
பரதன் பெரிது உத்தமன்.
தருமநீதியின் தன்பயன்.
எண்ணில்கோடி இராமர்கள் என்றவன்.

இன்னவாறு பரதன் பலராலும் புகழ்ப்பட்டுள்ளான். கோசிகமுனிவர் முதல் யாவரும் உவந்து வியந்து கூறியுள்ள இச் சீரிய மொழிகளால் இக் குலமகனுடைய நிலைமை தலைமை நீர்மை சீர்மை நியம நெறிகளை நேரே தெரிந்து கொள்ளலாம்.

இலக்குவன்.

தசரத மன்னனுடைய மூன்றாவது புதல்வன். சுமித்திரை வயிற்றில் பிறந்தவன். அறிவும் ஆற்றலும் அதிசய நிலைகளில் அமைந்தவன். இளமையிலிருந்தே இராமனை யாதும் பிரியாமல் நிழல்போல் தொடர்ந்து பழகி வந்தவன். ஐயனும் இளவலும் நெய்குழல் இழை என நிலைதிரிவார் என்று கவி உவமை கூறியிருப்பது சுவை மிகவுடையது. செயல் வினைவுகளின் உயர்நலங்கள் உணர வந்தன. கண்ணை இமை காப்பதுபோல் அண்ணனையே இவன் நண்ணி வந்தான். மணிமுடி துறந்து அந்நம்பி வனம் போக நேர்ந்தபோது இத் தம்பி உள்ளம் கோதித்து உக்கிர வீரமாய் உருத்து எழுந்தான். இடையூறு செய்தது கைகேசி என்று தெரியவே பெண்குலத்தையே வெறுத்து இகழ்ந்தான். வில் ஏந்தி வீரகம்பீரமாய் விரைந்து இராச வீதியில் நின்று வீரவாதம் கூறினன். "என் அண்ணனுக்கு நான் அரசுமுடி சூட்டப் போகிறேன்; இடையே தடைசெய்கின்றவர் மண்ணவராயினும் விண்ணவராயினும் என் கண் எதிரே வரலாம்" என்று இவன் வீரகர்ச்சனை செய்தபோது யாவரும் வெருவிநின்றனர். கோபம் மூண்டு இவன் கொதித்து நிற்கின்ற நிலையை அறிந்ததும் இராமன் நேரே வந்து, "தம்பி! என்ன இது! யாரும் எனக்கு இடர் செய்யவில்லை; என் விதியின் வினையே இது; நீ வெகுளியை விடு; சாந்தமா இரு" என்று தகவோடு கூறினன். "அந்த விதிக்கும் விதியாய் வேலைசெய்து என் கையில் எம்பெருமான் திருமுடியில் மணி மகுடத்தைச் சூட்டும்" என்று மறுகித் துடித்தான்; அவன் முறுவலோடு தடுத்தான். அதன்பின் அவன் பின்னே தொடர்ந்து கானகம் போனான், வனவாசத்தில் அந்நம்பிக்கு இத்தம்பி செய்துவந்த பணிவிடைகள் அளவிடலரியன. இவனுடைய அன்புரிமைகளைக் கருதியுணர்பவர் எவரும் என்புருகி இரங்கி மறுகுவர். இராமன் இரவில் உறங்கும்போது இவன் அயலே ஒதுங்கி நின்று வில்லும் கையுமாய் யாதும் கண் மூடாமல் சூரியன் உதயமாகும் வரையும் காத்து வருவது வழக்கமாயமைந்தது. பதினான்கு வருடங்கள் இவ்வாறு இடைவிடாது ஊழியம் புரிந்து வந்துள்ளான். இது எவ்வளவு அன்புரிமை!

அல்லலே ஆண்டு அமைந்தமேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றியகை யோடும் வெய்துயிராப் போடும் வீரன்

கல்லே ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர்சொரியக் கங்குல்
எல்லேகாண் பளவும் நின்ருன் இமைப்பிலன் நயனம் என்ருன்.

இலக்குவன் நிலையைக் குறித்துக் குகன் பரதனிடம் இவ்வாறு கூறியபோது அக்குலமகன் உளம் உருகி அழுதான். "நான் அண்ணனுக்குத் துன்பம் செய்யப் பிறந்தேன்; இந்தப் புண்ணியத் தம்பி அத்துயரங்களை நீக்கி இன்பம் செய்ய நேர்ந்தான்" என்று அன்பால் கரைந்து கண்ணீர் தாரை தாரையாய் மார்பில் வழிந்து ஓட மறுகி யுருகி நின்ருன். இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னைப் பிரியாமல் பின்ற சென்ற பெரியான் என்று இலக்குவனுடைய பெருமகிமையை வியந்து மகிழ்ந்து பரதன் புகழ்ந்து போற்றியுள்ளான். இராமாநுசன், இளவல், இளையவன், இளையபெருமாள் என இலட்சுமணனுக்குப் பெயர்கள் அமைந்துள்ளன. இராமனேடு இவன் மருவியிருந்த உரிமைகளையும் உறவுறுதிகளையும் இவை சுவையா விளக்கி நிற்கின்றன.

இலங்கைப் போரில் இக்குலமகன் புரிந்த போராடல்களையும் வீரப்பிரதாபங்களையும் எதிரிகள் எவரும் அதிசய பரவசராய்த் துதிசெய்துள்ளனர். தேவர் யாவரையும் யாதும் மதியாமல் யாண்டும் எவரையும் வென்று எவ்வழியும் வெற்றிச் செருக்கோடு நீண்டு வந்த இராவணன் இந்த இளையவனேடு மூண்டு போராடி இளைத்துக் களைத்து இழிந்து போனுன். அவ்வாறு போனவன் மாலியவானிடம் மனம் திறந்து இம்மான வீரனை வியந்து கூறினுன். அயலே வருவது காணுக.

மூளையமை திங்கள் சூடும் முக்கணுன் முதல்வ ஞக்
கிளையமை புவனம் மூன்றும் வந்துடன் கிடைத்தவேனும்
வளையமை வரிவில் வாளி மெய்யுற வழங்கு மாயின்
இளையவன் தனக்கும் ஆற்ருது என்பெருஞ் சேனைநம்ப.

இலக்குவனுடைய அற்புத வில்லாடலைக் குறித்து இராவணன் இப்படி உள்ளம் உவந்து உயர்வா வியந்து புகழ்ந்திருக்கிருன்.

பெருவலியும் பேராற்றலும் உடைய கும்பகருணனேடு அளவிடலரிய சேனைகள் திரண்டு வந்தன. நேரே எதிர்ந்த வானர சேனைகளை சுடழித்து அவை மேலே அடர்ந்து பொருதன. இந்த ஆண்டகை விரைந்து மூண்டு வில்லாடல் புரிந்தான். பல்லாயிரக் கணக்கில் வந்த அரக்கர்கள் படுநாசமடைந்தனர் அடையவே அச்சூரன் இவ்வெற்றி வீரனை வியந்து புகழ்ந்தான்.

அறத்தின் இன்னுயிர் அனையவன் கணைபட அரக்கர்
இறத்துமிங்கிறை நிற்பின்என்று இரியலின் மயங்கித்
திறத்திறம்படத் திசைதொறும் திசைதொறும் சிந்திப்
புறத்தின் ஓடினர் ஓடின குருதியே போல. [1]

செருவில் மாண்டவர் பெருமையும் இலக்குவன் செய்த
வரிவில் ஆண்மையும் நோக்கிய புலத்தியன் மருமான்
திரிபுரஞ் செற்ற தேவனும் இவனுமே செருவின்
ஒருவிலாளர் என்று ஆயிரக்கால் எடுத்துரைத்தான். [2]

அஞ்சாத அருந்திறலுடைய அத்தீரன் இவ்வீரனை இவ்வாறு புகழ்ந்திருக்கிறான். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளோடு இவனை ஒப்புரைத்தது அதிசய ஆற்றலைத் துதிசெய்து நின்றது.

இந்திரசித்தும் இச் சுந்தரவில்லியைப் புகழ்ந்திருக்கிறான்.

நாக பாசத்தால் பிணித்து, பிரமாத்திரத்தால் வீழ்த்திப் பல முறையும் மாயப் போரால் அவன் வென்று வந்தாலும் முடிவில் இவ்வீரனுடைய அற்புத ஆற்றலை அறிந்து அதிசயித்து அயர்ந்தான். மீண்டு போய்த் தந்தையிடம் இந்த ஆண்டகையை வியந்து கூறினான். வியப்பு மொழிகள் வீர ஒளிகளா வந்தன.

நிலஞ்செய்து விசும்பும் செய்து நெடியவன் படைநின்றானை
வலஞ்செய்து போயிற்றுஎன்றால் மற்றினிவலியது உண்டே
குலஞ்செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டோம்.
சலஞ்செயின் உலகம்மூன்றும் இலக்குவன் முடிப்பன்தானே.

இக்குலமகன் மகிமையை அத்தலைமகன் இவ்வாறு விளக்கியிருக்கிறான. தேவர் யாவரையும் வேரறவென்று வீரருள் வீரனாய் விளங்கி நின்ற அவ் வில் வீரனைத் தொலைத்து மீண்டு வந்தபோது இத்தம்பியை இராமன் நன்கு தழுவிக் கொண்டு அன்பு மீதூர்ந்து ஆனந்த பரவசனாய்ப் புகழ்ந்து பேசினான்.

கம்பமதத்துக் களியானைக் காவல் சனகன் பெற்றுஎடுத்த
கொம்புஎன்பால் இனிவந்து குறுகினாள் நன்றெனக்குளிர்ந்தேன்
வம்புசெறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பியுடையான் பகைஅஞ்சான் என்னுமாற்றம் தந்தனையால்.

அந்நம்பியின் உள்ளக் களிப்பை இவ்வுரைகளால் உணர்ந்து கொள்ளுகிறோம். அண்ணனுக்கு உதவியாய் எவ்வழியும் இந்த இளையவன் புரிந்துள்ள அதிசய ஆதரவுகள் அளவிட லரியன.

இளங்கோளரி.
சுமித்திரைச் சிங்கம்.
இராமனைப் பிரியாத பெரியான்.
மூரி விற்கை இளையவன்.
நேய நெஞ்சினன்.
தூய சிந்தையன்.
துயில் துறந்தான்.
அயோத்தி வேந்தற்கு இளையவன்.
அறத்தின் இன்னுயிர் அனையவன்.
பொன்மலை அனைய போர்வில்லான்.
முற்று மதியம் மிலைந்தானை அன்னான்.
மனையும் வாழ்வும் உறக்கமும் மாற்றினான்.
செம்மலை அனைய காட்சியான்.
தாணுவின் தோற்றத்தான்.
திங்களின்மௌலி அண்ணல்எனப் பொலிந்தனன்.
தருமச் செல்வன்.
உயிர் அன்ன உருவத் தம்பி.
விலக்கரும் மொய்ம்பின் விளங்கொளி.
கொழுந்தியும் மீண்டாள்
பட்டான் அரக்கன்என்று உவகை கொண்டான்.
நீலமா முகில்பின் போனான் ஒருவன்.
மன்னவற்கு இளவல் நீயே.

இன்னவாறு இலக்குவன் குறிக்கப்பட்டுள்ளான். காவியத்தில் இவனது சீவியம் அரிய பல ஆண்மைகளோடு மருவிப் பெரிய நீர்மைகள் தோய்ந்து எவ்வழியும் மேன்மையாய் மிளிர்கிறது.

சத்துருக்கன்.

தசரத வேந்தனுடைய நான்காவது புதல்வன். இலட்சுமணனோடு உடன் பிறந்தவன். இராமனைப் பிரியாமல் இலக்குவன் இருந்ததுபோல் பரதனைத் தழுவி இவன் ஒழுகி வந்தான்.

பரதனும் இளவலும் ஒருநொடி பகிராது
வரதனும் இளவலும் என மருவினரே.

அரசிளங்குமரர் நால்வரும் இரண்டு சோடிகளாய் இணங்கியிருந்த நீர்மையை இங்கே கூர்மையா ஓர்ந்து கொள்கிறோம்.

பரதன் பால் பிரியமாய் எவ்வழியும் பிரியாமல் இந்த இளவல் மருவியிருந்தான். முடிதுறந்து மூத்த அண்ணன் கானகம் போனது கூனியால் என்று தெரிந்து அவள் மேல் இவன் கடுங் கோபம் கொண்டான். சிறந்த அரசகுடியில் இழிந்த ஒரு கிழவி நுழைந்து ஈனம் புரிந்தாளே என்று மானமாய் மறுகி நொந்தான். இராமனைப் பிரிந்து பரிதாப நிலையில் உருகியிருந்த பரதனுக்கு ஆதரவாய் நின்று அரசை இவன் பாதுகாத்து வந்தான். குறித்த காலத்தில் அண்ணன் வரவில்லையே என்று வருந்தி அவன் இறந்துபோகத் துணிந்தான். இவனை அன்போடு அழைத்தான். "தம்பி! தலைவனர் வரவில்லை; நான் இனி உயிர் வாழ முடியாது; நீ அரசைப் பாதுகாத்துக் கொள்க" என்று அவன் வேண்டியபோது இவன் நீண்ட துயரமாய் நேரே பதில் கூறினன். அவ் வுரைகள் வித்தக விநயமா நேரே வெளி வந்தன.

> கான்ஆளப் போன அண்ணனைக் காத்து ஒருதம்பி போனுன்;
> போனஅவர் வரவில்லை என்று வருந்தி ஒரு தம்பி இறந்தான்;
> மூன்றுபேரும் தொலைந்தார் என உவந்து ஒருதம்பி அரசுபுரிந்தான்;
> ஆ! அரச பதவி எவ்வளவு இனிமை யுடையது?

இவ்வாறு மனவேதனையோடு விநயமாய் இவன் பேசியிருக்கிருன். பேச்சில் உழுவலன்பும் உள்ளப் பண்பும் உணர்வின் திறனும் ஒளிவீசி நிற்கின்றன. இராம சரிதத்தில் இந்த இளவலின் செயல் இயல்கள் அளவோடு அமைந்து சிறந்துள்ளன.

> முத்தை ஒத்த வெண்ணிற மேனியன்.
> கமல மலரனைய கண்களை யுடையவன்.
> இளமை எழில் வாய்ந்தவன்.
> எத்தகைய இடர்களையும் பொறுப்பவன்.
> வித்தக விவேகி.

இத்தகைய வகையில் இவ் வுத்தமன் இடம் பெற்றுள்ளான்.

கோசலை.

கோசலை குசலன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகள். தாய் பெயர் விசாலை. அழகும் குணமும் நிறைந்திருந்த இந்த விழுமிய குலமகளைத் தசரதன் விழைந்து மணந்து கொண்டான். பட்டத்து அரசியாய் மகிமை தோய்ந்திருந்த இந்தப் பதிவிரதையோடு அமர்ந்து அரசன் அதிசய போகங்களை

நுகர்ந்து வந்தான். நீண்ட காலம் பிள்ளைப் பேறின்றி உள்ளம் வருந்தி வந்த இந்த உத்தமி வயிற்றிலிருந்துதான் இராமன் உதய மாயினன். அந்தப் புத்திரப் பேற்றால் இத்தாய் அடைந்துள்ள பெருமைகள் அளவிடலரியன. புத்தேளுலகமும் இவளைப் போற்றிப் புகழ்ந்துள்ளது. கோப்பெருந்தேவி என்று வாழ்த்தி வந்த வையம் பின்பு தெய்வத்திருத்தாய் என்று போற்றி நின்றது. தாய்மை அன்போடு தூய்மைப் பண்புகள் யாவும் இத்தாயிடம் நிறைந்திருந்தன. அடக்கம் அமைதி பொறுமை அருள் முதலிய பெருநீர்மைகள் இப்பேரரசிபால் பெருகி மிளிர்ந்தன. அருமை மகனைக் காணுந்தோறும் களிபேருவகை மருவி வந்தவள் திருமணக் காட்சியைக் கண்டு பெருமகிழ்வடைந்தாள். மகவின் மகிமையால் இவ்வாறு இன்ப நிலையில் திளைத்து வருங்கால் இடையே துன்பம் அடைய நேர்ந்தாள். அரிய மகன் முடி துறந்து அடவி போனான்; அவனைப் பிரிந்த துயரால் உரிய கணவன் இறந்து போனான். போகவே இப்பேரரசி பெருந் துயருழந்து வருந்தி மறுகினாள். பதினான்கு ஆண்டுகள் கழிந்து மீண்டு வந்து மகன் மணிமுடி சூடி அரசர் பெருமானாய் அமர்ந் திருந்ததைக் கண்டு இந்த அன்புத்தாய் பேரின்ப நிலையில் பூரித் திருந்தாள். தன்னைப் பெற்ற இத்தாயிடம் இராமன் கொண்டி ருந்த உழுவலன்பும் பணிவும் பண்பும் விழுமிய நீர்மைகளாய் விளங்கியுள்ளன. கோசலை பெற்றதே பேறு என்று இக் கோப் பெருந்தேவியின் பிள்ளைப் பேற்றையும் பெருந்தவ நிலையையும் உலக உள்ளங்கள் உவந்து போற்றிப் புகழ்ந்து வருகின்றன.

தூயவாய்க் காமர்ஒண் கௌசலை.
கருமுகில் சோதியைத் திருவுறப் பயந்தனள்.
குலம் பொறை கற்பிவை சுமந்த கோசலை.
மன்வயிற்றின் அடக்கிய மாயனைத்
தன்வயிற்றின் அடக்கும் தவத்தினாள்.
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்து வரும்என்று
தழைக்கின்ற உள்ளத்தாள்.
வள்ளலைப் பயந்த நங்கை.
வானவர் வணங்கப் போனாள்.
மெய்த்திறத்து விளங்கிழை.
உயர்கோசலையாம் அன்னம்.

மக்கள் நால்வர்பால் மறுவில் அன்பினள்.
சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலை.
வேந்தர்வைகும் முற்றத்தான் முதல் தேவி
மூன்றுஉலகும் ஈன்றானை முன் ஈன்றாள்
கன்றுபிரி காராவின் துயருடைய கொடி.
வெப்பு எழுதிஞலன்ன மெலிவுடையாள்.
சொரிஅமைப்பது அரிதாய மழைக்கண்ணாள்.

கோசலைத் தாயைக் குறித்து வந்துள்ள இந்த வாசகங்கள் ஈண்டு ஊன்றி உணர வுரியன. அரிய தாய்மையின் பெரிய தூய்மைகள் யாவும் இத்தேவியிடம் நன்கு மேவி மிளிர்கின்றன

கைகேசி.

கைகேசி கேகய தேசத்து அரசன் ஆகிய அசுவபதியின் அருமைத் திருமகள். அறிவு அழகு பெருமிதம் முதலிய நிலைகளில் இவள் தலைமை எய்தி யிருந்தாள். இவளது பேரெழிலை வினவி யறிந்து தசரத மன்னன் இவளை உவந்து மணந்து கொண்டான். இனிய மனைவியர் மூவரோடும் இன்பமாய் வாழ்ந்து வந்தான். புரிந்த அரிய வேள்வியின் பயனால் சிறந்த மக்கள் பிறந்தனர். பரதனைக் கைகேசி பெற்றாள். மைந்தர் நால்வரும் மறைகள் எனத் துறைகள்தோறும் கலைகளில் உயர்ந்து நிலைகளில் தெளிந்து வந்தனர். பருவம் எய்தியபொழுது யாவரும் திருமணம் எய்தினர். அந்தக் கலியாணத்துக்குக் கைகேசியின் சகோதரன் வந்திருந்தான். அவன் பெயர் யுதாசித்து. பரதனுக்குத் தாய்மாமன் ஆன அவன் இக் கோமகனைத் தன் ஊருக்கு அழைத்துப்போக விரும்பினன். “பாட்டன் பார்க்க விரும்புகிறான்; கோமகனை அனுப்பியருள வேண்டும்” என்று தசரதனிடம் வேண்டவே மன்னர்பிரான் இசைந்து அனுப்பி யருளினன். இராமன் திருவடியில் விழுந்து தொழுது உழுவலன்பனாய் உருகி நின்ற பரதன் தம்பி சத்துருக்கனை உடன் அழைத்துக்கொண்டு கேகய நாட்டுக்குப் போயினன். திங்கள் சில கழிந்தன; இராமனுக்கு மணிமகுடம் சூட மன்னர்பிரான் விரும்பினன். முடிசூட்டு விழாவை யாவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். கூனி என்னும் கொடியவள் கைகேசியிடம் போய் கோள் மூட்டினாள். இராமன் மேல் பேரன்புடைய அரசி முதலில் அவனை

எள்ளி இகழ்ந்தாள்; இகழ்ந்து வைதாலும் அவள் விடாமல் தொடர்ந்து பேதமான போதனைகளைப் போதித்தாள்; அந்தப் பொல்லாதவளுடைய சொல்லால் இந்த நல்லவளும் உள்ளம் திரிந்து உறுதியாய் நின்று அரசுரிமையைத் தடுத்து இராமனைக் கானகம் போகும்படி செய்தாள். அதனால் கொடியவள், பழிகாரி, பாதகி, என வையம் வையும்படி நேர்ந்தாள். பெற்ற மகனும் கொடிய நோயே, நெடிய பேயே, நீசப் பிசாசே என்று நெஞ்சம் கொதித்து வைதான். இயல்பாகவே நல்லவள். இராமன் பால் உள்ளன்புடையவள். விதி புரிந்த சதியால் இவ்வாறு மதியிழந்து செய்து எள்ளல் இழிவுகளை அடையநேர்ந்தாள்.

இனிய நீர்மையுடைய இவள் இவ்வாறு கொடியளாய் மாறியது, தாயின் இயல்பால்நேர்ந்த தீய மயல் என்பர். கைகேசியுடைய தாயின் பெயர் கேசவதி. நல்ல அழகி ஆயினும் செருக்கும் முரணும் பிடிவாதமும் அவளிடம் குடிகொண்டிருந்தன. அவளுடைய எழிலில் மயங்கி மன்னன் மருவி வாழ்ந்து வந்தான். அசுவபதி அரிய பல கலைகளை அறிந்தவன். ஒரு சித்தயோகியின் அருளால் சீவப்பிராணிகளுடைய ஒலிகளையும் உணர்வுகளையும் உணர்ந்திருந்தான். ஒரு நாள் மஞ்சத்தின் அருகே எறும்புகள் ஊர்ந்து சென்றன. ஒழுங்காய்த் தொடர்ந்து செல்லுகின்ற அவை ஒன்றோடுஒன்று மெல்ல ஒலித்துச் சொல்லிப் போவதைக் கண்டு அரசன் நகைத்தான். அருகே இருந்த அரசி "ஏன் சிரித்தீர்கள்?" என்றாள். அது ஒரு இரகசியம்; வெளியே சொல்லக்கூடாது என்றான். என்னிடம் கூறாத மருமம் ஒன்று உண்டா? அதைச் சொல்லவே வேண்டும் என்று வற்புறுத்தினாள். "அதனை வெளியே சொன்னால் உடனே நான் இறந்து போவேன்" என்று அரசன் மறுத்தான். "அப்படிச் சாக மாட்டீர்கள்; என்னை ஏமாற்றுகிறீர்கள்; சும்மா சொல்லுங்கள்" என்றாள். அவ்வாறானால். மயானத்தில் "எருவடுக்கச் செய்; அதில் இருந்து சொல்லுகிறேன்" என்றான். அங்ஙனமே அவள் செய்தாள்; அரசன் துணிந்து சென்றான்; செல்லுங்கால் இடைவழியில் ஒரு வெள்ளாடு கிடாயை நோக்கி "அந்தப் பாழ்ங்கிணற்று அருகே தொங்குகிற அந்தப் புல்லை ஒல்லையில் பறித்துத் தா" என்று கத்தியது. "தன் பெண்டாட்டி பேச்சைத் தட்ட மாட்டாமல் இந்த நாட்டு மன்னன் வீணே சாகப் போகிறானே!

அப்படி நான் மடத்தனமாய்ச் சாக மாட்டேன் போ!" என்று அயலே அது தாவிப் போயது அதனைக் கேட்ட மன்னன் ஆட்டுக்கிடாயின் அறிவை வியந்து வெட்கி மீண்டான். மனைவியை வெறுத்து விலக்கி மதிநலமா யினிது வாழ்ந்தான்.

தயரதன் வருத்தம் நோக்கியுள் அழிந்து
சுமந்திரன தளர்வொடு மாழ்கி
அயர்வொடும் கலுழ்ந்து கொடியகை கேசி
முகத்தினை நோக்கியீ தறைவான்:
செயிரறு கடவுள் முனிவனல் லருளால்
திருவளர் கேகயத்து அரசன
உயிருடை எவற்றின் பாடையும் உணர்ந்தாங்கு
ஒழுகுநாள் தன்னில் மற்றொருநாள். (1)

மற்றடந் தோளான் மனைவியோடு இனிதின்
வைகிய மலரணைப் புறத்தில்
சிற்றெறும்பு ஒழுங்கின் சேறலும் அரசன்
சேவடி கடக்கரி தென்ன
உற்றயல் மேவும் எறும்பு மற்றயலோர்
எறும்புடன் வெகுண்டுரைத் திடுதல்
கொற்றவேல் மன்னன் உணர்ந்தனன் நகைப்பக்
கோற்றொடி நகைத்ததுஎன்? என்றாள். (2)

ஈங்கிது நுவலின் முடியும் என் ஆவி
இயம்பலன் எனவும் மறுத்துக்
கோங்கிள முலையாள் கூறுகென் றுரைத்து
முனிதலும கோவடு வேலான
தீங்குறும் உள்ளத்து அரிவைதோள் நலத்தில்
தீதுவேறு இன்றென விடுத்தான்
ஆங்கவள் குலத்தில் தோன்றிய உனக்கும்
அருளுறு மோஎன அறைந்தான். [கூர்மபுராணம்]

கைகேசியுடைய தாயின் வன்கண்மையை இவை இங்ஙனம் குறித்துள்ளன. அத்தகைய கொடியவள் வயிற்றில் பிறந்துள்ளமையால் நீ யாதும் இரங்காமல் இப்படிக் கொடுமை செய்ய நேர்ந்தாய்! என்று அமைச்சன் கடுமையாய் இவளை இகழ்ந்து வைதிருக்கிறான். இயற்கையில் நல்லவள்; செயற்கையால் உள்ளம் திரிந்தாள்; அதனால் அவகேடுகள் பல நேர்ந்தன. மானச தத்துவங்கள் இங்கே உய்த்து உணரத்தக்கன. மனித இயல்புகள்

பரம்பரை வாசனைகளாய்த் தொடர்ந்து வருகின்றன. அந்த வரவின்படியே வாழ்வுகள் வளர்ந்து திகழ்கின்றன. படிந்த பழக்கம் முடிந்த வழக்கமாய் மூண்டு நீண்டு தொடர்கிறது.

தருமக் கடலான கணவனைச் சுடுகாட்டுக்கு அனுப்பினுள்.
கருணைக் கடலான இராமனைக் கொடியகாட்டுக்கு ஓட்டினுள்.
பெற்றமகனைப் பெரிய துயரக்கடலில் ஆழ்த்தினுள்.
தேசமக்கள் எல்லாரையும் அல்லல் ஆழியுள் வீழ்த்தினுள்.

இன்னவாறு பொல்லாத பழிவசைகளைக் கைகேசி அடைந்துள்ளாள். உள்ளம் கொதித்து எல்லாரும் இவளை இங்ஙனம் எள்ளி இகழ்ந்துள்ளனர். இராமன் மாத்திரம் யாண்டும் மரியாதையோடு மதித்துப் போற்றிப் பிரியமாப் பேணி வந்துள்ளான்.

தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருக எனத்தாழ்ந்தான்.

வானுலகிலிருந்து வந்துள்ள தசரதனிடம் இராமன் இவ்வாறு வணங்கி வரம்வேண்டியுள்ளான். கைகேசியைத் தெய்வம் என்று இந்த ஐயன் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்க வுரியது.

சுமித்திரை.

சுமித்திரை என்பவள் மித்திரசகன் என்னும் மத்திர தேசத்து மன்னன் மகள். நல்ல குணவதி. உருவ அழகோடு இனிய நீர்மைகள் எல்லாம் இக்குலமகளிடம் நலமாக் குலாவியிருந்தன. முதல் இரண்டு தேவியரிடமும் பிள்ளைப் பேறு காணுமையால் இந்த அரசிளங்குமரியைத் தசரதன் விழைந்து மணம் புரிந்து கொண்டான். நல்ல உள்ளப் பண்புடைய இவள் கோசலைபால் பேரன்பும் பெருமதிப்புப் பூண்டு யாண்டும் பணிவா ஒழுகி வந்தாள். யாவரிடமும் இனிய தன்மையளாய் எவ்வழியும் இதமா நடந்து வந்தமையால் இவளுக்கு அமைந்திருந்த இயற் பெயர் காரணப் பெயராக் காண வந்தது. இந்த உத்தமியின் வயிற்றிலிருந்துதான் இலக்குவனும் சத்துருக்கனும் பிறந்துள்ளனர். உரிய மைந்தர் இருவரும் முறையே இராமனையும், பரதனையும் பிரியாமல் மருவி ஒழுகினர். இராமன் காட்டுக்குப் போக நேர்ந்தபோது தனது அருமை மகன் இலக்குவனை நோக்கி இத்தாய் சொன்ன வாய்மொழிகள் தூய அன்பின்

ஒளிகளாய் வெளிவந்துள்ளன. "இலட்சுமணு! அண்ணன் இராமனுடன் பின்னே செல்; சீதையே உனக்குத் தாய்; இராமனே தந்தை; கானகமே அயோத்தி; அம் மானவீரனேடு உடன் பிறந்த தம்பி என்று கருதிப் பெருமிதமாய் நில்லாதே; குடி அடிமைபோல் அப் பெரியவனுக்கு எவ்வழியும் ஊழியம் செய்; கண்ணை இமை காப்பதுபோல் அண்ணனைக் காத்தருள்; அவன் சுகமாய் ஊருக்கு மீண்டு வந்தால் நீயும் வா! ஏதேனும் ஆண்டு அவனுக்கு இடர் நேர்ந்தால் விரைந்து மூண்டு நீக்கு; முடியவில்லையானல் முன்னதாக மாண்டு போ!" என்று தான் பெற்ற மகனை நோக்கி இவ்வாறு இத்தாய் கூறியிருத்தலால் இவளது சித்தசுத்தியும் இராமபத்தியும் வித்தகநிலையும் உய்த்துணரவந்தன.

அறமே ஓர் உருவமாய் மருவியுள்ளவள்.
இறந்த வேந்தன் இளந்தேவி.
இராமன்பின்பு பிரியாமல் சென்ற பெரியானைப் பெற்றவள்.
சொல்மாண்புடை அன்னை சுமித்திரை.
தூய நங்கை.

சுமித்திரை இன்னவாறு சிறப்பா உரைக்கப் பெற்றுள்ளாள்.

சீதை.

சீதை திருவின் அவதாரம். சனக மன்னன் மகளாய்ப் புனித நிலையில் இனிது தோன்றினள். அரிய ஒரு வேள்வி செய்ய உரிய நிலத்தைப் பொன் கலப்பையால் அரசன் உழுதான்; அவ்வாறு உழுது வருங்கால் இடையே ஓர் உழுபடைச் சாலில் விரிந்து பரந்த அழகிய தாமரை இலையில் ஒரு பெண் குழவி பேரொளியோடு தோன்றியது; தோன்றவே வேந்தன் அதிசயம் அடைந்தான்; விரைந்து துதிசெய்து எடுத்தான்; மனைவியிடம் தந்தான்; தெய்வத் திருவே நமக்கு உய்வைத்தர நம் அரசகுடியில் வந்து மகிமையாத் தோன்றியுளது என்று உறவினர் யாவரும் உள்ளம் உவந்தார் ஊரும் நாடும் பேருவகை யடைந்தன. விழுமிய புண்ணியப் பயன் என மன்னனுடைய மகிமையை மறுபுலத்தவரும் எண்ணி வியந்தார். இப்பெண்ணரசி பருவம் எய்திக் கன்னி மாடத்தில் மன்னியிருந்தாள் கோசிகமுனிவரோடு மிதிலைக்கு வந்த இராமன் இக்கோமகளைக் கண்டான்; மாமயல் கொண்டான்; அந்த அண்ணலை நோக்கி இவளும்

பரவசமாய் ஆசைமீக் கூர்ந்தாள். பின்பு விதிமுறைப்படியே வில்லை வளைத்து இந்தப் பேரழகியை மணந்து அந்தப் பேரழகன் அயோத்தியை அடைந்தான். இருவரும் பேரின்ப போகங்களை அனுபவித்து வந்தனர். அவ்வாறு வருங்கால் அரசு முடிதுறந்து நாயகன் வனம்போக நேர்ந்தான்; இவளும் உடன் தொடர்ந்து போனாள். இடையே இராவணனால் வஞ்சிக்கப்பட்டுஇலங்கைச் சிறையில் கலங்கியிருந்தாள். உரிய கணவனையே கருதி அரிய தவநிலையில் இப் புனிதவதி அங்கே பொறையாற்றியிருந்தது பெண்மை மரபுக்கெல்லாம் பெருமகிமையாய்ப் பேரொளி புரிந்து விளங்கியது. கொடிய நசையோடு பல வகையிலும் வஞ்சம் புரிந்து வாதாடி வந்த இலங்கைவேந்தனுக்கு யாதும் அஞ்சாமல் அறிவுரைகள் கூறி நெறிமுறையே இக்குலமகள் நிலைத்திருந்த உறுதிநிலை உத்தமக் கற்பின் சோதியாய் ஒளி வீசி நின்றது. மாய வினைகளில் வல்ல ஓர் அரக்கனைச் சனக மன்னன்போல் வடிவம் பூண்டுவரச் செய்து இப்பெண்ணரசி எதிரே கொண்டு வந்து நிறுத்திப் பேதமான போதனைகளைச் செய்யும்படி தூண்டி அவ்வெய்யவன் விரகு புரிந்தான். மாய உருவங்கொண்டு வந்த அவனைக் கண்டதும் தனது உண்மையான தந்தையே என்று கருதி மறுகிஇத்தூயவள் பரிதாபமாய்த் துடித்துப் பதைத்தாள்.

> கைகளை நெரித்தாள்; கண்ணை மோதினாள்; கமலக் கால்கள்
> நெய்எரி மிதித்தால் என்னநிலத்திடைப் பதைத்தாள்; நெஞ்சம்
> மெய்யென எரிந்தாள்; ஏங்கி விம்மினாள்; நடுங்கி வீழ்ந்தாள்;
> பொய்யென உணராள் அன்பால் புரண்டழும் பூசலிட்டாள்.

இன்னவாறு உள்ளம் கலங்கி உணர்வழிந்து உயிர் பதைத்து அலமந்த இக்குலமகளை நோக்கி மாயச் சனகனாய் வந்த அந்தப் புலைமகன் விநயமா வாய்திறந்து பேச நேர்ந்தான்: "அம்மா சானகி! நானும் என் அரசகுடியும் அடியோடு அழிந்துபோகாத படி நீ கொஞ்சம் கருணை புரிய வேண்டும்; தேவர் யாவரும் ஏவல்புரிய மூவுலகங்களையும் முதன்மையா ஆளுகிற முடிமன்னனுக்கு இசைவதால் யாதொரு வசையும் நேராது" என்று அவ் வஞ்சன் இவ்வாறு கூறவே இப்பதிவிரதை நெஞ்சம் கொதித்தாள். "ஆ! நீ மிதிலை மன்னனா? சனகனான அந்தச் சனகன் இவ்வாறு பேசான்; ஒருவேளை இந்த நீசனுக்கு அஞ்சி நீ இங்ஙனம் பேசினாலும் நாசமே அடைவாய்; ஈசன் அருளால் என்

உள்ளம் அணுவும் மாசு படாது" என்று இக்கற்பரசி அற்புதமாப் பேசியருளினள். மொழிகளில் வீர ஒளிகள் வீசி மின்றன.

நீயும் நின்கிளேயும் மற்றிந் நெடுநில வரைப்பும் நேரே
மாயினும் முறைமை குன்ற வாழ்வெனே வயிரத்திண்டோள்
ஆயிர நாமத் தாழி அரியினுக்கு அடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனே? நாண்துறந்து ஆவி நச்சி. (1)

வரிசிலை ஒருவன் அல்லால் மைந்தர்என் மருங்கு வந்தார்
எரியிடை வீழ்ந்த விட்டில் அல்லரோ? அரசுக்கு ஏற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை அங்கணத்து அழுக்குத் தின்னும்
நரியொடும் வாழ்வது உண்டோ? நாயினும் கடைப்பட்டோனே!

(இராமா, மாயாசனகன், 67, 68)

மானவீரமாய்ச் சானகி பேசியுள்ள இந்த உறுதிமொழிகளின் அரிய மேன்மைகளை ஊன்றி உணர்பவர் யாவரும் இப்பத்தினியின் உள்ளத் துணிவையும் உத்தம நீர்மைகளையும் நன்கு தெளிந்து கொள்வர். பெண்மை உலகத்திற்கு இந்த இரண்டு கவிகளும் உண்மை ஒளிகளாய் ஓங்கியுள்ளன. நிறைகாக்கும் காப்பின் நிலைமை இங்கே தலைமையாய் நன்கு நிலவி நிற்கிறது.

இத்தகைய உத்தமக் கற்பரசிலையைத் தனக்கு இனிய மனைவியாப் பெற்றமையால் இராமன் எத்தகைய நிலையிலும் சிங்கஏறு போல் தலைநிமிர்ந்து நடந்து யாண்டும் திவ்விய மகிமைகள் தோய்ந்து எவ்வழியும் செவ்விய வீர மூர்த்தியாய் நிற்கின்றான்.

இராமாயணத்தின் கதாநாயகனாய் இராமன் தலைமை எய்தியிருத்தல்போல் அக்காவியத்தின் சீவிய கதாநாயகியாய்ச் சீதையும் சிறந்து நிற்கின்றாள். சிறை இருந்தவளுடைய சீர்மை நீர்மைகளைத் துறைகள்தோறும் துலக்கி வருவதே இராம காவியத்தின் முறை என்பது முனிவர்கள் முடிபு. இந்தப் பெண்ணரசியின் கற்பும் தவமும் அற்புத அதிசயங்களை விளைத்து வந்துள்ளன. அந்த வரவு நிலைகளை உறவான குறிப்புகள் உணர்த்தி நிற்கின்றன. விழுமிய பெண்மை உண்மையாய் ஒளி வீசியுளது.

தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி.
அழகு இவளைத் தவம்செய்து பெற்றது.
குணங்கள் இக்கொம்பினைச் சேர்ந்துய்யப் பிணங்குவன.
வஞ்சமும் களவும் இன்றி மழைஎன மதர்த்த கண்ணள்.
வையக மடந்தைமார்க்கும் நாகர்கோதையர்க்கும் வானத்

தெய்வ மங்கையர்க்குமெல்லாம் திலகம்.
அழகெலாம் ஒருங்கே கொண்டாள்.
அருந்ததி அனைய கற்பின் நங்கை.
மங்கையர் கண்மணி எனத்தகைய கன்னி.
போதினை வெறுத்து அரசர் பொன்மனை புகுந்தாள்.
அலைகடல் பிறந்து பின்னை அவனியில் தோன்றினள்.
நங்கையைக் காண நம்பிக்கு ஆயிரம் நயனம் வேண்டும்.
ஆடுகின்ற மாமயிலினும் அழகிய குயில்.
பெண்மை என்று உரைக்கின்ற உடலினுக்குஉயிர்.
சீலம் இன்னதுஎன்று அருந்ததிக்கு அருளிய திரு.
பாற்கடல் உதவிய அமிழ்து.
நினைந்த போதினும் அமிழ்துஒக்கும் நேரிழை.
மடந்தைமார்களின் திலதம்.
தண்தமிழ் யாழினும் இனிய சொற்கிளி.
ஆய் மயில் பெண்ணருங்கலம்.
தெரிவை மார்க்கு ஒருகட்டளை எனச்செய்த திரு.
வைகொள் வேல் எனக் காலனும் மறுகுறும் கண்ணாள்.
மலர்மகட்கு உவமையாள்.
தேவர் வரத்தால் மண்ணிடைவந்த பெண்ணரசி.
வான்சுடர்ச் சோதி வெள்ளம்.
அரக்கர் என்னும் கான்சுட முளைத்த கற்பின்கனலி.
அரவிந்த மலருள்நீங்கி அடியிணை படியில் தோய்ந்த திரு.
அழகிற்கு எல்லை யில்லாள்.
அமுதின்வந்த அருந்ததிக் கற்பினள்.
மிதிலை வேந்தன் பொன்.
தேவியோ திருமங்கையிற் செவ்வியாள்.
பொன்வயின் மேனி கொண்டாள்.
பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தது.
தாமரை இருந்தவையல் சேடியாம் தரமும் அல்லள்.
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள்.
அங்கம் யாவர்க்கும் எழுதொணாதாள்.
தூமனத்து அருந்ததி.

பொற்பினுக்கு அணி.
புகழின் சேக்கை.
கற்பினுக்கு அரசி.
உம்பரும் ஓங்கிய அழகினள்.
சேயிதழ்த்தாமரைச் சேக்கை தீர்ந்திவண் மேயவள்.
சனகன் மாமகள்.
காகுத்தன் மனைவி.
மறுவில் கற்பினள்.
அணங்கினுக்கு அணங்கு அனள்.
உத்தமன் தேவி.
பிள்ளைச் சொற்கிளி அனள்.
சனகி என்னும் காமரு திரு.
பெண்ணியல் தீபமன்ன பேரெழிலாட்டி.
வேதவேள்வி விதிமுறை மேவிய சீதை.
அமுதம் சுவைசேர்த்த மொழி.
நிலம் பொறை இலதென நிமிர்ந்த கற்பினள்.
மலர்க்கொம்பனைய மடச்சீதை.
என் நெஞ்சுபூத்த தாமரையின் நிலயம் பூத்தாள்.
திருமகள் அனைய தெய்வக் கற்பினள்.
சனகன் பெற்ற அன்னம்.
அமிழ்தின் வந்த தேவி.
தாக்கணங் கரும் சீதை.
தாமரை மறந்த தையல்.
மங்கையர் அவளை ஒப்பார் இல்லர்.
கற்பழியாக் குலமகள்.
பிரிவெனுந் துயர் உருவுகொண்டாலன பிணியாள்.
அமிழ்து கொண்டு அநங்கவேள் செய்த ஓவியம்.
கமலக் கண்ணனர் உயிர்.
இவள் கமலச் செல்வியே.
வனிதையர் திலகம்.
தூண்டு அரு விளக்கனள்.
அண்டமுதல் நாயகனது ஆவியனையாள்.

மெய்ப்புகழ் கொண்டாள்.
கற்பினுக்கு இனிய ஓர் உயிர்.
நற்பெருந்தவத்தளாய நங்கை.
கற்பும் பொறையும் களிநடமுடையவள்.
தவம் செய்த தவமாம் தையல்.
உன்குலம் உன்னது ஆக்கினள்.
தன்குலம் தன்னது ஆக்கினள்.
என்குலம் என்னது ஆக்கினள்.
படிஎழும் தலைமேல்கொண்ட கற்பினள்.
அசைவில் கற்பின் அணங்கு
அலகில் கற்புடைச் சானகி.
வினைகளைக் கற்பின் வென்ற விளக்கு.
தருமக் கற்பின் தெய்வதம்.
தீங்கிலாக் கற்பின் திருமடந்தை.
பெண்மைக்கெல்லாம் காணி.
கற்பினுக்கு அணி.
பொற்பின் ஆணி.
அமிழ்தின் வந்த அமிழ்து.
அறத்தின் தாய்.
அருங்குலக் கற்பினுக்கு அரிய மெய்யணி.
கற்பினுக்கு இன்னுயிர்.
பெண்மைக் காப்பு.
பொற்பினுக்கு அழகு.
புகழின் வாழ்க்கை.
அருள்புரி தருமம்.
பொறையினல் உலகம் போலும் தகையள்.
மணியின் மாட்சியை வளர்த்த எம்மோய்.
மூவகை யுலகின் அன்னை சீதை.
பூமலர்த் தவிசை நீத்துப் பொன்மதில்
மிதிலைபூத்த தேமொழித்திரு.

சீதையைக் குறித்து இன்னவாறு நன்னய நாமங்கள் வந்துள்ளன. பெயர்களின் குறிப்புகள் அரிய பல உயர் நிலைகளை

விளக்கி நிற்கின்றன. பெண்குலமும் மண்குலமும் விண்குலமும் விழுமிய மேன்மைகளை அடைய மிதிலையில் தோன்றிய மெய்த் திரு என்று தத்துவ ஞானிகள் யாவரும் இவ்வுத்தம பத்தினியைப்போற்றிஉரிமையோடுபெருமையாத்துதித்துவருகின்றனர்.

Sita stands these thousands of years, commanding the worship of every man, woman and child throughout the length and breadth of Aryavarta.

She who suffered that life of suffering without a murmur, she the ever chaste and ever pure wife, she the ideal of the people, our national God, she must always remain.

Any attempt to modernise our women, if it tries to take our women away from that ideal of Sita, is immediately a failure, as we see every day. (Swami Vivekananda)

"சீதை இங்கே தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாகின்றன. ஆயினும் பரந்து விரிந்த இந்தப் பரதகண்டத்திலுள்ள ஆண் பெண் பாலர் யாவரும் இப் பெண்ணரசியைப் பேரன்போடு போற்றி வருகின்றனர். பொறுமையோடு பல துயரங்களை அனுபவித்துத் தூய கற்பரசியாய்த் துலங்கியிருந்த இவ்வுத்தமி உலக மக்களுக்கு உயர்நிலையமாய் ஒளிபுரிந்து இந்நாட்டுத் தெய்வமா என்றும் நிலவி நிற்கிருள். நமது பெண்கள் சீதையின் விழுமிய நெறிமுறையிலிருந்து விலகி நவீன வழியில் இழிய நேர்ந்தால்,வழுவாய் இழிவுறுதலை உடனே நம் விழிஎதிரே காணலாம்" எனச் சுவாமி விவேகாநந்தர் இவ்வாறு கூறியிருக்கிருர் இந்த அறிவுரைகளை ஆய்ந்து சிந்திக்க வேண்டும். யாவரும் துதிசெய்துதொழஇப்பதிவிரதைஅதிசயநிலையில்ஒளிமிகுந்துள்ளாள்.

மந்தரை.

இவள் அதிசயமான தந்திரங்களுடையவள். கேகய தேசத்திலிருந்து வந்தவள். கைகேசியிடம் மிகவும் உரிமையுடையவளாய் ஊழியம் புரிந்து வந்தாள். இவளது முதுகு சிறிது வளைந்து கூனலாயிருந்தமையால் கூனி என்றே யாவரும் இவளை அழைத்து வரலாயினர். பேசுவதில் சாதுரிய சாகசங்கள் நிறைந்தவள் ஆதலால் அந்தப்புரத்தில் இவளுக்குச் சிறந்த மதிப்பிருந்தது. இளமையிலிருந்தே இராமன் கைகேசியிடம் வளமையாய் வளர்ந்து வந்தமையால் ஒருநாள் இக்கிழவியின் முதுகில்

உல்லாச விநோதமாய் வில் உருண்டையை வீசினான். அந்தச் செல்ல மகன் விளையாட்டாக எய்ததை இவள் விபரீதமாக் கருதிக் கொண்டாள். உள்ளே கறுவு கொண்டு காலம் நோக்கியிருந்தாள். அக்கோமகன் அரசுமுடி சூட நேர்ந்தபோது இக்கொடியவள் இடையூறு செய்ய மூண்டாள். கைகேசியின் நல்ல உள்ளத்தை இப் பொல்லாதவள் புலையா மாற்றினாள். இராமன்பால் பேரன்புடைய அந்த அரசி மனம் அடியோடு கொடுமையாய் மாறும்படி இக் கொடியவள் பேசிய பேச்சுகள் பொல்லாத சூழ்ச்சிகளோடு பொங்கி வந்தன. மனித சுபாவங்களையும், பெண்களுடைய மனநிலைகளையும், மென்மையான தன்மைகளையும், உலக அனுபவங்களையும் இவள் நன்றாக அறிந்து தெளிந்துள்ளமையை இவளுடைய வாய்மொழிகள் அன்று தெளிவா வெளியாக்கி நின்றன. “உன் சக்களத்தி மகன் சக்கரவர்த்தி ஆனால் அவள் எதிரே நீ தாழ்ந்து நிற்க நேர்வாய்; அந்த இழிநிலையை நீ உணரவில்லை; உயர்ந்த அரசகுடியில் பிறந்து சிறந்த அரசியாய் விளங்கி நிற்கின்ற நீ அடியோடு இழிந்து கழியத் துணிந்து நிற்பது கொடிய அவகேடேயாம். இராமனை நல்லவன் என்று எண்ணுகிறாய்; பிள்ளைப் பாசம் கொள்ளுகிறாய்; அவை யாவும் பேதைமையான பிழை மோசங்களே. மணிமகுடம் தலையில் ஏறினால் அதன்பின் அவன் நிலைமுழுதும் மாறிப்போம். உலக பாசங்களை அறவே துறந்த ஞானிகளே ஆனாலும் செல்வம் கையில் ஏறினால் உள்ளத்தில் செருக்கும் சினமும் சிறுமையும் ஏறி யார்க்கும் தீமைகளே செய்யநேர்வர். நேருகின்ற அழிதுயரங்களை விழி திறந்து நோக்கி முன்எச்சரிக்கையாய் நடந்து கொள்; இல்லையானால் நீ பிறந்த குலம் இளிவாய் அல்லலடையும்; பெற்ற பிள்ளையும் வழி வழியே இழிவடைந்து ஒழிவன்” என இன்னவாறு இக்கொடியவள் கூறவே அக் குலவரசி உளநிலை திரிந்தாள். பல துயரங்கள் விளைந்தன. வினையின் விளைவுகளும் விதியின் நுழைவுகளும் அதிசய நிலைகளில் துதி கொண்டுள்ளன, கரும தருமங்கள் மருமமா மருவி வருகின்றன.

ஒரு கூனியின் கொடுமையால் வானும் வையமும் இனிமையாய் மகிழ்ந்துவர இராமசரிதம் புனிதமா வளர்ந்து வந்துள்ளது.

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

பண்டைநாள் இராகவன் பாணி வில் உமிழ்
உண்டையுண்டதனைத் தன் உள்ளத்து உன்னுவாள்.
ஊனறிய வெகுளியாள்: உலைக்கும உள்ளத்தாள்;
மூனறுலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்.
காலக் கோளனுள்.
மூண்டெழு பெருமபழி முடிக்கும் சொல்லினுள்.
வெவ்விடம் அனையவள்.
சூழ்ந்த தீவினைநிகர் கூனி.
கொடிய வேதனைக் கூனி.
தீய மந்தரை.
நஞ்சு தீர்க்கினும் தீர்கிலா நலிவினள்.
வினை நிரம்பிய கூனி.
உள்ளமும கோடிய கொடியாள்.
கூனியிற் கொடியார் அலர்.

இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளமையால் இவளுடைய கொடுமையான பொல்லாத நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்துகொள்ளுகிறோம்.

பரசுராமர்.

இவர் அருந்திறலாண்மையும் பெருந்தவமும் உடையவர். சமதக்கினி முனிவரது அருமைப் புதல்வர். தாய் பெயர் ரேணுகை. தன் தந்தையைக் காத்த வீரியன் என்னும் மன்னன் வதைத்துப் போனமையால் அவனை இவர் அழித்து ஒழித்தார். அவ்வளவோடு அமையால் அரச மரபினர் அனைவரையும் வெறுத்துக் கடுமையான பகைமை பூண்டு கொடுமை புரிந்து வந்தார். கையில் ஒரு கூரிய மழுவாயுதம் ஏந்திச் சத்திரிய வயிரியாய் யாண்டும் மூண்டு முனிந்து வந்தமையால் பரசுராமர் என நேர்ந்தார் வேந்தர் குல விரோதியாய் வீறுகொண்டு நின்ற இவர் மிதிலையில் இராமன் வெற்றி வீரமாய்த் திருமணம் புரிந்து வருவதை அறிந்தார்; விரைந்து ஓடி வந்தார்; இடை வழியில் வந்து மறித்தார்; தசரத மன்னன் பணிந்து வேண்டியும் இவர் யாதும் இணங்காமல் சினந்து சீறி இராமன் எதிரே முனைந்து வந்து தேரை நிறுத்திப் போருக்கு வா! என்று நேருக்கு நேர் நேர்ந்து நின்றார் “ஏதோ ஓர் அதிசயமான தெய்வீக வில்லை மிதிலையில் ஒடித்து நீ வெற்றி பெற்றுவிட்டதாக உள்ளம் தருக்கி

வருகிருய்; இதோ என் கையில் இருக்கிற இந்த வில்லை வளை பார்க்கலாம்; வளைத்து விட்டால் உனக்கு நான் இளைத்துவிட்டேன்; நீ வெற்றியை விளைத்து விட்டாய்; வளையாது ஒழியின் நீ பிழையா யிழிவாய்!" என்று இவ்வாறு இவர் வீரவாதம் கூற வே அக்கோமகன் புன்னகை புரிந்து "உன் வெற்றி வில்லைத் தருக" என்ருர். அவர் விரைந்து தந்தார்; தரவே அதிவிரைவில் வளைத்து "இந்தச் சிலையால் உன் தலையை தரையில் உருட்டலாமா?" என்று அவ் வெற்றிவீரன் கேட்டான். கொற்றக் குரிசில் அவ்வாறு கேட்கவே இவர் வெட்கமடைந்து வேண்டினர்.

"நீதியாய் முனிந்திடேல் நீயிங்கு யாவர்க்கும்
ஆதியான் அறிந்தனென் அலங்கல் நேமியாய்!"

என்று வலங்கொண்டு வாழ்த்திப் போயினர். திருமாலின் ஓர் அமிசமான இவரிடம் மருவியிருந்த அடலாண்மைகள் யாவும் பேரமிசமான இராமபிரானிடம் அடங்கி நிற்க இவர் தனியே பெயர்ந்து போயிருப்பது வியந்து சிந்திக்க வுரியது.

சுமந்திரன்.

சிறந்த மதி மந்திரி. தசரத மன்னனுக்குக் கண்ணும் கருத்துமாயிருந்து காரியம் புரிந்த சீரிய அறிஞன். பல கலைகளையும் பயின்று தெளிந்தவன். மந்திராலோசனைகளிலும் நியாய வாதங்களிலும் நிறைந்த மதியூகி. பேசுவதில் அதிசய நிபுணன். குறிப்பறிந்து கூர்ந்து ஓர்ந்து எதையும் தேர்ந்து தெளிந்து செய்பவன். தலைமை அமைச்சன் ஆதலால் ஆட்சியின் நிலைமைகளை எல்லாம் நேரே நோக்கி எவ்வழியும் செவ்வையா இனிது நடத்தி வந்தான். இந்த மதிமானுடைய வினையாண்மைகளும் குணமாட்சிகளும் விநயவிவேகங்களும் மனித மரபுகளை மாண்புறுத்தி அரசுமுறைகளை யாண்டும் இனிது பேணி வந்தன. அரச சபையில் இவன் பேச நேர்ந்தால் யாவரும் அதிசய பரவசராய் வியந்து கேட்டு மகிழ்ந்திருப்பர். தனது அரசுரிமையை இராமனிடம் தந்துவிட்டுத் தான் ஒதுங்கியிருக்க விரும்பித் தசரதன் வினவியபொழுது அமைச்சர் குழுவின் அதிபதியாய் நின்று அரசவையில் இவன் கூறிய அறிவுரைகள் கூரிய சீரிய மேன்மைகள் தோய்ந்து காரிய நலங்கள் வாய்ந்து வந்தன. மற்ற மந்திரிகள் கருத்தை வாயினல் சொல்லாமலே அவர் தம் முகக்குறிப்

பால் ஓர்ந்து கொண்டு தேர்ந்த தெளிவோடு பேசுவதால் இவனுடைய பேச்சு செவ்விய காட்சியாய்ச் சிறந்து அரிய பல அறிவு நலங்கள் நிறைந்து திவ்விய மாட்சியாத் திகழ்ந்து வந்துளது.

முழுதும் எண்ணுறும் மந்திரக் கிழவர் தம் முகத்தால்
எழுதி நீட்டிய இங்கிதம் இறைமகற்கு ஏறத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்நின்று சொல்லும்.

இராச சபையில் இவன் நின்று பேசும் நிலைமையையும் தலைமையையும் பேச்சின் திறத்தையும் சீவிய ஓவியமா இது வரைந்து காட்டியுள்ளது. மானச தத்துவங்களை நன்கு தெரிந்தவன் ஆதலால் இவனுடைய வாசகங்களை ஞான முனிவர்களும் உவந்து போற்றியுள்ளனர். முடிதுறந்து இராமன் வனம் போக நேர்ந்தபோது இம் மதிமானுடைய உதவியையே அக் குலமகன் நலமா விரும்பினன். இராமனோடு கானகம் செல்லப் பொங்கி எழுந்து தொடர்ந்த சனத்திரள்களை எல்லாம் இவன் நன்கு ஆற்றி மாற்றி அம் மூவரையும் தேரில் ஏற்றி யாவரும் அறியா வகை அயலே உய்த்து வந்தது அதிசய சாதுரியமாய் விளங்கி நின்றது. இவனிடம் பிரியமும் மரியாதையும் பெருகி இராம பிரான் என்றும் இவனை உரிமையோடு கருதி உவந்து வந்துள்ளான். நன்னயமான மதிமந்திரி நலம்பல புரிந்திருந்தான்.

மன்னன் மனம் அனையான்.
பணிதலை நின்ற காதல் சுமந்திரன்.
பொன்தடந் தேர் வல்லான்.
புலமை யுள்ளத்தான்.
ஊன் துறந்து உயிர்குடித்து உழலும் வேலினான்.
பரியும் நெஞ்சினன்.
கண்ணில் வற்று நீர்கொண்ட நெடுந்தேர்ப்பாகன்.
சுந்தரத் தடந்தோள் வெற்றிச் சுமந்திரன்.

இந்தவாறு இவன் குறிக்கப்பெற்றிருத்தலால் இவனுடைய குணநலங்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். அறிவுரைகள் ஆடுவதிலும், ஆலோசனைகள் கூறுவதிலும், தேர் ஊர்தலிலும், போர் புரிதலிலும், தேர்ந்த வல்லவன் என்று தெரிகின்றது.

குகன்.

இவன் ஒரு குறுநில மன்னன். வேடுவர் மரபினன் சிருங்கி

பேரம் என்னும் ஊரில் இருந்து சீரும் சிறப்புமா வாழ்ந்து வந்தான். கங்காநதியின் இருகரைகளின் வருவாய்களும் ஆயிரம் தோணிகளும் இவனுக்குக் காணியாயிருந்தன. வஞ்சனை சூதுகள் யாதும் அறியாதவன்; அஞ்சா நெஞ்சினன். அயோத்தி வேந்தர்பால் அன்புரிமையுடையவன். மணிமுடி துறந்து இராமன் கானகம் ஏகினன் என்பதை அறிந்து இவன் மிகவும் வருந்தினன். அக்கோமகன் கங்கையின் வடகரையில் ஒரு பூஞ்சோலையிடையே வந்து தங்கியுள்ளான் என்று தெரிந்தான்; தெரியவே பெருகிய ஆவலோடு விரைந்து எழுந்து காணவந்தான். முன்னே காத்துநின்ற இளவலிடம் விடைபெற்று நேரே போய்க் கண்டான்; காலில் நெடிது விழுந்து தொழுது எழுந்தான். அழகிய அந்த அஞ்சன வண்ணனை உழுவலன்போடு நோக்கி உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிந்து அழுதான். பெரிய சக்கரவர்த்தியாய் அரியணையில் இருக்க வுரியவன் வறிய பரதேசியாய் மருவி வந்துள்ள உருவக் கோலத்தைப் பார்த்துப் பார்த்துப் பரிந்து வருந்தினன்; விழி நீர் வெளியே மார்பில் வழிந்தோட அழுது மறுகி நிற்கிற இவனுடைய உழுவலன்பையும் உரிமைப் பாசத்தையும் அறிந்து வியந்த இராமன் கிழமையோடு சீதையையும் இலக்குவனையும் நோக்கி "என்னே இவனது அன்பு நிலை!" என்று ஆர்வம் மீதூர்ந்து வியந்தான். இராமனைக் கண்டதுமுதல் பிரிய மனமில்லாமல் உருகிய உள்ளத்தனாய் அக்கோமகன் அருகிலேயே இவன் ஆர்வமாய் நின்றான். பொழுது அடைந்தும் ஊருக்குப் போகவில்லை. இரவு முழுவதும் உறங்காமல் இளையவனோடு காத்து நின்றான். காவல் நிலை ஆவல் அன்புகளாய் நிலவி நின்றது.

வெம்பிவெந்து அழியாநின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித் தலைமகன் தனிமை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவிசோர் குன்றின்நின்றான்.

இரவில் இராமனைக் காத்துக் குகன் நின்றுள்ள நிலைமையை இது நன்கு குறித்துள்ளது. இவனது அன்பின் உருக்கத்தைக் கண்ணீர்ப் பெருக்கால் காண்பவர் எவரும் கண்ணீர் சொரிய நேர்வர். ஆன்ற அன்பு நிலைக்கு ஏன்ற சான்றாயுள்ளான்.

விடிந்த உடன் சிறந்த தோணி வந்தது. காலைக் கடனை முடித்தபின் மூவரும் அதில் ஏறினர். இவனே தோணியை இனிது நடத்தித் தென்கரை சேர்த்தான். தோணியை விட்டு

இறங்கியவுடனே இராமனோடு தானும் கூடவே தொடர்ந்து போந்து "ஊழியம் புரிந்து வருவேன்" என்று குகன் உழுவலன் போடு தொழுது வேண்டினான். இவனுடைய பரிவும் பண்பும் இராமனை உருக்கி நின்றன. உள்ளம் உருகிய அவ்வீர வள்ளல் உரிமையோடு உரைகளாடினான். "குகா! நீ அயலான் அல்லன்; வேறு ஒரு உருவில் மருவியுள்ள பரதனே; முன்பு நால்வர் பிறந்தோம்; உன்னோடு இன்று ஐவர் ஆயினோம்; அங்கே உள்ள கிளைகளை அவன் பாதுகாத்து நிற்கிறான்; அதுபோல் இங்கே உள்ள என் கிளைகளை நீ ஆதரித்து நில்; உன் தந்தை ஏவியபடியே வனவாசம் செய்து நான் மீண்டு ஈண்டு வருவேன்; அப்பொழுது உன்னை அழைத்துக்கொண்டு அயோத்திக்குப் போவேன்; இப்பொழுது எனக்கு நீ விடை கொடுத்து அனுப்ப வேண்டும்" என்று இவ்வாறு அக் குலமகன் கூறவே இவன் உளம் மிக உருகி விழிநீர் சொரிந்து சிறிது தூரம் உடன் நடந்துபோய் வழியனுப்பி நின்றான். உள்ளப் பாசம் வெள்ளமாய் விரிந்து வந்தது.

பதினான்கு ஆண்டுகளும் இராமனையே கருதி யுருகி எதிர் பார்த்திருந்தான். மீண்டு வந்த பின்பு அக் கோமகனோடு அயோத்திக்கு வந்து அரசு முடிசூட்டு விழாவைக் கண்டு மகிழ்ந்தான். குகனோடும் ஐவர் ஆனேம் என்று இராமன் வாயால் கூறும் பாக்கியத்தைப் பெற்றுச் சீரும் சிறப்புமுற்றுச் சீர்மைநீர்மைகளோடுகாவியத்துள் இவன்சிறந்துவிளங்குகிறான்.

ஆயிரம் அம்பிக்கு நாயகன்.
தூயகங்கைத் துறைவிடும் தொன்மையான்.
காயும் வில்லினன்; கல்திரள் தோளினன்."
கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினன்.
உள்ளம் தூயவன்.
தாயின் நல்லான்.
கங்கை நாவாய்க்கு இறை.
எல்லை நீத்த அருத்தியன்.
இருகணீர் அருவி சோர இருந்தான்.
பணிமொழி கடவாதான்.
பருவரல் இகவாதான்.
வன்பணை வில்லினன்.

மல்லுயர் தோளினன்.
கங்கையிரு கரையுடையான்.
கணக்கிறந்த நாவாயான்.
வெங்கரியின் ஏறனையான்.
வில்பிடித்த வேலையினுன்.
கற்காணும் திண்மையான்.
கரைகாணுக் காதலான்.
அழுகமைந்த மேனியான்.
கைவீரக் களிறனைய காளை.
முழுநீர்க்கங்கை தழுவிருகரைக்கு நாதன்.
தாயினும் உயிர்க்கு நல்லன்.
வழுவிலா எயினர் வேந்தன்.
குகன் எனும் வள்ளல்.

இன்னவாறு குகன் பெயர் பெற்றுள்ளான். இராமன்பால் இவன் பூண்டுள்ள அன்பு பரமபுனிதமுடையது. பரதன் சேனையோடு வந்ததைக் கண்டு முதலில் ஐயங்கொண்டு பின்பு தெளிந்து எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு! என்று அன்பு மீதூர்ந்து அவனைத் தொழுது துதித்துத் தழுவி மகிழ்ந்து உள்ளம் கரைந்து உவந்து கொண்டாடியிருப்பது விழுமிய நீர்மையாய்க் கெழுமி உலக உள்ளங்களை உருக்கியுள்ளது. இவனுடைய அன்புரிமைகள் பண்புகள் சுரந்துள்ளன.

சடாயு.

இவன் பறவை வேந்தன். கருடர் கந்தருவர்போல் தெய்வீக நிலையினன். பறவை உருவில் மருவியுள்ள தருமவீரன். அதிசய ஆற்றலும் அரிய மதிநலனும் வாய்ந்தவன். நீண்ட ஆயுளையுடையவன். தசரத மன்னனோடு கிழமையாய்ப் பழகிய விழுமிய நண்பன். சூரியன் சாரதி ஆகிய அருணனுக்கு அரம்பையிடம் பிறந்தவன். எருவையின் உருவமாய் இசைந்திருந்தமையால் கழுகுகளுக்கு அரசன் என நேர்ந்தான். எங்கும் விரைந்து பறந்து சென்று எவரையும்வென்று எதையும் முடிக்க வல்லவன். இராமன் முதல் மூவரும் தண்டக வனத்தைக் கடந்து தென்பால் நடந்து வருங்கால் வானவீதியில் பறந்து வந்த இவன்

அவரை நேரே கண்டான். பசிய கோலத் திருமேனியனாய் வில் ஏந்திச் செல்லுகின்ற அந்தச் செல்ல மகனைக் காணவே இவன் உள்ளம் உருகி உரிமை மீதூர்ந்து விரைந்து நெருங்கி "ஐயா! நீங்கள் யார்?" என்று வினவினான். அவன் உள்ளதை உரைத்தான். தசரத வேந்தன் தனையர் என்று அறியவே இவன் மனம் மிக மகிழ்ந்து அருகே அணுகி உரிமையோடு தழுவி "எனது அருமை நண்பனான அம்மன்னர் பெருமான் சேமமாயிருக்கிறானா?" என்று சிந்தை உவந்து கேட்டான். இளையவன் யாவும் தெளிவாச் சொன்னான். தசரதன் இறந்து போனான் என்று அறிந்ததும் இவன் உள்ளம் துடித்து உயிர் பதைத்து அழுதான். அவனைப் பிரிந்து உயிர் வாழ்வது பிழை எனத் துணிந்து இவன் எரியில் வீழ்ந்து இறந்துபோக விரைந்தான். இராமன் தடுத்தான்: "தந்தையே! உன் மைந்தரான எங்களை நீ பாதுகாத்தருளுக; நாங்கள் வனவாசம் செய்ய வந்திருக்கிறோம்; எங்களை ஆதரித்தருளும் பொருட்டு உயிர் வாழ வேண்டும்" என்று உரிமையோடு வேண்டவே இவன் பரிவோடு இசைந்தான். கோதாவரி நதியருகே தங்கியிருக்க விரும்பியதால் தன் சிறகின் நீழலிலே அம்மூவரையும் இதமா அழைத்துச் சென்று ஐந்து ஆலமரங்களுள்ள பூம்பொழிலிடையே சுகமா வசிக்கும்படி புரிந்துவிட்டு அருகே ஒரு மலையின் சாரலில் தங்கியிருந்து அவரை மிகவும் கவனமாப் பாதுகாத்து வந்தான். சில மாதங்கள் நலமாக் கழிந்தன. ஒருநாள் இவன் அயலே போயிருந்தபோது இராவணன் வஞ்சமா வந்து சீதையைக் கவர்ந்து எடுத்து விமானத்தில் வைத்து வானவீதியில் விரைந்து போனான். அத் தேவி பரிதாபமாய் அலறிய அழுகுரல் கேட்டு இவன் அதிவேகமாய் வந்து இலங்கை வேந்தன் தேரை எதிர்த்து நிறுத்தினான்; இதமொழி கூறினான்; அவன் யாதும் கேளாமல் மோதி முனிந்தமையால் போர் மூண்டது; கொடிய ஆயுத பலங்களோடு வந்துள்ள அந்த அதிசய வீரனை இவன் கதிவேகமாத் தாக்கிப் படாதபாடுகள் படுத்தினான். முடி இழந்து வில்லும் கவசமும் அம்புத் தூணி முதலிய யாவும் பறிபோய் அல்லலுழந்து அவமானமடைந்து உள்ளம் தளர்ந்து நின்ற அவன் முடிவில் இவனை வாளால் வெட்டி வீழ்த்தி விரைந்து போனான். சிறகுகள் இழந்து தரையில் வீழ்ந்து மறுகி மயங்கிக் கிடந்தான். பரிதாப

நிலையில் தேவியைத் தேடி ஓடிவந்த இராமலக்குவர் இவனைக் கண்டார்; உள்ளம் உருகி அழுதார்; அவரை மெல்ல அருக ணைத்து உச்சிமோந்து உற்றதை உரைத்தான். இராமன் நெஞ்சம் கொதித்தான்; அந்த அஞ்சன வண்ணனை ஆற்றித் தேற்றி அறி வுரைகள் கூறினன்: “இராமநாதா! விதியின் விளைவுகள் எவரா லும் அறியமுடியாத அதிசயங்களுடையன; உடம்பெடுத்த உயி ரினங்கள் எல்லாம் அதன் வசமாய் உழன்று வருகின்றன; தேவர் முதல் யாவரும் அதனால் அல்லல் பல அடைந்துள்ளனர்; அதனை யாராலும் வெல்ல முடியாது; யாவும் படைக்கும் விதி யும் விதிபடைத்த படியே நடக்கவேண்டும். தெளிந்த மதிமான் ஆன நீ இளையவன் மொழிந்ததையும் கேளாமல் மாயமான் பின் இழிந்து போனது எதனால்? எண்ணிப்பார்! விதியின் சதியே உன் மதியை மயக்கி இந்தக் கதியை விளைத்துள்ளது. அரிய பெரிய அதிசய விளைவுகள் பின்னே விளைய முன்னே இது இன்னவாறு விளைந்துளது. இவ்வுண்மையை நுண்மையா ஈண்டு உன்னி உணர வேண்டும். உனது இனிய மனைவி பிரிய நேர்ந் தது, நிருதர்குலம் அடியோடு அழிய நேர்ந்தது; அமரர்குலம் குடியேறிச் சுகமாய்வாழ வாய்ந்தது; தரும கருமம் மருமமாய் மருவி வருவது விதியின் உருவமாய்ப் பெருகி விரைந்து கதிவேக மாய் வருகிறது” எனஇப்பெரியவன் இவ்வாறுபேசியருளினன்.

இராமன் உள்ளம் தெளிந்து உறுதி பூண ஒள்ளிய தெள் ளிய உணர்வு மொழிகள் தெளிவா நேரே ஒளிவீசி வந்துள்ளன.

பிள்ளைச்சொற் கிளிய ளைப் பிரிவுற லுற்ற பெற்றி
தள்ளுற்ற அறமும் தேவர்துயரமும் தந்ததேயால்
கள்ளப்போர் அரக்கர் என்னும் களையினைக்களைந்து வாழ்தி
புள்ளிற்கும் புலனில் பேய்க்கும் தாய்அன்ன புலவுவேலோய்!

புள்ளரசன் இப்படிச் சொல்லிமுடித்து முடிந்து போனன் இராமன் பரிதாபமாய்ப் பரிந்து அழுதான்; பின்பு இவனுடைய உடலைத் தகனம் செய்து முடித்தான். ஒரு தந்தைக்கு மைந்தன் செய்யும் கருமங்களை அத்தரும வீரன் உரிமையோடு புரிந்தான். ஒரு பதிவிரதையைப் பாதுகாக்க மூண்டு போராடி மாண்டு போனமையால் இவனது வீரமரணம் யாண்டும் மேன்மையா எவ்வழியும் திவ்விய நிலையில் வியந்து புகழ விளங்கி நின்றது.

தூய்மையன்.
வாய்மையன்.
மறுவிலன்.
மதியின் கூர்மையன்.
மந்திரத்து அறிஞன்.
இருங்கலை துணிந்த கேள்வியன்.
அருணன் செம்மல்.
மின்னென விளங்கும் வீரத் துண்டத்தன்.
பொன்னெடுங்குன்றம் வானின் வருவதேபோலும் மெய்யன்.
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினன்.
கந்தரக் கைலையை நிகர்க்கும் காட்சியான்.
புள்ளின் வேந்தன்.
விண்ணில் பொலிகின்றதோர் வெண்ணிற மேகம்.
இராவணன் வில்லைப் பல்லால் பறித்தான்.
தாளால் இறுத்தான்.
இன்னு உயிர்ப்பான் இருவரையும் நோக்கினன்.
ஏழுலகும் பெற்றனனே ஒத்தான்.
மூக்கினல் உச்சி முறைமுறையே மோக்கின்ருன்.
உரைத்திலன் உயிரும் தீர்ந்தான்.
பூதங்கள் விளியுநாளும் போக்கிலா உலகம் புக்கான்.

இந்தக் குறிப்பு மொழிகள் சடாயுவினுடைய பிறப்பு இருப்பு சிறப்பு செய்திறம் முதலிய நிலைகளை நேரே தெரிய நேர்ந்துள்ளன. தன்னுடைய பெரிய தந்தை எனக் கருதி உருகி இராமபிரான் இத்தரும வீரனுக்குக் கருமம் செய்துள்ளமையால் வைணவர்கள் பெரிய திருவடி என்று உரிமையோடு இப் பெரியவனைப் போற்றிப் புகழ்ந்து புனிதமா ஏத்தி வருகின்றனர்.

சவரி.

சவரி என்பவள் ஒரு தவமுது மகள். அரிய விரத நியமங்கள் உடையவள். மதங்க முனிவருடைய உபதேசங்களைக் கேட்டு உள்ளம் தெளிந்தவள். துறவற நிலையை மருவி ஞான சீலங்கள் தோய்ந்து ருசியமூக மலைச் சாரலில் தனியே தவக்குடிசையில் அமர்ந்திருந்தாள். ஆன்ம தத்துவங்களைத்தெளிவா அறிந்து யோக சித்தியில் உயர்ந்திருந்த இவள் இராமன் வனவாசமாய்

வந்துள்ளதை உணர்ந்து உளம்மிக உவந்தாள். அந்தப் புண்ணிய மூர்த்தியை நேரே காண வேண்டும் என்று கருதி வேணவா வோடு எதிர்பார்த்திருந்தாள். சுவை நிறைந்த இனிய பல கனி களைத் தொகுத்து வைத்து இராம நாமத்தை நாளும் ஓதி ஓதி உள்ளம் உருகிப் பரமபத்தியோடு பெருகி வந்தாள். இராமன் கவந்த வனத்தைக் கடந்து தென்திசை நோக்கி வருங்கால் இவ ளுடைய ஆசிரமத்தை அடைந்தான். அந்த அழகனைக் கண்ட வுடனே இவள் உழுவலன்பால் உருகித்தொழுது உவந்து உப சரித்தாள். இனிது பேணி வைத்திருந்த மதுரமான கனிகளை வாழையிலையில் வகைவகையா வைத்து உண்ணும்படி உரிமை யோடு வேண்டினுள். தன் தம்பியுடன் அந்த நம்பி இந்த அன்பின் விருந்தை அருந்தி இன்பம் மீதூர்ந்தான். மறுநாள் காலையில் புறப்பட நேர்ந்தான்; மேலே செல்லவுரிய வழி வகை களை எல்லாம் அக் குலமகனுக்கு இத் தவமகள் தெளிவாகச் சொன்னுள். தாய்மை அன்போடு இம்முதுமகள் மொழிந்ததும் அம் மதிமான் கேட்டதும் விநய விவேகங்களாய் விளங்கி நின்றன. விழுமிய நிலையினன் வழி வினவி அறிந்தான்.

விட்டினுக்கு அமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டுறும் அறிஞர் என்ன அன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டனன் என்ப மன்னே கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான்.

(இராமா, சவரி, 7)

சவரி இராமனுக்குக் காட்டில் வழிகாட்டியதைக் குறித்து இப் பாட்டு வந்துள்ளது. வழி கேட்டவனையும் அதனைத் தெளி வாகச் சொன்னவளையும் கவி இன்னவாறு நன்னயமாக் காட்டி யிருக்கிறார். காட்சி கருதிக் காணவுரியதாய் மாட்சி மருவியுளது.

பிறவித் துன்பங்கள் நீங்கிப் பேரின்பவீட்டை அடைதற்கு ஒரு தத்துவ ஞானி தன்பால் அன்பாய் வந்தடைந்த ஓர் உத்தம பக்குவனுக்கு உறுதி நெறிகளை உபதேசித்ததுபோல் இந்தக் கிழவி அந்தக் குமரனுக்கு வழிகளை விளக்கியுள்ளாள். செவி சாய்த்துக் கேட்டவன் தேவரும் காண முடியாத திவ்விய நிலையினன். அரிய தவம் புரிந்த பெரிய ஞானயோகிகள் தம் மெய்யுணர்வால் பருகி மகிழும் அமுதின் சுவையாயுள்ளவன். அத்தகைய பரமபதநாதன் மனித வுருவில் மருவி வந்துள்ளமை

யால் இத்தகைய வித்தக நாடகம் கண்டு இனிது நடந்துளது. தம் காவிய நாயகனை நம் கவிஞர் பெருமான் காட்டி வருகிற காட்சி திவ்விய மாட்சிகளோடு அரிய அறிவின் சுவைகளை ஊட்டி வருகிறது. உண்டு வருபவர் ஒளி மிகுந்து வருகின்றார்.

அன்னவள் கழறிற்று எல்லாம் கேட்டனன்.

சொன்ன சவரியின் தலைமையும், கேட்ட இராமன் நிலைமையும் நாம் நாட்டமாய் நாடி அறிய இங்ஙனம் இது இசைந்துளது. குறிப்பு மொழிகள் கூர்ந்த சிந்தனைகளை யுடையன.

அன்னவள் என்று சுட்டியது அந்தப் பாட்டியின் பான்மை மேன்மைகளை எல்லாம் உய்த்து உணர. அரிய தவம் உடையவள்; பெரிய யோகசித்தி வாய்ந்தவள்; சீவ தயை உள்ளவள்; உலக பந்தங்கள் யாவும் துறந்து உயர்பரனையே சிந்தித்திருப்பவள்; இராமனை நேரே காண அவாவி நாளும் வழி மேல் விழி வைத்து வந்தவள். அவனைக் கண்டதும் உழுவலன்போடு உருகித்தொழுது இனிய கனிகளை அவன் இனிது அருந்தி மகிழ விருந்து புரிந்தவள்; அருந்தவர்களும் பெருந்தகையள் எனப் பேணும் நிலையினள் என இன்னவாறான உண்மைகளை எல்லாம் ஒருங்கே ஓர்ந்து தெளிய அன்னவள் என்று நன்னயமா நவின்றார். கழறின என்றது, கடினமான கானக வழிகளை மானவீரன் எளிது காண உரைத்த இயல்பு தெரிய நின்றது.

காகுத்தன் காது குளிர ஆவலோடு கேட்டான்.

இக் கிழவி வழி கூற ஆர்வமாக் கேட்ட அக் குமரன் இத்தகையவன் என வித்தக விநோதமாக் கவி விளக்கியருளினார்.

கேள்வியால் செவிகள் முற்றும் தோட்டவர்
உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவை.

இராமபிரானை உண்மையா உணர்ந்து தெளியுமாறு உணர்த்தியிருக்கும் இதன் சுவையை நுனித்து நோக்கி நுகர்பவர் இனித்த உணர்வின் சுவையுள் திளைத்து மகிழ்வர். கேள்வியால் உயர்ந்த ஞானிகளின் தெளிந்த அறிவின் சுவையாய் உள்ளவன் காட்டு வேட்டுவச்சி பேச்சைக் கவனமாக் கேட்டு மகிழ்ந்தான்.

சவரர் என்னும் ஒருவகை வேடுவர் மரபில் பிறந்தவள் ஆதலால் சவரி என்று இத்தவ முதுமகளுக்குப் பெயர் அமைந்

தது. சபரி என வடமொழியாளர் வழங்கி வருவர். இவளுடைய தவமும் தூய்மையும் தாய்மை அன்பும் வாய்மை தோய்ந்து வந்துள்ளன. பெயர்க்குறிப்புகள்பெருமைகளைவிளக்கிநின்றன.

தாயினும் உயிர்க்கு நல்கும் சவரி.
தன்னையே நினைந்து நோற்கும் சவரி.
அருந்தவத்து அரசி.
வினையறு நோன்பினள்.
மையறு தவத்தின் வந்த சவரி.
பெற்ற யோகத்தின் பெற்றியால்
தன்உடல் துறந்து தனிமை சார்ந்தாள்.

இன்னவாறு இவளது சீவியம் காவியத்தில் குறிக்கப் பெற்றுள்ளது. உத்தம பத்திக்கு உயர்ந்த சான்றுயுள்ளாள்.

இத்தவமகள் குறித்தபடியே தம்பியோடு இராமன் வழி நடந்து போனான் இவளுடைய அன்பும் அமைதியும் அருந்தவ நீர்மையும் அந்த நம்பி உள்ளத்தில் நன்கு பதிந்து நின்றன.

அனுமான்.

அனுமான் அதிசய மதிமான். வானரகுலத் தோன்றல். அஞ்சனாதேவி வயிற்றில் பிறந்தவன். தந்தை பெயர் கேசரி. ஈசன் திருவருளை இவன் இனிது அடைந்தவன்; அரிய பல கலைகளைத் தெளிவா அறிந்தவன். கல்வியறிவு காரிய வீரியம் சொல் வன்மை மல்வலி வெல்போர் வீரம் முதலிய எல்லா நிலைகளிலும் யாரும் தனக்கு நிகரில்லாதவன். இவனுடைய சொல்லும் செயலும் எங்கும் வெல்லும் திறல்களுடையன. திவ்விய நிலைமைகள் எவ்வழியும் இவனிடம் செவ்வையாய் விளங்கியுள்ளன. திருமால் இராமனாய் அவதரிக்க நேர்ந்தபோது வாயுபகவான் அனுமானாய் அமைந்து வந்துள்ளான். காற்றின் சேய், காலின் மாமதலை, மாருதி என மருவியுள்ள பெயர்கள் இவனுடைய அவதார மருமத்தை விளக்கி நிற்கின்றன. தம்பி பின் தொடர்ந்து வர மதங்கமலைச் சாரலில் இராமன் நடந்து வரும்போதுதான் அந்த உத்தம வீரனை இந்த வித்தகன் நேரே காண நேர்ந்தான். கண்டவுடனே உள்ளே உழுவலன்பு ஓங்கி நின்றது; உள்ளமும் உயிரும் உருகி மகிழ ஆனந்த பரவசனாய் அயர்ந்து நின்றான். பின்பு நேரே வந்து வணங்கினான். நிலைமைகளை எல்லாம் வினவி

யறிந்தான். அறிந்ததும் சுக்கிரீவனை விரைந்து அழைத்து வந்து சிநேகம் செய்து வைத்தான். அதன்பின் அந்த வானர வேந்தன் இந்த வீர வேந்தனை அழைத்துக் கொண்டுபோய்த் தன் வீட்டில் சிறந்த விருந்து புரிந்தான். விருந்து அருந்தி உல்லாசமாய் அமர்ந் திருக்கும்போது கவியரசனுடைய பரிதாப நிலையை இராமபிரா னிடம் அனுமான் அதிவிநயமாய் இனிது கூறினன்: "இராமநாதா! உங்கள் அருளை அடைந்துள்ள எங்கள் குலநாதன் பரிதாபநிலையில் மறுகியிருக்கிருர்; எல்லையில்லாத அல்லல்கள் உழந்து இல்லையும் இழந்து ஈண்டு இங்ஙனம் ஒதுங்கியுள்ளார்; அண்ணனை வாலி யால் இந்த அவலங்கள் விளைந்துள்ளன அவன் அதிசய வீரன்; அகிலமும் வெல்ல வல்லவன்; அவன் எதிரே காற்றும் ஓடாது; கதிரும் காயாது; தீயும் தீயாது; கடலும் அசையாது; கூற்றுவ னும் அஞ்சுவன். அவனுடைய பெயரைக் கேட்டால் இலங்கை வேந்தன் கலங்கி ஒடுங்குவான்; வாலி வால் சிறிது அசைந்தால் இராவணனுடைய கோலும் குடையும் அடியோடு அழிந்து ஒழிந்து போம் என வானும் வையமும் வியந்து புகழ அவன் உயர்ந்து வாழ்ந்து வருகிருன். இவ்வாறு பேரும் சீரும் பெற்றுள்ள அத் தகைய அற்புத வீரன் வெம்பி வெகுண்டு தம்பி என்றும் பாரா மல் இவனைக் கொன்று தொலைக்க மூண்டு கொடுந்துயரங்கள் செய்து முடிவில் இவனுடைய மனைவியையும் பறித்துக்கொண்டு வெளியே விரட்டி விட்டான். பழியோடு ஒதுங்கி அழிதுயருடன் இங்கே இவர் அலமந்திருக்கிருர். தொடர்ந்துள்ள துயர இருள் எல்லாம் அடியோடு நீங்கி ஒழிய ஒரு வீரசோதி ஈண்டு வில்லும் கையுமாய் எழுந்தருளியுள்ளது. துன்பம் யாவும் நீங்கி இனி மேல் நாங்கள் இன்பமாய் இனிது வாழ்ந்து வருவோம்" என்று அனுமான் இவ்வாறு இனிய வினயமாய்ச் சொல்லி முடித்தான்.

தம்பியின் மனைவியைத் தமையன் கவர்ந்து கொண்டான் என்றது இராமனுக்குக் கொடிய கோபத்தை மூட்டியது. மூட்டவே யாவரையும் விரைந்து அழைத்துக் கொண்டு கிட்கிந் தாபுரிக்குப் போய் வாலியை வென்று வீழ்த்திச் சுக்கிரீவனுக்கு அரசுமுடி சூட்டியருளினன். அனுமானுடைய மதியூகமான சொல் இராமனை வசப்படுத்தி அதிசய விளைவுகளை ஆக்கியுளது.

சொல்வலி அனுமன்வாய் சூழ்ந்த தாய்மொழி
வெல்வலி வாலியை விரைந்து வீட்டிமேல்

எல்வழி மணிமுடி இரவி காதலன்
தொல்வழி முடியினில் சூட்டி நின்றதே.

இன்னவாறு அரசுரிமையை அடைந்த வானர வேந்தன் எழுபது வெள்ளம் சேனைகளோடு இராமனுக்கு எவ்வழியும் இனிய உதவியாய்த் துணைபுரிய நேர்ந்தான். சீதையைத் தேட இரண்டு வெள்ள வானரங்களோடு தென்திசை நோக்கிச் சென்ற அனுமான் மகேந்திர மலையை அடைந்தான். அங்கே மறுகி மயங்கிய வானரங்களையெல்லாம் உறுதிகூறி நிறுத்திவிட்டு வானவீதி வழியே வாவிச் சென்று வாரி கடந்து இலங்கை புகுந்து சீதையைக் கண்டு சிந்தையைத் தேற்றி அசோகவனத்தை அழித்து அரக்கர் படைகளை வதைத்து அருந்திறலாண்மைகள் புரிந்து இறுதியில் இராவணனை நேரே கண்டு உறுதிமொழிகள் பல கூறினன். தூதுவன் என்ற முறையில் அன்று அவன் எதிரே இவன் கூறிய உரைகள் நீதிமொழிகளாய் நிலவி நின்றன: "நிருதர்குல திலகமே! நீ அரிய பல வரபலங்கள் உடையவன்; அதிசய நிலையினன்; தேவர் யாவரும் ஏவல் புரிய மூவுலகங்களையும் ஏக போகமாய் ஆளுகின்றாய்! அரிய பெரிய இந்த ஆட்சியும் மாட்சியும் அருந்தவத்தின் பெரும்பயனாய்க் கிடைத்துள்ளன. திவ்விய இன்ப வாழ்வில் செழித்துத் திளைத்து வருகிற நீ அவ்வளவும் நாசமாய் அழிந்து ஒழியும்படி நீசமான பழியை நீ செய்திருக்கிறாய்! ஒரு உத்தம பத்தினியைப் பித்தனாய் விழைந்து நிற்பது பெரிய பிழை; நெடிய பழி; கொடிய அழிவு; உன் குடியும் குலமும் அடியோடு அழிந்துபோகும் வழியில் நீ இழிந்து நிற்கிறாய்; அல்லல்களான அந்த அழிவுகள் நேராமல் சுகமா வாழ விரும்பின் நான் சொல்லுகிற நல்ல வழியை நாடி நடந்து கொள்; சிறையில் வைத்துள்ள அந்தக் கற்பரசியை உரியவனிடம் விரைவில் கொடுத்துவிடு; விடாதிருந்தால் நீயும் நின்கிளையும் நிருதர்குலம் முழுவதும் அடியோடு அழிந்து ஒழிய வழியாம்; இதனைத்தெளிந்து தேறி ஒல்லையில்உய்திதேடுக; இல்லையேல் கோதண்டவீரனுடைய வில்லாடலால் எல்லோரும் நாசம் அடைந்து சாவதை நேரே காண நேர்வாய்; நீயும் செத்து ஒழிவாய்; உய்த்துணர்ந்து உறுதியை ஓர்ந்துகொள்!" என்று உரைத்தருளினன். உரைத்தும் அவன் உள்ளம் திருந்தாமையால் எள்ளி இகழ்ந்து துள்ளி எழுந்து இலங்காபுரி யாவும் தீயால் எரிந்து

கரிந்து அழிந்துபோகச் செய்து விரைந்து மீண்டுவந்து இராமனை வணங்கிச் சீதையைக் கண்டு வந்த செய்திகளைச் சிந்தை தெளியச் சொல்லினன். சொல்லவே எழுபது வெள்ளம் சேனைகளோடு இராமன் இலங்கையை அடைந்து யாண்டும் வளைந்து அடுபோர் ஆற்றினன். உக்கிரவீரமான அந்தப் போராடல்களில் அனுமான் செய்த அடலாண்மைகளும் அதிசய உதவிகளும் அளவிடலரியன. இந்திரசித்து ஏவிய பிரமாத்திரத்தால் இலக்குவன் மாண்டு விழுந்தபொழுது இராமன் முதல் யாவரும் அழுது பதைத்து அலமந்து துடித்தனர். போரில் அடிபட்டு மயங்கிக் கிடந்த இவன் மயக்கம் தெளிந்ததும் விரைந்து வானவீதி வழியே பாய்ந்து போய்ச் சஞ்சீவி மருந்தைக் கொண்டு வந்து யாவரையும் எழுப்பி யருளினன். தம்பி முதல் எல்லாரும் சுகமாய் எழுந்ததை அறிந்ததும் இராமன் இவனை மார்போடு அழுந்தத் தழுவிக் கொண்டு உழுவலன்பு பெருகி விரிய உளம் உருகி உவந்து புகழ்ந்தான். அந்தப் புகழ்ச்சி மொழிகள் அவ்வீர வள்ளலின் உள்ளக் களிப்புகளை உலகம் அறிய வெளிப்படுத்தி நின்றன: "ஆருயிர்த் துணையான அனும! முன்பு நானும் என் தம்பியும் திருவயோத்தியில் தசரத மன்னன் மக்களாய்ப் பிறந்தோம்; வளர்ந்து வாழ்ந்து வந்தோம்; ஈண்டு மாண்டு வீழ்ந்தோம்; இன்று இந்த இலங்கைப் போர்க்களத்தில் உன்னிடமிருந்து பிறந்திருக்கிறோம். இனி உன் பிள்ளைகள் என்றே எங்களை உலகம் உவந்து சொல்லி வரும்" என்று இராமபிரான் அன்பின் பரவசமாய்ச் சொல்லியபொழுது அனுமான் கண்ணீர் சொரிந்து கரைந்து நின்றான். பின்னரும் போரில் பேருதவிகள் புரிந்தான். சீதையைச் சிறைமீட்டி இராமன் மீண்டு வருங்கால் பரத்துவாசர் ஆசிரமத்தில் சிறிது தங்க நேர்ந்தான். அண்ணனை எதிர்நோக்கி ஆவலோடு மறுகியிருக்கிற பரதனுக்கு அவ்வரதன் வரவை முன்னதாக அறிவிக்க எண்ணி அனுமான் ஆகாய மார்க்கமாய் அயோத்திக்குத் தாவி வந்தான். அவ்வாறு வருங்கால் பரதன் தீயில் பாய்ந்து மாய்ந்து போக மூண்டு வலம் வருவதைக் கண்டான்; காணவே நேரே விரைந்து நெருப்பில் பாய்ந்து எரியைக் கரி ஆக்கி அவனை உரிமையோடு ஆதரித்து நிறுத்தி அண்ணன் வருவதை உரைத்தருளினன். அந்த விரத சீலன் இவனைத் தழுவித் தொழுது "எனது குடியும் குலமும் இனிது

வாழ வந்த புனித தெய்வமே!" என்று உழுவலன்போடு உவந்து போற்றினன். இராமன் திருவயோத்தியை அடைந்து மணிமுடி புனைந்து அரியணையில் அமர்ந்தபோது அப்பெருமானுடைய திருவடிகளை வருடி இவன் பெருமகிழ்வடைந்தான். என் தலையினால் தொழும் தன்மையோன் என்று சீதை அனுமானை இவ்வாறு உவந்து கூறியிருக்கிருள். யாவரும் இவனை அதிசய மதியூகி என்றுதுதிசெய்து எவ்வழியும்திவ்வியநிலையில்போற்றியுள்ளனர்.

இராம காவியத்துள் அனுமனது சீவிய சரித்திரம் யாண்டும் ஒவிய வுருவங்களாய்த் தேவியல்புகளோடு சிறந்து திகழ்கின்றன. இவனுடைய நிலைமை தலைமை நீர்மை சீர்மைகளைப் பலரும் வியந்து புகழ்ந்து ஆர்வம் மீதூர்ந்து கூறியுள்ளனர். அயலே சில குறிப்புகள் ஈண்டு இயல்பா அறிய வருகின்றன.

அஞ்சனைக்கு ஒரு சிறுவன்.
காற்றின் வேந்தன் மைந்தன்.
தாழ்சடைக் கடவுள்என உதவினன்.
தன் பெருங்குணத்தால் ஒப்பு இலாதான்.
செவ்வழி உள்ளத்தான்.
இசை சுமந்து எழுந்த தோளான்.
ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் வல்லான்.
சொல்லின் செல்வன்.
இவன் கல்லாத கலைகள் இல்லை
வேதக் கடல்.
விரிஞ்சனே? விடை வல்லானே?
இவன் இவ்வுலகுக்கெல்லாம் ஆணி.
சுருதியின் தொகுதி யாவும் அறிந்தவன்.
இவன் மொழிக்கு எதிர்மொழிய வல்லார் இலர்.
மெய்ம்மையின் வேலி.
பாழியந் தடந்தோள் வீர மாருதி.
தருமத்தின் தனிமை தீர்ப்பான்.
கதிரோன் சொல்லப் படித்தனன்.
மறைகளாலும் ஞானத்தாலும் கோட்படாப்பதம்.
குரக்குச் சீயம்.

நெடும் புகழினன்.
மாமதியினன்
மரபுணர்ந்து உதவுவான்.
பொன்னையே பொருவுவான்.
புனையும் வாகையான்.
பொய்யிலாதவன்.
இராமன் செங்கைத் தனு.
பொய்த்தலில் உள்ளத்து அன்பு பொழிகின்றவன்
பெரும்பொறை அறிவினோன்.
தருமம் தானே போன்றவன்.
வன்துணை வயிரத்திண்டோள் மாருதி.
அந்தமில் கேள்வியான்.
நீதி வல்லோன்.
புனையும்வார் கழலினன்.
பொன்னெடுங் கிரிநிகர் பொலிந்த தோளினன்.
வெவ்விழைவில் சிந்தைநெடு மாருதி.
உயிர் உயிர்க்க அருள் செய்த பெரியோன்.
மேலை விரிஞ்சன் வீயினும் வீயான்.
நூலை நயந்து நுண்ணிது உணர்ந்தான்.
காலனும் அஞ்சும் காய்சின மொய்ம்பன்.
சூரியனைச் சென்று ஒண்கலையகத்துத் தொட வல்லான்.
நீதியில் நின்றான்; வாய்மை அமைந்தான்.
நினைவாலும் மாதர்நலம் பேணாது வளர்ந்தான்.
மடங்கல் முனிந்தாலன்ன வலத்தான்.
வேண்டியபோதே வேண்டியது உய்க்கும் வினைவல்லான்.
வாசவன் முதலோர் வந்து மலையினும் இலங்கைவாழும்
நீசரை எல்லாம் நூறி நினைத்தது முடிப்பன்.
மாயோன் வடிவின் ஓங்கினன்.
திருவடி என்னும் தன்மை தெரிய நின்றான்.
வித்தக வீரன்.
வேகத் தாதை அனையன்.
இசையுடை அண்ணல்.
சுருதி அன்ன சேவகன்.

கைலையங்கிரியை ஒத்தான்.
இலங்கை செல்லும் பரிதிவானவன்.
உவாமுழு மதி.
அழுங்காமனத்து அண்ணல்.
நல்லறிவாளன்.
கதி நினைப்பின் நெடிது பூண்டான்.
விசும்பிடைச் செல்லும் வீரன்.
தொழுந்தாள் வீரன் தூதுவன்.
குன்றென அயோத்திவேந்தன் புகழ்எனக் குவவுத்தோளான்.
கருங்கடல் கடந்த காலான்.
செவிக்குத் தேன்என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்.
இராகவன் புகழ்எனும் நலத்தான்.
புகைபுகா வாயிலும் புகுவான்.
இராகவன் கழல்எனப் புகழோன்.
கனிக்கு அடற்கதிர் தொடர்ந்தவன்.
நாயகன்புகழ் நடந்த பேருலகெலாம் நடந்தான்.
வினைப்பகையை வென்றான்.
விழைந்த வெவ்வினை வேரற வீசினான்.
நினைவின் எய்தினன் நீதியின் எய்தினான்.
இராவணற்கு எடுப்பரும் கிரிஎனத் திரள் தோளான்.
வேலை கடவாத கடல்.
இராகவன் தூதன்.
ஊழிதோறும் புதிதுறும் கீர்த்தியான்.
நெறிநின்று பொறிகள் ஐந்தும் வென்றவன்.
நன்றுணர் உரையன்; தூயன்.
இரக்கமே யாக வந்தான்.
ஊழியின் இறுதிக்காலத்து உருத்திர மூர்த்தி.
வீரருள் வீரன்.
அஞ்சனைச் சிங்கம்.
ஐம்புலன் வென்றான்.
உலகுஎழ் தேயினும் தன்புகழ் தேயாதான்.
ஆண்டகை வனைகழல் அனுமன்.
சிவன்எனச் செங்கணான் என்னும் சேவகன்.

உன்னரும் குணத்தினன்.
நேரிலா அறிவன்.
நுணங்கிய கேள்வியான்.
பேரறிவாளன்.
ஓதநீர் கடந்து பகை கடிந்து
உலகை உய்யக் கொண்டான்.
காலினில் கருங்கடல் கடந்த காற்று.
பாக்கியம் உருக்கொண்டது.
தன்னின் நேர்பிறர் தானலாது இல்லவன்.
இவன் முக்கட் புனிதன்.
தருமம் போல்வான்.
இணையிலாதான்.
உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான்.
உலகம் மூன்றும் தலையின்மேல் கொள்ளும் தூயான்.
தருமம் காப்பான்.

அனுமானைக் குறித்து இன்னவாறு சிறப்புரைகள் வந்துள்ளமையால் இம் மதிமானுடைய மகிமை மாண்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். இந்த மேதையின் அதிசய நிலைகளையும் விதி நியமங்களையும் அகத்திய முனிவர் இராமபிரானிடம் மகத்தவமாக் கூறியிருக்கிறார். அயலே வருவன காணுக.

வேதம்ஒரு நாலுடன் விளங்கிய சடங்கமும் விரிந்த கலையும்
ஓதநில வீதியிசை ஏழுபரி பூணருணன் ஊர விரைதேர்
மீதுசெலும் வெங்கதிரவன்றனொடு அயிந்திரவி பாகரணமும்
ஓதிஒரு நாளினில் உணர்ந்தனன்இம் மாருதி உயர்ந்த புகழோய்!

தண்ணளியி னல்மிகு தயாவுடைமையால் வரு தருக்கறுதலால்
எண்ணுகரு மங்களிவை யாவும் இடையூறற இயற்றும் இயல்பால்
நண்ணலரை விண்ணவர்கள் ஆயினும் நடுக்குறுமிடுக்குடைமையால்
மண்ணுலகில் விண்ணுலகில் மாருதியை ஒக்குமவர்யாரும் இலையால்.

அறந்தலை எடுத்தபுவி வானவர்கள் ஆனவர்கள் ஆடினர்கள்தீ
மறந்தலை யிறக்கியது வாலிமுத லானவர்கள் வாம நயனம்
சிறந்ததிரள் தோள்புருவம் மார்பிடை துடித்தன சிறந்தபுகழான்
நிறைந்தகுண மாருதி நினைத்திரு வடித்தொழுது நின்ற பொழுதே.
(உத்தரகாண்டம்)

அனுமானுடைய கலைஞானங்களையும், குண நீர்மைகளையும் அருந்திறலாண்மைகளையும், அற்புத ஆற்றல்களையும் முனிவர்

இவ்வாறு இனிது விளக்கியுள்ளார். வால்மீகி முதலிய பெரிய தவசிகளும் வடமொழியில் இம்மதிமானைத் துதித்திருக்கின்றனர்.

மநோஜவம் மாருத துல்ய வேகம்
ஜிதேந்திரியம் புத்திமதாம் வரிஷ்டம்
வாதாத்மஜம் வாநரயூத முக்யம்
ஸ்ரீராம தூதம் சிரசா நமாமி. (வால்மீகி)

மநமும் வாயுவும் எனக் கதிவேகம் உடையவரும், இந்திரியங்களை வென்றவரும், சிறந்த மதிமானும், வாயு பகவான் சேயும், வானரகுல திலகமும் இராமபிரான் தூதனும் ஆகிய அனுமானை நான் நாளும் தலைவணங்கித் தொழுகிறேன் என ஆரிய முனிவர் இவ்வாறு ஆர்வமாய்க் கூறியுள்ளார்

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தநம்
தத்ர தத்ர க்ருதம் அஸ்தகாஞ்சலிம்
பாஷ்ப வாரி பரிபூர்ண லோசநம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்.

எங்கே எங்கே இராமநாதன் சரிதம் நடக்கிறதோ அங்கெல்லாம் தலைமேல் கூப்பிய கைகளையுடையவராய் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அகம் உருகி நிற்பவரும், நிருதகுல காலரும் ஆகிய மாருதியை மாறு அன்போடு தொழுது வாழுங்கள் என உலக மக்களை நோக்கி இங்ஙனம் உறுதிநலங்களை உணர்த்தியிருக்கிறார். அஞ்சனைசேயைநெஞ்சில்நினைபவர்அதிசயமடைவர்.

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றுஆறாக ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்அவன் எம்மை அளித்துக் காப்பான்.

நிலம் நீர் தீ வளி வான் என்னும் ஐந்து அதிசய தேவதைகளும் அனுமானுக்கு உறவுரிமைகளாய் மருவியுள்ளமையை இனிது விளக்கி நம் கவிநாயகன் இக்கவிநாயகனை இவ்வண்ணம் துதித்திருக்கிறார். செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன் என்று அனுமானுக்குப் பெயர் சூட்டியிருப்பது சுவையை ஊட்டி நிற்கிறது. இராமபிரானுடைய அவதார தருமங்கள் இனிது நிறைவேற அனுமான் கரும வீரனாய்த் தோய்ந்திருப்பது கருதி யுணர வுரியது. இவனுடைய

செயல் இயல்கள் எவ்வழியும் உயர் நலங்களுடையனவாய் அதிசய நிலைகளில் துதிகொண்டு விதிமுறையே ஓங்கியுள்ளன.

அரியபெருங் கலைநிலையால் அருந்திறலால்
ஆண்மையினால் யாரும் யாதும்
தெரிவரிய சித்தியினால் சீராம
பத்தியினால் செருவில் மூண்டு
மருவலரைப் பொருதழிக்கும் மாட்சியினால்
காட்சியினால் மண்ணும் விண்ணும்
உரியஒரு தருமம்என உணர்ந்துதொழும்
அனுமானை உவந்து வாழ்வாம்.

அனுமனை நினைபவர் புனிதநிலையில் இனிது உயர்ந்து வருகிறார்.

சுக்கிரீவன்.

சுக்கிரீவன் மிக்க உக்கிர வீரன். சூரியன் அமிசம் இவனிடம் தோய்ந்துள்ளது. கதிரோன் சேய், இரவியின் புதல்வன் என இவனுக்கு இசைந்துள்ள பெயர்களால் இவனுடைய அருந்திறலாண்மைகளையும் பெருந்தகைமைகளையும் உணர்ந்து கொள்ளுகிறோம். அண்ணனான வாலி வானரகுல வேந்தனாய் விளங்கியிருந்தபோது அவனுக்கு இவன் இளவரசனாய் இணங்கியிருந்தான். பலவகையிலும் நலமாய்த் தலைமையனுக்குப் பணிந்து இவன் நடந்து வருங்கால் இடையே சிறிது இகல் விளைந்தது. இவன்பால் யாதொரு பிழையும் இல்லாதிருந்தும் அந்த அண்ணன் உள்ளம் திரிந்து உருத்து வெறுத்து அல்லல் பல செய்தான்; முடிவில் அவனிடமிருந்து இவன் தப்பிப் பிழைத்து மதங்கமலைச் சாரலில் ஒதுங்கியிருந்தான். இவனுடைய மனைவி பெயர் ருமை. நல்ல அழகி. அவளையும் வாலி கவர்ந்து கொண்டான். யாவும் இழந்து அவலநிலையில் இவன் வாழ்ந்து வந்தான்; அந்த நிலையிலேதான் இராமனை இவன் காண நேர்ந்தான். அந்த அரிய காட்சி பெரிய மாட்சியை அருளியது. அனுமானுடைய மதிமாண்பாலும் விதியின் விளைவாலும் அவ் வீர மூர்த்தியோடு இத்திறன் நண்பனாயினன். ஆகவே பகையை வென்று அரச பதவியை அடைந்தான். தனது சேனைகளோடு இராமனுக்கு எவ்வழியும் உதவிபுரிய நேர்ந்து யாண்டும் உரிமையோடு மூண்டு இவன் உழைத்து வந்தான், இவனுடைய உறவும் உறுதியும்

ஊழியமும் இராமனுக்குப் பெரிதும் இதமாய்ப் பெருமகிழ்வு தந்து வந்தன. கடல் கடந்து சென்று இலங்கை மேல் இவனுடைய படைகள் வந்து தங்கியபொழுது இராவணன் ஒரு கோபுரத்தின் மேல் நின்று இந்தச் சேனைகளைச் சிந்தை வியந்து நோக்கினன். அவனைக் கண்டதும் இவன் உள்ளத்தில் கோபம் மூண்டது. யாதும் கருதாமல் தன்னையும் மறந்து அதிவேகமாய் அவன் மேல் பாய்ந்தான்; பாயவே கதிவேகமாய்க் கடும்போர் மூண்டது. தன்னம் தனியே நேர்ந்து மல்லாடிய அந்தப் பொல்லாத போரில் இவன் அல்லல் பல அடைந்தான். வெள்ளியங்கிரியை வேரோடு எடுத்த அவ் வீரனும் உள்ளம் கலங்கி அயர இவன் உருத்து அமராடினன். முடிவில் அவனுடைய இரத்தின கிரீடங்கள் பத்தையும் பறித்துக் கொண்டு மீண்டான்.

பாரகம் சுமந்த பாபபின் பணுமணி பறிக்க வேண்டின்
வார்கழற் காலினாலே கல்லவல்லவனை முன்னாத்
தார்கெழு மௌலி பத்தின் தனிமணி வலிதில் தந்த
வீரதை விடைவ லோற்கும் முடியுமோ? வேறும் உண்டோ?
(இராமா, மகுடபங்கம் 40)

சுக்கிரீவன் இராவணனுடைய மகுடங்களைப் பறித்து வந்துள்ள வெற்றித்திறலை வியந்து வீடணன் இப்படிப் புகழ்ந்திருக்கிறான். பூமியைச் சுமந்துள்ள ஆதிசேடனுடைய முடிமணியைத் தன் காலால் கல்லிப் பறிக்க வல்லவன் என இலங்கை வேந்தனை அவன் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கவுரியது. அத்தகைய அதிசய ஆற்றலுடையவன் மணிமகுடங்களை இழந்து மறுகிப் போக இவன் வெற்றித் திறலுடன் மீண்டு வந்துள்ளான். வந்தும் இவன் உள்ளத்தில் வருத்தம் நிறைந்திருந்தது. "தேவியைக் கவர்ந்து போனவனுடைய ஆவியைக் கவர்ந்து வரவில்லையே! என் ஆண்டவனுக்கு வேண்டிய நல்ல ஊழியத்தை நான் செய்ய முடியாது போயதே!" என்று வெய்ய துயரோடு இவன் வெதும்பி யிருக்கிறான் உள்ளக் கவலை உரையில் வெளியாயது.

என்பகை தீர்த்து என் ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன்பகை உனக்குத் தந்தேன்; உயிர்சுமந்து உழலாநின்றேன்.

இராவணனைக் கொன்று மீளவில்லையே என்று இராமன் எதிரே நின்று இவ்வென்றி வீரன் இவ்வாறு மறுகியிருக்கிறான். நன்றியறிவோடு தன் கடமையைச் சரியாய்ச் செய்ய முடிய

வில்லை என்று சிந்தை நொந்துள்ளான்; அந்த உண்மையை இந்த உரைகள் உணர்த்தி நிற்கின்றன. பின்பு மூண்ட போர்களில் தன் படைகளை ஏவி நீண்ட திறலோடு யாண்டும் போராடி இவன் ஆதரவு புரிந்து வந்தான். தான் செய்து வருகிற காரியங்களைக் கடமை என்று கருதாமல் புனிதமான ஒரு தெய்வப் பணி என்றே எண்ணி மகிழ்ந்து எவ்வழியும் செவ்வையாய் இவன் சேவைகள் புரிந்தான். முன்னம் அல்லல் அடைந்தவன் ஆதலால் யார்க்கும் நல்லது செய்வதே நலம் என்று தெளிந்து யாண்டும் வினையாண்மைகளில் மூண்டுவிழைந்து விரைந்துசெய்துவந்தான்.

Doing good to others is not a duty. It is a jay, for it increases your own health and happiness. (Zoroaster)

"பிறர்க்கு நன்மை செய்வது கடமை அன்று; அது ஒரு மகிழ்ச்சி நிலை; சுகமும் இன்பமும் உன் வாழ்வில் பெருகிவர அது மருமமா உதவி யருளுகிறது" என ஸோராஸ்டர் என்னும் பாரசீக மகான் உபகாரநிலையின் நலனை இவ்வாறு கூறியிருக்கிறார்.

When you are good to others, you are best to yourself. (B. Franklin)

"பிறர்க்கு நீ நல்லவனாகும்பொழுது உனக்குள் நீ உயர்ந்த மகிமையாளனாய் ஒளிபெற்று நிற்கிறாய்" என இது உணர்த்தியுளது. மன்னுயிர்க்கு இதம் புரியத் தன் உயிர் உயர்கிறது.

இராமபிரானுக்கு ஆதரவாய் நின்று அரிய பல நன்மைகளைச் செய்து வந்தமையால் இவன் பெரிய புகழோடு பெருகி விளங்கினான். குன்று சூழ்வான் மகனோடும் அறுவர் ஆனோம் எனத் தன் உடன்பிறந்தவனாகச் சுக்கிரீவனை இராமன் இவ்வாறு உரிமையோடு தழுவியிருக்கிறான். இதனால் இவனுடைய விழுமிய மேன்மைகளும் கெழுமிய ஊதியங்களும் வெளியாயுள்ளன.

பரிதிச் செல்வன் செம்மல்.
இரவி காதலன்.
கதிரவன் சிறுவன்.
அரிகுலத்து அரசன்.
எழுபது வெள்ள யாக்கைக்கு ஓர் உயிர்.
கல்லினும் வலிய தோளான்.
செங்கதிர்ச் செல்வன்.

சூரியன் மைந்தன்.
கயிலை நின்றது என நின்றான்.
கவிக் குலத்து அரசன்.

இன்னவாறு சுக்கிரீவன் குறிக்கப் பெற்றுள்ளான்.

வாலி.

இவன் அதிசய நிலையினன்; எவ்வழியும் துதிமிகப் பெற்றவன். தேவராசனான இந்திரன் அமிசமாய் ருட்சரசு என்னும் வானர மங்கையிடம் பிறந்தவன். வெண்ணிற மேனியும், வாலில் திண்ணிய வலியும் உடையவன் ஆதலால் வாலி என இவன் மேவி நின்றான். மானம் வீரம் வண்மை ஞானம் முதலிய மேலான நிலைகளில் இவன் மேலோங்கி மேன்மையடைந்துள்ளான். சித்த யோகங்களில் தெளிந்த வித்தகன். கருதிய இடங்கள் எங்கணும் கதிவேகமாய்ச் செல்ல வல்லவன். வானவீதியில் உல்லாச விநோதமாய் விரைந்து உலாவி வருபவன். சிவபெருமான் பால் நிறைந்த பத்தியுடையவன். நான்கு திசைகளிலும் உள்ள கடல்களில் சென்று நாளும் ஈசனை நேசமாய்ப் பூசித்து வருபவன். எதிர்ந்தவர் எவராயினும் அவருடைய வலிமைகள் தன்பால் வந்துசேர வரபலம் பெற்றவன். உடல் வலியிலும் உள்ளத்திண்மையிலும் உறுதி ஊக்கங்களிலும் பொருதிறல்களிலும் எவரும் தனக்கு நிகர் இல்லாதவன். தான் புரிந்த அருந்தவத்தின் பெரும் பயனால் பெருந்திருவடைந்து பேரரசனாய் உயர்ந்து திசைகள்தோறும் சென்று திக்கு விசயங்கள் செய்து தேவர் முதல் யாவரையும் வேறு வென்று சிறந்த வெற்றி வீரனாய் விளங்கியிருந்த இராவணன் எவ்வுலகிலும் எனக்குத் தெவ்வில்லை என்று செருக்கி நின்றான். அந்த அகந்தை நிலையை அறிந்த நாரதர் ஒருநாள் இலங்கை சென்று அதிவிநயமாய் அவனிடம் கலகத்தை மூட்டி விட்டார். "வாலி என்று ஒரு வானர குலவீரன் கிட்கிந்தாபுரியில் வேந்தர் வேந்தனாய் விளங்கியுள்ளான்; அவனை வெல்ல வல்லவர் மூவுலகிலும் இல்லைஎன்று தேவர் முதல் யாவரும் கூறிவருகின்றனர்" என்று குறிப்போடு புகழ்ந்து போற்றி அவர் அகன்று போனார். அவ்வாறு அவர் போகவே எவ்வகையிலாவது இவனை வென்று தொலைக்கவேண்டும் என்று அவன் கன்றி விரைந்தான். சந்திரகாசம் என்னும்

அதிசய் வாள் ஒன்று சந்திரசேகரனுன சிவபெருமான் அருளால் பெற்றிருந்தான் ஆதலால் அந்தத் திவ்விய வாளோடு தேர் ஏறி நேரே கிட்கிந்தைக்கு வந்தான். அரண்மனைக்குள் புகுந்தான். அதிசய ஆடம்பரங்களோடு வந்துள்ள அவனைக் கண்டதும் வாலியின் மனைவி நேரே வந்து "நீர் யார்? வந்த காரியம் யாது?" என்று விநயமா வினவினள். "வாலியோடு வாளமர் புரிய வந்துள்ளேன்; அவனை ஒல்லையில் வரச் சொல்லு" என்று சொல்லினன். அச் சொல்லைக் கேட்ட தாரை மெல்லச் சிரித்தாள். "உனக்கு ஒரு காலனைத் தேடி இக் கோலமாய் வந்துள்ளாய்; வாலியோடு போர் புரிய நேர்ந்தவர் மனைவிகள் தாலிகளை இழந்து விடுவார் என்று ஞாலம் கூறிவரும் முதுமொழியை நீ கேட்டது இல்லை போலும்? நீ சாக விரும்பினல் அவரிடம் விரைந்து போ; தென்திசையிலுள்ள சாகரத்தில் அவர் இதுபொழுது சிவபூசை செய்து கொண்டிருப்பார்; கண்டு தொழுது கால் வாங்கிப் போய்விடு; மூண்டு பொர நேர்ந்தால் மாண்டு பட நேர்வாய்!" என்று இவ்வாறு அப்பெண்ணரசி உண்மையை உரைத்தாள்.

வாலி தன்னெடும் வாளமர் செய்திடக்
கோலி வந்தனன் என்றவன் கூறிடக்
காலனேடு கனன்று பிழைக்கவோ?
சால நன்றெனத் தாரை இயம்புவாள். [1]

துந்து மிப்பெயரான் முதல் துன்னலார்
வந்து வாலி யுடன்மலைந்தோர் உடற்
பந்தம் மேவிய பல்லெலும் பின்குவை
இந்த மாமலை என்றுகொள் ஏழைநீ. (2

ஆதலால் அடல் வாலியொடும் பொரின்
சாதல் திண்ணம்நீ சாகரம் நான்கினும்
தீதி லாச்சிவ பூசனை செய்திடப்
பாய்தல் செய்யும பதறலை என்றனள். (3)

தரிக்கி லாய்எனின தென்திசைச் சாகரத்து
அரக்க ஏகுதியால் எனத் தாரையீது
உரைக்க ஏகி உயர்சிவ பூசையில்
இருக்கும் வாலியை எய்தினன் நோக்கினன். (4)

(உத்தர காண்டம்)

இலங்கை வேந்தன் வாலியோடு போராட வந்ததும், தாரை கூறியதும், அவன் தென்கடல் நோக்கிச் சென்றதும் இங்கே நன்கு தெரிகின்றோம். ஈசன் பூசனையில் நேசமாய்க் கண்மூடி இருந்தபோது இவ் வீரனுடைய வாலை அத் தீரன் வந்து பிடித்தான்; பிடிக்கவே அவ்வால் அவனை இறுகப் பிணித்துக் கொண்டது. நான்கு திசைகளிலும் பூசையை முடித்த இம்மானவீரன் வானவீதி வழியே வாவி வரும்போது அவன் அல்லல் பல அடைந்தான். கிட்கிந்தை அரண்மனைக்கு வந்த பின்புதான் அவனைக் கட்டவிழ்த்து விட்டான். அவன் வெட்கமும் துக்கமும் அடைந்து இவனை வியந்து தொழுது நயந்து புகழ்ந்து நண்பு பூண்டு போனான். வாலியின் வலி அவனை வரம்புகோலி நின்றது.

இத்தகைய அதிசய வீரன் தம்பியைப் பகைத்துத் தகாத துன்பங்களைச் செய்தான். அல்லலடைந்து ஒதுங்கியிருந்த அவன் தன்பால் அன்பாய் அடைக்கலம் புகுந்தமையால் அவனுக்குப் பரிந்து விரைந்து இராமன் அம்பு எய்து வாலியை வீழ்த்தினான். தரும மூர்த்தியான இராமனுடைய வரலாற்றில் இந்தக் கருமம் ஒரு பெரிய மருமமான கறையாய் உறவுரிமையுடன்மருவியுளது.

இராமனும் வாலியும்.

இந்த இருவருடைய பழமையும் கிழமையும் வளமை தோய்ந்து வந்துள்ளன. அதிசய அறிவும் அதிசய ஆற்றலும் அதிசய ஏற்றமும் உடையவர்களைத் தெய்வ அவதாரங்கள் என்று வையம் வாழ்த்தி வருகின்றன. தனது வேண்டுகோளுக்கு இணங்கியே இராமன் ஈண்டு வந்துள்ளமையால் அந்த வீர வள்ளலுக்கு உரிமையாய்த் துணைபுரியவே வாலி வானர வேந்தனாய்த் தோன்றியிருக்கிறான். முன்பு தேவர்களோடு தேவேந்திரன் திருமாலிடம் சென்று கொடிய அரக்கர்கள் செய்கிற நெடிய அல்லல்களை நீக்கியருளுக என்று வேண்டினான்; வேண்டவே அப்பெருமான் இசைந்து அருளினான். "அயோத்தியில் தசரத மன்னன் மகனாய் நான் வந்து தோன்றுவேன்; அப்பொழுது துன்பங்கள் யாவும் நீங்கி நீவிர் இன்பமாய் வாழ நேர்வீர்" என்று அன்புரை கூறினான்; கூறவே யாவரும் உள்ளம் உவந்து களித்தார். தேவதேவன் அவதரிக்கு முன்னரே தேவர் எல்லாரும் அவனுக்கு ஆதரவு புரிய வானரர்களாய்

இங்கே வந்து தோன்றினர். தோன்றவே தேவராசனான இந்திரன் வாலி என்னும் பேரோடு தோன்றி அவர்களுக்கு வேந்தனாய் விளங்கினான். சூரியன், வாயு, பிரமா, அக்கினி முதலானவர்கள் முறையே சுக்கிரீவன், அனுமான், சாம்பவான், நீலன் முதலியவர்களாய் நிலத்தில் தோன்றினர். நிருதர் குலபதியான இராவணன் பிறர் எவராலும் வெல்ல முடியாதவனாய் வர பலம் பெற்றபோது மனிதரையும் குரங்குகளையும் ஒரு பொருளாக மதியாமல் எள்ளி இகழ்ந்து விட்டான். ஆதலால் அந்த இன முறைகளில் இந்தவாறு இவர் வர நேர்ந்தனர். வானவர் பதியாயிருந்து வெல்லமுடியாமல் அல்லலடைந்தவன் வானரர் பதியாய் வந்து பகைவனை வெல்ல மூண்டது விசித்திர விதியாய் விளங்கியுள்ளது. அவதார நிலையில் அதிசய வலி அரனாய் மருவி நின்றது

"தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவான் எனது கூறு
மருவலர்க்கு அசனி அன்ன வாலியும் மகனும் என்ன."

வாலியும், அங்கதனும் இந்திரன் கலையாய் வந்துள்ளமையை இந்த வாசகங்கள் நன்கு விளக்கியுள்ளன. இராமனுக்கு ஆதரவாய் உதவி புரிய வந்தவர்களுள் வாலி மிகவும் தலைமையானவன்; தான் கருதிவந்தபடியே செய்ய முடியாமல் விதி இவனைச் சதி புரிந்து விட்டது; நிருதர் பதியோடு இவன் நண்புற நேர்ந்தான்; வந்த வகையில் ஓரளவு பகையை இவன் வென்றுகொண்டாலும் மேலே விளையவுள்ள காரியங்களுக்கு இவனுடைய நிலை இடையே தடையாயுள்ளது; அவ்வுண்மையை நுண்மையாய் நண்டு உணர வேண்டும். உதவியாளனாய் வந்தவன் உதவா நிலையில் நேர்ந்தமையால் இவனை உம்பர் நாட்டுக்கு உய்த்தருள இராமன் அம்பு தொடுத்தான். உயிர் பிரிய நேர்ந்தபோது வாலி இராமனை நோக்கி உள்ளம் உருகிப் பேரன்போடு பேசியுள்ள வாசகங்களை ஊன்றி உணர்பவர் உண்மை நிலைகளை ஓர்ந்து தெளிந்து கொள்ளுவர். தெய்வ மரபுகள் சிந்திக்கவுரியன.

இவ் வீரர் இருவருடைய நீர்மை சீர்மைகளைக் கம்பன் கலைநிலை ஏழாவது தொகுதியில் தெளிவாய்க் காணலாம். அவதார மருமங்களையும் கரும விளைவுகளையும் கருதியுணர்பவர் உறுதி நலங்களைப் பொறுதியாய்க் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து கொள்வர்.

இராமனுக்கு உரிமையாய் நின்று உதவி புரியவில்லையே

என்று இறுதியில் வாலி மறுகியிருக்கிறுன். தான் செய்யாமல் இழந்த கடமையைத் தன் மகன் அங்கதன் நன்கு செய்தருளு வான் என்று ஆறுதலடைந்த தேறுதல் கூறியுள்ளான்.

இராவணனை வாலிடை தூங்கச் சுற்றினுன்.
வரம்பில் ஆற்றலான்
மந்தர கிரியால் வேலை கலக்கினுன்.
கடல்கடைந்த பேர் அடலமைந்தவன்.
அந்தகன் தனக்கு அரிய ஆணையான்.
இலங்கை வேந்தனைக் கலங்க வென்றவன்.
இந்திரன் தனிப் புதல்வன்.
சுந்தரத் திருத்தோளன்.
பாரும் சார்வலி படைத்தவன்
ஓங்கரும் பெருந்திறலுடை மனத்தவன்.
மேருவை இறுப்போன்.
செவியுறு கேள்விச் செல்வன்.
அரிகுலத்து அரசு.
சிறியன சிந்தியாதான்.
செஞ்சடை இறைவன்பாதம் நெஞ்சிடையுடையவன்.
ஈசனை அன்றிஎன்றும் எவரையும் இறைஞ்சான்.

இன்னவாறு வந்துள்ள வாசகங்களால் வாலியினுடைய அருந்திறல்களையும் பெருந்தகைமைகளையும் அதிசய நிலைகளையும் அறிந்துகொள்ளுகிறேம். சிறியனசிந்தியான் என்ற இந்தச் சிறிய வாக்கியத்தில் அரிய பல பொருள்கள் பெருகியுள்ளன. யாவும் கருதியுணர வுரியன. ஊன்றியுணரின் உண்மைகள் தோன்றும்.

அங்கதன்.

இக்குலமகன் வாலியின் அருமைப் புதல்வன். தாரை வயிற் றில் பிறந்தவன். வீர நீர்மையன். யாண்டும் அஞ்சா நெஞ்சன். அறிவும் அழகும் அடலாண்மையும் உடையவன். தந்தை இறக் கும்பொழுது இந்த மைந்தனுக்கு வயது இருபத்தொன்று. பிதா

பிரிவுற நேர்ந்ததை அறிந்து இவன் பெருந்துயரமாய் அழுதான். அதுபொழுது இவனைப் பரிவுடன் நோக்கி வாலிகூறிய அறிவுரைகள் பெரிய ஞான போதனைகளாய் ஒளிவீசி வந்தன: "அப்பா அங்கதா! நீ யாதும் வருந்தாதே; இவ்வுலகில் பிறந்த எவரும் இறந்துபோதல் உறுதி; உருவம் தோன்றும்போதே அழிவும் அதன் உடன் தோன்றியுளது. பிறத்தலும் இறத்தலும் விழித்தலும் இமைத்தலும்போல் இயல்பாய் நிகழ்ந்து வருகின்றன. திறந்தாலும் மூடினுலும் கண் நிலையாய் நிலைத்திருத்தல்போல் உடல் இருந்தாலும் ஒழிந்தாலும் உயிர் உயர்வாய் என்றும் ஒளி வீசியுளது; எவ்வகையிலும் யாதும் அழியாத திவ்விய சோதி அது; இந்த என் உடல் பிரியநேர்ந்துள்ளதை நினைந்து நீ அழுகின்றாய்; உன் தந்தை உயிர் அந்தம் இல்லாத ஆனந்த வீட்டை அடைந்துள்ளது. தருமமே ஓர் உருவமாய் மருவி ஒரு வில்லைக் கையில் ஏந்தி மரகத வண்ணமாய் எழில் ஒளிவீச விழுமிய நிலையில் வீர கம்பீரமாய் அதோ நிற்கிற அந்தப் புண்ணியமூர்த்தியைக் கண்ணியமா நினைந்து போற்று. எனது பிறவித் துன்பத்தை நீக்கிப் பேரின்பம் அருளிய பேரமுதம் அது; மனிதஉருவில் மருவியுள்ள ஒரு புனித தெய்வம்; யாரும் காணமுடியாத அதிசய நிலையில் உள்ள ஆதிமூலப் பொருளே இவ்வுலகின் பொல்லாத தீதுகளை ஒழித்து நல்ல நீதிகளை அளித்தருள இந்த வடிவில் இங்கே வந்துள்ளது. இவ்வீர வள்ளலுக்கு நான் செய்ய வுரிய பணியைச் செய்ய ஒட்டாமல் வெய்ய விதி என்னை விலக்கி விட்டது; அந்தக் கடமையை நீ செய்ய வேண்டும்; தந்தை செய்யாது ஒழிந்ததை அவன் மைந்தன் செய்தருளினன் என்னும் மகிமையை நீ பெறுவாய் என்று நான் உறுதியோடு கருதி உள்ளம் உவந்து கொள்கிறேன்; காளைப் பருவத்தின் சிறுமையால் யாதொரு பிழையும் புரிந்துவிடாமல் எந்த வேளையும் எவ்வழியும் ஆண்டவனுக்கு வேண்டிய ஊழியத்தை ஆர்வத்தோடு செய்து வா! அதுவே எனக்கு நீ செய்யவுரிய பெருமை; உனக்கும் அது பிறவிப் பேறும்" என இவ்வாறு தனது அருமை மகனை நோக்கி உரிமையுடன் கூறி வந்தவன் அவ் வீர வில்லியை விழைந்து நோக்கி, "இராமநாதா! இவன் உனக்கு உரிய இனிய பொருள்; உனது அடைக்கலம்" என்று கையைக் காட்டிக் கொடுத்தான்; உடனே உடலைவிட்டு உயிரும் போயது. இராம

னுடைய கண்களிலிருந்து நீரும் பெருகியது; யாரும் உருகி நின்றனர். அந்தப் பரிதாப நிலை அமரரையும் மறுகச் செய்தது.

இராம காவியத்தில் மருவியுள்ள இவ்வீரனுடைய சரிதம் வாலி மோட்சம் எனத் தனியே இனிய நிலையில் வழங்கி வருதலால் இவனது புனித நிலையை உணர்ந்து கொள்கிறோம். தந்தை கூறியபடியே அங்கதன் இராமன்பால் பேரன்புடையனாய் யாண்டும் அறிவாண்மைகள் நீண்டு வர வேண்டிய பணிகளை விழைந்து செய்து வந்தான். எழுபது வெள்ளம் வானர சேனைகளுக்கும் தலைமைத் தளபதியாய் நிலவி நின்றான். தன் படைகள் இலங்கையை முற்றுகையிட்டுப் போருக்குமூண்டு நின்றபோது இந்த ஆண்டகையையே இராமபிரான் இராவணனிடம் தூது அனுப்பினான். யாரும் செல்ல முடியாத அந்தப் பொல்லாத வீரன் எதிரே இவன் சென்று பேசியது வென்றி வீரமாய் விளங்கி நின்றது. "தேவதேவரும் வர அஞ்சுகின்ற என்னுடைய முன்னிலையில் யாதும் அஞ்சாமல் துணிந்து வந்த நீ யாவன்? உன் பேர் என்ன?" என்று வீரகர்ச்சனையோடு கேட்ட இலங்கை வேந்தனுக்கு இவன் கலங்காமல் பதில் சொன்னான். அந்த மறுமொழி அதிசய கம்பீரமாய்க் குதிகொண்டு வந்தது. வாதமுறையில் எதுவோடு எழுந்த போதனை அயலே வருகிறது.

பூதநாயகன்; நீர்சூழ்ந்த புவிக்கு நாயகன்; அப்பூமேல்
சீதைநாயகன்; வேறுள்ள தெய்வநாயகன்; நீசெப்பும்
வேதநாயகன்; மேல்நின்ற விதிக்கு நாயகன்; தான்விட்ட
தூதன்யான் பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன் என்றான்.

இந்த வாய்மொழிகளால் இராமநாயகனை இவன் சிந்தனை செய்து தெளிந்துள்ள நிலைமை நீர்மைகள் நேரே தெரிய வந்தன. தன்னைத் தூதனாக அனுப்பிய ஆண்டவனுடைய அதிசய மேன்மைகளை இங்ஙனம் துதிசெய்து சொல்லியது, நிருதர்பதி மதி தெளிந்து உய்யவே யாம். அகில லோக நாயகனுடைய நாயகியை நீ விரும்பியது தீய நாசமே யாம்; நீசனாய் நீ நாசமடையாமல் உய்ய வேண்டுமானால் அந்தத் தெய்வக் கற்பரசியை எங்கள் தெய்வ நாயகனிடம் தந்துவிடு! என்று வென்றி வீறோடு விழுமிய வீர நிலையில் தீரமாய் விவேக போதனை செய்துள்ளான்.

"கூனி சூழ்ச்சியால் அரசிழந்து அல்லலுழந்து நிற்கின்ற மனிதனை வானும் வையமும் வணங்கித்தொழும் தெய்வம்என்று மையலாய் மதிமயங்கிச் சொல்லுகிருய்; இந்த அதிசய அரசவையைக் கண்டதும் அஞ்சியிருக்கின்ருய் என்று தெரிகிறது; அந்த உச்சமான அச்சத்தால் உள்ளம் கலங்கி உளறுகிருய்; உறுதியாய் நின்று உண்மையை உள்ளபடி சொல்! நீ யார் மகன்? ஏன் இங்கு வந்தாய்!" என்று மீண்டு இவ்வாறு அவ் வேந்தன் கேட்கவே இவ்வீர மகன் நேரே விநயமாய்ப் பதில் கூறினன்.

இந்திரன்செம்மல் பண்டுஓர் இராவணன் என்பான்தன்னைச்
சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரக் கிரியால் வேலை கலக்கினுன் மைந்தன் என்ருன்.

இந்தப் பாசுரம் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்க வுரியது. இங்ஙனம் கூறியுள்ளமையால் அங்கதனுடைய அறிவாற்றலையும், ஆண்டகைமையையும், பேச்சு வன்மையையும், காலம் அறிந்து இடம் தெரிந்து விரைந்து காரியம் புரியும் சீரிய மேன்மையையும் நாம் யூகித்து உணர்ந்து கொள்கிரேம். இறுதியில் நிருதர் பதியை நோக்கி இவன் கூறியசொல் கூரிய வேல் போல் மீறி எழுந்தது. "தான் பிறந்தகுலம் முழுவதும்அடியோடு நாசமாய் ஒழியும்படி அவகேடு புரிந்துள்ள கொடிய பாதகன் என்று உலகம் பேசிவரயாதும் கூசாமல் ஏதும் நாணுமல் இறுமாந்திருக்கும் ஓ பாவியே! எங்கள் ஆவியனைய ஐயனுடைய தேவியை விடுகின்ருயா? அல்லது உன் ஆவியை விடுகின்ருயா? இரண்டுள் ஒன்றை ஒல்லையில் சொல்!" என்று உருத்து உரைத்தான். அவன் சினந்து சீறி இவனைக் கொல்லும்படி கொடிய அரக்கரைக் கடிதின் ஏவினுன். தன்மேல் பாய்ந்த எல்லாரும் மாய்ந்துவிழ மடித்து வீசி இவன் விரைந்து மீண்டு வந்து இராமனை வணங்கினுன். "போனகாரியம் முடிவு என்ன?" என்று அம்மான வீரன் வினவினுன். மூர்க்கன் முடித்தலை படித்தலத்தில் உருளுவதே முடிவு என்று சுருக்கமாச் சொல்லிவிட்டுப் படைகளை யாண்டும் அடைவுடன் ஏவி அமராட மூண்டான். போரில் இவன் புரிந்து வந்த அருந்திறலாடல்கள் எவ்வழியும் நீண்ட அதிசயநிலைகளில் ஓங்கி நின்றன.

பிரளய கால வெள்ளம்போல் பெருகிவந்த மூலபலங்களைக் கண்டதும் வானர சேனைகள் உள்ளம் உடைந்து ஓடியபோது

இவன் விரைந்து உறுதிகூறி யாவரையும் மீட்டி வந்தான். அவ் வரவு இவனுடைய உறவுரிமையையும் உறுதிநிலையையும் உண்மை வீரத்தையும் தெளிவாக் காட்டிகின்றது. இந்திரசித்தின் தலையை இளையபெருமாள் கொய்து வீழ்த்தியபொழுது அவ் வீர முடியை இவனே விரைந்து எடுத்து இராமனிடம் கொண்டு வந்தான். அதிசய வீரனுடைய அரிய தலையை வலதகையில் நேரே தூக்கி இவன் ஊக்கி வந்ததை நோக்கி யாவரும் புகழ்ந்து போற்றினர். இராமனும் தலைநிமிர்ந்து பார்த்து நிலையை வியந்து மகிழ்ந்தான்.

தென்தலை ஆழி சூழ்ந்த திண்மதில் இலங்கை காக்கும்
புன்தலைக் கள்வன்பெற்ற புதல்வனை இளவல் வீழ்த்த
வன்தலை எடுத்து நீமுன் வருதலால் வானரேச
என்தலை எடுக்க லானேன் இனிக்குடை எடுப்பேன் என்ருன். (1)

வான்தலை எடுக்க வேலை மண்தலை எடுக்க வானோர்
கோன்தலை எடுக்க வேதக் குலம்தலை எடுக்கக் குன்ருத்
தேன்தலை எடுக்கும் தாராய்! தேவரை வென்ருன் தீய
ஊன்தலை எடுத்தாய் நீஎன்று உரைத்தனர் உவகைமிக்கார். (2)

இந்தக் கவிகளைப் பலமுறை படித்துப் பாருங்கள். உரைகளின் சுவைகளையும் உயிர் உணர்ச்சிகளையும் நிகழ்ச்சி நிலைகளையும் கருதி யுணர்பவர் அரிய பல உண்மைகளை அறிய நேர்வர். தந்தை கூறியபடியே இராமன் பால் பரம பத்தியோடு இவன் ஒழுகி வந்துள்ளான். அங்கதன் தூது என்பது காவியத்துள் தனியே ஒரு படலமாய் இனிய சுவைகளுடன் அமைந்துள்ளது

சம்பாதி

சம்பாதி சடாயுவின் தமையன். சிறந்த மதிமான். உறுதியும் ஊக்கமும் பொறுதியும் உடையவன். தம்பிபால் யாண்டும் பேரன்பு பூண்டு ஒழுகி வந்தவன். ஒருமுறை வானவீதியில் மேகமண்டலத்தையும்கடந்து மேலே விரைந்து பறந்துபோனுன். போகவே சூரியனுடைய சுடுகிரணங்கள் அதி வேகமாய்த் தாக்கியது அதனல் நீண்டு விரிந்து நின்ற சிறகுகள் நேரே கரிந்தன. அவை எரிந்து கரியவே அயலே பறந்து செல்லமுடியாமல் கீழே பரிந்து இரங்கி மகேந்திர மலைச்சாரலை அடைந்தான். உலோகசாரங்கர் என்னும் முனிவருடைய தவக்குடில் அருகே விழுந்தான் ஆதலால் அந்தப் பெரியவர் பரிவோடு வந்து ஆறுதல்

புரிந்தார். நேர்ந்த நிலைமையை வினவியறிந்து அம் முனிவர் இனிய அறிவுரைகள்கூறித் தேற்றியருளினர். "எங்கும் விரைந்து பறந்து செல்வதில் சிறந்த ஆற்றலுடையேம் என்னும் செருக்கால் எல்லைமீறிப் போயுள்ளாய்; அதனுல் இந்த அல்லல் வந்துள்ளது. உள்ளச் செருக்கு உயிரைக் கருக்கும் என்பது பழமொழி. அந்த மூதுரை உன்பால் இருபாலும் விளங்கி நின்றது. வெளியே இறகுகள் கரிந்து உள்ளே உயிர் வருந்தி இத்துயரை அடைந்திருக்கிருய் அல்லலான துன்பம் தோய்ந்தால் அதிலிருந்து ஒரு நல்ல உணர்வும் அனுபவமும் தோன்றும்; இனிமேல் நீ நெறிமுறையோடு அமைதியுடையவனுயிருப்பாய்; சானகிதேவியைத் தேடி வானர சேனைகள் ஈண்டு விரைவில் வரும்; இராமபிரான் பால் பேரன்புடைய அவ் வானர வீரர்கள் வாயால் இராம நாமத்தை ஓதக்கேட்டால் இத்தீது நீங்கும்; கரிந்துபோன சிறகுகள் விரைந்து வளரும்; அந் நாமம் சீவ அமுதமான திவ்விய மந்திரம்; அதனுல் செவ்வையாய் நீ நன்மை அடைவாய்; அவர் வரும் வரையும் நீ இங்கேயே தங்கி இரு!" என்று பொங்கிய தயவோடு அந்த யோக சித்தர் போதித்தருளினர். அப்போதனையைக் கேட்டு உளம் மிக மகிழ்ந்து ஆண்டு இவன் உறைந்திருந்தான். பல இடங்களிலும் சீதையைத்தேடி அலைந்த வானரர்கள் முடிவில் தென்திசைக் கடல் அருகேயுள்ள மகேந்திர மலைச்சாரலை அடைந்தனர். தேவியைக் காணுமையால் யாவரும்கவலை கூர்ந்து நொந்தனர். "அம்மையை மீட்டும் பொருட்டுச் சடாயு போராடி யாண்டான்; நாம் யாதொரு பயனும் இன்றி வீணே உயிரைச் சுமந்து துயரோடு உழலுகின்றேம்" என்று இன்னவாறு பரிதாபமாய் அவர் பன்னிப் புலம்பினர். அந்த வார்த்தையைக் கேட்ட இவன் தம்பி இறந்தான் என்றதை அறிந்ததும் உள்ளம் துடித்து உயிர்பதைத்து நேரே வந்தான். யாவும் வினவியறிந்தான். இராமனுடைய அருமைத் தேவியை மீட்டும் பொருட்டு இராவணனேடு மூண்டு பொருது இளவல் மாண்டான் என்பதை அறியவே அந்த வீர மரணம் பெறுதற்கு அரிய ஒரு பேறு என இவன் ஆறுதலடைந்தான். அதன்பின் அவரை இராம நாமத்தை ஓதப்படி வேண்டினன்; அவர் அன்புரிமையோடு கூறினர் கூறவே கரிந்து போயிருந்த சிறகுகள் விரைந்து வளர்ந்து விரிந்து பரந்து சிறந்து நின்றன.

அந்த நிலையைக் கண்டதும் எல்லாரும் அதிசய பரவசராய் "இராமநாதா!" என்று கூவி நெஞ்சம் உருகி அஞ்சன வண்ணன் அற்புத நிலையன் என்று தெளிந்து மகிழ்ந்தார். அதன்பின் சம்பாதி அன்பு மீதூர்ந்து இலங்கைக்குச் செல்ல வேண்டிய வகைகளையும் வழி விவரங்களையும் தெளிவாக் கூறினன். இவனுடைய உரைகளைக் கேட்டு உள்ளம் தெளிந்த வானரர்கள் இவனை உவந்து புகழ்ந்தார். அவரிடம் விடைபெற்று வானவீதியில் இப் பறவை வேந்தன் பறந்து போனன் இவனுடைய போதனையின் படியே அனுமான் இலங்கைக்கு நேரே போக நேர்ந்தான்.

புள் அரசன்.

எருவை வேந்தன்.

சிறையறு மலைனச் செல்லும் செய்கையான்.

உழுங்கதிர் மணியணி உமிழும் மின்னினன்.

வெள்ளியம் பெருமலை பொருவும் மேனியான்.

எல்லீரும் இராம நாமமே சொல்லீர் என்றனன்.

அருணனுக்கு அமைந்த மைந்தன்.

மேக்குற விசையில் சென்றான்.

சிறையினல் விசும்பு போர்ப்பான்.

இன்னவாறன குறிப்புகளால் சம்பாதியுடைய நிலைமை தலைமைகளைத் தெரிந்து கொள்ளுகிறோம். கருதி வந்த காரியம் கைகூடவில்லையே என்று மறுகி மயங்கிய வானரர்களுக்கு இவன் நல்ல உறுதி கூறியுள்ளான். பொய்யுரை செய்யான் புள் அரசு என்று இவன் சொல்லை மெய்யாக நம்பியே அனுமான் இலங்கைக்குப் போக வேகமாய் நேர்ந்துள்ளான். காவியத்தில் இவனது பாகம் சம்பாதிப்படலம் என இனிது அமைந்துள்ளது.

விராதன்.

இவன் கொடிய இராட்சதன். நெடிய வலிகளையுடையவன். தேவர் முதல் யாவரும் அஞ்சுகின்ற அருந்திறலும் அடலாண்மையும் அமைந்தவன். தண்டகவனத்தின் ஒரு பகுதி முழுவதுக்கும் தலைவனன கிலிஞ்சன் என்னும் அரக்கனுடைய மகன். இரக்கம் இல்லாதவனய் எல்லா வுயிர்களையும் அல்லலுறுத்திப் பொல்லாத

புலைநிலையில் இவன் பொங்கியிருந்தான். அத்திரி முனிவர் ஆச்சிரமத்தைக் கடந்து இராமன் கானகம் புகுந்தபோது இவன் வானகம் நடுங்க எதிரேவந்து தோன்றினன். யாதும் கூருமலே சீதையைக் கவர்ந்து கொண்டு வானவீதியில் இவன் விரைந்து போனன். போகவே அவ்வீரர் இருவரும் ஒல்லையில் தொடர்ந்து அம்புகள் தொடுத்தார். உக்கிர வேகமா வந்து பகழிகள் பாயவே உடல் எங்கணும் உதிரங்கள் ஒழுகின. சீதையை அயலே விட்டு அடலோடு சீறி நேரே இராமலக்குவர் மேல் பாய்ந்து அந்த இருவரையும் வாரி எடுத்துக் கொண்டு வானில் விரைந்தான். விரையவே உடைவாள்களை உருவி இவனுடைய தோள்களை வெட்டி வீழ்த்தினர். தோள்கள் இழந்த இவன் தாள்களால் உதையுண்டு கீழே வந்து விழுந்தான். ஆழ்ந்த குழியில் வீழ்ந்த இவன் உடலில் இருந்து ஒரு ஒளி மேலே போயது; உருவமாய் நின்ற அது அழகிய ஒரு கந்தருவனுய் விளங்கியது. இராமனை உருகி நோக்கி அரிய துதிகள் பல கூறினன். தேவவுருவில் நின்று இவன் கூறிய துதிமொழிகள் அதிசய ஞான ஒளிகளாய் வெளிவந்தன. இராமனுடைய திவ்விய நீர்மைகளும் அவதார மருமங்களும் அவ்வுரைகளில் தெளிவாய் விளங்கின.

ஒப்புஇறையும் பெறலரிய ஒருவா! முன்உவந்துறையும்
அப்புறையுள் துறந்துஅடியேன் அருந்தவத்தால் அணுகுறலால்
இப்பிறவிக் கடல்கடந்தேன்; இனிப்பிறவேன்; இருவினையும்
துப்புறழும் நீர்த்த சுடர்த் திருவடியால் துடைத்தாய்நீ.

தான் அடைந்த இன்பப்பேற்றை இவ்வாறு வியந்து சொல்லிவிட்டுத் தனக்கு நேர்ந்த சாபத்தையும் விளக்கிக் கூறினன்: "ஆண்டவா! முன்பு நான் கந்தருவன்; தும்புரு என்பது என் பெயர். இசையில் மிகவும் இசைபெற்றிருந்தேன். குபேரனது இராசதானி ஆகிய அளகாபுரியில் ஒரு திருவிழா நடந்தது. அரசசபையில் வந்து தெய்வஅரம்பை நடனம் ஆடினுள்; அதனை நான் கண்டு மகிழ்ந்தேன்; பின்பு அவள் மேல் காதல் கொண்டேன்; எனது இசையையும் அழகையும் விழைந்து அவளும் இசைந்தாள்; இருவரும் கலந்து களித்தோம்; அவளது காமபோகத்தில் நான் மூழ்கிக் கிடந்தேன்; என் களவு நிலையை அளகையர் கோன் அறிந்து உளம் மிகக் கொதித்து என்னைச் சபித்தான், நான் அரக்கனுய் இழிந்து வீழ்ந்தேன்; நீண்டகால

மாய் நெடிய கொடியனாய் நின்றேன்; இன்று உன் திருவடி தீண்டியதால் தீய சாபம் நீங்கினேன்; தூயனாய் ஓங்கினேன்; பேயன் செய்த பிழைகளைப் பொறுத்தருள்" என்று உழுவலன் போடு தொழுது துதித்து அவன் மேலேபோனான். கொடியனாய் எதிர்ந்து நெடிய துயர் செய்தவன் இனியனாய்த் திகழ்ந்து உயர்ந்து போனதை நோக்கி அம்மூவரும் உவந்து போனார்.

கவந்தன்.

இவன் உயர்ந்த கந்தருவ மரபினன்; தனு என்னும் பேரினன். உல்லாச போகமாய் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் தூலசிரசு என்னு அரிய தவயோகியின் தவச்சாலையை அடைந்தான். யாதும் பேசாமல் மோன நிலையிலிருந்த அவரை இவன் கண்டான்; அவருடைய ஞான சீலத்தை நன்கு உணர்ந்து கொள்ளாமல் பரிகாசங்கள் புரிந்தான். ஏளனமாய் இகழ்ந்து சிரித்து இளிமொழிகளாடிய இவனுடைய இழிநிலைகளைக் கண்டும் அப் பெரியவர் பொறுமையாயிருந்தார். அந்த அருமையை அறியாமல் மேலும் அல்லல்கள் செய்தான். "பொல்லாத பூதமே ஒல்லையில் ஒதுங்கிப் போ!" என்று அவர் உருத்து மொழிந்தார். மொழியவே இவன் கொடிய நெடிய பூதம் ஆயினான். யார் கண்டாலும் அஞ்சும்படியான விகார வடிவம் அடைந்த இவன் தண்டக வனத்தின் தென்பால் வந்து கண்ட பிராணிகளை எல்லாம் கொன்று தின்று வந்தான். இருந்த இடத்தில் இருந்த படியே தனது நீண்ட கரங்களை நீட்டி வேண்டிய இரைகளை வாரி விழுங்கினான். இவன் இருந்த பகுதிக்குக் கவந்தவனம் என்ற பெயரும் வந்தது. இந்தக் கானகத்தின் வழியே இராமன் வந்தபோது இவனை எதிரே காண நேர்ந்தான். மாயப் பூதம் என்று மறுகித் தம்பியை அருகணைத்து உறுதிமொழிகள் கூறி அருகு நெருங்கினான். இவன் வாயைத் திறந்து அவரை விழுங்க மூண்டான்; மூளவே வாளால் அவ்வீரர் இவனை வெட்டி வீழ்த்தினர். உடல் துண்டமாய் விழவே சாபம் நீங்கியது; பழைய கந்தருவனாய் வானில் நேரே நின்று இராமனை ஆர்வத்தோடு துதித்தான். இவனுடைய துதி மொழிகள் அதிசய நிலையில் உயர்ந்து வேத ஒலிகளாய் விளங்கி நின்றன. "எனது தீய பிறவியை நீக்கி யருளிய தூய பரமனே! நீ மனித உருவில் மருவியுள்ளமையால் உனது புனித நிலையை அறியாதிருக்கிறாய்.

உலகம் நலமுற உதயமான தருமசோதி நீ; உன் காரியத்துக்கு வேண்டிய சீரிய துணைகளைச் சேர்த்துக் கொண்டு கருதிய கருமங்களை இனிது முடிக்க வேண்டும். உரிய புணையைக் கொண்டு அரிய வேலையைக் கடப்பதுபோல் இனிய துணையைக் கொண்டு வேலையை முடிப்பது சாலவும் நன்றும்; இந்த வழியே சென்றால் சவரி என்னும் முதுமகளைக் காணலாம்; அவள் அரிய தவமுடையவள்; அப்பெரியவள் கூறும் நெறியே சென்று மதங்கமலையை அடைந்து வானரவேந்தனைத் துணையாச் சேர்த்துக் கொண்டால் காரியங்களை எளிதே செய்து முடிக்கலாம்" என இன்னவாறு வழி வகைகளைக் கூறிவிட்டு இவன் மறைந்து போனான். இவனுடைய நிலைமை நீர்மைகளை வியந்து வீரர் இருவரும் தென்திசை நோக்கி வந்தார். குறித்தபடியே யாவும் முடித்துக் கொண்டார்.

கரன்.

இவன் பெரிய போர்வீரன். இராவணனுக்குத் தம்பி முறையினன். தாய் பெயர் கும்பிநசி. அவள் இராவணன் தாயோடு உடன் பிறந்தவள். தனது சிறிய தாயின் மகன் ஆதலால் இலங்கை வேந்தன் இவன்பால் மிகவும் பிரியம் மீதூர்ந்து தன் ஆட்சியில் மாட்சியான பதவியை இவனுக்கு அளித்திருந்தான். அறுபது நூறுயிரம் படைவீரர்களுக்குத் தலைமைத் தளபதியாய் இவன் நிலவியிருந்தான். இலங்கையிலிருந்து எழுநூறுகல் தூரத்தில் வடபால் இருந்த நிலமண்டலத்தை இவனுக்குத் தனியுரிமையாத் தந்திருந்தான் ஆதலால் அங்கே கரனகம் என்னும் நகரில் இவன் வாழ்ந்து வந்தான். அயலே சனத்தானம் என்னும் பகுதியில் சூர்ப்பநகை வசித்து வந்தாள். இராமனைக் கண்டு காமமோகம்கொண்டு அங்கம் பங்கமாய்க் கடுந்துயரடைந்த அவள் இவனிடம் வந்து நெடுங்குரலோடு அழுது முறையிட்டாள். முறையிடவே சில படைவீரர்களை அனுப்பினான். போனவர் யாவரும் பொன்றி முடிந்தனர். அரிய திறலுடைய விருதர் ஒரு மனிதனோடு பொருது மடிந்தார் என்று கேட்டதும் இவன் பெரிதும் வியந்தான். மானவீரங்கள் மண்டி எழுந்தன. கொடிய கோபம் மூண்டது; நெடிய சேனைகளோடு கடிது விரைந்து சீறி நேரே தேர் ஏறி வந்து வீ; வெறியோடு போராடினான். கோதண்டவீரன் உல்லாச விநோதமாய் வில்லாடல் புரிந்து எல்

லாரையும் ஒல்லையில் அழித்து ஒழித்தான். அறுபது லட்சம் போர் வீரர்களோடு மூண்டு வந்து போராடிய கரன் யாவும் இழந்து மாண்டு மடியவே நீண்ட திகிலோடு நெஞ்சம் கலங்கி சூர்ப்பநகை இலங்கையை நோக்கி ஓடினள். அரக்கர் குலத்தைக் கருவறுக்க வந்தவனிடம் இடையிடையே அவர் வலிந்து வந்து மடிந்து ஒழிவது விதியின் அதிசயமாய் விளங்கி நின்றது.

சொல்ஒன்றுஎன் வாயில் கேட்டார் தொடர்ந்தெழு சேனையோடும்
கல்என்ற ஒலியிற் சென்றார் கரன்முதல் காளை வீரர்
எல்ஒன்று கமலச் செங்கண் இராமன்என்று இசைத்த ஏந்தல்
வில்ஒன்றின் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றாள்.

பெரிய சேனைகளோடு வந்து கரன் செத்துள்ள நிலையை இது வித்தக விநோதமா விளக்கியுள்ளது. ஒரு வில்லால் மூன்று நாழிகைக்குள் பல்லாயிரம் படைவீரர்கள் பாழாயுள்ளனர். பொன்றின நிருதரையும் வென்ற வீரனையும் வியந்து காண்கிறோம். திவ்விய நிலை எவ்வழியும் செவ்வையாய்த் தெரிகின்றது.

அவ்வுரை கேட்ட லோடும் அழலெழ வுருத்துப் பொங்கித்
தெவ்வடு கரனும் வில்தூ டணனுமவேல் திரிசிராவும்
வெவ்வழற் சூலம் ஏந்த விரிகடல் தானையோடும்
எவ்வெலாத் திசையும் சூழ்போந்து இராமனை அமரின்ஏற்றார்.

ஏற்றவர் உடலம் புன்தோல் இறைச்சிஎன்பு ஈருள்மூளை
வீற்றுவீற்றுக வீழ வெஞ்சிலைக் கல்வி காட்ட
ஊற்றிருந்து ஒழுகும் கண்ணாள் இலங்கையின் ஒல்லை எய்தி
ஆற்றலம்குருதி ஒள்வாள் இராவணற்கு அறியச் சொன்னாள். (2)

(கூர்மபுராணம்)

இராமனோடு போராட மூண்டு வந்த கரன் படைகளோடு மாண்டு மடிந்துள்ள நிலையை இதுவும் நயமாக் குறித்துள்ளது. இராமனது அதிசய வீரம் எங்கும் துதிகொண்டு திகழ்கின்றது.

மாரீசன்.

இவன் அரிய மாய வஞ்சங்களில் பெரிய விஞ்சையன். கருதியபடியே எவ்வகை உருவமும் மருவி எவரையும் மயக்க வல்லவன். பூர்வத்தில் இயக்கர் மரபினனாயிருந்து சாபத்தால் அரக்கன் ஆன சுந்தன் என்பவன் மைந்தன். தாய் பெயர் தாடகை. பெற்ற தாயை இழந்த பின்பு இவன் பெரிய வெறிய

ஞய் இராமனிடம் நெடிய புலேகளையும் கொடிய கொலேகளையும் செய்ய மூண்டு சிலமுறை துணிந்து வந்தான். மூண்டு வந்த போதெல்லாம் அந்த ஆண்டகையின் அம்பால் அடிபட்டுத் தப்பிப் பிழைத்தான். உயிர் உய்ந்த இவனுக்கு உணர்வும் வந்தது. தீயமாயச் செயல்கள் எவ்வழியும் செய்தவனுக்கே துயரங்களை விளைக்கும் என்பதை இவன் உணர்ந்து தெளிந்து கொண்டான். தெளியவே முன்னம் தழுவிச் செய்து வந்த பழி வழிகளை எல்லாம் ஒருங்கே தள்ளிவிட்டு உள்ளம் தூயனுய் ஓரிடத்தில் தனியே ஒதுங்கி இனிய தவ நிலையில் இவன் வாழ்ந்து வந்தான். வெவ்விய தீமைகள் யாவும் ஒழிந்து செவ்வியனுய் இவ்வாறு வாழ்ந்து வருங்கால் ஒருநாள் இராவணன் இவனிடம் நேரே வந்தான். அந்த நிருதர் பதியைக் கண்டதும் இவன் பெரிதும் மறுகி உரிமையோடு உபசரித்தான். உற்றதை உசாவினன். "தேவர் யாவரும் ஏவல்புரிய அந்தகனும் அஞ்ச அதிசய வேந்தனுய்த் துதிகொண்டுள்ள தாங்கள் ஈண்டு இந்த ஏழையிடம் வந்தது யாது கருதியோ?" என்று விநயமா வினவினன். அவன் வந்த உண்மையை இவன் சிந்தை தெளியச் சொன்னன். சீதையைக் கவர்ந்துபோக ஆதரவாத் தனக்கு உதவிசெய்யவேண்டும் என்று அவன் வேண்டியபோது இவன் நீண்ட திகில் கொண்டு நெஞ்சம் கலங்கினன். நேரே தீரமாய்ப்பேச நேர்ந்தான். "மன்னர் மன்னவா! நீங்கள் கருதி வந்திருப்பது நமது நிருதர் குலம் அடியோடு அழிந்து போகும் வழியினையே முடிவாய்த் தழுவியுளது; நீச எண்ணங்கள் நாசமே செய்யும்; அருந்தவத்தாலும் அரிய பெரிய தருமங்களாலுமே இலங்காதிபதி என்னும் அதிசய மகிமைகளை அடைந்திருக்கிறீர்கள்; அமரர் யாவரும் தலை வணங்கி ஊழியம் புரிந்துவர உலகம் முழுவதும் ஆளும் இந்தத் தலைமை எதனல் எய்தியது? இதனைச் சிறிது சிந்திக்கவேண்டும்; யாரும் பெறலரிய பெருமேன்மைகளைப் பெற்றுள்ளவர் பிழை புரிய நேர்ந்தால் யாவும் பாழாய் அழிவுறவே நேரும்; தீயநினைவு கொடிய விடமாய்த் துன்பமே தரும்; தீமையான செயல்களின் பலனை நான் நன்கு அனுபவித்து அறிந்துள்ளேன் ஆகலால் தீய அந்த வஞ்சனைகளை எல்லாம் அடியோடு ஒதுக்கிவிட்டுத் தூய தவநெறியில் தோய்ந்திருக்கிறேன். நீங்களும் தீங்கு யாதும் செய்யாமல் இருப்பதே நலம் என்று நான் கருதுகின்றேன்;

எனது நிலைமையை உணர்ந்து என்னை மன்னித்தருளவேண்டும்" என்று இவன் தலை வணங்கி வேண்டினன். இவ்வாறு வேண்டியும் அவன் யாதும் கேளாமல் நீண்ட கோபனாய் நெடிது சீறினன்; சீறவே இவன் மாறி யாதும் பேசாமல் நாச காலம் மூண்டது என்று உள்ளம்நொந்து ஒல்லையில்சென்று மாயமான் உருவம் கொண்டு சீதை எதிரே போய் நின்று இராமன் கையால் மாண்டு மடிந்தான். இராமபாணத்தால் அடிபட்டு இவன் சாக நேர்ந்தபோது "ஆ! லட்சுமணா!" என்று இராமன் குரல் போலவே கூவி விழுந்தான். அந்த மாயச் சொல்லால் தீய அல்லல்கள் விளைந்தன. தான் செத்தாலும் காரியசித்தியைச் செய்து வீரியவானாய்மறைந்தான். அதனால்நிருதர்குலமும் அழியலாயது.

இராவணன்.

நிருதர்குல திலகன். தாய் பெயர் கேகசி. தந்தை விச்சிரவசு. சிறந்த அழகிக்கும் உயர்ந்த தவசிக்கும் பிறந்த இந்த மைந்தன் எவ்வகையிலும் உயர்வாய் ஒளி மிகுந்திருந்தான். அருந்திறலும் அறிவும் அழகும் ஆண்மையும் பெருந்தகைமைகளாய் இவனிடம் நிறைந்திருந்தன. இவனுக்கு வயது பதினறு நடந்து வரும் பொழுது ஒருநாள் குபேரனைக் கண்டான். நிறைந்த தெய்வ சம்பத்துகளோடு உயர்ந்து ஒளிமிகுந்திருந்த அவனைக்கண்டதும் விழைந்து நோக்கி இவன் வியந்து நின்றான். அந்த நிலையை அறிந்த தாய் இவனைத் தனியே அழைத்து அவனுடைய உறவு முறையையும் உயர்வு நிலைகளையும் நயமா உரைத்தாள்: "என்னைப் பெற்ற தந்தை பெயர் சுமாலி. அந்த உன் பாட்டன் முதலிய முன்னோர் பரம்பரையாய் ஆண்டு வந்த இலங்காபுரியை இன்று இவன் ஆளுகிறான். அமரர் மூட்டியகோளால் திருமால் மூண்டு பொருதார்; அந்த அமரில் நமர் பலர் மாண்டுபோனர். அப் போரில் தப்பிப் பிழைத்த உன் பாட்டன்மார் பாதலத்தில் ஒதுங்கி வாழுகின்றனர். நீ பிறந்த குடி உன்னால் உயர்ந்து திகழ வேண்டும்; அதற்கு வேண்டியதை விரைந்து செய்!" என்று இன்னவாறு அன்னை கூறவே இவன் உன்னி உணர்ந்தான்; மானவீரோடு மறுகி நின்றவன் அரிய தவமே பெரிய மேன்மைகளை அருளும் என்று துணிந்து தனியே சென்று வனத்தை அடைந்தான். சிரகிரி என்னும் மலைச்சாரலில் அமர்ந்து

பிரமனை நினைந்து நெடுங் காலம் கடுந் தவம் புரிந்தான். பதினாயிரம் ஆண்டுகள் கழிந்த பின் பிரமா நேரே தோன்றினர். இவன் வேண்டிய வரங்களை விழைந்து தந்தார். "யாவராலும் வெல்ல முடியாத அதிசய ஆற்றலும், தேவரும் ஏவல் புரிந்துவர மூவுலகையும் ஆளுகின்ற முதன்மையான அரச பதவியும், கருதியபடியே யாண்டும் விரைந்து சென்று வருகிற அற்புத விமானமும், நீண்ட வாழ்நாளும், நிறைந்த பெரும் போகங்களும்" வேண்டும் என இவன் வேண்டியபடியே வேதா ஆதரவோடு அருளி அகன்றார். அரிய பெரிய வரபலங்களோடு மருவிவந்த இவனைக் கண்டு மரபினர் எவரும் பெருமகிழ்வடைந்தனர். மறைந்து ஒதுங்கியிருந்த எல்லாரும் விரைந்து வெளியேறி இவனிடம் வந்து உரிமை கூர்ந்து உவகைமீதூர்ந்து உறவாய்ப் புகழ்ந்துநின்றனர்.

ஆங்கவர்கள் பெற்றுடைய வரமும் ஆண்
மையும்வலியும் அடங்கக் கேட்டுப்
பூங்கமலக் கண்ணனுக்குப் போர்தோற்றுப்
பாதாளம் புக்கு வீழ்ந்த
ஓங்குபுய மாலியவான் சுமாலிஎனப்
பேர்பெற்றோர் உள்ளிட்டார்கள்
தாங்கரிய பேருவகை தள்ளப்போய்த்
தசக்கிரிவன் தன்னைச் சார்ந்தார். (1)

அன்னவர்கள் இனிதிருந்த அக்காலைத்
தசமுகனைச் சுமாலி நோக்கி
முன் அமரில் தாம்எல்லாம் முகில்வண்ணன்
தனக்குஅஞ்சி முதுகிட்டு ஓடிப்
பன்னகர்நாடு அதுவாய பாதாளம்
புக்கமையும் பண்டு தாம் ஆள்
பொன்னகரத் திடைத்தனதன் புக்குவீற்
றிருந்தமையும் பொருது சொன்னன். (2)

தேனத்தார் திகழ்மார்பன் தென்னிலங்கை
ஆள்கின்ற குபேரன் சேர்ந்த
மானத்தால் உனக்கந்த வளநகரம்
விடுகிலான் சாம பேத
தானத்தால் தாரானேல் தண்டத்தால்
கொள்ளுதிநீ கொள்ளா யாகில்

வானத்தார் நகைசெய்வர் மாசுண்ணும்
நின்வலியும் வரமும் என்ருன். [3]

[உத்தரகாண்டம்]

சிறந்த வரபலங்களை அடைந்து உயர்ந்தநிலையில் ஒளிமிகுந்து வந்துள்ள இராவணனைக் கண்டு மகிழ்ந்து அவனுடைய பாட்டன்கூறியுள்ள முறையீடுகளை இவை காட்டியுள்ளன. இதனைக் கேட்டதும் தனது முன்னோர் இழந்துபோயுள்ள இராசதானியைத் தான் அடைய வேண்டும் என்று துணிந்து குபேரனிடம் ஒரு தூதுவனை இவன் அனுப்பினான். இவனுடைய அதிசய ஆற்றலை அறிந்துள்ளமையால் உடனே இலங்காபுரியை விட்டு அவன் வெளியேறினான்; வானில் தனியே ஒரு நகரை அமைத்தான்; அதற்கு அளகாபுரி என்று பேரிட்டான்; அதில் அவன் வளமா வாழ்ந்து வந்தான். வாழ்வு சுகமா வளர்ந்து வந்தது.

இருதர் திரளோடு யாவரும் மகிழ்ந்து புகழ்ந்துவர இராவணன் இலங்கையில் குடிபுகுந்து வேந்தர் பெருமானாய் விளங்கியிருந்தான். அந்நகரம் அதிசய நிலையில் யாண்டும் துதிகொண்டு விளங்கத் தேவசிற்பிகள் ஆவலோடு செய்தருளினர். எங்கணும் இருந்த அரக்கர் குலங்கள் அங்கே பொங்கி வந்து பொலிந்திருந்தன. இலங்கேசனாய்த் தலங்கியிருந்த இராவணன் யாண்டும் சென்று அமரர் முதல் யாவரையும் வென்று திக்கு விசயங்கள் புரிந்து மீண்டு வந்து மேலான அழகியாய் விழுமியநிலையில் கெழுமியிருந்த மண்டோதரி என்னும் மங்கையை மணந்து அரிய சுகபோகங்களை நுகர்ந்து பெரிய மகிமைகளோடு பெருகியிருந்தான். இவனுடைய இன்பவாழ்வு பலவகையிலும்சிறந்து மகிமை மாண்புகள் தோய்ந்து உயர்நிலையில் ஒளி மிகுந்து ஓங்கி வந்தன.

இந்திரனும் சசியும்போல் இலங்கிழைமண்
டோதரியும் தானும் ஏய்ந்து
சிந்தையுவந்து அனுபவித்துச் செல்கின்ற
காலத்துத் திருவ ளுள்பால்
வந்துபிறந் திடுமைந்தன் மழையிடித்தது
எனவாய்விட்டு அழுதலால் அவ்
வெந்திறல்மைந் தனைமேக நாதன்எனப்
பேரிட்டான் இலங்கை மன்னன்.

மனைவியுடன்கூடி மகிழ்ந்து வாழ்ந்து வருங்கால் இராவண

னுக்கு மகன் பிறந்துள்ள வகையை இதில் வியந்து காண்கின்றோம். பிறந்தபொழுது குழந்தைகள் அழுவது வழக்கம்; அந்த இயல்பான அழுகை இந்த மகன் பால் உயர்வாய் ஓங்கியிருந்தமையால் மேகநாதன் என்னும் பெயரை இவன் மேவி நின்றான்.

பிறந்த பிள்ளை உடனே வீறிட்டு அழவில்லை ஆனல் அது விரைந்து இறந்துபோம் என்பதற்கு ஒரு அறிகுறியாம். இந்தப் பிள்ளை அழுகையில் பெரிய மருமங்கள் மருவியுள்ளன. "பிறவி எந்த வகையிலும் துயரங்கள் நிறைந்தது; நாளும் அழும்படியான அவலங்களுடையது" என்னும் உண்மையை நுண்மையா உணர்ந்து கொள்ளும்படி குழவி வாய் அழுகை குலாவியுளது.

We wept when we came into the world, and every day tells us why. [Goldsmith]

"இவ்வுலகில் நாம் பிறந்த பொழுது அழுதோம்; அந்த அழுகையின் காரணத்தை நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் நமக்கு நன்கு உணர்த்தி வருகிறது" என்னும் இது இங்கே நுனித்து உணர வுரியது. பிறவித் துன்பம் மருமமா அறிய வந்தது.

வானத்தையும் வையத்தையும் அழும்படி செய்து வந்த மேகநாதன் இறுதியில் பெற்ற தந்தை பெருந்துயரமாய் அழ, உற்ற தாய் உயிர் பதைத்து ஓலமிட்டு அலற, அழிய நேர்ந்துள்ளான். பெரிய அரசு குமரனாய் அரிய போர் வீரனாய்ப் பிறந்தாலும் பிறவி பெருந்துயரமே என்பதைக் குழவி அழுகை தெளிவுறுத்தி நின்றது. பிறவாமையே என்றும் பேரின்ப மாகின்றது.

யாண்டும் மகிமையாய் எவ்வழியும் இன்ப போகமாய் இராவணன் ஆண்டு வந்தான். இவனுடைய புகழ் எங்கும் ஓங்கி நின்றது. அமரர் அசுரர் முதலிய எவரும் இவனது ஏவலில் மேவி நின்றனர். இவன் அரிய பல கலைகளை அறிந்தவன்; வேதங்களை எல்லாம் நன்கு ஓதி புணர்ந்தவன்; இசையில் இசை மிகப் பெற்றவன். கந்தருவரும் இவனுடைய கானத்தை வியந்து புகழ்ந்துள்ளனர்; வீணையை இசைப்பதிலும் வாய்ப் பாட்டிலும் யாரும் நிகரில்லாதவன். இவனது இனிய கீதத்தால் கல்லும் உருகியுள்ளது. நல்ல அழகன்; யாரும் வெல்லமுடியாத அரிய போர்வீரன். எட்டுத் திசைகளோடு மேலும் கீழும் வென்று வந்துள்ளமையால் தசமுகன் என நின்றான். பத்துத்

தலைகளையுடையவன் என்பது காவியக் கற்பனைகளால் வந்தது; அற்புதமான அதிசய ஆற்றல்கள் உடையவன் என்பதே அதன் உட்பொருள். இந்த உண்மை வேறு சில மொழிகளில் தெளிவா யுள்ளது. இயற்கை நிலைகள் வியப்புற விளங்கி வருகின்றன.

எத்தகைய தேவரும் எத்திப் புகழும்படியான இத்தகைய உத்தம நிலையில் ஒளிமிகுந்து ஓங்கி வந்துள்ளவன் முடிவில் பித்தனாய் அழிய நேர்ந்தான். நாச காலம் மூண்டமையால் நீசஆசை நெஞ்சில் நீண்டது. கற்புக்கு அரசியான சீதையை விழைந்து கவர்ந்து கொண்டு போனான். தனது அருமை மனைவியை அபகரித்துக் கொண்டு போனமையால் இராமன் இலங்கை மேல் படைஎடுத்துச் சென்றான். கடும் போர் மூண்டது. மூண்ட போரில் இவன் நீண்ட துயரங்களை அடைந்தான். படைகள் பல மாண்டன. பல்லாயிரக்கணக்கான அரக்கர்கள் அல்லல்கள் அடைந்து அலமந்து அழிந்தனர். குடியும் குலங்களும் அழிந்து ஒழிந்தன. தனது தம்பியையும் தலைமகனையும் இழந்து நிலைகுலைந்து இவன் நெடுஞ்சோகமாய் அழுது புலம்பினான். முடிவில் மூண்டு பொருது மாண்டு மடிந்தான். தவத்தால் பெற்றிருந்த அரிய பெரிய செல்வங்களை எல்லாம் அவத்தால் இழந்து அழிந்து ஒழிந்தான். தருமம் தழுவியுள்ள அளவுமே வாழ்வு; அது ஒருவி ஒழியின் யாவும் ஒருங்கே தாழ்வாய் ஒழிந்துபோம் என்பதை இவன் சரிதம் உலகம் தெரிய என்றும் தெளிவா விளக்கியுள்ளது.

அருந்தவத்தால் மூவுலகும் ஆண்டவன்.
நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்.
ஆயிரம் வேதம் வல்லவன்.
குழந்தை வெண்மதிக் குடுமியன் நெடுவரை.
குலுக்கிய குலத்தோளன்.
திசையானை பணையிறுத்த பணைத்த மார்பன்.
பகை வேந்தர் முடியுழுத சரணத்தான்.
வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன்.
யாரோடும் தோலாத வென்றியான்.
தீயவெங் காமத்தாலே சிந்தைவெந்து அழிய நேர்ந்தான்.

அழிவினை எய்துவான் அறிவு நீங்கினன்.
குலமெலாம் அழிவுறக் கொடுமை செய்தனன்.
பஞ்செனச் சிவக்கும் மென்கால்தேவியைப் பிரித்தபாவி.
ஆவியை ஆசை என்னும் அம்மியிட்டு அரைத்தான்.
உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தன்

இன்னவாறு காவியத்தில இவன் குறிக்கப்பட்டுள்ளான். குறிப்புகள் யாவும் கூர்ந்து சிந்திந்து ஓர்ந்து நன்கு உணரவுரியன.

கும்பகருணன்.

இவன் இராவணனுடன் பிறந்த தம்பி. உடல்வலியும் அடலாண்மையும் அதிசய நிலையில் உடையவன். அசகாய சூரன். சிறந்த வீரத்திறலோடு உயர்ந்த பெருங்குணங்களும் இவனிடம் நிறைந்திருந்தன. எவ்வழியும் நேர்மையான செவ்விய நீர்மையன். சீதையைக் கவர்ந்து வந்தது கொடிய தீது என்று தமையன் எதிரே நின்று பலமுறையும் இவன் வாதாடியிருக்கிறான். "நீங்கள் செய்துள்ளது நம் குடியும் குலமும் அடியோடு அழிந்து போதற்கு வழி கோலிய படியாம்; ஒரு மனிதனுக்கு உரிய புனிதமான இனிய மனைவியை என்று விரும்பினீர்களோ அன்றே அரக்கர்குலம் முழுவதும் அழிய நேர்ந்தது. நாசமான அழிவும் தொடர்ந்து நடந்து வருகிறது; எமனும் வர அஞ்சுகின்ற இந்த இலங்கைமா நகருள் ஒரு குரங்கு புகுந்து அரக்கர் பலரைக் கொன்று தொலைத்து ஊரைச் சுட்டுப் பொசுக்கிச் சுடு சாம்பலாக்கி விட்டுப் போயுள்ளதே! இதைவிடப் பழியும் அழிவும் இழிவும் அவமானமும் வேறு வேண்டுமோ? மானம் வீரம் மரியாதைகளைப் பேண வுரியவர் ஈனமான தீமையை யாதும் எண்ணார். ஒருவனுடைய பெருமையும் சிறுமையும் அவன் செய்கிற கருமங்களிலிருந்தே தெரிய வருகின்றன. தீய செயல் நஞ்சினும் தீயது; கொடிய துயரங்கள் அதனால் நெடிது விளைந்து வரும்; நேர்ந்துள்ள அவல இழிவுகள் நீங்கி நாம் கவலையின்றி வாழ வேண்டுமாயின் அந்தப் பதிவிரதையை உரிய நாயகனிடம் உடனே கொடுத்துவிட வேண்டும்" என்று இவ்வாறு எடுத்து உரைத்தான். யாரும் அஞ்சுகிற இலங்கை வேந்தன் முன் இவன் யாதும் கலங்காது நெஞ்சம் துணிந்து அஞ்சாமல் பேசினன்.

"சிட்டர் செயல் செய்திலை; குலச்சிறுமை செய்தாய்!" என்று இங்ஙனம் உரைத்திருத்தலால் இவனுடைய உள்ளத்துணிவையும் உறுதி நிலையையும் உணர்ந்து கொள்ளுகிறோம். நல்ல மானம் உள்ளவன் ஆதலால் தன்குடிக்கு நேர்ந்துள்ள பழியை நினைந்து அண்ணன் எதிரே இவ்வண்ணம் திண்ணமாய்ப் பேசி நின்றான். இராவணன் மந்திராலோசனை புரிந்தபோது இந்தவாறு அறிவுரைகள் கூறிப் போனான். சில நாள் கழிந்தன; போர் மூண்டது; முதல் நாள் போரில் மூண்டு பொருது தோல்வியடைந்து மீண்டு வந்த இலங்கை வேந்தன் மறுநாள் இவனைப் போருக்கு அனுப்ப நேர்ந்தான். அழைத்து வரும்படி படைத்தலைவரை அனுப்பினான். அப்பொழுது இவன் உறங்கியிருந்தான்; வந்தவர் எழுப்பவே இவன் விழித்து எழுந்தான். விளைந்துள்ள போரை அறிந்தான்; உள்ளம் வருந்தினான். குலம் அழிந்துபட நேர்ந்ததே என்று தெளிந்து மானவீரமாய் மனம் நைந்து மறுகி நொந்தான்.

ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே?

மனவேதனையோடு மறுகி மொழிந்துள்ள இந்த உரைகளால் கும்பகருணனுடைய குணநலங்களையும் நேர்மை சீர்மைகளையும் கூர்மையா உணர்ந்து கொள்கிறோம். அலகில் கற்புடைச் சானகி என்று குறித்திருத்தலால் அந்தப்பெண்ணரசியின் உண்மையான திண்மைக் கற்பை இவன் உறுதியா உணர்ந்துள்ளமை தெரிய நின்றது. உத்தம பத்தினியின் சித்தம் கொதிக்கச் செய்திருத்தலால் உன்னதமான மேன்மைகள் யாவும் அழிந்தன; புகழ் ஒழிந்தது; பழி புகுந்தது; அழிவு அடைந்தது என அலமந்து துடித்திருக்கிறான். "அண்ணா! பரதார இச்சை எவரையும் பாழ் படுத்திவிடும்; தன் மானம் இழந்து தனி மகிமைகள் அழிந்து அரிய மரியாதைகள் யாவும் ஒழிந்து பரிதாபமாய்ச் சாக நேர்ந் தவனே அந்த மோக வெறியில் மூழ்க நேர்கின்றான்" என இவ்வாறு விவேக வுரைகள் கூறினான். "அரசர் பெரும! நான் போருக்குப் போகிறேன்; எதிரியை வென்று மீண்டு நண்டு வருவேன் என்று எனக்குத் தோன்றவில்லை; ஆண்டு நான் மாண்டு மடிந்து போனால் உடனே சானகியை அந்த மானவீர

னிடம் தந்து சமாதானமாய் வாழ வேண்டுகிறேன்; இதுவே எனது முடிவான வேண்டுகோள்" என்று முடித்துவிட்டு விரைந்து போர்க்களம் புகுந்தான். இவனுடைய நேர்மை நீர்மைகளை வினவி அறிந்து இராமன் இரங்கினன். "உன்னோடு சேர்ந்து கொள்ள விரும்பினல் உன் தமையனை அழைத்து வா" என்று வீடணனை அனுப்பினன். அவன் வந்து அடியில்விழுந்து தொழுதான்; உழுவலன்போடு அவனைத் தழுவிக் கொண்டு இவன் உருகி அழுதான். பரிவுரைகள் கூறினன்: "தம்பி! நீ நல்லவன்; நீதிமான்; பல கலைகளையும் ஓதியுணர்ந்தவன்; சிறந்த மதிமான்; பிறந்தது முதல் யாதொரு தீதும்புரியாமல் உயர்ந்த தருமவானய் வளர்ந்து வந்துள்ளாய்; தீயவர்களை வெறுத்து விலகித் தூய ஒரு தருமவீரனிடம் போய் நீ சேர்ந்து கொண்டதை நினைந்து நான் உள்ளம் உவந்துள்ளேன்; நீ ஏன் இங்கு வந்தாய்? அண்ணனுக்கு நீ போதித்ததுபோல் நானும் எவ்வளவோ நீதிமுறைகளை ஓதினேன்; உத்தம பத்தினியைவிட்டுவிடு என்று புத்திமதிகளைப் போதித்தேன்; யாதும் கேட்கவில்லை; அழிவு காலம் மூண்டுள்ளமையால் அவகேடனய் நீண்டு நிற்கின்றுன்; என்னை வளர்த்து வாலிபம் ஆக்கிவிட்ட அவனுக்காக என் உயிரைக் கொடுக்கவே ஈண்டு நான் வந்திருக்கிறேன்; நீ ஒதுங்கி நிற்பது நல்லதே; குலத்தியல்பு குன்றினுலும் புலத்தியன் வழி உன்னல் புனிதம் அடையும் என்று இனிது மகிழ்கின்றேன்; உன் நிலைமைக்கு நீ விலகினது சரியே; என் தலைமைக்கு அது தகாது; மானமும் வீரமும் என் மெய்யுயிர்கள்; அவை தாழ நான் வாழேன்; ஆனவரையும் பொருது மடிவேன்; நீ விரைந்து மீண்டுபோய் ஆண்டவனை அடைந்து கொள்" என்று இன்னவாறு கூறி இளையவனை அனுப்பிவிட்டுத் தேரில்ஏறிப் போரில் நேரே மூண்டான். இவன் மூண்டு போராடவே வானரங்கள் பல மாண்டு மடிந்தன; சேனைத் தலைவர்கள் எல்லாரும் அல்லல் பல அடைந்தனர்; சுக்கிரீவனும் இவ்வுக்கிர வீரனிடம் அகப்பட்டு உயிர் பதைத்துத் துடித்தான்; இராமன் விரைந்துவந்து அவனை மீட்டியருளினன்; கடும்போர் மூண்டது; அடலாண்மைகளோடு மூண்டு போராடுகின்ற இவனுடைய அதிசய நிலைகளைக் கண்டு கோதண்ட வீரனும் வியந்தான்; நீண்டநேரம் உக்கிர வேகமாய் வில்லாடல்கள் புரிந்தான்; எல்லையில்லாத பாணங்களோடு எதிராடல் புரிந்து

வந்த இவன் இறுதியில் கைகளும் கால்களும் இழந்தான். இழந் தும் உறுதி குன்றுமல் ஊக்கி மூண்டு பொருது உருண்டான்.

கையிரண்டொடு கால்களும் துணிந்தன;
கருவரை பொருவும்தன்
மெய்யிரண்டு நூருயிரம் பகழியால்
வெரிநுறத் தொளை போய;
செய்ய கண்பொழி தீச்சிகை இருமடி
சிறந்தது தெளிப்போடு
வையம் வானிடை மழையினும் பெருத்தது
வளர்ந்தது பெருஞ்சீற்றம்.

இவ்வீரனுடைய தீர தைரியங்களை நோக்கி இராமனும் அதிசயம் அடைந்தான். அடலாண்மைக்கு இவன் உயிர்நிலையம் என்று உவந்து புகழ்ந்தான். கீழே முண்டமாய் உருண்ட இவன் இராமனை ஆவலோடு நோக்கி "வீர நாதா! என் தம்பியைக் கவனமாகக் காத்துக் கொள்ளுங்கள்; என் தலையைத் துணித்துக் கடலிடை வீழ்த்துங்கள்" என்று வேண்டினன். அவ்வாறே அந்த ஆண்டகை பரிந்து புரிந்தான். தன் அண்ணன்மீதும் தம்பியிடமும் இவன் கொண்டிருந்த அன்புப்பாசம் அதிசய நிலையது.

விபீடணன்.

இலங்கை வேந்தனுடைய இளைய தம்பி. கும்பகருணனுக்குப் பின் பிறந்தவன். தரும குணசீலன். அரிய பல கலைகளை அறிந்து தெளிந்தவன். உலக சரித்திரங்கள் யாவும் நன்கு ஆராய்ந்தவன்; எவ்வழியும் செவ்வியனுய் ஒழுகி வந்தவன். வெவ்விய தீமைகளுக்கு அஞ்சுபவன் என்பதை விபீடணன் என்னும் நாமமே நேமமா விளக்கிக் கொண்டிருக்கிறது. "தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் தீவினை என்னும் செருக்கு" என்னும் பொய்யாமொழி இவனுடைய மரபினரிடமும் இவன்பாலும் முறையே தெளிவாத் தெரிய நின்றது. இரக்கம் இல்லாத அரக்கர் குலத்தில் இரக்கமும் நீதியும் சத்தியமும் ஓர் உருக்கொண்டதுபோல் இவன் பெருக்கமுற்றிருந்தான். தமையன் தவருன வழிகளில் சென்றபோதெல்லாம் இவன் அறைதியாய்த் தடுத்து வந்துள்ளான். சீதையைக் கவர்ந்துவந்ததை நினைந்து நினைந்து நெஞ்சம் இணைந்திருந்தான். முன்னவனை

அணுகி நன்னய நீதிகளை நன்கு மொழிந்தான்: "தீய செயல் தீயினும் தீயது; அது எவரையும் மாயநூறும். சீதை பெண்மைக் குலத்தின் உண்மை உயிர்; தூய அந்தப் பதிவிரதையைப் பிழையாய் விரும்பியது பெரிய பழி; கொடிய பாவம்; குடியும் குலமும் நாசமடையும்படியான நீசத்தைச் செய்து கொண்டு நெஞ்சம் களித்திருப்பது தீய விதியின மாய மயக்கமே; நாச காலம் மூண்டபோது அறிவு மாண்டு போகிறது; வேந்தர் பெரும! நேர்ந்துள்ள நிலைகளை ஓர்ந்து என் நெஞ்சம் வருந்துகிறது. இராமன் அதிசயவீரன்; சத்தியமும் தருமமும் நீதியும் கருணையும் அவ்வுத்தமனிடம் குடிகொண்டுள்ளன; அவனோடு எதிர்த்து யாரும் உயிர்வாழ முடியாது; அவனுடைய பாணங்கள் அகில லோகங்களையும் வெல்ல வல்லன. அந்த அற்புத வில்லாளியின் இல்லாளை ஒல்லையில் விட்டுவிடுவதே நல்லது" என இவ்வாறு எவ்வளவோ அறிவு நலங்களை எடுத்துச் சொல்லியும் அவன் யாதும் கேளாமல் மோதி முனிந்தான். "இழிந்த மனிதனை வியந்து புகழ்ந்து எல்லை கடந்து பேசுகிறாய்; குல மானம் உன்னிடம் இல்லை; ஆதலால் என் எதிரே நில்லாதே விரைந்து வெளியே போய்விடு" என்று சினந்து சீறி இகழ்ந்து கூறவே இலங்கையைவிட்டு இவன் வெளி ஏறினான். இராமனிடம்வந்து அடைக்கலம் புகுந்தான். இவனுடைய குணநலங்களை உணர்ந்து உவந்து தன் தம்பி என்று அந்நம்பி தழுவிக் கொண்டான். அவ் வீர வள்ளல் பால் உழுவலன்போடு உரிமை கூர்ந்திருந்தான். மூண்ட போரில் இவன் புரிந்து வந்த உதவிகள் பல. முடிவில் இராவணன் மாண்டு போனபின் இலங்கா இராச்சியத்துக்கு இவன் அரசன் ஆயினான். இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்று முன்னமே உறுதிகூறியபடியே இராமன் இவனுக்கு மணிமுடி சூட்டி ஆட்சிபுரியும்மாட்சியை அறிவுறுத்தியருளினான். அறிவுரைகள் நெறிமுறை தழுவிப் பொருள் பொதிந்து வந்தன.

இந்திரசித்து.

இந்த வீரன் இராவணனுடைய அருமைத் திருமகன். பட்டத்துத் தேவியான மண்டோதரி வயிற்றில் பிறந்தவன். சிறந்த அழகன். அதிசய வீரன். வில்லாடலில் எவரும் தனக்கு நிகர் இல்லாதவன். மாய விஞ்சைகள் பலவும் வல்லவன். தேவர் யாவ

ரையும் வென்று தேவராசன் ஆன இந்திரனைப் பிடித்து வந்து சிறையில் வைத்தவன் ஆதலால் இந்திரசித்து என்று வெற்றி விருதுடைய பேர் பெற்று நின்றான். மேகநாதன், இராவணி எனவும் இவனுக்குப் பெயர்கள் உயர்வா அமைந்துள்ளன. இவனுடைய அறிவும் ஆண்மையும் உறுதியும் ஊக்கமும் மானமும் வீரமும் வானோர் முதல் யாவராலும் வியந்து புகழ்ந்துபோற்றப் பட்டுள்ளன. அனுமான் இலங்கை புகுந்து சீதையை நாடித் தேடி வருங்கால் இவனுடைய மாளிகையை அடைந்தான். அவ் வீரன் புகுந்த அப்பொழுது இரவு பாதி கழிந்திருந்தது. நடுநிசியில் யாரும் அறியா வகை அணு உருவம் மருவி இவனை அணுகி நின்று நுணுகி நோக்கினான். அழகிய பஞ்சணையில் வீரகம்பீரமாய் உறங்குகின்ற இவன் முகத்தில் வீரப்பொலிவு ஒளி வீசி ஓங்கி நின்றது. உடல் நிலைகளையும் உள இயல்புகளையும் உயிரின் தத்துவங்களையும் நன்கு தெளிந்த அம் மதிமான் இவனை உற்று நோக்கியதும் வியப்பு மீதூர்ந்து திகைத்தான். ஆ இவனைவெல்ல வல்லவர் யார்? நமது ஆண்டவனும் இளையபெருமாளும் நீண்ட காலம் போராடி மறுகும்படியான நெடிய அடலாண்மை கடல் போல் இவனிடம் நிறைந்துள்ளதே! என்று நினைந்து வியந்தான்.

இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாள்
உளைய வுள்ளபோர் இவனொடும் உளதுஎன உணர்ந்தான்.

இவ்வாறு குறிப்பால் கூர்ந்து ஓர்ந்து யூகித்து உணர்ந்தவன் மேலும் உறுதியாக் கருதினான். இவனைத் தனக்குஇனிய துணைவனாகப் பெற்றுள்ளவன் மூன்று உலகங்களையும் எளிதே வென்று ஏகசக்கராதிபதியாய் வாழுவது ஒரு பொருளன்று. தேவதேவரான அந்த மூவரோடு சேர்த்து ஒருங்கே இவன் எண்ணத்தக்கவன் என்று மாருதி ஆர்வமாய் எண்ணி அகன்றான். அவனுடைய யூகமும் விவேகமும் அதிசய விநோதமாய்விரிந்து நின்றன.

இவனை இன்துணை உடையபோர் இராவணன் என்னே
புவனம் மூன்றையும் வென்றதுஓர் பொருள்எனப் புகறல்!
சிவனை நான்முகத்து ஒருவனைத் திருநெடு மாலாம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறிவோ?

அந்த மதியூகியின் மதிப்பும் துதிப்பும் இந்தவாறு வியப்பில் விளைந்துள்ளன. கூர்மையாய் ஓர்ந்து குறித்து உரைத்தபடியே

காரியங்களும் இவனிடம் வீரியங்களாய் விரிந்திருக்கின்றன. போரில் இவன் புரிந்த அடலாண்மைகள் யாண்டும் அதிசய நிலைகளில் நீண்டு வந்தன. பல்லாயிரம் அரக்கர்களை வென்று வெற்றி வீரனாய் விளங்கி நின்ற அனுமானை இவன் தனியே பாசத்தால் பற்றியிழுத்துப் போய் இலங்கை வேந்தன் எதிரே நிறுத்தினான். அந்த வீரனைத் தந்தை முன்னே கொண்டுபோய் இந்த வீரன் காட்டி மொழிந்த காட்சி அதிசய மாட்சியாய் நீண்டு நின்றது. துதிமொழிகள் நேரே மதி தெளிய வந்தன.

சிவன்எனச் செங்கணான் என்னச் சேவகன்
இவன்எனக் கூறிநின்று இருகை கூப்பினான்.

முன்னம் தான் உறங்கும்போது தன்னை நோக்கிச் சிவன் அயன் மால் என்று உன்னத நிலையில் ஒப்புக் கூறினவனை ஈண்டு சிவன், செங்கண்ணான் என இன்னவாறு உவமைகூறி உணர்த்தி யிருக்கிறான். தன்னை அவன் அகத்தே கருதி வியந்த பெருமை களைப் புறத்தே அவனுடைய காதுகள் கேட்க இவன் நேரே உரைத்தருளினான். மானசதத்துவங்கள் இங்கே உய்த்து உணர வந்துள்ளன. உண்மைகளை ஓர்ந்து உணர்ந்துகொள்ளவேண்டும்.

அனுமான் குறித்தபடியே போரில் இராமலட்சுமணர்களை இவன் கதிகலங்கச் செய்துள்ளான். இவனுடைய வில்லாடலில் வானர சேனைகள் அல்லலடைந்து அலமந்து அழிந்ததுபோல் வேறு யாரிடமும் அழியவில்லை. மகா வீரனான இராமன் பல முறையும் அழுது புலம்பும்படி இவன் அடலாண்மை புரிந்து போயுள்ளான். நாக பாசத்தாலும், பிரமாத்திரத்தாலும் இலக் குவனை இருமுறை இவன் வதைத்து வீழ்த்தினான்; அனுமானு டைய ஆதரவால் அக் குலமகன் உயிர் பிழைத்து எழுந்தான். உக்கிர வீரமான இவனுடைய போராடல்களே இலங்கைப் போரில் பேராடல்களாய்ப் பெருகி நின்றன. இவ் வீரனுடைய மனவுறுதி மானவுணர்ச்சி மாய விஞ்சை வில்லாடுந்திறம் வீரப் போர் முதலிய நிலைகளைக் கண்டு கோதண்ட வீரனும் இவன் மூதண்டங்களையும் வெல்ல வல்லவன் என்று வியந்திருக்கிறான். முடிவில் இலக்குவனால் இவன் மாண்டு மடிந்தான். அப் பொழுது வானரர்களும் வானவர்களும் அதிசய பரவசராய் ஆரவாரித்து இளையவனைத் தொழுது உளம் உவந்து துதித்தார்.

இந்திரசித்தும் பட்டான்
இலங்கையும் பட்டது அன்றே.

என்று அன்று அங்கே முழங்கிய பேரொலி ஒரு அதிசய முதுமொழியாய் இன்றும் எங்கும் நன்கு விளங்கி வருகிறது.

அ தி கா ய ன்.

இவன் அதிசய ஆற்றல்களுடையவன். இராவணன் மகன்; தானமாலை வயிற்றில் பிறந்தவன். மான வீரங்களில் தலைசிறந்து எவ்வழியும் அஞ்சா நெஞ்சனாய் இவன் விளங்கியிருந்தான். வில்லாடல் முதலிய எல்லா வலிமைகளிலும் இந்திரசித்தை ஒத்தவனே; ஆனால் அத்தகைய வெற்றிப் பேரை இவன் உரிமையாப் பெறமுடியாமல் போயது. காரணம் என்ன? அயலே காண வருகிற கருத்துரை குறிப்போடு கூர்ந்து சிந்திக்க வுரியது.

பின் ஓர் இந்திரன் இலாமையால் பேர் அதிகாயன்.

பிரமசிருட்டியில் அமரர் அதிபதியாய ஒரே இந்திரன்தான் உளன். அந்த வானவர்கோனை இலங்கை வேந்தன் தலைமகன் வென்று கொண்டான்; அதனால் இந்திரசித்து என்று இசை பெற்று நின்றான். இரண்டாவது ஒரு இந்திரன் இருந்திருந்தால் இந்த மகனும் அவனை எளிதே வென்றிருப்பான். அந்த வெற்றிப் பேரும் இவனுக்குக் கிடைத்திருக்கும். அது கிடையாது போனமையால் உடல் வலியும், அடலாண்மையும், உருவப் பொலிவும், அதிசய நிலையும் தெரிய அதிகாயன் என்னும் பேரை இவன் மருவி நின்றான். பெறாத பேருக்கும், பெற்றுள்ள பெயர்க்கும் காரணத்தைக் கூர்ந்து உணர்பவர் இவனுடைய தீர தைரியங்களையும் சீர்மை நீர்மைகளையும் ஓர்ந்து தெளிந்து கொள்வர். குறிப்புகள் கூர்ந்த சிந்தனைகளோடு வந்துள்ளன.

கும்பகருணன் போரில் மாண்டு மடிந்ததை அறிந்ததும் இராவணன் நீண்ட துயரமாய் அழுது புலம்பி நெஞ்சம் கொதித்து நேரே போருக்கு மூண்டு தேர் ஏற நேர்ந்தான். அப்பொழுது அத் தந்தையைத் தடுத்து நிறுத்தி இம் மைந்தன் போருக்கு எழுந்தான். யாரும் வெல்ல முடியாத வல்லமையுடைய இவன் வில்லோடு வெகுண்டு எழுந்தபோது விண்ணோரும் வெருண்டு மருண்டு வெருவி நின்றனர். விதி காயினும்

வீரம் வேலற்கு அரியான் என்று அதிகாயன் துதிகொண்டுள்ள மையால் இவனுடைய அதிசய ஆற்றல்களை அறிந்து கொள்கிறோம். மேகநாதனைப் போல் வீர வேகங்களுடையனுயினும் மாய வஞ்சங்களை யாண்டும் யாதும் இவன் செய்யாதவன், மிகவும் நேர்மையுடையவன். இவனுடைய நீர்மை சீர்மைகளைக் குறித்து இராமபிரானிடம் விடணன் நேரே விளக்கியிருக்கிறுன். அவ்வுரைகள் உயர்தரமுடையன. அயலேசில அறியவருகின்றன.

அறனல்லது நல்லது மற்றறியான்;
மறன் அல்லது பல்பணி மாறறியான்;
திறனல்லதோர் ஆருயிரும் சிதையான்;
உறனல்லது பேரிசை என்றுணர்வான. (1)

காயத்துஉயி ரேவிடு காலையினும்
மாயத்தவர் கூடி மலைந்திடினும்
தேயத்தவர் செய்குதல் செய்திடினும்
மாயத்தொழில் செய்ய மதித்திலனல். (2)

அதிகாயனுடைய குணநலங்களையும் செயல் நிலைகளையும் இவை தெளிவா விளக்கியுள்ளன. தீய மாய வஞ்சங்கள் செய்யாதவன் என்றதனல் இவனுடைய தூய நிலைமைகள் தெரிய வந்தன. இத்தகைய சுத்த வீரன் காமப்பித்தனன தந்தையின் பொருட்டுப் போராட மூண்டு போனன். போர்க் களத்தில் இவன் புரிந்த அமராடல்களைக் கண்டு வியந்து யாவரும் அஞ்சி மறுகினர். வானர வீரர்கள் பலர் துஞ்சி மடிந்தனர். இலக்குவன் விரைந்து மூண்டு வெகுண்டு பொருதான். கொடிய போர் நெடிது மூண்டது. இருவரும் எதிர்ந்து நீண்ட நேரம் வில்லாடல் புரிந்து ஒருவரை ஒருவர் வெல்ல முயன்று பொருதிறலோடு மல்லாடலானர். வெற்றி தோல்விகள் இன்றிக் கொற்றக் குரிசில்கள் நெடும் போது கடும் போர் புரிந்தார். முடிவில் இலக்குவன் ஏவிய வாயுவாத்திரத்தால் அதிகாயன் தலை ஆகாயத்தில் துள்ளி எழுந்தது. உடல் நிலத்தில் வீழ்ந்து துடித்து மடிந்தது. அதிசய வீரன் அழிந்ததைக் கண்டதும் இளையபெருமாள் மேல் மலர் மழை பொழிந்து தேவர் யாவரும் ஆவலோடு துதித்துநின்றனர்.

அட்சன்.

இவன் இராவணனுடைய இளையமகன். இந்திரசித்தனேடு

உடன் பிறந்த தம்பி. இளமையும் எழிலும் இவனிடம் வளமையாய் வளர்ந்திருந்தன. சிறந்த தீரன். வில் வேல் வாள் முதலிய பலவகையான படைக்கலன்களிலும் இவன் உயர்ந்த பயிற்சி பெற்றிருந்தான். மல்லாடலிலும் சொல்லாடலிலும் வல்லவனாய் விளங்கி நின்றமையால் வீர தீரன், வித்தக அறிஞன் என யாவரும் இவனைப் போற்றி வந்தனர். அனுமான் இலங்கை புகுந்து அசோக வனத்தைச் சிதைத்து அமரை மூட்டிய பொழுது சேனைகளும் சேனைத் தலைவர்களும் பலர் மூண்டுபோய் அவனோடு போராடி மாண்டு மடிந்தனர். மடியவே முடிவில் இவன் மூண்டு எழுந்தான். அரசவையில் தந்தை எதிரே நின்று இம் மைந்தன் ஆரவாரமாய் வீர வாதங்கள் கூறிப் போருக்கு விடை தரும்படி வேண்டினான். அன்று இவன் பேசிய வார்த்தைகள் வென்றி வீரங்களை வெளியே வார்த்துக் காட்டிக் குலமானங்களைச் சீரோடு நீட்டி நேரே வீரோடு தெளிவாய் விளங்கி நின்றன.

கொய்தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத்து உருவுகொண்டு
கைதவம் இயற்றி ஈண்டோர் சிறுபழி இழைக்கும் கற்பால்
எய்தினன் இமையா முக்கண் ஈசனே என்ற போதும்
நொய்தினின் வென்றுபற்றித் தருகுவென் நொடியினுன்பால். [1

துண்டத்தூண தனில் தோன்றும் கோளரி சுடர்வெண் கோட்டு
பண்டொத்த நிமிராண்கேழல் ஆயினும் மலைதல் ஆற்றாது
அண்டத்தைக் கடந்து பொங்கி அப்புறத்து அகலின் என்பால்
தண்டத்தை இடுதி யன்றே நின்வயின் தந்தி லேனல். [2

அச்சன் இப்படி உச்ச நிலையில் உக்கிர வீரமாப் பேசிவிட்டுத் தேர் ஏறிச் சேனைத் திரள்களோடு போருக்குப் போனான். படைகள் விரைந்து போய் அனுமானை வளைந்து போராடின; யாவும் பாழாய் அழிந்தன; அழிந்து ஒழியவே இவன் தேரைக் கடாவி மூண்டு பொருதான்; கடுவேகமாப் பாணங்களைத் தொடுத்தான்; மாருதி நேரே விரைந்து தேர் மேல் பாய்ந்து வில்லைப் பறித்து ஒடித்து எறிந்தான்; எறியவே வீரவெறியோடு வாளால் வெட்டினான்; அவ் வெட்டை இடக்கையால் தட்டி விலக்கி வலக்கையால் ஓங்கிக் குத்தினான்; அக் குத்தால் நிலை குலைந்து கீழே தரையில் வீழ்ந்தான்; வீழ்ந்தவன் மேல் அனுமான் விரைந்து பாய்ந்து பூமியில் மண்ணோடு அழுந்தத் தேய்த்தான்; உடல் சிதைந்து ஒல்லையில் இறந்தான். இவன் சொல்லி வந்ததும் துள்ளி விரைந்து துடித்து அழிந்ததும் அரக்கர் குல

அழிவுகளைத் துலக்கி அவல நிலைகளை யாண்டும் விளக்கி நின்றது.

மகோதரன்.

இவன் இலங்கை வேந்தனுடைய முதல் மந்திரி. தலைமை அமைச்சனாய் நிலவியிருந்த இவன் ஆட்சித் துறைகளில் நேரே அரசனுக்கு உறுதுணையாய் உதவி புரிந்து வந்தான். சூழ்ச்சித் திறங்களில் இவன் மிகவும் வல்லவன். காலம் அறிந்து இடம் தெரிந்து வலியுணர்ந்து நிலை தெளிந்து விநய சாகசங்களோடு பேசும் திறங்கள் இவனிடம் மிகவும் பெருகியிருந்தன. நல்ல அறிவுடையனாயினும் பொல்லாத வழிகளிலேயே பழகிப் புலையான போதனைகளைச் சாதனையாப் போதித்து வந்தான். மாயைகள் பலவும் வல்ல மகோதரன் என்று மதிமான்கள் குறித்திருத்தலால் இவனுடைய மாய வஞ்சங்களையும் தீய நெஞ்சினையும் தெரிந்து கொள்கிறோம். இராமனோடு எதிர்ந்து போராடித் தோல்வியடைந்து முதல்நாள் மீண்டு வந்த இராவணன் பாட்டனிடம் பரிந்து மொழிந்து மனம் உளைந்து வருந்தினன் "பகையை வளர்த்துக் கொண்டது தவறு; எதிரி அதிசய ஆற்றலுடையவன்; அவனை வெல்லுதல் அரிது" என்று உள்ளம் திறந்து உரியவனிடம் உண்மையை உரைத்தான். அப்பெரியவன் அறிவு நலங்களை அருளினன்: "சீதையை விட்டு விடுவது நல்லது; பகை யாதும் இல்லாமல் பழிநீங்கி இனிது வாழலாம்; இவ் வழியை முன்னமே கூறினேன்; தெளியவில்லை; இன்றாவது விரைந்து செய்துவிடுக" என்று வேண்டி நின்றான். இலங்கை வேந்தனும் இசைய நேர்ந்தான்; அதுபொழுது இவன் அங்கே வந்தான். அரசனுக்கு இனியனாய் அழிமதி கூறினன்: "கொண்ட கொள்கையை நழுவ விடுவது கோழைகள் செயல்; அண்டங்களை வென்ற அதிசயவீரனான நீங்கள் இன்று ஏதோ தோல்வி நேர்ந்தது என்று உறுதிகுன்றலாகாது; வென்றவர் தோல்வியடைந்து ஒழிவதும், தோற்றவர் வெற்றிபெற்று வருவதும் உலகம்கண்ட உண்மைகள். முதலில் தோல்வி யுற்றவர் முடிவில் வெல்வர் என்பது மூதுரை கும்பகருணன் முதலிய அதிசயவீரர்கள் அருகே உள்ளபொழுது நீங்கள் மறுகி உறுதி குன்றியது பெரிதும் வியப்பாயுள்ளது; யாண்டும் தளராத ஆண்மையோடு விளங்கி வந்த நீங்கள் ஈண்டும் அவ்வாறே மூண்டு நிற்க வேண்டும்"

என்று இவ்வாறு இவன் மூட்டி விட்டான். அவனும் பாட்டன் சொல்லைக் கேளாமல் கேட்டில் மூண்டு நின்றான். முடிவில் செத்தான். இவனும் அவனுக்கு முன்னே மாண்டு மடிந்தான்.

மாலியவான்.

இவன் நிருதர் குல முதல்வன். இராவணனுடைய தாயைப் பெற்ற தந்தையாகிய சுமாலியோடு உடன் பிறந்தவன். தன்னுடைய பாட்டன் என்ற உரிமையால் மன்னன் இவன் பால் மதிப்பும் பிரியமும் மருவி யிருந்தான். இவனும் பேரன் பால் பேரன்பால் பெருகி வந்தான். மந்திரிகள் யாவரும் சேனைத் தலைவர் எல்லாரும் இப் பெரியவனிடம் மரியாதையாய் நடந்து வந்தனர். இவன் அரிய கலையறிவோடு உலக சரித்திரங்கள் பலவும் தெரிந்தவன். முதிய வயதினன் ஆதலால் மதிநலமும் அமைதியும் இவனிடம் வியனாய் மருவி யிருந்தன. இந்தப் பாட்டன் உள்ளம் உவந்து வர நல்லவனாய் ஒழுகி வந்த இராவணன் சீதையைக் கவர்ந்து வந்ததிலிருந்து பேதமாய் மாறி நின்றான். பழியான வழியில் அவன் இழிந்துள்ளதை நினைந்து இந்தக் கிழவன் மனம் மிகவருந்தி இடையிடையே பேரனுக்கு ஆர்வமாய் அறிவு நலங்களைக் கூறினான். மதிநெறி அறிவு சான்ற மாலியவான் என்று மேலோர் இவனைக் கூறி யிருத்தலால் இவனுடைய மேலான நிலைமை நீர்மைகள் தெரிய நின்றன. வானர சேனைகளோடு இராமன் இலங்கையை வந்து அடைந்தபோது இவன் இராவணனை அணுகி, "அமர் மூண்டால் நம் குடியும் குலமும் மாண்டே போகும்; போர் மேல் மூண்டு ஈண்டு வந்துள்ளவனை ஒரு மனிதன் என்று எளிதே எண்ணலாகாது; திருமாலே இந்த உருவில் தேவர் வேண்டுகோளுக்கு இரங்கி இங்கே வந்திருக்கிறான்; யாதொரு ஐயமும் இல்லாமலே மெய்யாக நான் உணர்ந்துள்ளேன்; அரிய தவ முனிவர்களும் இதனை உரிமையோடு உரைத்து வருகின்றனர்; எவரும் பெறுதற்கு அரிய பெரிய அதிசய மகிமைகளோடு வாழ்ந்து வருகிற அரசர் பெருமான் அவலமாய்த் தாழ்ந்து போக நேர்ந்துள்ளானே! என்று இரவும் பகலும் என் உள்ளம் துயரமாய் உளைந்து வருகிறது; மூண்டுள்ள அல்லல்கள் யாவும் நீங்கிச் சுகமாய் நாம் வாழ வேண்டுமானல் அந்தப் பதிவிரதையை உடனே பதியினிடம் கொடுத்து விட வேண்டும்" என இவ்வாறு உறுதியாய் உணர்த்தியருளினன்.

"வேதனை நெஞ்சில் எய்த வெம்பியான் விளைவ சொன்னேன்
சீதையை விடுதி ஆயின் தீரும்இத் தீமை."

நீதியான போதனையை மாலியவான் இங்ஙனம் மனவேதனையோடு மறுகி மொழிந்தும் இலங்கை வேந்தன் இணங்காமல் பிணங்கி வீறுகொண்டு நின்றமையால் நாசமே மூண்டது என்று நொந்து போனான். பின்பு போரில் அல்லல்கள் அடைந்து இராவணன் உள்ளம் உடைந்து உளைந்த போதெல்லாம் அவனுக்கு இவன் நல்ல புத்திமதிகளை நயமாச்சொல்லினான். சானகி தேவியை மான வீரனிடம் விட்டு விடுவதே நலம் என்று பல வகையான ஞான போதனைகளைக் கூறினான். முடிவு நேர்ந்தமையால் இப்பெரியவன் பேச்சை யாதும் கேளாமல் அவகேடுகளை அடைந்துஅவன் மடிந்து முடிந்தான். நிருதர்குலம் பரிதாபமாய் அழிந்துஒழிந்ததைக்கண்டு இவனும் மறுகி இறுதியில்இறந்தான்.

சூர்ப்பநகை.

இவள் இராவணனோடு உடன் பிறந்த தங்கை. விபீடணனுக்கு முன் பிறந்தவள். மூன்று புதல்வர்களுக்கு இடையே ஒரு புதல்வி அருமையாய்த் தோன்றினமையால் தாய் இவளை மிகவும் பெருமையாய்ப் பேணி வந்தாள். துணைவரும் பிரியம் கொண்டாடி வந்தனர். இவள் பருவம் அடைந்து தருண மங்கையாய் ஒரு வருடம் தனியே அந்தப் புரத்தில் தங்கி யிருந்தாள். இவளுக்குத் தகுதியான கணவனைப் பல பகுதிகளிலும் இலங்கை வேந்தன் மிகுதியாய் ஆராய்ந்து வந்தான். முடிவில் வித்யுஜ்ஜிஹ் என்னும் ஒரு குறுநில மன்னனுக்குத் தன் தங்கையை மணம் முடித்தான். தானவர் மரபினனாய் மானவீரங்களில் சிறந்திருந்த அவன் இவளை மணந்து கொண்டுபோய் மகிழ்ந்து வாழ்ந்தான். காம போகங்களை ஏக போகமாய் நுகர்ந்து இருவரும் களித்துத் திளைத்து வந்தனர். இன்பச் செவ்வியில் அவ்வாறு இனிது வாழ்ந்து வருங்கால் நிருதருக்கும் அசுரருக்கும் நேரே போர் மூண்டது. அதில் அவன் மாண்டு போனான்; தன் கணவன் இறந்து போகவே இவள் விரைந்து அண்ணன்பால் வந்து அழுது புலம்பினாள். இவளுடைய உள்ளத்தைத் தேற்றி ஒரு நில மண்டலத்தைத் தனியுரிமையாத் தந்து அதற்கு அரசியா யிருந்து வாழும்படி இவளை வரிசையோடு அனுப்பியருளினான். இவள்

அங்கே தலைவியாயிருந்து வந்தாள் பெரிய ஒரு சேனையும் இவளுக்கு உரிய துணையாய் அருகே அமர்ந்திருந்தது. அங்ஙனம் இருந்து வருங்கால் கோதாவரி நதி அயலே ஒருநாள் இவள் உலாவ வந்தாள். அங்கே பஞ்சவடியில் தங்கியிருந்த இராமனைக் கண்டாள். அந்த அதிசய அழகனைக் கண்டதும் இவள் உள்ளம் உருகி உயிர் பரவசமாய்க் காதல்மீக் கொண்டாள். மாய விஞ்சைகள் நன்கு தெரிந்தவள் ஆதலால் அழகிய தெய்வ மங்கை போல் உருவம் கொண்டு நேரே வந்து தொழுது எழில் ஒளி வீச விழி மலர்ந்து நோக்கி வினயமாய் நாணி நின்றாள். அவ் வீர வள்ளல் முதலில் இவளைத் தவருக எண்ணவில்லை; பின்புதான் காம இச்சையோடு கரவாய் வந்துள்ளாள் என்று தெரிந்து உல்லாச உரைகள் சில மொழிந்து விரைந்து விலக்கினன். விலக்கியும் விலகாமல் வெய்ய துயர் செய்ய நேர்ந்தாள்; நேரவே இலக்குவன் இவளை அங்கபங்கம் செய்து அயலே அகலவிடுத்தான். மையல் மீதூர்ந்து வந்தவள் யாதும் பலியாமல் போகவே வேகமாய்ப் போய்ச் சேனைத் தலைவனை கரனிடம் கரவாக் கூறினள். படைகளோடு மூண்டு வந்து யாவும் இழந்து ஒல்லையில் அவன் மாண்டு போனன். இவள் மீண்டு இலங்கைக்குப் போய் அண்ணன் அடியில் விழுந்து கண்ணீர் சொரிந்து கதறி அழுது "மண்ணும் விண்ணும் காணுத பேரழகுடைய ஒரு பெண்ணரசியை உனக்காக எடுக்கப் போனேன்; எனக்கு இந்த அவமானம் நேர்ந்தது" என்று அவன் உள்ளம் உருகப் பேசினள். சீதாதேவியின் உருவ எழிலையும் பருவ நிலையையும் அதிசய நிலையில் துதிசெய்து மொழிந்தாள். இவளுடைய சொல்லைக் கேட்டதும் அவனுடைய உள்ளம் கரைந்தது; காம வெள்ளம் நிறைந்தது; பேதைப் பித்தனுய்க் காமவெறி கொண்டு கடுகி வந்து சீதையைக் கண்டு களித்துக் கவர்ந்து போனன். அதனுல் குலத்தோடு அழிந்தான். இலங்கை வேந்தனும் நிருதர் குலமும் ஒருங்கே அழிந்து ஒழிந்ததற்கு மூலகாரணம் இவளே.

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சமபெற முடிக்கும் மொய்ம்பினள். (1)

மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்வினை
காலம் ஓர்ந்து உடனுறை கடியநோயனுள். (2)

அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயனைக்
கண்டனள் தன்கிளைக்கு இறுதி காட்டுவாள். (3)

சூர்ப்பநகையைக் குறித்துக் காட்டியிருக்கும் இக் காட்சி களைக் கண்ணூன்றிக் காண்பவர் மூண்டுள்ள முடிவுகளையும் இவளுடைய நிலைமைகளையும் தெளிவா உணர்ந்து கொள்ளுவர்.

தானமாலை.

இவள் இராவணனுடைய இளைய மனைவி. அதிகாயன் தாய். அழகு அறிவு அமைதி முதலிய நீர்மைகள் இவளிடம் சீர்மை யாய் அமைந்திருந்தன. நேர்மையான நல்ல பண்புகளுடைய வள். தனது நாயகன் சீதையைக் கவர்ந்து கொண்டு வந்துள்ள தை நினைந்து நினைந்து இவள் நெஞ்சம் வருந்தி வந்தாள். நல்ல உத்தமியான அந்தப்பத்தினியின்உள்ளம்கொதித்தால்ஊருக்கும் குலத்துக்கும் நாசமே நேரும் என்று இவள் கருதி மறுகினாள். நெஞ்சம் பரிந்து வருந்தினாலும் கணவனிடம் நேரே சொல்ல அஞ்சி நெடிது கவன்றிருந்தாள். முடிவில் தனது அருமை மகன் அதிகாயன் போரில் மாண்டுபட்டதை அறிந்ததும் இவள் உள் ளம் துடித்து உயிர் பதைத்துத் துயரமாயப் புலம்பி அழுதாள. நேரே துணிந்து வந்து இலங்கை வேந்தன் அடியில் விழுந்து பரி தாபமாய்க் கதறிப் புலம்பினாள் மகவை இழந்த துக்கம் உயிரை எரித்தமையால் உரைகள் துயரோடு வெப்பமாய் வெளி வந்தன.

அக்கன்உலந்தான் அதிகாயன் தான்அழிந்தான்
மிக்கதிறத் துள்ளார்கள் எல்லாரும் வீடினார்
மக்களினில் நின றுள்ளான் மண்டோ தரிமகனே
திக்கு விசயம் இனிஒருகால் செய்யா யோ! (1)

ஏதையா சிந்தித் திருக்கின்றாய் எண்ணிறந்த
கோதையார் வேல்அரக்கர் பட்டாரைக் கூவாயோ?
பேதையாய்க் காமம பிடித்தாய் பிழைப்பாயோ?
சீதையால் இன்னும் வருவ சிலவேயோ? 2)

உம்பி உணர்வுடையான் சொன்ன உரைகேளாய்
நம்பி குலக்கிழவன கூறும நலம் ஓராய்
கும்ப கருணனையும் கொல்வித்துஎன் கோமகனை
அம்புக்கு இரையாக்கி ஆண்டாய் அரசுஐய! (3
(அதிகாயன்வதை, 271-273)

இந்த அரசியினுடைய பரிதாப நிலையை இவ்வுரைகள் தெளி வா விளக்கி நிற்கின்றன. சீதையால் இன்னும் பலகேடுகள் விளையும் என்று பதறியிருக்கிறாள். தன் உயிரையும், உறவையும்,

குடியையும், குலத்தையும் அடியோடு அழிக்கும்படியான கொடிய காம ஆசையை மடமையாய்த் தழுவிக் கொண்டு நாச மடைய நேர்ந்துள்ளாயே! என்று உள்ளம் நொந்து துடித்துள்ளாள். அவ்வுண்மை பேதையாய்க் காமம் பிடித்தாய் பிழைப்பாயோ? என்றதனல் தெரிய வந்தது. 'தம்பி சொன்னதையும், பாட்டன் கூறியதையும் கேட்டிருந்தால் இந்த இழவுகள் நேர்ந்திரா என்று நெடிது இரங்கியிருக்கிருள். உணர்வுடையான் என்று வீடணனையும், நம்பி குலக்கிழவன் என்று மாலியவானையும் இங்கே குறித்துள்ளமையால் அந்த இருவரையும் இவள் பெருமையாக் கருதி மதித்து வந்துள்ள உரிமை தெரிய வந்தது.

மண்டோதரி

இவள் இராவணனுடைய முதல் மனைவி. பட்டத்து அரசி. பேரழகும் பெருங்குணங்களும் ஒருங்கே நிறைந்தவள். மயனுடைய அருமை மகள். அரிய புண்ணியப் பயனுல் மூவுலகங்களையும் ஒருங்கே ஆளுகின்ற இலங்கைவேந்தனுக்குத் தகுந்த பெண்ணரசி என்று யாவரும் வியந்து புகழ்ந்து வர விழுமிய நிலையில் ஒளி மிகுந்து இவள் உயர்ந்திருந்தாள். இவள் பால் பேரன்புடையனுய் இராவணன் பேரின்பங்களை நுகர்ந்து வந்தான். இக்குல மகளால் அவனுடைய வாழ்வு பலவகையிலும் உவகையில் ஓங்கி வந்தது. எவ்வழியும் பிரியமாய் இவளோடு கூடி இனிய சுகபோகங்களை நன்கு அனுபவித்து வந்தவன் சீதையைக் கண்ட பின் இவளை அறவே மறந்தான். அந்தப்புரத்தையே அணுகாதிருந்தான். தனது கணவனது அவகேடான அவல நிலையைக் கருதி இவள் கவலை மிகுந்து மறுகினுள். புனிதமான ஒரு பதிவிரதையைக் கவர்ந்து வந்துள்ளதை நினைந்து கடுந்துயருழந்தாள். அந்தப் பெண்ணரசியின் அற்புத அழகையும் கற்பு நிலையையும் வினவியறிந்து பெண்மைக் குலம் பெருமையடையத் தோன்றிய உண்மையான தெய்வம் என்று உரிமையோடு தொழுது வந்தாள். மாலியவான் முதலிய முதியோர்களைக் கொண்டு தனது நாயகனுக்கு மதிநலம் கூறி அந்தப் பதிவிரதையை மரியாதையோடு விட்டு விடும்படி தூண்டியருளினுள். விடாப்பிடியனுய் அவன் நின்று வரவே நிருதர் குலம் பொன்றியழிய நேர்ந்தது என்று இவள் உள்ளம் உளைந்து வந்தாள். கொடிய போர் மூண்டது; நெடிய நிருதர் திரள்கள் கடிது மடிந்து வந்தன.

முடிவில் இந்திரசித்தும் மூண்டு போராடி மாண்டு மடிந்தான். அந்த அதிசய வீரன் இறந்து போனதை அறிந்ததும் இவள் உள்ளம் துடித்து உயிர் பதைத்துத் துயரத்தீயால் எரிந்து கரிந்து பரிந்து புலம்பினள். தனது அருமை மகனுடைய அழகு அறிவு ஆற்றல் முதலிய நிலைகளை எல்லாம் நினைந்து நினைந்து நெஞ்சம் உருகி நெடிது புலம்பினள். இலங்கை வேந்தனுடைய அடியில் விழுந்து இவள் கதறியழுதபொழுது அவனும் விழிநீர் சொரிந்து கலங்கி அழுதான். தான் பெற்றமகனுடைய பெருமித நிலைகளை யும் கொற்றத் திறல்களையும் கூறி இப் பேரரசி அழுதது யாரும் உருகி மறுகி அழப் பெரிய பரிதாபமாய் நெடிது ஓங்கி நின்றது. மூண்டுள்ள அழிவுகள் நீண்ட துயரங்களாய் நெஞ்சை எரித்து நிலைகுலையச் செய்தன. வெய்ய சோகம் வேகமாய் விரிந்தது.

பஞ்சுஎரியுற்ற தென்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்டதுஇல்லை;
அஞ்சினேன் அஞ்சினேன்இச் சீதைஎன்று அமிழ்தால் செய்த
நஞ்சினல் இலங்கை வேந்தன் நாளையித் தகையன் அன்றே?

மகன் இறந்த துயரால் மறுகி அழுத மண்டோதரி இறுதி யில் இவ்வாறு உருகியழுது புலம்பியுள்ளாள். அந்த உள்ளத்தை இந்த உரைகள் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளன. பெருங் கடல்கள்போல் அடர்ந்து தொடர்ந்து திரண்டு மூண்டு வந்த அரக்கர் குல வெள்ளங்கள் எல்லாம் இரண்டு வில்லாளிகளால் அழிந்து போயினவே! என்று விழிநீர் சிந்தியிருக்கிருள். அந்த அழிவு அவ்வளவோடு நின்றுவிடவில்லை; தேவருலகைத் தொலைத் துத் தேவராசனை வென்று மூவுலகங்களும் அதிசயவீரன் என்று துதிசெய்து வர யாண்டும் நீண்ட வீர சோதியாய் விளங்கி யிருந்த எனது அருமை மகனையும் அழித்து விட்டதே! என்று உள்ளம் பதைத்துக் கண்ணீர் வெள்ளம் பெருக்கி யுள்ளாள். பெற்ற மகன் உற்ற அழிவைக் கொண்ட கணவனும் கொள்ள நேர்ந்துள்ளானே! என்று இக்குலமகள் குலைதுடித்திருக்கிருள். அந்த உள்ளத் துடிப்பை உரை நேரே வடித்துக் காட்டியுள்ளது.

சீதை என்று அமிழ்தால் செய்த நஞ்சு.

அந்தப் பெண்ணரசியை இந்தப் பேரரசி இப்படி எண்ணியிருக் கிருள். கருதிய கருத்து அரிய பல பொருள்களை மருமமாய்

மருவியுளது. அப் பதிவிரதையின் உருவ அழகையும் உள்ளக்கற்பையும் இவ் வுத்தமி இவ்வாறு மதித்துப் போற்றியிருக்கிருள்.

அற்புத அழகு நிறைந்த அந்தக் கற்புத் தெய்வம் தொழுது துதிக்கவுரியது; விழுமிய அக்குலமகளை இழிவான நிலையில் இழிந்து விழைந்தது நிருதர்குலபதியின் உயிருக்கு அழிவேயாம். தனதுயிர்க்கு நாசத்தை விளைப்பதை இன்னுயிர் அமிர்தம் என யாசித்து நேசித்து நிற்பது கொடிய தீவினையின் நெடிய முடிவே.

கிட்ட நெருங்காமல் எட்டிப் பார்த்தாலுமே கொல்ல வல்ல பொல்லாத திட்டிவிடத்தை நல்ல அமுதம்என்று எண்ணி அறிவு கேடனாய் உண்ண விழைந்தவன் போல் இராவணன் நண்ணியுள்ளான் அவ்வுண்மை ஈண்டு நுண்மையா உணர வந்தது.

இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?

தன் கணவனுக்கு மூண்டுள்ள அழிவை நினைந்து மண்டோதரி இவ்வாறு கலங்கிப் புலம்பியுள்ளாள் இலங்கை வேந்தன் என்றது அவனது தலைமையும் நிலைமையும் நேரே தெரிய நேர்ந்தது இத்தகையன் என அண்மை நிலையில் இப்படிச் சுட்டியிருப்பது உய்த்துணர வுற்றது. தான் பெற்ற மகனை இந்திரசித்து செத்து ஒழிந்ததுபோல் தனது உற்றகணவனும் உயிரழிய நேர்ந்துள்ளானே! என்று துயரோடு துடித்திருக்கிருள். பிள்ளை இறந்துபோனதைத் தன் வாயால் சொல்லக் கூசிக் குறிப்போடு சுட்டியுள்ளாள். சாகும் காலம் அதிகதூரம் இல்லை; அவ்வேளை மிகவும் அருகே அணுகியுள்ளது என்பதை நாளை என்னும் சொல் நயமா உணர்த்தி மாள நேர்ந்துள்ளதை விளக்கிநின்றது.

மகனை இழந்த துயரத் தீயால் மறுகித் துடித்தவள் கணவனையும் இழந்து போக நெருங்கியுள்ளதை நினைந்து நெஞ்சம் கலங்கி நெடிது பதைத்திருக்கிருள். ஈண்டு இவள் அழுதபடியே இராவணன விரைந்து போரில் மூண்டு மாண்டு மடிந்தான். அப்பொழுது இவள் கதறிப் புலம்பி மறுகி அழுதது யாவரையும் உருக்கி நின்றது. பரிதாபமாய்ப் பதைத்து அழுதபொழுதும் யாதும் பழியாமல் இராமனையும் சீதையையும் துதித்தேயிருக்கிருள். அரக்கர் குலத்தை அடியோடு அழித்துத் தன் தாலியை அறுக்க நேர்ந்தவள் சூர்ப்பநகையே என்று அவளைக் கடுமையா வைதுள்ளாள். உள்ளம் நொந்து வைத போதும் உரைகளில் உணர்வு நலங்கள் ஒளி வீசி விழுமிய பண்புகள் விரிந்துள்ளன.

காந்தையருக்கு அணியனைய சானகியார்
　　பேரழகும் அவர்தம் கற்பும்
ஏந்துபுயத்து இராவணனார் காதலும் அச்
　　சூர்ப்பநகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான தயரதனார் பணியினால்
　　வெங்கானில் விரதம பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
　　பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா!

மண்டோதரியின் ஒப்பாரியாய் மண்டி வந்துள்ள இந்தப் பாசுரத்தில் அரிய பல பொருள்கள் பெருகியுள்ளன. மானச தத்துவங்கள் நுண்மையாய் மருவியிருக்கின்றன யாவும் கருதி யுணரத்தக்கன. வேதனையில் விவேகபோதனைகள் விளைந்துள்ளன.

சீதைபால் இக்கோதை கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் சானகியார் என்ற பன்மை விகுதியால் தெரிய வந்தது. காந்தையருக்கு அணி என்றது பெண்மைக் குலம் பெருமகிமையுறப் பிறந்து வந்துள்ள உண்மை உணர மாந்தர் உள்ளங்களைக் கவருகின்ற உருவ அழகும் குண நீர்மைகளும் உடையவர் காந்தையர் என நேர்ந்தார். காந்தை=பெண். மகளிர் இனம் மாண்புற வந்த மங்கையால் தான் மங்கலம் இழக்க நேர்ந்தது மாயமான தீய விதியே என இத் தூயவள் துயருழந்துள்ளாள்.

யாரிடமும் காணமுடியாத அதிசய அழகு சீதையிடம் நதி கொண்டுள்ளமையால் பேரழகு என்றாள். இந்த அழகுதான இலங்கை அரசைப் பாழாக்கியது என்று முதலில் எண்ணினாள். அடுத்து அதனை மறுத்து மாற்றினாள் உள்ளக் கற்பு ஊக்கி நிற்கவில்லையானால் அப் பேரழகு ஒரிழவும் செய்திராது என்று உணர்ந்தாள். கற்பு அமைந்த அற்புத அழகியைக் காதலிப்ப தால் யாதொரு பயனும் அமையாது; அது கொடிய தீதேயாம் என்று உணராமல் இராவணன் ஆசை கொண்டதே நாசத்துக் குக் காரணம் எனக் கருதினாள். நீசமான அந்த ஆசையை மூட்டியது நாச காலியான சூர்ப்பநகையே ஆதலால் அவளைக் கடுத்து நினைந்தாள். அத் தீயவள் நேரே காணும்படி இராமன் காட்டுக்கு வந்திருந்தான்; அவன் அரசர் பெருமானாய்த் திருவ யோத்தியில் அமர்ந்திருந்தால் இவள் அவனைக் கண்டு காதல் கொண்டு மூக்கு அறுபட்டு நோதலோடு ஈண்டு வந்திராள்; இப்

பாதகி அன்று இங்கு வரவில்லையானல் இலங்கை அரசும் நிருதர் குலமும் எனது தாலியும் என்றும் நன்ருய் நிலைத்திருக்கும் என்று நினைந்தாள்; நினைந்தவள் இறுதியில் ஒன்று கருதினள்: இலங்கை வேந்தன் எதிரே தேவர் யாவரும் ஏவல்பூண்டு நின்றனர். தேவ ராசனும் பெருமை யாவும் இழந்து சிறுமையடைந்தே இருந்தான்; இன்று முதல் அவன் எல்லா மகிமைகளையும் அடைந்து வென்றி வீரனய் விளங்குவான் என்று தெளிந்தாள்; தெளியவே புரந்தரனுர் பெருந்தவமே யாவும் புரிந்தது எனப் புலம்பி நின்ருள்.

இலங்கை வேந்தன் வீழ்வு இந்திரனுக்கு வாழ்வு ஆயது.

சூர்ப்பநகை இழந்த மூக்கு.

அந்த மூளிமேல் உள்ள கோபம் இந்த மொழியால் அறிய வந்தது. மூக்கு இழந்த ஒருத்தியால் பல்லாயிரம் கோடி அரக்கர்கள் உயிர் இழந்தனர்; இலங்கை வேந்தன் முடி இழந்து கிளையோடு அழிந்தான்; தாலியை இழந்து மண்டோதரி மாண்டாள் என நீண்ட துயரோடு புலம்பினவள் உடனே உயிரிழந்து மாய்ந்தாள் இந்தப் பதிவிரதையினுடைய மனத் தூய்மையையும் குண நீர்மைகளையும் அறிந்து இராமன் முதல் யாவரும் வியந்து புகழ்ந்தனர். தேவரும் இரங்கி வியந்தனர்.

இராமாயணம் என்னும் காவிய உலகில் சீவிய ஓவியங்களாய் உலாவி வருகிற சிறந்த சில பேர்களை இதுவரை தெரிந்து வந்தோம். சூரிய மண்டலத்தைச் சூழ்ந்து வேறு பல கிரகங்களும் விண்மீன்களும் விளங்கிநிற்றல் போல் இராமபிரானுடைய சரிதையில் அரிய பல பொருள்கள் துலங்கி நிற்கின்றன. இந்தத் தரும சோதியைச் சூழ்ந்து திகழும் சீவ இனங்களைத் தேவ இனங்களும் வியந்து புகழ்ந்து எவ்வழியும் மகிழ்ந்து வருகின்றன.

அதிசய நிலைகள் யாண்டும் நலமாய்ப் பெருகி வரப் பிரமா உலகத்தைப் படைத்துள்ளது போல் கம்பர் பெருமான் இராம கதை ஆகிய காவிய உலகத்தை அழகும் இன்பமும் அதிசய நலங்களும் எவ்வழியும் செவ்வையாய் ஒளிகள் வீசிவரத் திவ்விய நிலையில் படைத்திருக்கிருர் பிரம சிருட்டியில் காண முடியாத அரிய பெரிய இனிய இன்பச் சுவைகளைக் கவி சிருட்டியில் கண்டு மகிழ்ந்து கருதிக் களித்துத் திளைத்து வருகிரும்.

கம்பர் பெருமான்.

சீராம காதைஎனும் தெய்வீக
கங்கைதனைச் சீவ கோடி
பேராவலொடுதோய்ந்து பேரின்பம்
பெறச்செய்த பெருமான உன்னை
நீராரும் சடைமுடிஅந் நிமலனே
கலைகளெலாம் நிலவ இந்தப
பாராரும் பாக்கியமா ஆக்கியளித்
தருளியுளான் பரிவு கூர்ந்தே. (1)

நினைத்தாலும் படித்தாலும நேர்நின்று
கேட்டாலும நெறியே நேர்ந்த
அனைத்தாலும தித்திக்கும் ஆரமுதாய்ப்
பேரினபம அமைய ஆய்ந்து
மனத்தாலும வாக்காலும இராமனுயர்
மகிமைகளை வையம காண
எனைத்தாலும் சுவையொளிகள் எவ்வழியும
எழிலசெய்ய இனிதே ஈந்தாய்! (2)

மானுடரின் செவிகளுக்கு வானவரின்
அமுதமென இராம காதைத்
தேனினைநீ சுவைசெய்து தேனமாரி
பொழிந்துள்ளாய்! தேவர் எல்லாம்
ஊனமுதம உண்டொழிய உணர்வமுதம
இனிது நுகர்ந்து உயர்பேரினபம
ஞானமுடன பெற்றுநரர் வானைமறந்து
உவந்துள்ளார் நனமை தோய்ந்தே. (3)

சத்தியத்தைப் போதித்துத் தருமத்தை
எதிர்காட்டித் தகைமை நீதி
யுத்திகளை இனிதுணர்த்தி உலகியலும்
அறிவியலும ஒழுக்கம தூய்மை
நித்தியமும் நெஞ்சிலே நிலைத்துவர
நேர்அருளி நீதித் தேவாய்
எத்திசையும் துலங்கியுள கம்பர்பிரான்
இன்பநூல் என்றும் வாழ்க. (4)